1

தமிழ்வழிக்கல்வி

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

தமிழ் வழிக்கல்வி

[முதல் பகுதி]

முனைவர்

மு. தமிழ்க்குடிமகன், எம்.ஏ., பிஎச்.டி.,
(தமிழ் ஆட்சிமொழி - தமிழ்ப் பண்பாட்டுத் துறை
மேனாள் அமைச்சர்)

பாவாணர் ஏடகம்
புதுஎண்-142சி, பழையஎண்-56,
மேடவாக்கம் முதன்மைச் சாலை, சுரேந்தர் நகர்,
சென்னை - 600 088

நூற் குறிப்பு

நூற் பெயர்	**தமிழ் வழிக் கல்வி** [முதல் பகுதி]
ஆசிரியர்	முனைவர் மு. தமிழ்க்குடிமகன்
அட்டை வடிவமைப்பு	ஆர்.டி. வினோத் குமார்
பதிப்பாண்டு	2007 திருவள்ளுவர் ஆண்டு, 2038
மொழி	தமிழ்
பக்கங்கள்	iv+324=328
நூல் அளவு	தெம்மி
தாளின் தன்மை	வெள்ளைத்தாள்
பொருள்	பயிற்று மொழி வரலாற்று ஆய்வு
அச்சு எழுத்து	11 புள்ளிகள்
படிகள்	1000
விலை	**உருபா.125.00**
கணிப்பொறி அச்சு	தேவ் டிசைனிங் & பிரிண்டிங்க் வேளச்சேரி, சென்னை - 600 042 பேசி : 22591924
அச்சிட்டோர்	மாசறு திருவல்லிக்கேணி சென்னை - 600 005

நூல் கிடைக்குமிடம் :

புதிய கதவு எண்.26, குறுக்குத்தெரு,
சோசப் குடியிருப்பு, ஆதம்பாக்கம்,
சென்னை - 600 088-பேசி:22530954

பதிப்புரை

தமிழுலகம் போற்றி வரவேற்கின்ற மதிப்பு மிக்க அறிஞர்களில் தமிழ்க்குடிமகனார் முதல்வரிசையைச் சேர்ந்தவர். 'சாத்தையா' தமிழாக மாறித் தமிழருக்குச் செய்த பணிகள் அளவற்றவை. அதற்கு அடையாளங்கள் பல. அவற்றுள் இன்று வெளிவரும் **தமிழ்வழிக்கல்வி** என்னும் இந்நூலின் மூன்று பகுதிகளும் என்றும் நின்று நிலவும் சான்றாகும். **இது முதல் பகுதி.**

மேடைகளிலே அவருடைய கம்பீர முழக்கம், ஏடுகளில் அவர் எடுத்து வைத்த அசைக்க முடியாத வாதங்கள், தகர்க்க முடியாத சான்றுகள், எவரும் தடைப்படுத்த இயலாத தடந்தோள்கள், தமிழுக்கு வருகின்ற தடைக்கற்களைத் தூக்கி எறிவதில் தளராத வீரம், தறுகண்மை என்ற சொல்லுக்கே பொருளாக விளங்கிய பெருமிதம், அத்தனைக்கும் மேலாகத் தமிழ்நாட்டில் தலைநிமிர்ந்து உலவுகின்ற தமிழாக வாழ்ந்த நிகழ்ச்சிகள், ஈழத்திற்கு ஆதரவாக அவர் எழுப்பிய இடிமுழக்கம், திரட்டிக்காட்டிய வீர அணிவகுப்பு. . . இன்னும் இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். அத்தனையும் மறக்கவே முடியாதவை. நினைத்தால் நெஞ்சம் நெகிழும். அந்த மாமனிதரை எண்ணி உள்ளம் உருகும்.

ஆறாவது உலகத் தமிழ் மாநாடு மலேசிய மண்ணில் நடந்தபோது அன்றைய அரசு தமிழகத்திலிருந்து தமிழறிஞர்கள் போகக்கூடாது என்று தடை விதித்திருந்தது. அந்தத் தடையை மீறிச் சென்றவர் தமிழ்க்குடிமகனார். அவரோடு சென்றவருள் **என் தந்தையார் முத்தமிழ்க் கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்களும் ஒருவர்.**

அந்த மாநாட்டிலே அவர் தலைமையிலே கவியரங்கம். ''அன்று அவருடைய முழக்கம் இன்னொரு பாரதிதாசனை நினைவூட்டியது'' என்று அந்தக் கவியரங்கில் அவர் தலைமையில் கவிதை பாடிய என் தந்தையார் அடிக்கடி சொல்லி மகிழ்வார்.

என் தந்தையாரின் கவிதைகளில் மிகுந்த ஈடுபாடுகொண்ட அவர் தம்முடைய முனைவர்பட்ட ஆய்வேடான பத்தாண்டுத் தமிழ்க்

கவிதைகள் என்னும் ஆய்வு நூலில் என் தந்தையாரின் கவிதைச் சிறப்பினைப் பதினான்கு பக்கங்களில் எடுத்துக்காட்டியிருந்தார். அவர் மதுரையில் யாதவர் கல்லூரி முதல்வராக இருந்தபோது கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்ற நிகழ்ச்சிக்கு என் தந்தையாரை அழைத்துப் பாராட்டினார். தம் மாணவரை என் தந்தையாரின் கவிதைகளைப் பற்றி எம்.ஃபில பட்டத்திற்காக ஆய்வு செய்ய வழிகாட்டினார். அவரால் வளர்ந்த மாணவர்கள் எண்ணற்றவர்

மலேசியாவில் நடைபெற்ற மாநாட்டின் போது, அவரும் என் தந்தையாரும் ஒரே அறையில் தங்கியிருந்தனர். அப்போது பினாங்கில் நடைபெறும் கூட்டத்திற்கு அழைப்பு வந்தமையால் உடனே செல்ல வேண்டியவரானார். அந்த நேரத்தில் என் தந்தையார் உறங்கிக் கொண்டிருந்தார். உறங்குபவரை எழுப்பக்கூடாது என்று பக்கத்து அறையில் இருப்பவரிடம் சொல்லி, எழுந்ததும் தெரிவிக்குமாறு செய்த அவர் பண்பினை என் தந்தையார் அடிக்கடி பலரிடம் சொல்வார். எனக்கு அவர் தலைமையில் திருமணம் செய்துவைத்தார். அவர் அமைச்சராக இருந்தபோது அவரே ஒருநாள் தொலைப்பேசியில் விரும்பி அழைத்து அவருடைய நம்பிக்கைக்கு உரிய நேர்முக உதவியாளராக என்னைப் பணியமர்த்தினார். முதல்வர் கலைஞரின் பவளவிழா மலர் தொகுப்புப் பணிகளிலும் கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைப்பு முயற்சிகளிலும் 1999-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலுக்காக, முதல்வருடன் மேற்கொண்ட தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணங்களிலும் நாடு முழுவதும் அவர் தலைமையில் நடைபெற்ற ஆலய குடமுழுக்குத் திருப்பணிகளிலும் அவர் உடன் இருந்து அவரிடம் நான் கற்றுக்கொண்ட பாடங்கள் பல. எனக்கு அவர் சிறந்த ஆசானாகத் திகழ்ந்ததை நன்றியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்நூலினை வெளியிட வாய்ப்பளித்த மதிப்பிற்குரிய அம்மா திருமதி வெற்றிச்செல்வி தமிழ்க்குடிமகன் அவர்கள், அவருடைய மூத்த புதல்வர் மதிப்புமிகு த. மெய்ம்மொழி அவர்கள் மற்றும் திரு த. பாரி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி. அவர் மறைவுக்குப் பிறகு இந்நூலை உருவாக்குவதில் உழைத்த அறிஞர் மதிப்புமிகு முனைவர் இரா. இளவரசு அவர்களுக்கு என்றும் நன்றி உடையேன்.

மோ. பாட்டழகன்

மேனாள் அமைச்சர்
மாண்புமிகு **தமிழ்க்குடிமகனார்** அவர்களின் திருமகனார் மதிப்புமிகு **த.மெய்ம்மொழி**அவர்கள் வழங்கிய **வாழ்த்துரை**

பொதுவாகத் தமிழர் பெருந்தன்மையால் பலவற்றை விட்டுக் கொடுத்துவிட்டு, இளித்தவாயர் / ஏமாளிகள் என்றே பெயர் பெற்றனர். அதே நேரம், உணர்வூட்டப்படும்பொழுது பொங்கி எழுந்து தற்காப்பு முயற்சிகளை மேற்கொள்வதும், பின்னர் ஆக்கப் பணிகளுக்கான தொடர்முயற்சிகளின்றித் தூங்கி விடுவதும் அல்லது தூங்க வைக்கப்படுவதும் வரலாறு காட்டும் பாடம்.

நினைவில் வாழும் முனைவர் தமிழ்க்குடிமகனார் வேறுபட்டு வாழ்ந்தவர். இருக்கின்ற வீட்டை இடித்துக் கட்டுவோம் என்று நடைமுறைக்கு ஒவ்வாத கற்பனையில் மிதந்தவரல்லர். மேலும் வெளிப்பூச்சு மற்றும் விளக்கு / தோரண அலங்கரிப்பிலேயே காலத்தை ஓட்டி, வீடு தாமாகவே தரைமட்டமாகட்டும் என்று விட்டுவிட விரும்பியவருமல்லர். அடித்தளத்தை வலுப்படுத்தி, கட்டடத்தைச் சீர்படுத்தி, உறுதியும் உண்மை அழகும் கொண்ட வீடாக அமைத்து அங்கே அன்பு, அமைதி, ஒழுங்கு, மகிழ்ச்சி நிலவ வேண்டும் என்ற நோக்கில் தன் பங்கை ஆற்றிச் சென்றவர்.

அறிவியல், உழவியல், பொருளியல், கலை, கல்வி, பண்பாடு என்று எல்லாத் துறைகளிலும் ஒருங்கிணைந்த மேம்பாடு அடைவதே தமிழினத்தின் உண்மையான முன்னேற்றம் என உறுதியாக எண்ணியவர். அதனால்தான் சிங்கப்பூர் தமிழ் இணைய மாநாட்டில் பங்கேற்றதன் தொடர்விளைவாகத் தமிழக அரசு தமிழ்க் கணினி விசைப்பலகைத் தரப்படுத்துதலை நிறைவேற்ற மூலமாய் இருந்தவர். இதன்மூலம் தமிழ் மென்பொருள் வணிகம் பல்லாயிரம்

கோடி ரூபாய் அளவு பல்கிப் பெருகிடக் காரணமாய் விளங்கினார். அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலம் தமிழ்க் கணினிக் கலைச் சொற்களை நூலாக வெளியிடவும் செய்தார்.

கவிதை, நர்டகம், உரைநடை, எளிய தமிழில் தெளிவான மற்றும் சுவையான பேச்சு என்று முத்தமிழும் கலந்த மொத்த உருவமாகத் திகழ்ந்தவர். சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளியில்லாத வாழ்வு வாழ்ந்தவர். மாற்றுக் கருத்துக் கொண்டோரையும் கருத்துப் பரிமாற்றத்தால் மனமாற்றம் பெறச் செய்தவர். ஒத்த கருத்துடையோரை அகந்தையுடன் புறக்கணிக்கும் செயலில் ஈடுபடாமல் அரவணைத்துச் சென்றவர். கொள்கை உறுதி, சுயமரியாதை, சோர்வில்லா உழைப்பு இவற்றுடன் தமிழ்ப்பணியையும் மக்கள் பணியையும் இரு கண்களாகப் போற்றி இறுதி மூச்சு வரை வாழ்ந்தவர்.

முடியும் என்று உணர்த்தினாலும் உணர மறுத்த விதண்டாவாதம் பேசுவோர் தூங்குவது போல் நடிப்பவர். ஆர்வம் இருந்தும் கல்வியோ, முயற்சியோ, வழிகாட்டுதலோ இன்றி வாழ்வோர் பலர். உணர மறுப்பவன் கரிக்கட்டை என்றால் உணர்வின்றி இருப்பவன் மரக்கட்டை. இவ்விரு வகையினரையும் புறந்தள்ளாமல் வெறுத்து ஒதுக்காமல் விரக்தியில் ஒதுங்காமல் நாடிச் சென்றவர்.

இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டிருந்தாலும், தேவைதானா என்போர் தெளிவு பெறவும் தேவைதான் என்போர் பின்பற்றவும் துணையாக உதவும் வண்ணம் அவரது மூன்று படைப்புகள் அமைந்தன. அவை:-

1. தமிழில் வழிபாடு தடையென்ன நமக்கு - 1 தொகுதி

உனது கடவுளிடம் உன் குறையை உள்ளம் உருகச் சொல்ல உனது மொழி வழியே வழிபடு. உள்ள அமைதியும் நீ விரும்பும் ஒழுங்கான வாழ்வும் கிட்டும். அது சமுதாயத்துக்கும் நன்மைதரும் என்பதை உணர்த்தும் நூல்.

2. தமிழ் ஆட்சிமொழிச்செயலாக்கம் - 2 தொகுதிகள்

உனது அரசு உனக்கு என்னென்ன திட்டங்கள் மூலம் உதவிக்கு வரும், உனது அரசு உனக்காக. எப்படிச் செயல்படுகிறது என்பதை ஒவ்வொரு தமிழ்க்குடிமகனும் தெரிந்து, பயன்படுத்தி முன்னேற உன் மொழி ஆட்சிமொழியாக எப்படிச் செயல்படவேண்டும் என்று வழிகாட்டும் நூல்.

3. தமிழ்வழிக் கல்வி - 3 தொகுதிகள்

உலகெங்கும் அறிவியல் ஆய்வுப்படித் தாய்மொழிக் கல்விக்குப் பெருகி வரும் ஆதரவு, தமிழகத்தில் அதன் நிலை, தமிழ்வழிக் கல்வி உண்மையாகச் செயல்படுத்தப்பட்டால் அனைவரும் கற்றுத் தேர்ந்து உலகப் போட்டியையும் சந்திக்கலாம் - சாதிக்கலாம் என்பதை உணர்த்தும் நூல்.

'புலவன் வாக்குப் பொய்க்காது' என்பது உண்மையெனில் எல்லாத் துறைகளிலும் தமிழினத்தை முன்னேற்ற உண்மையாக நினைக்கும் எந்த இயக்கமும் எவரும் இந்த மூன்று நூல்களை வழிகாட்டிகளாகக் கொள்ள வேண்டும் என்ற நிலை ஏற்படும்.

ஏன், இந்திய அளவில் தவிர்க்க முடியாத முதன்மைச் சக்தியாகத் தமிழகத்தில் இருந்து எந்த இயக்கமும் அல்லது தலைவரும் விளங்கும் காலம் வந்தால், இந்த நூல்களின் அடிப்படையில் எல்லா மாநில மக்களின் உண்மையான முன்னேற்றத்துக்கும் அதன்மூலம் ஒட்டுமொத்த இந்தியா உயர்நிலை எய்துவதற்கும் பாடுபடவேண்டிய நிலை ஏற்படும்.

முனைவர் தமிழ்க்குடிமகனார் மறைவதற்குச் சில நாள்களுக்கு முன்னர் தமிழ்வழிக்கல்வி நூலை எழுதி முடித்தார். கணினிப் பரலையும் ஏராளமான குறிப்புகள், சான்றுகள் முதலியவற்றையும் ஒப்பிட்டு, அவரது நடையும் போக்கும் மாறாமல் முழுமையாக உடல் நலிவுற்ற நிலையிலும் உள்ளன்போடு பாடுபட்ட பேராசிரியர் முனைவர் இரா. இளவரசு அவர்களுக்கும், பாவாணர் ஏடகத்தின் வாயிலாகத் தமிழர் தம் கரங்களில் தவழவிட்டுள்ள தகுதி வாய்ந்த தமிழ்த் தம்பி முனைவர் மோ.பாட்டழகன்

அவர்களுக்கும் என் நன்றிகள் பல. உண்மையைச் சொல்வதில் ஒளிவு மறைவு தயவு தாட்சண்யம் காட்டவேண்டியதில்லை என்ற தமிழ்க்குடிமகனாரின் நிலைப்பாட்டை ஒட்டி, காலமாகி விட்டாரே என்று கருணை காட்டாமல் ஆக்கப் பூர்வமான அலசலையும் அறிவுரையையும் வழங்கிடத் தமிழ் அன்பர்களை வேண்டுகிறேன்.

'இப்படியும் ஒருவன் இருந்தான்' என்ற தலைப்பை எழுதி ஒரு கோப்பினை இந்த நூல் எழுதி முடித்தவுடன் தொடங்கி வைத்தார். புலவன் வாக்கு - 'இருந்தான்' என்று இறந்த காலத்தில் இட்ட தலைப்பு சில நாள்களில் உண்மையானது. தன் வரலாறாக அவர எழுத நினைத்ததை 'மகன் தந்தைக்காற்றும் உதவி' என்னும் குறளுக்கேற்ப என்னை மேலும் தகுதிப்படுத்திக் கொண்டபிறகு தமிழினத்தின் வரலாற்றில் தமிழ்க்குடிமகனின் வரலாறு தோய்ந்ததைப் படம்பிடித்து வழங்குவேன் என்று நம்புகிறேன்.

வாழ்த்துகள் - நன்றி

அன்பன்

சா. தமிழ்க்குடிமகன் மெய்ம்மொழி

தமிழகம்
20,இராமன் தெரு
காந்திநகர், ஆவடி
சென்னை - 600 054
செல்லிடப் பேசி : 9840084277

இந்நூலைப் பெறத் தொடர்புக்கொள்ளும் முகவரியிலேயே பிற நூல்களையும் பெறலாம்

உள்ளடக்கம்

1.	மெட்ரிகுலேசன் பள்ளிகள் - தமிழ் எதிர்ப்பு முகாம்கள்	-	7
2.	மெட்ரிகுலேசன் பள்ளிகளின் நோக்கம் - அனுமதிக்கான முறையிகங்கள்	-	18
3.	சிபிஎஸ்இ (CBSE) பள்ளிகள்	-	21
4.	ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்	-	23
5.	அரசு தொடக்கப்பள்ளிகள்	-	28
6.	தனியார் தொடக்கப் பள்ளிகள்	-	29
7.	அரசு நடுநிலைப்பள்ளிகள்	-	29
8.	தனியார் நடுநிலைப் பள்ளிகள்	-	30
9.	அரசு உயர்நிலைப் பள்ளிகள்	-	31
10.	அரசு (உதவிபெறும்) உயர் நிலைப்பள்ளிகள்		32
11.	அரசு மேல்நிலைப் பள்ளிகள்	-	33
12.	தனியார் மேல் நிலைப்பள்ளிகள்	-	34
13.	டான்பாஸ்கோ போன்ற பள்ளிகளில் பாகம் ஒன்றின் நிலை	-	35
14.	மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் (Nursery and Primary Schools) (பல பக்கங்கள்)	-	40
15.	கருநாடக மாநில மொழிக் கொள்கை	-	97
16.	பிற மாநிலங்களில் தமிழ்க் கல்வி - தாய்மொழிக் கல்வி	-	107
17.	நூாறு தமிழறிஞர்கள் உண்ணா நோன்பு	-	111
18.	குழு அமைப்பு	-	158
19.	நீதியரசர் மோகன் குழு பரிந்துரைகள்	-	161

20.	அமைச்சரவை முடிவும் அரசாணையும்	172
21.	மெட்ரிகுலேசன் பள்ளிகளின் நடவடிக்கைகள்	182
22.	உயர்நீதி மன்றத் தீர்ப்பு	231
23.	உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கு எதிர்ப்பு	242
24.	உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு	287

இயல் ஒன்று

மெட்ரிகுலேசன் பள்ளிகள் – தமிழ் எதிர்ப்பு முகாம்கள்

பொதுவாக ஒருவன் ஒரு போரில் இறங்குவதற்கு முன்னால் ''தன் வலிமை, மாற்றான் வலிமை, நமக்குத் துணை வருபவர்களின் வலிமை ஆகியவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து இறங்கவேண்டும்.

வினைவலியும், தன்வலியும், மாற்றான் வலியும்
துணைவலியும், தூக்கிச் செயல்

அதிலும் நேரம் பார்த்து இறங்கவேண்டும்.

பகல் வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது

எல்லாம் படித்த எங்கள் அரசு - குறளுக்கு உரையும் ஓவியமும் வரைந்த கலைஞர் - தமிழையே கரைத்துக் குடித்துப் பேராசிரியர் எனும் பெயரிலேயே புகழ்பெற்ற கல்வி அமைச்சர் - ஒரு தமிழ்க்குடிமகன் ஆகியோர் அடங்கிய அரசு - இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்தது.

பார்த்தது என்றுதான் நான் சொல்வேன். சரியாகச் சொன்னால் நான் பார்த்தேன் - தமிழ்வழிக்கல்வியை எப்படியும் கொண்டு வந்துவிட வேண்டும் எனும் நான் பார்த்தேன்.

'இது தமிழக அரசு - தமிழ் அரசு - தமிழுக்கு ஆக்கம் தரும் எனும் நம்பிக்கையில் நம்மை ஆள அனுமதித்த தமிழர்களின் அரசு' என்றெல்லாம் தெளிவாக எடுத்துரைத்த கலைஞர் பார்த்தார்.

ஆனால், யார் இதனைச் செயற்படுத்த வேண்டுமோ, அவர் - அனைத்துப் பள்ளி விவரங்களையும் அலசிப் பார்க்கவும், பள்ளிக்கு இசைவு வழங்கவும், இசைவினை இலதாக்கவும் (இரத்துச் செய்யவும்) முழு உரிமை பெற்ற கல்வி அமைச்சர் பேராசிரியர் இவற்றை யெல்லாம் சீர்தூக்கிப் பார்த்தாரா? இது வினா?

விடையைப் பார்க்கும் முன் இடையில் சில செய்திகள். முதலில் ஒரு பள்ளி விவரத்தைப் பாருங்கள். (நாங்கள் பதவி ஏற்ற அன்று)

13.5.1996 இல்	தொடக்கப் பள்ளிகள்	-	23274
,,	நடுநிலைப்பள்ளிகள்		3206

1999-2000 இல் எங்கள் முயற்சி உச்சகட்டத்தில் இருந்த நேரப் புள்ளி விவரம்:

வ. எண் (1)	பள்ளிகள் விவரம் (2)	கல்வி நிறுவனங்கள் (3)	மாணவர்கள் (இலட்சத்தில்) (4)	ஆசிரியர்கள் எண்ணிக்கை (5)
1.	தொடக்கப் பள்ளிகள் : -			
	அரசு	1530	2.64	6415
	நகராட்சி/மாநகராட்சி	1047	2.24	8106
	ஊராட்சி ஒன்றியம்	23270	26.43	74911
	தனியார்	5205	10.36	31017
	மொத்தம்	31052	41.67	120449
2.	நடுநிலைப் பள்ளிகள் :-			
	அரசு	291	1.08	2488
	நகராட்சி / மாநகராட்சி	383	1.62	5761
	ஊராட்சி ஒன்றியம்	3137	10.75	24874
	தனியார்	1829	9.89	25272
	மொத்தம்	5640	23.34	58395
	மொத்தப் பள்ளிகள்	36692	65.01	178844
3.	உயர் நிலைப்பள்ளிகள் :-			
	அரசு	2006	9.24	26556
	நகராட்சி / மாநகராட்சி	103	0.43	1433
	உதவிபெறுபவை	626	3.20	7068
	உதவி பெறாதவை	104	0.71	1147
	ஆங்கிலோ - இந்தியன்	12	0.10	310
	மெட்ரிகுலேசன்	1641	4.37	11310
	சி.பி.எஸ்.இ.	59	0.51	1188
	மொத்த உயர்நிலைப்பள்ளிகள்	4551	18.56	49012

4. மேல் நிலைப்பள்ளிகள் :-

அரசு	1206	14.16	39040
நகராட்சி - மாநகராட்சி	80	1.31	3993
உதவிபெறுபவை	884	11.10	33483
உதவிபெறாதவை	46	0.25	1242
ஆங்கிலோ இந்தியன்	29	0.45	1209
மெட்ரிகுலேசன்	912	4.23	12015
சி.பி.எஸ்.இ.	135	1.72	3826
மொத்த மேல்நிலைப்பள்ளிகள்	3292	33.22	94808
மொத்தப் பள்ளிகள் எண்ணிக்கை	44535	116.79	322664

அரசு சார்ந்தவை

தொடக்கப்பள்ளிகள்	25847
நடுநிலைப்பள்ளிகள்	3811
உயர்நிலைப் பள்ளிகள்	2109
மேல் நிலைப் பள்ளிகள்	1286
	33053

மற்றோர் ஒப்பீடு	30.9.2000	30.9.2001	30.9.2002
தொடக்கப் பள்ளிகள்	31142	31488	31678
நடுநிலைப்பள்ளிகள்	5703	5809	6383
உயர்நிலைப்பள்ளிகள்	2859	2914	2905
மேல் நிலைப்பள்ளிகள்	2316	2447	2602

எனவே 30.9.2002 இல் உள்ள நிலைமை: 43568 பள்ளிகள்

ஊராட்சி ஒன்றியம், அரசுச் சார்பு, மாநகராட்சி, நகராட்சி, அரசு உதவி பெறுபவை எனவரும் அனைத்து வகைப் பள்ளிகளின் எண்ணிக்கை : (உதவி பெறாதவையும் இவற்றுள் அடங்கும்)

43568 பள்ளிகள்

இவை அனைத்தும் தமிழ்வழிப் பள்ளிகள். எனினும் அன்பழகன் போட்ட ஆணைப்படி இவற்றுள் ஆங்கில வழியில் நடைபெறும் பிரிவுகள் எத்தனையோ? அவற்றைக் கழித்துத் தான் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு பயில்பவர்களின் எண்ணிக்கையைக் கணிக்க முடியும்.

கூடாரம் 'தமிழ் வழியில்' என்று பெயர் பெற்றாலும், பின்புறமாக ஆங்கில ஒட்டகம் இவற்றுள் தலையை நீட்டிக் கொண்டிருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம். இந்த ஒட்டகங்களுக்குப் பட்டயம் வழங்கிய பக்தவச்சலம், அன்பழகன் ஆகியோரைத் தமிழ் நெஞ்சங்கள் நினைவில் வைத்துக் கொள்ளட்டும்.

இவை அனைத்திலும் தமிழ்தான் பயிற்றுமொழி. குறிப்பாக, 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை தமிழ்வழியில் தான் பாடங்கள் நடைபெறுகின்றன.

இதில் பயிலும் மாணவர்கள்

(1999 - 2000 த்தில்)

தொடக்கப்பள்ளிகள்	31.31 இலட்சம் மாணவ, மாணவியர்
நடுநிலைப்பள்ளிகள்	13.45 ,,
உயர் நிலைப்பள்ளிகள்	9.67
மேல் நிலைப்பள்ளிகள்	15.47

1999-2000த்தில் மாணவர்கள்	69.90 இலட்சம்

30.9.2002 அன்று நிலைமை

தொடக்கப்பள்ளிகள்	40,82,857 மாணவர்கள்
நடுநிலைப்பள்ளிகள்	22,172,20 ,,
உயர்நிலைப்பள்ளிகள்	13,303,34 ,,
(உதவி பெறாத) உயர் நிலைப் பள்ளி மாணவர்கள்	49,689 பேர்
மேல் நிலைப்பள்ளிகள்	32,622,18 மாணவர்கள்
(உதவி பெறாத) மேல் நிலைப்பள்ளி மாணவர்கள்	54,541 பேர்

31.12.2003 இல்

தொடக்கப்பள்ளி மாணவர்கள்	40.83 இலட்சம்
நடுநிலைப்பள்ளி மாணவர்கள்	22.17 ,,

எனவே 31.12.2003 இல்

பள்ளி மாணவர்கள்	109.97 இலட்சம்

(ஒரு கோடியே தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஏழு இலட்சம் மாணவர்கள்)

ஏறத்தாழ ஒரு கோடி மாணவர்கள் தமது பள்ளிக்கல்வியைத் தமிழ் வழியில்தான் படிக்கிறார்கள்.

இப்படிச் சொல்லிக் கொள்வதில் நான் மகிழ்ச்சியடைந்தாலும் ஒரு சிறு செய்தி என் நெஞ்சை நெருடுகின்றது.

ஆம்! இந்த உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் ஒரு பிரிவில் ஆங்கிலப் பயிற்றுமொழியை வைத்துக் கொள்ளலாம் என்றும் கூடுதலாகச் சில பிரிவுகளில் ஆங்கிலப் பயிற்றுமொழியை வைத்துக் கொள்ளலாம் என்றும் தமிழக அரசு ஆணைகள் பிறப்பித்து வைத்திருக்கிறது.

அது எப்போது?	1963இல் -
அரசாணை எண்	705 நாள் : 25.5.1990
,,	802 நாள் : 13.6.1990

இதைப் பிறப்பித்த பெருமக்கள் காங்கிரசு பக்தவச்சலமும் தமிழ்ப்பேராசிரியர் - கல்வி அமைச்சர் பேரா. அன்பழகன் அவர்களும் தாம் என்பதனை மனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

ஆனால் பள்ளிகள் நடத்துபவர்கள் கில்லாடிகள். ஒரு பிரிவிற்கு இசைவு வாங்கிவிட்டு மேலும் ஒன்றிரண்டு பிரிவுகளைச் 'சத்தமில்லாமல்' தொடங்கி, 'கீழே' சரிக்கட்டி விட்டார்கள் என்பதே உண்மை.

எனவே, ஒரு கோடிப் பேர் தமிழ் வழியில் கல்வி பயில்கின்றார்கள் என்று என்னால் துணிந்து சொல்ல முடியவில்லை. இவர்களில் 'ஆங்கில வழியில்' படிப்பதற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேரோ?

அந்த 'ஆண்டவனு'க்குத்தான் வெளிச்சம்! அதாவது கல்வித் துறையை ஆண்டவனுக்கு!

அடுத்து அரசு உதவிபெறும் நிறுவனங்கள் (Aided) ஏற்கெனவே இவர்கள் ஒருகோடிப் பிரிவில் அடங்குவர். எனினும், ஒரு தெளிவுக்காக இது :

உயர் நிலைப் பள்ளிகள்	: 626	மாணவர்கள் :	3.20 இலட்சம்
மேல்நிலைப் பள்ளிகள்	: 884	மாணவர்கள் :	11.10 இலட்சம்

			14.30

எனவே அரசு உதவிபெறும் பள்ளிகளும் தமிழ் வழியில்தான் பாடம் நடத்தின.

நான் பயின்ற தேவகோட்டை, தேபிரித்தோ உயர்நிலைப்பள்ளியிலும், நான் பணியாற்றிய திருப்பாதிரிப்புலியூர் தூய வளனார் உயர் நிலைப்பள்ளியிலும், பறம்புக்குடி ஆ.வை. உயர் நிலைப்பள்ளியிலும் தமிழ் வழியில்தான் பாடங்கள் - நான் படித்தபோதும், பயிற்றுவித்தபோதும் இது நிலைமை - இப்போது எப்படியோ?

மேலும், ஒரு பிரிவில் ஆங்கிலப் பயிற்றுமொழி வகுப்பினை நடத்திக் கொள்ளலாம் எனும் ஆணையைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டவை இத்தகைய உதவி பெறும் பள்ளிகள் தாம்.

எனவே அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒருகோடி மாணவர்கள் தமிழ் வழியில் தான் பயில்கிறார்கள் என்பதனை ஒரு விவாதத்துக்காக எடுத்துக் கொள்வோம். (சேதங்களை மறந்துவிட்டு)

புள்ளி விவரங்களை மீண்டும் பாருங்கள்

தனியார் தொடக்கப் பள்ளிகள்	5205
தனியார் நடுநிலைப் பள்ளிகள்	1629

	7034

மாணவர்கள் : 10.36 + 9.89 = 20.25 இலட்சம். எனக்குத் தெரிந்த பல தனியார் தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள் அரசு மானியம் பெற்று இயங்குபவைதாம்.

செங்குடியில் (நான் பயின்ற) உரோமன் கத்தோலிக்க நடுநிலைப்பள்ளி இத்தகையது தான்.

இதனை நினைவிற் கொண்டு இந்த 20.25 இலட்சம் பேரும் தமிழ் வழியில் கல்வி பயில்பவர்கள் தான் என்றே எடுத்துக்கொள்கிறேன்.

ஏறத்தாழ ஒரு கோடி மாணவர்கள் தமிழ் வழியில் பயில்வதாகவே வைத்துக் கொள்வோம்.

இப்போதுதான் 'எதிர்' வினை வருகிறது.

அரசு உதவி பெறாத உயர் நிலைப் பள்ளிகள் :	104	0.71 இலட்சம்
மேல் நிலைப் பள்ளிகள்	46	0.21 இலட்சம்

எனவே அரசு உதவிபெறாத - மாநில வாரியத்துக்கு உட்பட்ட பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் ஏறத்தாழ 1 இலட்சம்தான் (92000 துல்லியமாக)

இந்நிலையில் எதிர் முகாமில் இருந்து கொண்டு முற்றிலும் ஆங்கிலப் பயிற்றுமொழியில் நடைபோடுவதும், மாநில மற்றும் நடுவணரசு இசைவு பெற்றவையுமான பள்ளிகள் விவரம் இதோ:

ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள்	41	0.55 இலட்சம்
சிபிஎஸ்இ பள்ளிகள்	194	2.23 இலட்சம்

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளாக இருப்பதாலும், நடுவணரசு ஊழியர்களின் பிள்ளைகள் பயிலும் 'சிபிஎஸ்சி' பள்ளிகளாக இருப்பதாலும் இந்த 2.78 இலட்சம் மாணவர்கட்கும் இப்போதுள்ள நிலையே நீடிக்கட்டும் என்று கருதினோம். மேலும், எல்லாம் சீராக முடிந்தபிறகு, அவர்களது நிலைமைகளை உணர்ந்து தக்க முடிவெடுக்கலாம் என்றும் கருதினோம். எனவே, 'தமிழ் வழிக் கல்வி' பற்றி முடிவெடுத்த போது இவற்றுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

நாங்கள் கொண்டு வர விரும்பியது மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தான்; மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளில்தான்; அவற்றோடு அரசு உதவி பெறாத - தமிழ் வழியை இதுவரை செயற்படுத்தாத பள்ளிகளில் தான் :

		மாணவர்கள்
மெட்ரிகுலேசன் உயர் நிலைப் பள்ளி :	1641	4.37 இலட்சம்
,, மேல் நிலைப்பள்ளி	912	4.23 இலட்சம்
	-------	-------
	2553	8.60 இலட்சம்
	-------	--------

குறிப்பாக, இந்த 2553 மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பயிலும் மாணவர்களாகிய 8.60 இலட்சம் பேருக்குத்தான் 1 முதல் 5 வகுப்பு வரை தமிழில் பயிலும் வாய்ப்பை உருவாக்க நினைத்தோம். (இன்று மெட்ரிகுலேசன் பள்ளிகள் 3244 என்பதை நினைவிற் கொள்க) ஒரு கோடிப் பேர் தமிழ் வழியில் பயிலும் போது,

இந்த 8.60 இலட்சம் பேரும், அடிப்படைக் கல்வியையாவது தமிழ் வழியில் பெறட்டும் என்ற எண்ணத்தில்தான் 'தமிழ் வழிக் கல்வி' கொண்டு வரப்பட்டது.

தமிழே படிக்காமல், தமிழே தெரியாமல் ஒரு தலைமுறை உருவாவதை எந்தத் தமிழ் உள்ளமும் ஏற்காது.

இந்த அடிப்படையில் தான் எங்கள் முயற்சிகள் அமைந்தன.

வேறு கோணத்தில் இந்தப் புள்ளி விவரங்களை அலசுங்கள் :

தொடக்கப் பள்ளிகள்	31052
நடுநிலைப் பள்ளிகள்	5640
உயர்நிலைப்பள்ளிகள்	2735
மேல் நிலைப்பள்ளிகள்	2170
மொத்தம்	41597

மெட்ரிக்	2553
சி.பி.எஸ்.இ	194
ஆங்கிலோ	41
உதவி பெறாதவை	150
மொத்தம்	2938

இப்போது எங்கள் பாதுகாப்பு அரண்கள்; எங்கள் படைபலம்; தமிழ் வழி நிறுவனங்கள் : 41597

எனவே எங்கள் படையெடுப்பு இந்த 2938 நிறுவனங்களின் மீதுதான். அதிலும் விதிவிலக்காக விடப்பட்ட 235 நிறுவனங்கள் போக எஞ்சிய 2703 நிறுவனங்களில்தான் - 2100 மழலையர் தொடக்கப் பள்ளிகளில்தான் - 'தமிழ் வழிக் கல்வி' யை - அதிலும் 5 வகுப்பு வரை மட்டும் கொண்டுவர வேண்டும் என முனைந்தோம்.

41597 உடன் ஒப்பிடும்போது 2703 + 2100 - மிகமிகச் சிறிய எண்தான். மிகவும் சிறுபான்மையான எண்ணிக்கைதான்.

அப்படியானால் ஏன் எதிர்ப்பு, வழக்கு எல்லாம்?

30.9.99 வரையிலான புள்ளிவிவரங்களையும் ஒரு பார்வை பார்ப்போம்.

	1995-96	1996-97	1997-98	1998-99	1999-2000 (30.9.99 வரை 6 மாதம்)
அரசு உ.நி.பள்ளி	2306	2324	2305	2706	2735
மேல் நிலைப்பள்ளி	1675	1756	1836	2119	2170
உதவிபெறாதவை	279	299	327	110	150
ஆங்கிலோ இந்தியன்	41	41	41	41	41
சி.பி.எஸ்.இ.	181	192	194	194	194
மெட்ரிகுலேசன் உயர்நிலைப்பள்ளிகள் மேல் நிலைப்பள்ளிகள்	1427	1700	2037	2187	2553

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளின் எண்ணிக்கை கடைசிவரை மாறவே இல்லை அதே 41 தான்.

1995-96 என்பது தி.மு.க. ஆட்சிக்கு வருமுன் இருந்த நிலை. 1996-97 தி.மு.க. ஆட்சி; கல்வி அமைச்சர் பேரா. காலத்தில் சி.பி.எஸ்.இ. பள்ளிகள் புதிதாக 11 முளைத்துள்ளன. போகட்டும். ஆனால் மெட்ரிகுலேசன் பள்ளிகள் எப்படி உயர்ந்துள்ளன என்று பாருங்கள்: ஒரே ஆண்டில் பேரா. அனுமதி வழங்கிய பள்ளிகள் : **273** (இதன் வளர்ச்சியைக் கவனித்துக் கொண்டே வாருங்கள்) 1997-98 இல் கூடுதலாக **337** மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. 1998-99இல் கூடுதலாக **150** மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ***1999-2000 த்தில் 1.4.1999 முதல் 30.9.1999 வரை 6 மாதங்களில் மட்டும் 366 மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.***

கல்வி அமைச்சர் பேராசிரியர் 6 மாதங்களில் அதாவது 128 நாள்களில் 366 மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளார் என்றால் சராசரியாக ஒரு நாளைக்கு இரண்டு (அ) மூன்று பள்ளிகள் முளைப்பதற்கு நீர் ஊற்றியுள்ளார் என்று பொருள். (6 மாதங்களில் விடுமுறை போக வேலை நாள்கள் 128 தான்)

அடடா! என்னவேகம் இந்த வேகம்!

ஆங்கிலவழிப் பள்ளிகள் பெருக வேண்டுமென்பதில் அன்பழகனுக்குத் தான் எவ்வளவு அக்கறை! என்ன மோகம் இந்த மோகம்! நான் மற்றவற்றைக் கணக்கில் எடுக்கவில்லை.

அவர் பொறுப்பில் 3½ ஆண்டு காலத்தில் மட்டும் **1126** மெட்ரிகுலேசன் பள்ளிகள் வளர்ந்துள்ளன. நம் எதிரிகளை வளர்ப்பதில், அவர்களுக்குக் **கருவி** வடித்துக் கொடுப்பதில், நம் தமிழ் நோக்கினை எதிர்க்கும் வல்லமையை அவர்கட்கு அளிப்பதில் நம் பேராசிரியர் காட்டிய ஆர்வம் இதுவரை தமிழகக் கல்வி அமைச்சர் எவரும் செய்யாத சாதனையாகும். 1975 முதல் 1995 வரை இருபது ஆண்டு காலத்தில் 1427 பள்ளிகள்; 3½ ஆண்டுகளில் மட்டும் 1126 மெட்ரிகுலேசன் பள்ளிகள் என்றால் பாராட்டாமல் (?) இருக்க முடியுமா?

சி.பி.எஸ்.இ., பள்ளிகளில் 1,67,727 மாணவர்கள்தாம்

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் 1,42,880 மாணவர்கள்தாம்

நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி மெட்ரிகுலேசன் பள்ளி மாணவர்கள் 8.60 இலட்சம் பேர்தான்

மீண்டும் ஒரு முறை மெட்ரிகுலேசன் பள்ளிகளின் வளர்ச்சியைப் பார்த்துக் கொள்ளுங்கள்

ஆண்டு (1)	உயர்நிலைப் பள்ளி (2)	மேல் நிலைப்பள்ளி (3)	மொத்தம் (4)	
1975 முதல் 1995-96 வரை	887	540	1427	
1996-97	1032	668	1700	(+273)
1997-98	1245	792	2037	(+337)
1998-99	1335	852	2187	(+150)
1999-2000 (30.9.99 வரை)	1641	912	2553	(+366)

குறிப்பு : முந்தைய ஆட்சிகளில் - 1427

நமது ஆட்சியில் 1126 (மூன்றரை ஆண்டுகளில்)

(5.7.2003 அன்று இதழ்களில் வந்தபடி - ஒரு புள்ளி விவரம்)

1.10.1999 முதல் 13.5.2001 வரை பேராசிரியர் மேலும் எத்தனை பள்ளிகட்கு அனுமதி வழங்கினார்? அவரது காலத்தில் 1098 பள்ளிகள்.

14.5.2001 இல் அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்றபின் 30.6.2003 வரை புதிதாக அனுமதி பெற்ற மெட்ரிகுலேசன் பள்ளிகள் எத்தனை? இந்தப் புள்ளி விவரங்களையும் பார்த்தால்தான் தி.மு.க. அரசின் இனமானப் பேராசிரியர் எவ்வளவு மேலோங்கி இருக்கிறார் என்பது தெரியும். எம்.ஜி.ஆர். காலத்தில் 400 பள்ளிகள், புரட்சித்தலைவியின் முந்தைய ஆட்சியில் 465 பள்ளிகள். தற்போதைய ஆட்சியில் 863 பள்ளிகள் (இவற்றுள் பலவற்றின் ஏற்பு இலதாக்கப்பட்டுள்ளது)

காஞ்சிபுரம் மாவட்டத்தில் அனுமதி பெற்ற (ஏற்புப் பெற்ற)

மெட்ரிகுலேசன் உயர் நிலைப் பள்ளிகள்	113
மெட்ரிகுலேசன் மேல் நிலைப் பள்ளிகள்	120

	233

இவற்றில் நிரந்தர அங்கீகாரம் பெற்ற மேல்நிலைப் பள்ளிகள் 8 மட்டும். மீதி அனைத்தும் தற்காலிக அங்கீகாரம் பெற்றவைதான்.

மற்றோர் இடத்தில் இதனுடைய விரிவினைக் காண்போம்.

அறிஞர் அண்ணா

தமிழர்க்குத் தீது பிறர் தருவதால் அல்ல; நாமே தீது தேடிக் கொண்டால் ஒழியத் தமிழர்களுக்குத் தீது ஒரு போதும் வராது; தமிழ் மறையிலும் தமிழ் நெறியிலும் காலம், இடம், வகை, பொருள் ஆகியவை அறிந்து செய்யவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது; அவ்வழி நடந்து தமிழ் மொழியை அரியாசனத்தில் அமர்த்தக் கூடிய நன்னாளை நாம் உருவாக்குவோம் - (உலகத் தமிழ் மாநாடு 3.1.1968)

இயல் இரண்டு

மெட்ரிகுலேசன் பள்ளிகளின் நோக்கம் – அனுமதிக்கான முறையிகங்(நிபந்தனை)கள்

ஒரு மெட்ரிகுலேசன் பள்ளி தொடங்கிட இத்தனை முறையிகங்களும் கடைப்பிடிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட வேண்டும். அவை பின்வருமாறு:

ANNEXURE

1. The school should be situated in a building which is accessible to all castes and communities.

2. A cash endowment of not less than Rs.2,00,000/- (Rupees two lakhs only) should be created in the name of the school in the shape of Government securities like National Defence Certificate or National Plan Certificates or in a fixed deposit for a period of not less than seven years within the Tamilnadu Industries Investment Corporation Ltd. Chennai or in the Tamil Nadu Industries Co-operative Bank Ltd., or in the Bank as defined in the Banking Companies acquisition and Transfer of undertaking Act 1970 (Central Act of 5 of 1970).

II. The entire annual income derived by way of interest from the endowment should not be withdrawn or sold, mortgaged, exchanged or encashed without the prior approval of the Director.

III. A Sum of Rs.1,00,000/- (Rupees one lakh) out of the above endowment should be created before the school is opened and the balance endowment amount of Rs.1,00,000/- should be built upon under five equal instalments of Rs.20,000/- i.e. at Rs.20,000/- from Std. VI and the amount of Rs.2,00,000/- should be created in full before opening of Std X.

3. In addition to the creation of the endowment referred to above the educational Agency shall also deposit in any Scheduled Bank in the name of the School or a sum equivalent to minimum of one month's

salary to the members of the staff on the due date in the event of any delay in disbursement of salary.

4. Adequate facilities for the pupils and teachers, equipment, building, laboratory, library, play ground and other facilities for imparting instruction should be provided.
5. Qualified teachers as per the department requirement should be appointed. Unqualified teachers should be replaced by the qualified teachers.
6. The educational agency should abide by all the conditions, instructions etc. specified by the Department.
7. The management should execute an agrement with the teaching and non-teaching staff of the school in the prescribed form.
8. Government scale of pay should be implemented.
9. Provident Fund scheme should be implemented.
10. The school shall adopt Matriculation School syllabus of Tamil Nadu.
11. No grant from the State funds should be given to the institution for the maintenance etc.
12. The school will be inspected periodically by the Inspector of Matriculation Schools, Chennai / Madurai / Coimbatore on behalf of the Department of Education.
13. Strength should be maintained as proposed.
14. The lease deed of the building and play ground should be registered.
15. Accommodation, library, laboratory and Sanitary facilities should be provided adequately.
16. Additional particulars required in the form enclosed should also be submitted to the Director while applying for formal permission.
17. More infrastructural facilities should be provided.

இவற்றின் மொழிக் கொள்கை என்ன?

இதோ ஒரு மெட்ரிகுலேசன் பள்ளி விளம்பரத்தைப் பாருங்கள்:

Academic Information
Languages : Tamil & Hindi

பயிற்றுமொழி ஆங்கிலம் மட்டுமே என்பது சொல்லாமலே தெரியும். 23.1.1968 இல் அறிஞர் அண்ணா கொண்டு வந்த இருமொழிச் சட்டம் 2000-2001இல் எந்த வகையிலும் செயற்படுத்தப்படாமல் மும்மொழித் திட்டமாக முகிழ்த்திருப்பதைக் காணுங்கள். அதுவும் அண்ணாவின் தோழராகிய இனமானப் பேராசிரியர் காலத்தில்.

தினமணி (24.2.2000)யில் வந்த விளம்பரத்தின் படி, திருப்பூவணம் வேலம்மாள் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியில் உள்ள நிலை :

1. ஆங்கிலம் 2. தமிழ் 3. இந்தி

கிரெளன் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி மதுரை-2'
துணைப்பாட வகுப்புகள் ஹிந்தி மற்றும் அரபி
ஹிந்தியில் சான்றிதழ் பெறுவதற்கான தனி வகுப்புகள்.

* * *

இயல் மூன்று

சி.பி.எஸ்.இ. பள்ளிகள்

(Central Board Secondary Education)

ஏற்கெனவே ஒரு புள்ளி விவரம் பார்த்தோம். தற்போதுள்ள கணக்குப்படி தமிழகத்தில் 194 சி.பி.எஸ்.இ. பள்ளிகள் உள்ளன. பின்வரும் ஆறு பள்ளிகள் அவற்றில் அடங்கும்.

1. Padmaseshadri, Senior Secondary School, K.K.Nagar, Chennai - 78
2. Vidya Mandir, Adyaru, Chennai.
3. D A V Senior Secondary School, Gopalapuram, Chennai - 84
4. Hindu Senior Secondary School, Tiruvallikeni, Chennai - 5
5. Maharishi Vidyalaya Senior Secondary School, Chetupattu, Chennai - 37
6. St. John Senior Secondary School, Besant Nagar, Chennai.

ஒரு நாள் பாலவாக்கத்தில் உள்ள 'லட்சுமி ஹயக்ரீவா ஆங்கிலப் பள்ளி'யைப் பார்வையிட்டேன்.

பள்ளி அமைந்திருக்கும் பாலவாக்கம் பகுதியில் வசிப்பவர்கள், பெரும் பாலானோர் கூலித் தொழிலாளிகள், தானி (ஆட்டோ) ஒட்டுநர்கள் மற்றும் கட்டடத் தொழிலாளர்கள். மிகவும் நலிவடைந்த குடும்பத்தினர். இவர்களது குழந்தைகளுக்கும் தரமான கல்வி கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் தொடங்கப்பட்டதே இப் பள்ளி.

இங்கு சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தின்படி கற்பிக்கப்படுகிறது. ஆனால் மற்ற சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் போல அல்லாமல் மிகக் குறைந்த கட்டணம் தண்டப்படுகிறது. சேர்க்கையின் போது நன்கொடை கிடையாது.

''தங்கள் குழந்தைகளும் மற்ற பள்ளிக் குழந்தைகள் போல் ஆங்கிலத்தில் பேசணும், படிக்கணும்-னு இங்குள்ள பெற்றோர் விரும்புறாங்க. . . அவங்க ஆசையை எங்கள் பள்ளி ஓரளவுக்குப் பூர்த்தி செய்யுதுன்னு சொல்லலாம். இங்கே வந்து சேர்க்கும்போது அவங்களோட அறிவுத்திறன் (ஐ.க்யூ) ரொம்பக் கம்மியா இருக்கும்.. . .மூணு வருஷம் சேர்ந்தாற்போல் இங்கே பயிற்சிக்கப்புறம் அது உயர்கிறது'' என்கிறார் முதல்வர்.

''ஆனா இவங்களுக்கு அடிப்படையிலேர்ந்து ஆங்கிலம் கத்துக்கொடுத்து, பேசவும் வைக்கிறது ரொம்பப் பெரிய விஷயம். ஏன்னா வீட்டில் நடைமுறையில் ஆங்கிலம் இல்லை. எனவே, பள்ளியைத் தவிர அவர்களுக்கு வெளியில் பேசும் வாய்ப்பு இல்லை. அதுவே பெரிய குறைபாடு. இருந்தும் எங்கள் மாணவர்கள், கான்வெண்ட் தரத்துக்கு வருவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது'' என்கிறார் ஆசிரியை ஒருவர். (தினமணி)

இங்கு ஆங்கிலம் தான் பயிற்றுமொழி. மும்மொழித்திட்டமும் இங்கே உள்ளது. நன்கொடை வாங்கப்படுவதில்லை. கூலித் தொழிலாளர்களின் பிள்ளைகளே இங்குப் பயில்கின்றனர். பின் ஏன் சி.பி.எஸ்.இ.? நடுவணரசு ஊழியர் பிள்ளைகட்காகத்தான் சி.பி.எஸ்.இ. எனும் எண்ணத்தை உடைத்துவிட்டது இப்பள்ளி.

அப்படியானால் மெட்ரிகுலேசன் பள்ளியாகக் கூட இது இருந்திருக்கலாமே!

வியப்புத்தான். ஏழை எளிய தமிழர்களின் குழந்தைகள் இங்கு எதை எதிர்பார்த்துச் சேர்க்கப்படுகிறார்கள்? நான்போனபோது இங்கு இருந்த மாணவர்கள் 65 பேர்.

தமிழ் அபிமானி யார்?

தமிழிலிருந்து பூமண்டலத்திலுள்ள மொழிகளிளெல்லாம் பிறந்து நிற்பதாகக் கூவின மாத்திரத்திலே ஒருவன் தமிழபிமானியாக மாட்டான். பள்ளிக்கூடத்து சாஸ்திரங்கள் எல்லாம் தமிழ் மொழியில் கற்றுக் கொடுக்கும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழராகப் பிறந்தோர் கூடியிருக்கும் சபைகளிலேயும் தமிழராகப் பிறந்தார் ஒருவருக்கொருவர் பேசும்போதும், இதர பாஷைகள் பேசாமல் தமிழே பேசும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழில் புதிய கலைகள், புதிய காவியங்களாக புதிய உயிர் தோன்றும்படி செய்வோன் தமிழபிமானி. தேவாரத்திலும், திருவாசகத்திலும், திருவாய்மொழியிலும், திருக்குறளிலும், கம்பராமாயணத்திலும் அன்பு கொள்ளாதவனுக்கு தமிழபிமானம் உண்மையிலே பிறக்க நியாயமில்லை.

- (பெ. தூரன் தொகுத்துப் பதிப்பித்த (1953) பாரதி தமிழ் என்ற நூலிலிருந்து)

இயல் நான்கு

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்

தற்போது தமிழகத்தில் உள்ள ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் : 41 தான். பல ஆண்டுகளாகவே, புதிய ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் எவையும் தொடங்கப்பட வில்லை. இவற்றை நிர்வகிப்பவர்கள் வேண்டுமானால் ஒரு சிலர் ஆங்கிலோ இந்தியர்களாக இருக்கலாமே தவிர, படிப்பவர்களில் மிகச்சிலரே ஆங்கிலோ இந்தியர். மற்றவர்களில் பெரும்பாலோனோர் பிற தமிழர்களே, தமிழ்நாட்டுப் பிற இன மக்களே.

இவர்கள் ஏன் மெட்ரிகுலேசன் பள்ளிகளை விட்டு, அரசுப் பள்ளிகளை விட்டு ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளுக்குப் போனார்கள்! ஆராயப்படவேண்டிய ஒன்று. எங்களுடைய தமிழ் வழிக் கல்வி ஆணையிலிருந்து இந்த 41 பள்ளிகட்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தற்போது அவற்றை நாங்கள் எடுத்துக் கொள்ளவில்லை.

இது தொடர்பாக,

சட்டமன்றத்தில் ஒரு விவாதம்

(14.3.97ஆம் நாளைய இதழ்களிலிருந்து)

ஆங்கிலத்தில் சூடான விவாதம் - சபையில் பரபரப்பு

சட்டசபையில் நேற்று அமைச்சர் தமிழ்க்குடிமகன், நியமன உறுப்பினர் ஆன் டிமாண்டி, தி.மு.க. உறுப்பினர் காஞ்சனா கமலநாதன் ஆகியோருக்கு இடையே ஆங்கிலத்தில் சுவையான வாக்குவாதம் நடந்தது.

சட்டசபையில் நேற்று பட்ஜெட் மீதான விவாதத்தில் நியமன உறுப்பினர் ஆன் டிமாண்டி ஆங்கிலத்தில் பேசியதாவது :

மொழிக் கொள்கையைப் பொறுத்தவரை, முதல்வர் கருணாநிதி, அமைச்சர் தமிழ்க்குடிமகன் ஆகியோருக்கு மனம் நோகாமல் கூற விரும்புகிறேன். மாநிலத்தில் தமிழுக்கு முன்னுரிமை - முக்கியத்துவம் கொடுப்பது அவசியம். தமிழைப் படிக்க - எழுதத் தெரியாமல் இருப்பது என்னைப் போன்றவர்களுக்கு வேதனையாகவும் வெட்கமாகவும் உள்ளது.

ஆரம்பப் பள்ளிகளில் தமிழ் அவசியம்தான். ஆனால், தமிழ்மயப்படுத்தும் பெயரால், ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்கக்கூடாது. ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டதன் மூலம் திருக்குறள் உலகப் புகழ் பெற்றது.

உடனே தி.மு.க. உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் எழுந்து, சரளமான ஆங்கிலத்தில் கேள்வி எழுப்பினார். தமிழ் மொழியை இரண்டாவது பாடமாக படிப்பதன் மூலம் எந்தவழியில் ஆங்கில மொழி பாதிக்கப்படும் என்பதை உறுப்பினர் தெரிவிக்க வேண்டும் என்றார்.

காஞ்சனா கமலநாதன் பேசி முடித்ததும் அ.தி.மு.க. உறுப்பினர் திருநாவுக்கரசு எழுந்து, ''சபாஷ்! சரியான போட்டி'' என்றார். (சபை சிரிப்பலையில் மூழ்கியது)

தமிழ் ஆட்சி மொழி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் எழுந்து, ஆங்கிலத்தில் விளக்கமளித்தார். ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் தமிழ் மொழியைப் பயிற்று மொழியாக நாங்கள் அறிமுகப்படுத்தவில்லை. முதலாவது பாடமாக தமிழும், இரண்டாவது பாடமாக ஆங்கிலமும் கற்க வேண்டும் என்றுதான் கூறியுள்ளோம்' என்றார்.

உடனே த.மா.கா. உறுப்பினர் ஞானசேகரன், தமிழ் ஆட்சிமொழி அமைச்சர் ஆங்கிலத்தில் பேசலாமா என்று கேள்வி எழுப்பினார். அதற்கு அமைச்சர் தமிழ்க்குடிமகன் ''ஆங்கிலத்தில் பேச முடியும். அதற்கான விடையும் சொல்ல முடியும் என்பதற்காக ஆங்கிலத்தில் பேசப்பட்டது'' என்று தமிழில் பதிலளித்தார்.

ஆனால் பொதுவாக ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளின் வளர்ச்சியும் தரமும் நன்றாகவே உள்ளன. 'தினமலர்' தந்த குறிப்பையே நோக்கினால் உண்மை புரியும்.

''தமிழகத்தில் 41 ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் கடந்த சில ஆண்டுகளாக இல்லை. எனவே, இப்பள்ளிகள் மூலம் பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களின் எண்ணிக்கையும் ஐந்தாயிரத்துக்குள் இருக்கின்றது. குறைந்த எண்ணிக்கை, சிறந்த ஆசிரியர்கள், கட்டுப்பாடு, பள்ளியில் அனைத்து வசதிகள், படிக்கும் மாணவர்களின் குடும்பச் சூழ்நிலை, படித்த பெற்றோர்கள், பண வசதி போன்ற காரணங்களால், இப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் அதிகமாகத் தேர்ச்சி பெறுகின்றனர்.

பள்ளியில் அனைத்து அடிப்படை வசதிகள் முக்கியம். வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், தேவையான அளவுக்கு ஆசிரியர்கள், அவர்களுக்குள்ள கற்பித்தல் திறன், விளையாட்டு மைதானம், கலை அரங்கம், பிற பயிற்சி அளிக்க பகுதி நேர ஆசிரியர்கள். . . . இவற்றில் பெரும்பாலான வசதிகள் ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளில் உள்ளன.

இந்தப் பள்ளிகளில் ஆண்டு இறுதியில் நடத்தப்படும் தேர்வுகளின் முடிவுகளை வைத்து மாணவர்களின் வெற்றி, தோல்வி பெரும்பாலும் அறிவிக்கப்படுவதில்லை. காலாண்டு, அரையாண்டு தேர்வுகளுடன் ஆண்டு இறுதியில் நடத்தப்படும் தேர்வு மதிப்பெண்களையும் பார்த்து 'சராசரி' கணக்கிடப்படுகிறது. அதனடிப்படையில் மாணவர்களின் தரம் கணிக்கப்படுகிறது.

ஓராண்டு படிப்பில் நடத்தப்படும் ஒவ்வொரு தேர்வுக்குப் பின்னரும் (காலாண்டு, அரையாண்டு. . .) ஆசிரியர் - பெற்றோர் சந்திப்பு நடத்தப்படுகிறது. மாணவர்களின் தேர்வுத் தாள்கள் பெற்றோர்களிடம் காட்டப்படுகின்றன. மாணவர்களின் குறைகள், நிறைகள் நேரடியாகப் பெற்றோர்கள் அறிந்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க இதன் மூலம் வழிவகுக்கப்படுகிறது.

பள்ளியின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் வளர்ச்சிக்கும், ஆசிரியர் - பெற்றோர் பலர் இதில் சேவை மனப்பான்மையுடன் பல வழிகளில் உதவிகள் செய்து வருகின்றனர்.

உள்ளூர் முதல் தேசியம் வரை நடத்தப்படும் போட்டிகளில் பங்கேற்க இப்பள்ளிகளில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கல்வி மட்டுமே நோக்கமாக இல்லாமல் பல்வேறு கலைகளும் பள்ளி நேரத்திற்குப் பின்னர் பகுதி நேர ஆசிரியர்களைக் கொண்டு கற்றுத் தரப்படுகிறது. குறிப்பாக, இசை, பாட்டு, நடனம் போன்றவை.

பின்தங்கியுள்ள மாணவர்களைத் தனியாக இனம் கண்டு, அவர்களுக்குப் பள்ளி நேரத்துக்குப் பின் கூடுதலாகக் கற்றுத் தரப்படுகிறது.

ஆசிரியர்களின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் பள்ளி நிர்வாகத்தினரால் கண்காணிக்கப்படுகிறது. அதன்மூலம் ஆசிரியர்களும் கற்பித்தலில் கவனம் சிதறாமல் உள்ளனர். குறிப்பிட்ட நேரத்தில் திட்டமிட்டபடி பாடப் பிரிவுகள் கற்று முடிப்பதிலும், தேர்வுகளை நடத்துவதிலும் கவனம் செலுத்தப்படுகிறது.

அதிகக் கட்டணங்கள் வசூலிக்கப்படுவது இப்பள்ளிகளில் காணப்படும் குறையாகப் பலர் கூறுகின்றனர். ஆனால், வசூலிக்கப்படும் பணத்திற்கு ஏற்பக் கல்வியில் கவனம் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற பல காரணங்களால் ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் அதிகமாகத் தேர்ச்சி பெறுகின்றனர்''.

இவ்வளவு பள்ளிகள் ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாக் கொண்டும், தமிழ்நாட்டின் எல்லாப் பள்ளிகளிலும் ஆங்கிலம் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்பட்டும் மாணவர்களின் ஆங்கிலத் திறன் எவ்வாறுள்ளது?

இதோ, 'தினமலர்' கருத்து (15.1.2002)

''14 பள்ளிகள் 'முட்டை'

கடந்த ஆண்டு பொதுத் தேர்வில் ஒன்பது மேல்நிலைப்பள்ளிகள் '0' சதவீத தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளது. இதில் 7 மெட்ரிக், பள்ளிகள். மேலக் கிடாரத்தில் ஒரு அரசு பள்ளி, வெள்ளிமலையில் ஒரு அரசுப் பள்ளி, இந்த பள்ளிகள் கடலூர், சென்னை, காஞ்சிபுரம், மண்ணூர்பேட்டை, பட்டாபிராம் போன்ற இடங்களில் அடங்கியுள்ளன. அனைத்து பள்ளிகளிலும் தேர்வுக்கு சென்றவர்கள் தலா பத்து மாணவர்கள் மட்டுமே. இந்த பள்ளிகளில் எந்தவித வசதியும் இல்லாமல், தரமான ஆசிரியர்களைக் கொண்டு பாடம் நடத்தாததால் ஒருவர் கூட தேர்ச்சி பெறவில்லை''.

அது மட்டுமன்று :

பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் (2001) ஒரு மாணவர்கூடத் தேர்ச்சியடையாத பள்ளிகள் 5 ஐந்தும் அரசு மற்றும் நகராட்சிப் பள்ளிகள். 12 ஆம் வகுப்புத் தேர்வில் ஒரு மாவணர் கூடத் தேர்ச்சியடையாத பள்ளிகள் 9. அதில் (இராம) மேலக்கிடாரம், வெள்ளிமலை (விழுப்) மேல்நிலைப்பள்ளிகள் 2. எஞ்சிய ஏழும் மெட்ரிகுலேசன் மேல் நிலைப்பள்ளிகள். எந்த வகையான அடிப்படை வசதியுமின்றி, அவசர கோலத்தில் அள்ளும் வரை பணத்தை அள்ளிவிட்டு, அரைகுறை நிலையில் மாணவர்களைச் சேர்த்ததனால் வந்த விளைவு என்று இதனைச் சொல்லலாமா? அத்தக்கூலிக்கு ஆள் பிடிப்பதுபோலச் சம்பளம் கொடுத்து, பயிற்சிபெறாத ஆசிரியர்களைச் சேர்த்ததனால் வந்த விளைவு எனலாமா?

மாவட்டம்	பள்ளியின் பெயர்	வருகை புரிந்தோர்	தேர்ச்சி பெற்றோர்	தேர்ச்சி சதவீதம்
கடலூர்	சேவியர் ஜீசிஸ் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி கடலூர்	4	0	0.00
செங்கல்பட்டு	லிட்டில் ஏஞ்சல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி துரைப்பாக்கம்	3	0	0.00
காஞ்சிபுரம்	இந்து மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி காஞ்சிபுரம்	4	0	0.00
பொன்னேரி	பாரத் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி பொன்னேரி	3	0	0.00
	சி.எஸ். சென்ட்ரல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மண்ணூர்பேட்டை	4	0	0.00
திருவள்ளூர்	கிரைஸ்ட் கிங் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி பட்டாபிராம்	3	0	0.00
சென்னை (தெற்கு)	ஜெயவேல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சென்னை - 40	3	0	0.00

ஒவ்வொரு வகுப்பிலும் சேர்ந்து, படித்து, தேர்வு எழுதியோர் எண்ணிக்கையைக் கவனித்தீர்களா?

4, 3, 4, 3, 4, 3, 3

ஏழு மெட்ரிகுலேசன் பள்ளிகளில் +2 தேர்வு எழுதியோர் 24 பேர்தான்.

இயல் ஐந்து

அரசு தொடக்கப் பள்ளிகள்

30.9.2002 இல் உள்ளபடி

அரசு தொடக்கப் பள்ளிகள்	1598
நகராட்சி / மாநகராட்சி தொடக்கப் பள்ளிகள்	1015
ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள்	23813

ஒவ்வோராண்டும் அரசு சில புதிய கல்விக் கொள்கையை வகுத்துக் கொள்வதாலும், நடுவண் அரசின் 'அனைவருக்கும் கல்வி' எனும் அடிப்படையில் நிதி உதவி வழங்கப்படுவதாலும் புதிதாகப் பல தொடக்கப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன.

எனினும், நான் அமைச்சராக இருந்தபோதே ஒவ்வொரு ஒன்றியத்திலும் மூன்று நான்கு தொடக்கப்பள்ளிகளாவது மூடப்பட்டன. போதுமான மாணவர்கள் இல்லை என்பதற்காகவே இவை மூடப்பட்டன. அப்படியானால், அந்தச் சிற்றூரில் பள்ளி செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை ஏன் குறைந்தது? குடும்பக் கட்டுப் பாட்டின் விளைவா? பக்கத்தூரில் உள்ள 'நல்ல பள்ளி' நோக்கி நகர்ந்தமையால் ஏற்பட்ட விளைவா? ஆராயப்படவேண்டிய ஒன்று.

இயல் ஆறு

தனியார் தொடக்கப் பள்ளிகள்

1999 - 2000 கணக்கின்படி 5205 தனியார் தொடக்கப்பள்ளிகள் இருந்தன என்பதும், அவற்றில் 10.36 இலட்சம் மாணவர்கள் பயின்று வந்தனர் என்பதும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும். அரசு, இவற்றில் ஆசிரியர்க்கான சம்பளத்தினை வழங்கிவந்ததால் இவை நிலைத்தன. காலப்போக்கில் அரசுப் பள்ளிகளே தொடங்க முடியாத நிலையிலும், பலரது ஊதியமும் உயர்ந்துவிட்ட நிலையிலும், இவைபோன்ற 'தனியார்' பள்ளிகளுக்கான மானிய வாய்ப்பு இல்லாமற்போய்விட்டது.

எனவே இப்பள்ளிகளின் எண்ணிக்கை மேலும் வளரவில்லை.

இவற்றுக்கு மாறான மழலையர் தொடக்கப் பள்ளிகளும் மெட்ரிகுலேசன் உயர்நிலைப்பள்ளிகளும் பெருகி வந்தன என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

30.6.2003 இல் உள்ள படி தனியார் தொடக்கப் பள்ளிகள் : 5205 தான்.

இயல் ஏழு

அரசு நடுநிலைப் பள்ளிகள்

'1999 - 2000' கணக்கின்படி

அரசு நடுநிலைப் பள்ளிகள்	291
நகராட்சி / மாநகராட்சி	383
ஊராட்சி ஒன்றியம்	3187

	3861

இவற்றில் பயிலும் மாணவர்கள் மட்டும் : 13.45 இலட்சம் பேர்.

30.9.2002 இல் உள்ள நிலை : 317 + 398 + 3863 = 4578

இயல் எட்டு

தனியார் நடுநிலைப் பள்ளிகள்

1999 - 2000 -

தனியார் நடுநிலைப் பள்ளிகள் 1829. இதில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை : 9.89 இலட்சம்.

தற்போது தனியார் நடுநிலைப் பள்ளிகள் அனுமதிக்கப்படவோ, அவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான சம்பளத்தை அரசு ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையோ இல்லை எனலாம்.

30.9.2002 இல் உள்ள நிலைமை : 1805 தான்

30.6.2003 இல் உள்ள நிலைமை : 1829 தான்

13.5.2001 இன்படி தொடக்கப்பள்ளிகள் : 23276

13.5.2001 இன்படி நடுநிலைப் பள்ளிகள் : 3206

31.12.2003 இன் படி ச.சி.அ. (எஸ்.எஸ்.ஏ.) திட்டத்தின்கீழ்
தொடங்கப்பட்ட தொடக்கப் பள்ளிகள்: 356

31.12.2003 இன்படி ச.சி.அ. (எஸ்.எஸ்.ஏ.) திட்டத்தில்
தரம் உயர்த்தப்பட்ட நடுநிலைப்பள்ளிகள் : 339

அறிஞர் அண்ணா எழுதுகிறார்

தமிழ் அழகுமொழி - நம் தாய்மொழி. இதனை உணர்ந்தார்க்கு உளளத்திலெழும் உணர்ச்சிப் பெருக்குக்கு அளவில்லை.

தலைநிமிர்ந்து வாழ்ந்த தமிழன் இன்று தாழ்நிலை யுற்றதுகண்டு மனம் வெதும்பி உள்ளோர், மீண்டும் தமிழர் மாண்புடன் வாழ்ந்திடல் வேண்டும் என்று விழைகின்றனர் - முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இயல் ஒன்பது

அரசு உயர்நிலைப் பள்ளிகள்

1999 - 2000.

அரசு உயர்நிலைப் பள்ளிகள்	2006
நகராட்சி / மாநகராட்சி உயர்நிலைப்பள்ளிகள்	103

	2109

இவற்றில் பயிலும் மாணவர்கள் : 9.67 இலட்சம் பேர். எல்லா அரசுகளும் ஒவ்வோராண்டும் சில நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தியுள்ளன.

அந்த வகையில் பல புதிய உயர்நிலைப் பள்ளிகள் அரசின் சார்பில் அமைக்கப் பட்டுள்ளன.

எனவே 30.9.2002 இல் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளிகள் 1964 + 109 = 2073 பள்ளிகளே! (சில பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகள் ஆகிவிட்டன)

மயிலாடுதுறை வேதநாயகம் பிள்ளை கூறுகிறார்

தமிழ் படிக்காதவர்கள் தமிழ்நாட்டில் வசிக்க யோக்கியர்கள் அல்லர். அவர்கள் எந்த ஊரின் மொழிகளைப் படிக்கிறார்களோ அந்த ஊரே அவர்களுக்குத் தகுந்த இடமாகையால், தாய்மொழியைப் படிக்காமல் இங்கிலீஷ் மட்டும் படிக்கிறவர்களை இங்கிலாந்து தேசத்துக்கு அனுப்பிவிடுவோம். பிரெஞ்சு மட்டும் படிப்பவர்களை நாகரிகப் பட்டணத்துக்கு அனுப்புவோம். லத்தீன் முதலிய பாஷைகளுக்குச் சொந்த ஊர் இல்லாதபடியால் அந்தப் பாஷைகளைப் படிப்பவர்களை அநாமகரணத் தீவுக்கு அனுப்புவோம்.

இயல் பத்து

அரசு உதவிபெறும் உயர்நிலைப் பள்ளிகள்

1999-2000

அரசு உதவிபெறும் உயர்நிலைப் பள்ளிகள்	626
உதவி பெறாதவை	104
	730

எனவே தனியார் உயர்நிலைப்பள்ளிகள் : 730. இவற்றில் பயின்ற மாணவர்கள் : 3.91 இலட்சம் பேர்.

உதவிபெறாதவை காலப்போக்கில் ஆங்கிலப் பயிற்றுமொழிக்கு மாறவும், முற்றிலும் சுயநிதித் தன்மையில் வளரவும் வாய்ப்புகள் உண்டு.

30.9.2002 இல் அரசு உதவிபெறும் உயர்நிலைப் பள்ளிகள் :	646
உதவி பெறாதவை	186
	832

இவையும் எண்ணிக்கையில் வளர்ந்துள்ளன.

பொதுவானது:

2001 இல் பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதிய மாணவர்கள் : 5,91998 பேர். இவற்றுள் ஐந்துபள்ளிகளில் ஒரு மாணவர்கூடத் தேர்ச்சி பெறவில்லை. புள்ளிவிவரங்களைப் பாருங்கள்.

மாவட்டம்	பள்ளியின் பெயர்	தேர்வு எழுதியோர்
மதுரை	ஒய்.எம்.சி.ஏ. காமக் உயர்நிலைப்பள்ளி, மதுரை - 14	12
நாமக்கல்	அரசு டி.ஆர். உயர்நிலைப்பள்ளி, சங்கரை	32

தஞ்சாவூர்	அரசு உயர்நிலைப்பள்ளி, சேதுபாவாசத்திரம்	4
திருவள்ளூர்	நகராட்சி உயர்நிலைப்பள்ளி, திருவள்ளூர்	30
காஞ்சிபுரம்	நகராட்சி உயர்நிலைப்பள்ளி, ஆலந்தூர்	17

ஒருவரும் தேர்ச்சி அடையவில்லை.

ஒரு பள்ளியில் 32 பேரும் தோல்வி அடைகின்றார்கள் என்றால் ஒன்றிரண்டு பாடங்கட்கு ஆசிரியர்களே இல்லை என்று பொருளாகும். ஓராண்டாக ஆசிரியரே இல்லை என்றால் மாணவன் எப்படித் தேறுவான்? இதுதான் முக்கிய காரணம். அந்தப் பள்ளியில் பணியாற்றிய ஆசிரியர் அவருக்கு விருப்பமான இடத்திற்கு மாறிப்போய் விட்டார். அதிகாரிக்கோ மாற்றத் தெரிந்திருக்கிறது. ஆனால் அந்த இடத்திற்கு மற்றொருவரைப் பணியமர்த்த முயலவில்லையே! கேட்டால் அரசைக் கைகாட்டி விடுவார். இதில் அரசு மெத்தனமும், அதிகாரியின் பொறுப்பற்ற போக்கும் அடங்கியிருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது.

இயல் பதினொன்று

அரசு மேல்நிலைப்பள்ளிகள்

1999 - 2000

அரசு மேல்நிலைப் பள்ளிகள்	1206
நகராட்சி / மாநகராட்சி	80
	1286

இவற்றில் பயிலும் மாணவர்கள் : 15.47 இலட்சம் பேர். தமிழக அரசு பல உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் மாற்றியுள்ளது. பல புதிய உயர்நிலைப் பள்ளிகளையும் தொடங்கி உள்ளது.

அந்த வகையில் 30.9.2002 இல் உள்ள நிலை இது.

அரசு மேல் நிலைப் பள்ளிகள்	1507
மாநகராட்சி / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகள்	92
	1599

இயல் பன்னிரண்டு

தனியார் மேல்நிலைப்பள்ளிகள்

1999 - 2000

உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகள்	884
உதவி பெறாதவை	46

	930

இவை 930 மட்டுமே. இவற்றில் பயின்ற மாணவர்கள் : 11.35 இலட்சம் பேர்.

30.9.2002 இல் உள்ள நிலை இது.

உதவி பெறுபவை	909
உதவி பெறாதவை	94

	1003

2½ ஆண்டுகளில் தனியார் மேல் நிலைப்பள்ளிகள் 73 அதிகமாகி உள்ளன.

இயல் பதின்மூன்று

டான்பாஸ்கோ போன்ற பள்ளிகளில் பாகம் ஒன்றின் நிலை

'தமிழ் வழிக் கல்வி' பற்றிய தருக்கங்கள் சூடுபிடித்த நிலையிலேயே இதுபற்றி உணர்த்தியிருக்கிறேன்.

பலகாலமாகவே தமிழகப் பள்ளி, கல்லூரிகளில் பாகம் 1 - தமிழ் என்றும், பாகம் 2 - ஆங்கிலம் என்றும் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பல மும்மொழிக் கொள்கையையே செயற்படுத்துகின்றன. தமிழக அரசின் ஒப்புதலோடு நடைபெறும் பள்ளியில் இதைக் கட்டுப்படுத்தாத கல்வி அமைச்சர்தான் அன்பழகன். இப்படியிருக்கிறது என்று அமைச்சரவையில் கவனத்துக்குக் கொண்டு வந்ததே நான்தான்.

அரசுச் சார்பில் வந்த அறிக்கையிலும் (எழுதியது நான்) கூறியுள்ளேன்.

இதோ. எழும்பூரில் உள்ள டான் பாஸ்கோ மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளியில் உள்ள செய்தி :

அவர்கள் தந்த பள்ளிக் குறிப்பேட்டிலேயே பின்வரும் செய்தி உள்ளது:

The Second Languages taught :

In the Middle and High School - Tamil, Hindi, French.
In the Higher Sec.School - Tamil, Hindi, French, German.

இவர்களுக்குத் தமிழ் கட்டாயமில்லை.

நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் (அ) பிரெஞ்சு (அ) இந்தி மேல்நிலைப் பள்ளியில் தமிழும் உண்டு. இந்தி, பிரெஞ்சு, செர்மன் எடுப்போர் தமிழை எடுக்காமலும், படிக்காமலும் விட்டுவிட முடியும்.

இதோ மற்றொரு பள்ளி - St.John's Group of Schools.

1. St. John's Senior School -CBSE
Lang : Tamil, Hindi, French (From Class IV) Sanskrit (From Class V)

2. St. John's English School -CBSE
Lang : Tamil, Hindi, Sanskrit & French (From Class VIII)

'CBSE' பள்ளிகள் இவை என்பதால் அங்கு மும்மொழித் திட்டம் அனுமதிக்கப்படுகிறது என்பதால் இத்தனை மொழிகள் வருகின்றன என்று சொல்வார்கள்.

ஆனால் CBSE வழியில் வாராத 'டான் பாஸ்கோ' மேல்நிலைப் பள்ளி ஏன் இத்தனை மொழிகளைச் சொல்லிக்கொடுக்கிறது.

நன்றாகக் கவனியுங்கள்.

Tamil or Hindi or Sanskrit or French or German. செருமானிய மொழியோ, பிரெஞ்சோ, சமற்கிருதமோ, இந்தியோ எடுத்துக் கொள்பவர்கள் எடுத்துக் கொள்ளலாம். இந்த மொழிகளை எடுத்துக் கொண்டவர்கள் போக எஞ்சியவர்கள் தான் தமிழை எடுத்துக் கொள்வார்கள்.

எனவே இங்கு தமிழ் ஒரு கட்டாயப் பாடமாகக் கூட இல்லை. பிரெஞ்சு, செருமானிய மொழிகளை எடுத்துக் கொள்பவர்கள் தமிழர் அல்லாத வேற்றுமொழிக் காரர்கள். எனவே, வேறு வழியில்லாமல் அவர்கள் இவற்றைப் படிக்க வேண்டியிருக்கிறது என்பீர்கள்.

எனவே தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களின் குழந்தைகள் எல்லாரும் தமிழைத் தானே எடுத்துப் படித்திருப்பார்கள் என்று நீங்களும் நம்புவீர்கள்.

அதுதான் இல்லை. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தி.மு.க. அமைச்சர் ஒருவர், தமிழ் நன்கு தெரிந்த (தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட) தி.மு.க. அமைச்சர் ஒருவர் ஆகியோரின் பிள்ளைகள் 11, 12 ஆம் வகுப்புகளில் தமிழை ஒரு பாடமாகப் படிக்காமல், பிரெஞ்சு மொழியைத் தான் எடுத்துப் படித்தார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

மற்றொன்றும் இவர்கள் சொன்னார்கள்.

இவை சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகள். எனவே தமிழக மாநிலச் சட்டங்கள் இதில் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது என்று சொன்னார்கள். அதன்படியே தமிழை மட்டுமின்றி எல்லா மொழிகளையும் பாடமொழியாகப் படித்தனர். (அன்றைய நிலை அப்படித்தான் என்று கருதுகிறேன்).

ஆனால் அண்மையில் வெளிவந்த உச்ச நீதி மன்றத் தீர்ப்பில் ஒரு தெளிவான முடிவு வந்துவிட்டது.

''சிறுபான்மையர் நடத்தும் பள்ளிகளாக இருந்தாலும் ஒரு மாநில அரசு, தன் மாநில மொழியை / வட்டார மொழியைக் கட்டாயமாக ஒரு பாடமாகப் படிக்க வற்புறுத்துவதற்கு உரிமை உள்ளது''

இதுதான் தீர்ப்பு.

டான் பாஸ்கோ பள்ளியின் மீதும், யோவான் (John) பள்ளிகளின் மீதும் நடவடிக்கை எடுத்து, 'தமிழை'க் கட்டாயமாக ஒரு பாடமாக நடத்திட இன்றைய அரசு வற்புறுத்துமா?

இது நம்முன் உள்ள கேள்வி.

ஆனால் பல மெட்ரிகுலேசன் பள்ளிகளில், அதுவும் சிறுபான்மை அல்லாத பள்ளிகளில் தமிழ் / ஆங்கிலம் / இந்தி ஆகிய மூன்று மொழிகளும் பாடமாக இருக்கின்றனவே எப்படி?

தமிழக அரசு மும்மொழித் திட்டத்தை மெட்ரிகுலேசன் பள்ளிகள் நடைமுறைப்படுத்தலாம் என்று அனுமதி கொடுத்திருக்கிறதா?

அண்ணாவின் 'இருமொழித் திட்டத்தை' மெட்ரிகுலேசன் பள்ளிகள் கடைப் பிடிக்கத் தேவையில்லை என்று விதிவிலக்குக் கொடுத்துவிட்டதா? எப்போது?

அப்படி யாருக்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை என்றால் பின்வரும் விளம்பரத்துக்கு என்ன பொருள்?

அண்ணாவின் கொள்கைக்கு முரணாக நடக்கும் பள்ளிகள் மீது இதுவரை தி.மு.க. அரசும், அ.தி.மு.க. அரசும் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளனவா?

இவை நமக்கு விளங்கவேண்டும்.

St. John's Mat. HR. Sec. School இல் Tamil, Hindi & French.
St.John's Academy - Tamil, Hindi & French.

இவை சிறுபான்மையர் பள்ளிகள், இதோ ஓர் இந்துப் பள்ளி

பாரதி வித்யாலயா மெட்ரிகுலேசன் பள்ளி
திருப்பத்தூர் (வேலூர் மாவட்டம்)
(பதிவு எண் : 8256/ எப்2 / 2002)

அவர்கள் தெளிவாகத் தெரிவிக்கிறார்கள்

''LKGஇல் ஆங்கிலம் தமிழ் இரண்டும் போதிக்கப்பட்டு வருகிறது. முதல் வகுப்பிலிருந்து ஹிந்தி கட்டாயமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது'' என்று

2002இல் தான் ஏற்புப் பெற்றுள்ளார்கள். எடுத்த எடுப்பிலேயே இந்தியை முதல் வகுப்பிலிருந்தே கட்டாயப் படுத்தியுள்ளார்கள். இது எப்படி? ஆனால் நம்மால் நம் தமிழை முதல் வகுப்பில் கட்டாய மொழியாக்க முடியவில்லை.

26.5.99 ஆம் நாளன்றே முதல்வராக இருந்த கலைஞர்க்கும், கல்வி அமைச்சர் அன்பழகனுக்கும், எனக்கும் பேரா. ஆறு. அழகப்பன் விளக்கமாக எழுதியிருக்கிறார்.

''தாங்கள் குறிப்பிட்ட 2 ஆயிரத்து 402 பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்று மொழியாகவும் கற்பிப்பதோடு இந்தி மொழியையும் ஒரு பாடமாக வலுக்கட்டாயமாகக் கற்பித்து வருகின்றனர். இவ்வுண்மையை நாங்கள் மழலையர் பள்ளி சீரமைப்புக் குழுவில் உறுப்பினராக இருந்தபொழுது சுற்றுப் பயணங்களில் கண்டோம். பள்ளிகளில் நடத்தும் பாட அட்டவணையையும் பார்த்தோம், ஆசிரியர்கள் பட்டியலையும் பார்த்தோம். இந்தி வகுப்பிற்கு நேரம் ஒதுக்கப்பட்டு இந்தி ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்ட இந்தப் பள்ளிகள் இந்தி மொழியையும் பரப்பி வருகின்றன. அரசு அமைத்த குழுவினர் இது பற்றியும் முடிவு செய்யவேண்டும்.

அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுது மாணவர் தேசியப் படையில் இந்திச் சொற்கள் பயன்படுத்தப்பட்டதால் அப்படையைத் தமிழகத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும் அண்மைக் காலத்தில் நடுவண் அரசு இந்தி மொழிக்குச் சிறப்புக் கொடுத்து அறிமுகப் படுத்தப்பட்ட 'நவோதயா' பள்ளிகளைத் தமிழகத்தில் ஏற்றுக் கொள்ளவில்லை. தி.மு.க.வின் ஐம்பெரும் முழக்கங்களில் மூன்றாவது முழக்கம் :

''இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்'' என்பதாகும். ''எப்பக்கம் வந்து இந்தி புகுந்து விடும்''? என்று மேடையில் பேசும் நமக்கு வந்த பக்கம் இப்பொழுது தெரிகிறது. இம்மொழியை விரட்ட வழிகாணுங்கள்.''

உண்மையில் அரசின் விதி முறைகள் என்ன?

இவற்றையெல்லாம் உணர்ந்து தீர்வுகாண அன்பழகன் என்றாவது முயன்றது உண்டா? தெரிவித்தால் மகிழ்ந்து பாராட்டுவேன்.

ஆனால் ஒன்றுமட்டும் உண்மை : உறுதி.

மெட்ரிகுலேசன் பள்ளிகளில் 10 ஆம் வகுப்புத் தேர்வை எழுதியவர்கள் :

1999 இல்	62,588 மாணவ, மாணவர்கள்
2000 த்தில்	70,898
2001 இல்	76,960

1999 இல் மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தமிழ் வழிக் கல்வியைக் கொண்டுவர முயல்கிறோம். அரசாணை பிறப்பிக்கிறோம். அவர்கள் எதிர்த்து 'நீதிமன்றத்துக்குப் போகிறார்கள். தீர்ப்பில் நமது அரசாணை இலதாக்கப்படுகிறது. அவர்கள் 'வெற்றி' அடைகிறார்கள்.

நமது அரசாணை தோற்றுப் போனதற்காக அன்பழகன் 'துளியும்' வருத்தப்பட வில்லை. இதை நிறைவேற்றியே தீர்வோம் என்று கொதித்தெழவில்லை.

மெட்ரிக் பள்ளியினர் வெற்றியடைந்தது குறித்து அவர் எரிச்சல் அடையவில்லை. அவர்கள் கொட்டத்தை அடக்கவேண்டும் என்று எண்ணவில்லை.

மாறாக மனத்திற்குள்ளேயே அவருக்கு ஒரு மகிழ்ச்சி. அவர் அனுமதி தந்து வளர்த்துவிட்ட பள்ளிகள் தாமே வெற்றியடைந்தன? 1999 இல் 63000 மாணவர்கள் : 2001 இல் 77000 மாணவர்கள். எல்லாம் அன்பழகன் தந்த ஆதரவுதான்! தமிழர்களே! அடையாளம் தெரிந்து கொள்ளுங்கள்!

அறிஞர் அண்ணா

17.9.1948இல் மறைமலையடிகள் தலைமையில் திரு.வி.க., ம.பொ.சி. போன்றோர் கலந்துகொண்ட இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அறிஞர் அண்ணா பேசியது:

மறைமலையடிகளாரும் திரு.வி.க. அவர்களும் இந்தி நுழைவால் தமிழ் கெடும்; தமிழ்க் கலாசாரம் கெடும் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்ட பிறகு, அவர்கள் சாட்சியம் நமக்குக் கிடைத்துவிட்ட பிறகு, போர் முழக்கம் செய்வது தவிர நமக்கு வேறென்ன வேலையிருக்கிறது.

இயல் பதினான்கு

மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள்

மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் 1980 வாக்கில் தொடங்கப் பட்டன. அப்போது எந்தப் பள்ளியும் அரசின் ஏற்பினைப் பெறவில்லை.

பின்னர் இவை தொடக்கக் கல்வி இயக்குநரின் ஆளுகைக்கீழ் கொண்டு வரப்பட்டன.

இவற்றை ஒழுங்கு செய்திடச் சில அரசாணைகளும் பிறப்பிக்கப்பட்டன.
484 (கல்வித்துறை) / 24.4.1991

திருத்தத்துடன் கூடிய மற்றோர் அரசாணை :
349 (கல்வித்துறை) / 31.3.1993

7ஆவது விதியின்படி
all the primary . . . instruction.

விதி 7(அ) வின்படி
Tamil should . . . language.

தமிழை ஒரு பாடமாகப் படித்தாகவேண்டும். அவரவர் தாய்மொழியை முதன்மொழியாகப் படித்தாலும், தமிழ் கூடுதல் மொழியாகக் கற்பிக்கப்படவேண்டும்.

நான் சட்டப் பேரவைத் தலைவராக இருந்த காலத்திலேயே கல்வித்துறை மட்டுமன்று எந்தத் துறையுமே என்னைச் சார்ந்ததோ, என் அதிகாரத்துக்கு உட்பட்டதோ அன்று. இது எல்லார்க்கும் தெரிந்தது; எனக்கும் தெரிந்தது. ஆனால், நான் தமிழ் உள்ளம் படைத்தவன்; தமிழ்த்துறை சார்ந்தவன். தமிழ் தன் உரிய இடத்தைப் பெறவேண்டும் என்று நினைப்பவன்.

1989இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ‘இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மாநாடு’ நடைபெற்ற நேரத்தில் நான் ஆற்றிய உரையில் ஒரு பகுதி இது.

‘‘தமிழ் நாட்டில் பதினையாயிரம் மழலையர் பள்ளிகள். இவை அனைத்திலும் முழுவதும் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

தமிழுக்கு, முக்கியத்துவம் கொடுக்க வில்லை என்றால் எனது வானளாவிய அதிகாரத்தால் அவற்றைக் கூண்டோடு ஒழித்துவிடுவேன்'' (தினமணி 5.6.1989) இதுதான் என் பேச்சு.

'வானளாவிய அதிகாரம்' என்பது பி.எச். பாண்டியன் எங்களுக் கெல்லாம் கற்றுக் கொடுத்தது. அவர் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தித் திணிப்புச் சட்டப் பிரிவை எரித்த 10 சட்டமன்ற உறுப்பினர்களின் பதவியைப் பறித்தார். நான் சட்டமன்றத்தில் என் அதிகாரத்தை இதற்கெல்லாம் பயன்படுத்தவில்லை. ஆனால் புற்றீசல்கள் போல் வளர்ந்து பெருகிவரும் - அரசின் ஒப்புதலே பெறாமல் மூலைக்கு மூலை முளைத்து வரும் இந்த 'நர்சரிக் காளான்களை' ஒழிப்பதற்கு என் அதிகாரத்தைப் பயன்படுத்துவேன்' என்று பேசியிருக்கிறேன்.

'அதிகாரம் இதற்கெல்லாம் பயன்படுமா?' என்றெல்லாம் அப்போதே சில இதழ்கள் எழுதின. இதில், கவனிக்கப்படவேண்டியவை இரண்டு :

1. மழலையர் பள்ளிகள் 'ஆங்கில மாணவர்களை வார்த்தெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட பட்டறைகள்' எனும் போக்கினை மாற்றி முறையான தமிழ்ப் பயிற்சியோடு கூடிய பள்ளிகளாக மாற்றப்படவேண்டும் என்று நான் கருதி, அதற்காகக் குரல் கொடுத்துள்ளேன்.

2. இந்தக் கருத்தினை மனத்திற்கொண்டு அன்றைய கல்வி அமைச்சர் இந்த மழலையர் பள்ளிகளை ஒழுங்கு செய்திட முனைந்தாரா?

1989 இல் நான் இதனைப் பேசும்போது இருந்த நிலையினைக் கருதிப் பார்க்கவேண்டும்.

5.6.89 இல் திருவண்ணாமலையில் உள்ள 'திருக்குறள் நெறி பரப்பு மையத்'திலிருந்து கேப்டன் த. சாமிநாதன் ஒரு மடல் எழுதுகிறார்.

''5.6.89 தினமணி நாளேட்டில் தென்னார்க்காடு செய்தியில் 'நர்சரி பள்ளிகளில் ஆங்கிலம் - தமிழ்க்குடிமகன் கண்டனம்' என்ற தலைப்பையும் கீழுள்ள உரையையும் கண்டு மகிழ்ந்து கண்ணில் ஒற்றி வணங்கி வாழ்த்தினோம்.

தமிழ்நாட்டில் பதினைந்தாயிரம் நர்சரி பள்ளியில் (திருவள்ளுவர் மழலையர்ப் பள்ளி நீங்கலாக) முழுவதும் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கப் படுகிறது. தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றால் எனது வானளாவிய அதிகாரத்தால் அவற்றை கூண்டோடு ஒழித்துவிடுவேன்.

தமிழ் நாட்டில் விளம்பரப்பலகையில் தமிழை ஐந்து மடங்காகவும் மற்ற மொழியை இரண்டு மடங்காகவும் எழுத வேண்டும். அப்படி எழுதாவிட்டால் தண்டனை உண்டு.

இங்கு பக்திமான்கள் உள்ளனர். யாராவது இங்குள்ள நடராசர் கோவிலுக்குச் சென்றால் தமிழில்தான் அர்ச்சனை செய்யவேண்டும் என்று கேட்டுள்ளீர்களா?

எந்த ஒரு அரசு ஆணையும் தமிழில் இருந்தால் தான் நான் கையொப்பம் இடுவேன். இல்லை என்றால் திருப்பி அனுப்பிவிடுவேன் என்பதை தற்போது தெரிவித்துக் கொள்கிறேன்.''

மேற்கண்ட பொன் கருத்துக்களை பொன்விழாக்கண்ட தமிழக சட்டமன்றத் தலைவர்களில் யாரும் சொன்னதில்லை. இதை தாங்கள் நடைமுறைப்படுத்தி விடுவீரானால் வரலாறு படைத்த தனி நாயகன் ஆவீர்கள் என்று உளமார வணங்கி வாழ்த்துகிறோம்.

தாங்கள் கூறிய கருத்துகளில் அடியேனுக்கு பற்றுண்டு. முடியுமான வரை வாழ்க்கையில் வாழ்ந்தும் வருகிறோம். எம்மைப் போன்றவரிடத்தில் இந்தப் பற்றிருந்தால் அவ்வளவாக பயன்தரமுடியாது. அதிகாரத்தில் அதுவும் தலைமைப் பீடத்தில் இருக்கும் தங்களைப் போன்றவரிடத்தில் இருக்குமானால் அதற்கு தகுதியுமுண்டு. எனவே தகுதியுள்ள தலைமையிடத்தில் இருக்கும் தாங்கள் இதனை நடைமுறைப்படுத்தினால் வருங்காலம் உங்களை ''இறை என்று'' எண்ணி வாழ்த்துவர் என்று எண்ணி யாமும் வணங்கி வாழ்த்துகிறோம்'' என்கிறார் அவர்.

நான் சொன்ன துறைகளில் ஏதாவது செய்தோமா? அல்லது காற்றோடு தூற்றிவிடும் வெற்றுப் பேச்சாகவே போய்விட்டதா?

13.1.99 மற்றும் **19.11.99** இல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் மழலையர் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகளை ஒழுங்கு செய்வதற்காக இயற்றப்பட்டவை. இன்று தமிழ் நாட்டில் மிகப் பெரும்பாலான விளம்பரப் பலகைகளில் மேலே தமிழ் இடம் பெற்றிருக்கிறது என்றால் நாங்கள் எடுத்துக்கொண்ட 'அதட்டல் உருட்டல்' முயற்சிதான் காரணம் என்பதை அனைவரும் அறிவர்.

இதோ லேனா தமிழ்வாணன் எழுதுகிறார் பாருங்கள். (குமுதம் **2.8.2004)**

''கனடாவில் உள்ள டொரான்டோ நகருக்குச் சென்றால், 'ஏதேது தமிழகத்திற்கே வந்துவிட்டோமோ!' என்றுகூடத் தோன்றும். காரணம், தமிழர்

நடத்தும் கடைகளில் தமிழ்ப் பெயர்கள் பெயர்ப்பலகைகளில் பளிச்சிடுகின்றன. மகிழ்ச்சிக்குரிய செய்தி அல்லவா?

தமிழகத்திலேயே பெயர்ப்பலகைகளில் தமிழ் இல்லை. ஏமாற்றம் அல்லவா?

தமிழ்க்குடிமகன் இடையில் புண்ணியம் கட்டிக்கொண்டார். 'பெயர்ப்பலகைகளில் தமிழ் இருக்கவேண்டும். இல்லாவிட்டால், உங்களை எளிதில் விடேன்' என்றார். நல்ல பலன்.

பல இடங்களில் தமிழ்க் கொலைகள் நடந்தபோதும் தமிழை எங்கும் நன்கு காணமுடிந்தது.''

தமிழில் அர்ச்சனை - அதற்காக நான் எடுத்துக்கொண்ட இமாலய முயற்சிகளை நாடு அறியும்.

நிதி அமைச்சகமே தமிழில் அரசாணை வெளியிடும் அளவுக்கு ஆட்சிமொழிச் செயலாக்கத்தில் பணி செய்திருக்கிறோம். எனவே 1989 இல் சொன்ன எதையும் நான் மறக்கவில்லை. 1996-2001 காலகட்டத்தில் என் பணிகளே இவற்றைச் சுற்றித்தான் அமைந்தன.

'தமிழ்நாடு மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் சங்கத்தின்' பொதுச் செயலாளர் திரு க. இராமச்சந்திரன் 12.6.89 இல் எனக்கு மடல் எழுதுகிறார். படியுங்கள்.

''தாங்கள் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆசிரியர் மன்றத்தின் 21வது மாநாட்டையும், கருத்தரங்கையும் துவக்கி வைத்துப் பேசியுள்ளீர்கள்.

தமிழ்நாடு நர்சரி & பிரைமரி பள்ளிகள் சங்கத்தின் பொதுச் செயலாளராகிய நான் விளக்கங்களை கூற கடமைப்பட்டுள்ளேன். தமிழ்நாட்டில் உள்ள எல்லா பள்ளிகளிலும் அண்ணா வழிப்படியும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய கருத்துக்கேற்பவும் இரு மொழிக் கொள்கையைத்தான் நர்சரி & பிரைமரி பள்ளிகளில் கடைப்பிடிக்கிறார்கள். தமிழும், ஆங்கிலமும் தான் எல்லா பள்ளிகளிலும் கட்டாய மொழியாக போதிக்கப்படுகின்றன. தாங்கள் கூறியுள்ளபடி ஆங்கிலத்தை மட்டும் போதித்து தமிழை நாங்கள் போதிக்காமல் இல்லை.

24ந் தேதி 1988ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னையில் நர்சரி பள்ளிகளுடைய ஏழாவது மாநில மாநாட்டை மாண்புமிகு முதல்வர், தலைவர்,

கலைஞர் அவர்கள் தான் துவக்கி வைத்து சிறந்த பள்ளிகளுக்கு பரிசுகள் வழங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்கள். திருமதி. சற்குணம் எம்.எல்.ஏ அவர்கள் தான் தலைமை தாங்கினார்கள். மாண்புமிகு ஆர்க்காடு வீராசாமி அவர்களும், திரு என்.வி.என். சோமு எம்.பி. அவர்களும் டாக்டர் கலாநிதி எம்.பி. அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாநாட்டில் தலைவர் கலைஞர் அவர்கள் கல்வியினுடைய தரத்தை பாதுகாத்து சிறந்த சேவை செய்வது நர்சரி பள்ளிகளே என்று மனம் திறந்து பாராட்டியுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் மொத்தம் 25,000 நர்சரி & பிரைமரி பள்ளிகள் இயங்குகின்றன. 14 இலட்சம் மாணவ மாணவிகள் பயில்கின்றனர். 1,25,000 பட்டதாரி ஆசிரியைகள் பணிபுரிகின்றார்கள் (1989இல்). இப்பள்ளி நடத்துபவர்கள் அத்தனை பேருமே சுயவேலை வாய்ப்பு (செல்ப் எம்பிளாய்மெண்ட்) என்ற வகையில் பட்டதாரி ஆசிரியைகளே இப்பள்ளிகளை நடத்துகிறார்கள். வேலை கிடைக்காத காரணத்தினால் அரசாங்கத்திற்கு ஏறக்குறைய 120 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு மிச்சப்படுகின்றது. இப்பள்ளியினுடைய நிர்வாகிகள் 70% தி.மு.கழகத்தைச் சார்ந்தவர்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய தொண்டர்கள் நானும் தி.மு.கழகத்தைச் சார்ந்தவன். கடந்த 30 ஆண்டு காலமாக நானும் தி.மு.கழகத்தைச் சார்ந்தவன். கடந்த 30 ஆண்டு காலமாக கழகத்தில் உறுப்பினராக உள்ளவன். வில்லிவாக்கம் தொகுதியிலும், மயிலாப்பூர் தொகுதியிலும் தி.மு.க. சார்பில் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட தலைவரிடம் வாய்ப்பு கேட்டவன். வாய்ப்பு கிடைக்கவில்லை. நான் நடத்தும் பள்ளிக்கூடங்களை பேரறிஞர் அண்ணா அவர்கள் திருக்கரத்தாலும், தலைவர் கலைஞர் அவர்கள் திருகரத்தாலும், பேராசிரியர் அவர்கள் திருக்கரத்தாலும் துவக்கி வைத்து சீரும் சிறப்புமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தாங்கள் குறை கூறும் பள்ளிகள் கிறிஸ்தவ மக்களால் (சிறுபான்மையினரால்) நடத்தப்படும் டான்பாஸ்கோ மெட்ரிகுலேஷன் பள்ளி, சர்ச் பார்க் பள்ளி, ரோசரி மெட்ரிகுலேஷன் பள்ளி போன்றவைதான். அவைகள் சட்டத்தால் கட்டுப்படுத்த முடியாத பள்ளிகள்.

மேலும் பெற்றோர்கள் அவர்களுடைய குழந்தைகளுக்கு எந்த விதமான கல்வி தரப்படவேண்டும் என்று முடிவெடுப்பது அவர்களுடைய சொந்த பொறுப்பு. ஆங்கிலம் பயிலுவிக்க வேண்டும் என்று விரும்பினால் அவர்களை கட்டுப்படுத்த அரசியல் வாதிகளாலோ, பள்ளி நிர்வாகிகளாலோ முடியாது என்பது எல்லோரும் அறிந்ததே. *ஏன் தமிழ் தான் படிக்க*

வேண்டும் என்று சொல்கின்ற பெரியோர்களுடைய குடும்பத்தை சார்ந்த குழந்தைகள் எல்லாம் ஆங்கிலப் பள்ளிகளில் படிப்பதைக் கடந்த ஆண்டு இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை பட்டியல் போட்டு காண்பித்துள்ளது. கல்வி மாநில அரசு பொறுப்பில் மட்டுமல்ல; மத்திய அரசு பொறுப்பிலும் உள்ளது.

ஆங்கிலத்தை அகற்றினால் இந்தி அந்த இடத்தில் வந்து அமர்ந்து கொண்டு தாறுமாறாக ஆட்சி செய்யும். தமிழன் இரண்டாம் குடிமகனாக ஆக்கப்படுவான் என்று வெகு அழகாக பேரறிஞர் அண்ணா அவர்களும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் பேராசிரியர் கல்வி அமைச்சர் அவர்களும், மறைந்த திரு. காமராசர் அவர்களும், திரு. ராஜாஜி அவர்களும் கூறியுள்ளார்கள்.

எங்களுடைய வேண்டுகோள் *தமிழ்நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்படாத நர்சரி பள்ளிகளை சட்டத்தின் மூலம் ஒழுங்குபடுத்தி அங்கீகாரம் வழங்க வேண்டும்.* இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் தமிழ்நாட்டில் உள்ளது போல் அங்கீகரிக்கப்படாத பள்ளிகளே கிடையாது. தங்களுடைய மேலான அதிகாரத்தையும் தலைவரிடம் உள்ள செல்வாக்கையும் பயன்படுத்தி தமிழ்நாட்டில் உள்ள நர்சரி பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்க ஆவன செய்ய வேண்டுமாய் வேண்டுகிறேன்.''

இந்த மடலின் சாரத்தை மீண்டும் அலசி ஆராயுங்கள். 70% தி.மு.கவைச் சேர்ந்தவர்கள் தாம் இதுபோன்ற பள்ளிகளை நடத்துகிறார்களாம். கலைஞர், அன்பழகன் போன்றவர்களே வாழ்த்தியிருக்கிறார்களாம். சற்குண பாண்டியன் வாழ்த்தியதோடு மட்டுமின்றி இந்தச் சங்கத்தின் புரவலராகவே பல ஆண்டுகளாக இருக்கிறார். 1989 இல் மட்டுமல்ல; 1999 ஆம் ஆண்டிலும் இவர் தான் புரவலர்.

கிறித்துவச் சிறுபான்மையினரால் நடத்தப்படும் பள்ளிகளில் தான் 'தமிழ்' புறக்கணிக்கப்படுகிறதாம்.

''ஏன் தமிழ்தான் படிக்கவேண்டும் . . . . ''

என்கிறார். இது உண்மை. அதாவது என் பிள்ளைகளைத் தவிர; என் பிள்ளைகள் எல்லாரும் தமிழ் வழியில் படித்தவர்கள்.

''பெற்றோர்கள் அவர்களுடைய . . . . '' என்கிறார்

இதற்கான விளக்கம் வ.அய்.சு. உச்ச நீதி மன்றத்தில் அளித்த 'வழக்கு எதிருரை'யில் உள்ளது. இவர்களும் சரி, நீதிபதிகளும் சரி ஐ.நா. தந்த கருத்தைப் பார்த்தார்களே தவிர, அதன் கல்வி அமைப்பான யுனெஸ்கோ வின் கருத்துகளைக் கவனிக்கவே இல்லை.

முக்கியமான கருத்து : ஒரு சங்கமே தெரிவிக்கும் கணக்கு.

தமிழ்நாட்டில் மழலையர் பள்ளிகள்	25000
மாணவ மாணவியர்	14 இலட்சம்
பட்டதாரி ஆசிரியைகள்	1,25,000 பேர்

அரசுக்கு இவர்களால் மிச்சம் 120 கோடியாம்!

அவரது வேண்டுகோள் இது :

''தமிழ்நாட்டில்

இவர் கேட்பது 12.6.1989 இல். 30.6.1998 இல் (அதாவது இவர்களது குரலுக்கும் வேண்டுதலுக்கும் பின் 9 ஆண்டுகள் கழித்து) உள்ள நிலைமை என்ன?

இயக்குநர் தந்த அறிக்கையின் படி 1.3.1998 வரை ஒப்புதல் வழங்கப்பட்ட மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் : 1718 மட்டுமே.

ஆனால் மார்ச்சு, ஏப்ரல், மே, சூன் ஆகிய நான்கு மாதங்களுக்குள் ஒப்புதல் பெற்றவை : 2100

அதாவது நான்கே மாதங்களில் 2100 - 1718 = 382 பள்ளிகள். கவனியுங்கள். கல்வித்துறை நான்கு மாதங்களில் 382 பள்ளிகட்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதுதொடர்பான 'தமிழ்வழிக் கல்வி' நடவடிக்கைகள் வேகப்படுத்தப்பட்டபின் 1.5.2002 இல் 2200 பள்ளிகள் தான் ஏற்புப் பெற்றவை. அதாவது 30.6.98 இல் 2100.

அதாவது 46 மாதங்களில் 100 பள்ளிகள் மட்டுமே ஏற்புப் பெற்றுள்ளன.

அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மழலையர் பள்ளிகள் 2100 மட்டுமே.

அப்படியானால் இராமச்சந்திரன் கருத்துப்படி 1998இல் இன்னும் 22900 மழலையர் பள்ளிகள் ஏற்புப் பெறவில்லை. அதாவது அரசினால் ஒப்புதல் வழங்கப்பட வில்லை. ஆனால் 9 ஆண்டுகளாக அரசினர் ஏற்புப் பெறாமலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இதற்குக் காரணம் : 37அ எனும் விதியிருந்தும் கல்வித் துறையில் தொடர்ந்து இந்த விதிக்குத் தளர்வு தந்தே வந்திருக்கிறார்கள். வளர்ந்து வரும் தீமையை மனத்திற்கொண்டோ, இப்பள்ளிகளில் தமிழ் தளர்கிறது என்பதையோ தமிழில் பேசினால் தண்டனை தரப்படுகிறது என்பதையோ குறித்துக் கல்வித்துறை கவலைப்படவே இல்லை.

1989, 1996 இல் இருந்த அன்பழகன் இடையில் இருந்த பொன்னுசாமி, இராம.வீரப்பன் ஆகியோர் இதுகுறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை.

அதனால் 1998இல் கூட 22900க்கும் மேற்பட்ட பள்ளிகள் அங்கீகாரம் பெறாமலேயே இயங்கி வருகின்றன.

இந்த நிலையில் 1989-90, 90-91, 96-97, 97-98 ஆகிய ஆண்டுகளில் கல்வி அமைச்சர் அன்பழகன் விதித் தளர்வு செய்து கொண்டே வரும்போது, தமிழ் அமைச்சராகிய தமிழ்க்குடிமகன் இதில் இறங்கி முடிவுகளை எடுக்க முயற்சிகளை மேற்கொண்டதில் - முடிவுகளை எடுக்குமாறு அன்பழகனையும் கலைஞரையும் வேண்டிக் கொண்டதில் என்ன தவறு இருக்கமுடியும்?

இவற்றை மனத்திற்கொண்டு மீண்டும் 1989 ஆம் ஆண்டிலிருந்து அலசுவோமா?

இச்சங்கத்தின் தஞ்சைக் கிளையைச் சார்ந்த, இணைச் செயலாளர் எபனேசர் இன்பலாதன் (மதுக்கூர்) என்ன எழுதுகிறார் என்று பாருங்கள் (12.9.1989)

அரசு ஆணை செய்யுமா? இனியும் தவறினால் தமிழ் அழியும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து செய்து வரும் தவறே! ஆங்கிலப் பள்ளிகள் தோன்றி, வளரக்காரணம்.

''திரை கடலோடியும் திரவியம் தேடு''

என்பதையும் கருத்தில் கொண்டுதாம் பொதுமக்கள் அனைவருமே தங்கள் பிள்ளைகளை ஆங்கிலம் எழுத, படிக்க, பேச தெரிந்து கொள்ளவே கடமை,

கண்ணியம், கட்டுப்பாடு காத்து கருத்துடன் சேவை செய்துவரும் நர்சரி & பிரைமரிப் பள்ளிகளில் எல்.கே.ஜி., வகுப்பில் சேர்ந்து தமிழ்நாடு அரசு கல்வித் துறைச் சட்டம் ஜீ.ஒ.எம்.எஸ்.404/21.3.90ன்படி 7-ம் வகுப்புக்கள் வரை படிக்க வைக்கிறார்கள். பள்ளிகளையும் நடத்துகிறார்கள். பதிலாக ஆங்கிலேயர்களாக்கிட அல்ல; தாய்மொழி தமிழ்மொழியை அழிக்கவும் அல்ல.

இன்றைக்கு 100க்கு 75 சதவிகிதம் எல்.கே.ஜி., யு.கே.ஜி., 1ம் வகுப்புக்கள் வரை படித்துவிட்டு 2ம் வகுப்பு முதல் 8ம் வகுப்புக்குள் தமிழ்வழிக் கல்வி பெற அரசு ஆரம்பப்பள்ளிகளில் சேர்க்கை தேடிச் செல்கிறார்கள். ஆனால் அப்பள்ளிகளில், தலைமை ஆசிரியர்கள் சேர்க்க மறுக்கிறார்கள். மேற்படி சட்டத்தையும் புறக்கணித்து, இதனால்தான் தொடர்ந்து ஆங்கிலப் பள்ளிகளில் படிக்கிறார்கள்.

எனவேதான் நர்சரி & பிரைமரிப் பள்ளிகளெல்லாம் மெட்ரிக்குலேசன், மேல்நிலைப் பள்ளிகளாக வளர்கிறது. இதற்கு அரசு இலட்சக் கணக்கில் பணம் வாங்கி கொண்டு அங்கீகாரம் அளிக்கிறது. இதனால்தான் மேற்படி பள்ளிகளில் நன்கொடை வாங்குகிறார்கள். **நன்கொடை வாங்க வைப்பது அரசுதானே!** இவ்விதம் அரசு ஆங்கிலப் பள்ளிகளையே அதிக அளவில் வளர்க்கிறதே தவிர தமிழ்ப் பள்ளிகளையோ, தமிழையோ வளர்க்கவில்லை.

எனவேதான் நர்சரி & பிரைமரிப் பள்ளிகள் சங்கம் ஆளுநர், முதலமைச்சர், கல்வி அமைச்சர், கல்வித்துறை உயர் அதிகாரிகளையும் அழைத்து விழாக்கள் நடத்தி மேற்படி பள்ளிகளிலிருந்து டி.சி. பெற்றுவரும் குழந்தைகளை 2ம் வகுப்பு முதல் 8ம் வகுப்புக்கள் வரை தடையின்றி சேர்த்துக் கொள்ளும்படி ஆணை பிறப்பித்து செயல்படுத்தி **தமிழ் வளர்க்கும்படி** அடிக்கடி தூண்டி கட்டாயப்படுத்துகிறது.

பள்ளி நடத்தும் நாங்கள் தமிழர்கள் தான். எங்களுக்கும் தாய்மொழி பாசம், உணர்வு உண்டு. எனவேதான் 5ம் வகுப்பு அல்லது 7ம் வகுப்புக்கள் வரை ஆங்கிலம் எழுத, படிக்க, பேச கற்று கொடுத்து தமிழ் வழிக் கல்வியை விரும்பித்தான் அரசு ஆரம்பபள்ளிக்களுக்கு தமிழ்வழி கல்வி கற்க மாணவர்களை அனுப்பி வைக்கிறோம். ஆனால் சேர்க்க மறுத்து ஆங்கிலம் வளர்த்து தமிழ் அழிப்பது யார்? நாங்களா? அரசா? சிந்திக்க வேண்டும்.

''எரிகிறதைப் பிடுங்கினால், கொதிக்கிறது நின்றுவிடும்'' என்பதுபோல் நர்சரி & பிரைமரிப் பள்ளிகளில் படித்து தமிழ் வழி படித்த 2ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை சேர்க்கை தேடி வரும் குழந்தைகளை டி.சி.,

பெற்று தடையின்றி அரசு ஆரம்ப பள்ளிகளில் சேர்த்துக் கொண்டால் தமிழ் அழிய வழியில்லை. ஆங்கிலப் பள்ளிகள் வளரவும் வாய்ப்பில்லை. இங்ஙனம் அரசு செயல்படாததால் தான் நர்சரி & பிரைமரிப் பள்ளி மாணவர்கள் தொடர்ந்து ஆங்கிலப் பள்ளிகளில் படிக்கிறார்கள், அப் பள்ளிகளும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளாக வளர்கிறது, மக்களும் வளர்க்கிறார்கள்.

எங்கள் பள்ளிகளிலிருந்து தாய்மொழி தமிழ் வழிக் கல்வி பெற அரசு பள்ளிகளில் சேர்க்கை தேடி வரும் மாணவர்களை டி.சியை பெற்று தடையின்றி சேர்த்துக் கொள்ளும்படி வருகிற 1991-92ம் கல்வியாண்டிலிருந்தாவது ஆணை பிறப்பித்து தமிழ் மழலைகள் தமிழ் கற்று தமிழர்களாக வாழ, தமிழ் காக்க, வளர்க்க வேண்டுகிறேன்.

இதை இப்போதாவது அரசும், உரிய உயர் அதிகாரிகளும் புரிந்து கொண்டு மேற்படி சட்டப்படி 7ம் வகுப்புக்கு மேல் தமிழ் நாட்டில் ஆங்கிலப் பள்ளிகள் நடக்கக் கூடாது என்றும், கிராமமோ, நகரமோ சுமார் 2 கிலோமீட்டர் சுற்றளவுக்குள் ஒரு பள்ளி மட்டுமே நடத்த வேண்டும், புதிதாக பள்ளிகள் ஆரம்பிக்கக்கூடாது என்றும் கட்டாய சட்டம் கொண்டு வந்து தமிழ் காக்க வளர்க்க வேண்டுகிறேன்.''

இவரது அறிக்கை வேடிக்கையாகவும் விவரங்கெட்ட உளறலாகவும் இருப்பதை உங்களால் கண்டறிய முடியும்.

மெட்ரிகுலேசன் பள்ளிகள் வளர அரசு இடம் கொடுக்கிறதாம். அதனால் 'தமிழ்ப் பள்ளிகளையோ தமிழையோ வளர்க்கவில்லை' இதனைத் தமிழ்க்குடிமகன் சொன்னால் அதற்கான காரணத்தையும் சேர்த்துச் சொல்ல முடியும். ஆனால் 7ஆம் வகுப்புவரை மாணவர்களை ஆங்கில வழியில் படிக்கவைத்து விட்டு அரசு நிர்ணயிக்கும் எந்த அடிப்படை வசதியையும் செய்யாமலும், அரசின் ஏற்பைப் பெறாமலும் 'நர்சரி' தோட்டம் வளர்க்கும் எபனேசர் இன்பலாதன் சொல்வதுதான் அதிசயமாக இருக்கிறது.

தனிப்படிப்பு (Private Study) என்ற சலுகையில் ஒளிந்து கொண்டு பள்ளிக் கூடங்களை நடத்துபவர்கள் ''தமிழ் மழலைகள். . . என்கிறார்கள்.

இவரது வேண்டுகோளைக் கவனியுங்கள்.

''7ம் வகுப்புக்கு மேல் . . . வேண்டுகிறேன்''

அதாவது இவர்கள் நினைத்த இடத்திலெல்லாம் மழலையர் பள்ளிகளைத் தொடங்கி 7ஆம் வகுப்பு வரை நடத்தித் 'தமிழ் வளர்க்கிறார்களாம்'. ஆனால்

அரசு அதற்கு மேல் ஆங்கிலப் பள்ளிகளைத் தொடங்கிட அனுமதிக்கக் கூடாதாம்.

''அவன் கிடக்கிறான் குடிகாரன்...'' என்பது போல் இல்லையா?

'2 கிலோ மீட்டருக்கு ஒரு பள்ளி மட்டுமே நடத்தவேண்டும்' என்கிறார் இவர்.

இவர்கள் கூறும் ஒரு பள்ளியைப் பாருங்கள் : சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நானேநேரில் சென்று ஒரு பள்ளியை ஆராய்ந்தேன். (1997 இல்). இப்பள்ளி 1985 முதல் நடைபெறுகிறது. 12 ஆண்டுகளாகியும் அரசின் ஏற்புப் பெறவில்லை. பள்ளிப் பெயர் : ''அன்னை வேளாங்கண்ணி நர்சரிப் பள்ளி''. இதனை நடத்துபவர் திருநெல்வேலியைச் சேர்ந்த ஜோசப் என்பவர். திருநெல்வேலியைச் சேர்ந்த ஒருவர் திருப்பத்தூரில் பள்ளி நடத்த வேண்டிய தேவை என்ன? வள்ளல் அழகப்பர் வரிசையில் வரவேண்டுமென்ற துடிப்பா? அல்லது வந்த வரை வரவு எனும் வணிகத் தவிப்பா?

பள்ளியில் வேலை பார்ப்பவர் இருவர். மீனாம்பாள், விசயா. இருவருமே +2 படித்தவர்கள். இவர்கள் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அல்லர். இதில் எல்.கே.ஜி.யில் 35 பேர்; யு.கே.ஜி.யில் 16 பேர். இவர்கள் அனைவரும் 15x15 உள்ள ஓர் அறையில். கழிப்பிட வசதி - எல்லாரையும் போல் தெருவில்தான். விளையாட்டுத்திடல் - மூச். வேறு வசதிகள் - பேசக்கூடாது. இந்தப் பள்ளியின் பக்கத்தில் உள்ள 'அச்சுக்கட்டு' எனும் பகுதியில் 1 முதல் 5 வகுப்பு வரை கொண்ட ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி உள்ளது.

அன்னை வேளாங்கண்ணி பள்ளிக்கும் அச்சுக்கட்டுப் பள்ளிக்கும் இடையில் உள்ள தொலைவு 150 மீட்டர்.

இரண்டு பள்ளிகளுக்கு இடையில் 2 கிலோ மீட்டர் தொலைவு வேண்டும் என்று கூறும் எபனேசர் இன்பலாதன், 150 மீட்டர் தொலைவில் பள்ளி நடத்தும் ஜோசப்பை என்ன செய்ய வேண்டுமென்கிறார்?

மழலையர் பள்ளிகள் நடத்துவதில் இப்படி எத்தனையோ தில்லுமுல்லுகள். உங்களுக்கு விளங்குவதற்காகவே தந்த எடுத்துக்காட்டு இது. * * *

நான் பேரவைத் தலைவராக இருந்தபோது அண்ணாமலை நகரில் பேசியது மட்டுமின்றி, திருச்சி சென்றிருந்தபோது வான்திடலுக்கு எதிரே உள்ள ஒரு மழலையர் பள்ளியைப் பார்வையிட்டேன். 'Love Dale' என்பது பள்ளியின் பெயர். பள்ளி நிர்வாகிக்கு என்னைத் தெரியவில்லை. காரணம் அவர் கேரளத்தவர். தமிழ் நாட்டில் கல்வி வியாபாரம் செழித்து வளர்கிறது,

செல்வத்தை வாரிக் குவிக்கலாம் என்பதால் இந்த இடத்தில் ஒரு கட்டிடத்தைப் பிடித்துப் பள்ளியைத் தொடங்கிவிட்டார். சட்டப் பேரவைத் தலைவரைக் கூட அடையாளம் தெரியாத நிலையில், வணிகர்களின் படையெடுப்பு நடக்கிறது. நான் பார்த்து வந்த பிறகு அந்தப் பகுதிப் பொதுமக்களிடமிருந்து ஒருமடல் வந்தது. அதனை அப்படியே தந்துள்ளேன். (22.6.1989)

இந்த மடலிலேயே பள்ளி நிர்வாகம் என்ன செய்கிறது என்பதும் ஆங்கில வழிப் பள்ளி எனும் பெயரில் தமிழும், அப்பகுதி ஏழைத் தமிழ் மக்களும் எப்படித் திக்கு முக்காடுகின்றனர் என்பதும் பளிச்செென விளங்கும்.

''திருச்சி விமான நிலையம் பகுதியில் உள்ள மக்களாகிய நாங்கள் விடும் கோரிக்கை யாதெனில் இப்பகுதியில் உள்ள காவிரிநகர் என்னுமிடத்தில் செயல்பட்டு கொண்டிருக்கும் 'Love Dale' என்ற ஆங்கிலப்பள்ளியில் முழுமையாக ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அங்கு தமிழுக்கு முன்னுரிமை கொடுக்காமல் அது புறக்கணிக்கப்பட்டு ஆங்கிலமே முக்கியமான மொழியாக நடத்தப்படுகிறது. வருவோர் போவோரிடம், ஆங்கிலம் மாணவர்களிடையே ஆங்கிலம் பேசப்படுகிறது. இதனால் அங்கு படிக்கும் தமிழ்க் குழந்தைகள் திக்குமுக்காடி பள்ளியின் சட்ட திட்டங்களுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டிய நிர்ப்பந்தம் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்பட்டுள்ளது. எனவே தமிழை ஒழித்து கட்ட திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கும் 'Love Dale' என்ற ஆங்கிலப் பள்ளியின் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் விமான நிலைய பகுதி மக்களாகிய நாங்கள் தங்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறோம்.''

இந்த நேரத்தில் எபனேசர் இன்பலாதனின் கூற்றினை எண்ணிப் பாருங்கள்.

'5ஆம் வகுப்பு அல்லது 7ஆம் வகுப்பு வரை ஆங்கிலத்தில் கற்றுக் கொடுத்து அதன்பின் தமிழ் படிக்க அரசுப் பள்ளிகளுக்கு அனுப்பிவைத்துத் தமிழ் வளர்க்கிறோம்' என்கிறார். அவர்கள் 'Love Dale' பள்ளி எப்படித் தமிழ் வளர்க்கிறது என்பதனை எண்ணிப் பாருங்கள். இந்தக் கல்வி வியாபார உலகில்தான் எத்தனை புரட்டுகள்!

* * *

1989 சூன் மாதத்தில் 'ஆங்கிலவழி மோகம்' என்பதற்கான ஒரு விளக்கமான கட்டுரையைத் 'தினமணி' எழுதியிருந்தது. நடுநிலையோடு எழுதப்பட்ட இதனைப் படித்து அன்றைய நிலைமையை உணர்ந்து கொள்ள முடியும். (தினமணி 24.6.1989)

ஆங்கில வழிக் கல்விக்குப் போட்டி

''எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பது கடந்த பல்லாண்டுகளாக தமிழக அரசின் சொல்லாக இருந்தபோதிலும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஆங்கில வழிப் பயிற்சி வகுப்பில் சேர்ப்பதிலேயே அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

இந்த ஆர்வத்தில் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள நடுத்தர வருவாய் குடும்பத்தினர், படும் பாடும் அதற்காக அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளும் வருத்தம் தருகின்றன.

அதேபோன்று எஸ்.எஸ்.எல்.சி. முடித்து 11-ம் வகுப்பில் சேரவிரும்பும் மாணவ, மாணவியர்களில் பெரும்பாலானவர்கள், +1 (11ம் வகுப்பு) உள்ள முதல் பாடப் பிரிவுக்கு (கம்யூட்டர் அறிவியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடங்களைக் கொண்ட பிரிவு) கடும் போட்டி உள்ளதைக் காணமுடிகிறது.

இந்தப் பாடப் பிரிவில் தேர்வு பெற்றால்தான் மருத்துவ, தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேரமுடியும்.

பள்ளிகளில் 6-ம் வகுப்பு, 9-ம் வகுப்பு, 11-ம் வகுப்பு ஆகிய வகுப்புகளில் சேர அதிக போட்டி உள்ளது. அதிலும் குறிப்பாக ஆங்கில வழி பயிற்சிக்குத்தான் அதிக போட்டி உள்ளது.

அரசு உதவி பெறும் பள்ளிகள் பெரும்பாலானவற்றில் எல்லா வகுப்புகளிலும் ஆங்கிலவழி பயிற்சி பிரிவு (''செக்ஷன்'') ஒன்றுதான் உள்ளது. சிலவற்றில் இரண்டு உள்ளது. ஒரு சிலவற்றில் 11-ம் வகுப்பில் ஐந்துக்கும் மேல் ஏழு வரை உள்ளது.

''நர்சரி'' பள்ளிகளின் அபரிமிதமான தோற்றமே ஆங்கில பயிற்சி வழி மோகத்திற்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

ஒன்று அடியோடு ''நர்சரி'' பள்ளிகள் ஒழிக்கப்படவேண்டும், அல்லது எல்லா பள்ளிகளிலும் ஆங்கில பயிற்று வழி பிரிவுகளை அதிகம் துவக்க அனுமதிக்கவேண்டும். இவைகளை செய்தாலேயன்றி குறைந்த வருமானம் கொண்ட, நடுத்தர வருமானப் பிரிவினருக்குத் தொடர்ந்து அல்லல்தான் என்பது பொதுவாக பல பள்ளி ஆசிரியர், தலைமை ஆசிரியர்களின் கருத்தாக உள்ளது.

நன்கொடை

ஆங்கில வழி பயிற்சி வகுப்பில் சேர்க்க, +1ல் முதல் பாடப் பிரிவில் சேர்க்க பெற்றோர்களிடம் நன்கொடையாகவோ, அல்லது வேறு பெயரிலோ நிதி வசூலிக்கப்படுகிறது. பல பள்ளிகள் இத்தகைய நிதி வசூலை மறுத்தபோதிலும் வசூல் என்பது இருக்கத்தான் செய்கிறது. பெற்றோர்கள் தரப்பிலும் துணிந்து தாங்கள் இவ்வளவு பணம் கொடுத்தோம் என்று கூற முன்வருவதில்லை.

மொத்தம் வாங்கிய மதிப்பெண்ணில் குறைந்தபட்சம் 60 சதம், அறிவியல், கணக்கு ஆங்கிலம் ஆகிய பாடங்களில் குறைந்தபட்சம் 60 சதம் மதிப்பெண் பெற்றிருந்தால் கம்ப்யூட்டர் அறிவியல் உள்ளிட்ட முதல் பிரிவில் சேரத் தகுதி படைத்தவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

மாநகராட்சி, மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கில பயிற்சி வழி வகுப்புகளுக்குத்தான் போட்டி அதிகம் உள்ளது. இங்கும் ஆறாம் வகுப்பிலிருந்து ஆங்கில பயிற்சி வகுப்புகள் உள்ளன.

பல ''நர்சரி'' பள்ளிகளில் பணத்தை மட்டும் வசூலித்துவிட்டு அதற்கேற்ப தக்க முறையிலான பயிற்சியோ, போதனையோ அளிப்பதில்லை. **இதன் விளைவு நர்சரி பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரை படித்த குழந்தைகளுக்கு ஆங்கிலமும் சரியாகத் தெரியவில்லை; தமிழும் அறவே தெரியவில்லை.**

மற்றும் போதிய மதிப்பெண் இல்லாததால் எந்தப் பள்ளியிலுமே இடம் கிடைக்காமல் அனுப்பப்பட்டவர்கள் மாநகராட்சி பள்ளிகளுக்கு வருகிறார்கள். இடமில்லை என்று எங்களால் சொல்ல இயலவில்லை. பெரும்பாலும் இப்படிப்பட்டவர்கள் மட்டும் வருகிறார்கள். அவர்களை வைத்துக்கொண்டு இயன்றவரை எங்களது ஆசிரியர்கள் கஷ்டப்பட்டு போதிக்கிறார்கள். எவ்வளவு போதித்தாலும் அடிப்படை என்பது தேவை. இந்த நிலையில் மாநகராட்சி பள்ளிகளில் அதிகமான ''ரிசல்ட்'' எவ்விதம் எதிர்பார்க்கமுடியும்?

60 சதம், 70 சதம் என மதிப்பெண் பெற்றவர்களை மட்டுமே சேர்த்துக்கொண்டு ''ரிசல்ட்'' காண்பிப்பது கடினம் அல்ல. மற்றவர்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்குப் புகலிடம் அளித்து அவர்களையும் எப்படியாவது ஒருவிதமாக உருவாக்கமுடியும் என்ற முயற்சியில் உள்ள மாநகராட்சி பள்ளிகள் பாராட்டு பெறுவதில்லை என்றும் அந்தத் தலைமை ஆசிரியர் குறிப்பிட்டார்.

ஷிப்ட் முறை

ஆங்கில வழி பயிற்சி மொழி வகுப்புகளில் 6-ம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை எல்லாப் பள்ளிகளிலும் சராசரி 50 மாணவரோ, மாணவியோ உள்ளனர். 10, 11, 12 வகுப்புகளில் 70க்கும் மேல் மாணவர்கள் உள்ளனர்.

ஒரு சில பள்ளிகளில் அனைத்து வகுப்புகளுக்குமான ஆங்கில வழிப் பயிற்சி வகுப்புகளுக்கான இடஒதுக்கீடு முடிந்துவிட்டது. மேற்கொண்டு இடமில்லை, என்று கரும் பலகையில் அறிவிப்பு உள்ளது.

கான்வென்ட் அதுபோன்ற ஆங்கிலப் பயிற்சி வழி வகுப்புகளை மட்டுமே கொண்ட பள்ளிகளில் மாணவ-மாணவிகளை ('கிண்டர்கார்டன்' வகுப்பு முதல்) சேர்ப்பது என்பது (அதிலும் பிரபல்யம் பெற்றுவிட்ட இத்தகைய பள்ளிகளில்) பெரும் சாதனையாக உள்ளது. அந்தச் சாதனையையும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரூபாயை பல பெயர்களில் வழங்கிய பின்தான் சாதிக்கமுடியும்.

பெற்றோருக்குத் தேர்வு

இத்தகைய சில பள்ளிகளில் பெற்றோர்களுக்கு வாய்மொழித் தேர்வு நடத்தப்படுகிறது. அதில் பெற்றோர்கள் தேறினால்தான் குழந்தைக்கு இடம் கிடைக்கும்.

அதாவது, பள்ளியில் கற்றுக்கொடுக்கும் பாடத்தை வீட்டில் குழந்தைகளுக்கு பெற்றோர்கள் சரியான முறையில் கற்றுத்தர அனுபவம், தகுதி கொண்டவர்களாக இருக்க வேண்டுமாம்.

அநேகமாக பல பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்சி வழி வகுப்புகளில் சேர்க்கவும், +1 வகுப்பில் முதல் பிரிவு பாடத்தில் சேர்க்கவும் பல பெரிய இடங்களின் சிபாரிசுகள் வந்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

கிராமப்புறங்கள், சிறு நகரங்களிலிருந்து மாற்றலாகி வருபவர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிகளில் சேர்க்க அவதிப்படுகின்றனர்.

இந்தக் குழந்தைகள், நுழைவுத் தேர்வில் பெரும்பாலும் தேறுவதில்லை. அதனை யொட்டி இடம் மறுக்கப்படுகிறது. கிராமப்புறங்களில் கல்வியில் தரம் இல்லாததே இதற்குக் காரணமாக சொல்லப்படுகிறது.

சென்னையில் புறநகரில் உள்ள ஒரு பள்ளியில் ஏழாம் வகுப்பிற்கு சம்பளம், நோட்டுப்புத்தகம், புத்தகங்கள் உள்பட, 1,058 ரூபாய்

வசூலிக்கப்படுவதாக கூறப்படுகிறது. இதில் நோட்டுப் புத்தகங்கள், புத்தகங்களுக்கு மட்டும் 325 ரூபாயாம்.

பல பள்ளிகளில் நோட்டுப் புத்தகம், சீருடை போன்றவைகளை பள்ளி மூலம்தான் வாங்கவேண்டிய நிலை உள்ளது. அதற்கான விலை அவர்கள் வைத்ததுதான் என ஒருவர் கூறினார்.''

தி.மு.க.அரசு பொறுப்பேற்றதுமே நான்கு மாதங்களில் இந்தச் செய்தி வந்துவிட்டது. அப்போது கல்வி அமைச்சராக இருந்த அன்பழகன் என்ன நடவடிக்கை எடுத்திருப்பார்? எதுவுமே இல்லை. ஒரு 'ஞானி'யாக இருந்து எதைப் பற்றியும் கவலைப் படாமல் எதுவும் செய்யாமலேயே 'அனைத்துக் தீங்குகளை'யும் முள்மரம்போல் வளர விட்டு விட்டார். அதன் விளைவைத்தான் 1998ஆம் ஆண்டில் பார்த்தோம்!

தினமணி கட்டுரையில் உள்ள சிலவரிகளை மீண்டும் நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

'அரசு உதவி பெறும் பள்ளிகளில்.... அனுமதிக்க வேண்டும்.

பல நர்சரி பள்ளிகளில் . . . . தெரியவில்லை.

இதோ கொட்டை எழுத்தில் போடுகிறோம்; படியுங்கள்.

''ஆங்கிலமும் சரியாகத் தெரியவில்லை; தமிழும் அறவே தெரியவில்லை''

இதுதான் மழலையர் பள்ளிகளின் உண்மை நிலை. அதுமட்டுமல்ல; பணம் பிடுங்குவதில் இந்தப் பள்ளிகள் எவ்வளவு முனைப்புக் காட்டுகின்றன என்றும் பாருங்கள்!

''சென்னையில் புற நகரில் . . . . ரூபாயாம்''

மிகுந்த தரமுள்ள - இன்றும் தன் தரத்தை இழக்காத தேவகோட்டை தேபிரித்தோ உயர்நிலைப்பள்ளியில் நான் படித்தபோது (9ஆம் வகுப்பு) பள்ளிக்கட்டணம் உருபா.12.50. எனக்கு உருபா. 6.25 (பிற்பட்ட வகுப்பு - கட்டணச் சலுகை); மற்றபடி இயல்பான உணவுக் கட்டணம்தான் (1957 இல்)

ஆனால் மழலையர் பள்ளிகள் வளர்ந்து எவ்வளவு கொள்ளை அடிக்கின்றன என்பதனை ஒப்பிட்டுப் பார்த்து உணருங்கள்.

ஆங்கிலத்தில் சரியான மதிப்பெண்களைப் பெற முடியாததாலேயே பல மாணவர்கள் பின்னடைவு எய்தி, தொடர்ந்து படிக்காமலே நின்று

விடுகின்றனர். இது குறித்து கந்தர்வகோட்டை பட்டம் புதுநகர் சார்ந்த ஐ.பெ.மணிவேல் எழுதுகிறார் பாருங்கள்.

''ஆங்கிலம் தவிர மற்ற எல்லா பாடங்களிலும் வெற்றிபெற போதிய மதிப்பெண் பெற்றுவிட்டு, ஆங்கிலத்தில் மட்டும் 30, 31, 32, 33 பெற்ற மாணவர், (பல ஆயிரக்கணக்கான மாணவர்கள்) தங்களது எதிர்கால வாழ்வினை இழந்த நிலையில் உள்ளனர். இந்த மன நிலையில் அவர்கள் மீண்டும் தேர்வினை எழுதும் மன ஆற்றலை இழந்துவிட்டனர். இந்த மனச்சோர்வினால் பலர் மிகவும் பின்னுக்கு உள்ளனர்.

கிராமச் சூழ்நிலையில் உள்ள மாணவர்கள், கிராமச் சூழ்நிலையில் உள்ள பள்ளிகளிலும், உயர் நிலைப்பள்ளியிலும் படிப்பதால் ஆங்கிலத்தில் தற்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ள மதிப்பெண்ணைப் பெறமுடியவில்லை. இதனால் பல இளைஞர்கள் பத்தாம் வகுப்பிலிருந்து - மேலே செல்ல முடியவில்லை.''

உண்மை நிலையை எழுதிய அவர், ஆங்கிலத்துக்கு மட்டும் தேர்ச்சி மதிப்பெண்ணை 30 ஆகக் குறைக்கக் கோரியுள்ளார். (தற்போதுள்ள அரசில் 3 பாடங்களில் தோல்வி அடைந்த மாணவர்கள் எல்லோரும் மறுதேர்வு எழுத அனுமதிக்கப்பட்டு, அதில் வெற்றிபெற்ற பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் மேல்வகுப்புக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.) தோழர் இம்மடலைக் கல்வி அமைச்சருக்கும் தான் அனுப்பியுள்ளார். ஊஹும் . . . .

தூத்துக்குடியைச் சேர்ந்த திருவாட்டி, கலையரசி (பள்ளி நிர்வாகத்தால் அவர்க்கு இடர் ஏதும் நேர்ந்திடாத வகையில் பெயர் மாற்றப்பட்டுள்ளது), பி.எசி; பி.எட். தன் ஆதங்கத்தைப் புலப்படுத்தி மடல் எழுதுகிறார். (16.6.1989)

''தாங்கள் நர்சரிப் பள்ளிகளில் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று பேசியதாகச் செய்தித் தாள்களில் வந்த செய்தியினை வாசித்தேன். நர்சரிப் பள்ளிகளில் ஒழுங்கு செய்யப்படவேண்டிய அநேக காரியங்கள் இருக்கின்றன. இது ஒரு வியாபாரம் போலவே இன்று தெருவுக்குத் தெரு தொடங்கப்பட்டு வளர்ந்து வருவது நல்லதல்ல.

தங்களைப்போன்ற அறிவும் செயலாக்கமும் உள்ள பெரியோர்களின் கவனம் இத்துறையில் செலுத்தப்படுமானால் என் போன்ற நர்சரிப் பள்ளி ஆசிரியைகளின் நிலையும் உயரும், பயிலும் மாணவர்களின் கல்வி நிலையும் உயரும்.

மிகக் கேவலமான ஊதியம்

இன்று பள்ளி ஆசிரியர்களும் கல்லூரி ஆசிரியர்களும் ஆயிரக் கணக்கில் சம்பளம் வாங்குகிறார்கள். அதே சமயம் எம்.ஏ., பி.ஏ., பிஎட் என்று படித்திருந்தும் வேலை வாய்ப்பு இன்மையால் என் போன்ற நர்சரிப் பள்ளி ஆசிரியைகள் ரூ.300 முதல் ரூ.500 வரை மட்டுமே பெற்று வருகிறோம். சாதாரணக் கட்டடக் கூலி வேலை செய்யும் பெண்களுக்குக் கூட நாட்கூலியாக ரூ.20 வரை கிடைக்கிறது. ஆனால் எங்களுக்கு ரூ.10 தான். கலைஞரின் ஆட்சியில் தங்கள் முயற்சியால் எங்களது இந்த இழிநிலை மாறும் என்று நம்பலாமா? குறைந்த பட்ச ஊதியமாக ரூ.800/- என்று நிர்ணயிக்கப்படுமா? ஆயிரக் கணக்கான உள்ளங்களில் எதிரொலியாக நான் இந்தக் கடிதத்தின் மூலம் தங்களிடம் கெஞ்சிக் கேட்கிறேன்.

Seniority இகழப்படுகிறது!

தற்போது Teachers'Recruitment Boardல் இருந்து நேர்முகத் தேர்வுக்காக அழைப்புகள் வருகின்றன. ஆனால் பதிந்து 10,15 வருடம் ஆன Seniors 2,3 ஆண்டுகளே ஆன Juniors ஒரே list-ல் அனுப்பப்படுகிறார்கள். பதிந்து 10 ஆண்டுகளுக்கு மேலானவர்கள் நிறையபேர் இருக்கும் பட்சத்தில் Juniors ஐ அனுப்பவே கூடாது என்று நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இது ஊழலைத் தவிர்க்கவும் செய்யும்.

பள்ளிகளில் வேலை வாய்ப்பு ஏராளம்

அநேகமாக இன்று எல்லாப் பள்ளிகளிலும் 60 பேருக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலைதான் இருந்து வருகிறது. 30 பேருக்கு ஒருவர் என்று Post Sanction செய்தால் வேலை வாய்ப்பும் ஏற்படும். கல்வி நிலையும் உயரும்.

ஆறாம் வகுப்புகளில் ஆங்கிலப் போதனா முறை

ஆறாம் வகுப்பில் ஆங்கிலப் போதனா முறைக்கு ஒவ்வொரு வருடமும் ஏற்படும் நெரிசல், அப்பப்பா! நன்கொடை என்ற பெயரில் எத்தனை கொடுமைகள்.''

மழலையர் பள்ளிகள் செய்யும் மாபெரும் தவறுகளில் இது தலையாயது. நான் ஏற்கெனவே குறிப்பிட்ட திருப்பத்தூர்ப் பள்ளியில் இரண்டு ஆசிரியைகளும் +2 படித்தவர்கள். இங்கோ பி.எசி., பி.எட். படித்த ஒருவர்க்கு உருபா 300/-தான் மாதச் சம்பளம். வேலையில்லாமல் தவிக்கும் இப்படிப்பட்டவர்களை மலிவு விலைக்குப் பயன்படுத்துகிறார்கள். (Cheap

Commodity) படித்துவிட்டுப் பல ஆண்டுகள் எந்த வருவாயும் இல்லாதிருப்பவர்கட்கு ஏதோ ஒரு தொகை! அவ்வளவுதான்! மேற்கண்ட மடலில் உள்ள செய்திகள் இதனைத் தெளிவுபடுத்தும். வீட்டில் முடங்கிப் போகாமல், தேங்கிவிடாமல், ஏதோ ஒரு மரப்பாவை இயக்கம்!

செங்கற்பட்டைச் சேர்ந்த ஜோதி ஞானம் என்பவர் எழுதிய மடல் இது. (7.8.1989)

''தாங்கள் தங்கள் வானளாவிய அதிகாரத்தால் ஈசலைப் போல் தோன்றும் நர்சரி பள்ளிகளை ஒழிப்பேன் என்று பேசினதாக தினமணி பத்திரிகையில் படித்தேன். ஆனால் இன்று நாள்தோறும் தெருவுக்கு 4, 5 நர்சரி பள்ளிகள் தோன்றியவண்ணம் இருக்கின்றன.

தமிழ் இனத்தலைவர் என்றும் இனமானக் காவலர் என்றும் தன்மானக் கட்சி என்றும் பட்டம் சூட்டிக்கொள்பவர்களும் அறிந்திருப்பார்கள். எனவே உங்கள் ஆட்சிக் காலத்தில் இப்படிப்பட்ட தீமைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்காவிட்டால் எதிர்காலத் தமிழர்கள் என்ன நினைப்பார்கள் என எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். இதன்படி முதல்வர் கல்வி மந்திரிக்கும் அனுப்பப்பட்டுள்ளது.''

என் வினா இது? கல்வி அமைச்சர் கவனித்தாரா?

1989-91 ஆம் ஆண்டுகளிலேயே மழலையர் பள்ளிகளின் நிலைமை குறித்துப் பலரும் எழுதிய செய்திகளிலிருந்து பல விவரங்களை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. இப்போது நாம் 1991-96இல் நடைபெற்ற அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தைத் தாண்டி 1996 தி.மு.க. ஆட்சிக்காலத்துக்கு வருவோம். இடையில் உள்ள ஆண்டுகளுக்கான குறிப்புகள் என்னிடம் இல்லாததால், நான் பங்குபெற்ற பகுதியிலிருந்து, கையில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் எழுதுவதுதான் முறை.

ஏற்கெனவே எங்கள் அடிப்படை முயற்சிபற்றி எழுதியுள்ளேன்,

மேலே உள்ள குறிப்புகளை முதல்வர் முழுமையாகப் படித்துப் பார்த்துவிட்டு, ஒன்றிரண்டு மாறுதல்களைச் செய்து, பிறவற்றைச் 'செய்தியாளர்கள்' கூட்டத்தில் அவரே நேரடியாக வெளியிட்டார்.

இவற்றுக்கிடையில் 10.3.97 தினத்தந்தி, தினகரன் இதழ்களில் வந்த செய்திகளில் சிலவற்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் 6ஆவது மாநில மாநாட்டில் முதல்வர் பேசியது இது.

''மொத்தத்தில் அரசு பள்ளிகளின் எண்ணிக்கை 42,430, தனியார் பள்ளிகள் 7,614 என்ற வகையில் உள்ளன. தொடக்க பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் 67,827 தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் 47,234, ஆக மொத்தம் 1,15,566 ஆசிரியர்கள் தொடக்க பள்ளிக்கூடங்களில் பணியாற்றுகிறார்கள்.

இதேபோல நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி களில் மொத்தம் 3,07,971 ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள்.

எல்லா பள்ளிகளிலும் சேர்த்து 66,54,716 மாணவர்களும், 57,35,009 மாணவிகளும் உள்ளனர். மொத்தத்தில் 1,23,89,725 பேர் பயிலுகிறார்கள்.

1997 மார்ச்சில் உள்ள நிலவரப்படி

1 முதல் 12 வரை வகுப்பு வரை பயிலும் மாணவர்கள்	:	66,54,716
மாணவியர்	:	57,35,009
		1,23,89,725

எனவே பள்ளிக் கல்வி பயில்வோர் ஏறத்தாழ ஒன்றேகால் கோடிப்பேர். இவர்களில் எத்தனைபேர் கல்லூரிக் கல்விக்குச் செல்லப் போகிறார்கள்?

13.5.96 இல் நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கு ஒரு நெருக்கடியை உண்டாக்கினோம். கல்வி அமைச்சர், இயக்குநர் ஆகியோரும் கொஞ்சம் இறுக்கிப் பிடிக்கத்தான் செய்தனர். சங்க நிர்வாகிகள் திணறத் தொடங்கினர். கல்வி அமைச்சரைப் போய்ப் பார்த்தனர். என்னை வந்து பார்த்தனர். நான் உறுதியாகச் சொல்லிக் கொண்டிருந்தேன். அதனால்தான் 26.12.96 அன்று மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் சங்கப் பொதுச்செயலாளர் இராமச்சந்திரன் எனக்கு ஒரு மடல் எழுதினார்.

''தமிழ்நாடு நர்சரி மற்றும் தொடக்கப் பள்ளிகள் சார்பில் நிர்வாகிகள் கொடுக்கும் வேண்டுகோள்.

1991 முதல் நர்சரி & ப்ரைமரி பள்ளிகளுக்கு அப்ரூவல் வருடந்தோறும் புதுப்பித்து வழங்கப்படுகிறது. பெரும்பான்மையான அப்ரூவல் பெற்ற பள்ளிகள் மூன்று முறை புதுப்பித்தல் (ரினிவல்) பெற்றுள்ளன. நான்காம் முறை புதுப்பித்தலுக்கு விண்ணப்பித்துள்ளன. கழக அரசு ஆட்சி பொறுப்பு ஏற்ற பிறகு புதுப்பித்தலை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பள்ளி நிர்வாகிகள்

கவலையில் உள்ளனர். மேலும் இயக்குநர் அவர்கள் புதுப்பித்தல் வழங்காமையால் பள்ளியை விட்டு வெளி மாநிலங்களுக்கும், மேல் வகுப்பிற்குச் செல்லும் மாணவ மாணவிகளுக்கு டி.சி. வழங்க இயலவில்லை. மேலும் டி.சி.யில் டி.இ.இ.ஒ., மற்றும் ஏ.இ.ஒ. அவர்களும் கவுன்டர் கையெழுத்து போடுவது கிடையாது. மேல் வகுப்பிற்கு செல்லும் மாணவ மாணவிகளை தலைமை ஆசிரியர் சேர்ப்பதும் கிடையாது. காரணம் புதுப்பித்தல் வழங்காதது தான். ஆய்வு செய்யப்பட்ட புதிய பள்ளிகளுக்கும், ஆய்வு செய்யப்பட்ட தகுதியுள்ள பள்ளிகளுக்கும் அப்ரூவல் வழங்கவில்லை.

ஆகவே, தாங்கள் உடனடியாக தொடக்கக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு புதுப்பித்தலை வழங்குவதற்கும் ஆய்வு செய்யப்பட்ட பள்ளிகளுக்கு அப்ரூவல் வழங்குவதற்கும் உத்தரவு இடுமாறு வேண்டுகின்றேன்.''

இவ்வளவு உறுதியாக இருந்த கல்வித்துறை பின் எல்லாவற்றையும் நெகிழவிட்டது.

அதே மாநாட்டில் சட்ட அமைச்சர் ஆலடி அருணா பேசியது இது :

''இங்கே பேசிய ஆசிரியர்கள் நர்சரி பள்ளிகள் தொடங்கப்படுவதை கண்டித்துப் பேசினார்கள். நர்சரி பள்ளிகள் தொடங்குவது ஆங்கில மோகத்தில் அல்ல. கிராமங்களில் தொடக்கப்பள்ளிகள் இல்லாததால்தான் நர்சரி பள்ளிகள் தொடங்கப்படுகின்றன. சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக சிலர் பள்ளியை தொடங்குகின்றனர்.

கல்வி வியாபாரம் ஆக்கப்படுகிறது. கோடிக்கணக்கில் கல்விக்காக நிதி ஒதுக்கியும் போதிய ஆசிரியர்கள். கட்டிடங்கள் இல்லை; எந்த துறையிலும் நாம் முன்னேற்றம் அடையவில்லை. நிதி நெருக்கடி அதற்கு ஒரு காரணம் ஆகும்.''

'கிராமங்களில் தொடக்கப்பள்ளிகள் இல்லாததால்தான் நர்சரி பள்ளிகள் தொடங்கப் படுகின்றன' என்கிறார். இது முற்றிலும் தவறான செய்தியாகும். இராமநாதபுர மாவட்டம் இராசசிங்கமங்கலம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அருகிலேயே ஒன்றியத் தொடக்கப்பள்ளி இருக்கிறது. ஆனால் 50 மீட்டர் தொலைவில் ஒரு மழலையர் பள்ளி நடத்தப்படுகிறது. இது குறித்து மற்றோர் இடத்தில் பேசுவோம். 'ஆங்கிலமோகத்தால் அல்ல' என்றும் கூறுகிறார். அமைச்சரே இப்பள்ளிகளை ஆதரிப்பவர்தான்; அவரே பள்ளி நடத்துபவர். எனவேதான் அவரது குரல் 'வேறுபட்டு **ஒலிக்கிறது**; உண்மையை **ஒளிக்கிறது**. தமிழை **ஒழிக்கிறது**.

ஓர் உண்மையைச் சொல்லியிருக்கிறார்.

‘கல்வி வியாபாரம் ஆக்கப்படுகிறது’ என்பதுதான் அது.

ஆங்கில மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளில் பாடங்கள் எப்படி நடத்தப் படுகின்றன?

இதோ ஒரு பாட அட்டவணை :

ஒரு பள்ளியின் இரண்டாம் வகுப்பின் நிலை இது: மொத்தம் உள்ள 5½ நாட்களில் 39 பிரிவேளைகளில் தமிழுக்கு 9 பிரிவேளை. எஞ்சிய 30 ம் ஆங்கில வழியில் நடைபெறும் பாடங்கள்தாம்.

மழலையர் பள்ளிகளில் தமிழ் எந்த அளவுக்கு இடம் பெறுகிறது என்பதைக் கொண்டே தமிழின் நிலையை உணர முடியும். (முன்பே ஓர் இடத்தில் குறிப்பிட்டுள்ளேன்)

சனிக்கிழமை அரைநாள் உட்பட 5½ நாட்களில் 39 பிரிவேளைகள் (Periods) பாடம் நடைபெறுகின்றன.

அதில் தமிழுக்கு இடம் முன் மழலையர் வகுப்பு	(LKG)	12/39
முதிர் மழலையர் வகுப்பு	(UKG)	12/39
முதல் வகுப்பு	(I Std)	9/39
இரண்டாம் வகுப்பு	(IIStd)	9/39

மாநகராட்சிப் பள்ளிகளில் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு மழலையர் வகுப்புகள் தொடங்கப்படும் என்று அறிவித்தபோது ‘தினமணி’ இதழ் வரவேற்றுள்ளது.

நர்சரி மற்றும் துவக்கப் பள்ளிகள்

அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி மத்திய, மாநில அரசுகள் 6 முதல் 14 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு இலவசக் கட்டாயக் கல்வியை அளிக்க வேண்டும். ஆனால், 5 வயது பூர்த்தி செய்யாத மற்றும் 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை பள்ளியில் சேர்த்து படிக்க வைக்க பெற்றோர்கள் ஆர்வம் காண்பித்து வருகிறார்கள். முன் பருவ பள்ளிப் படிப்பு (Pre School Studies) முன்னேற்றம் காண வேண்டும், மழலையர் கல்வித் திட்டம் சீராக்கப்படவேண்டுமென தேசியக் கல்விக் கொள்கை (1986) வலியுறுத்துகிறது.

பல ஆண்டுகளாக தமிழகத்தில் நர்சரி பள்ளிகள் நடைபெற்று வந்துள்ளன. இருப்பினும் அண்மைக் காலங்களில் இதனுடைய எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. தற்போது தமிழகத்தில் ஏறத்தாழ 2100 நர்சரி பள்ளிகள் ஒப்புதல் பெற்றும் 23000 பள்ளிகள் ஒப்புதல் பெறாமலும் நடைபெற்று வருகின்றன.

இப்பள்ளிகள் பெற்றோர்களின் ஆங்கில மோகத்தினால் ''ஆங்கில போதனா மொழி'' மூலம் கற்பித்து வந்தன. தமிழ் அறவே சில பள்ளிகளில் அதுவும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் போதிக்கப்படாமல் இருந்தது.

இப்பள்ளிகள் பெற்றோர்களிடமிருந்து கற்பிப்புக் கட்டணமாக ஏராளமான தொகையைத் தண்டியும் வந்தன. பள்ளிகளில் மாணவர்களின் பாடச்சுமை மிகவும் அதிகமாக காணப்பட்டது.

ஆகவே இவற்றையெல்லாம் நெறிப்படுத்தவும், அரசுக் கட்டுப்பாட்டில் கொண்டு வரவும் திரு எஸ்.வி. சிட்டிபாபு அவர்களின் தலைமையின் கீழ், நர்சரி மற்றும் துவக்கப் பள்ளிகள் குழு ஒன்றை அரசு ஏற்படுத்தி, அக்குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்று, நர்சரி பள்ளிகளை ஒழுங்குபடுத்துவதற்கான, அரசு ஆணை எண்.341 கல்வி நாள் 31.3.93ல் ஆணை ஒன்றை வெளியிட்டது.

அதன்படி, ஒப்புதல் வழங்கப்பட்ட நர்சரி மற்றும் துவக்கப் பள்ளிகளுக்கான விதித் தொகுப்பும், அரசால் வெளியிடப்பட்டது.

மேற்படி விதி, தொகுப்பு விதி 7ல் நர்சரி மற்றும் துவக்கப் பள்ளிகள் தொடர்ந்து கட்டணம் பெற்றுக் கொண்டு தமிழ் அல்லது ஆங்கிலம் அல்லது ஏனைய சிறுபான்மை மொழிகளில் போதனை அளிக்கவும் இடமளிக்கப்பட்டுள்ளது.

விதி 7(அ)ல் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை தமிழ் கட்டாயமாகப் போதிக்கப்பட வேண்டும் என்றும், தாய்மொழி தமிழ் அல்லாத மாணவர்கள் அவர்கள் தாய்மொழியில் பயில விருப்பம் தெரிவிக்கும் நிலையில் இரண்டாவது மொழியாகத் தாய் மொழியும், கட்டாய கூடுதல் மொழியாகத் தமிழும் இருத்தல் வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நர்சரி மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கெனத் தனி இயக்ககம் அமைப்பதற்கு திரு ஜே.ஏ. இரயான் தலைமையின் கீழ் ஒரு குழுவை அரசு ஆணை எண்.415 கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை

நாள் 24.5.1995ன்படி ஏற்படுத்தியுள்ளது. அக்குழு தனது பரிந்துரையில் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழ் பயிலவும், அவர்களது தாய்மொழியில் கட்டாயமாகப் பயிலும் நிலை தொடர்ந்து நர்சரி மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும், நிலையில் ஒப்புதல் வேண்டி வரும் விண்ணப்பங்களின் கருத்துருக்களில் மாணவர் பெற்றோர் விருப்பத்தின் அடிப்படையில் தமிழ் அல்லது ஆங்கிலம் அல்லது சிறுபான்மை மொழியினைப் போதனா மொழியாக பரிந்துரைக்கப்படும் பள்ளிகளுக்கு அந்தந்த போதனா மொழியில் கற்பிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு வருகின்றது.

மேலும், தமிழ் மொழி கட்டாயமாக கற்பிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்று ஆய்வு அலுவலர்களால் உறுதி செய்த பின்னர்தான் நர்சரி மற்றும் துவக்கப் பள்ளிகட்கு ஒப்புதல் வழங்கப்படுகின்றது.

தாய்மொழி தமிழ் தவிர, இதர மொழிகளில் பயில விருப்பம் தெரிவிக்கும் மாணவர்கள் பட்சத்தில் இரண்டாவது மொழியாகத் தாய்மொழியும், கட்டாயக் கூடுதல் மொழியாக தமிழும் கற்பிக்கப்படுகின்றனவா என்றும் உறுதி செய்யும் அடிப்படையில் அனுமதிகள் வழங்கப்படுகின்றன. இங்ஙனம் நர்சரி மற்றும் துவக்கப்பள்ளிகளின் போதனா மொழி மற்றும் பாடமொழிக்கென விதிக்கப்பட்ட விதித் தொகுப்பில் உள்ள விதிகள் பின்பற்றப்படுகின்றன.

ஆகவே நர்சரி மற்றும் துவக்கப் பள்ளிகளில் தமிழ் முதல் மொழியாகக் கட்டாயமாகவும் மற்றும் போதனா மொழியாகவும் விரும்பிய வாறும் கற்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும், ஆங்கில வழியில் தங்களின் குழந்தைகள் கல்வி பெறவே பெற்றோர்கள் விருப்பம் தெரிவித்து நர்சரி பள்ளிகளில் சேர்க்கின்றனர். தமிழ்நாட்டில் உள்ள சுமார் 30,000 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் தமிழ் வழி போதனாமொழிதான் நடைபெற்று வருகிறது. நிதி உதவி பெறும் பள்ளிகளிலும் தமிழ் வழி போதனா மொழிதான் நடைபெற்று வருகிறது.''

சில பள்ளிகளில் என்ன நடக்கிறது என்பதற்கான எடுத்துக்காட்டு இது. 'சநாதந தர்ம'ப் பள்ளியில் ஒரு கொடுமை நடைமுறைப்படுத்தப் படுகிறது; விதிமுறையாகப் பின்பற்றப்படுகிறது. அது என்ன? 'பொதுவான

விதிமுறைகள்' (General Rules) என்னும் தலைப்பில் உரையாடல் என்று துணைத் தலைப்பிட்டுக் கூறப்பட்டுள்ளதாவது:

'It is absolutely imperative that only English should be spoken at all times inside the campus as it is presumed that those with Tamil as their second language have sufficient practice in speaking the language at home & hence requires no practice to speak it inside the school campus.'

இரண்டாவது மொழியாகவுள்ள தமிழை மாணவர்கள் வீட்டில் பேசிப் பழக வாய்ப்பிருப்பதால் பள்ளி வளாகத்தினுள் எல்லா நேரங்களிலும் ஆங்கிலத்தில் மட்டுமே பேசவேண்டும் என்று அழுத்தமாக வற்புறுத்தப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கல்லூரிகளில் இரண்டாம் பாகம் தமிழ் - என்றிருந்ததை, மாணவர்களின் கிளர்ச்சிதான் மாற்றியமைத்தது; முதற்பாகம் (Part I) தமிழ்; பாகம் இரண்டு (Part II) ஆங்கிலம் என்று பல ஆண்டுகளுக்கு முன் மாற்றப்பட்டது. இதுபோன்ற பள்ளிகளில் தமிழை இரண்டாம் மொழியாக அரசு எப்போது அறிவித்தது? அரசு அறிவிக்கவில்லை. அப்படியானால் தமிழை இரண்டாம் மொழி என்று வைத்திருப்பதற்காக அந்தப் பள்ளியின்மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டாமா?

சென்னை, வேப்பேரியில் உள்ள கிறித்துவப் பள்ளியொன்றில், பள்ளி வளாகத்திற்குள் 'தமிழில் பேசினால் தண்டனை, ஆங்கிலத்தில் மட்டுமே பேச வேண்டும்' என்று விதிக்கப்பட்டிருப்பதாக அறிந்து, தலைநகர்த் தமிழ்ச் சங்கம் சில திங்களுக்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

அது குறித்துச் சட்டப்பேரவையில் பேசிய கல்வியமைச்சர் அவர்கள், 'ஆங்கிலத்தில்தான் பேசவேண்டும்' என்பதாக எந்த விதிமுறையும் இல்லையென்று அந்தப் பள்ளி நிர்வாகம் தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்டார். ஆனால் நடந்த உண்மைவேறு; சட்டமன்றத்தில் 'விடை' மழுப்பப் படுகிறது.

இடையில் சட்டமன்ற அறிவிப்பு மற்றும் நடவடிக்கைகளை மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

முதல் பாகம் தமிழ்

1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் ஒன்றான ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதல் பாகமாக தமிழ் கட்டாயப் பாடமாகவும், இரண்டாவது பாகமாக ஆங்கிலமும்

இருக்கும். மொழிச் சிறுபான்மையினர் தங்கள் தாய்மொழியைக் கற்க விரும்பினால், 15 மாணவர்களுக்கு மேல் இருந்தால் அதற்குரிய மொழி ஆசிரியரை நியமிக்க வழிவகை செய்யப்படும். இதன் மீது எடுத்த நடவடிக்கை மற்றும் மழலையர் பள்ளி குறித்த அறிக்கை:

6.5.97 அன்று முதலமைச்சர் அவர்கள் கல்வியமைச்சர், தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் ஆகியோருடன் கலந்து ஆலோசித்து எடுக்கப்பட்ட முடிவில், தொடக்கக் கல்வி இயக்குநரை கருநாடக மாநில நடைமுறை பற்றி கருத்து அறிந்துவர அனுப்பப்பட்டார். தற்போது, இருமொழிக் கொள்கை நடைமுறைப்படுத்த தொடக்கக்கல்வி இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் 1998/99 ஆம் ஆண்டு தமிழைக கட்டாயப் பாடமாகக் கொண்டுவருவது குறித்து கோப்பு கல்வி அமைச்சருக்கு அனுப்பப்பட்டது.

மற்றோர் ஆணை

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 6

ந.க. எண்: 12944/இஅ1/96-நாள் : 7.4.'97

- - -

பொருள் : தொடக்கக் கல்வி - நர்சரி மற்றும் துவக்கப் பள்ளிகள் மாற்றுச் சான்றிதழின் மேலொப்பமிடுதல் மற்றும் நர்சரி பள்ளி மாற்றுச் சான்றுடன் வரும் மாணவ / மாணவியர்களை பள்ளிகளில் சேர்த்துக் கொள்ள அறிவுரைகள் சார்ந்து.

பார்வை : இயக்குநரின் செயல்முறைகள் ந.க. எண்:12944/ இஅ1/96 நாள் : 30.5.'96

- - -

1993-ம் ஆண்டிற்கு மட்டும் தற்காலிக ஒப்புதல் மட்டும் பெற்று இயங்கும் நர்சரி மற்றும் துவக்கப் பள்ளிகள் மாணவர்கட்கு வழங்கும் மாற்றுச் சான்றிதழில் இவ்வலுவலகத்திலிருந்து தற்காலிக ஒப்புதல் வழங்கப்பட்ட இயக்குநரின் செயல்முறைகள் எண் மற்றும் நாள் குறிப்பிட்டு மாற்றுச் சான்றிதழ் வழங்க 31.5.'96 முடிய அனுமதி வழங்கி ஏற்கெனவே உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறே 1993-1994 மற்றும் 1994-1995 கல்வி ஆண்டு முடிய முறையான ஒப்புதலுடன் பதிவு எண் பெற்றுள்ள நர்சரி பள்ளிகள் மற்றும் தொடர் ஒப்புதல் 31.5.96 முடிய பெற்றுள்ள நர்சரி மற்றும் துவக்கப்பள்ளிகள் வழங்கும் மாற்றுச் சான்றுகளில் சான்றொப்பமிடுதல், வெளிமாநிலங்கட்கு செல்ல வேண்டிய மாணவ/மாணவியர் சார்பாக சான்றிதழ்களில் மேலொப்பமிடவும் நர்சரி / துவக்கப்பள்ளிகளில் வழங்கும் மாற்றுச் சான்றுகளை ஏற்று கல்வித்துறையில் கீழுள்ள அனைத்து தொடக்க / நடுநிலை/ உயர்நிலைப்பள்ளியில் மாணவ / மாணவியரை சேர்த்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ள பார்வையில் காண் உத்தரவில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் மாணவ / மாணவியர்களின் மாற்றுச் சான்றுகளில் மேலொப்பமிடுதல் / நர்சரி தொடக்கப் பள்ளிகளிலிருந்து பெற்றுவரும் மாற்றுச் சான்றுகளில் அடிப்படையில் மாணவ, மாணவியர்களை பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளுதல் குறித்து கீழ்க்காண் உத்தரவு வழங்கப்படுகிறது.

1. 1993-1994ம் ஆண்டு முதல் தற்காலிக ஒப்புதல் மட்டும் பெற்றுள்ள நர்சரி / துவக்கப்பள்ளிகள் முறையான ஒப்புதல் மற்றும் ஒப்புதல் புதுப்பித்து ஆணை பெற்றுள்ள நர்சரி மற்றும் துவக்கப்பள்ளிகள் வழங்கும் மாற்றுச் சான்றுகளில் ஏற்கனவே இவ்வலுவலகத்திலிருந்து பெற்ற இயக்குநரது ஆணை மற்றும் நாள் விவரத்தை குறிப்பிட்டு மாற்றுச் சான்று வழங்க 31.5.'97 முடிய அனுமதிக்கப்படுகிறது.

2. வெளி மாநிலங்கட்கு செல்லவேண்டிய மாணவ / மாணவியர்கள் சார்பாக தற்காலிக / முறையான ஒப்புதல் / ஒப்புதல் புதுப்பித்துள்ள நர்சரி மற்றும் தொடக்கப் பள்ளிகள் வழங்கிய மாற்றுச் சான்றுகளில் மேலொப்பமிட அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் அனுமதிக்கப்படுகிறது.

3. தற்காலிக / முறையான / ஒப்புதல் புதுப்பித்து ஆணை, பெற்று நர்சரி மற்றும் துவக்கப் பள்ளிகள் வழங்கும் மாற்றுச் சான்றிதழ்களை ஏற்று கல்வித் துறையின் கீழுள்ள அனைத்து தொடக்க / நடுநிலை / உயர்நிலைப் பள்ளிகளில் மாணவ / மாணவியர்களைச் சேர்த்துக் கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இவ்வாணை ஒருமுறையேனும் தற்காலிக / முறையான / ஒப்புதல் புதுப்பித்துள்ள நர்சரி மற்றும் துவக்கப் பள்ளிகள் வழங்கும் மாற்றுச்

சான்றுகளுக்கு மட்டும் பொருந்தும். இதுவரை ஒருமுறை கூட ஒப்புதல் பெறாத நர்சரி & துவக்கப் பள்ளிகட்கும் பொருந்தாது என்றும் அறிவிக்கப்படுகிறது.

ரெ. நாராயணசாமி
தொடக்கக் கல்வி இயக்குநர்

நகல் : தமிழ்நாடு நர்சரி மற்றும் தொடக்கப்பள்ளிகள் சங்கம்,
சென்னை - 600 021.

நன்கு கவனிக்கவும். ஏற்புப்பெறாத மழலையர் பள்ளி மாணவர்களின் சான்றிதழ்களில் அரசு அலுவலர்கள் மேலொப்பம் இடக்கூடாது என்பது வலியுறுத்தப் பட்டுள்ளது.

எனினும் 20000 மழலையர் பள்ளிகள் ஏற்புப் பெறாமலேயே நடைபெறுவது எப்படி?

எங்கோ ஓட்டை உள்ளது - பெரிய ஓட்டை உள்ளது என்பது விளங்கியிருக்கும்.

இந்த நேரத்தில் அ.கி. வேங்கடசுப்பிரமணியன், இ.ஆ.ப. ஒரு கட்டுரை எழுதியிருந்தார் (தினமணி 31.12.1998) அதிலிருந்து சில பகுதிகள்.

''எங்களிடம் ஒரு குழந்தையை முதல் ஏழு ஆண்டுகளுக்கு ஒப்படையுங்கள்; அதன் பின்னால் வாழ்நாள் முழுவதும் அவர் எங்களுடையவர்தான் என்று இயேசு சபை பாதிரிமார்கள் கூறுவார்கள். ஏனென்றால் குழந்தைப் பருவத்திலே நமக்குக் கிடைக்கின்ற போதனைகள், அனுபவங்கள், மதிப்புகள் வாழ்நாள் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தும். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தொடக்கக் கல்வியின் தற்போதைய நிலை எவ்வாறு உள்ளது?

1998-99 கல்வி மானியக் கோரிக்கையை ஒட்டி சட்டப் பேரவையில் வைக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பின் படி தொடக்கக் கல்விக்கென ரூ.1683.72 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தம் 30,796 தொடக்கப் பள்ளிகளில் 46.47 லட்சம் மாணவ மாணவிகள் சேர்ந்துள்ளார்கள். இதில் அரசு மற்றும் உள்ளாட்சிப் பள்ளிகளில் 34.32 லட்சம் குழந்தைகள் படிக்கிறார்கள். ஏறக்குறைய 1.16 லட்சம் ஆசிரியர்கள் இப்பள்ளிகளில் உள்ளனர். 1 முதல் 8 வகுப்பு வரை உள்ள நடுநிலைப் பள்ளிகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் மொத்தம் 36,269 பள்ளிகள் உள்ளன. இவற்றில் 72.19இலட்சம் மாணவ மாணவிகள், 1.80 லட்சம் ஆசிரியர்கள் உள்ளனர்.

பள்ளிக் கல்வியில் உள்ள ஒரு முக்கிய பிரச்சினை மாணவர்கள் தொடர்ந்து பள்ளி செல்லாமல் பாதியில் நின்றுவிடுவதாகும். 1997-98 ஆம் ஆண்டு 12 ஆம் வகுப்பில் இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 3.55 லட்சம்; இரண்டு ஆண்டுகள் பின்நோக்கிச் சென்று பார்த்தால் 1995-96 ஆம் ஆண்டு 10 ஆம் வகுப்பில் இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 6.37 லட்சம். இன்னும் நான்கு ஆண்டுகள் பின் சென்று பார்த்தால் 1991-92 இல் ஆறாவது வகுப்பில் இருந்தவர்களின் எண்ணிக்கை 12.47 லட்சம். இன்னும் 5 ஆண்டுகள் பின் சென்று பார்த்தால் 1986-87 ஆம் ஆண்டில் ஒன்றாம் வகுப்பில் இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 17.62 லட்சம். எனவே 10 ஆம் வகுப்பு முடிக்கும் முன்னரே 11 லட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பள்ளியிலிருந்து விடுபட்டுப் போயுள்ளனர். ஆறாம் வகுப்பில் சேர்வதற்கு முன் 5.15 லட்சம் குழந்தைகள் விடுபட்டிருக்கின்றனர். இந்த நிலையில் மாறுதல் எதுவும் அண்மைக் காலத்திலும் ஏற்படவில்லை. 1992-93 ஆம் ஆண்டில் முதல் வகுப்பில் சேர்ந்த மாணவர்கள் 18.59 லட்சம். 1997-98 இல் ஆறாவது வகுப்பில் இருந்த மாணவர்கள் 12 லட்சம். 5-ம் வகுப்பிற்கு மேல் 6.59 லட்சம் குழந்தைகள் படிப்பைத் தொடர வில்லை. இவர்கள் பெரும்பாலும் பெண்கள் மற்றும் சமூகத்தின் அடித்தளத்தில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள். இவ்வாறு மாணவர்கள் தொடர்ந்து படிக்காததற்குப் பொருளாதாரச் சூழ்நிலை மட்டும் காரணம் அல்ல; அவர்களைக் கவரும் வகையில் கல்வி முறை அமையவில்லை என்பது மாகும் என்று சில கள ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தொடக்க நிலையில் சேரும் மாணவர்களில் பெரும்பாலோர் பள்ளி இறுதி வகுப்பை எட்டுவதற்குள் விடுபட்டுப் (Drop out) போகின்றனர். விடாமல் பள்ளியிலே இருக்கின்றவர்களின் நிலையைப் பார்த்தாலும் பரிதாபமாக உள்ளது. 1998-99 பள்ளிக் கல்வித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பின்படி ஐந்தாவது வகுப்பு வரையில் 16 சதவிகிதம் குழந்தைகள் பள்ளியிலிருந்து விடுபட்டுப் போகின்றனர் எனத் தெரிகிறது. ஆறாவது வகுப்பு வரை என்று பார்த்தால் விடுபட்டவர்களின் சதவிகிதம் 35 ஆகிறது.

தமிழ்நாடு கல்விக் கோபுரம்

கல்லூரி முதுநிலை

கல்லூரி முதலாண்டு 1.5 லட்சம், மேல்நிலை 11 -12 வகுப்பு

வயது 16-18 7.14 லட்சம்

பதினொன்றாம் வகுப்பு - 3.5 லட்சம், உயர்நிலை (9-11 வகுப்பு)
வயது 14-16 15.02 லட்சம்

ஒன்பதாம் வகுப்பு 7.54 லட்சம், நடுநிலை (6-8 வகுப்பு)
வயது (11-14) 35.94 லட்சம்)

ஆறாவது வகுப்பு - 12.47 லட்சம், தொடக்க நிலை (1-5 வகுப்பு)
(வயது 6-11) 68.14 லட்சம்

முதல் வகுப்பு - 17.62 லட்சம்

'தினமணி' செய்திகளின்படி 410 மாணவர் படிக்கும் ஒரு பள்ளியில் ஓர் ஆசிரியர்தான் இருக்கின்றார். (15.12.98) அதே சமயம் ஒரு மாணவன் இருக்கின்ற பள்ளியும் இருக்கின்றது. புள்ளி விவரக் கணக்கின்படி 10 மாணவர்களுக்கும் குறைவாக உள்ள தொடக்கப் பள்ளிகள் 60, நடுநிலைப்பள்ளிகள் 16 உள்ளன. 50 மாணவர்களுக்கும் குறைவாக உள்ள தொடக்கப் பள்ளிகள் சுமார் 5300 உள்ளன. மொத்தம் உள்ள 31,000 தொடக்கப் பள்ளிகளில் ஏறத்தாழ 16,000 பள்ளிகள் 100 மாணவர்களுக்கும் குறைவாகவே உள்ளவையாகும்.

ஒரே ஊரில் 50 மாணவர்களுக்கும் குறைவாக உள்ள ஒன்றுக்கும் மேற்பட்ட தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. இப்பள்ளிகள் ஒவ்வொன்றிலும் இரண்டு ஆசிரியர்களும் இருக்கலாம். இந்த நிலை தொடர வேண்டுமா என்பது ஆராயப்பட வேண்டும்.

ஏறக்குறைய நாலரை லட்சம் குழந்தைகள் மெட்ரிக் பள்ளிகளில் படிக்கிறார்கள் எனத் தெரிகிறது.

இதற்குப் பொதுவான காரணம், அரசு மற்றும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் கிடைக்கும் கல்வியின் தரம் மீது பெற்றோர்களுக்கு நம்பிக்கை இல்லாததே. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களும் தங்கள் குழந்தைகளை நகரத்தில் உள்ள தனியார் பள்ளிகளில், அதுவும் பெரும்பாலும் ஆங்கிலவழிப் பள்ளிகளிலேயே சேர்த்துள்ளனர்.

இதில முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒன்று முதல் வகுப்பில் 17.62 இலட்சம் மாணவர்கள் சேர்ந்தால் 12 ஆம் வகுப்பு முடித்துக் கல்லூரி செல்லும் மாணவர்கள் 1.5 இலட்சம் தான். இதில் விடுபட்டுப் போனவர்கள் - படிப்பைத் தொடராது விட்டவர்கள் 16.12 இலட்சம் பேர். 12 ஆம் வகுப்புக்குமேல் படிப்பை நிறுத்திக்கொண்ட 16.12 இலட்சம் பேரா வெளிநாட்டுக்கு வேலைக்குப்

போகப் போகிறார்கள்? இந்த 16.12 இலட்சம் பேரா வெளி மாநிலங்களுக்கு வேலைக்குப் போகிறார்கள்?

கல்லூரி செல்லும் 1.5 இலட்சம் பேருமே ஆங்கில வழியில் படித்தவர்கள் அல்ல. இதனை எழுதிக் கொண்டிருக்கும் தமிழ்க்குடிமகன் 11ஆம் வகுப்பு வரை தமிழ்வழியில் படித்தவன். இந்த 1.5 இலட்சம் பேருமே ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுபவர்கள் அல்ல. பின் ஏன் இவர்களுக்கு 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை ஆங்கிலக் கல்வி வேண்டும்?

3ஆம் வகுப்பு முதல் ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் படிக்கவேண்டும்; ஆறாம் வகுப்பு முதல் யார் வேண்டுமானாலும் ஆங்கில வழியில் தங்கள் பாடங்களைப் படித்துக் கொள்ளலாம் என்று அரசு அனுமதித்து விட்டது. அதன் பிறகு தான் 1 முதல் 5 வரை மட்டும் தமிழ் வழியில் அல்லது தாய்மொழி வழியில் படியுங்கள் என்று கூறுகிறது. 1.5 இலட்சம் பேருக்காக - இதில் பாதிப்பேர் தமிழ்வழியில் படித்தவர்கள் என்றால் ஆங்கில வழியில் படித்த 75000 பேருக்காக ஏன் ஆங்கில வழியில் பாடம் கற்பிக்கவேண்டும்.

வெளிநாட்டுக்கும், வேறு மாநிலங்களுக்கும் வேலைக்குப் போகிறவர்கள் பெரும்பாலும் கல்லூரியை எட்டிப் பார்க்காதவர்களே! 5 ஆம் வகுப்பு வரை தமிழில் படித்தால் இவர்கள் வெளிநாட்டுக்கு வேலைக்.குப் போகும் வாய்ப்பு பறிக்கப்பட்டு விடும், வேறுமாநிலத்துக்கு வேலைக்குப் போகமுடியாமல் தவிப்பார்கள் என்பதெல்லாம் போலி வாதமல்லவா? 5 ஆம் வகுப்பு முடித்தவுடனேயே இவர்கள் எல்லாம் வெளிமாநிலத்துகக்கு வேலைக்குப் போய்விடுவார்களா! 10 அகவை முடித்தவுடனேயே எவன் வேறுமாநிலம் போகிறான்? எவன் வெளிநாட்டில் வேலைக்குப் போகிறான்? ஆங்கில மோகிகள் யாருக்குக் காது குத்துகிறார்கள்? ஏன் இந்தப் பித்தலாட்டம்?

தங்கள் கல்வி வியாபாரம் பாதிக்கப்படுமே எனும் கவலையைத் தவிர இவர்களுக்கு வேறு என்ன அக்கறை? இவர்கள் என்றாவது வள்ளல் பச்சையப்பராக, வள்ளல் அண்ணாமலை அரசராக வள்ளல் அழகப்பராக மாற முடியுமா?

முதலில் இந்தப் போலித்தனத்தை நம் தோழர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

அ.கி. வேங்கடசுப்பிரமணியன் கட்டுரை புள்ளி விவரங்களோடு நமக்குப் பல உண்மைகளை உணர்த்தி விடுகிறது.

புள்ளி விவரங்களின்படி :

முதல் வகுப்பில் மாணவர்கள்	17.62 இலட்சம்
ஆறாவது வகுப்பில் சேர்வோர்	12.47 இலட்சம்
ஒன்பதாம் வகுப்பில் சேர்வோர்	7.54 இலட்சம்
பதினொன்றாம் வகுப்பில் சேர்வோர்	3.54 இலட்சம்
கல்லூரி செல்வோர்	1.5 இலட்சம்

- - -

1 முதல் 8 வரை படித்த 10.08 இலட்சம் மாணவர்கள் தொடர்ந்து படிக்காமல் (Drop out) நின்று விடுகிறார்கள்.

1 முதல் 12 வரை படித்த 16.12 இலட்சம் பேர் நின்று விடுகிறார்கள். இவர்களுக்கு ஏன் அனைத்துப் பாடங்களும் ஆங்கிலத்தில்?

கல்லூரி செல்லும் 1.5 இலட்சம் பேருக்காக எஞ்சியுள்ள 16.12 இலட்சம் மாணவர்களையும் பாழடிக்க வேண்டுமா?

முடிபு : கல்லூரிகளில் - அரசுக் கல்லூரி 65-இல் இணைப் பயிற்று மொழி அரசு உதவி பெறும் கல்லூரிகள் 160இல் **ஆங்கிலம்** மட்டுமே சுய நிதிக் கல்லூரிகளில் **ஆங்கிலம்** மட்டுமே

இவர்கள் போகட்டும் வடநாட்டுக்கும், வெளிநாட்டுக்கும்.

தமிழகப் பொறியிற் கல்லூரிகளில் உள்ள இடங்கள்	79000
மருத்துவக் கல்லூரிகளில்	1445

இவர்கள் போகட்டும் வடநாட்டுக்கும், வெளிநாட்டுக்கும்.

'செந்தமிழ்ச் செல்வி' இதழ் (மே 1998) தன் மனவருத்தத்தைப் புலப்படுத்தும் வகையில் ஓர் ஆசிரியவுரை எழுதியுள்ளது. அதனை ஒரு பார்வை பார்த்து வையுங்கள்.

மழலையர் பள்ளிகளில் தமிழ்

உலக முழுவதும் குழந்தைகளுக்குத் தாய்ப்பால்தான் கொடுக்க வேண்டும். வேறு மாவுப் பால் கொடுக்கக் கூடாது என்று மருத்துவர்கள் மகளிர்க்கு அறிவுரை வழங்கி வருகின்றனர். மாவுப் பால் பொதியிலும் 'தாய்ப் பாலே குழந்தைக்கு நல்லது' என்ற தொடரையும் அச்சில் பொறிக்கிறார்கள்.

இதுபோலவே மழலையர்க்குத் தாய்மொழி வழியாகவே கல்வி கற்பிக்க வேண்டுமென்று உலக அறிஞர்கள் அனைவரும் கூறிவருகின்றனர். எதற்கெடுத்தாலும் ‘மேலை நாடுகளைப் பார், சப்பானைப் பார், அமெரிக்காவைப் பார்’ என்று கூறிவரும் அரசியலாளர்கள் இதைப் பொறுத்தமட்டிலும் கண்களை மூடிக்கொள்கிறார்கள். காதுகளைப் பொத்திக் கொள்கிறார்கள். வாய்களையும் திறப்பதில்லை. நம் நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்த மகாத்மா காந்தியடிகளை வேறு எந்த வழிகளிலும் பின்பற்று கிறார்களோ இல்லையோ இதைப் பொறுத்தமட்டில் அடிகளார் வைத்திருந்த குரங்குப் பொம்மைகளாக இருக்கின்றனர்.

வெளி நாடுகளுக்குக் கூடப் போக வேண்டாம். அண்மை மாநிலமான ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகியவற்றைப் பார்த்தால்கூடப் போதும். பேருந்துகளிலுள்ள பெயர்ப் பலகைகளிலிருந்து பல்கலைக்கழகம் அனுப்பும் கடிதம் வரை எங்கும் எதிலும் அவரவர் தாய்மொழியே பல்லாண்டுகளாகக் கையாளப் பெற்று வருகிறது.

1937 இல் இந்தி திணிக்கப்பெற்றபோது பள்ளிகளில் அது நுழையக்கூடாது என்று போராட்டம் நடத்தியது. தமிழகம் 60 ஆண்டுகளாகப் போராடி வருகிறது. பலன் இன்று தமிழகப் பள்ளிகளில் தமிழையே நுழைய விடவில்லை. இந்தியும் இல்லை, தமிழும் இல்லை. 50 ஆண்டுகட்கு முன் நம்மை ஆட்சி செய்வதிலிருந்து விடுபட்டுச் சென்ற வெள்ளையனின் ஆங்கில மொழி இன்னும் நமக்கு விடுதலை அளிக்கவில்லை. இங்கே ஒரு தமிழ் நாளிதழ் புதிதாக ஆங்கிலம் கற்றுக் கொள்ளுங்கள் என்று கிழமைக்கு ஒரு வகுப்பாக ஆங்கிலத்தைக் கற்பிக்கத் தொடங்கி இருக்கிறது. ‘உன்னுடைய ஆங்கிலத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்’ என்று ஆங்கில ஏடு கடந்த பல ஆண்டுகளாக நடத்தி வருவதைக் கூட மன்னித்து விடலாம். அவர்களுடைய பிழைப்பு அது. அங்ஙனம் பயில்வார் இல்லையேல் தமிழகத்தில் ஆங்கில ஏட்டுக்கு என்ன வேலை? அதனால்தான் ‘உன்னுடைய’ என்று உரிமைப் பொருளில் தமிழனுக்கு ஆங்கிலத்தை அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறது.

ஆண்டுதோறும் தமிழகத்தில் தமிழறிஞர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். ஒரு சில நாட்களுக்கு முன் ‘தமிழை முழு அளவில் ஆட்சி மொழி ஆக்க வேண்டும். மழலையர் பள்ளிகள் முதல் பட்டப்படிப்பு வரை தமிழே பயிற்றுமொழியாக வேண்டும்’ என்று தமிழறிஞர்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

என்ன போராட்டம் நடத்தி என்ன பயன்? இது செவிடன் காதில் ஊதப்பெறும் சங்காகி விட்டது. தமிழகத்து ஊர்களில் வீதிதோறும்

ஊர்வலங்கள் நடத்தி, தாமே தம் தள்ளாத வயதிலும் நடந்து சென்று 'மழலையர் பள்ளிகளில் தமிழ் மட்டுமே வேண்டும்' என்று முழங்கிய தமிழ் மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் பட்டபாடு என்ன ஆயிற்று. விழலுக்கிறைத்த நீர் ஆயிற்று.

'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்று சொல்லி, கல்லூரிகள் அனைத்திலுமே தாய்மொழி வழியே கல்வி என்று சொல்லி, மழலைப்பள்ளிகளில் மட்டுமாவது முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் வழியாக மட்டுமே கல்வி என்று சொல்லி - முடிவு அன்றும் இன்றும் தமிழ் நாட்டில் தமிழ் எந்த வகுப்பிலும் கற்காமல் பட்டம் பெறாமல் என்ற நிலையே உள்ளது.

சென்ற ஆண்டு தமிழ் வழியாகக் கல்வி கற்போம் என்று கூட சொல்லாமல் வலியுறுத்தாமல், தமிழ் ஒரு பாடமாக நடத்தினால் தான் பள்ளி நடத்த அனுமதியளிப்போம் என்று ஆணை பிறப்பிக்கப் போவதாகச் சொல்லி, அந்த உறுதிமொழி அளிக்கும் பள்ளிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்று ஆணை பிறப்பிக்கப் போவதாகச் சொல்லி வழக்கம் போல எந்தவித உறுதிமொழியும் பெறாமல் காலச் சூழ்நிலை கருதி தமிழ் கற்பிக்கப் படாத பள்ளிகளில் தமிழ் இன்று ஒரு மொழிப் பாடமாகக் கற்பிக்கப்பெறும் சூழல் ஏற்பட்டுள்ளது. ஆனால் இதுவும் பள்ளி நடத்துவோர் விருப்பமே என்று 'தமிழில் மட்டுமே எல்லாப் பாடங்களையும் சொல்லிக் கொடுத்தால்தான் பள்ளிநடத்த அனுமதிப்போம் என்று உறுதியான ஆணை பிறப்பிக்கிறதோஅன்றுதான் மழலைப் பள்ளிகளில் தமிழ் பாடமொழியாக மாறும். அதுவரை மாறவே மாறாது. ஆனால் அப்படிப்பட்ட அரசாணை பிறப்பிக்கப் பெறுமா என்றால் அதுவும் நடக்காது. மக்களையும் மக்கள் வாக்குகளையும் தேர்தலையும் நம்பியிருக்கும் வரை இது நடக்காது. தமிழுக்காகவே வாழும் தலைவர்களைக் கொண்ட திராவிட மரபுவழிக் கட்சிகள் ஆளும் அணியிலும் எதிர் அணியிலும் இருந்தாலும் இது நடக்காது. நாளிதழ்களையும் மக்கள் தொடர்பு அமைப்புகளான வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றைத் தங்கள் ஆளுகைக்குள், தங்கள் ஆட்சிக்குள், பிடிக்குள் வைத்திருப்போர் மனம் மாறும்வரை நடக்காது.''

19.12.1998 இல் நர்சரி பள்ளி கூட்டமைப்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதன் விவரங்களைப் படியுங்கள். (தினகரன் 19.12.90)

''தமிழ்நாட்டில் ஆங்கில பள்ளிகள், நர்சரி பள்ளிகள், மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்காக 9 சங்கங்கள் இருக்கின்றன. அவை இணைந்து தமிழ்நாடு மழலையர் மற்றும் மெட்ரிக்குலேசன் பள்ளிகள்

அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு என்கிற புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது.

அதன் தலைவராக வி. ரமணிபாய், பொதுச்செயலாளராக பி.டி. குமார் தேர்ந்து எடுக்கப்பட்டனர்.''

அவர்கள் கூறியதாவது : -

''மழலையர் பள்ளிகளுக்கு மாவட்ட வாரியாக தனி அலுவலரை நியமனம் செய்த முதல் அமைச்சருக்கும், கல்வி அமைச்சருக்கும் நன்றி தெரிவிக்கிறோம். இதுபோல மெட்ரிக்குலேசன் பள்ளிகளுக்கும் தனி அலுவலர் நியமிக்க வேண்டும். மாநில அளவில் இந்த பள்ளிகளுக்கென தனி இயக்குனரகம் ஏற்படுத்த அரசை கேட்டு கொள்கிறோம்.

8-ம் வகுப்பு வரை பாடங்களை தமிழில் நடத்த வேண்டும், சமூக அறிவியல் பாடத்தை கூட தமிழில் நடத்த வேண்டும் என அரசு சொல்வதை ஏற்க முடியாது.

பெற்றோர், மாணவர்களின் விருப்பப்படி நாங்கள் ஆங்கில வகுப்புகளை நடத்துகிறோம். இதை கூடாது என சொல்வது சரியல்ல. 40 லட்சம் மாணவர்கள் இந்த பள்ளிகளில் படிக்கிறார்கள். 1½ லட்சம் ஆசிரியர்களும், 10 ஆயிரம் பட்டதாரி ஊழியர்களும் பணிபுரிகிறார்கள். இவர்கள் அனைவரையும் பாதிக்கும் ஒரு விஷயத்தை அரசு வற்புறுத்த கூடாது.

கூடுதல் பாடங்களை தமிழில் நடத்தினால்தான் அரசு அங்கீகாரம், அரசு சலுகைகள் கிடைக்கும் என்ற அறிவிப்பை வாபஸ் பெற வேண்டும். ஒரு மொழிப் பாடமாக தமிழை ஏற்றுக்கொண்டுள்ள பள்ளிகளுக்கு அரசு அங்கீகாரம் வழங்க வேண்டும். அதுவும் 10 ஆண்டு நிரந்தர அங்கீகாரம் அளிக்க வேண்டும்.''

இந்த பி.டி. குமார் புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க. இலக்கிய அணியின் செயலாளர். இப்பொறுப்பில் இருந்து கொண்டே அரசின் கோட்பாடுகளை எதிர்த்துப் போராடத் தொடங்கினார். செய்தி தெரிந்ததும் முதல்வரிடம் கூறி, இவரைக் கட்சியிலிருந்து நீக்கிவிடச் சொன்னேன். அதன்படி நீக்கினார்கள். எனக்குத் தெரிய என் கட்சி அரசியல் வாழ்க்கையில் ஒரே ஒருவரைத்தான் கட்சியை விட்டு நீக்கச் சொல்லியிருக்கிறேன். அவர் இந்தக் குமார்தான். இவர் அன்பழகனின் ஆதரவால் பதவிபெற்றவர். அன்பழகனின் உதவியால் பல மெட்ரிகுலேசன் பள்ளிகட்கு ஒப்புதல் வாங்கினார். என்ன சொல்கிறார்கள் என்று பாருங்கள்: இவர்கள் நடத்தும்

பள்ளிகளில் மட்டும் 40 இலட்சம் பேர் படிக்கிறார்களாம். (ஏற்புப்பெற்ற 2100 மழலையர் பள்ளிகள்; 2700 மெட்ரிகுலேசன் பள்ளிகள்: ஏற்புப் பெறாத 23000 மழலையர் பள்ளிகள்) இவற்றில் மட்டும் 40 இலட்சம் மாணவர்களாம். 1½ இலட்சம் ஆசிரியர்களாம்; 10 ஆயிரம் பட்டதாரி ஊழியர்களாம். ஒரு பெரிய தொழிற்சாலையே இவர்கள் கையிலாம்.

இவற்றைக் கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

13.1.1999 இல் தமிழக அரசு ஓர் ஆணை பிறப்பித்தது. அது இதுதான்.

''நர்சரி, தொடக்கப் பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக கற்றுத் தருவது தொடர்பாக கடந்த நவம்பர் மாதம் தமிழக அரசு சில முடிவுகளை அறிவித்தது. அதுபற்றி முதல்வர் கருணாநிதி, நேற்றும் ஆலோசனை நடத்தினார். தலைமைச் செயலகத்தில் நடந்த இக்கூட்டத்தில் அமைச்சர்கள் அன்பழகன், ஆற்காடு வீராசாமி, துரைமுருகன், தமிழ்க்குடிமகன், பொன்முடி, தா. கிருஷ்ணன், ரகுமான்கான், முன்னாள் துணை வேந்தர்கள் வா.செ. குழந்தைசாமி, ஆனந்த கிருஷ்ணன், அரசு அதிகாரிகள் கவுரிசங்கர், தெய்வமணி, நாராயணசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி அரசு வெளியிட்டிருக்கும் பத்திரிகை குறிப்பு :

நர்சரி மற்றும் தொடக்கப் பள்ளிகளில் தமிழ் மொழியை ஒரு பாடமாக நடத்துவதோடு பிற பாடங்களில் மூன்றில் இரண்டு பாடங்களையாவது தமிழ் வழியில் கற்பிக்க வேண்டுமென்று அரசு வலியுறுத்துகிறது. சமூகவியல் (பூகோளம், வரலாறு) கணிதம், அறிவியல் ஆகிய மூன்றில் இரண்டை தமிழில் நடத்த வேண்டும். இதை ஏற்கும் பள்ளிகளுக்கே தொடர்ந்து அனுமதி தரப்படும். இவ்வாறு அனுமதிக்கப்பட்ட பள்ளிகளில் படிப்பவர்கள் தான், அரசு அங்கீகரித்த பள்ளிகளில் சேரத் தகுதி பெற்றவர்கள்.

இவ்வாறு அனுமதி பெறாத பள்ளியில் படித்தவர்கள், வேறு பள்ளியில் சேரும்போது அவர்கள் நடத்தும் தேர்வின் அடிப்படையில்தான் உயர் வகுப்புகளில் சேர்க்கப்படுவார்கள்.

தமிழ் மொழி அடிப்படையில் இயங்கும் நர்சரி மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கு கட்டணம் பாதியாகக் குறைக்கப்படும். மேலும் மாணவர்களுக்கான பாடப் புத்தகங்கள் அரசின் சார்பில் இலவசமாக வழங்கப்படும்.''

இதை எதிர்த்து நடைபெற்ற வழக்கில், அரசாணை செல்லும் எனத் தீர்ப்பு வந்துவிட்டது.

மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளின் கருத்தரங்கு நடைபெற்றது. அவர்கள் மாநாட்டிலேயே அரசின் கொள்கைகளையும் எடுத்துச் சொன்னோம்; தமிழுக்கு மாறாகப் பேசுபவர்களை எதிர்த்தும் மறுத்தும் அந்த இடத்திலேயே விடை தந்தோம் என்பதற்கான எடுத்துக்காட்டுதான் இங்கே உள்ள பேச்சு.

இதனை நூலின் முடிவில் படியுங்கள்.

நெல்லை மாவட்டத்தில் உள்ள பல மழலையர் பள்ளிகள் ஒரே மாதிரியான வேண்டுகோள் படிவத்தை அச்சிட்டு எங்களுக்கு அனுப்பி வைத்தன. அவர்களுடைய வேண்டுகோள்கள் தான் யாவை? பார்ப்போமே!

''மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம். தமிழகத்தில் நர்சரி & பிரைமரிப் பள்ளிகளில் மட்டும் மூன்றில் இரண்டு பாடங்களை தமிழில் கற்பிக்க வேண்டும் என்ற அரசு ஆணையை அறிந்தோம். இந்த அரசு ஆணையால் எங்களுக்கு ஏற்பட்டுள்ள ஐயங்களையும், அச்சங்களையும் தங்களுக்குத் தெரிவித்து இந்த அரசாணையை மறு பரிசீலனை செய்யவும் வேண்டுகிறோம்.

1. தமிழகத்தில் பிறந்த குழந்தைகளில் நர்சரி & பிரைமரிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மட்டும் தமிழ் வழி கல்வி அவசியம். ஆனால், மெட்ரிகுலேசன் பள்ளியிலும், பிறவகை ஆங்கில வழி பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களுக்கு தமிழ் வழிக் கல்வி அவசியமில்லை என்று அரசு கருதுவது ஏன்?

2. பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள, கிராமப்புற பொதுமக்கள் தேர்ந்தெடுத்துள்ள நர்சரி & பிரைமரிப் பள்ளியை அரசு மாற்ற நினைப்பது மேற்கூறிய மக்களின் எண்ணத்திற்கு மாறான செயல் அல்லவா?

3. நர்சரி & பிரைமரிப் பள்ளிகளை நடத்துவோர் யார்? வேலை பார்க்கும் ஆசிரியர்கள் யார் யார்? அரசு வேலை தரும் என்று நம்பியிருக்கும் படித்த வேலையில்லாப் பட்டதாரிகள் என்பதுதான் இரு கேள்விகளுக்குமுள்ள ஒரே பதில்.

4. எந்த ஒரு அரசு மான்யமும் பெறாமல் சுயமாகவும், சுயதொழிலாகவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு போக்கும்

வகையில் அமையப் பெற்ற எங்கள் நர்சரி & பிரைமரிப் பள்ளிகளில் திடீரென்று அரசு அதன் அடிப்படை உருவை மாற்றி இப்பள்ளிகளை சீர்குலைக்க நினைப்பது ஏன்?

5. இந்த அரசாணை உடனே அமுலுக்கு வருகிறது. இந்த ஆண்டு மூன்றாம், நான்காம் வகுப்புகளில் ஆங்கில வழி கற்றுவரும் எங்கள் பள்ளி மாணவர்கள் திடீரென்று இரு பாடங்களுக்கு தமிழில் மாறவேண்டும். இம்மாணவர்கள் செய்த பாவம் என்ன?

6. நர்சரி & பிரைமரிப் பள்ளிகளில் மட்டும் ஐந்தாவது வகுப்பு வரை சில பாடங்களைத் தமிழிலும், சில பாடங்களை ஆங்கிலத்திலும் கற்கும் மாணவர்கள் உருவாகின்றார்கள். தொடர்ந்து +2 (மேல் நிலை வகுப்பு) வரை இதே நிலையில் இவர்கள் கற்க அரசின் ஏற்பாடு என்ன?

எதிலும் போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தமான இக்காலத்தில்,

இவர்கள் அரசால் நடத்தப்பெறும் தமிழ்வழி பள்ளிகளுக்குச் சென்றால், அம்மாணவர்களோடு போட்டியிடமுடியுமா? அவர்கள் எல்லாப் பாடங்களையும் தமிழ்வழிக் கற்றவர்கள். இவர்களோ சில பாடங்களை ஆங்கில வழி கற்றவர்கள்,

மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்குக் கற்கச் சென்றால் அங்குள்ள மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் ஆங்கில வழி கற்றவர்கள். இவர்களோ சில பாடங்களை தமிழ் வழி கற்றவர்கள்.

இந்த மாணவர்களை மட்டும் திரிசங்கு சொர்க்கத்தில் மாட்டிவிட நினைப்பது நியாயம்தானா?

தமிழ்மொழி வளர்ச்சிக்காக இவ்வரசாணை என்றால், தமிழகத்தின் அனைத்துப் பள்ளிகளுக்கும் இந்த அரசாணை பொருந்தும் என்றால் நாங்களும் மனமுவந்து இதை வரவேற்கிறோம். ஆனால் தமிழுக்கு முக்கியத்துவம் தந்து கற்பித்து வரும் எம் பள்ளிகளுக்கு மட்டும் பொருந்தும் என்பது தமிழ் வளர்ச்சிக்கல்ல. எம் பள்ளிகளை, அதை நடத்தும் வசதியற்றவர்களை, அதில் பணியாற்றும் வசதியற்றவர்களை, அதில் பயிலும் வசதியற்ற குழந்தைகளை என்று ஒரு பெரும் சமூகத்தையே பாதிப்புக்குள்ளாக்கி, மெட்ரிகுலேசன் பள்ளிகள் மற்றும் பிற ஆங்கில வழி பள்ளிகளை மேலும் பெருக்கி நாளடைவில் முற்றிலுமாக தமிழ்மொழியை அழியச் செய்யும் முயற்சியாக அமைந்துவிடக்கூடாது என்று அஞ்சுகிறோம்.

தயவு செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எங்கள் அச்சங்களையும், உணர்வுகளையும், கருத்துக்களையும், கவலைகளையும் பகிர்ந்து கொண்டு ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட ஆணையை மறுபரிசீலனை செய்து நியாயம் வழங்க வேண்டுகிறோம்.

இவர்கள் தங்கள் விண்ணப்பத்தில் எப்படிக் குழப்புகிறார்கள் பாருங்கள்.

''இவர்கள் அரசால் நடத்தப்பெறும் தமிழ்வழி பள்ளிகளுக்குச் சென்றால், அம்மாணவர்களோடு போட்டியிடமுடியுமா? அவர்கள் எல்லாப் பாடங்களையும் தமிழ்வழிக் கற்றவர்கள். இவர்களோ சில பாடங்களை ஆங்கில வழி கற்றவர்கள்,

மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்குக் கற்கச் சென்றால் அங்குள்ள மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் ஆங்கில வழி கற்றவர்கள். இவர்களோ சில பாடங்களை தமிழ் வழி கற்றவர்கள்.

இந்த மாணவர்களை மட்டும் திரிசங்கு சொர்க்கத்தில் மாட்டிவிட நினைப்பது நியாயம்தானா?''

அரசுப் பள்ளிகளுக்குப் போனாலும் இவர்கள் இடர்ப்படுவார்களாம்; மெட்ரிகுலேசன் பள்ளிகட்குப் போனாலும் இவர்கள் இடர்ப்படுவார்களாம்; அப்படியானால் இவர்கள் என்ன செய்யப்போகிறார்களாம்? அ.கி.வே. கூறியதுபோல் கடைசியில் 1.5 இலட்சம்பேர் கல்லூரிக்குப் போகப்போகிறார்கள். இடையில் நின்றுபோகும் 16.12. இலட்சம் பேருக்காக இவர்கள் எப்படி உருகுகிறார்கள் பாருங்கள். இவர்களாவது ஒரு தீர்வு சொல்ல முடியுமா? சொல்லட்டும் பார்க்கலாம்.

''ஆனால் தமிழுக்கு முக்கியத்துவம் தந்து கற்பித்து வரும் எம் பள்ளிகளுக்கு மட்டும் பொருந்தும் என்பது தமிழ் வளர்ச்சிக்கல்ல''

தமிழ்வழிக் கல்வி - தமிழக அரசு ஆணை செல்லும் (13.1.99) வழக்கு

''தமிழகம் முழுவதும் உள்ள நர்சரி பள்ளிகளில் கணிதம், அறிவியல், வரலாறு மற்றும் புவியியல் ஆகிய 3 பாடங்களில் இரண்டு பாடங்களை தமிழ் மொழி வழியாக கற்று கொடுக்க வேண்டும் இல்லாவிட்டால் அங்கீகாரம் தரப்படமாட்டாது என்று தமிழக அரசு 13.1.99 அன்று அரசாணை வெளியிட்டது. இதை ரத்து செய்யக்கோரி மதுரை ஆங்கில பள்ளி உள்பட ஏராளமான நர்சரி பள்ளிகள் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது.

அதில் நர்சரி பள்ளிகளில் மட்டும் தமிழ் வழியில் பாடங்களை கற்று கொடுக்க வேண்டும் என்று அரசாணை பிறப்பித்தது சட்டவிரோதமானது. இதை ரத்து செய்யவேண்டும், மெட்ரிகுலேசன் பள்ளிகளை விட்டு விட்டு நர்சரி பள்ளிகளில் மட்டும் அமுல் படுத்துவது தவறானது எதேச்சதிகாரமானது என்று கூறி இருந்தனர்.

வாதம்

இந்த வழக்கு நீதிபதி எஸ். சண்முகம் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது சில நர்சரி பள்ளிகள் சார்பாக மூத்த வக்கீல் கே. துரைசாமி ஆஜராகி நர்சரி பள்ளிகளில் படிக்கும் மாணவர்களில் சிலரின் தாய்மொழி தெலுங்கு, இந்தி ஆக உள்ளது. இந்த மாணவர்கள் தமிழ் வழியாக பாடங்களை படித்தால் பாதிக்கப்படுவார்கள், அவர்கள் வேறு மாநில பள்ளிகளுக்கு இடமாற்றம் செய்து செல்லும்போது பாதிக்கப்படுவார்கள். எனவே இந்த அரசாணையை ரத்து செய்ய வேண்டும் என்று கூறினார். அரசு தரப்பில் கூடுதல் அட்வகேட் ஜெனரல் ராஜகோபாலன் ஆஜராகி, அரசாணையை ரத்து செய்யக் கூடாது, இந்த விஷயத்தில் தமிழக அரசு கொள்கை முடிவு எடுத்து உள்ளது. எனவே, அரசாணை பிறப்பிக்க அரசியல் சட்டம் பிரிவு 162, 350-ன் கீழ் அதிகாரம் உள்ளது. இதில் தவறு இல்லை. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறினார்.

தீர்ப்பு

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி சண்முகம் வழக்குகளை தள்ளுபடி செய்து தீர்ப்பு கூறினார். நீதிபதி தீர்ப்பில் கூறி இருப்பதாவது.

''ஆரம்பப் பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக அறிவிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது. அரசியல் சட்டத்தின் 350-வது பிரிவு இதற்கான அதிகாரத்தை மாநில அரசுகளுக்கு வழங்கியுள்ளது.

இது தவிர 1892-ம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ள கல்வித்துறையின் விதிமுறைகளும், மாநில மொழியில்தான் பயிற்று மொழி இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. பயிற்று மொழி குறித்துத் தமிழக அரசு எடுத்துள்ள கொள்கை முடிவு தவறு என்று கூற முடியாது.

ஏனெனில் மாணவர்களின் அறிவுத் திறமையைத் தாய் மொழி மூலமாகத்தான் வெளிக்கொண்டு வரமுடியும். குழந்தைகளின் அறிவு வளர்ச்சியில் பயிற்று மொழி முக்கியப் பங்காற்றுகிறது.

எனவே தான் தாய்மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று கல்வித்துறையின் விதிமுறைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பல்வேறு உயர் நீதிமன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றத்திலும் இது குறித்துத் தீர்ப்பு வெளியாகியுள்ளது. இந்நிலையில் தமிழக அரசின் உத்தரவு சட்ட விரோதம் என்று கூற முடியாது.

மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு இந்த உத்தரவு வழங்கப்படவில்லை. எனவே இது பாரபட்சமான உத்தரவு என்று மனுதாரர்கள் சார்பில் வாதிடப்பட்டது. ஆனால் இந்த உத்தரவு படிப்படியாக மற்ற பள்ளிகளிலும் செயல்படுத்தப்படும் என்று அரசுத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. தற்போது 2000 மெட்ரிகுலேசன் பள்ளிகள் மட்டுமே உள்ளன. ஆனால் 35,000 நர்சரி மற்றும் ஆரம்பப் பள்ளிகள் உள்ளன. இப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் பின்னர் அரசுப் பள்ளிகளில் சேருகின்றனர். அங்கு தமிழில் பயிற்றுவிக்கப்படுகிறது.

ஆங்கிலத்தில் பயிற்றுவித்தால் தான், கல்வித்தரம் உயரும் என்று கூறுவது சரியல்ல. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்காக ஏராளமான பணத்தை அரசாங்கம் செலவிடுகிறது. இதை இப்பள்ளிகள் சரியாகப் பயன்படுத்தி, தனியார் பள்ளிகளைப் போல கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்றார் நீதிபதி.'' (தினமணி 12.6.99)

13.1.99 இல் தமிழக அரசு பிறப்பித்த அரசாணை செல்லும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வந்துவிட்டது. 12.6.99 அன்று இதுதான் நிலை.

இதுவே ஒரு நிறைவான நிலைதான். தமிழ்நாட்டில் பதிவுபெற்ற மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் 2100 மட்டுமே. இவை அனைத்தும் தமிழில் இரண்டு பாடங்களைச் சொல்லிக் கொடுக்கத் தொடங்கியிருக்கும்.

தீர்ப்பிலேயே தெளிவாக உள்ளது. படிப்படியாக மெட்ரிகுலேசன் பள்ளிகட்கும் இது விரிவு படுத்தப்படும் என்று.

எனவே இனிமேல் புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுமதி அளிப்பதில்லை என்று அரசு -அரசு கிடக்கட்டும் - கல்வித்துறை - துறை கிடக்கட்டும் - இனமானப் பேராசிரியர் அன்பழகன் முடிவெடுத்திருந்தாலே போதும்.

ஓராண்டு கழித்தாவது மெட்ரிகுலேசன் பள்ளிகளிலும் இதே நிலையைக் கொண்டுவந்திருக்க முடியும்.

அதன்பின் படிப்படியாக 3 ஆம் பாகத்தில் (Part III) உள்ள பாடங்கள் அனைத்தையும் தமிழில் கொண்டு வந்திருக்க முடியும். ஆனால் நடந்தது என்ன?

13.1.99 இல் அரசாணை பிறப்பித்த பின் ஆங்கில மழலையர் பள்ளிகளில் அதனைக் கொண்டு வருவதில் கவனம் செலுத்தவில்லை அன்பழகன். ஆனால் வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போதே, மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடங்குவதற்கு வேகம் வேகமாக அனுமதி வழங்கிக் கொண்டிருந்தார் அன்பழகன். அது குறித்து அடுதத இயலில் விரிவாகப் பார்ப்போம்.

இப்படிப் பச்சைத் தன்னலத்தோடு, தமிழுக்கு எதிரான ஆங்கிலவழி மெட்ரிகுலேசன் பள்ளிகளை வேகம் வேகமாக வளர்த்துவிட்ட காரணத்தால் திராவிட இயக்கத்தின் தொடக்க காலத்திலிருந்து அனைத்தையும் தெளிவாக அறிந்தவரும், தானே பங்குபெற்று உழைத்தவருமான அன்பழகன் தமிழுக்கு மாபெரும் துரோகத்தைச் செய்துவிட்டார் என்றே பகிரங்கமாகக் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

இதிலே, தமிழன்பர்கள் - தமிழறிஞர்கள் செய்த போராட்டம் சரியா என்பதையும் பார்க்கவேண்டும். அவர்களது போராட்டம் குறித்த பகுதியில் அதனையும் அலசுவோம்.

இந்த நிலையில் என் தொகுதியில் உள்ள இராசசிங்கமங்கலம் பேரூராட்சியிலிருந்து 3 மடல்கள் வந்தன. அவற்றில் உள்ள சாரத்தை அறிந்தாலேயே மழலையர் பள்ளிகளின் உண்மை உருவம் தெரிந்துவிடும்.

அந்த ஊரில் ஒரு பெரியகோயில். அதில், குடமுழுக்குச் செய்வதற்கான திருப்பணி மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் அருகில் உள்ள பெரிய இடம் ஒரு திருமண மண்டபம் கட்டுவதற்கான ஏற்பாட்டுக்காக ஒழுங்கு செய்யப்பட்டது. பழனி கோயிலிலிருந்து 25 இலட்சம் கடனாகப் பெற்று அறநிலையத்துறை சார்பில் ஒரு திருமண மண்டபம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த இடத்தில் தான் தனலட்சுமி ஆங்கிலப் பள்ளி நடைபெற்று வந்தது. அதனை அடுத்தது பேருந்து நிலையம். இதற்கும் அருகிலேயே 50 மீட்டர் தொலைவில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி.

இப்போது செய்திக்கு வருவோம். பொதுமக்கள் எனும் பெயரில் 2 பேர் கையொப்பமிட்டு எனக்கொரு விண்ணப்பம். அதில் இடம்பெற்ற கோரிக்கை இது :

''பொதுமக்கள்
தனலெட்சுமி ஆங்கிலப்பள்ளி
ஆர்.எஸ். மங்கலம்

பொருள் : இந்து அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கு ஆர்.எஸ்.மங்கலத்தில் உள்ள பொது மக்கள் எழுதிக் கொண்ட விண்ணப்பம்.

தனலெட்சுமி ஆங்கிலப்பள்ளி 1979ம் ஆண்டு தொடங்கி 1999ம் ஆண்டு வரை ஸ்ரீ கைலாசநாதர் ஆலயத்தில் வடபுறத்தில் 20 ஆண்டு காலமாக நடைபெற்று வருகிறது. இப்பள்ளியில் எல்.கே.ஜி. முதல் 5 வகுப்பு வரை முறையாக அனுமதி பெற்று (குத்தகை) 1999ம் ஆண்டு வரை பள்ளி நடைபெற்று வருகிறது. எப்பொழுதும் போல் இந்த ஆண்டும் மேற்படி பள்ளியில் சேர்த்துள்ளோம்.

14.6.99 யில் திடீர் என்று திவான் அவர்களிடம் இருந்து ந.க.எண்.அ6/880/99 ஒரு தபால் தலைமை ஆசிரியர்க்கு வந்துள்ளது. எங்கள் பிள்ளைகளுக்கு திடீர் என்று வேறு இடம் பார்க்க முடியாது. இப்பள்ளியில் படிக்கும் பிள்ளைகளின் வாழ்க்கை பிரச்சனை ஆகும். மேற்படி காரணங்களை கருத்தில் கொண்டு பள்ளியை காலி செய்யாமல் இருப்பதற்கு நடவடிக்கையும் மேற்படி பள்ளி நடை பெறுவதற்கு தகுதியான இடத்தை ஒதுக்கி தருமாறு பெற்றோர்களாகிய நாங்கள் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.'' (மடலில் பல பிழைகள்)

திருமண மண்டபம் கட்டுவதற்கான இடத்தைக் காலி செய்யுமாறு திவான் எழுதுகிறார். அதற்குத்தான் மேற்கண்ட கோரிக்கை.

இந்தப் பள்ளியை நடத்திவரும் லூர்து மேரியின் விண்ணப்பம் இது. (17.6.99)

''கடந்த 20 வருட காலமாக அ/மி ஸ்ரீ கைலாசநாதர் ஆலய திருக்கோவிலுக்குப் பாத்தியப்பட்ட இடத்தில் பள்ளி நடத்திக் கொண்டு வருகிறோம். இப்பள்ளி நடத்தி வரும் அம்மாவுக்கு எந்த விதத்திலும் இந்த பள்ளியிலிருந்து பணம் கொடுப்பது இல்லை.

இப்பள்ளியில் எல்லா பொறுப்பையும் பார்த்துக் கொள்ளும் திருமதி. லூர்துமேரியாகிய நான் கணவரால் கைவிடப்பட்டவள். மூன்று குழந்தைகள் உள்ளன. இங்கு வேலை பார்க்கும் ஆயா கணவர் இறந்துவிட்டார். மற்ற

ஆசிரியர்கள் வேலையில் இல்லாதவர்கள் இப்பள்ளியை வைத்து தான் நாங்கள் பிழைத்து வருகிறோம். வேறு இடம் பார்க்கவருமானமும் வசதியும் கிடையாது. அதன் காரணமாக குத்தகையை புதுப்பித்து தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் நினைத்தால் தான் எங்களுக்கு உதவி செய்ய முடியும்.''

தெளிவாகக் கவனியுங்கள். 'இந்தப் பள்ளியை வைத்துத்தான் நாங்கள் பிழைத்து வருகிறோம்' என்று கூறியுள்ளார். அவர்களுக்காக நான் இரக்கப்படுகிறேன். ஆனால் அவர்களது கோரிக்கையினை நிறைவேற்ற முடியாதே! நல்ல திருமண மண்டபமே இல்லாத அந்த ஊருக்கு ஒரு திருமண மண்டபம் தேவையா இல்லையா? தங்கள் பிழைப்புக்காகக் கெஞ்சும் இவர்கள் இதை ஏன் எண்ணிப் பார்க்கவில்லை? மேலும் 50 மீட்டர் தொலைவில் பக்கத்திலேயே அரசுப் பள்ளியிருந்தும் விதிமுறைக்கு மாறாக நடத்தப்படும் பள்ளி இது. 12.6.99 அன்று நீதிமன்றத் தீர்ப்பு வந்தது குறித்தோ, 13.1.99 அன்று அரசுப் பிறப்பித்த ஆணை குறித்தோ, இவர்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. ஆனால் இவர்கள் பிழைப்பு நடக்கவேண்டும் அவ்வளவுதான்.

இப்பள்ளியில் பணியாற்றும் ஏழு பெண்களும் ஒரு விண்ணப்பம் தருகிறார்கள். இடத்தைக் காலி செய்திட வேண்டாம் என்பதுதான் அவர்கள் கோரிக்கை.

இவ்வளவு விளக்கமாக இந்த ஆதாரங்களை வெளியிடக் காரணம் திருப்பத்துார் அன்னை வேளாங்கண்ணி பள்ளியும் சரி, இந்தப் பள்ளியும் சரி எல்லாம் வேலையில்லாத பல பேருக்காக உருவாக்கப்பட்டவை; பயிற்சியே பெறாதவர்களால் நடத்தப்படுபவை; ஆங்கிலக் கல்வி எனும் 'மிட்டாய்' காட்டிக் குழந்தைகளை ஈர்ப்பவை. இந்த இரண்டு பள்ளிகளுமே அரசின் ஏற்பினைப் பெற முடியாதவை. அதற்கான நிபந்தனைகளை நிறைவு செய்ய முடியாதவை. '37அ' எனும் விதிக்கு ஆண்டுதோறும் விதிவிலக்குப் பெற்றுவிட முடியும் எனும் நம்பிக்கையில் நடப்பவை. 'தனிப்படிப்பு' எனும் சலுகையைப் பயன்படுத்தி வாழ்ந்து வருபவை.

1998 நவம்பரில் அரசு தன் மொழிக்கொள்கையை அறிவித்தது. மழலையர் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பாகம் 3 இல் உள்ள பாடங்களில் மூன்றில் இரண்டு பாடங்களைத் தமிழில் நடத்தவேண்டும் என்பது அரசின் அறிவிப்பு.

இதனையொட்டி தமிழ்நாடு மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளின் சங்கம் எங்களுக்கு ஒரு மடலை எழுதியது. 8.12.98 இல் எழுதப்பட்ட மடல் அது. அதில்

''தாங்கள் 16.11.98 அன்று அறிவித்த மழலையர் பள்ளிகளில் தமிழ் வழியில் எல்லா பாடங்களையும் போதிக்க வேண்டும் என்பது குறித்து மறு ஆய்வு செய்து ரத்து செய்ய வேணுமாய் வேண்டுகிறோம். மேலும் தாங்கள் அறிவித்துள்ள அங்கீகரிக்கப்படாத பள்ளிகள் குறித்து, 37-அ அரசு அங்கீகாரம் பெறாத பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள், அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளியில் இனிவரும் கல்வி ஆண்டிலிருந்து சேர்க்க மாட்டார்கள் என்ற அறிவிப்பினை வரவேற்கிறோம். அரசுக்கு உறுதுணையாக நிற்போம் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று எழுதிவிட்டு, அப்பள்ளிகள் குறித்த அவர்களது கருத்துகளைப் பட்டியலிட்டிருக்கிறார்கள். அவை,

1. மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் அரசு நிதி உதவி பெறாத சுயநிதி ஆங்கில பள்ளிகள், ஆகும்.

2. அரசு எல்.கே.ஜீ. முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஆங்கில மீடியத்தில் பள்ளிகள் நடத்துவது கிடையாது. அக்குறையை நாங்கள் போக்கியுள்ளோம். இதனால் அரசிற்கு ஆண்டு தோறும் 250 கோடி மிச்சமாகின்றது.

3. எங்கள் பள்ளிகளில் தமிழ் ஒரு பாடம் கட்டாய பாடமாக போதிக்கப்படுகின்றது. மேலும் தமிழ் பாட்டுகள், தமிழ் அறநெறி போதிக்கின்றோம்.

4. பெற்றோர்கள் எந்தவிதமான கல்வி தங்கள் குழந்தைகளுக்கு போதிக்க வேண்டுமென்று விரும்புகின்றார்களோ அத்தகைய பள்ளிகளுக்கு அவர்கள் தேர்வு செய்து அனுப்புகிறார்கள். அத்தகைய பெற்றோர்கள் தமிழ் மொழியில் பயில வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் உரிமை அரசுக்கோ, பள்ளிகளுக்கோ கிடையாது. பெற்றோர்களின் உரிமைகளில் நாங்கள் தலையிடவும் முடியாது. அரசுக்கு ஆதரவாக வாக்களித்த பெற்றோர்கள் விருப்பத்திற்கு மாறாக நடக்கக் கூடாது.

5. அரசிடம் மழலையர் பள்ளிகள் அங்கீகாரம் வாங்கும்போது தமிழ் ஒரு பாடமாக கட்டாயமாக போதிக்கின்றோம் என்று உறுதி அளித்து அதன் அடிப்படையில் தமிழில் போதிக்கின்றோம். சிறுபான்மையினர் தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி போன்ற மாணவ, மாணவியருக்கு அவர்கள் தாய்மொழியுடன் தமிழையும் போதிக்கின்றோம். அரசிற்கு பதிவுக்கட்டணமாக ஆண்டு ஒன்றிற்கு 16 இலட்சம் ரூபாய் செலுத்துகின்றோம்.

6. மற்ற மாநிலங்களில் தாய்மொழியை ஒரு பாடமாக கட்டாயம் கற்பிக்க வேண்டும் என்று தான் சட்டம் உள்ளது. ஆங்கில வழி போதனை பள்ளிகளாக

இருந்தாலும், இந்தி வழியில் பயிலும் மாணவர்களாக இருந்தாலும் தாய் மொழி ஒரு பாடமாக கற்பிக்க வேண்டும் என்று உள்ளது.

7. அரசிடம் அங்கீகாரம் பெற்று மூவாயிரம் பள்ளிகள் இயங்குகின்றன. இதில் தமிழ் ஓர் பாடம் கட்டாயம் போதிக்கப்படுகின்றது. அரசு அங்கீகாரம் பெறாமல் ஏறக்குறைய பன்னிரெண்டாயிரம் பள்ளிகள் இயங்குகின்றன. இப்பள்ளிகளில் 10 இலட்சம் மாணவ, மாணவிகள் பயிலுகின்றனர். 2 இலட்சம் ஆசிரியர்கள் பணிபுரிகின்றார்கள்.

8. தமிழ் நாட்டில் அரசு உள்ளாட்சி அமைப்புகள், மாநகராட்சி, அரசு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் நாற்பதாயிரம் பள்ளிகள் நடைபெறுகின்றன. இவைகள் அனைத்திலும் தமிழ் வழிக் கல்வி கற்பிக்கப்படுகின்றது. அப்பள்ளிகளில் போதுமான அளவு மாணவ, மாணவிகள் சேர்க்கை கிடையாது. மேலும், நாங்கள் தமிழ் வழிக் கல்வியை தொடங்கினால் பள்ளிகளை மூட வேண்டிய நிலைமை ஏற்படும். காரணம் நாங்கள் கட்டணம் வசூலிக்கின்றோம். அரசு நிதி உதவி கிடையாது. மேலே குறிப்பிட்ட பள்ளிகளில் இலவசக் கல்வியை அரசு தருகின்றது.

9. வாரப்பத்திரிகைகள் குமுதம், ஆனந்த விகடன், குங்குமம் போன்ற பத்திரிகைகள் தமிழை ஒரு பாடமாக மழலையர் பள்ளிகளில் கட்டாயம் போதிக்க வேண்டும் என்று எழுதியுள்ளன. நாங்களும் அவ்வாறே செய்கின்றோம்.

10. தமிழகத்தில் உள்ள V.I.P. -க்களின் பிள்ளைகள் எல்லோரும் ஆங்கில வழிப் பள்ளிகளில் பயில்கின்றார்கள். இதை INDIAN EXPRESS பட்டியல் போட்டு காட்டியுள்ளது. வேலை வாய்ப்புகளுக்கு வெளி நாட்டிலோ அல்லது வெளி மாநிலத்திற்கோ செல்ல வேண்டுமானால் ஆங்கில வழிக் கல்வியில் படித்தால்தான் செல்லமுடியும்.

11. ஏற்கனவே உள்ள விதிகள் 37(அ)ன் படி அரசின் ஏற்பு பெறாதப் பள்ளிகளில் கல்வி பயிலும் குழந்தைகள் அரசு ஏற்பு பெற்ற பள்ளிகளில் சேர்க்கக் கூடாது என உள்ளது. இந்த விதியில் எந்த வகையான தளர்வும் செய்யாமல் தொடர்ந்து கடைபிடிக்கப்படும். 1.1.98 அன்று வெளியிட்ட விளம்பரத்தின் அடிப்படையில் தமிழகத்தில் அரசின் ஒப்புதல் பெறாத மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் தொடர்ந்து இயக்குவதை அரசு அனுமதிக்காது, இதனை வரவேற்கின்றோம்.

12. தமிழக அரசு 1968 அரசு ஆணைக்கு தமிழில்தான் பயில வேண்டுமென்ற அறிவிப்பு எதிரானது. கர்நாடக உயர் நீதி மன்றமும், டெல்லி

உச்சநீதிமன்றமும் பெற்றோர்களே தங்களுடைய பிள்ளைகளுக்கு இந்த மொழியில் தான் பயிலவேண்டுமென்று கட்டாயப்படுத்தக் கூடாது என்று தீர்ப்பளித்துள்ளது.

இவர்கள் வெறுமனே கோரிக்கை வைப்பதோடு நிற்கவில்லை. இதுபோன்ற பள்ளிகளை நடத்துபவர்கள் எல்லாருமே தி.மு.க.வை ஆதரித்து வாக்களித்ததாகவும், மேலும் இப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவரும் சேர்ந்துதான் இந்த அரசைக் கொண்டு வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். இல்லை, இல்லை, குறிப்பிட்டு மிரட்டிப் பார்க்கிறார்கள்.

''அரசுக்கு ஆதரவாக வாக்களித்த பெற்றோர்கள் விருப்பத்திற்கு மாறாக நடக்கக் கூடாது'' என்றும்

''இவ்வரசு அமைவதற்கு நாங்கள் உறுதுணையாக இருந்தவர்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்'' என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

அப்படியானால் 1996 வரை ஆட்சியிலிருந்த அ.தி.மு.க. வை எதிர்த்து வாக்களித்துள்ளார்கள் என்றுதானே பொருள்! அ.தி.மு.க. அரசு ஒழிந்து, தி.மு.க. அரசு அமைவதற்கு உறுதுணையாக இருந்தார்கள் என்றுதானே பொருள்!

இது உண்மைதானா? மற்றோர் இடத்தில் பார்ப்போம். மேலும் 2001இல் அ.தி.மு.க.வுக்கு வாக்களித்து, தி.மு.க. ஆட்சியை ஒழித்தவர்கள் இவர்தானா?

அரசுக்கு உருபா 250/- கோடி மிச்சப்படுத்தித் தருகிறார்களாம். அப்படியானால் மழலையர் பள்ளிகளில் எவ்வளவு பணப்புழக்கம் இருக்கிறது - இருந்திருக்கும் என்பதை எண்ணிப்பார்க்கவும். அரசியல் சட்டத்தின் 45 ஆவது பிரிவையே தூக்கிச் சாப்பிட வழி வகுத்தவர்கள் இவர்கள். அவர்கள் சொல்கிறார்கள் ''அத்தகைய பெற்றோர்கள் . . . . கிடையாது'' என்று.

அரசிடம் ஏற்புப்பெற்ற பள்ளிகள் 3000 என்கிறார்கள். இதுவே தவறு. ஏற்புப்பெற்ற பள்ளிகளின் பட்டியலை முன் பக்கத்தில் பார்க்கிறீர்கள். 2100தான் இதுவரை ஏற்புப் பெற்றவை. 3000 என்று 'அள்ளி விடுகிறார்கள்'.

இதே சங்கத்தினர் தமிழ்நாட்டில் 25000 - 2100 = 22900 மழலையர் பள்ளிகள் இயங்குவதாக மற்றோர் இடத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். இங்கே 12000 பள்ளிகள் இயங்குவதாகக் குறிப்பிடுகிறார்கள். ஒரே ஆண்டுக்குள் இந்தப்புள்ளி விவரம் மாறுவது ஏன்! இத்தனை பள்ளிகள் குறைவது ஏன்!

இந்தச் சங்கத்துக்காரர்களுக்கு உண்மையான கணக்காவது தெரியுமா? இப்படி முன்னுக்குப்பின் முரணாக 'கப்சா' விடுவது ஒரு சங்கத்துக்கு அழகா?

10 இலட்சம் மாணவர்களாம்; 2 இலட்சம் ஆசிரியர்களாம். ''நாங்கள் தமிழ் வழிக் கல்வியைத் தொடங்கினால் பள்ளிகளை மூடவேண்டிய நிலை ஏற்படும்'' என்கிறார்கள். ஆங்கில வழியில் 'நடத்தினால் பணம் தண்ட முடியும். தமிழ் வழியில் நடத்தினால் காசு சேராது' என்ற கொள்கையை வெளிப்படையாகவே சொல்லி விடலாமே!

இவற்றையெல்லாம் மனத்தில்வைத்துக் கொள்ளுங்கள்.

வேறுபட்ட ஒரு மடல். சரியான கோரிக்கை. அதனை அப்படியே தருகிறேன்.

''விடுநர்

தாளாளர்
அன்னைத் தமிழ்ப் பள்ளி
மதர் சர்வ் கல்வி நிறுவனம்
கருடசேவை மண்டபம் (ப.உ.ச. நகர்)
திருப்பத்தூர் - 635 601
வேலூர் மாவட்டம்

பெருமதிப்பிற்குரிய அய்யா

பொருள் மழலையர் பள்ளிக்கு வழங்கிய அங்கீகாரத்தை (அரசு அனுமதி எண்.503/93) தமிழ் வழியிலாக போதிக்க அனுமதி(ஆணை) மாற்றி வழங்குவது - சார்பு.

- - -

திருப்பத்தூர் வீட்டு வசதி குடியிருப்பு பகுதிக்கு அருகாமையில் உள்ள கருடசேர்வை மண்டப பகுதியில் (ப.உ.ச. நகர்) சுமார் 50 சென்ட் நிலத்தில் தமிழ்ப்பள்ளி ஒன்று நடத்தி வருகின்றோம். இப்பள்ளியில் 75 மாணவர்கள் (1-ஆம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு) வரை பயில வருகின்றனர். இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் பெரும்பாலும் ஏழை மாணவர்கள். எனவே, சுயநிதி ஏற்பாட்டின் கீழ் இந்த பள்ளியை நிர்வகித்து வருகின்றோம்.

மேலும், திருப்பத்தூர் வீட்டு வசதி வாரியம் குடி இருப்பு பகுதி-1-இல் மதர் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி என்ற மழலையர் பள்ளியை கடந்த 5

ஆண்டுகளாக நிர்வகித்து வருகின்றோம். மழலையர் பள்ளிக்காக அரசு அனுமதி எண்.503/93 இல் பெற்றுள்ளோம்.

ஆங்கில வழியிலான மதர் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியை தமிழ் வழியில் போதிக்கும் பள்ளியாக மாற்றிக் கொள்ளத் தீர்மானித்துள்ளோம். அவ்வாறு ஏற்கனவே இப்பள்ளிக்கு நாங்கள் பெற்றுள்ள அனுமதியினை (எண்.503/93) கொண்டே, தமிழ் வழி பள்ளியாக மாற்றிக் கொள்ள எங்களுக்கு அரசு விதிமுறைகள் அனுமதிக்குமா? - - என்பதையும் - - குறிப்பாக தமிழ்வழியில் போதிக்க அரசு தீவிரமாக எடுக்கும் கொள்கை முடிவுக்கு நாங்கள் கட்டுப்பட்டு, எங்கள் பள்ளியினை தமிழ்வழி பள்ளியாக மாற்றிக்கொள்ள விரும்புகின்றோம் என்ற தகவலைத் தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.''

பள்ளிக்கல்வித்துறை உடனே என்ன செய்திருக்கவேண்டும்? தொடக்கக் கல்வி அலுவலர்க்கு எழுதி, பார்வையிட்டு அறிக்கை தரச் சொல்லிவிட்டு, அதற்கு முறையான ஏற்பு வழங்கியிருக்கலாம்; அல்லது இன்னும் சில வசதிகள் செய்யப்பட வேண்டும் என்று கூறிவிட்டு, 'ஆனால் அனைத்து வகுப்புகளையும் தமிழ் வழியில் நடத்துவதற்கு இசைவு வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கலாம். அல்லது தமிழ் வழியில் நடத்துவதற்கு எங்களுக்கு மறுப்பேதும் (ஆட்சேபனை) இல்லை என்று தெரிவித்திருக்கலாம்.

நானும் கல்வி அமைச்சர்க்கு இந்த மடலின் படியை அனுப்பியிருந்தேன். ஆனால் நடந்தது என்ன? எதுவும் நடக்கவில்லை. அன்பழகன் எதுவும் செய்யவில்லை.

மழலையர் பள்ளிகளின் வேண்டுதல்கள், மிஞ்சல், மிரட்டல், கொண்டாட்டம்

1996 இல் ஆட்சிக்கு வந்தவுடனேயே மழலையர் பள்ளிகளை ஒழுங்கு செய்யவேண்டும் எனும் எண்ணம் எல்லாருக்கும் இருந்தது. நானும் கல்வி அமைச்சருடன் பேசியிருக்கிறேன். கல்வி அமைச்சரும் அதைச் செய்யவேண்டுமென்றே விரும்பி முனைந்தார். எனவே ஓர் ஆறுமாத காலம் நல்ல திசை நோக்கித்தான் போனோம்.

தமிழ்நாடு மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் சங்கத்தின் தலைவர், பொதுச் செயலாளர் எனக்கெழுதிய மடலைப் படித்தாலே 'கல்வித்துறை' எவ்வளவு கடுமையான நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது என்பது தெளிவாகிவிடும்.

16.12. 96 அன்று அவர்கள் எழுதுகிறார்கள்.

''1991 முதல் நர்சரி மற்றும் ப்ரைமரி பள்ளிகளுக்கு அப்ருவல் வருடந்தோறும் புதுப்பித்து வழங்கப்படுகிறது. பெரும்பான்மையான அப்ருவல் பெற்ற பள்ளிகள் மூன்று முறை புதுப்பித்தல் (ரினிவல்) பெற்றுள்ளன. நான்காம் முறை புதுப்பித்தலுக்கு விண்ணப்பித்துள்ள கழக அரசு ஆட்சி பொறுப்பு ஏற்ற பிறகு புதுப்பித்தலை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பள்ளி நிர்வாகிகளிடம் கலக்கம் உள்ளது. மேலும் இயக்குநர் அவர்கள் புதுப்பித்தல் வழங்காமையால் பள்ளியை விட்டு வெளி மாநிலங்களுக்கும், மேல் வகுப்பிற்கு செல்லும் மாணவ மாணவிகளுக்கு டி.சி. வழங்க இயலவில்லை. மேலும் டி.சி.யில் டி.இ.இ.ஒ., மற்றும் ஏ.இ.ஒ. அவர்களும் கவுண்டர் கையெழுத்து போடுவது கிடையாது. மேல் வகுப்பிற்கு செல்லும் மாணவ மாணவிகளை தலைமை ஆசிரியர் சேர்ப்பதும் கிடையாது காரணம் புதுப்பித்தல் வழங்காதது தான்.

1996 திசம்பரில் இந்த நிலை; கல்வித்துறை கட்டுப்படுத்தத் தொடங்கிவிட்டது. அதனால்தான் முதல்வர், கல்வி அமைச்சர்க்கு மட்டுமின்றி, எனக்கும் எழுதியுள்ளார்கள். (27.12.1996)

'லோட்டஸ் டைனி டாட்ஸ்' எனும் நிறுவனத் தலைவர் இரமணிபாய் எழுதுவதைக் கவனியுங்கள்.

''நீண்ட காலமாக நர்சரி பள்ளி நடத்துபவர்கள் தமிழுக்குத் தீங்கிழைப்பவர்கள் என்று உங்களிடம் முறையீடுகள் அதிகரித்து வருகின்றன.

எங்களுக்குத் தேவை நர்சரி பள்ளி குழந்தைகள் வேறு மாவட்டங்களுக்குச் செல்லும் போது அவர்கள் சான்றிதழில் மாவட்டக் கல்வி அலுவலர் அவர்கள் மேலொப்பம் செய்ய வேண்டுமென்பதாகும்.

மேலும், நர்சரி பள்ளி குழந்தைகள் உயர்நிலைப்பள்ளியில் சேர பள்ளியில் வழங்கப்படும் சான்றிதழ் ஒப்புக்கொள்ள வேண்டும், என்பதாகும்.

ஆதலால், இவற்றைப் பரிசீலித்து தாங்கள் ஏதேனும் புதிய நிபந்தனை விதிக்க விரும்பினால் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று மிக்கப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நர்சரி பள்ளிகளால் தமிழ் அழிந்து விடும்; இவைகளை உடனே மூடிவிடவேண்டும், என்று கோரப்படுகிறது. தமிழ்நாட்டில் அறிந்தோ, அறியாமலோ எனக்குத் தெரிந்த மட்டில் கடந்த 30 ஆண்டுகளாக, வேலையில்லாப் பட்டதாரிகள் - குடும்பத் தலைவிகள் - விதவைகள் - வாழ்க்கையில் சறுக்கி விழுந்தவர்கள் மதச்சார்பு நிலையங்கள் - ஓய்வு பெற்ற

அரசு ஊழியர்கள், வாழ்க்கையை வளம் பெற்றதாக நடத்த பொருளாதார உயர்வு வேண்டுபவர்கள் போன்ற பல்வேறு தரப்பினரால் நர்சரி பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இது மிக முக்கியமாக வேலையில்லாப் படித்த ஆண், பெண் இருபாலாரின் பிரச்சனை.

ஒரு மாநிலத்தில் ஆட்சி மொழியைப் படித்தவர்களுக்கு, அரசு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித்தரவேண்டும். அது இல்லாத காரணத்தால் நம் நாட்டு மக்கள் வரிப் பணத்தில் படித்துவிட்டுப் பலரும் தங்கள் திறமையை வெளிநாட்டினருக்கும், வெளி நாட்டுக்கும் செலவழித்துக் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களின் குடும்பங்கள் செழிப்புடன் வாழுவதைத் தமிழ்நாட்டு மக்கள் பார்க்கின்றார்கள். இவர்கள் எப்படியாவது நம் குழந்தைகளை ஆங்கிலம் படிக்க வைத்தால் நம்முடைய எதிர்காலம் நன்றாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

தாய்மொழி என்ற பெயரில் ஒரு மொழியும், பொது மொழி என்ற பெயரில் ஆங்கிலமும் இடம் பெற்றுள்ளது. இவற்றில் **தேசிய ஒருமைப்பாடு** என்ற போர்வையில் சி.பி.எஸ்.இ. (C.B.S.E.) பள்ளிகள் தமிழ் இன்றி நடத்தப்படுகின்றன.

உதாரணத்திற்குச் சென்னையில் மட்டும் சில :

1. பத்மா சேஷாத்திரி
2. ஆசான் மெட்ரிகுலேஷன்
3. பாரத் மேல்நிலைப்பள்ளி
4. செட்டிநாடு வித்யாஷரம்

இன்னும் கல்வி இயக்குநரகத்தில் கேட்டால் கிடைக்கும். இதே போன்று சிறுபான்மையினர் என்ற போர்வையில் நடத்தப்படும் சில பள்ளிகள்.

1. ரோசாரி மேல்நிலைப்பள்ளி
2. சர்ச் பார்க் பள்ளி
3. குட்ஷெப்பர்டு பள்ளி
4. டான்பாஸ்கோ மெட்ரிகுலேசன் பள்ளி

இதுபோன்ற சென்னையில் உள்ள பள்ளிகளைப்போல், மாநிலத்தில் ஏராளமாக உள்ளன என்பது கல்வித்துறைக்குத் தெரியும். இவர்கள் மீது அரசாங்கத்தின் சட்டங்கள் பாயவில்லை.

ஆதலால், இந்திய அரசியல் சட்டம் அளித்துள்ள, மதச் சிறுபான்மையினர் மொழி சிறுபான்மையினர் என்ற சுதந்திரத்தைப்

பயன்படுத்தி நடத்தப்படும் பள்ளிகளில் அடிக்கப்படும் கொள்ளைகளை ஆட்சியினரும் முன்னேறிய ஜாதியினரும் உயர் வட்டாரத்தினரும் ஊக்குவிக்கும் முயற்சியில் தங்கள் உற்றார் உறவினர்களை அத்தகு ஆங்கிலப்பள்ளிகளில் கல்வி கற்க அனுமதித்துவிட்டு, கீழ்த்தட்டு மக்களும் நடுத்தரவர்க்கத்தினரும் தொழிலான வர்க்கத்தினரும் தங்கள் பிள்ளைகளைச் சேர்த்துப் படிக்க வைக்கும் நர்சரி பள்ளிகளின்மீது மொழிப்பற்று என்ற போர்வையில் அம்பு எய்துவது நியாயமாகாது என எண்ணுகின்றேன். எந்தக்கல்வியை எந்த மொழியைக் கற்க வேண்டும் என்று முடிவாற்றுகின்ற பெற்றோர்களின் உரிமையில் அரசு தலையிட உரிமையில்லை.

அரசாங்கத்தின் கல்வி விதிமுறைகளைப் பின்பற்றி கட்டிட உறுதிச்சான்று, சுகாதாரச்சான்று ஆகியவைகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

அப்ரூவல் வழங்கும் போது தற்சமயம் அரசு தமிழ் கட்டாயம் கற்பிக்கப்பட வேண்டும் என்று நிபந்தனையும் வழங்குகின்றனர்.

ஆதலால், யாருக்காகவும் அச்சப்பட்டு குழந்தைக் கல்வியில் விஷப்பரிட்சை வேண்டாம் என வேண்டுகின்றேன்.''

இது 1996 தொடக்கத்தில் உள்ள நிலைமை. பேரா. அன்பழகன் சரியான திசையில்தான் கொண்டு போனார்? ஆனால் பின்னால் என்ன ஆனது?

அடுத்து ஒரு நிலை :

அரசு, மழலையர் (ம) தொடக்கப்பள்ளிகளில் கணிதம், அறிவியல், சமூகவியல் ஆகிய மூன்றில் இரண்டு பாடங்களைத் தமிழில் நடத்தவேண்டுமென்று அரசாணை மூலம் (ஆணை எண்.421) தெரிவித்தது. ஆனால் மழலையர் (ம) தொடக்கப் பள்ளிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ன வேண்டுகோள் வைத்தார்கள் தெரியுமா!

கணிதம், அறிவியல் ஆகிய இருபாடங்களையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடத்திட வேண்டியுள்ளனர்.

1. தங்கள் ஆங்கில வழிப் பள்ளிகளை, பாடங்களை விட முடியவில்லை; விரும்பவில்லை.

2. அதே நேரத்தில், அரசின் ஆணைகளை மீற முடியவில்லை.

3. அவர்கள் வியாபாரமும் நடக்கவேண்டும்; தமிழுக்கு நாங்கள் எதிரிகள் அல்ல என்றும் காட்டிக் கொள்ளவேண்டும்.

அதற்காகத்தான் இந்த வேண்டுகோள்!

பி.எசி மூன்றாம் ஆண்டுவரை அனைத்துப் பாடங்களும் தமிழில் நடைபெறுவதைக் கண்ணாரக் கண்ட பின்பும் ஏன் இந்த வழுவல்!

தமிழில் மட்டுமே நடத்தினால் மாணவர்கள் சேர்வார்களா? என்ற அச்சம். அந்த நிலை நேர்ந்தால் ‘பணவருவாய்’ பாதிக்கப்படுமே என்னும் கவலை. வேறென்ன இருக்கமுடியும்?

ஒய்வு பெற்ற நல்லாசிரியர் செயராசு (துங்கச்சி மடம்) எங்கட்கெல்லாம் ஒரு மடல் எழுதியுள்ளார். அவர் கருதுவது என்ன?

‘‘இன்றைய சூழ்நிலையில் படிப்பறிவில்லாத கிராம மக்கள் முதல் பட்டணம் வரை ஈராகத் தங்கள் குழந்தைகள் ஆங்கில மீடியத்தில் படிக்க வேண்டும் என்று மோகம் கொண்டு அலைவதை தமிழ்நாட்டு மக்கள் யாவரும் மறுக்க முடியாது.’’

என்கிறார். அவர் எழுதியதை அப்படியே தந்துள்ளேன். ‘ஈறாக’ என்று வரவேண்டியதை ‘ஈராக’ என்று எழுதியுள்ளார். இவர் ஆசிரியர்; நல்லாசிரியர்.

‘ஈர்’ என்பது தலையில் ஊர்ந்திடும் பேனோடு உறவுடைய தாயிற்றே. செயராசு அறிவாரா?

கல்வி அமைச்சர் இப்போதுதான் இறுக்கிப் பிடித்து இவற்றின் மீது கவனம் செலுத்தியுள்ளார். செயராசு எழுதுகிறார்.

‘‘தமிழுக்கு முக்கியத்துவம் என்ற காரணத்தைக் காட்டிக் கொண்டு நர்சரி, துவக்கப்பள்ளி, ஆங்கிலப் பள்ளிகளின் அப்ரூவல் அங்கீகாரம் புதுப்பித்தல் முதலிய உத்தரவுகளை நிறுத்தி வைத்து இன்றுவரை மாநில இயக்குநர் அவர்களை செயல்படாது நிறுத்தி வைத்திருப்பது வருகின்ற ஜூன் மாதத்தில் குழந்தைகளை பள்ளியில் சேர்க்கும் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் பெரும் கஷ்டங்களை உண்டாக்கும் என்பதை தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.’’

இந்த இறுக்கத்தைக் கல்வி அமைச்சர் கடைசிவரை காட்டியிருந்தால் நிலைமை சீராகியிருக்கும். தவறவிட்டு விட்டாரே என்பதுதான் எங்கள் வருத்தம்.

செயராசு அரசு ஊழியராக - ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். கடைசியில் ஆங்கிலத்தில்தான் ஒப்பம்! இவர் அரசாணையைக் கடைப்பிடித்தாரா?

26.4.98அன்று மழலையர் (ம) தொடக்கப்பள்ளிகள் சங்கத்தினர் எங்கட்கு ஒரு மடல் எழுதியுள்ளனர்.

''தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்படாத மழலையர் மற்றும், தொடக்கப் பள்ளிகள் உச்ச நீதிமன்ற ஆணைப்படி இயங்க அனுமதிக்க கூடாது என்றுகேட்டுக் கொள்கின்றோம்'' என்கிறார்கள். உச்ச நீதி மன்ற ஆணைப்படி 20000 என்ற அளவிலான - அங்கீகரிக்கப் படாத மழலையர் பள்ளிகளை இயங்கவிடாமல் தடைசெய்தாரா அன்பழகன்?

கலைஞரின் 16.11.98 ஆம் நாளைய அறிவிப்புக்கும், 13.1.99 ஆம் நாளிட்ட அரசாணைக்கும் பின் மழலையர் பள்ளிகள் சங்கத்தினர் முதலமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்து ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் கருத்து

''பெற்றோர்களை தமிழ் மொழியில் பயில வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் உரிமை அரசுக்கோ, பள்ளிகளுக்கோ கிடையாது. பெற்றோர்களின் உரிமைகளில் நாங்கள் தலையிடவும் முடியாது. அரசுக்கு ஆதரவாக வாக்களித்த பெற்றோர்கள் விருப்பத்திற்கு மாறாக நடக்கக்கூடாது.

அரசிடம் அனுமதி பெற்று மூவாயிரம் பள்ளிகள் இயங்குகின்றன. இதில் தமிழ் ஒரு பாடம் கட்டாயம் போதிக்கப்படுகிறது. அரசு அனுமதி பெறாமல் ஏறக்குறைய பன்னிரெண்டாயிரம் பள்ளிகள் இயங்குகின்றன. இப் பள்ளிகளில் 10 இலட்சம் மாணவ மாணவிகள் பயிலுகின்றனர். 2லட்சம் ஆசிரியர்கள் பணிபுரிகின்றார்கள்.

எனவே முதல்வர் 16.11.98 அன்று அறிவித்த அறிவிப்பினை அதாவது மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளில் அறிவியல் தவிர மற்ற எல்லா பாடங்களையும் தமிழில் நடத்தவேண்டும் என்ற அறிவிப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும், அவ்வாணையை ரத்து செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு : முதலில் எல்லாப் பாடங்களையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடத்திட விரும்புகிறோம் - அனுமதியுங்கள் என்று கேட்டது இவர்கள்தான். இப்போது ஆணையையே இரத்துச் செய்யுங்கள் என்கிறார்கள்.

சங்கம் வைத்து நடத்துகிற விவரமான இந்தப் 'புள்ளி'கள், புள்ளி விவரங்களை எனும் பெயரில் அள்ளி விடுவது ஏன்?

1. அனுமதி பெற்ற பள்ளிகள் 3000 என்கின்றனர். ஆனால் 2100 தான் என்று நான் பட்டியலையே இதே இயலில் காட்டியிருக்கிறேன். அரசு அனுமதி பெறாத பள்ளிகள் 12000 என்கிறார். மற்றோர் இடத்தில் 25000 என்றும் வேறொரு குழுவினர் 20000 என்றும் குறிப்பிடுகின்றனர். இவற்றுள் எது உண்மை?

தொடக்க இயல்களில் நான் கொடுத்துள்ள புள்ளி விவரங்களைப் பாருங்கள். 10 இலட்சம் மாணவர்கள் பயில்கிறார்களாம். அப்படியானால் இவர்கள் சொற்படி 3000 + 12000 பள்ளிகளில் 10 இலட்சம் பேரா? வேலையில்லாத பட்டதாரிகள் + 2 முடித்தவர்கள் 2 இலட்சம் பேரா?

நூலைப் படிக்கும் தோழர்களே ஊன்றிக் கவனியுங்கள்.

மிரட்டல்

நெல்லை மாவட்ட மழலையர் (ம) தொடக்கப் பள்ளிகள் சங்கம் எப்படி மிரட்டுகிறது பாருங்கள்!

இவர்கள் பள்ளிகள் நடத்துவது மாணவ, மாணவியர்க்காக அல்ல. வேலையில்லாததால் வேலையில்லாதவர்களால் நடத்தப்படுபவை இவை.

வேலை இல்லாதவர்கள் பிறர் தலையில் மிளகாய் அரைக்க அறியாத பெற்றோர்களும், ஆங்கில மோகம் கொண்டு அலையும் தெளிவற்றவர்களும் தான் கிடைத்தார்களா?

ஆயிரக்கணக்கான வேலையில்லாப் பட்டதாரிகளுக்காகத்தான் இவர்கள் பள்ளிகள் நடத்துகிறார்கள். மாணவ, மாணவிகளின் பாதுகாப்பான, ஒழுங்கான கல்விக்காக அல்ல. அதுதான் கும்பகோணத்தில் பார்த்தோமே! பள்ளி எனும் பெயரில் ஒரு வீட்டில் மூன்று பள்ளிகள்!

அடுத்து மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் சங்கத் தலைவரின் அறிக்கையைக் கவனியுங்கள். (சே. எபினேசர் இன்பலாதன்)

''நர்சரி பள்ளிகளில் மூன்றில் இரண்டு பாடங்களை தமிழ்வழி நடத்த வேண்டுமென்று அரசு முடிவெடுத்துள்ளது. இது குறித்து நர்சரிப் பள்ளிகளின் சில கருத்துக்கள்.

1. நர்சரிப் பள்ளிகள் நடத்திவரும் நாங்களும் தமிழ்மொழிப் பற்றுடையவர்களே.

2. இவ்விதி நர்சரிப் பள்ளிகளுக்கு மட்டுமே எனும்போது

இது தமிழ்மொழி வளர்க்கும் செயலல்ல. நர்சரிப் பள்ளிகளை அழிக்கும் முயற்சி

நர்சரிப் பள்ளிகள் கிராமங்கள்தோறும், தெருக்கள்தோறும் படித்தும் வேலை கிடைக்காததால், வேலையில்லாதவர்களால் சிறு அளவில் நடத்தப்பெற்றும் வருகிற உண்மை உலகறிந்தது.

பண வசதியற்றவர்கள் வீட்டுக் குழந்தைகளும், கிராமத்துக் குழந்தைகளும் ஆங்கில வழி கற்க ஆர்வம் கொண்டு வருவது இப்பள்ளிகளில்தான். அவர்களுக்கு இந்தத் தண்டனை தேவையற்றது.

ஐந்தாவது வகுப்பு வரை பாதிப் பாடங்கள் தமிழிலும், மீதிப் பாடங்கள் ஆங்கிலத்திலும் படித்து ஆறாவது வரும்போது இக்குழந்தைகள் முழுவதும் தமிழ்வழி படித்த மாணவர்களுடன் போட்டியிடமுடியாது. ஆங்கில வழி பயின்று வந்த (மெட்ரிகுலேசன் பள்ளி) மாணவர்களுடனும் போட்டியிடமுடியாது. எனவே மெட்ரிகுலேசன் பள்ளிகளிலும், நர்சரிப் பள்ளிகளிலும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள பாடத்திட்டங்கள் வேறுபாடின்றி இருத்தல் வேண்டும்.''

தமிழை எப்படி வளர்ப்பது என்பதை இன்பலாதன் நமக்குச் சொல்லித் தருகிறார். இதுதான் கொடுமை என்பது.

அதேநேரத்தில் ஆலங்குடியில் ஒரு பள்ளி நிர்வாகி மு. புவனேசுவரி என்ன எழுதுகிறார் என்று பாருங்கள். (19.3.99)

''தங்கள் விருப்பத்திற்கு ஏற்பவும், ஆணையின்படியும் தமிழை ஒரு பாடமாக சொல்லித்தருகிறோம். மேலும் சமூகவியலை தமிழில் பயிற்றுவிக்கின்றோம். நமது தமிழ் மொழியை செவ்வனே சிறப்பாக அழகாக பயிற்றுவிக்கின்றோம் என்பதனை பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.''

பலபேர் அரசின் திட்டத்தின் தெளிவான நேர்மையை உணர்ந்து கொண்டு ஒத்துழைக்கவே விரும்பினர்.

மழலையர் (ம) தொடக்கப்பள்ளிகள் சங்கத்தினர் விழுப்புரத்தில் ஒரு பேரணி நடத்தினர். அவர்கள் விடுத்த கோரிக்கைகளில் சில:

‘‘படித்த பட்டதாரிகளால் தன்னைத்தானே அர்ப்பணித்துக்கொண்டு சுய வேலைவாய்ப்பாக படித்த பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளித்து அரசுக்கு செலவின்றி சமுதாயத்திற்கு கிடைக்கும் நல்ல கல்வியை தரும் கல்வி நிறுவனங்களை அரசு ஆதரித்து உதவுவதை விடுத்து, இடையூறாகவும்’’ அரசு இருக்கிறதாம். ஆசிரியர் பயிற்சியே பெறாதவர்கள் ஆசிரியர்கள். யார்வேண்டுமானாலும் நாட்டில் பெட்டிக் கடை வைக்கலாமே!

அவர்கள் வைத்த மற்றொரு கோரிக்கை.

‘‘நர்சரி பள்ளி ஆசிரியர்களுக்கு பணி நிரந்தரம் - நியாயமான ஊதியம் அளித்திட ஆசிரியர்கள் நலம்பேண சங்கப் பிரதிநிதிகள், கல்வியாளர்கள், ஓய்வு பெற்ற கல்வித்துறை உயர் அதிகாரிகளைக்கொண்ட கமிட்டி அமைத்து நர்சரி மெட்ரிக் ஆசிரியர்கள் நல வாரியம் அமைக்க கோரி’’

மழலையர் பள்ளிகளே +2 படித்தவர்கள், வேலையில்லாப் பட்டதாரிகள் நடத்தும் சுயவேலை வாய்ப்புத் திட்டம் என்று அவர்களே சொல்கிறார்கள்.

முறையான ஆசிரியர் பயிற்சி பெறாத இவர்களை ‘ஆசிரியர்’ என்று யார் ஏற்பது? பதிவு பெறாமலேயே - விளையாட்டுத் திடலோ, கழிப்பறை வசதியோ, கட்டிட வசதியோ இல்லாமல் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, பள்ளியாகக் காட்டும் இவர்களுக்கு ஏற்பு வழங்க முடியுமா?

இவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் இவர்களுக்கு வாரியம் அமைக்கச் சொல்லிக் கேட்கிறார்களே! இது முறையா?

இவர்களுடைய விவாதமெல்லாம் ‘வருமானம் கெடாமலிருக்க வழியென்ன? என்ற திசை நோக்கியே’ அமைவதைக் காணலாம்.

* * *

இயல் பதினைந்து

கருநாடக மாநில மொழிக்கொள்கை

கருநாடக மாநிலத்தில் இன்று காங்கிரசு - ஐக்கிய ஜனதா தளத்தின் கூட்டணி ஆட்சி. எனினும், பா.ஜ.க.வும் வலிமையான பெரிய கட்சியாகவே இருக்கிறது. என்றாலும், கன்னட மொழிக்கு முதன்மை கொடுப்பதில் இவர்கள் அனைவரும் ஒற்றுமையாகவே இருக்கிறார்கள். அந்த அடிப்படையில், கருநாடக மாநில மொழிக் கொள்கையைப் பார்க்க வேண்டும்.

''உயர்நிலைப் பள்ளி மட்டத்தில் கன்னடம் அல்லது மாணவனின் தாய்மொழி முதல் மொழியாக வேண்டுமென்று ஏப்ரல் 30, 1982 தேதியிட்ட ஆணையில் அரசு முடிவு செய்திருந்தது. இத்துடன் மாணவன் இந்த ஆணையில் குறிப்பிட்டிருக்கும் 10 மொழிகளில் இரண்டில் தேர்வு பெற வேண்டியிருந்தது. அரசு இந்த ஆணையை மறுபரிசீலனை செய்து 20 சூலை 1982ம் தேதியில் திருத்த ஆணை பிறப்பித்து 1987-88ம் கல்வியாண்டிலிருந்து உயர்நிலைப்பள்ளி மட்டத்தில் கன்னடம் மட்டும் ஒரே முதல் மொழியாவதென்றும் மற்றும் இந்த ஆணையில் தெரிவித்திருப்பது போல் கன்னடம் உட்பட்ட 10 மொழிகளில் மற்ற இரண்டு மொழிகளை மாணவர்கள் பயில ஆய்வு செய்து கொள்ளலாம் என்று ஆணையிட்டிருந்தது. கன்னடமில்லாத பள்ளிகளில் தொடக்கக் கல்வியின் முதலாண்டிலிருந்தே கன்னடப்பயிற்சி கட்டாயமாகத் தக்க தென்றும் இந்த ஆணையில் கட்டளையிடப்பட்டிருந்தது.''

இவற்றை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தனர்; ஆணையும் தள்ளுபடி செய்யப்பட்டது. எனினும் நீதிமன்றம்

''தொடக்கக் கல்வியின் பொது மாதிரிபோல் தாய்மொழியுடன் மற்றொரு மொழியின் பயிற்சியைக் கட்டாயமாக்கப்பட்ட தொடக்க வகுப்புகளிலிருந்து இரண்டு மொழிகளில் ஒன்றாக கன்னடத்தை பயிற்றுவிக்க மற்றும் உயர்நிலைப்பள்ளி மட்டத்தில் கன்னடத்தை மூன்று மொழிகளில் ஒரு கட்டாய மொழியாக ஏற்படுத்த உரிய ஆணை அல்லது சட்டம் ஏற்படுத்தி அதை கன்னடம் தாய்மொழியாகக் கொண்ட எல்லோருக்கும் மற்றும் மாநிலத்தின் நிரந்தர குடிகளான மற்றும் நிரந்தர குடிகளாகும் மொழி. சிறுபான்மையினர்க்கும் பயன்படுத்த மாநில அரசுக்கு உரிமையளித்தது.

உயர்நீதி மன்றத்தின் ஆணைக்கெதிராக மாநில அரசு உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு கொடுத்தது. ஆனாலும் உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பை நிலுவையில் வைத்து மாநில அரசு, 19 சூன் 1989 தேதியிட்ட ஆணையில் மொழிக்கொள்கையை உருவாக்கி ஆணை பிறப்பித்தது. இந்த ஆணையின் பிரகாரம் 1லிருந்து 4ம் வகுப்பு வரைக்கு குழந்தைகள் அங்கே குறிப்பிட்ட 8 மொழிகளில் (கன்னடமும், ஆங்கிலமும் சேர்த்து) ஒரு மொழியை மட்டும் கட்டாயமாகக் கற்க வேண்டும். 5லிருந்து 7ம் வகுப்பு வரைக்கும் கன்னடத்தை முதல் மொழியாகப் பயிலாத மாணவர்களுக்கு கன்னடத்தைப் பயிற்றுவிப்பது. ஆனால் கன்னடமொழித் தேர்வில் தேர்வு பெறுவது கட்டாயமில்லை. மற்றும் 8லிருந்து 10ம் வகுப்பு வரைக்கு மூன்று மொழிகளில் ஒரு மொழிப் பாடமாக கன்னடத்தை கட்டாயமாகப்பயில வேண்டும்.''

அரசு, ஆங்கில வழிப் பள்ளிகளில் தொடக்க நிலையில் ஆங்கிலப் பயிற்றுமொழி குறித்து ஆராய்ந்திட டாக்டர் எச். நரசிம்மையா தலைமையில் குழு ஒன்றை அமைத்தது. அதன் அறிக்கை அடிப்படையில்,

''தொடக்கப்பள்ளிகளின் கல்வி சட்ட அமைப்புப் பிரிவு 12 துணைப்பிரிவு (2)ன் பத்தி (1) லிருந்து (4) வரையிலான நிபந்தனைகளை தவறாது அனுசரிக்கும் அங்கீகரிக்கப்படாத ஆங்கிலப் பயிற்றுமொழிப் பள்ளிகளுக்கு அரசு அனுமதி வழங்கலாம் என்றும், ஆங்கிலப் பயிற்றுமொழிப் பள்ளியின் இசைவாணைக்குத் தகுதியற்ற பள்ளிகள் மானிய சட்ட நிபந்தனைக்குத் தகுதியற்ற பள்ளிகள் மானிய சட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் கன்னடம் அல்லது இதர மொழிப் பயிற்றுமொழிப் பள்ளிகளைப் பெற அனுமதி கொடுக்கலாம் என்றும் 5லிருந்து அடுத்த வகுப்புகளில் மாணவர்கள் மற்ற எந்த மொழிப் பயிற்றுமொழிக்கும் மாற்றம் பெறலாம் என்றும் இந்த ஆணையில் வரையறுக்கப்பட்டிருந்தது.''

இந்நிலையில் உச்சநீதிமன்றம் 8.12.1993 இல் தீர்ப்பு வழங்கியது. மாநில உயர் நீதி மன்றத்தின் கருத்தின் படியும் உயர் நீதி மன்றத்தின் ஆணைப்படியும் 19.6.1989 இல் பிறப்பித்த அரசு ஆணையின் வாய்மையை உறுதிப்படுத்தியது. மேலும் உச்ச நீதிமன்றம் வழங்கிய கருத்தினையும் மனத்திற் கொள்ளவேண்டும். அது இதுதான் :

''மொழிக் கொள்கையை எப்படிப் பயனளிக்கும் வகையில் அமலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று மாநிலத்திற்குத் தெரிந்திருக்கிறது என்றும் இதில் **நீதிமன்றம் உள்ளே நுழையக் கூடியது அல்ல** என்றும் தெரிவித்துள்ளது. (கவனியுங்கள் : உச்ச நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளபோதே அரசு திருத்த ஆணை வெளியிட்டுள்ளது. ஆனால் தமிழ்வழிக்

கல்விக்காகச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்றபோது கல்வி அமைச்சர் 'உச்சநீதி மன்றத்தில் வழக்கு உள்ளது' என்று நழுவிவிட்டார். கலைஞரும் அதை வற்புறுத்தவில்லை. குடும்பம் தந்த குழப்பத்தால் சட்டம் இயற்றப்படாமலேயே தமிழ் வழிக் கல்வி குலைந்து போனது. கருநாடக மாநிலத்திற்குக் கிடைத்த தீர்ப்பின் அடிப்படையிலாவது புதிய அரசாணை பிறப்பித்திருக்கலாம். கருநாடக மாநில அரசு அதைச் செய்திருக்கிறதே! 1993 இல் இவ்வளவு தெளிவான ஆணை இருந்தும் தமிழகக் கல்வி அமைச்சர் அதனைக் கண்டுகொள்ளவில்லையே! ஏன்?

மறுபடியும் 1993 ஆம் ஆண்டுத் தீர்ப்பு அடிப்படையில் 29.4.1994 இல் மறு ஆணை பிறப்பித்துள்ளது. (ED.28 PGC 94) இதில் அரசு தன் மொழிக் கொள்கையை எப்படி வரையறுத்துள்ளது என்று பாருங்கள்.

அ. பொதுவாகக் குழந்தையின் தாய்மொழியே பயிற்றுமொழி ஆக வேண்டுமென்று எதிர்பார்ப்பு இருக்கும் 1லிருந்து 4ம் வகுப்பு வரைக்கும் பின்னிணைப்பில் கொடுத்திருக்கும் மொழிகளில் ஒரு தாய்மொழி அல்லது கன்னடம் மட்டும் கட்டாய மொழியாக இருக்கும்.

ஆ. 3ம் வகுப்பிலிருந்து கன்னடரல்லாதவர்க்கு கன்னடம் விருப்பப்பாடமாக இருக்கும். இதைச் சொந்த விருப்பத்தோடு மட்டுமே பயிற்றுவிக்கப்படும் மற்றும் இந்தப் பயிற்சியால் வேறு பாடங்களின் பயிற்சி அல்லது பள்ளியின் எல்லா மாணவர்கள் பங்கேற்கும், பள்ளி செயல்பாடுகளுக்கு எந்தப்பாதகமும் ஏற்படக்கூடாது. ஆண்டு இறுதியில் 3ம் மற்றும் 4ம் வகுப்புகளில் கன்னட மொழிக்கு எந்தத் தேர்வும் இருக்காது.

இ. 5ம் வகுப்பிலிருந்து அதாவது பொது வழக்கத்தைப்போல இரண்டாம் மொழியை கற்பிக்கும் ஏற்பாடு எங்குள்ளதோ அங்கிருந்து மாணவன் பின்னிணைப்பு-1 இல் கூறியிருக்கும் மொழிகளிலிருந்து ஆய்ந்து கொண்ட முதல் மொழியாக இல்லாத மொழியை இரண்டாம் மொழியாகப் பயில வேண்டும். கன்னடத்தை முதல் மொழியாகப் பயிலாத குழந்தை கன்னடத்தை இரண்டாம் மொழியாகக் கற்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டிருக்கும். 5ம் வகுப்பிலிருந்து மூன்றாவது மொழியை கற்க ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். மூன்றாவது மொழி மாணவன் முதல் அல்லது இரண்டாவது மொழியாகக் கற்ற மொழியாக இருக்கக் கூடாது. மாணவன் பயிலக்கூடிய மூன்றாவது மொழி விவரம் பின்னிணைப்பு 2இல் அளிக்கப்பட்டிருக்கிறது.

மூன்றாவது மொழி வகுப்புகளுக்கு வருகை தருவது மற்றும் தேர்வு எடுத்துக் கொள்வது கட்டாயமாகும். மாணவர்கள் மூன்றாவது மொழிப்பயிற்சியை 5லிருந்து 7ம் வகுப்பு வரை தொடர்வார்கள். ஆனால்

மூன்றாம் மொழித் தேர்வில் தேர்ச்சியடைவது கட்டாயமில்லை. 5லிருந்து 7ம் வரை வகுப்புகளில் மூன்றாம் மொழியில் பெறும் மதிப்பெண்கள் மீது ரேங்க், வகுப்பு முதலானவைகளில் சிறப்பிடம் அளிக்கப்படாது.

ஈ. உயர்நிலைப் பள்ளி மட்டத்தில் அதாவது 8லிருந்து 10 வரை வகுப்புகளில் மூன்று மொழிகளைக் கற்பிக்கப்படும். இவைகளில் இரண்டு மொழிகளில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாகும். அதோடு இரண்டு மொழிகளில் ஒன்று கன்னட மொழியாக இருக்க வேண்டும்.

நன்கு கவனியுங்கள். மும்மொழித் திட்டம் என்றாலும் 'இரண்டு மொழிகளில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாகும். ஆங்கிலம் எல்லார்க்கும் தேவை. எனவே அதைக் கட்டாயம் எடுப்பர். இரண்டுமொழிகளில் ஒன்று கன்னடமாக இருக்கவேண்டும்.'

இதிலேயே கன்னடம் எவ்வளவு தெளிவாகக் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கவனியுங்கள்.

இவர்கள் தமிழோ, பிரெஞ்சோ மூன்றாவது மொழியாக எடுத்திருந்தாலும் கன்னடம் கட்டாயம் படித்தாக வேண்டும் எனும் நிலை இருந்தது. ஆனால் தமிழ் நாட்டில் 'தமிழ், இந்தி, பிரெஞ்சு' என மெட்ரிகுலேசன் பள்ளிகளும், தமிழ் அல்லது சமஸ்கிருதம் அல்லது இந்தி அல்லது பிரெஞ்சு அல்லது செர்மன் மொழி என்று டான்பாஸ்கே பள்ளியும் கூறு போட்டு விற்பதைப் பார்க்கிறோம். இதைத் தடுக்கவோ அல்லது மாற்றி அமைக்கவோ கல்வி அமைச்சர் அன்பழகன் முனைந்தது உண்டா?

ஊ. கன்னடம் தாய்மொழியாக இல்லாத மாணவர்களுக்கு கன்னட மொழித் தேர்வில் மற்றும் ஹிந்தி தாய்மொழியாக இல்லாத ஹிந்தி மொழித் தேர்விலும் கருணை மதிப்பெண்கள் அளிக்கத்தக்கது. இந்த மொழிகளில் மாணவர்கள் தேர்ச்சி பெற உதவியாக அதிக பட்சம் 15 மதிப்பெண்கள் வரை கருணை மதிப்பெண் அளிக்க வேண்டும். இந்த வசதி ஆணை பிறப்பித்த நாளிலிருந்து 10 ஆண்டுகள் வரை கிடைக்கும்.

1994-95 ம் கல்வியாண்டிலிருந்து மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட எல்லாப் பள்ளிகளிலும் 1லிருந்து 4ம் வகுப்பு வரை கல்விப் பயிற்றுமொழி தாய்மொழி அல்லது கன்னட மொழியே ஆகத்தக்கதென்று ஆணையிடப்படுகிறது.

1994-95ம் கல்வியாண்டில் 1ம் வகுப்பிற்கு சேரும் மாணவர்களுக்குத் தாய்மொழி அல்லது கன்னட மொழிப் பயிற்று மொழியிலேயே கற்பிக்கத்தக்கது.

ஆனாலும் 1994-95 ம் கல்வியாண்டில் 2,3 மற்றும் 4ம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் இப்போது கற்றுக்கொண்டிருக்கும் பயிற்று மொழியிலேயே கற்பிக்கப் பள்ளிகளுக்கு அனுமதியளிக்கலாம்.

மாணவர்கள் 5ம் வகுப்பிலிருந்து தம் விருப்பம் போல ஆங்கிலம் அல்லது எந்தப் பயிற்று மொழிக்கும் மாற்றல் பெற்றுக் கொள்ளலாம்.

ஆங்கிலம் தாய்மொழியாக உள்ள மாணவர்களுக்கு மட்டும் இப்போது இருக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கிலப் பயிற்றுமொழிப் பள்ளிகளில் 1லிருந்து 4ம் வரை வகுப்புகளில் ஆங்கில வழியிலேயே கற்க அனுமதியளிக்கலாம்.

கவனியுங்கள் : ஆங்கிலம் தாய்மொழியாக உள்ள மாணவர்களுக்கு மட்டுமே ஆங்கிலப் பயிற்றுமொழி.

மேற்கூறிய நிபந்தனைகளை நிறைவேற்றாத அனைத்து அங்கீகரிக்கப்படாத பள்ளிகளையும் மூடிவிட ஆணையிடப்படுகிறது.

மிகவும் முக்கியமான பகுதி

சென்ட்ரல் போர்ட் ஆப் செகண்டரி எஜுகேசன் (CBSE) அல்லது இண்டியன் கௌன்சில் ஆப் செகண்டரி எஜுகேசன் (ICSE) ‘Composite பள்ளிகளைத் தொடங்கக் கீழே கொடுக்கப்பட்டுள்ள விதிகளை நிறைவேற்றும் பள்ளிகளுக்கு மட்டுமே அரசு மட்டத்தில் ‘No objection certificate’ அளிக்க கவனத்திற் கொள்ளப்படும்.

மாநிலங்களிடையே மாற்றல் பெறும் அனைந்திந்தியப் பள்ளி, பணி மற்றும் மத்திய அரசின் நிறுவனங்களைச் சார்ந்த பெற்றோர்களின் குழந்தைகளிருந்தால் (இதற்குச் சான்றாக சம்பந்தப்பட்ட துறை / நிறுவனம் இவைகளிலிருந்து சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.’

பல மாநிலங்களில் கிளைகளைப் பெற்றிருக்கும் அதோடு மாநிலங்களிடையே மாற்றல்களுக்குட்படும் வங்கிகள், நிறுவனங்கள் அல்லது வணிக நிறுவனங்களில் பணிபுரியும் பெற்றோர்களின் குழந்தைகளிருந்தால் (இதற்குச் சான்றாக சம்பந்தப்பட்ட வங்கி / நிறுவனங்களிலிருந்து சான்றிதழ் அளிக்க வேண்டும்.)

அரசு அவ்வப்போது பிறப்பித்திருக்கும் / பிறப்பிக்கும் ஆணைகளைப் பின் பற்றியிருக்கவேண்டும்.

CBSE, ICSE பள்ளிகள் யாருக்காக என்பதையும் இவர்கள் தெளிவு படுத்தியிருக்கிறார்கள்!

இங்கு நம் அதிகாரிகள் இவற்றிலெல்லாம் கவனம் செலுத்தி ஏற்பு வழங்கியிருக்கிறார்களா?

கல்வி அமைச்சர் இவற்றில் காட்டிய அக்கறை எவ்வளவு?

மத்திய சாகித்ய அகாதெமியின் தலைவர் யூ.ஆர். அனந்தமூர்த்தி. அவருக்கு Author of the Year எனும் விருது வழங்கப்பட்டது. அவரும், அரசால் பயிற்று மொழிக் குழுத்தலைவராக அமர்த்தப்பட்ட எச். நரசிம்மையாவும், முன்னாள் முதல்வர் வீரப்பமொய்லியும் கலந்து கொண்ட நிகழ்ச்சி. அதில் அனந்த மூர்த்தி பேசியதைக் கவனியுங்கள் (The Hindu 22.3.1999)

Dr. Ananthamurthy, said here today that regional language or mother-tongue of the student should be the medium of instruction from the first to the seventh standard.

He said English might become the only language of communication in future and this should be prevented. "I don't oppose English, but teach the children in Kannada. Let them have a working knowledge of English," he said.

Dr. Ananthamurthy cautioned against moving to a situation where one language remained powerful, silencing all other languages. "The higher you learn, the more likely you get restricted to one language. This should not happen," he said.

He said Kannada had derived from many other languages but had stil retained its original identity and link with other languages.

'கன்னடத்தில் பயில்வது வெளியுலகத்திலிருந்து கன்னடர்களை வெகுதொலைவு விலக்கி வைத்துவிடும்' எனும் பிறரது கூற்றை அறவே மறுத்தார்.

நரசிம்மையா என்ன பேசினார் என்று பாருங்கள்.

Dr. H. Narasimhaiah, educationist, urged Dr. Ananthamurthy to put pressure on the Union Government to bring in a constitutional amendment to ensure that the medium of instruction in schools was either the mother - tongue or the regional language.

இவர்கள் கருநாடக அறிஞர்கள். இவர்கள் கருத்து எவ்வளவு தெளிவாக இருக்கிறது என்று பாருங்கள்.

கருநாடக மாநில அரசாணைகளையும் உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளையும் அலசி ஆராய்ந்த தமிழண்ணல் 'தினமணி' (24.7.99) யில் ஒரு கட்டுரை வரைந்துள்ளார்: அவரது கூற்றுகளில் சில :

''இங்கு தமிழையே கற்பிக்காமல், A, B, C, D என மழலையர் நிலையிலேயே ஆங்கிலத்தைப் புகுத்தும் நாற்பதாயிரம் நர்சரிப் பள்ளிகளும், தமிழை ஒரு பாடமாகக்கூட ஏற்காத மெட்ரிகுலேசன் பள்ளிகளும் இவர்கள் கண்ணிற்படுவதில்லை. இக் கொடுமைகளை எதிர்த்து, மழலையர் முதல் ஒன்று முதல் ஐந்து வரையிலான தொடக்க நிலையில் தமிழே - தாய்மொழியே மொழிப் பாடமாக இருக்க வேண்டுமென்று இவர்கள் மாநாடு கூட்டித் தீர்மானம் போட்டு முழங்குவதில்லை. அரசியலார்க்கு வாக்கு வங்கிகள் மீதே அக்கறை. தமிழ் எக்கேடு கெட்டாலென்ன? வேரிலே வெந்நீர் பாயப்பாயத் தமிழ்ப் பயிர், பட்டுவிடுமெனத் தெரிந்தும், 'நடிப்புச் சுதேசிகளாக' நடமாடவே பலரும் விழைகின்றனர்.

சிறுபான்மையோர், தங்கள் தாய்மொழி, பண்பாடு, அடையாளத்தை இழந்துவிடாமல் காப்பாற்ற அரசியலமைப்புச் சட்டம் உரிமை தருகிறதே தவிர, ஆங்கில வழிக் கல்வி மூலம் தங்கள் மொழி பண்பாட்டைக் காப்பதாகக் கூறுவதை ஏற்கவில்லை. சிறுபான்மையர் சார்பாக வாதிட்டவர்கள், நீதிமன்றத் தீர்ப்பால் ஒரு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டனர். இதனால் தனியார் நிர்வாகம் அனைத்தும் முதல் வகுப்பு முதல் நான்காம் வகுப்புவரை கன்னடம் (அ) அவரவர் தாய்மொழியை மட்டுமே மொழிப் பாடமாகவும் பயிற்று மொழியாகவும் கற்பிக்க வேண்டுமென்றும், அங்ஙனம் கற்பிப்பதாக உறுதியளித்தால்தான் புதிய பள்ளி திறக்க அனுமதி அளிக்கப்படுமென்றும் மிக உறுதியாக கர்நாடக அரசு அறிவித்துவிட்டது.

சிறுபான்மையினர் அவரவர் தாய்மொழியைக் கற்க வழி செய்யப்பட்டுள்ளதுபோல் தோன்றுகிறது. அவ்வாறு தத்தம் தாய்மொழியைக் கற்க விழைவார், ஒரு வேளை ஆங்கிலத்தை விட்டுவிட்டுத் தத்தம் மொழியைப் படிக்கலாமே தவிர, கன்னடத்தை விட்டுவிடவே முடியாது.

ஆங்கிலவழிக் கல்வியினர் அங்கு வழக்குத் தொடர்ந்து, நீதிமன்றங்களால், மிகச் சரியாகப் புத்தி கற்பிக்கப்பட்டுள்ளனர்.

அண்ணா வகுத்த 'இரு மொழிக் கொள்கை' நம்மை இந்திக்கு அடிமையாகாமல் காப்பாற்றியது. ஆனால் அது தமிழைக் காவு கொடுத்து, ஆங்கிலத்தைக் காக்கும் கொள்கையாக நடைமுறையிலுள்ளது. அண்ணா இன்று இருந்தால் கண்ணீர் வடிப்பார். ''என் பேச்சையும் எழுத்தையும்

ஊன்றிப் படித்துப் பாருங்கள். நான் இந்தியை எதிர்ப்பதற்கு மட்டுமன்று; நம் தாய்மொழியாம் தமிழைக் காப்பதற்கும் அக் கொள்கையை வகுத்தேன். நீங்கள் இவ்வாறு தமிழை அறவே புறக்கணிப்பீர்கள் என்று தெரிந்திருந்தால் இக் கொள்கையை வகுத்திருக்கவே மாட்டேன்'' என வருந்துவார்.

நமது இருமொழிக் கொள்கையையே 'தமிழை' முதன்மைப்படுத்தும் கொள்கையாக உருவாக்குவதே அண்ணாவுக்கு நாம் செய்யும் கைம்மாறாகும். கர்நாடகத்தவர் போன்ற ஆர்வமும் திறமையும் சாதுரியமும் அஞ்சாமையும் கைவரப்பெற்றாலன்றி, தமிழைக் காப்பதிலும் வளர்ப்பதிலும் நாம் வெற்றி பெற முடியாது.''

இவ்வளவு தெளிவாகத் தமிழண்ணல் குறிப்பிட்டுள்ளார். தமிழக - தி.மு.க. அரசு - இவற்றையெல்லாம் ஆதாரமாகக்கொண்டு - உயர்நீதி மன்றத்தில் வாதாடியதா? உச்ச நீதிமன்றத்திலாவது வாதாடியதா?

இன்றுள்ள அ.தி.மு.க. அரசாவது 'உச்ச நீதி மன்றத்தில் உள்ள வழக்கை முழு வீச்சில் முடித்திட - திறமையோடு வாதிட - ஏற்பாடுகளைச் செய்துள்ளதா?

நீங்கள்தான் முடிவு செய்து கொள்ளவேண்டும்.

எஸ்.எம். கிருஷ்ணா கர்நாடக முதல்வராக இருந்தபோது சட்டமன்றத்திலேயே உறுதிபடக் கூறியுள்ளார் (டெக்கான் ஹெரால்டு, பெங்களூர் 26.4.2000)

Admissions : Kannada medium students to get priority

The State Government had decided in principle to give priority to Kannada medium students in admission to all professional and higher education courses, Chief minister S M Krishna said in the Legisiative Assembly today.

The decision was taken following a suggestion by the Kannada Development Authority.

Poor students from villages who had no access to English medium education would benefit from the measure which is primarily aimed at making students take up Kannada medium on their own up to SSLC, Mr Krishna said.

The details on implementation of the measure would be decided after consulting the Kannada Development Authority chairman and officials of the departments concerned.

எத்தனை செய்திகள் என்று பாருங்கள்!

அனைத்து உயர்நிலைப் பாடங்களிலும் தொழிற்கல்வியிலும் கன்னடப் பயிற்றுமொழியில் படித்தவர்களுக்கே முன்னுரிமை கொடுப்பதென்பது மாநில அரசின் கொள்கை முடிவாகும்.

கன்னட வளர்ச்சி மையத்தின் பரிந்துரையை ஏற்றே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்கிறார் முதல்வர்.

ஆங்கிலப் பயிற்றுமொழியில் பயில்வதற்கான வாய்ப்பே இல்லாத கிராமப்புற ஏழை மாணவர்களுக்கு இது பெருமளவில் பயனளிக்கும். அவரவர் 12 ஆம் வகுப்பு வரை கன்னடப் பயிற்றுமொழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள உதவும் வகையில் நாம் கொள்கை முடிவு எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்கிறார் முதல்வர்.

24.5.2001 இல் கருநாடக உயர் கல்வித்துறை அமைச்சர் கூறியிருப்பதைக் கவனியுங்கள்.

''கன்னடத்தை பயிற்று மொழியாகக் கொண்டு 10ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு ஏற்கனவே தொழில் கல்வி படிப்பில் ஐந்து சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த கல்வியாண்டில் இந்த மாணவர்களில் ஆயிரத்து 500 பேருக்கு தொழில் கல்விகளில் இலவச 'சீட்' வழங்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது. பரகூர் ராமச்சந்திரா கமிட்டி அறிக்கை பரிந்துரையின்படி எம்.பி.பி.எஸ்., மற்றும் பல் மருத்துவப் படிப்புகளில் தலா 65 இடங்களும், பொறியியல் படிப்புகளில் ஆயிரத்து 370 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. (தினமலர்)''

கருநாடக மாநிலத்தில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, எதிர்க்கட்சிக்காரர்களும் ஏற்கும் வகையிலேயே இவையெல்லாம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.

ஆனால், கனிதமிழ்க்கு வாழ்வளிக்க - வாய்ப்பளிக்க வேண்டிய கல்வி அமைச்சரே மறைமுகமாக ஆங்கிலப் பயிற்றுமொழிப்பள்ளிகட்கு மளமளவென்று அனுமதி கொடுத்துக் கொண்டே, தமிழ் வழிக் கல்வி பற்றி வாய்கிழியப் பேசும் 'இரட்டை நிலை'யினராக இருக்கிறார். முதல்வரின் குடும்பமே எத்தனையோ சதி வலைகளைப் பின்னுகிறது. தொடக்கத்தில்

வேகமெடுத்த கலைஞர், கடைசியில் மெல்ல அடங்கி விட்டார்; இந்த நிலையில் எனக்குப் பாட்டு வேறு!

கன்னடப் பயிற்றுமொழியில் படித்தவர்களுக்கு 65 எம்.பி.பி.எஸ். இடங்கள் ஒதுக்கீடு; பல்மருத்துவத்தில் 65 இடங்கள் ஒதுக்கீடு.

வலிமை மிக்க திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தும் 'தமிழ் வழிக் கல்வி'யை எந்த அளவுக்குக் கொலை செய்யமுடியுமோ, அதற்குக் குழிபறிக்க முடியுமோ, அந்த அளவுக்குச் செய்து அதன் சிறப்பைச் சிதைத்திருக்கிறார்கள் என்பதைத் 'தமிழக வரலாறு' ஒருநாளும் மறக்காது.

ஆனால் கருநாடகத்தில் கன்னடர்களின் தாய்மொழிப் பற்று எவ்வளவு தெளிவாக இருக்கிறது என்பதைப் பாருங்கள்.

ஹாங்காங் பள்ளிகளில் ஆங்கிலத்திற்குத் தடை

பிரிட்டனிடமிருந்து சமீபத்தில் சீனாவிடம் கைமாறிய ஹாங்காங்கில் புதிய திசை வழியில் தொடர்ந்து செல்ல ஆரம்பித்துள்ளது. 'அபின்' யுத்தத்திற்குப்பின் சீன மன்னரிடமிருந்து 99 வருடக் குத்தகைக்கு ஹாங்காங்கைப் பிரிட்டன் எடுத்துக் கொண்டது. இவ்வாண்டு ஜூலை 1-ம் தேதி ஹாங்காங்கைச் சீனாவிடம்பிரிட்டன் அரசு ஒப்படைத்தது. அதுமுதல் ஹாங்காங்கில் பல அடிப்படை மாற்றங்களைச் சீனா செய்து வருகிறது.

ஹாங்காங் பள்ளிகளில் இத்தனை நாளாக ஆங்கிலம்தான் முதன்மை மொழியாக இருந்துவந்துள்ளது. இப்போது சீன அரசுப் பள்ளியில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தத் தடைவிதித்துள்ளது. இது சம்பந்தமாகக் கல்வித்துறை வெளியிட்டுள்ள குறிப்பில் மாணவர்கள் முதலில் தாய்மொழியில் பயிலவேண்டும். அப்போதுதான் மாணவர்கள் பயனடைவார்கள். பெற்றோர்களும் தமது சமூகமும் இதற்கு ஒத்துழைப்பு அளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம் என்று கூறியுள்ளது.

இந்த அரசு ஆணையை அமல்படுத்தாத பள்ளிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்வித்துறை கூறியுள்ளது.

இயல் பதினாறு

பிற மாநிலங்களில் தமிழ்க் கல்வி – தாய் மொழிக் கல்வி

திருப்பதியில், திருமலை திருப்பதி தேவஸ்தானச் சார்பில் நடைபெறும் திருவேங்கடவன் கலைக்கல்லூரி மற்றும் கோவிந்தராச சுவாமி கலைக்கல்லூரியில் பயிலும் தமிழ் சார்ந்த மாணவர்கள் நமது கல்வி அமைச்சர்க்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அதனை அப்படியே தருகிறேன்.

> ‘‘நாங்கள் திருவேங்கடவன் கலைக்கல்லூரியில் இரண்டாம் மொழியாக தமிழ் மொழியை பயின்று வருகிறோம்.
>
> ஆந்திர, தமிழக எல்லைப் பகுதியான சித்தூர் மாவட்டத்திலும், அதனைச் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளிலும் தமிழைத் தாய்மொழியாக பேசி வருகிறோம், படித்து வருகிறோம்.

திருமலை திருப்பதி தேவஸ்தான ஆட்சியின் கீழ் நடைபெறும் திருவேங்கடவன் கலைக்கல்லூரி 1945-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1945-ம் ஆண்டிலிருந்து தமிழ் மொழியை கல்லூரி அளவில் இரண்டாவது பிரிவுப்பாடமாக எடுத்துக் கொண்டு சுயமாகப் பயின்று வருகின்றனர். இந்த ஆண்டும் தமிழை இரண்டாவது பிரிவுப் பாடமாக எடுத்துக் கொண்டு பயின்று வருகின்றோம். எங்களுக்கு போதிய வழிகாட்டுதல் இன்மையால் எங்களுடைய படிப்பு பாதிக்கக்கூடிய அளவில் இருக்கின்றது. தமிழ்மொழியை பயிற்றுவிக்கத் தகுதியான விரிவுரையாளர் இல்லாத காரணத்தாலும், கல்லூரி நிர்வாகத்தினர் எங்களை கட்டாயப்படுத்தி, தமிழ்மொழிக்கு பதில் சமஸ்கிருதத்தைப் படிக்கத் தூண்டுவதாலும் எங்களுடைய எதிர்கால வாழ்வு பாதிக்கக்கூடிய நிலையில் உள்ளது. தங்களைப் போன்ற சான்றோர்கள் எங்களது வாழ்விற்கு நல்ல வழிகாட்டிகளாக, அமைவீர்கள் என்று இக்கோரிக்கை மனு மூலம் தெரிவித்துக்கொள்கிறோம். எங்களது பிரச்னைகள் குறித்து பலமுறை, திருமலை திருப்பதி தேவஸ்தான ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், ஆந்திர மாநில அரசுக்கும் பலமுறை எடுத்துக்கூறியும் அதனை அவர்கள் காதில் போட்டுக்கொள்வதாக தெரிவதில்லை.

தாங்கள் தயவு கூர்ந்து எங்களது பிரச்னையில் தலையிட்டு எங்களுக்கு தகுதியான விரிவுரையாளரை நியமிக்க வேண்டி, திருமலை திருப்பதி தேவஸ்தான ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், ஆந்திர மாநில அரசுக்கும் ஒரு பரிந்துரை கடிதம் அளிக்க வேண்டும் என தங்களை சிரம் தாழ்த்தி வணங்கி கேட்டுக்கொள்கிறோம்.''

இந்த மடலின் படியை எனக்கும் அனுப்பியிருந்தார்கள். 23.1.2001 அன்று கல்வி அமைச்சருக்கு 'உடனடி நடவடிக்கை எடுக்குமாறு வேண்டி' நானும் பரிந்துரை செய்திருந்தேன்.

நடவடிக்கை எடுக்கப்பட்டதா? அந்த மாணவர்களின் ஏக்கம் தீர்ந்ததா? என்று தெரியவில்லை.

இப்படிப் பல மாநிலங்களில் பலரும் தமிழ் படிக்க விரும்புகிறார்கள். தமிழ் வகுப்பு தொடங்குதல் - தமிழ் ஆசிரியர்களை, விரிவுரையாளர்களை அமர்த்துதல்- தமிழ்ப் பாட நூல்களை விலைக்கோ, அன்பளிப்பாகவோ தருதல் ஆகிய அனைத்தும் கல்வித்துறை சார்ந்த பணிகள்.

இந்த ஆர்வத்தோடு கல்வித் துறை பணியாற்றியதா? உயர்கல்வித் துறைச் செயலாளர் இத்தகைய முயற்சிகளுக்கு உயிர் கொடுத்தாரா? அல்லது முடக்கிப் போட்டாரா என்பதை வருங்காலத்தில் யாரேனும் ஆராயலாம்.

மும்பையில் தமிழ் மையம்

நான் பொறுப்பில் இருந்தபோது மும்பை, கொல்கத்தா ஆகிய இரண்டு இடங்களிலும் தமிழ் மையங்கள் தொடங்கப்பட்டன. நானே இரண்டு இடங்களிலும் கலந்து கொண்டு தொடங்கி வைத்தேன்.

அதன்படி ஒவ்வொரு மையத்திலும் தட்டச்சுத் தெரிந்த ஒருவர் அலுவலகப் பொறுப்பாளராகவும், மற்றொருவர் அலுவலக உதவியாளராகவும் அமர்த்தப்பட்டனர்.

திருவள்ளுவர் படிப்பகம் ஒன்று அமைக்கப்பட்டது. வாரத்தில் ஒருநாள் சங்க இலக்கிய வகுப்பும், மற்றொரு நாள் பொதுவான தமிழ் வகுப்பும் நடத்துவதற்கான முறையில் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது.

ஆனால் மும்பையில் தமிழர்களுக்கு ஒரு குறை. 12 இலட்சம் தமிழர்களின் குழந்தைகள் படிப்பதற்கு மராட்டிய அரசு 49 இடங்களில் தமிழ்ப் பள்ளிகளை நடத்துகிறது. இதில் ஏறத்தாழ 20000 பேர் படிக்கின்றனர்.

ஆனால் 1 முதல் 7 ஆம் வகுப்பு வரைதான் இந்தப் பள்ளிகளில் தமிழ் படிக்கலாம். அதன்பின் எந்த வாய்ப்பும் இல்லை. இக்குறையை நீக்கும்

வகையில் மும்பை, திருவள்ளுவர் மன்றம் பிரைட் உயர்நிலைப்பள்ளியை நடத்தி 8,9,10 ஆம் வகுப்பில் தமிழ் வழியில் படிக்க வகை செய்துள்ளது.

சீத்தாகேம்ப் பகுதியில் ஸ்டார் உயர் நிலைப்பள்ளி அமைக்கப்பட்டு அங்கும் 10 ஆம் வகுப்பு வரை தமிழ் வழிக் கல்வி தரப்படுகிறது.

உயர்நிலைப் பள்ளிப் பொறுப்பாளர்கள் கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களைப் பன்முறை சந்தித்து ஒரு கோரிக்கை வைத்தனர்.

வழங்கப்படுகின்ற மதிப்பெண் சான்றிதழில் தற்போது 'Private' என்று குறிப்பிடப்படுகிறது. இதனால் மும்பைத் தமிழ் மாணவர்கள் மேல்படிப்புக்குச் செல்லும்போது பின் தள்ளப் படுகின்றனர்.

அதனால் 'Centre' எனுமிடத்தில் 'Star High School, Seetha camp, Mumbai' என்று போட்டால் பெரிய பாதுகாப்பாக இருக்கும் என்று கேட்டனர்.

ஆனால் எனக்குத் தெரிய 13.5.96 இல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த கல்வி அமைச்சர் 13.5.2001 இல் தேர்தல் முடிவு வரும் வரை இதைச் செய்து கொடுக்கவில்லை என்றே கருதுகிறேன். செய்து கொடுத்திருந்தால் மகிழ்ச்சி.

எவ்வளவோ இடர்களுக்கிடையில் பிற மாநிலங்களில் வாழும் தமிழர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி வழங்குகிறார்கள். அவர்களுக்குத் தமிழக அரசு தான் செய்து தரக்கூடிய எளிய உதவிகளைக் கூடச் செய்வதில்லை என்றால் இதை யாரிடம் போய்ச் சொல்வது? இதையும் அன்பழகனிடமே சொல்லி அழலாமா?

குசராத் முதல்வர் நரேந்திர மோடி கோவைக்கு வந்திருந்த போது (தினகரன் 2.8.2003) தெரிவித்த செய்தி இது.

''எங்கள் மாநிலத்தில் குஜராத்தி மொழி வளர்ச்சிக்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக அனைத்து பாடங்களையும் குஜராத்தி மொழியிலேயே கற்பிக்கப்பட்டு வருகிறது. அங்கு தாய்மொழிக்கே முதலிடம் அளிக்கிறோம்'' என்றார். இங்கிருக்கிற மரமண்டைகளுக்கு இது உறைக்கும் என்று நம்புகிறேன்.

பிற நாடுகள் எப்படி? பாருங்கள்!
தமிழ்க் கோயிலை இடித்து விடாதீர்கள்
வெளிநாட்டினர் அறிவுரை

திருவாண்ணாமலையை வழிபடவும், இரமணா ஆசிரமத்தைப் பார்க்கவுமாக ஹாலந்து நாட்டிலிருந்து தமிழகம் வந்துள்ளனர். 'ஹெல்கி'யும்

அவரது மனைவி 'ஆர்டியன் ஜேன்சனு'ம்! தமிழ்நாட்டுக் 'குருகுலக்' கல்வி போலப் பிரான்சு நாட்டில் கல்வி பெற முடியாதவர்க்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இவர்கள்! இவர்கள், பயிற்றுமொழி குறித்துக் கூறும் கருத்துக்களைத் தமிழர்கள் அறிந்து கொள்ள வேண்டும்;

''ஹாலந்து நாட்டில், பல்கலைக்கழகம் வரை பயிற்றுமொழி 'டச்சு'தான்! பிரான்சிலும் தாய்மொழியில் தான் கல்வி! பல ஐரோப்பிய நாடுகளிலும் இதே நிலைதான்! வளர்ச்சி என்ற பெயரால், தங்கள் தாய்மொழியை விட்டு விலகி வந்த பல ஐரோப்பிய இனங்கள், தற்போது, எதையோ இழந்து விட்டதாக உணர்ந்து, மீண்டும் தங்கள் தாய்மொழியைத் தேடிச் செல்கின்றன.

''பிரான்சு நாட்டின் மேற்குப் பகுதியில் 'ப்ரெட்டான்'; கிழக்குப் பகுதியில் 'அல்சாசியன்' என்ற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட இனங்கள் உள. இவர்கள், தங்கள் தாய்மொழியில் பேசுவதைக் கேவலமாகக் கருதிப் பிரெஞ்சு மொழியையே பேசிவந்தனர். இப்போது உண்மை உணர்ந்து, தாங்கள் தங்களின் சமூகப் பின்னணியிலிருந்து துண்டிக்கப்பட்டு விட்டதாகக் கருதித் தாய்மொழியைத் தேடத் தொடங்கிவிட்டனர். பிரான்சில் பிரிட்டான் அல்லது அல்சாசியன் மொழியில் மட்டுமே நடைபெறும் பள்ளிகள் மட்டுமே தோன்றிவிட்டன.

ஐரோப்பிய இனங்கள் இவ்வாறு தாய்மொழியைத் தேடிக்கொண்டுள்ளபோது இந்தியாவில் மட்டும் தாய்மொழியை விட்டு விலகிச் செல்வது வேதனையளிக்கிறது. இந்த முறை தொடர்ந்தால் இன்னும் இரண்டு தலைமுறைகளில் தமிழ் அழிந்துவிடும்.

உங்கள் நாடு எவ்வளவோ வளர்ந்துவிட்டது. அதற்கு கோயில்களை இடித்துவிட்டா கட்டிடம் கட்டுகிறீர்கள்? மொழியும் அப்படித்தான்! தமிழ் உங்கள் கோயில்! அதை இடித்துவிடாதீர்கள்.

ஆங்கிலமே வேண்டாம் என்பது எமது வாதமல்ல. கணிப்பொறி யுகத்தில் ஆங்கில நூல்களை தமிழில் மொழி பெயர்ப்பது பெரிய காரியம் அன்று.

எங்கள் நாட்டில் பள்ளியில் டச்சு மொழியே முதன் மொழி. இரண்டாவது மொழிதான் ஆங்கிலம். எனவே தமிழ் நாட்டில் தமிழ் வழிக் கல்விதான் சிறந்தது. அதுவும் ஆரம்பக்கல்விக்குத் தாய்மொழி தவிரப் பிற மொழி உகந்ததன்று (தினமணிக் கதிர்).

இயல் பதினேழு

நூறு தமிழறிஞர்கள் உண்ணா நோன்பு

தமிழ்ச் சான்றோர் பேரவை மிகத் தொன்மையான அமைப்போ, நீண்ட காலமாகச் செயற்பட்டு வரும் அமைப்போ அன்று. இரண்டு மூன்று ஆண்டுகட்கு முன் தொடங்கப்பட்ட ஓர் அமைப்புதான். எனினும் இதன் நிறுவனராகிய நா. அருணாசலம் தந்த அயராத உழைப்பு; மாவட்டச் சுற்றுப் பயணங்கள் ஆகிய இவை இந்தப் பேரவையை வலிமை மிக்கதாக்கின.

அதைவிட முக்கியம், 'மாணவர் நகலகம்' எனும் அமைப்பின் வாயிலாகக் கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியை இந்த அமைப்புக்காகத் திரு. அருணாசலம் செலவிட்டு வந்ததும் ஒரு முக்கிய காரணம்.

எனவே, தமிழ்ச் சான்றோர் பேரவை தமிழ்நாட்டில் உள்ள அமைப்புகளில் வலிமை மிக்கது; உயிர்த்துடிப்பு மிக்கது என்பதைச் சொல்லியாக வேண்டும்.

1.11.98 அன்று சென்னையில் தமிழ்ச் சான்றோர் பேரவையின் சார்பில் 'தமிழகப் பெருவிழா' நடைபெற்றது. இவ்விழாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை சிலம்பொலி செல்லப்பன் எடுத்துரைத்தார். அத்தீர்மானம் இதுதான்.

''பல்லாண்டுகளாக, தமிழறிஞர்களும், தமிழமைப்புகளும் வற்புறுத்தி வந்த போதும், தமிழ்நாட்டில் ஆங்கில மழலையர் பள்ளிகள் பெருகி வருகின்றனவே தவிர குறைந்தபாடில்லை. மழலையரின் பிஞ்சு உதடுகளுக்கு நம் அன்னைத் தமிழ்மொழி அந்நியமாகி வருகிறது. இனிப் பொறுப்பதில்லை.

மழலையர் பள்ளிகள் அனைத்திலும் மூன்றாம் வகுப்புவரை தாய்த்தமிழ் மொழியில் மட்டுமே பாடங்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று இப்பெருவிழா வலியுறுத்துகின்றது. இந்த இறுதிக் கோரிக்கையும் பயனற்றுப் போகுமானால், ஏப்ரல் முதல் வாரத்தில், முதல் கட்டமாக, தமிழின உணர்வாளர்கள் 100 பேர்சாகும் வரை உண்ணா விரதம் இருக்கும் போராட்டத்தில் ஈடுபடுவதென்று இம்மாநாடு உறுதியாகத் தீர்மானிக்கின்றது.''

இவர்கள் கோரிக்கை 'மழலையர் பள்ளிகள் அனைத்திலும் மூன்றாம் வகுப்புவரை தாய்த்தமிழ் மொழியில் மட்டுமே பாடங்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும்' என்பதுதான்.

கோரிக்கை ஏற்கப்பட்டு அரசு ஆவன செய்யத்தவறினால் ஏப்ரல் மாதத்தில் 100 தமிழறிஞர்கள் சாகும் வரை உண்ணா நோன்பினை மேற்கொள்வது என அறிவித்தனர். இத்தீர்மானத்தை வரவேற்று, சுப. வீரபாண்டியன் பேசியதாவது.

''தமிழகத்தில் உள்ள மழலையர் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் 3ம் வகுப்பு வரை தமிழில்தான் பயிற்றுவிக்க வேண்டும் என்று அரசு ஆணையிட வேண்டும். அரசு நினைத்தால் முடியும். அரசால் செய்யமுடியாமல் போகுமானால் உண்ணாவிரதம் இருப்பதைத்தவிர வேறு வழியில்லை.

சாதியை ஒழித்து ஒன்றுபடு, மதத்தை மறந்து ஒன்றுபடு, கட்சியை கடந்து ஒன்றுபடு என்ற கோஷங்கள்தான் நமது பேரணியில் முக்கியமாக எதிரொலித்தது. தமிழன் தமிழனாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் கோவில்கள் ஆனாலும், மசூதியானாலும், மாதா கோவிலானாலும் தமிழில்தான் வழிபாடு இருக்கவேண்டும். எங்கேயோ பிறந்த யேசு நாதருக்கு தமிழ் புரிகிறது. மதுரையில் மீனாட்சி அம்மனுக்கு தமிழ் புரியவில்லை. தமிழ் தேசியம்தான் நமது லட்சியம்.'' (கதிரவன், 2.11.98)

1967 முதல் திராவிட இயக்கம் தமிழகத்தில் ஆட்சி செலுத்தி வருகிறது. எனினும் 31 ஆண்டுகள் கழித்து 'மழலையர் பள்ளிகளில் தமிழ் வழிக்கல்வி' குறித்துக் கடுமையான முடிவுகளையும், வலிமையான கோரிக்கையையும் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை.

இவர்களது அறிவிப்புக்குப்பின் தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை 16.11.1998 அன்று ஓர் அறிவிப்பினை வெளியிட்டது.

1.11.98இல் தமிழ்ச் சான்றோர் பேரவை நிறைவேற்றிய தீர்மானத்துக்கு - 15 நாட்களில் அரசு பொறுப்பான விடையொன்றைத் தந்துள்ளது என்பதனை மனத்திற்கொள்ளவேண்டும். பிறகு தமிழ்ச் சான்றோர் பேரவை 21.11.98 இல் கூடி விவாதித்தது.

அதன்பின் அவர்கள் நிறைவேற்றிய தீர்மானங்கள் இவை :

''தமிழ்நாட்டரசு, தமிழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான தமிழ் வழிக் கல்வித் தொடர்பாக அண்மையில் வெளியிட்டுள்ள அறிவிப்பு, தமிழ் மக்களின் முழுமையான கோரிக்கையை நிறைவு செய்யும் வகையில்

அமையவில்லை என்றாலும் தற்போது, அறிவித்துள்ள அறிவிப்புக் குறித்து அனைத்துத் தமிழ் அமைப்புகள் மற்றும் இயக்கங்களின் போராட்ட உயர்நிலைக்குழு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வதோடு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கல்விக் கூடங்களிலும் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் மட்டுமே பயிற்றுமொழியாகவும், பாடமொழியாகவும் இருக்க வேண்டுமென்றும், ஆறாம் வகுப்புத் தொடங்கி அனைத்து நிலைகளிலும் ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாக மட்டுமே கற்பிக்கப்படலாம் என்றும் இவ்வுயர் நிலைக்குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

பொறியியல், மருத்துவம், தொழில்நுட்பங்கள், சட்டம் உள்ளிட்ட உயர் கல்வித் துறைகள் அனைத்திலும் முன்னரே தமிழ் வழி பாடநூல்கள் அணியமாகவும் (தயாராகவும்) அறிமுக நிலையிலும் இருத்தலால் வரும் கல்வி ஆண்டிலேயே அவ்வயுர் கல்வித் துறைகள் அனைத்திலும் தமிழ் வழிக் கல்வியை நடைமுறைக்குக் கொணர வேண்டும் என்று இவ்வுயர் நிலைக்குழு வலியுறுத்துகிறது.

தமிழ்நாட்டரசு, அரசு - அரசு சார்ந்த துறைகள் அனைத்திலும் தமிழ் வழிக்கல்வி பயின்றார்க்கே வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கவேண்டும் என இவ்வுயர்நிலைக்குழு வலியுறுத்துகிறது.''

இக்கூட்டத்தில், பழ.நெடுமாறன், நா. அருணாசலம், ச. செந்தில் நாதன், த. சுந்தரராசன், இரா. திருமுருகன், இறைக்குருவன், கி.த.பச்சையப்பன், பொன். குமார், கார்முகில் தியாகு, இரா சேது, இளவேனில், அரு. கோபாலன் போன்றவர்கள் கலந்து கொண்டனர். மேலும் 26 தமிழ் அமைப்புகளைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

இதில் கவனிக்கவேண்டிய பகுதி இது:

அரசு 16.11.98 இல் அறிவித்த செய்திகள் வேறோரிடத்தில் உள்ளன.

ஆனால் தமிழ்ச் சான்றோர் பேரவை வலியுறுத்துபவை இவை:

இந்த முடிவுகள் தொடர்பாக தமிழ்ச் சான்றோர் பேரவை தமிழகம் முழுவதும் உள்ள தமிழ் அமைப்புகளை இணைக்கவும், தமிழகம் முழுவதும் கொள்கை விளக்கம் செய்யவும் பல குழுக்களை அமைத்தது. நா.அருணாசலம், குருவிக்கரம்பை வேலு, ச.மெய்யப்பன், பல்லடம் மாணிக்கம்

போன்றோர் நிதிக்குழுவிலும் ச. செந்தில்நாதன், த. இராமலிங்கம், பொ.வே. பக்தவத்சலம் போன்றோர் சட்டக்குழுவிலும் முகம் மாமணி போன்றோர் அலுவலகக் குழுவிலும், சு. செல்லப்பன், பழ. நெடுமாறன், தமிழண்ணல், பச்சைமால், இரா. திருமுருகன் போன்றோர் போராட்ட உயர் நிலைக்குழுவிலும் அரு.கோபாலன், தியாகு, சுப. வீரபாண்டியன், பெரியார்தாசன், அப்துல்காதர், இன்குலாப், பிரபஞ்சன், கல்யாணி, பழ.கருப்பையா போன்றோர் கொள்கை பரப்புரைக் குழுவிலும் இடம் பெற்றனர்.

இந்தக் காலகட்டத்தில் மழலையர் பள்ளி முதல் மூன்றாம் வகுப்பு வரை தமிழ் வழிக்கல்வி எனும் தீர்மானத்தை மாற்றியமைத்து, 'வரும் கல்வி ஆண்டு முதல் தமிழ் நாட்டின் அனைத்துப் பள்ளிகளிலும் ஐந்தாம் வகுப்புவரை தமிழ் மட்டுமே பயிற்று மொழியாக இருக்கவேண்டும். ஆறாம் வகுப்பு முதல் அனைத்து நிலைகளிலும் தமிழ் கட்டாயப் பாடமாக இருக்கவேண்டும்' எனும் ஒரே தீர்மானத்தை வடித்து வழங்கினர் தமிழ்ச் சான்றோர் பேரவையினர். முதல்வர் அவர்களை நேரில் சந்தித்தும் இத்தீர்மானங்களைக் கொடுத்தனர்.

இது தொடர்பாக 20.1.99 தொடங்கி 3.4.99 வரை சென்னை மாநகரில் 74 இடங்களில் பல்வேறு அமைப்பினரும் பொறுப்பேற்றுக்கொண்டு தெருமுனை - போராட்ட விளக்கக் கூட்டங்களை நடத்திட ஏற்பாடு செய்தனர்.

மேலும் 'சாகும் வரை பட்டினிப்போர் ஏன்?' என்பதனை விளக்கி தமிழ்ச் சான்றோர் பேரவை ஓர் அறிக்கை வெளியிட்டது. அதில் தெளிவான விளக்கங்கள் உள்ளன.

''தமிழில் கற்பதே தமிழர்க்குப் பெருமை
தமிழில் கற்பது தமிழரின் உரிமை!
நூறு தமிழறிஞர்கள் சாகும்வரை பட்டினிப்போர், ஏன்?

அன்பான தமிழ்ப் பெருமக்களே!

நம்மில் பலர், தமது குழந்தைகள் ஆங்கிலத்தில் படித்து அறிவாளியாகவும், அதிகாரியாகவும் உயர வேண்டும் என்று பகல் கனவு கண்டபடி தமது வருமானத்தின் பெரும்பகுதியை ஆங்கிலப் பள்ளிகளுக்குக் கொட்டிக் கொடுப்பது நடைமுறையாக உள்ளது.

ஆங்கிலம் கற்றுக் கொண்டால் அறிவு வளர்ந்துவிடுவது போலவும், உடனே வேலை கிடைத்துவிடுவது போலவும் இங்கே ஒரு பொய் பிரச்சாரத்தைக் காலங்காலமாகப் பரப்பி வருகிறார்கள். ஆனால் உண்மை அதுவன்று. பிரெஞ்சுக்காரர்களும், ஜப்பானியர்களும், சீனர்களும்,

ரஷ்யர்களும், ஜெர்மானியர்களும் ஆங்கிலத்தைப் பொருட்படுத்துவதே இல்லை. அவர்கள் அவரவர் தாய்மொழியில் படித்துத்தான் உலக அரங்கில் உயர்ந்து நிற்கிறார்கள். அவ்வளவு ஏன்? இந்தியாவின் பிற மாநிலங்களிலும் அந்தந்த மாநில மொழியில்தான் (அவரவர் தாய்மொழியில்) மாணவர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. அப்படி அவரவர் தாய்மொழியில் படித்து, ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். போன்ற உயர்கல்வித் தேர்வுகளையும் அவரவர் மொழியிலேயே எழுதித்தேர்ச்சி பெற்றுள்ளனர். இந்தியாவின் பிற மாநிலங்களில், பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் கல்வியையும் அவரவர் தாய்மொழியிலேயே பயின்று பணியாற்றுகிறார்கள். நமது தமிழ் நாட்டில்தான் அன்னிய மொழி நம் அன்னை மொழியாக மாற்றப்படும் அட்டூழியமும், நம் அன்னை மொழி அனாதையாகிப் போகிற இழிவும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

வரலாறு நெடுக ஏமாந்து கொண்டிருப்பதற்கு நாம் ஏமாளிகள் அல்லர். தமிழ் நாட்டுப் பிள்ளைகள் தமிழில்தான் படிக்க வேண்டும் எனும் உரிமைக்குரல் என்றைக்கோ ஒலிக்கத் தொடங்கியது. அந்தக் குரலை தமது வாழ்நாளின் இறுதி வரை ஓயாது ஒலித்து வந்த அறிஞர்கள் பலர். நம்மை ஆண்ட அரசுகளும், ஆங்கிலத்தால் நம்மை அடிமையாக்கி ஆண்டுகொண்டிருக்கும் ஆதிக்கச் சக்திகளும் அதனை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. எல்லாக் காலத்திலும் ஓர் இனம் அடிமையாக இருக்காது. இருக்கவும் கூடாது என்பதுதான், மனித குலத்துக்கான அறிவியல் உண்மையாகும். எனவேதான் நமது முன்னோர்கள் தொடங்கிய தாய்மொழிக் கல்வி எனும் நமது உரிமைப் போரை தமிழகத்தின் பெருவாரியான அமைப்புகளையும், இயக்கங்களையும் ஒருங்கிணைத்துத் தொடர்கிறது தமிழ்ச் சான்றோர் பேரவை. தமிழிலேயே கல்வி எனும் போராட்டத்தின் முதற்கட்டமாக சென்னையில் நடந்த தமிழ்ச்சான்றோர் பேரவையின் தமிழகப் பெருவிழாவில் 1.11.98 அன்று ''வரும் ஆண்டிலேயே தமிழ் வழிக் கல்வியை நடைமுறைப்படுத்தாவிட்டால் தமிழறிஞர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்களின் தலைமையில் 100 தமிழறிஞர்கள் சாகும் வரை பட்டினிப் போராட்டத்தில் ஈடுபடுவது எனும் தீர்மானம், ஆயிரக்கணக்கானவர்களின் மிகப் பெரும் வரவேற்பு ஆரவாரத்திற்கிடையே நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து 11.11.98ல் அனைத்துத் தமிழமைப்புகளையும் கூட்டி அதற்கான போராட்டக் குழுக்களும் அமைக்கப்பட்டன. 16.11.98 அன்று தமிழக அரசு தமிழ் வழிக் கல்வி குறித்த அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. அந்த அறிவிப்பு, நம் கோரிக்கையை முழு அளவில் நிறைவேற்றுவதாக இல்லை.

எனவே தமிழ்ச் சான்றோர் பேரவையின் 1.11.98 தீர்மானத்தின்படி பட்டினிப் போராட்டத்தை நடத்துவது என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

''தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் கல்விக் கூடங்களிலும் ஐந்தாம் வகுப்புவரை தமிழ் மட்டுமே பயிற்று மொழியாகவும் பாடமொழியாகவும் இருக்க வேண்டும். ஆறாம் வகுப்பு முதல் அனைத்து நிலைகளிலும் ஆங்கிலம் ஒரு 'மொழிப் பாடமாக' மட்டுமே கற்பிக்கப்படலாம்.''

''பொறியியல், மருத்துவம், சட்டம், தொழில் நுட்பங்கள் உள்ளிட்ட உயர் கல்வித் துறைகள் அனைத்திலும் முன்னரே தமிழ்வழிப் பாடநூல்கள் தயாராகவும், அறிமுக நிலையிலும் இருப்பதால் வரும் கல்வி ஆண்டிலேயே அவ்வுயர் கல்வித் துறைகள் அனைத்திலும் தமிழ் வழிக் கல்வியை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும்.''

''தமிழக அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகள் அனைத்திலும் தமிழ் வழிக் கல்வி பயின்றவர்க்கே வேலை வாய்ப்பில் முன்னுரிமை தர வேண்டும்'' ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தியே 100 தமிழறிஞர்கள் சாகும் வரை பட்டினிப்போர் மேற்கொள்ள இருக்கின்றனர்.

தாய்மொழி தமிழ் மூலம் கல்வி கற்பதில் இருக்கும் நன்மைகளையும், உண்மைகளையும் உணருங்கள். பல்வேறு அமைப்புகள், மற்றும் இயக்கங்களின் பேராதரவுடன் நாடு தழுவிய அளவில் தமிழ் வழிக் கல்வியை வலியுறுத்தி நடத்த இருக்கும் பல்வேறு தொடர் போராட்டங்களுக்கும், அதைத் தொடர்ந்து ஏப்ரல் முதல் வாரம், சென்னையில் நடைபெற இருக்கும் நூறு தமிழறிஞர்களின் சாகும் வரையான பட்டினிப் போராட்டத்திற்கும் ஆதரவு தருமாறு அன்புடன் கோருகிறோம்.

இன்றே விழிப்போம்!
இழிவைத் துடைப்போம்!!''

இதில் மற்றொன்றையும் கவனிக்கவேண்டும்.

தமிழகப் பெருவிழாவில் (1.11.98) பேசிய சிலம்பொலி செல்லப்பன் ''மழலையர் பள்ளிகள் அனைத்திலும் மூன்றாம் வகுப்பு வரை தாய்த்தமிழ் மொழியில் மட்டுமே பாடங்கள் நடத்தப்படவேண்டும் என்று இப்பெருவிழா வலியுறுத்துகிறது'' என்று பேசியுள்ளார்.

21.11.98 தீர்மானம் 1 முதல் 5 வகுப்பு வரை - தமிழ்ப் பயிற்றுமொழி என வற்புறுத்துகிறது.

வளர்ச்சிதான் ; வரவேற்போம்.

பிறகு, தங்கள் கோரிக்கைகளை அனைத்துக் கட்சியினருக்கும் கொடுத்து, ஆதரவைத் திரட்டினர். 23.3.1999 அன்று தமிழகம் முழுவதும் 'ஒருநாள் அடையாள பட்டினிப்போர்' நடத்திடவும் ஏற்பாடு செய்தனர்.

போராட்ட விளக்கப் பொதுக் கூட்டங்களும், தெருமுனைக் கூட்டங்களும் மளமளவென்று நடைபெற்றன. புதுப்பெருங்களத்தூரில் தமிழ் மன்றச் சார்பில் 21.2.99 அன்று நடைபெற்ற போராட்ட விளக்கக் கூட்டத்தில் சுப. வீரபாண்டியன் உரையாற்றினார்.

திட்டமிட்டபடியே 23.3.1999 அன்று பல ஊர்களிலும் அடையாள உண்ணா நோன்பு நடைபெற்றது. கரூரில் இராம. கோவிந்தன் தலைமையில் நடைபெற்ற உண்ண நோன்பினை புலவர் இரா. இளங்குமரன் தொடங்கி வைத்தார். புலவர் சு. நஞ்சப்பன் முடித்து வைத்தார்.

இதேபோன்ற அடையாள உண்ணா நோன்பு மாநிலத்தின் 62க்கும் மேற்பட்ட ஊர்களில் நடைபெற்றது

ஏப்ரல் மாதம் நடைபெறும் 'பட்டினிப் போரில் பங்கேற்க தமிழ் உணர்வாளர்கள், தமிழ் அறிஞர்கள், மாணவர்கள், மாணவிகள் என இது வரை 360 பேர் தங்களது பெயரைக் கொடுத்து உள்ளதாக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக 21.3.99 அன்று சென்னை அண்ணா கலையரங்கில் முன்னணித் தலைவர்கள் பலர் கலந்துகொண்ட 'எழுச்சி மாநாடு'ம் நடைபெற்றது.

இதற்கிடையில் தான் 13.1.99 அன்று அரசு ஆணையொன்றினை வெளியிட்டது. அரசு ஆணை 421 - 13.1.99

தமிழ்ச் சான்றோர் பேரவையினரின் போராட்ட முயற்சி நாளுக்கு நாள் தீவிரமடைந்து வந்தது. 28.3.99 ஆம் நாளிட்ட ஜூனியர் விகடனில் சில செய்திகள்.

சிலம்பொலி செல்லப்பன் பின்வருமாறு கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

''தமிழ்ச் சான்றோர் பேரவை சார்பாக வருடந் தோறும் நவம்பர் முதல் நாளில் தமிழகப் பெருநாள் கொண்டாடுவது வழக்கம். கடந்த முறை கொண்டாடிய போதுதான் தமிழ் காக்க, 'சாகும் வரை உண்ணா நோன்பு' என்னும் இந்தப் போராட்டத்தைத் திட்டமிட்டோம். 'தமிழ்நாட்டின் அனைத்துக்

கல்விக்கூடங்களிலும் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் மட்டுமே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும். . . ' என்பது ஒரு கோரிக்கை. ஆறாம் வகுப்புக்குமேல் ஆங்கிலம் ஒரு மொழிப்பாடமாக இருக்கலாம். அது தப்பில்லை. இப்போது நாங்கள் தமிழைக் கட்டாயப் பாடமாக்குங்கள் என்று மட்டுமே கேட்கிறோம். ஆங்கிலத்தை எதிர்ப்பதற்காகப் போராடவில்லை.

'பொறியியல், மருத்துவம், சட்டம் உள்ளிட்ட உயர் கல்வித்துறைகள் அனைத்திலும் தமிழ்வழிக் கல்வி முறையை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும்' என்பதும் எங்கள் கோரிக்கை. 'இது நடைமுறையில் சாத்தியமா?' என்று சிலர் கேலியாகக் கேள்வி எழுப்பினார்கள். 'தமிழக அரசு சார்ந்த துறைகள் அனைத்திலும் தமிழ்வழிக் கல்வி பயின்றவர்களுக்கே வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும்' என்ற நிலை வந்தால், இது சாத்தியமாகும். பழமைவாய்ந்த நம் தமிழ் மொழியும் காக்கப்படும்.

சென்னை நகரில் பார்த்தோமென்றால், அண்ணாநகர் போன்ற மேட்டுக்குடி மக்கள் வாழ்கிற சில பகுதிகளில் தமிழ் மொழியைக் காதால்கூடக் கேட்க முடிவதில்லை. பல குழந்தைகளுக்குத் தமிழே தெரியவில்லை. அடிப்படையான சில விஷயங்களுக்குக் கூடச் சட்டம் போட்டுத்தான் மக்களைத் தயார்படுத்த வேண்டும் என்ற அவலம் தமிழகத்தில் உள்ளது. இதைக் களையவேண்டும் என்ற நோக்கில்தான் நாங்கள் உயிர் துறக்க முன்வந்தோம். . . ''

மேலும் சில செய்திகள்.

'தமிழ்த் தீவிரவாதிகள் எனும் தலைப்பில் உள்ளன.

'தமிழ்த்' தீவிரவாதிகள்!

நெய்வேலி நகரத்தைச் சேர்ந்த என்.எல்.சி. ஊழியரான முகிலன் என்பவரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக, பிப்ரவரி மாதம் நிகழவிருந்த தன் திருமணத்தைத் தள்ளிவைத்திருக்கிறார்!

பேராசிரியர்கள், அரசு பதவி வகித்தவர்கள் என்று பலரும் தமிழ்க்காக்கக் களமிறங்கத் தயாராக இருப்பதைக் கடிதம் மூலம் உறுதிப்படுத்தியவண்ணம் உள்ளனர்.

ஏழு குழந்தைகளுக்குத் தாயான, மாதம் பதின்மூன்றாயிரம் ரூபாய் ஊதியம் பெறும் தங்க. அன்புவல்லி என்ற முதுகலை மொழியாசிரியையும்கூட உறுதியுடன் களமிறங்கி உள்ளார்!

இதற்கிடையே எழுத்தாளர் அசோகமித்திரன் 'தமிழைப் பற்றிக் கவலைப்பட வேண்டியவர்கள் எழுத்தாளர்கள் மட்டும் தான்' என்று கூறியுள்ளார். இப்படித்தான் சிலர், எழுந்துள்ள சிக்கலின் அடித்தளத்தைப் புரிந்து கொள்ளாமல் மனம்போன போக்கில் எதையாவது சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்கள். மேற்கண்ட எழுத்தாளர் இத்தகையவரே. இவர்கள் என்றாவது ஒருநாள் திரண்டு தமிழுக்குச் சார்பாக ஏதாவது செய்துள்ளார்களா? தமிழகம் முழுவதும் ஒருவகையான விழிப்புணர்ச்சியும் வேகமும் பரவிக் கொண்டிருந்தன. தூத்துக்குடியில் உள்ள அனைத்துத் தமிழ் அமைப்புகளும் ஒருங்கிணைந்து ஒரு பேரணியையும் பொதுக் கூட்டத்தையும் 6.4.99 அன்று நடத்தின. பொறிஞர் கு.ம. சுப்பிரமணியம், பேரா. அ. செகதீசன், மோ. அன்பழகன் ஆகியோரின் முயற்சியில் பலரும் திரண்டெழுந்தனர்.

தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தி 10.4.99 அன்று அடுத்த முயற்சி தொடங்கியது. ஏற்பாடுகளை அறிவிப்பாக வெளியிட்டிருந்தனர். அதன்படி,

''ஏப்ரல் 10 சனிக்கிழமை தமிழகமெங்கும் மிதிவண்டிப் பேரணிகள் நடக்கவுள்ளன. ஏப்ரல் 13ஆம் தேதி கன்னியாகுமரியில் தொடங்கி 50 இளைஞர்கள் கொள்கைகளைப் பரப்பியவாறு மிதிவண்டிகளில் சென்னை நோக்கி 24ஆம் தேதி வந்தடைவார்கள்.

மேலும் தமிழ் வழிக் கல்விக்கான தமிழர் போராட்ட எழுச்சிப் பயணம் 3 குழுக்களாக குற்றாலம், போடிநாயக்கனூர், வேதாரண்யம் ஆகிய ஊர்களில் இருந்து ஏப்ரல் 17ல் புறப்பட்டு 23ஆம் தேதி சென்னை வந்தடையும்.

ஏப்ரல் 25ஆம் தேதி காலை 9 மணிக்கு சென்னை சைதை மறைமலையடிகள் பாலத்திலிருந்து பேரணி தொடங்குகிறது. பேரணியின் முடிவில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே நூறு தமிழின உணர்வாளர்களின் சாகும் வரையிலான பட்டினிப் போர் தொடங்கும்.

நீதிமன்றங்களில் தமிழில் பேசவும் மனு போடவும் கோரிக்கை விடுத்து ஏப்ரல் 25இல் நீதிமன்றத்தை வழக்கறிஞர்கள் புறக்கணித்து உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளுமாறு வழக்கறிஞர் பொ.வே. பக்தவச்சலம் கேட்டுக்கொண்டுள்ளார்.''

மேலும் கோரிக்கைகளை வலியுறுத்தித் தொடங்கப்படும் பட்டினிப்போரில் பங்கு பெறும் 100 பெயர்களும் அறிவிக்கப்பட்டன. அதிலேயே காத்திருப்போர் பட்டியலும் இடம் பெற்றிருந்தது என்பதனையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

12.4.99அன்று நாகர்கோயிலில் தமிழர் எழுச்சி முகாம் நடைபெற்றது. கு. பச்சைமால் தலைமையில் முன்னணித் தலைவர்கள் உரையாற்றினர்.

13.4.99அன்று கன்னியாகுமரியில் மிதிவண்டிப் பேரணி தொடங்கியது. நா. அருணாசலம் தொடங்கிவைத்தார். பணிவன்பன் அடிகளார், பேரா. பெரியார் தாசன், கவிஞர் அறிவுமதி ஆகியோர் வாழ்த்துரைத்து வழியனுப்பினர்.

அதேபோல் 19.4.99 அன்று வேதாரண்யத்திலிருந்தும் எழுச்சிப் பயணம் மேற்கொள்ளப் பெற்றது. பெ. காந்திநாதன் ஏற்பாடு செய்த இப்பயணம் அரிமா சு. சிவசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. பெ. மணியரசன் தொடங்கிவைத்தார்.

20.4.99அன்று 'தினமணி'யில் ஒரு செய்தி வந்தது. பட்டினிப் போராட்டம் ஏன் என்பதனைச் சிலம்பொலி செல்லப்பன் விளக்கியிருந்தார். அவர்தான் இந்தப் போராட்டத்தை அறிவித்தவர். அவரது கூற்று இந்த நேரத்தில் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவர் தந்த செய்தி இதுதான்.

''தமிழ்நாட்டில் தமிழ் வழிக் கல்வி வேண்டும், தமிழ் படித்தோருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வேண்டும், மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் கல்வியைத் தீந்தமிழில் கொணர வேண்டும் எனத் தமிழ்நாட்டில் கேட்பதைத் தவறு என்று எவரேனும் கூற முடியுமா? இவற்றைச் செயல்முறைக்குக் கொண்டுவர வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபடுவது தவறாகுமா?

தமிழினத்தின் விழிப்புணர்வு தொடங்காதா என்பதுதான் என் தமிழ் வேட்கையாக இருக்கிறது.

தமிழ் நம் கண்முன்னாலேயே சிதைக்கப்படுகிறது. அழிக்கப்படுகிறது. இப்படியே சென்றால் மொரீசியசு தமிழர்களுக்கும் பீஜித் தீவுத் தமிழர்களுக்கும் நேர்ந்திருக்கும் சோகம் நாளை நம் தமிழ் மண்ணிலே நம் பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் நேர்ந்துவிடுமோ என்னும் அச்சம்தான் இவ்வுண்ணா நோன்பிற்கு உந்துதலாயிற்று.

இப்பட்டினிப் போராட்டத்தில் எவ்விதத் தன்னலமோ, உள்நோக்கமோ இல்லவே இல்லை. தமிழ் நிலவைக் கவ்வியுள்ள இருளை அகற்றி, ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டே இலக்கண இலக்கிய வளஞ்செறிந்த மொழியை - எத்தகைய அறிவியல் வளர்ச்சிக்கும் இடந்தந்து சிறக்கும் நம் மொழியை, நம் மக்களுடைய ஊனோடும் உயிரோடும் ஒன்றிடச் செய்யும் நிலை மலராதா எனும் ஏக்கந்தான் என்னை இந்த இறுதி முடிவுக்கு இட்டுச் சென்றது.

1.11.98 ஆம் நாள் மாலைவரை என் நெஞ்சில் குமைந்து கொண்டிருந்த பெரு நெருப்பை அணைக்க இயலாத நிலையில் தான்தமிழ்ச் சான்றோர் பேரவையின் தமிழகப் பெருவிழாவில் நம் மொழி உரிமை மீட்சிக்காக உயிர் துறப்பது என முடிவு செய்தேன்.

உளப்பூர்வமான இம் முடிவினைத் தமிழ்ச் சான்றோர் பேரவையின் ஒருங்கிணைப்பாளன் எனும் தகுதியில் மட்டும் நான் அறிவித்துவிடவில்லை; பரந்த இவ்வுலகின் மூலை முடுக்கெலாம் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழரைக் கோடித் தமிழர்களில் ஒருவன் எனும் வகையில்தான் என் தோள்மீது இத் தமிழ்ப்பணியினை ஏற்கத் துணிந்தேன்.

மொழி அழிந்தால் நம் முகமும் முகவரியும் அழியும் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்று அன்று. ஒன்றை முன் நிறுத்தி உயிர் துறப்பது என்பது தமிழ் மரபுக்கு ஒவ்வாததும் அன்று. தன்னைத்தானே வருத்திக் கொண்டு வடக்கிருந்து உயிர் நீப்பது தமிழ் மானத்தினுடைய அடையாளம் என்பதை நம் இலக்கியங்கள் உணர்த்துகின்றன என்றார் சிலம்பொலி செல்லப்பன்.''

இந்த நிலையில் தமிழ்ச் சான்றோர் பேரவை திட்டமிட்டபடி மறைமலையடிகள் பாலத்திலிருந்து சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்டு, தமிழ் அறிஞர்கள், அன்பர்கள் அடங்கிய பேரணி நடைபெற்றது. அங்கிருந்து வள்ளுவர்கோட்டம் வந்தடைந்ததும் 102 தமிழறிஞர்களின் பட்டினிப்போர் தொடங்கியது.

இந்தப் பட்டினிப் போருக்கு ஒரு முடிவு வரவேண்டும் என்றே அனைத்து அரசியல் கட்சியினரும் விரும்பினார்கள். 25.4.99 முன்னாள் மாநில அமைச்சர், நடுவண் அரசு அமைச்சர் மு. கண்ணப்பன் ம.தி.மு.க. சார்பில் முதல்வர்க்கு ஒரு தொலைநகல் செய்தி அனுப்பியிருந்தார். தமிழறிஞர்களைச் சந்தித்து அவர்களது பிரச்னையில் தலையிட்டு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார்.

"It is very important and vital issue for your consideration and necessary steps to implement their demands" என்றும் அதில் குறிப்பிட்டிருந்தார்.

உண்ணா நோன்பைத் தொடங்குவதற்கு முன்பே தமிழக முதல்வர் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். (மாலை மலர் 24.4.99) அந்த அறிக்கை இதுதான்.

''தமிழ்நாட்டில் கல்வித்துறையில் அனைத்து மட்டங்களிலும் தமிழே பயிற்சி மொழியாக அமைந்திட, தமிழக அரசு கொள்கை ரீதியாக விரும்புகிறது.

குறிப்பாக இளஞ்சிறார்கள் பள்ளிகளில் தங்கள் கல்வியை, தாய் மொழியாம் தமிழ் மொழியிலேயே பெறவேண்டும் என்றும் தமிழக அரசு விரும்புகிறது. இந்தக் கொள்கையை நோக்கி முன்னேற முதல் கட்டமாக ஓர் ஆணையும் அரசு பிறப்பித்துள்ளது.

இந்த ஆணையை ஏற்பதற்கே இசையாத நிலையில் ஒரு சாரார் இருக்கின்றனர். இந்த நிலையில் தமிழ் அறிஞர்களும் தமிழக அரசின் கொள்கையையே வலியுறுத்தி மேலும் வேகமாகச் செயல்பட விரும்புகின்றனர்.

கட்டாயப்படுத்த இயலுமா?

தமிழக அரசின் இந்தக் கொள்கையை அமுல் நடத்த சட்டச் சிக்கல்கள், நடைமுறைச் சிக்கல்கள் உள்ளனவா என்று ஆராய்ந்திட வேண்டும். பெற்றோர்கள், மாணவர்கள் விருப்பத்திற்கு மாறாக பயிற்சி மொழியைக் கட்டாயப்படுத்த இயலுமா?

தமிழகத்தில் தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் வாழ்கின்ற நிலையில் தமிழை மட்டும் பயிற்சி மொழியாக்கி உத்தரவு பிறப்பிக்க இயலுமா?

சிறுபான்மையினராக உள்ள அனைவரும் தங்கள் விருப்பத்தேர்வின்படி கல்வி நிறுவனங்களை நிறுவவும், செயலாட்சி செய்யவும் உரிமை உடையவர் என்று அரசியலமைப்புச் சட்டம் உரிமை வழங்கியிருக்கும்போது, சிறுபான்மையினர் நடத்தும் கல்விக் கூடங்களில் தமிழை மட்டும் பயிற்சி மொழியாக ஏற்றுக் கொள்ளுமாறு அரசு ஆணையிட இயலுமா?

வழிமுறைகள்

தமிழ்நாட்டில் மிக நீண்ட காலமாக அனுமதித்து நடைபெற்று வரும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில், மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழை மட்டும் பயிற்சி மொழியாகக் கொண்டு வருவதில் சட்டச் சிக்கல்கள், நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுமா?

தமிழகத்தில் மத்திய அரசு அனுமதி பெற்று நடைபெறும் பள்ளிகளில் தமிழை மட்டும் பயிற்சி மொழியாகக் கொண்டு வர வழிமுறைகள் உள்ளனவா? தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்று கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை கொடுத்து ஊக்குவித்திட வழிமுறைகள் உள்ளனவா?

மேலே விவரிக்கப்பட்ட கருத்துக்களை ஆய்வு செய்து தமிழக அரசின் கொள்கையை நிறைவேற்றிட வழிமுறைகளை வகுத்து அளித்திட, தமிழ்ப் பற்றாளர்களும், நீதித் துறையிலே சிறப்பிடம் பெற்ற பெருமக்களும் அடங்கிய குழு ஒன்றைத் தமிழக அரசு நியமித்திடக் கருதியுள்ளது.

உண்ணாவிரதம்

இப்பிரச்சினை குறித்தும், தமிழறிஞர்களின் கால வரையற்ற உண்ணா நோன்பினை ஒருநாள் அடையாள அளவில் நடத்தி முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டும், அப்பெரியோர்களை அழைத்து கல்வி அமைச்சர் பேராசிரியரும், தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகனும் என் விருப்பத்திற்கிணங்க நேற்று 23-4-99 மாலை நீண்ட நேரம் விளக்கமளித்துப் பேசியிருக்கிறார்கள்.

எனவே அரசின் சார்பில் நான் விடுக்கும் வேண்டுகோளை ஏற்குமாறு தமிழறிஞர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.''

தமிழறிஞர்களின் உண்ணாநோன்பு நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பே இருக்கின்ற சூழ்நிலைகளை உடனுக்குடன் முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு சென்றோம். அவர் குறிப்பிட்டதுபோல, பட்டினிப்போர்க் குழுவினரும் அவர்களுடன் நானும் சேர்ந்து கல்வி அமைச்சரைச் சந்தித்துப் பேசினோம். கல்வி அமைச்சர், அவர்களுக்கு இணக்கமான விடையைத் தரவில்லை. தொடர்புடைய அமைச்சரின் வலுவான கருத்துகள் தெளிவாக எடுத்து வைக்கப்படாததால் குழுவினர் சோர்வுடன் திரும்பினர். சிலம்பொலி செல்லப்பன், தமிழண்ணல், இரா. இளவரசு, இரா. இளங்குமரன், சுப. வீரபாண்டியன் ஆகியோர் அக்குழுவில் இடம்பெற்றனர். கல்வி அமைச்சரைக் குழுவினர் சந்தித்தபோது என்ன நடந்தது?

அதன்பிறகு பட்டினிப்போர் தொடங்குமுன் ஓர் அதிர்ச்சி நிகழ்ந்தது. 1.11.98இல் இந்தப் பட்டினிப்போரை நடத்தப் போவதாக அறிவித்து ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட்டு உருக்கமான அறிக்கையையும் விட்ட சிலம்பொலி செல்லப்பன் ஒரு நாள் மட்டும் அடையாள உண்ணாநோன்பு இருக்கலாம் எனப் பேசத் தொடங்கினார். குழுவினரோ 'சாகும் வரை பட்டினிப்போர்' என்ற உறுதியில் இருந்தனர். சிலம்பொலி செல்லப்பனின் கருத்து ஏற்றுக் கொள்ளப்படாததால் அவர் அந்தப் போராட்டத்திலிருந்து விலகிக் கொண்டார்.

சிலம்பொலி செல்லப்பன் விலகியதற்குக் கல்வி அமைச்சர் அன்பழகனே காரணம் என்றும் சிலம்பொலி செல்லப்பனை வைத்துத் தமிழ்ச்

சான்றோர் பேரவையினரிடம் 'மித்திர பேதம்' செய்யப்பட்டுள்ளது என்றும் பலரும் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினர்.

எனினும் இதனைப் பொருட்படுத்தாமல் தமிழண்ணலை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு பட்டினிப்போர் தொடங்கியது.

எனினும் இந்தப் பட்டினிப் போரை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று முதல்வர் '**உண்மையாகவே**' விரும்பினார். எனவே 25.4.99 அன்று பட்டினிப்போர் நடந்த இடத்திலேயே சென்று அரசின் சார்பில், முதல்வரின் அறிவுறுத்தலின்படி நான்சென்று சந்தித்துப்பேசினேன். நான் அந்தத் திடலுக்குச் சென்றபோது என்னுடன் வா.மு. சேதுராமனும் வந்தார். அவர் அந்தப் பட்டினிப்போரில் கலந்து கொள்ளவில்லை. சிலம்பொலி செல்லப்பனைப் போல வா.மு. சேதுராமன் குழுவினரின் போக்குக்கு மாறான கருத்துகளைத் தெரிவிக்கத் தொடங்கினார்.

எனவே நான் பட்டினிப் போராளிகளைப் பார்க்கச் செல்லும் போது வா.மு. சேதுராமன் என் கூட வரக்கூடாது என்று அவர்கள் தடை விதித்துவிட்டனர். எனவே வா.மு. சேதுராமனை என் வண்டியருகிலேயே - தொலைவிலேயே நிறுத்திவிட்டு நான் மட்டுமே சென்று பேசினேன். அரசின் விருப்பத்தைத் தெரிவித்தேன். அவர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர். நண்பர் கயல் தினகரன் முழு ஈடுபாடு காட்டினார் என்பதையும் சொல்லியாக வேண்டும்.

அன்று (25.4.99) இரவு 8 மணியளவில் முதல்வர் அவர்களைச் சந்தித்து 'கலந்துரையாடல் கருத்துகளை' எடுத்துச் சொன்னேன். அவர் சில செய்திகளைச் சொல்லி மீண்டும் பேசச் சொன்னார். எல்லோரும் கவனியுங்கள்: முறைப்படி இவர்களது கோரிக்கை கல்வி அமைச்சகம் கருதுவதற்குரியது. நேரடியாகத் தமிழ் வளர்ச்சித் துறையில் இது வரவில்லை. எனினும் முதல்வர் கல்வி அமைச்சரை அனுப்பி வைக்கவில்லை. கல்வி அமைச்சர் இதில் அக்கறை காட்டவில்லை என்பதை மனத்திற் கொள்ளுங்கள்.

எனவே முதல்வர் குறிப்பின்படி என்னுடைய இல்லத்துக்கு நால்வரை வரவழைத்துப் பேசினேன். தமிழண்ணல் அருணாசலம், தியாகு, சுப. வீரபாண்டியன் ஆகியோர் சந்தித்தார்கள். அப்போது நேரம் இரவு 12 மணி. 25.4.99 இரவு 12 மணி. என்னுடன் பேசிய பின் அவர்களும் தங்கள் பிடிவாதங்களைத் தளர்த்த அணியமாயினர்.

காலை 7.30 மணிகெல்லாம் முதல்வரை, கோபாலபுரம் இல்லத்தில் சென்று சந்தித்தேன். நானே ஒரு வரைவினை எழுதிக் கொண்டும் சென்றேன்.

முதல்வர் ஒப்புதல் தெரிவித்ததும் வீட்டுக்கு வந்து முறைப்படி தட்டச்சுச் செய்து, படியினை எடுத்துக் கொண்டு பட்டினிப்போர்க் குழுவினரைச் சந்திக்கச் சென்றேன். அரசு அறிவிப்பான அந்த அறிக்கையில் நான் கையொப்ப மிட்டிருந்தேன்.

அந்தஅறிக்கை இதுதான்:

''அரசுச் சார்பான 41,417 பள்ளிகளிலும் இப்போது தமிழே பயிற்று மொழியாகவும் பாடமொழியாகவும் உள்ளது. எஞ்சியுள்ள மெட்ரிகுலேசன் முதலான 2,402 பள்ளிகளில் மட்டுமே இந்த முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒன்று முதல் ஐந்து வகுப்புக்குரிய தொடக்கப் பள்ளிகள், நாடு முழுவதும் பரவியுள்ள மழலையர் பள்ளிகள் தொடங்கி மெட்ரிகுலேசன் பள்ளிகள் வரையில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 'தமிழ்' ஒன்றே மொழிப் பாடமாகவும், பயிற்றுமொழியாகவும் இருக்கவேண்டுமென்ற கொள்கையில் தமிழ் அறிஞர்களுக்கும் - தமிழக அரசுக்கும் எந்தவொரு கருத்து வேறுபாடும் கிடையாது. இக்கொள்கையினை நிறைவேற்றும் வகையில் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு ஏப்ரல் 30க்குள் ஒரு குழு அமைக்கப்படும். மே 31 க்குள் அக்குழுவிடமிருந்து பரிந்துரை அறிக்கை பெற்று வரும் கல்வியாண்டிலேயே அதனை நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகள் அனைத்தையும் அரசு செய்யும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியவாறு உண்ணாநோன்பிருக்கும் தமிழ் அறிஞர்களோடு மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்கள் கலந்து பேசி எடுக்கப்பட்ட முடிவாகும் இது.''

இந்த அறிவிப்பு, போராட்டக்குழுவினர் இடையே படிக்கப்பட்ட போது கைதட்டி வரவேற்றனர். முன்னணியினர்க்கு நானே பழச்சாறு கொடுத்து உண்ணா நோன்பை முடித்து வைத்தேன்.

இந்தப் பட்டினிப்போரில் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் சிலர் இருந்தனர். சிதம்பரம் தா. முருகேசன் போன்ற சிலர் தளர்ச்சியடைந்திருந்தனர். எனினும், 'தமிழ்நாடு' பெயர்க் கோரிக்கைகாக சங்கரலிங்கனார் உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தது போல் ஆகிவிட்டால் தீராத பழி வந்துசேரும் என்று முதல்வர் கவலைப்பட்டார் என்பதை மறக்காமல் சொல்லவேண்டும். எந்த ஒரு தமிழறிஞர் இந்தப் பட்டினிப்போரில் இறந்தாலும் அது அரசுக்கு ஓர் இழுக்காகி விடும் என்றே முதல்வர் கருதினார். எனவேதான் என்னை

அனுப்பிப் பேசச் செய்தார். நானும் இங்குமங்கும் பேசி, பட்டினிப்போரை முடித்துவைத்துவிட்டேன்.

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிட்டு விட்டுத்தான் மேலே செல்லவேண்டும். இந்தப் போராட்டத்தில் பங்குபெற்ற பலர் இருந்தாலும் இவர்களுக்கெல்லாம் இத்தகைய ஊக்கத்தையும் உந்துதலையும் தந்தவர் ஒருவர்தான். அவர்தான் நா. அருணாசலம்.

இந்தப் பட்டினிப்போருக்கான எல்லா ஏற்பாடுகளையும், எனக்குத் தெரிய பல இலட்சம் உருபாய்க்கு மேல் செலவிட்டு, இந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர் நா. அருணாசலம்தான். இதற்கு முன் வேறுயாரும் தமிழகம் முழுவதும் ஆட்களைத் திரட்டி இத்தகையதோர் போராட்டத்தை நடத்தியதில்லை.

எனவே தமிழ்ச் சான்றோர் பேரவை என்றால் நா. அருணாசலத்தைக் குறிப்பிட்ட பின்தான் அடுத்த செய்திக்குப் போகவேண்டும்

பட்டினிப்போரினை நானே நேரில் இருந்து முடிவுக்குக் கொண்டு வந்தேன். 'தினமலர்' (27.4.99) தரும் செய்தி இது :

''மூன்று கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்ச் சான்றோர் பேரவையினர் நேற்று முன்தினம் வள்ளுவர் கோட்டம் முன் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை துவக்கினர். தமிழண்ணல் தலைமை வகித்தார். தமிழறிஞர்கள் முருகேசனார், தமிழப்பன், தியாகு, மணியரசன், இளவரசு, சிற்பி பாலசுப்ரமணியம் உட்பட மொத்தம் 103 பேர் உண்ணாவிரதம் இருந்தனர்.

போராட்டக் குழுவினருடன் தமிழ் ஆட்சி மொழித்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன், இரண்டு முறை பேச்சுவார்த்தை நடத்தினார். இதுகுறித்து அமைச்சர் நிருபர்களிடம் கூறியதாவது :

''தமிழில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற கொள்கையில் எங்களுக்கு வேறுபாடு கிடையாது. இதைச் செயற்படுத்துவதில் சில சட்டச் சிக்கல்கள் உள்ளன. இதுகுறித்து வேறொரு மாநிலத்தில் அரசாணை பிறப்பித்திருந்தாலும், நடைமுறைப்படுத்துவதில் சட்டச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இது நல்ல கொள்கை என்பதால் இதை எந்த வகையில் செயற்படுத்தலாம் என்பது குறித்து ஆழ்ந்து சிந்தித்து நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யும்.

பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், தமிழில் படிக்க விரும்பும் மாணவர்களை வகுப்புகளில் சேர்ப்பது குறித்து பேராசிரியர்கள் மற்றும் உயர்கல்விச் செயலாளருடன் கலந்து பேசப்பட்டது. இப்பாடத்திற்குரிய அனைத்து நூல்களும் தயாராக உள்ளன. மாணவர்களும் தமிழில் படிக்க ஆர்வமாக உள்ளனர். வெகு விரைவில் முடிவு செய்யப்படும். இதுதொடர்பாக, உயர்கல்விச் செயலாளர் வரும் 29ம் தேதி டில்லிக்கு அனுப்பி வைக்கப்படுவார்.

ஒன்றாம் வகுப்பு முதல் 5 வரை தமிழில் பயிற்றுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அரசு சார்புடைய பள்ளிகளான 41 ஆயிரத்து 417 பள்ளிகளில் ஏற்கெனவே தமிழ் பாட மொழியாகவும், பயிற்று மொழியாகவும் இருக்கிறது. 2 ஆயிரத்து 187 மெட்ரிகுலேசன் பள்ளிகள், 194 சி.பி.எஸ்.இ., பள்ளிகள் மற்றும் 41 ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் ஆக மொத்தம் 2 ஆயிரத்து 422 பள்ளிகளில்தான் தமிழை பாட மொழி மற்றும் பயிற்சி மொழியாக்க வேண்டும். இதில், எங்களுக்கு இரண்டாவது கருத்து கிடையாது. இருப்பினும் இதிலும் சட்டச் சிக்கல்கள் உள்ளன.

இது தொடர்பாக இவ்வாரத்திற்குள் ஒரு குழு அமைக்கப்படும் என்று முதல்வர் அறிவித்துள்ளார். இதில், ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர், வழக்கறிஞர்கள், சான்றோர் பேரவையில் சில உறுப்பினர்கள், அமைச்சர்கள், செயலாளர்கள் இடம் பெறுவர். இந்தக் குழு முறையாகக் கூடி, சட்டச் சிக்கல்கள் குறித்து ஆராய்ந்து, இறுதி முடிவு எடுக்கும். வரும் கல்வியாண்டிலேயே நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ப, ஜூன் மாதத்திற்குள் சட்டச் சிக்கல் தீர்க்கப்படுவதற்கு ஆவன செய்யப்படும். விரைவில், ஆயிரத்து எட்டு மொழிச் சிறுபான்மையினர் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் நிரப்பப் படுவார்கள்.''

இவ்வாறு அமைச்சர் தமிழ்க்குடிமகன் கூறினார்.

அரசு எடுத்துள்ள முடிவை போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழறிஞர்கள் ஏற்றுக் கொண்டனர். இதையடுத்து, நேற்று முற்பகல் தமிழண்ணலுக்கு பழச்சாறு கொடுத்து அமைச்சர் தமிழ்க்குடிமகன் உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.''

இதில் தமிழறிஞர்களின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டது குறித்தும், அரசின் நிலை குறித்தும் தெளிவான விளக்கம் தரப்பட்டுள்ளது.

26.4.99 அன்றே தமிழண்ணல் பெயரில் போராட்டக்குழுவின் நன்றி அறிவிப்பு அறிக்கை வெளியானது.

''தமிழக அரசுக்குப் போராட்டக் குழுவின் வேண்டுகோள்

எங்கள் தமிழ்ச் சான்றோர் பேரவையின் சார்பாகப் போராட்டக் குழுவினர் முன்வைத்த மூன்று கோரிக்கைகள் பற்றி அரசு மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கும், மாண்புமிகு அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் நேரில் வந்து விளக்கியதற்கும் நன்றியுடையேம்.

நாங்கள் முன்வைத்த மூன்று கோரிக்கைகளில் உயர்கல்வியில் தமிழ்வழி பற்றிய எமது இரண்டாவது கோரிக்கை குறித்தும் தமிழ்வழி படித்தவர்க்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை தர வேண்டும் என்ற மூன்றாவது கோரிக்கை குறித்தும் அரசின் சார்பில் விளக்கம் அளித்ததை ஏற்று, அவற்றை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

எங்களது முதல் கோரிக்கையாகிய குழந்தைகளுக்குத் தமிழ்வழிக் கல்வி என்பது தமிழுலகு தழுவிய மிக உயிரான கோரிக்கை என்று நாங்கள் கருதுகிறோம். ஒன்று முத்ல் ஐந்து வகுப்புக்குரிய தொடக்கப் பள்ளிகள், நாடு முழுதும் பரவியுள்ள நர்சரிப் பள்ளிகள் தொடங்கி மெட்ரிகுலேசன் பள்ளிகள் உட்பட அனைத்துப் பள்ளிகளிலும், தமிழ் ஒன்றே மொழிப் பாடமாகவும், பயிற்று மொழியாகவும் இருக்கவேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக் கொள்வதாகத் தமிழக அரசு அறிவிக்க வேண்டும். இக்கொள்கையினை நிறைவேற்றும் வகையில் அரசு எங்களிடம் தெரிவித்தது போல் ஏப்ரல் 30-க்குள் குழு அமைக்க வேண்டுமென்றும், மே 31க்குள் குழுவிடமிருந்து அறிக்கை பெற வேண்டுமென்றும், அவ்வறிக்கையின் அடிப்படையில் ஆணை பிறப்பித்து உடனடியாக வரும் கல்வியாண்டிலேயே நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் விழைந்து வேண்டுகிறோம்.

இதனை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறோம்'' என்று தெரிவித்தனர்.

28.4.99 அன்று ஒரு நன்றி அறிவிப்பு அறிக்கையினையும் வெளியிட்டது தமிழ்ச் சான்றோர் பேரவை.

''தமிழ்ச் சான்றோர் பேரவையின் சார்பில், தமிழ் வழிக்கல்வி பற்றிய மூன்று கோரிக்கைகளை முன் வைத்து 25.4.99 ஆம் நாளன்று தொடங்கி நடந்த நூறு தமிழ் உணர்வாளர்களின் பட்டினிப் போரை மதித்து தமிழக அரசு பேச்சு வார்த்தைகள் நடத்தி அவற்றைச் செயல்படுத்தும் நோக்கில் உறுதிமொழி தந்ததற்கு நன்றி உடையவர்களாக இருக்கின்றாம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும்

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கும்,

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி பண்பாட்டுத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும்

எங்கள் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

எங்கள்கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தும் வகையில் 30.4.99க்குள் அரசு அமைக்க இருக்கும் ஆய்வுக்குழுவில் எமது பேரவையின் சார்பில் எழுவரை இணைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.''

அமையவிருக்கும் குழுவில் தமிழ்ச் சான்றோர் பேரவை சார்பில் எழுவரை இணைத்துக்கொள்ள வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தனர். இந்தச் சூழ்நிலைகளை ஒட்டி, முதல்வர் அவர்களால் ஒரு குழு அமைக்கப்பட்டது.

30.4.99 நாளிட்ட 'நக்கீரன்' இதழில் வெளிவந்த செய்திகள் சில நம் கவனத்துக்கு உரியவை.

''தமிழுக்காக ஐயாயிரம் பேர் திரண்டு, கொளுத்தும் வெயிலில் பேரணி நடத்துவதென்பது இளைய தலைமுறைக்கு புதிய காட்சிதான். தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தி தமிழ்ச் சான்றோர் பேரவையின் சார்பில் 100 தமிழறிஞர்கள் சாகும்வரை பட்டினி போராட்டத்தை தொடங்கிய ஏப்ரல் 25-ந் தேதியன்று சென்னையில் நடந்த பேரணியில் உணர்ச்சி அலைகள் பரவியிருந்தன. போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழறிஞர்கள் ஒரு லாரியில் அமர்ந்தபடி பேரணியில் வந்தனர். மொழிக்காக உயிர் துறக்க முன்வந்த தமிழறிஞர்களின் போராட்டம், அரசுக்கும் சான்றோர் பேரவைக்கும் இடையிலான யுத்தமாக மாறியது, தமிழ் ஆர்வலர்களுக்கு வேதனையை ஏற்படுத்தியது.

போராட்ட தினத்திற்கு முதல் நாள் முதல்வர் வெளியிட்ட அறிக்கையில், அனைத்துப் பள்ளிகளிலும் தமிழே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்று உத்தரவிடுவதால் சட்டச்சிக்கல்கள் ஏற்படும் என்றும், இதுபற்றி ஆராய்வதற்கு அறிஞர்களும் சட்ட நிபுணர்களும் அடங்கிய குழுவை அமைப்பது பற்றி அரசு பரிசீலிப்பதாகவும், எனவே தமிழறிஞர்கள் தங்கள் போராட்டத்தை ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டமாக நடத்தி முடிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

முதல்வரின் அறிக்கை சான்றோர் பேரவையினருக்கு திருப்தி அளிக்கவில்லை. ''ஒன்றுமே தெரியாத பச்சைக் குழந்தையைப் போல முதல்வர் அறிக்கைவிட்டிருக்கிறார். எங்கள் கோரிக்கையில் ஒன்றைக்கூட அவர் ஏற்றுக்கொள்ளாத நிலையில் நாங்கள் எப்படி போராட்டத்தை கைவிடமுடியும்? மார்ச் 23-ந் தேதியே அடையாள உண்ணாநோன்பு இருந்தோம். அப்போது இந்த அரசு என்ன செய்தது? எங்கள் வலிமையை குறைவாக மதிப்பிட்டுவிட்டார் கலைஞர். கோரிக்கையை ஏற்கும்வரை, போராட்டம் தொடரும்'' என்றார் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்ட தமிழாசிரியர் விருத்தாச்சலம்.

இந்த சூழ்நிலையில், முதல்வரின் வேண்டுகோளை ஏற்று உண்ணாவிரதப் போராட்டத்திலிருந்து விலகுவதாக சான்றோர் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சிலம்பொலி செல்லப்பன், 24-ந் தேதி நள்ளிரவு வெளியிட்ட அறிக்கை பரபரப்பை உண்டாக்கியது. ''முதல்வர் சார்பில் பேராசிரியரும் தமிழ்க்குடிமகனும் எங்களிடம் பேசினர். அதனை ஏற்று, அடையாள உண்ணா நோன்புபோராட்டம் மட்டும் நடத்தலாம் என்று பேரவையினரிடம் தெரிவித்தோம். அவர்கள் ஏற்கவில்லை. அவர்கள் எல்லோரும் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள், கலைஞரை தமிழ்த்துரோகி என்று சித்தரிப்பதுதான் அவர்களின் நோக்கமாக இருக்கிறது. அதற்கு நான் பயன்பட விரும்பவில்லை'' என்கிறார் சிலம்பொலி செல்லப்பன்.

சிலம்பொலியாரின் முடிவால் கடைசி நேர பரபரப்பு ஏற்பட்டபோதும் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவது என்ற முடிவில் உறுதியாக இருந்தனர் சான்றோர் பேரவையினர். ''நவம்பர் மாதம் 25-ந் தேதியே இந்தப் போராட்டத்திற்கான அறிவிப்பை நாங்கள் வெளியிட்டு விட்டோம். தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து கூட்டங்கள் நடத்தி போராட்டத்திற்கு ஆதரவைத் திரட்டியிருக்கிறோம். எல்லா இடங்களிலும் சிலம்பொலி செல்லப்பனின் பெயரைத்தான் முன்னிறுத்தினோம். இந்தப் பட்டினிப் போராட்டத்திற்காக 20 லட்ச ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் மறந்துவிட்டு, கலைஞரின் சூழ்ச்சி வலையில் விழுந்துவிட்டார் சிலம்பொலியார்'' என்றார் பேரவை சார்பாக தமிழகம் முழுவதும் பிரச்சாரத்தில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர்.

அரசுக்கு எதிரான நேரடி யுத்தமாக பட்டினிப் போராட்டம் மாறியதால் பேரணியில் எழுப்பிய முழக்கங்கள் உக்கிரமாக இருந்தன. சான்றோர் பேரவையினருடன் தமிழர் தேசிய இயக்கம், தமிழ்த்தேச பொதுவுடைமைக்

கட்சி, தமிழ்-தமிழர் இயக்கம், பெருஞ்சித்திரனார் பேரவை, உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக்கட்சி, தமிழக மாணவர் முன்னணி உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும் பேரணியில் பங்கேற்றன. சைதாப்பேட்டை மறைமலைநகர் பாலத்தில் தொடங்கிய பேரணி, வள்ளுவர் கோட்டத்தில் நிறைவடைய, அங்கே பட்டினிப்போர் ஆரம்பமானது.

சிலம்பொலியார் கழன்றுகொண்டதால் தமிழண்ணல் தலைமையில் 100 தமிழறிஞர்கள், சாகும்வரை பட்டினிப் போரில் ஈடுபட்டனர். 'காத்திருப்போர் பட்டியலில் இடம் பெற்றிருந்தவர்களில் மூவர் தங்களுக்கும் அனுமதியளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள, உண்ணாவிரதப் போராளிகளின் எண்ணிக்கை 103 என உயர்ந்தது. ''சிலம்பொலியார் எடுத்த முடிவால் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்பதை நீங்களே இங்கு பார்க்கலாம். அவரைத் தவிர, பட்டியலில் இருந்த அத்தனை பேரும் இங்கே பங்கேற்றிருக்கிறார்கள். அவர் பின்னால் ஒருவர் கூடப் போகவில்லை. கலைஞரின் 'ராஜதந்திரம்' இங்கே எடுபடாது'' என்றார் கவிஞர் ஜெயபாஸ்கரன்.

உண்ணாவிரதமிருக்க ஒரு நாள் மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருந்ததால் மாலையில் தமிழறிஞர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அரசு என்ன உத்தரவிடப்போகிறது என்பதை எதிர்பார்த்தபடியே போராட்டப்பந்தலில் கருத்துரைகள், கலைநிகழ்ச்சிகள், கொள்கைப்பாடல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. மாலை 6 மணிக்கு போலீஸ் வாகனங்கள் பந்தலருகே வர, பதட்டம் அதிகரித்தது.

''திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக அடிக்கல் நாட்டு விழாவில் முதல்வர் பங்கேற்பதால் அவர் அங்கிருந்து திரும்பிய பிறகே, என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி முடிவெடுக்கப்படும்'' என போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அரசு சார்பில் 'அண்டர் செகரட்டரி' மட்டத்தில் போராட்டக் குழுவினருடன் பேசுவதற்குத் தயாராக இருப்பதாக தகவல் வர, சான்றோர் பேரவையினர் அதை ஏற்க மறுத்துவிட்டனர். ''முதல்வருடன் பேசுவது மட்டுமே பயனளிக்கும்'' என அவர்கள் தெரிவித்துவிட்டனர். கோரிக்கைகளை அரசு ஏற்கும்வரை எவ்வித சமரசத்துக்கும் இடமில்லை என்று போராட்டப் பந்தலில் சுப. வீரபாண்டியன் அறிவித்தபோது இரவு 7 மணி.

பல்வேறு அமைப்பினரும் தமிழறிஞர்களின் போராட்டத்திற்கு, நேரில் வந்து தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர். நேரம் கடந்து கொண்டேயிருக்க, பட்டினிப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழறிஞர்கள் உடல் தளர்ந்து காணப்பட்டனர். சான்றோர் பேரவையின் நிறுவனர் அருணாசலம் ஏற்பாட்டில்

தமிழறிஞர்களுக்கு தலையணை, பாய் வழங்கப்பட அவர்கள் ஓய்வெடுத்தனர். பந்தல் முன்பாக இளைஞர்களும் தமிழ் ஆர்வலர்களும் பெரியளவில் திரண்டிருந்தனர்.

பெரியார்தாசன், அறிவுமதி ஆகியோர் கலைஞரை கடுமையாக விமர்சித்து பேசிச்கொண்டிருந்தபோது, திரண்டிருந்த கூட்டத்தில் சிலரிடம் கருத்து கேட்டோம். ''தி.மு.க. ஆட்சியில்தான் தமிழ்வழி கல்வியை நடைமுறைப்படுத்த முடியும். ஆனால் அவர்களே இதை கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள், கல்வியமைச்சர் பேராசிரியர் இன்னமும் ஆங்கிலத்திற்கு வால்பிடிக்கிறார். தமிழ்க்குடிமகனால் எதுவும் செய்ய இயலவில்லை. கலைஞர் எங்களை அலட்சியப்படுத்துகிறார். எங்கள் சக்தியை உணர்த்துவதற்காகத் தான் இந்த இரவு வேளையிலும் கலையாமல் இங்கே இருக்கிறோம்'' என்றனர்.

தமிழ் ஆர்வலர்களின் உணர்வு, அரசின் பார்வையில் நெருக்கடியாகவே தெரிந்தது. ''தமிழ் வழியில் கல்வி கற்பிக்கப்படவேண்டும், தமிழ் படித்தோருக்கு வேலையில் முன்னுரிமை தரவேண்டும் என்பதுதான் எங்களது கொள்கையும், அதனை உடனடியாக நிறைவேற்றுவதில் சட்டச்சிக்கல்கள் இருக்கின்றன. அதனால்தான் குழு அமைத்து பரிசீலித்து அதன் பரிந்துரைகளை நிறைவேற்ற முடிவு செய்திருக்கிறோம்'' என்றது அரசு தரப்பு.

இதைத்தான் அமைச்சர் தமிழ்க்குடிமகனும், 26-ந் தேதியன்று காலையில் உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்து தெரிவித்தார். கோரிக்கைகளை அரசு ஏற்கும் வரை போராட்டத்தை கைவிடுவதில்லை என்பதில் தொடர்ந்து உறுதிகாட்டிய சான்றோர் பேரவையினர், அமைச்சரின் பேச்சு குறித்து தங்களது பதிலை அரைமணி நேரத்தில் தெரிவிப்பதாக கூறினர். முதல் நாள் இரவே தமிழண்ணல், மணியரசன், அருணாசலம் உள்ளிட்டோரை அமைச்சர் அழைத்துப் பேசினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏப்ரல் 26-ந் தேதி பிற்பகலில் மீண்டும் உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்தார் தமிழ்க்குடிமகன். ''முதல்வர் ஏற்கனவே அறிவித்தவாறு, ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் ஏப்ரல் 30-க்குள் ஒரு குழு அமைக்கப்படும். மே 31-க்குள் அக்குழுவிலிருந்து பரிந்துரை அறிக்கை பெற்று, வரும் கல்வியாண்டிலேயே 1 முதல் 5-ம் வகுப்பு வரை தமிழை பயிற்றுமொழியாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் அனைத்தையும் அரசு செய்யும்'' என்ற உறுதிமொழியை அறிவித்தார்.

தங்கள் கோரிக்கைகளில் முக்கியமானதை அரசு ஏற்றுக் கொண்டதையடுத்து உண்ணாவிரதத்தை நிறைவு செய்யத் தயாரான

தமிழறிஞர்களுக்கு பழச்சாறு கொடுத்து பட்டினிப் போராட்டத்தை முடித்து வைத்தார் தமிழ்க்குடிமகன்.

கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. அரசுக்கு ஒத்துழைக்க வேண்டிய பொறுப்பு அறிஞர்களுக்கு இருக்கிறது. இந்தப் போராட்டத்தில் தற்காலிக வெற்றி அரசுக்கா, அறிஞர்களுக்கா என்பது முக்கியமல்ல. நிரந்தர வெற்றி தமிழுக்கு கிடைக்க வேண்டும் என்பதே முக்கியம்.''

இதிலிருந்து சில உண்மைகளை அறிந்துகொள்ள முடியும். முதல்வரின் அறிக்கை தமிழ்ச் சான்றோர் பேரவையினர்க்குத் திருப்தி அளிக்கவில்லை என்பது ஒன்று. எனினும் இறுதியில் முதல்வர்தான் சரியான தீர்வினை உணர்த்தி, இப்போராட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தவர். சிலம்பொலி செல்லப்பன் எடுத்த முடிவு அடுத்தது. பட்டினிப்போர் நடத்துபவர்கள் எல்லோரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள் என்கிறார் அவர். இது முற்றிலும் தவறு என்பதனை என்னால் உறுதி செய்யமுடியும். தமிழ் வழிக்கல்விக்கெனப் போராட முன் வருபவர்கள் மீது அரசின் சார்பில் என் போன்றவர்களே குற்றம் சாட்டாதபோது சிலம்பொலி செல்லப்பன் அப்படிக் குற்றம் சாட்டலாமா?

தீர்மானத்தை முன் மொழிந்து, இயக்கத்தை முன்னெடுத்துச் சென்ற சிலம்பொலி செல்லப்பன் இப்படி முடிவெடுக்கக் காரணம் கண்டிப்பாக நானல்ல. தனிப்பட்ட முறையில் அவரிடம் எந்தப் பேச்சுவார்த்தையும் நடக்கவில்லை. எல்லாமே மூன்றுக்கு மேற்பட்ட குழுவினரோடுதான்; அப்படி ஏதாவது நேர்ந்திருந்தால் அது அன்பழகன் ஏற்படுத்திய விளைவாகத்தான் இருக்கும்.

இதில் கலைஞரின் சூழ்ச்சி வலை என்று ஏதுமில்லை. இது அன்பழகனின் வலை என்றே சொல்லமுடியும். 'கலைஞரின் ராஜதந்திரம்' என்று இதில் ஏதுமில்லை என்பதே நானறிந்த உண்மை. இதில் ஆர்வமோ அக்கறையோ எடுத்துக் கொள்ளாதவர் அன்பழகன்தான் என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும்.

கவனியுங்கள்

''தமிழறிஞர்கள் உடல் தளர்ந்து காணப்பட்டனர்'' என்கிறது இதழ். ஒரு நாள் உண்ணா நோன்புதான். அதற்குள்ளேயே சிலர் தளர்ந்துவிட்டனர். இவற்றை நான் அறிந்ததால்தான் உடனடியாக முதல்வரிடம் பேசினேன்.

முடிவை நோக்கி உழைத்தேன். முடிவும் ஏற்பட்டது. இவர்களில் யாருக்கும் எதுவும் ஆகிவிடக்கூடாது என்றே முதல்வர் என்னிடம் தெரிவித்தார்.

ஒன்றைச் சரியாகச் சொல்லியிருக்கிறார்கள்.

''கல்வியமைச்சர் இயலவில்லை''

இரண்டுமே உண்மைதான். என் 'தமிழ் வளர்ச்சித் துறைக்கு நிதி ஒதுக்கீடு 20 கோடி; கல்வித்துறைக்கு 4949 கோடி. இதில் தமிழ்க்குடிமகன் நிலை தெரிந்துவிடும். மேலும், கல்வித்துறையைக் கையில் வைத்திருக்கும் கல்வி அமைச்சரை, மீறி - தமிழ்க்குடிமகன் என்ன செய்துவிடமுடியும்?

மே 99 இல் வெளிவந்துள்ள 'தென்மொழி' இதழின் ஆசிரியவுரை இது:

நூற்றுவர் பட்டினிப் போரின் வெற்றி எதிர்காலச் செயற்பாடுகளிலேயே உள்ளது.

''தமிழ்வழிக் கல்வித் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்துத் தமிழ்நல - பொதுநல அமைப்புகள் மற்றும் இயக்கங்கள் பலவற்றின் ஒருங்கிணைப்பில் அண்மையில் தமிழ்ச் சான்றோர் பேரவை முன்னெடுத்த நூற்றுவர் பட்டினிப்போர், அரசு எதிர்நடவடிக்கைகளாக மேற்கொண்ட ஆம்புடைகள் (உபாயங்கள்) அனைத்தையும் முறியடித்துத் திட்டமிட்டபடி எழுச்சியாகவும் செம்மையாகவும் நடைபெற்றதோடு முதற்கட்ட வெற்றியையும் ஈட்டியுள்ளது.

அரசு எதிர்நடவடிக்கைகள் எடுத்ததாம்; இவர்கள் முறியடித்தார்களாம்.

இப்படி எழுதித்தான் அமைப்புகளுக்குள் மனக்கசப்பை உண்டாக்கி விடுகிறார்கள். தென்மொழியும் இதைச் செய்துள்ளது. அரசு எந்த எதிர் நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒருவகையில் பார்த்தால் அரசு இந்த அளவில் விரைந்து இணக்கத்தோடு செயற்பட்டிராவிட்டால் பட்டினிப்போரில் பலர் உயிரிழக்கவும் - படிப்படியாய் 'போர்' பிசுபிசுக்கவும் நேர்ந்திருக்கும். இதைத் தவிர்த்தே ஆகவேண்டும் என்று நினைத்த அரசு, எதிர் நடவடிக்கைகள் எடுத்ததாகச் சொல்வது 'அபாண்டம்' என்றே கூறுவேன்.

''போராட்டமோவெனில் தமிழ்ச் சான்றோர் பேரவையைப் பொறுத்த அளவில் முதற்போராட்டமாக இருந்தாலும் கோரிக்கைகளைப் பொறுத்து இது முதற் போராட்டமன்று. தலைநகர்த் தமிழ்க் கழகம், தமிழுரிமைக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் - இயக்கங்கள், இற்றை அரசை மட்டுமன்றி

முந்தைய அரசுகளையும் நோக்கிப் பல்லாண்டுக் காலமாகத் தமிழ்வழிக் கல்வித் தொடர்பான கோரிக்கைகளை வலியுறுத்திக் கருத்தரங்கம், பொதுக்கூட்டம், மாநாடு முதலியன நடத்தியதோடு ஆரப்பாட்டம், மறியல், முற்றுகை எனப் பல்வகைப் பட்ட போராட்டங்களையும் நடத்தி வந்துள்ளன.

இவற்றுக்கெல்லாம் அசைந்து கொடுக்காத ஆட்சியாளர்கள், வேறுவகையில் தமிழ்த்தொடர்பான புதுப்புது அறிவிப்புகளை வெளியிட்டும் செயற்பாடுகளை மேற்கொண்டும் திசைதிருப்பும் போக்கிலேயே நடந்துகொண்டனர். இவற்றாலெல்லாம் மனங்குமுறிக் கொண்டிருந்த தமிழுணர்வாளர்களிடையே வலிமையான இப் போராட்டம் பற்றிய அறிவிப்பும் முனைப்பான முயற்சிகளும் எழுச்சிமிகு வரவேற்பைப் பெற்றன. போராட்டத்துக்கு முந்திய நாள் பேரவையின் ஒருங்கிணைப்பாளரான போராட்டக் குழுத் தலைவரே போராட்ட முயற்சியைக் கைவிட முன்வந்தபோதும், தாமே பொறுப்பினின்று விலகிக் கொண்ட நிலையிலும் எவ்வகைத் துளக்கமுமின்றிப் போராட்டம் எழுச்சியுற நடைபெற்றது; ஒரு சிறிதும் உறுதி குன்றாமல் தொடரும் நிலை இருந்தது !

முதலமைச்சரைச் சந்தித்துக் கோரிக்கைகளை வலியுறுத்தியதோடு போராட்ட அறிவிப்பையும் தெரிவித்திருந்தாலும், சட்டமன்றத்தில் உறுப்பினர் சிலர் இது தொடர்பாகப் பேசியுங்கூட இறுதிவரை அரசு எவ்வகை நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறு அரசு அமைதி பூண்டிருந்துங்கூட ஒருவகையில் நல்லது என்றே நாம் கருதினோம்.

அரசு, ஆங்கிலவழிப் பள்ளிக்காரர்களுக்கு ஆக்கமாக நிற்கக்கூடும். ஆதலால், எதிர்க்கட்சிகளெல்லாம் இக்கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு ஒருமுகமாக வலியுறுத்தும் நிலை ஏற்பட்டு, அதன்பின் அரசு நமக்குச் சார்பாகச் செயற்பட்டால் எதிர்கால நோக்கிலும் அது நன்றாம் என்பதே நமது கருத்தாய் இருந்தது.

நாம் எதிர்பார்த்தது போல் மற்ற கட்சிகளெல்லாம் தமிழுக்குச் சார்பாக ஒன்றுபட்டன. மதவெறி அரசியல் நடத்தும் பாரதீய சனதாவேகூடச் சிறுபொடி வைத்தேனும் தமிழுக்குச் சார்பாகத் தீர்மானம் போடுவதற்கான கட்டாயம் ஏற்பட்டது.

போராட்டத்துக்கு ஒருநாள் இடைவெளியில் முதலமைச்சரின் ஏடலுக்கேற்பப் போராட்டக் குழுவினரை அழைத்துப் பேசிய கல்வியமைச்சரின்

விளக்கம் அவர்கட்கு நிறைவளிக்காமையால் போராட்டத் திட்டத்தில் எவ்வகை மாற்றமும் ஏற்படாமற் போகவே மறுநாள் முதலமைச்சரின் வேண்டுகோள் அறிக்கை வெளிவந்தது.

இப் போராட்டக் கோரிக்கைகளை ஏற்றுச் செயற்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் என்னுமாறு சில வினாக்களை எழுப்பியும் அவற்றைப் பற்றி ஆய்வு செய்யக் குழுவொன்றைத் தாம் அமர்த்துவதாகக் கூறியும் ஒருநாள் அடையாளப் போராட்டமாக நடத்தி முடித்துக் கொள்ளுமாறு வேண்டியும் முதலமைச்சர் கலைஞர் விடுத்த அறிக்கை, அவரது நீண்ட கால அரசியற் பட்டறிவையோ உண்மையான தமிழ்ப் பற்றையோ, தமிழ்நாட்டின் நீண்டகால முதலமைச்சர்; திறமைசான்ற ஆள்வினையாளர் என்னும் நிலையையோ காட்டுவதாக இல்லை. தமிழ்வழிக் கல்விப் போராட்டத்துக்கு எதிராகச் சிறுபான்மையரைத் தூண்டிவிடும் போக்கில் அமைந்திருந்ததில் மட்டுமே கலைஞரின் எழுத்துச் சாயல் கொண்டதாக இருந்தது.

கடந்த ஆறு மாதங்கட்கு முன்இப்போராட்டத்துக்கு அறிவிப்புச் செய்யப்பட்டவுடன், தமிழ்த் தொடர்பான உணர்வெழுச்சியைச் செயலிழக்கச் செய்யும் வகையில் தொடக்கப் பள்ளிகளில் - முதல் வகுப்பு முதலே ஆங்கிலம் முதன்மையான மொழிப் பாடமாகவும் மூன்றில் ஒரு பாடத்துக்குப் பயிற்றுமொழியாகவும் அமைய வழிவகுக்கும் கல்வித் திட்டத்தை அரசு அறிவித்தமையால் நொந்துபோய் இருந்த தமிழுணர்வாளர்கள், மேற்கூறிய கலைஞரின் வேண்டுகோள் அறிக்கையை ஏற்றுப் போராட்டத்தைக் கைவிட அணியமாக இல்லை!

ஈண்டுத் திரு. சிலம்பொலி செல்லப்பனார் விலகல் குறித்துச் சில சொல்லுவது இன்றியமையாததாக உள்ளது. திரு. செல்லப்பனார் அருந்தமிழ் ஆர்வலர். தமிழ்த் துறைக்கு அப்பாற்பட்ட வேறு துறையில் அவர் அலுவலராக இருந்தும் தாமே விரும்பிப் பயின்ற இலக்கிய அறிஞர்; திறமான இலக்கியச் சொற்பொழிவாளர்; தமிழுணர்வாளர் என்னும் அளவில் அவர்பால் நாம் நன்மதிப்புடையோம். ஆயினும் அவர் இப் போராட்டத்தை அறிவித்ததும், போராட்டத்துக்குத் தலைமையேற்று நடத்த முன் வந்ததுந்தாம் நமக்கு வியப்பளித்தனவே யல்லாமல், அவர் கல்வியமைச்சருடன் பேச்சு நடத்துதற்குக் குழுவினரைக் கலந்து கொள்ளாமலே, அன்றைய நிலையில் அக் குழுவினரல்லாதார் சிலரையும் உடனழைத்துக் கொண்டு சென்று வந்ததோ, கழுத்துப் பிடியாக இருக்கும் நிலையில் போராட்டத்தை ஒத்தி வைக்கலாம் என்று கூறிவிட்டு வீட்டில் இருந்துகொண்டதோ, பின் பொறுப்பினின்றும் விலகிக்கொண்டதோ நமக்கு வியப்பளிக்கவில்லை! ‘விடை பெறுகிறேன்’

என்னும் அவரது கடிதம் எத்தகைய அழகிய புனைந்துரை என்பதை எண்ணும் போதுதான் நமக்கு வியப்பு மேலிடுகிறது!

தமிழகப் பெருவிழாவில் அவர் இப் போராட்டத்தை அறிவித்த முறையும் மேற்சுட்டியவாறான தொடர்ந்த நடவடிக்கைகளும் அவர் பல்வேறு இயக்கங்களையும் ஒருகுடைக்கீழ்க் கட்டமைக்கும் நோக்குடைய பேரவையின் ஒருங்கிணைப்பாளர் என்பதைக் காட்டுவதற்கு மாறாக, அவர் பல்லாண்டுக் காலம் அரசு அதிகாரியாக இருந்து ஓய்வுபெற்ற ஒருவர் என்பதையே வெளிப்படுத்தின.

போராட்டக் குழுவினர் வீடு தேடிச் சென்று, அழைத்த போதாவது வந்து தம் பக்கத்து ஞாயத்தை எடுத்து விளக்கி ஏனையோரைத் தம் முடிபுநோக்கி இணக்குவதற்கும் திரு. செல்லப்பனார் முற்படவில்லை. போராட்டத்தை ஒத்திவைப்பது என்பதுதான் என்ன? தி.மு.கழகம் திராவிட நாடு பற்றிய கொள்கையை ஒத்தி வைத்திருப்பதும், தமிழ்நாட்டரசு மதுவிலக்குக் கொள்கையை ஒத்திவைத்திருப்பதும் போன்றதுதானே!

எப்படியோ, சிலம்பொலி செல்லப்பனார்,

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்

என்னுந் திருக்குறளை மெய்ப்பித்துவிட்டார். இது நிற்க!

இனி, அற்றை (25.4.'99) நாட் காலையில் சென்னை - சைதை மறைமலையடிகள் பாலத்தினின்றும் புறப்பட்ட பேரணி, சிலர் எதிர்பார்த்தது போலவும் அஞ்சியது போலவும் வன்முறைகளுக்குச் சிறிதளவும் இடனின்றியும், பல்வேறு இயக்கத்தவர்களும் தத்தம் கொடியும் பதாகையுந் தாங்கி வந்தாலும் ஒருமித்த உணர்வோடும், போராட்டக் குழுவினர் வகுத்தளித்தவற்றைத் தவிர வேறு எவ்வகை முழக்கமும் எழுப்பாமல் பெரிதும் கட்டுப்பாடு வாய்ந்ததாகவும் அதேநேரத்தில் மிகுந்த எழுச்சியுடனும் நடைபெற்றது. அருந்தமிழ் ஆற்றலைப் புலப்படுத்துவதாக அமைந்தது!

பட்டினிப் போராளிகள் நூற்றுவரும் தமிழ்நலம் ஒன்றே கருதி இப்போராட்டத்தில் ஈடுபட்டமையால் பலர் உடல் சோர்ந்தாலும் உள்ளம் சோர்ந்திலர். இரவெல்லாம் காவலரணாகச் சூழ்ந்திருந்த அன்பர்கள் கூட்டம் சற்றே கலைந்திருந்த இரண்டாம் நாள் விடியற்காலையில், காவல் துறையினர் மூடுந்து (Van) களைக் கொணர்ந்து நிறுத்திக்கொண்டும், போராளிகளை விருப்பத்துக்கு மாறாக ஒளிப்படம் எடுத்தும், அவ்வவர் வாழ்க்கைக்

குறிப்புகளை எழுதித் தருமாறு வேண்டியும், அவர்களைத் தளைப்படுத்தும் கெடுபிடிகளில் இறங்கியபோதிலும் போராளிகள் அனைவரும் சிறிதளவும் எழுச்சி குன்றாமல் எதனையும் எதிர்கொள்ளத் துணிந்து அமைதியாய் இருந்ததும், பட்டினிப் போரில் ஈடுபட்டவர்கள் ஒருபுறம் என்றால், 'கண் இமைப்பிலாது கங்குல் எல்லை காண்பளவும்' எழுச்சிமிகு துணைப் படையாகச் சூழ்ந்திருந்த தமிழ் நெஞ்சங்களின் நிலையும் பெரிதும் பெருமைகொள்ளத் தக்கன!

ஆடுகளின் மோதலில் அரத்தங் குடிக்கக் காத்திருக்கும் ஓநாய்கள் போல், அரசுக்கு ஏதும் நேரும் வகையில் போராட்டம் கட்டுக் குலைந்து திசைமாறி வேறுவகையான விளைவுகள் ஏற்படமாட்டாவா என எதிர்பார்த்துக் காத்திருந்த அரசியல் சூதாடிகள் ஏமாற்றம் அடையும் வகையில் இப் போராட்டம் வெற்றியாக முடிந்தது. இந்திய அரசியல் நெருக்கடி ஒருபுறம் இருந்தாலும், 'நம்மீது அவநம்பிக்கை கொண்டு விடாப்பிடியாகப் போராட்டம் நடத்துபவர்களுக்கு நாம் இணங்குவதா' என்று எண்ணாமல் போராட்டக் கோரிக்கைகளை முழுமையாக ஏற்றுப் போராட்டக் குழுவினர் நிறைவடையத் தக்கவாறு உறுதியளித்து அறிவிப்புத் தரச் செய்ததோடு, அதிற்கண்டபடி குறித்த காலத்தில் குழு அமைத்து நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்துள்ள முதலமைச்சர் கலைஞர் அவர்களை மனமாரப் பாராட்டுகிறோம். தம் ஆட்சிக் காலத்தில் இக் கோரிக்கைகளைச் செயற்படுத்தி நிறைவேற்றி விடுவாராயின், அவ்வெற்றி அவரது புகழ் மகுடத்தில் மேலும் ஒரு பெருவயிர மணியாக ஒளிரும் என்பது ஒருதலை!

கல்வியமைச்சரைப் பொறுத்தவரை அவர் ஒன்றில் உறுதியாக இருக்கிறார். தமிழ்நாடு இந்தியாவில் ஒரு மாநிலமாக இருக்கும்போது நாம் விரும்புகிற கல்விக் கொள்கையை முழுமையாகச் செயற்படுத்த முடியாது என்பதுதான் அது.

தமிழ் ஆட்சிமொழி அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் மிகவும் பொறுப்புணர்ச்சியோடும் அக்கறையோடும் செயற்பட்டுப் போராட்டத்தை வெற்றியாக நிறைவுறச் செய்தது அவரது தமிழுணர்வுக்குக் கிடைத்த பாராட்டுக்குரிய பெருவெற்றி!

முனைவர் தமிழண்ணல் இப் போராட்டத்தில் பங்கேற்பதிலும் அது வெற்றியுறவேண்டும் என்பதிலும் பேரார்வங் கொண்டிருந்தாரே யன்றித் தாமே தலைமையேற்றுப் போராட்டத்தை நடத்த நேரும் என்று எண்ணியிருக்கவும் வாய்ப்பில்லை; அதை அவர் விரும்புபவரும் அல்லர். சூழலின் காரணமாகத்

தலைமைப் பொறுப்பு அவர்மீது சுமத்தப்பட்டது என்பதே உண்மை. ஆயினும் போராட்டம் வெற்றி பெற இறுதிவரை உறுதியாக நின்று அவர் செயற் பட்டதற்கு மற்றையவற்றினும் தமிழுணர்வே அவர் பால் மேலோங்கி யிருந்ததுதான் காரணம்!

கடந்த ஆறு மாதங்கட்கு மேலாக இப் போராட்டம் தொடர்பாக அடுக்கடுக்கான முயற்சிகளைத் திட்டமிட்டுத் திறம்படச் செய்த தமிழ்ச் சான்றோர் பேரவையின் செயற்பாடுகளை - குறிப்பாகத் தம் அனைத்துவகை ஏந்துகளையும் இதன்பொருட்டுச் சிறிதளவும் தயங்காமல் பயன் படுத்திய பேரவையின் நிறுவனர் திரு. நா. அருணாசலம் அவர்களின் செயற்பாடுகள் நல்ல மனம் படைத்த எல்லாராலும் பாராட்டத்தக்கன. ஆயினும் கடந்த காலத்தில், தெரிந்த இனத்தோடு தேர்ந்தெண்ணித் துணியாமல் தன்னெழுச்சியாகப் போராட்டத்தை அறிவித்தது, ஒருநாள் அடையாளப் பட்டினிப் போர்ச் செயற்பாடுகளில் அரசியல் (தேர்தல்) கட்சிகளின் மேனிலைப் பொறுப்பாளர்கள் சிலரை நுழைத்தது, உயர்நிலைக் குழுவினரே கூடச் செய்தித் தாள்களில் பார்த்துத் தெரிந்துகொள்ளும்படி போராட்ட நாளை முடிபுசெய்து அறிவித்தது போன்று நடந்துவிட்ட பிழைகளை எண்ணிப் பார்த்து, எதிர்காலத்தில் அத்தகையன நிகழாமல் எச்சரிக்கையாக இருப்பது அப் பேரவை செழிப்புற வளரவும் வினைப்பாடுகளைச் செம்மையாக மேற்கொள்ளவும் வாய்ப்பாக அமையும் என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இனி, சட்டங்கள் குறுக்கிடுமானால் அவற்றை உடைத்தெறிந்து விட்டுப் புதிய சட்டங்களை பிறப்பிக்கவும் நடுவணரசிடமிருந்து - பொதுப்பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்குக் கல்வித் துறையை மீட்கவும் தமிழ்நாட்டரசு ஆவன செய்தல் வேண்டும்; நடுவணரசை எதிர்த்துப் போராடவும் தமிழ் உணர்வாளர்கள் தயங்க மாட்டார்கள்!

தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியின் சார்பில் அண்மையில் சென்னையில் நடைபெற்ற தமிழ்வழிக் கல்வி எழுச்சி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய கல்வியமைச்சர் அன்பழகனார் வழக்குமன்றம் தடைசெய்யாவிட்டால் இரண்டு ஆண்டுகளில் தமிழ்வழிக் கல்வியை அரசு அறிமுகப்படுத்தும் என்று கூறியிருக்கிறார்.

முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி எடுக்கப்பட்ட முடிவின்படி, வரும் கல்வியாண்டிலேயே தமிழ்வழிக் கல்வியை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு செய்ய வேண்டியிருக்க, கல்வியமைச்சர் இவ்வாறு கூறுவது வியப்பாக உள்ளது. யாரும் வழக்குப் போடாவிட்டால்

இரண்டாண்டு கழித்து தான் அறிமுகம் செய்யப்படும் என்றால், வழக்குப் போட்டுவிட்டால் நடவடிக்கை நழுவவிடப்படும் என்பதுதான் பொருளா?

தமிழ்வழிக் கல்வி முயற்சியை எதிர்த்து வழக்குப் போடும்படி யாரையோ தூண்டிவிடும் வகையில், ஆய்வுக்குழுவினரின் அறிக்கை எத்தகையதாக இருக்க வேண்டும் என்று கோடி காட்டுவது போலவும் கல்வியமைச்சர் பேசியிருப்பது கண்டிக்கத்தக்கது!

இறுதியாக ஒன்று: இப் போராட்டத்தின் வெற்றியென்பது ஏட்டிலோ எழுத்திலோ இல்லை; அரசின் அறிவிப்பிலோ ஆணையிலோ இல்லை; எதிர்காலச் செயற்பாடுகளிலிலேயே உள்ளத! ஆய்வுக்குழு - அறிக்கை உள்ளிட்ட அரசின் நடவடிக்கைகளைக் கண்காணித்து வருவதோடு எதிர்முகத்தில் இருப்பவர்கள் மேற்கொள்ளும் எத்தகைய தீய முயற்சியையும் எதிர்கொண்டு முறியடிக்க அணியமாக இருத்தல் வேண்டும். பறக்கும் படையாகச் செயல்படுதல் வேண்டும்!''

என்னுடைய கருத்து இது.

அரசு திசைதிருப்பும் போக்கிலேயே நடந்துகொண்டது என்பது தென்மொழியின் கருத்து.

அமைச்சரவையில் கூடிப் பேசிப் பலரது கருத்துகளையும் கேட்டறிந்தபின் 13.1.99 இல் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இதனை எதிர்த்து வழக்குப் போடப்பட்டாலும் நீதியரசர் சண்முகம் அரசு ஆணையை ஏற்று நல்ல தீர்ப்பினையே வழங்கினார். இதனை அப்படியே ஓராண்டுக்கு விட்டிருந்தால் பதிவு பெற்ற 2100 மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் ஒழுங்காக இதனைப் பின்பற்றித் தமிழில் இரண்டு பாடங்களைச் சொல்லிக் கொடுத்திருக்கும். இதற்கிடையில் 37 அ விதியை இறுக்கமாகக் கடைப் பிடித்திருந்தால் ஏற்புப் பெறாத மழலையர் (கடைகள்) பள்ளிகள் கதவைச் சாத்திக் கொண்டிருக்கும். ஒரு படி மேலே வந்து வெற்றி பெற்ற அரசு அடுத்த படிநிலை பற்றிச் சிந்திக்கும் எனும் எண்ணமே இவர்களுக்கு இல்லை.

13.1.99 அரசாணையின் போது மழலையர் பள்ளிகள் தொடர்ந்த வழக்கில் என்ன சொன்னார்கள்? மெட்ரிகுலேஷன் பள்ளிகளை விட்டுவிட்டு எங்களை மட்டும் நடத்தச் சொல்கிறீர்களே என்றுதான் வாதிட்டன நீதியரசர் இதனை ஏற்கவில்லை. எனவே சரியான திசை நோக்கிப் போயிருக்கும்.

தமிழ் அமைப்புகளின் தீவிரப் போக்கும் நமது தோல்விக்கு ஒரு காரணம் என்பதை உணர்வார்களா? ஆனால் இவர்களோ 'தமிழ்த் தொடர்பான

உணர்வெழுச்சியைச் செயலிழக்கச் செய்யும் வகையில் 'செயற்பட்டதாகக் குற்றம்' சாட்டுகின்றனர்.

மற்றபடி அவர்கருத்துகளில் பல உண்மைகள் இருப்பதை என்னால் புரிந்துகொள்ள முடியும்.

'முகம்' இதழில் அதன் ஆசிரியர் மாமணி ஓர் ஆசிரியவுரை எழுதியிருந்தார். (1.5.99)

''தமிழ்ச் சான்றோர் பேரவையின் சார்பில் நூறு தமிழ் ஆர்வலர்கள் 25.4.99 அன்று தொடங்கிய பட்டினிப் போர் வெற்றி பெற்றது.

தமிழ்ச் சான்றோர் பேரவையின் முத்தான மூன்று கோரிக்கைகளை தமிழக அரசு ஏற்றுக்கொண்டது.

கலைஞரின் ஒப்புதலோடு உண்ணா நோன்பிருந்த பந்தலுக்கு நேரில் வந்து முனைவர் தமிழ்க்குடிமகனார் இதனை அறிவித்தார்.

போராட்டத் தளபதி முனைவர் தமிழண்ணலுக்கு 26.4.99 அன்று பகல் 1.29 மணிக்குப் பழச்சாறு கொடுத்து உண்ணா நோன்பை முடித்து வைத்தார்.

மூன்று கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்ட தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும் உறுதுணையாக இருந்த முனைவர் மாண்புமிகு தமிழ்க்குடிமகனாருக்கும் நன்றி கூறுகிறோம்.

பட்டினிப் போரில் ஈடுபட்ட 103 தமிழ் ஆர்வலர்களுக்கும் சான்றோர் பேரவை நிறுவனர், புரவலர் நா. அருணாசலம் அய்யா அவர்களுக்கும் நன்றி.

சிலம்பொலி செல்லப்பன் 'விடைகொடுங்கள்' எனும் தலைப்பில் விடுத்த உருக்கமான அறிக்கையை ஒரு முறை படித்து, நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஒரு கோவையாகத் தந்திருப்பதால் பின்வரும் செய்திகளை அப்படியே தருகின்றேன் (நெற்றிக்கண்: 7.5.99)

''தமிழில் எழுதவும், படிக்கவும் வழி வகை கேட்டு மலேசிய அரசுக்கு மலேசிய தமிழர்கள் கோரிக்கை மனு செய்கிறார்கள்!

வாழ்வுரிமை, மொழியுரிமை கேட்டு இந்தியாவிற்கு வெளியே வாழும் தமிழர்கள் ஆங்காங்கே போராடுகிறார்கள்!

உலக அளவில் போற்றத்தக்க உயரிய தமிழ் இலக்கியத்தை, மனித வாழ்வியல் தத்துவத்தை, இரண்டு வரிகளில் படைத்த திருவள்ளுவர் சிலையை திறப்பதற்கு, கர்நாடக மண்ணில், தமிழர்களும் போராடியபடியே இருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் மாறுபட்ட ஒரு காட்சி - கவலையான போராட்டக் காட்சி, தமிழ் மண்ணில் இப்போது வெடித்துள்ளது!

''பட்டம் பெறுகிறவரையில் எல்லா நிலைகளிலும் தமிழை ஒரு பாடமாக வையுங்கள். தமிழ் கற்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை தாருங்கள்'' என்ற கோரிக்கைகள் உட்பட பல்வேறு கோரிக்கைகளை தமிழறிஞர்கள் வலியுறுத்தி, சாகும் வரை உண்ணாவிரதம் என்ற போராட்டத்தை தமிழ் மண்ணிலேயே நடத்தினார்கள்.

இந்த போராட்ட அறிவிப்பைக் கேட்டதும் -

வெட்கமில்லை . . .
வெட்கமில்லை . . . இங்கு
யாருக்கும் எப்போதும்
வெட்கமில்லை. . .

என்றுதான் பாடத் தோன்றுகிறது!

தமிழினத் தலைவரது ஆட்சியில், தமிழுக்கு முன்னுரிமை கேட்டு சாகவும்துணிந்த கொடுமை, சொல்லொணாக் கொடுமை.

வழக்கமாய் அரசியல் தலைவர்களை வாழ்த்தும் ஜால்ரா கோஷங்களையே கேட்டுக் கேட்டு எதிரொலித்த சென்னை சைதாப்பேட்டை மறைமலையடிகள் பாலம், கடந்த 25ம் தேதி காலை 9மணிக்கு ஒரு வித்தியாசமான வாழ்த்துக் கோஷத்தை எதிரொலித்து சந்தோஷப்பட்டது.

அன்று மட்டுமே தனி மனித வாழ்த்துக் கோஷத்தை விட்டு விட்டு தமிழ் மொழிக்கான வாழ்த்துக் கோஷத்தை அந்தப் பாலம் கேட்டது. கோஷத்தை எழுப்பியது தமிழ்ச்சான்றோர் பேரவையின் பேரணி!

இந்தப் பேரணி சென்னை மக்களுக்கும் புதிதுதான். காரணம், பிள்ளையார் சிலைகளையும், தலைவர்களின் கட் அவுட்களையும் மட்டுமே தாங்கி வந்த பேரணிகளுக்கு மத்தியில் தமிழுக்காக உயிர்விடத் துணிந்த நூறு தமிழர்களை ஏற்றி வந்து மக்களுக்கு வித்தியாசத்தை உணர்த்தியது.

இந்த நூறு பேரில் இரண்டு பெண்களும் அடக்கம். காலை 10.30 மணிக்கு தொடங்கிய பேரணியில் தமிழகம் முழுவதிலும் உள்ள 24 அமைப்புகள் தமிழ்ச் சான்றோர் பேரவையின் கீழ் ஒருங்கிணைந்து வீரநடை போட்டு, வள்ளுவர் கோட்டத்தை நோக்கி கிளம்பியது.

வள்ளுவர் கோட்டம் அருகே உண்ணாவிரதம் உணர்ச்சி பூர்வமாய் தொடங்கியது. தலைமை தாங்கிய தமிழண்ணலுக்கு சால்வையை போர்த்தி உண்ணாவிரதத்தை தொடங்கி வைத்தார் ஒரு பெண்மணி. அவர், தாளமுத்து நடராஜனின் வளர்ப்புத்தாய்.

1965-ல் தி.மு.க. நடத்திய இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு, உயிர் நீத்தவர்தான் இவரது மகனான தாளமுத்து நடராஜன்.

சென்னை மாநகரப் பெருவளர்ச்சிக் குழுமம் என்று எழும்பூரில் பத்து மாடியாய் கம்பீரமாக நிற்கும் அந்த கட்டிடத்திற்குக் கூட, இதே தி.மு.க. அரசுதான் தாளமுத்து நடராஜன் என்று பெயரிட்டிருக்கிறது.

உண்ணாவிரதம், மாலை ஐந்தரை மணியைக் கடந்தவுடன், ஒரே பரபரப்பு. காரணம், அந்த நேரம் வரை மட்டுமே உண்ணாவிரதத்திற்கு காவல்துறை அனுமதி அளித்திருந்தது. எனவே, உண்ணாவிரதம் இருந்தவர்கள் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்ற டென்ஷனான நிலைமை!

என்ன செய்வதென்று புரியாமல் கையை பிசைந்துக் கொண்டிருந்த காவல்துறை உடனடியாக முதல்வர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ள, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திறக்கப் போயிருக்கும் முதல்வர் சென்னை திரும்பிய பின்தான் எதுவும் சொல்லமுடியும் என்ற பதில் காவல்துறைக்குக் கிடைத்தது.

இரவு ஒன்பது மணிக்கு சென்னை திரும்பிய முதல்வரிடம் உண்ணாவிரதப் பிரச்சனை பற்றி சொல்லப்பட, அவர் அமைச்சர் தமிழ்க்குடிமகன் உட்பட இன்னும் சில அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்தார். அதன்பிறகு இரவு பதினோறு மணியளவில் சான்றோர் பேரவை உயர் கமிட்டியில் இருந்த சுப. வீரபாண்டியனை தமிழ்க்குடிமகன் செல்போனில் தொடர்பு கொண்டு பேசினார்.

உடனே 'சான்றோர் பேரவை', அருணாசலம், தமிழண்ணல், தியாகு உட்பட ஐந்து பேர் அடங்கிய குழு ஒன்று தமிழ்க்குடிமகனிடம் பேச்சு வார்த்தை நடத்த கிளம்பியது. 12.30 மணிக்கு திரும்பிய அந்தக் குழு, 'முதல்வரிடம்

கலந்து பேசிவிட்டு காலையில் வருகிறேன்' என்று தமிழ்க்குடிமகன் சொன்னதாக மற்றவர்களிடம் கூறியது.

சொன்னபடி, காலையிலேயே உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்தார் தமிழ்க்குடிமகன். முதல்வரிடம் பேசிய விஷயத்தை அருணாசலம் தமிழண்ணலுடன், தமிழ்க்குடிமகன் பகிர்ந்து கொண்டார். பிறகு, சான்றோர் பேரவையினரின் கோரிக்கைகளை முதல்வரிடம் கலந்து ஆலோசிப்பதற்காக தமிழ்க்குடிமகன் பயணமானார்.

பகல் 12.00 மணிவாக்கில், முதல்வரிடமிருந்து சான்றோர் பேரவைக்கு திடீர் அழைப்பு. அதை ஏற்றுக் கொண்டு அருணாசலம், தமிழண்ணல் அடங்கிய அதே ஐவர் குழு, அறிவாலயத்திற்கு சென்றது. இரண்டு மணி நேர பேச்சு வார்த்தையில், தமிழறிஞர்களின் மூன்று கோரிக்கைகளையும் கொள்கை ரீதியாக ஏற்றுக் கொள்வதாக முதல்வர் தெரிவித்தார்.

இந்த முடிவுடன் இரண்டுமணிக்குத் திரும்பிய ஐவர் குழுவோடு, தமிழ்க்குடிமகனும் உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்தார். அரசு தரப்பு நிலைமையை உண்ணாவிரதம் இருந்தவர்களிடம் விளக்கி விட்டு, பழரசம் கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்து விட்டார் தமிழ்க்குடிமகன்.

''எங்கள் பணி இத்தோடு முடியவில்லை. எங்களுடன் இப்போராட்டத்தில் பங்கு கொண்ட அமைப்புகளின் மூலம், தமிழகம் முழுவதிலுமுள்ள ஆங்கில வழிப் பள்ளிகளைப் பற்றி கணக்கெடுப்போம். அவைகள் அரசின் அனுமதி பெற்றிருந்தாலும் சரி. . . பெறாமல் நடந்துகொண்டிருந்தாலும் சரி. . . அவைகளைப் பற்றி, அரசு அமைக்க இருக்கும் உயர்நிலைக் குழுவில் விவாதத்திற்கு வைப்போம். அதற்கு முன்பாக அந்த உயர் குழுவில் யார் யார் பங்கெடுத்துக் கொள்வது என்பதை எங்களுக்குள் கலந்தாலோசிப்போம்'' என்றனர் சான்றோர் பேரவையினர்.

''இது எங்கள் தாத்தா காலத்திலேயே முடிந்திருக்க வேண்டிய விஷயம். மூன்றாவது தலைமுறையான நான், இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்வது அசிங்கமாகத்தான் உள்ளது'' என்றார் மலைமலையடிகளின் பேரனான தாயுமானவன்.

தமிழறிஞர்களின் உண்ணாவிரதத்தை அரசு முடித்து வைத்தாலும், உண்ணாவிரதம் நடப்பதற்கு முன்பாக அரசு நடந்துக் கொண்ட விதம், தமிழறிஞர்களுக்கு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுத்திருக்கிறது. உண்ணாவிரதத்திற்கு தலைமை ஏற்பதாக ஒத்துக் கொண்ட சிலம்பொலி செல்லப்பனைக் கல்வி அமைச்சர் அன்பழகன் நாசூக்காக கழட்டி விட்டிருக்கிறார்.

இந்தக் கருணாநிதித்தனமான ஏற்பாட்டை தமிழறிஞர்கள் மிகவும் வருத்தத்தோடு விமர்சிக்கிறார்கள். ''தங்களுக்குள் பிளவை ஏற்படுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தையே பிசுபிசுக்க வைக்க முதல்வர் நடத்திய சூழ்ச்சி இது'' என்றும், வர்ணிக்கிறார்கள்.

தனது ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழும் அரசியல் கட்சிகளை இரண்டு, மூன்றாக உடைத்து வெற்றி கண்ட கருணாநிதி, சிலம்பொலி 'ரூட்'டில் தமிழறிஞர்களையும் உடைத்துப் பார்த்தார். ஆனால், அது நடக்கவில்லை!

முதல்வர் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதி தந்திருக்கிறார். அவைகளை அவர் சொன்னபடி நிறைவேற்றாவிட்டால், அவரே எதிர்பாராத கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்கின்றனர், தமிழ்ச் சான்றோர் பேரவையினர்.

மூச்சுக்கு முந்நூறு தடவை தமிழ் தமிழ் என்று மார்தட்டிப்பேசும் முதல்வர் கருணாநிதி, நடைமுறையில் சட்டச் சிக்கல் உள்ளது என்று பேசிப் பேசியே, தப்பித்துக் கொள்வாரா? அல்லது சட்டச் சிக்கல்களை உடைத்தெறிந்து, தமிழுக்கு உண்மையான பிள்ளையாக நடந்துக் கொள்வாரா என்பதுதான் இப்போதுள்ள கேள்விக்குறி!''

இதில் ஒரு வரி மட்டும் - மீண்டும் உங்கள் நினைவுக்காக.

''சிலம்பொலி .... விட்டிருக்கிறார்''

கல்வி அமைச்சர் சிலம்பொலி செல்லப்பனை மட்டும் கழற்றிவிடவில்லை. வேகம் எடுத்துச்சென்ற தமிழ் வழிக்கல்வி எனும் ஊர்தியின் பல 'திருகாணி' களைக் கழற்றி விட்டவரும் அவர்தான் என்பதை அன்பர்கள் இந்த நூலைப் படித்ததும் புரிந்துகொள்ளலாம்.

சிலம்பொலி செல்லப்பன் போராட்டத்தில் பங்கு பெறாமல் ஒதுங்கி நின்றது குறித்து, பெ. மணியரசன் 'தமிழர் கண்ணோட்டம்' இதழில் பின்வருமாறு எழுதினார்.

'சாகும் வரை பட்டினிப்போராட்டம்', 'தமிழ் மக்களிடம் இருந்து விடைபெறுகிறேன்' என்றெல்லாம் அறிவித்த சிலம்பொலியார் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருந்தால் போதும் என்று போராட்டக் குழுவில் தன் கருத்தை வலியுறுத்தினார். கல்வி அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் மற்றும் தமிழ் அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் இருவரும் 23.4.99 மாலை சிலம்பொலியார், தமிழண்ணல், சிற்பி பாலசுப்பிரமணியம், இளவரசு ஆகியோரிடம் கலைஞரின் வாக்குறுதியை சொன்னதாகவும் கலைஞர் நல்லது

செய்வார் என்று நம்பிக்கை வைத்து போராட்டத்தை விலக்கிக் கொள்ளலாம் என்றும் போராட்டக்குழுவில் தெரிவித்தார். (அமைச்சர்களுடன் இவர்கள் நடத்திய பேச்சு வார்த்தை போராட்டக்குழுவிற்கு தெரியாது. பேச்சு வார்த்தை நடந்தபின் அதில் கலந்து கொண்டவர்கள் சொல்லித்தான் போராட்டக் குழுவிற்குத் தெரியும்.'

எல்லார்க்கும் ஒன்றைத் தெளிவு படுத்தவேண்டும். சிலம்பொலி செல்லப்பனை விலகவைத்தவன் நானல்லன். நானும் பேச்சில் கலந்து கொண்டவன். கலைஞரிடம் ஓடி ஓடிப் பேசி ஒரு முடிவை நோக்கி நகர்த்தியவன். அவ்வளவே!

இந்த நிலையில் பல இடங்களிலிருந்தும் 'மோகன் குழு பரிந்துரைகளை' விரைந்து நிறைவேற்றக்கோரி மடல்கள் வரத் தொடங்கின. இராசிபுரம் தமிழ்ச் சான்றோர் பேரவை சார்பில் பலபேர் கையொப்பமிட்ட விண்ணப்பம் வரப்பெற்றேன். அதில் 208பேர் கையொப்பமிட்டிருந்தனர். இந்த முயற்சி பெரிதும் பாராட்டுதற்குரியதுதான். எனினும் ஒரு வருத்தம் தமிழ் வழிக் கல்வி வேண்டும் எனும் கோரிக்கைக்கு வலுச்சேர்க்க ஒப்பமிட்ட 208 பேரில் 45 பேர் ஆங்கிலத்தில்தான் கையொப்பமிட்டுள்ளனர். தமிழுக்காக எடுக்கப்படும் முயற்சியில் தன்பங்கும் இருக்கவேண்டும் என்று நினைத்த அன்பர்கள் பலருக்குத் தமிழில் கையொப்பமிட வேண்டும் எனும் எண்ணம் வரவில்லையே! உணர்ச்சி மிக்க தமிழர்களா இவர்கள்?

19.11.99 அன்று நீதியரசர் மோகன் குழு பரிந்துரைகளின் மீது அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

திசம்பர் (16-31) 99 -இல் வெளிவந்த நந்தன் இதழிலிருந்து சில செய்திகளை இங்குத் தந்தால்தான் நான் எழுதும் இந்த நூல் கடைசியில் எங்கே போய் நிற்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

இதோ ஒரு பெட்டிச் செய்தி.

இந்த இதழில் பொன். குமார் எழுதிய கட்டுரை சில உண்மைகளைத் தெளிவுபடுத்துகிறது.

''ஆங்கிலப் பள்ளிகள் எல்லாம் தங்கள் வாசற்கதவுகளை அடைத்துக்கொண்டு தமிழ் மொழி உள்ளே நுழையக்கூடாதென்று 'தர்ணா'வில் இறங்கியுள்ளன. ஐம்பதாயிரம் ஆசிரியர்கள் வேலை போகப்போகிறது. . . ஐம்பதாயிரத்துக்கும் கூடுதலான இதர ஊழியர்கள் வேலை போகப்போகிறது. . . இருபத்தைந்து இலட்சம் மாணவர்களின் எதிர்காலமே இருண்டு போகப் போகிறது. என்றெல்லாம் புயலின் பேரழிவில் மனித குலமே மாட்டிக் கொண்டு மடியப் போகிறது போன்ற 'அபாய அறிவிப்பை' வெளியிட்டு வருகின்றன சில ஆங்கில மிச்சங்கள்!

எதனால் இப்படியெல்லாம் இந்தக் குடுகுடுப்பைக்காரர்கள் குரல் எழுப்புகிறார்கள் தெரியுமா? தமிழ்ச் சான்றோர் பேரவையின் கடுமையான போராட்டங்களுக்கும் கொடுத்த நெருக்குதலுக்கும் பின்பு தமிழில் தான் குழந்தைகள் படிக்க வேண்டுமென்று தமிழக அரசு அறிவித்து உள்ளதே, அதற்காகத் தான் இத்தனைக் குதியாட்டமும்! இப்போது சொல்லுங்கள் ஒரு நாள் மட்டும் கதவடைத்த இவர்கள் நிரந்தரமாக கதவடைக்க வழி காண வேண்டியது தமிழர்களின் முதல் கடமை தானே?

அப்படி என்னதான் அறிவிப்பு வந்து விட்டது? தமிழ்நாட்டில் இருக்கின்ற குழந்தைகள் 5ஆம் வகுப்பு வரையில் தமிழ் மொழியில் தான் படித்தாக வேண்டும். இது என்ன புதிய அறிவிப்பா? காலம் தாழ்ந்து மிகத் தாமதமாக எடுக்கப்பட்டுள்ள மிக நல்ல முடிவுதானே. வந்த அறிவிப்புக்கூட முழுமையாக இல்லையே என்று தமிழ் நெஞ்சங்கள் கலங்கிப் போயிருக்கும் வேளையில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் இந்த ஆங்கில அதிபர்கள் அலறுகிறார்கள். உலக நாடுகளெல்லாம் ஆங்கிலத்தைத் தூக்கித் தூர எறிந்து விட்டு தாய் மொழியிலேயே அனைத்து நிலைகளிலும் நடை போடத் தொடங்கியுள்ளன. இந்தியாவில் பல மாநிலங்களில் மழலையர் கூடங்களை ஆங்கிலம் தீண்டக் கூடாதென்ற தடை உள்ளது. மேற்கு வங்கம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் அரசு அலுவல்களும், கல்வி மொழியும் தாய் மொழியிலேயே தான் நடக்கிறது.

உலக அரங்கில் தம் மக்களின் கல்வித் தரத்தை உயர்த்த முனையும் எந்த அரசும் முதலில் செய்ய வேண்டியது தாய் மொழி வழிக்கல்வி கொடுப்பதுதான்! இத்தனை உண்மைகள் இருந்தும் இங்கு மட்டும் எதிர்ப்புக் குரல் அவ்வப்போது சிலரால் எழுப்பப்படுவது ஏன்?

தமிழ் மொழி கூடாதென்று எதிர்ப்பாட்டுப் பாடி வருகின்ற ஆங்கில ‘அதிபர்’களின் நோக்கம் என்ன? குழந்தைகளுக்கு அறிவு வளர்ப்பதா? உலகத் தரத்தோடு கல்வி தருவதா? என்றால் இல்லை, இதெல்லாம் இந்த மேதைகளின் முகமூடிகள். தங்களின் ஏக போக வியாபாரத்தைத் தமிழ் வந்து கெடுத்து விடுமோ என்று தவியாகத் தவிக்கின்றனர். அடைப்பு நடத்துகிறார்கள். நீதி மன்றம் போய்த் தமிழுக்குத் தடை கேட்கிறார்கள். தமிழகத்தில் இன்றைக்கு மிக அதிகமான பொருள் ஈட்டக் கூடிய தொழிலாக இருப்பது இந்த ஆங்கில வியாபாரம் தான். எனவே தான் தொழிலுக்குத் தொல்லை வரக்கூடாதென்று துடிக்கிறார்கள்.

‘பெற்றோர் பலர் தங்கள் குழந்தைகளை ஆங்கில மொழி வாயிலாகவே பயிற்றுவிக்க விரும்புகின்றனர்’ என்று ஆங்கிலக் கல்வி அதிபர்கள் வியாக்யானம் பேசுகின்றனர். மக்களெல்லாம் நாட்டுச் சாராயம் குடிக்கத்தான் விரும்புகிறார்கள். எனவே நாங்கள் அரசின் சட்ட விதிகளை மீறி சாராயம் தான் காய்ச்சுவோம். அரசின் ஆணை, சட்டம், நிர்வாகமெல்லாம் எங்களைக் கட்டுப்படுத்தாது. சாராயம் காய்ச்சாவிட்டால் பல குடும்பத்தினர் வேலை இழப்பார்கள். பல இலட்சம் குடிகாரர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்றெல்லாம் எவராவது சொன்னால், அவர்களைத் தூக்கி குண்டர் தடுப்புச் சட்டத்தில் தானே அடைக்க வேண்டி இருக்கும். அந்த ‘மொழி’ தானே இந்த வியாபாரிகளுக்கும் புரியும்.

வகுப்பறையில் தமிழில் பேசிய குழந்தைகளைக் குப்பை பொறுக்க வைப்பதும், அபராதம் விதிப்பதுமாகத் தமிழ் மண்ணிலேயே தமிழுக்குத் தண்டனை விதிக்கிறார்கள் என்பது தமிழ்ச் சந்ததிக்கு எவ்வளவு பெரிய அவமானம். 25 இலட்சம் குழந்தைகள் வேற்று மொழி, வேற்று கலாச்சாரம் என்று இந்த மண்ணில் வளர்க்கப்படுகிறார்கள் என்பது நமது மொழியை, கலாச்சாரத்தை அவமதிக்கும் நடவடிக்கைகள் அல்லாமல் வேறென்ன?

தமிழக அரசின் ஆணையை மறுத்து, நீதி மன்றம் போய் ஆங்கிலத்துக்கு ஆதரவாக வாதாடப் போயிருக்கும் இந்த நீதிமான்களைப் பார்த்து அரசு தெளிவாகச் சொல்கிறது.

இப்படியெல்லாம் அரசு மென்மையாகச் சொல்கிறது. ‘மேன்மைக்குரியவர்கள்’ புரிந்து கொள்வது நல்லது. மக்கள் மொழி இப்படி மென்மையாக இருக்காது. மக்கள் மொழி காட்டாற்று வெள்ளம் போன்றது. அந்த வெள்ளம் பெருக்கெடுக்கத் தொடங்கினால் ஆங்கிலப் பள்ளிகள் மட்டுமல்ல அதன் பிரதிநிதிகளும் இடம் பெயர்வர்.

ஏற்கனவே இந்தியை எதிர்த்ததால் தான் நாம் பின்னடைந்து விட்டோம் என்ற புலம்பலை வேறு வெளிப்படுத்தியுள்ளனர். இந்தி படித்தோர் அரைக்கோடி பேர் ஏற்கனவே வேலை இல்லாமல் பீகாரில் அலைந்து கொண்டுள்ளனர் என்கின்றன செய்திகள். நிலைமை இப்படி இருக்க இன்றைக்கு புதிய கண்டுபிடிப்பாக ஆங்கிலத்தின் மூலம் தான் அகிலத்தில் முன்னேற முடியும் என்ற அங்கலாய்ப்பு எதற்காக?

இரண்டு இலட்சம் ஆசிரியரின் வேலை பாதிக்கப்படும், இருபத்தைந்து இலட்சம் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுமாம். தமிழகத்தின் மக்கள் தொகை ஆறு கோடி, இதில் சில சதவிகிதம் பேரின் வாழ்க்கைக்காக, தமிழ்ச்சாதி முழுவதும் அவர்கள் பின்னே அணிவகுக்க வேண்டும் என்று பேசுவது அடாவடித் தனமல்லாமல் வேறென்ன? சிலருக்கு பிளேக்கோ, காலராவோ பிடித்திருக்கிறது என்பதற்காக அனைவருக்கும் அதனை பொருத்திப் பார்ப்பது சரியா?

ஆங்கிலம் தான் உலகமொழி, அறிவின் மொழி, உலகின் மூலை முடுக்கெல்லாம் வேலை தரக்கூடிய மொழியாயிற்றே. அந்த இரண்டு இலட்சம் ஆங்கில மேதைகளான ஆசிரியப் பெருமக்களையும் அயல்நாடுகளுக்கு அனுப்ப வேண்டியது தானே? எதற்காக இங்கு அவர்கள் சிரமப்பட வேண்டும். எனவே அவர்களை ஆகாய விமானம் ஏற்றி அனுப்பி வைக்கலாம்!

ஆங்கிலமோ, மலையாளமோ, பிரெஞ்சோ, எது வேண்டுமானாலும், தேவையும், திறமையும் உள்ளவர்கள் படித்துக் கொள்ள எப்போதும் தடையில்லாச் சூழலில் ஆங்கிலம் தான் வேண்டுமென்னும் இந்த மொழிக் கலப்படக்காரர்கள் அடக்கி வாசிப்பது தான் நல்லது.

தமிழ்ச் சான்றோர் பேரவையின் 100 பட்டினிப் போராளிகள் அன்னைத் தமிழ் மொழி காக்க சாகத் துணிந்த சூழலில் தான் அரசு அசைந்து கொடுத்துள்ளது. எனவே தமிழையும், தமிழர்களையும் இனியும் சீண்டிப் பார்க்க நினைக்காமல் இருப்பது இந்த 'ஆங்கிலேயர்களுக்கு'ப் பாதுகாப்பானது.

தமிழ் வழிக் கல்விக்கு எதிர்ப்புத் தெரிவித்த சங்கராச்சாரியார் கருத்தினை மறுத்து 'ஆனாரூனா' கடுமையாக எழுதியுள்ளார்.

''தமிழ்நாட்டில் தமிழ் வழிக் கல்விக்காகத் தமிழ்ச் சான்றோர் பேரவையின் அழைப்பை ஏற்று நாடெங்கும் உள்ள தமிழறிஞர்களும், தமிழ் அமைப்புகளும், அரசியல் கட்சிகளும், விழிப்புற்ற தமிழர்கள் அனைவரும்

போராடி, தமிழக அரசு மெல்ல அசைந்து தமிழ் வழிக் கல்விக்காகச் சிறு முயற்சி எடுப்பதைக் கூட 'ஜகத் குரு' என்று தம்பட்டம் அடிக்கும் சங்கரனால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை.

''தாய் மொழியைப் பயில்வதில் ஆர்வம் காட்டுவதில் தவறில்லை. ஆனால் அனைத்துப் பாடங்களுமே தமிழ் வழியில் இருந்தால் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும்! - என்கிறார் சங்கரன்.

திருவாளர் சங்கரன் என்கிற ஜகத்குருவானவர் தனது 'ஜகத்'தின் எல்லை புரிந்து தான் திருவாய் மலர்ந்தருளினாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

சாதிக்கு ஒரு தொழில் என்று விதிக்கும் வர்ணாஸ்ரம தர்மம் கூட திருவாளர் சங்கரனின் கருத்தை அனுமதிக்காது. ''சூத்திரன் சூத்திரத் தொழிலோடு நிற்க வேண்டும். சங்கரன் சங்கர மடத்தோடு நிற்க வேண்டும்!'' தமிழர்களின் உரிமைப் பிரச்சனையில் தலையிட இவர் யார்? சங்கர மடம் தமிழ் நாட்டில் இருக்கலாமா என்பதையே தீர்மானிக்கும் உரிமை பெற்றவர்கள் தமிழர்கள் தான் என்பதைத் திருவாளர் சங்கரன் உணர வேண்டும்.

என்ன சொல்கிறார் சங்கரன்?

''தாய்மொழியைப் பயில்வதில் ஆர்வம் காட்டுவதில் தவறில்லை''யாம்.

குதர்க்கம் புரிகிறதா?

''எங்கும் தமிழ். எதிலும் தமிழ்!'' என்கிற இலட்சியத்தை நோக்கி விழிப்புற்ற தமிழினம் நடைபோடத் தொடங்கியிருக்கிறது. சங்கரன் வழிபடும் ஆண்டவன் கூட தமிழ் விண்ணப்பங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றால் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று இறை நம்பிக்கையுள்ள தமிழர்களே போர்க்கொடி தூக்கும் காலம் இது. இப்போது சங்கரன் சொல்கிறார்: ஆங்கிலத்தை, லத்தீனை, தெலுங்கை, இந்தியை ஒரு மொழி என்கிற முறையில் பயில்வதுபோல் தமிழையும் பயில தமிழன் ஆர்வம் காட்டலாமாம். அதற்கு இவரது ஆசியும் அனுமதியும் உண்டாம். ஆனால் அனைத்தையும் தமிழிலேயே படிக்க அனுமதிக்கலாமா? முன்னேற்றம் தடைப்படாதா? என்று கவலை தெரிவிக்கிறார்.''

10.12.99 அன்று தமிழ்ச் சான்றோர் பேரவை சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. அவற்றில் சில

1. அரசின் தமிழ் வழிக் கொள்கைகளுக்கு எதிரான ஆங்கில வழிப் பள்ளி நிர்வாகிகளின் போக்கினைக் கண்டித்தும், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும், வரும் 27.12.99 திங்கள் கிழமை மாவட்ட, வட்டத் தலைநகர்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதெனப் பேரவை தீர்மானிக்கிறது.

2. அறக்கட்டளை என்ற போர்வையில் நிர்வகிக்கப்படும மெட்ரிக் பள்ளிகளை நெறிப்படுத்தவும், ஊழலை ஒழிக்கவும் உடனடியாக அரசு ஒரு விசாரணைக் குழு அமைத்து, இதுநாள் வரை நடந்துள்ள மோசடிகளை வெளிக்கொணர்ந்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. வெளியிடப்பட்ட நீதிபதி மோகன் குழுப் பரிந்துரைகளில் கண்ட, பயிற்று மொழிக் கொள்கைக்குச் சட்டப்பூர்வமான அங்கீகாரம் வழங்க முன் முயற்சி எடுக்கப்படவில்லை. ''தொடர்ந்து அரசாணைகள் மூலமே மொழிக் கொள்கை முடிவுகள் வெளியிடப்படும்'' என்று இவ்வாணையில் தெரிவித்திருப்பது தமிழ்வழிக் கல்வியில் தொடர்ந்து குழப்பமும், பின்னடைவும் ஏற்படவே வழிவகுக்கும் என்று இப்பேரவை கருதுகிறது. ஏனெனில் 7.6.99 ஆம் நாள் வெளியான சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பில், ''1892ஆம் ஆண்டு முதலே கல்வித் துறையில் இதற்கான விதிமுறைகள் இருந்து வருகின்றன'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் 100 ஆண்டுகள் கழித்த நிலையிலும் தமிழ்வழிக் கல்வி நடைமுறைக்கு வராமலிருப்பதற்கு அது சட்டமாக வரையறுக்கப்படாமல் வெறும் ஆணைகள் உருவத்தில் இருப்பதுதான் காரணம் என்பது தெளிவாகிறது. எனவே சட்டப்பூர்வமான வரையறைப் படுத்திய தமிழக அரசின் கல்வி மொழிக் கொள்கை என்று இதனை ஆக்கும்படி வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

4. தமிழக மக்கள் ஆங்கிலவழிப் பள்ளி நிர்வாகிகளின் பொய்ப் பிராச்சாரத்திற்குச் செவி சாய்க்கமாலும், பலியாகாமலும், தமிழ மக்கள் ஆங்கில மோகத்துக்கு ஆளாகாமலும் அதிலிருந்து மீண்டு தமிழ் வழிக் கல்விக்கான போராட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு பொதுமக்கள் மற்றும் ஆசிரியர்களையும், அரசுப் பணியாளர்களையும் பேரவை கேட்டுக் கொள்கிறது.

5. தமிழ்வழிக் கல்விக்கான தடைகளை முறியடிக்கவும், தமிழ் வழிக் கல்வியை நடைமுறைப்படுத்தி நிலைநிறுத்தவும் அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தமிழ்ச் சான்றோர் பேரவையும், உடன் இணைந்த, அனைத்துத் தமிழ் அமைப்புகளும், இயக்கங்களும் அரசுக்கு துணை நிற்குமென பேரவை தீர்மானிக்கிறது.

தமிழ்ச் சான்றோர் பேரவையின் பட்டினிப்போர் குறித்து மாமணி தன் 'முகம்' (ஏப்ரல் 2000) இதழில் எழுதிய கட்டுரை இது :

''தமிழியக்க வரலாற்றில் 1999 ஏப்ரல் 25ஆம் நாள், குறிப்பிடத்தக்க நாளாகும்!

தமிழகத்தை முடியுடைய மூவேந்தர்கள் ஆண்ட காலத்திலிருந்து இன்று வரை தமிழுக்காக 102 தமிழ் ஆர்வலர்கள் பட்டினிப்போர் இருந்தார்கள், வென்றார்கள் என்பது வரலாற்றில் என்றென்றும் பேசப்படும் செய்தியாகும்!

மூவேந்தர்கள், வேத பாட சாலைகளை வைத்தார்கள்; வடமொழியைக் கற்பிக்க மானியம் அளித்தார்கள் என்பது தான் உண்மை.

தந்தைபெரியார், அறிஞர் அண்ணா, கி.ஆ.பெ. விசுவநாதம் போன்றோர் இந்தியிடமிருந்து தமிழைக் காப்பாற்றினார்கள்!

மறைமலை அடிகள், சோமசுந்தரபாரதியார், திரு.வி.க., பாவாணர், பாவேந்தர், வ.சுப. மாணிக்கனார், பெருஞ்சித்திரனார் போன்றோர் வடமொழியிடமிருந்து தமிழை மீட்டெடுத்தார்கள்.

தமிழ் ஆட்சிமொழி, பயிற்று மொழியை வலியுறுத்தித் தலைநகர்த் தமிழ்ச் சங்கம் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், வ.சுப. மாணிக்கனார், பெருஞ்சித்தரனார் ஆகியோர் தலைமையில் போராடியது.

200 ஆண்டுகளாகத் தமிழகத்தை ஆண்ட ஆங்கிலேயர்கள்கூட தமிழை அழிக்க நினைக்கவில்லை. ஆனால் அவன் வெளியேறிய பிறகு, கடந்த முப்பதாண்டுகளில் பாவித் தமிழன் தமிழைப் பலவகைகளிலும் அழித்து வருவதைக் கண்டு பொங்கி எழவில்லையே என்று தமிழ் நெஞ்சங்கள் துடிதுடித்த நேரத்தில்தான் தமிழ்ச் சான்றோர் பேரவை தோன்றியது!

மாநிலம் தழுவிய மக்கள் பிரதிநிதிகள் சென்னையில் கூடிய தமிழகப் பெருவிழாவில் ''வரும் (1999) கல்வியாண்டிலிருந்து தமிழகத்தில் அய்ந்தாம் வகுப்பு வரை தமிழ் மட்டுமே பயிற்றுமொழி என்று அரசு ஆணை பிறப்பிக்காவிட்டால், 1999 ஏப்ரல் 25ஆம் நாள் தொடங்கி, 100 தமிழ் ஆர்வலர்கள் சாகும் வரை பட்டினிப் போர் தொடங்குவர்'' என்று அரசுக்கு அறிவித்துவிட்டு, தமிழகமெங்கும் மேற்கண்ட அறிவிப்பை விளக்கி, மக்கள் ஆதரவைக் கோரி, நாள்தோறும் தெருமுனைக் கூட்டங்கள் நூற்றுக் கணக்கில் நடத்தப்பட்டன!

இந்தக் கோரிக்கைக்கு, பல கட்சித் தலைவர்களும், பத்திரிகைகளும் ஆதரவு தெரிவித்தன. இருப்பினும் அரசு அசைந்து கொடுக்கவில்லை! ''பொறுத்தது போதும, பொங்கி எழு மகனே!'' என, தமிழ்த்தாய் ஆணையிட்டதுபோல் தமிழ் மறவர் படை 25.4.99 அன்று காலை 8 மணிக்கு மறைமலை அடிகள் பாலத்திலிருந்து 100 தமிழ்ச் சான்றோர்களைத் தாங்கிய ஊர்திகள் மெல்ல நகர, சேரன் செங்குட்டுவனே அருணாசல மாகப் பிறவியெடுத்து வந்தது போல், பேரவையின் கொடியேந்தி, பேரணியின் முன்னே செல்ல, பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள்,

''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!''

''ஆங்கிலத்தை வெளியேற்று!''

''அன்னைத் தமிழை அரியணையில் ஏற்று!''

''எங்கும் தமிழ்!''

''எதிலும் தமிழ்!''

என்று முழக்கமிட்டவாறு பேரணி, வள்ளுவர் கோட்டத்தை அடைந்தது!

வள்ளுவர் கோட்டமுகப்பிலுள்ள அண்ணா சிலைக்குப் பின்புறமுள்ள சாலையில் அமைந்திருந்த பந்தலை ஊர்வலம் வந்தடைந்ததும், பட்டினிப் போரின் தளபதி **முனைவர் தமிழண்ணல்** தலைமையில் நூற்றுவர் நாற்காலிகளில் அமர்ந்தனர். மேலும் பலர் முன்வந்து பட்டினிப்போரில் அமர உரிமைகோரி வாதிட்டனர். அவர்களில் இருவர் மட்டுமே வாய்ப்புப் பெற்றனர்.

பட்டினிப் போரில் பங்கு கொண்டோரில் பேராசிரியர்கள், புலவர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கவிஞர்கள், தொழிலாளர்கள் என, பல தரப்பினரும் கலந்து கொண்டனர்!

போராளிகளின் முன்னாலிருந்த ஒலிபெருக்கியில், பல கட்சித் தலைவர்கள், பெருமக்கள், அறிஞர்கள் பலரும் வாழ்த்துரைத்தனர். பல தொலைக்காட்சி நிறுவனத்தினர், பத்திரிகையாளர்கள், காவல் துறையினர், உளவுத் துறையினர் என பலரும் வட்ட மடித்துக் கொண்டே இருந்தனர்.

போராளிகளைச் சுற்றி இரவு பத்து மணிவரை இரண்டாயிரம் பேர் தமிழ்ப்படைபோல் அரணாக நின்றதைக் கண்டு காவல்துறையும், உளவுத் துறையும் மேலிடத்து ஆணைக்காகக் காத்திருந்தனர்.!

இரவு பத்தரை மணியளவில், நாற்காலிகளில் உட்கார்ந்திருந்த வயது முதிர்ந்த சான்றோர்கள் தளர்ச்சியடைந்த நேரத்தில் ஒரு சரக்குந்து (லாரி) வந்து பந்தலருகே நின்றது. அதிலிருந்து சான்றோர் பேரவை நிறுவனர் அய்யா அருணாசலம், கீழே இறங்கியதும், தொண்டர்கள் அவரருகே ஓடினர். யாருக்கும் கட்டளையிடாமல் லாரியிலிருந்து பாய்களையும், தலையணைகளையும் அவரே இறக்கிக்கொண்டு வந்து, பாயை விரித்து ''அய்யா, படுங்க! அய்யா படுங்க!'' என்று சொல்லி, படுக்க வந்த 102 பேருக்கும் 102 பாய்களை அவரே பிரித்துப் போட்டு, 103 தலையணைகளும் கொடுத்த போது, சுற்றிநின்ற இரண்டாயிரம் பேரும் காவலர்களும், உளவுத் துறையினரும்,

''என்ன இந்த மனிதர் மாயாஜாலம் செய்வதுபோல், இந்த நள்ளிரவில் எங்கிருந்து இவைகளை வாங்கி வந்தார்!'' என்று வியந்தனர்.

சான்றோர்களில் பலர் கண்களில் நீர்மல்க, ''அய்யா! ஒரு தாயைப்போல் இவ்வளவு பரிவோடு எங்களைக் காக்கும் நீங்கள் வாழ்க!'' என்றனர். இன்னும் சிலர் ''எத்தனையோ வள்ளல்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் வேலைக்காரர்களிடம் பணத்தைக் கொடுத்து வேண்டியதைச் செய்யச்சொல்லிவிட்டு, காரில் ஏறிப் பறப்பார்கள். ஆனால். . . அய்யா. . . .! நீங்கள் . . . . '' நாத்தடுமாறி நின்றனர்.

இரவு பதினொரு மணி. காவல்துறை பட்டாளம் முப்பது நாற்பது பேர் பந்தலுக்கு வெளியே குழுமியிருந்த கூட்டத்தின் ஊடே அணிவகுத்துச் சென்று கலக்கத்தை உண்டாக்குகின்றனர். காவல் வண்டிகள் நான்கு வந்து நாற்புறமும் நிற்கின்றன!

தோழர் சுப.வீ. ஒலி பெருக்கியில் பேசுகிறார் : ''தோழர்களே! பெருமக்களே! நம்மைச்சுற்றி காவல் வளையம் இறுகுகிறது! என்ன நேரிட்டாலும் நாம் அஞ்சமாட்டோம். நான்கு காவல் வாகனங்களில் போராளிகளை ஏற்றிக்கொண்டு நான்கு சிறைச்சாலைகளுக்குக் கொண்டு செல்லலாம். அல்லது தொலைவில் கொண்டு விட்டு விட்டு வரலாம். நம் கோரிக்கை ஏற்கப்படும் வரை, மீண்டும் மீண்டும் இதே இடத்தில் வந்து சேருவோம்; பட்டினிப்போர் தொடரும், நம் உடலில் உயிர் உள்ளவரை! ''

அதைக் கேட்டு பாயில் படுத்திருந்த தமிழ்ச் சிங்கங்களெல்லாம் சிலிர்த்துக் கொண்டு எழுந்து உடகார்ந்ததைக் கண்ட, காவல் அதிகாரி ஒருவர் ஓடிவந்து, நாங்கள் உங்களைக் கைது செய்யப் போவதில்லை. செய்தியை, அனுப்பிக் கொண்டிருக்கிறோம் என்றார். சிறிது நேரத்தில் அமைச்சர் தமிழ்க்குடிமகன் பேச்சு வார்த்தைக்கு அழைக்கிறார் என்னும் அறிவிப்பு வரவே, முனைவர் தமிழண்ணல் தலைமையில் பேரவைக்குழு ஒன்று அமைச்சரைச்

சந்திக்க சென்றது . பேச்சு வார்த்தைக்குச் சென்றவர்கள், மனநிறைவின்றித் திரும்பினர்.

பட்டினிப்போர் தொடர்வதை அறிந்த அமைச்சர், மறுநாள் 25ஆம் நாள் காலையில் வந்தார். பாயில் படுத்திருந்தோரையும், சூழ்ந்து நின்றிருந்த சான்றோர்களைக் கண்டார்; உள்ளம் நெகிழ்ந்தார்; போராளிகள் முன்னிலையில் ''கலைஞர் உங்களோடு பேசச் சொல்லியிருக்கிறார். நல்ல முடிவு ஏற்படும்'' என்று பேசினார். போராட்டக் குழுவினர் தங்கள் கோரிக்கையில் உறுதியாக இருந்தனர். அதை உணர்ந்த அமைச்சர், முனைவர் தமிழண்ணல், அய்யா அருணாசலம் மற்றும் சிலரோடு கலந்து பேசிவிட்டுச் சென்றார்.

ஏப்ரல் 25ஆம் - நாள் இரவும், 26ஆம் நாள் காலையிலும் தமிழ் வேள்வியில் புடம்போட்ட தங்கமாகச் சான்றோர்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தார்கள்!

தமிழகத் தமிழர்களும், இந்தியத் தமிழர்களும், உலகத் தமிழர்களும், உலகத் தமிழர்களும், கலைஞர் என்ன செய்யப் போகிறார்; என்ன சொல்லப் போகிறார்! - என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

26ஆம் நாள் முற்பகல் நேரம். கலைஞரின் கட்டளையை ஏந்தி, தமிழ்க்குடிமகன் மீண்டும் வருகிறார்! தமிழ்க்கடல் போல் மக்கள் வெள்ளம் அவரைச் சூழ்ந்து நிற்கிறது!

போராட்டத் தளபதியான தமிழண்ணலிடமும், அய்யா அருணாசலனார் மற்றும் சிலரிடம் அமைச்சர் ''உங்கள் கோரிக்கையைக் கலைஞர் ஏற்றுக் கொண்டார். இதோ கடிதம்'' என்றதும் கூட்டம் ஆரவாரப் பேரொலி எழுப்புகிறது.

அமைச்சர், போராட்டத் தளபதியிடம் பழச்சாறு தந்து பட்டினிப்போரை நிறுத்தச் செய்கிறார். அய்யா அருணாசலனாருக்கு மாலை அணிவித்துக் கட்டித தழுவுகிறார்! பிறகு, ஒலிபெருக்கி முன் வந்து நின்று போராளிகள், ஆதரவாளர்கள் எல்லாரையும் பாராட்டி, வாழ்த்திப் பேசுகிறார்!

''தமிழ், வாழ்க!'' என்னும் பேரொலி, வள்ளுவர் கோட்ட வளாகத்தையே எதிரரொலிக்கச் செய்தது!

தமிழ் வாழும்! ஆம், தமிழுக்காகத் தலை கொடுக்கவும், உயிர் கொடுக்கவும், பொருள் கொடுக்கவும் தமிழர்கள் உள்ளவரை, தமிழ் வாழும், வாழ்ந்தே தீரும்!

* * *

உயர்நீதிமன்றத் தீர்ப்பு தமிழ் வழிக் கல்வி ஆணையைக் காலி செய்து விட்டது. உச்சநீதிமன்றத்தில் தமிழ் வழிக் கல்வி கோப்புகளில் தூங்குகிறது. தி.மு.க. ஆட்சி மாறி, அ.தி.மு.க. ஆட்சியும் வந்துவிட்டது. இப்போது தமிழ்ச் சான்றோர் பேரவையின் நிலை என்ன? இதோ அதன் ஒருங்கிணைப்பாளர் தமிழண்ணல் கூறுகிறார். (தினமணி 10-10-2001)

''வரும் நவம்பர் மாதம் 1,2 -இல் நாமக்கல்லில் தமிழகப் பெருவிழா 7ஆம் ஆண்டாக நடைபெறவிருக்கிறது. அனைத்துத் தமிழ்ச் சான்றோர்களும் கூடும் அவ்விழாவில் செயல்திட்டம் வகுத்து அறப்போரில் ஈடுபடவிருக்கிறோம்'' என்றார் தமிழண்ணல்.

சொல்லி மூன்றாண்டுகள் ஓடிவிட்டன. செயல்திட்டம் வகுத்தார்களா? அறப்போரில் ஈடுபட்டார்களா?

அவர்களே நட்பு முறையில் விடை சொல்லலாம்: தெரிந்தவர்களும் சொல்லலாம்.

அரசின் கொள்கை முடிவுகளில் நீதிமன்றம் தலையிடலாமா? கூடாதா? 'நந்தனில்' வந்த செய்தி இது:

அரசின் கொள்கை முடிவுகளும் தீர்ப்புகளும்

''மனிதாபிமானம் என்கிற பெயரில் இலங்கைக்கு இந்திய அரசு ரூபாய் 450 கோடிக்கு உதவுவதைத் தடை செய்ய வேண்டுமென்று வழக்கறிஞர் கே.பி. சந்திரசேகரன் தாக்கல் செய்திருந்த வழக்கை சென்னை உயர்நீதி மன்றம் நிராகரித்தது.

தமிழக மீனவர்கள் 90 பேருக்குமேல் இதுவரை இலங்கைக் கடற்படையினர் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். இந்நிலையில் அந்நாட்டுக்கு இவ்வாறு உதவுவது சரியல்ல என்று சந்திரசேகர் தமது மனுவில் கூறியிருந்தார்.

அரசின் கொள்கை முடிவில் நீதி மன்றம் தலையிடமுடியாது என்று நீதிபதிகள் ஏற்க மறுத்தனர்.

'தமிழ் வழிக் கல்வியும்' அரசின் கொள்கை முடிவுதான். தமிழக அரசின் இந்த அரசாணையை எதிர்த்துக் 'கள்ளக்கல்வி வியாபாரிகள்' சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கை ஏற்றது எப்படி?

அரசின் கொள்கை முடிவுகளில் நீதிமன்றம் தலையிடலாமா? கூடாதா? நீதிமன்றத்தின் பார்வையில் அரசு என்பது மத்திய அரசுதான்; தேசிய அரசு (தமிழ் நாடு அரசு) அல்ல என்று கருதப்படுகிறதா?

அல்லது நீதிபதியின் மனநிலைக்கேற்ப ஒரு வழக்கு ஏற்கப்படும் அல்லது மறுக்கப்படும் என்று கொள்வதா?

மனநிலை மாற்றப்பட முடியாதது அல்ல. மனதை மாற்றுவதற்கு, உருக்குவதற்கு, நெகிழ்த்துவதற்கு, முடுக்குவதற்கு, இறுக்குவதற்கு எத்தனையோ உபாயங்கள் இருக்கின்றன.

தமிழக அரசின் கொள்கை முடிவையே எதிர்க்கும் ஒரு வழக்கை அனுமதித்து, அதில் அரசின் முடிவுக்கு எதிராகவே தீர்ப்பளித்தார்களே சில நீதிபதிகள். அது ஏன்?''

ஏற்கெனவே உச்ச நீதி மன்றமே ஓர் அரசு எடுக்கும் மொழிக் கொள்கையில் 'நீதிமன்றம் தலையிடலாகாது' என்று கூறியுள்ளது.

13.1.99 இல் போட்ட ஆணையின் மீது வழக்குத் தொடரப்பட்டது. அதில் தீர்ப்பளித்த நீதியரசர் சண்முகம் 'அரசின் மொழிக்கொள்கை குறித்த முடிவில் நீதிமன்றம்' தலையிடக் கூடாது என்றே கூறியுள்ளார்.

இப்போது மீண்டும் மேலே உள்ள செய்தியைப் படியுங்கள்.

இந்த உண்ணா நோன்பு குறித்தும், அதன்முடிவு குறித்தும் 'குறளியம்' இதழில் புலவர் இரா. இளங்குமரன் பின்வருமாறு எழுதினார்.

''உயிரைத் தந்து தமிழகப் பெயரைத் தந்தவரை, தமிழகப் பெயரைச் சூட்டியவரை மறந்து, சட்ட மன்ற ஆணையை மீறியவரை - மாறி நடையிடுபவரை, ஆருயிர் தந்தாவது நெறிப்படுத்த வேண்டும் என்னும் நேயம் மிக்கெழுந்த சான்றோரை நேரில் கண்டு நெஞ்சார வாழ்த்தி நெறி நின்றிருந்தால் என்றும் நன்றாகி இருக்கும்! ஆனாலும் மின்னல் கீற்றுப் போல ஓர் ஒளி.

அமைச்சுக்கட்டிலில் இல்லாமல் இருந்திருந்தால் எங்களோடு உண்ணாநோன்பு நோற்க நின்றிற்கும் மாண்புமிகு தமிழ்க்குடிமகனார் பாலமாக இருந்து பல்கால் நடையிட்டுப் பாவமும் பழியும் வாராது காத்தார்!

முன் வைத்த கருத்துகள் மூன்றையும் மாண்புமிகு முதல்வர் இசைவொப்புகையுடன் முற்றாக நிறைவேற்றி முழு மகிழ்வு தந்தார். தமிழ்க்குடிமக்கள் அனைவர்க்கும் இன்பம் சேர்த்தார்'' என்று எழுதினார்.

* * *

இயல் பதினெட்டு

குழு அமைப்பு

நூறு தமிழறிஞர்கள் சாகும் வரை உண்ணா நோன்பிருந்தனர். இடையில் கல்வி அமைச்சர் பேராசிரியரிடம் நால்வர் குழு ஒன்று சென்று பேசியது. நானும் உடனிருந்தேன். எனினும் பேராசிரியர் தந்த விளக்கம் உண்ணா நோன்பைக் கைவிடும் வகையில் அமையவில்லை.

பின்னர் குழுவினர் உண்ணா நோன்பைத் தொடர்வது என்றே முடிவு செய்துவிட்டார்கள். நான் இரவு 8மணிக்கு முதல்வரிடம் பேசினேன். அவர்க்கு எந்த ஒரு தமிழறிஞரின் உயிர்க்கும் ஏதம் ஏதும் நிகழ்ந்துவிடக்கூடாது எனும் கவலை இருந்தது. எனவே இணக்கமான முடிவுகளைச் சொல்லி அவர்களுடன் என்னைப் பேசச் சொன்னார். இரவு 12 மணிக்கு நால்வர் என்னைச் சந்தித்தனர். பேசி ஒரு முடிவுக்கு வந்தோம். மறுநாள் காலை 7.30 க்கு முதல்வரைச் சந்தித்தேன். ஒரு வரைவும் எழுதிக் காட்டினேன். ஒப்புதல் அளித்த முதல்வர் உடனடியாகச் செயற்படக் கூறினார்.

அன்று முற்பகலே உண்ணா நோன்பினை முடிவுக்குக் கொண்டுவந்து விட்டோம்.

அதன்பிறகு அவர்களது கோரிக்கைகளைச் செயற்படுத்தும் வகையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. தமிழ் உணர்வாளரும், நடுநிலையானவரும், கால நிலையை உணர்ந்தவருமாகிய நீதியரசர் மோகன் குழுத் தலைவராக அறிவிக்கப்பட்டார். சட்டம் தெரிந்த நீதியரசர் எனும் முறையில் இவர் தலைமை அமைந்தது.

'உயர்கல்வியில் தமிழ்' என்பது குறித்தும் ஆய்வு செய்ய வேண்டியிருந்ததால் அனைவரது கருத்தின் படியும் முனைவர் வா.செ. குழந்தைசாமி, முனைவர் ச. முத்துக்குமரன் ஆகிய இருவரும் குழுவில் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டனர்.

தமிழ்ச் சான்றோர் பேரவையின் சார்பில் ஏழு பேரைக் குழு உறுப்பினராக்கிட வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தனர். எனினும் சமவாய்ப்பு நல்கிட வேண்டும் என்பதற்காகவும், பிறர் கண்ணை உறுத்தாதவாறும் இருவர் மட்டும் குழு உறுப்பினர்களாக இணைக்கப்பட்டனர்.

அதன்படி பின்வரும் குழு அமைக்கப்பட்டது.

1. நீதியரசர் மோகன் (குழுத் தலைவர்)
2. முனைவர் வா.செ. குழந்தைசாமி
3. முனைவர் ச. முத்துக்குமரன்
4. முனைவர் தமிழண்ணல்
5. புலவர் இரா. இளங்குமரன்

அதில் ஆய்வு செய்வதற்காக மாண்புமிகு முதல்வர்அவர்கள், ஒரு வழிகாட்டிக் குறிப்பினை (terms of references) வழங்கியுள்ளார்.

''தமிழ்நாட்டில் கல்வித்துறையில் அனைத்து மட்டங்களிலும் தமிழே பயிற்சி மொழியாக அமைந்திட, தமிழக அரசு கொள்கை ரீதியாக விரும்புகிறது. குறிப்பாக இளஞ்சிறார்கள் பள்ளிகளில் தங்கள் கல்வியை, தாய்மொழியாம் தமிழ் மொழியிலேயே பெறவேண்டும் என்றும் தமிழக அரசு விரும்புகிறது. இந்தக் கொள்கையை நோக்கி முன்னேற முதல் கட்டமாக ஓர் ஆணையும் அரசு பிறப்பித்துள்ளது.

இந்த ஆணையை ஏற்பதற்கே இசையாத நிலையில் ஒரு சாரார் இருக்கின்றனர்.

இந்த நிலையில் தமிழ் அறிஞர்களும் தமிழக அரசின் கொள்கையையே வலியுறுத்தி மேலும் வேகமாகச் செயல்பட விரும்புகின்றனர்.

தமிழக அரசின் இந்தக்கொள்கையை அமுல் நடத்த சட்டச் சிக்கல்கள் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளனவா?

தமிழ்ப் பயிற்சி மொழியைக் கட்டாயப்படுத்த இயலுமா?

தமிழகத்தில் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் வாழ்கின்ற நிலையில் தமிழை மட்டும் பயிற்சி மொழியாக்கி உத்தரவு பிறப்பிக்க இயலுமா?

சிறுபான்மையினராக உள்ள அனைவரும் தங்கள் விருப்பத் தேர்வின்படி கல்வி நிறுவனங்களை நிறுவவும், செயலாட்சி செய்யவும் உரிமை உடையவர் என்று அரசியலமைப்புச் சட்டம் உரிமை வழங்கியிருக்கும்போது, சிறுபான்மையினர் நடத்தும் கல்விக் கூடங்களில் தமிழை மட்டும் பயிற்சி மொழியாக ஏற்றுக்கொள்ளுமாறு அரசு ஆணையிட இயலுமா?

தமிழ்நாட்டில் மிக நீண்டகாலமாக அனுமதித்து நடைபெற்று வரும் ஆங்கிலோ இந்தியர்கள், மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தமிழை மட்டும் பயிற்சி

மொழியாகக் கொண்டுவருவதில் சட்டச் சிக்கல்கள், நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுமா?

தமிழகத்தில் மத்திய அரசு அனுமதி பெற்று நடைபெறும் பள்ளிகளில் தமிழை மட்டும் பயிற்சி மொழியாகக் கொண்டுவர வழிமுறைகள் உள்ளனவா? தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்று கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை கொடுத்து ஊக்குவித்திட வழிமுறை ஏது? என்பனவற்றை யெல்லாம் அலசி ஆராய வேண்டும்'' என்றவாறு அவரது குறிப்பு அமைந்தது.

எனினும் தமிழறிஞர்கள் வைத்துள்ள கோரிக்கைகளையும் அரசின் சார்பில் வழங்கப்படும் வழிகாட்டுக் குறிப்புகளையும் ஒருசேர அலசி ஆராய்ந்து முடிவு எடுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள குழு விரைவில் கூடி எவ்வெவ்வகையில் எல்லாம் தமிழ் வளர்ச்சிக்கு வாய்ப்பிருக்குமோ அவற்றை ஆய்வு செய்து, தங்கள் பரிந்துரைகளை 31.5.1999க்குள் அரசிடம் வழங்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறது - இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

ஒரு நீதியரசரே குழுத் தலைவராக இருந்தால் சட்டரீதியாகவும் சிந்தித்துப் பரிந்துரை செய்ய முடியும் எனும் வகையிலும் தமிழ், தமிழினம், தமிழகம் மேம்பட வேண்டும் என்று நினைக்கும் உள்ளம் படைத்தவராகவும் உள்ள ஓய்வு பெற்ற நீதியரசர் மோகன் குழுத் தலைவராக அமர்த்தப்பட்டார்.

உயர்கல்வி தொடர்பாகவும் முடிவெடுக்கப்படவேண்டி இருந்தமையால், ஓய்வு பெற்ற துணைவேந்தர்கள், வா.செ. குழந்தைசாமி, ச. முத்துக்குமரன் ஆகிய இருவரும் இதில் இடம் பெற்றனர். மேலும் இவர்கள் இருவருமே தமிழ் வழிக் கல்வியில் ஆர்வமும் அக்கறையும் உடையவர்கள்.

தமிழ்ச் சான்றோர் பேரவையினர் இருவரை மட்டுமே இக்குழுவில் இணைக்க நேர்ந்தது. அதிகமான உறுப்பினர்களைக் குழுவில் போடுவது பெருமைதான். என்றாலும் ஆள்கூடக் கூட, விவாதமும் கருத்து வேறுபாடும்தான் அதிகமாகுமே தவிர விரைந்து ஒரு முடிவெடுக்காமலும் போய்விட வாய்ப்புண்டு. இவற்றை யெல்லாம் மனத்திற் கொண்டுதான் குழுவில் ஐவர் மட்டுமே இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டது.

குழு அமைத்து அறிவிக்கப்பட்டபோது

''அதில் ஆய்வு செய்வதற்காக .... கொள்ளப்படுகிறது.

இந்த வழிகாட்டிக் குறிப்போடும் முறையான அரசு அனுமதியுடனும் இக்குழு செயற்படத் தொடங்கியது.

இயல் பத்தொன்பது

மோகன் குழு பரிந்துரைகள்

உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டபின் குழு முறையாகவும், விரைவாகவும் செயற்படத்தொடங்கியது.

பலதரப்பினரிடம் கருத்துகளைக் கேட்டறிந்த குழு பொதுமக்களிடமும் கருத்துகளைக் கேட்டது. இது குறித்துத் தினமலர் (22.5.99) வெளியிட்ட செய்தி இது.

''சென்னை நுங்கம்பாக்கம் பள்ளிக்கல்வி இயக்குனர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட தொடக்கக் கல்வி திட்ட அலுவலக அரங்கில் உயர்மட்டக்குழு நேற்று கூடி, பொதுமக்களிடத்தில் தமிழ் வழிக் கல்வி பற்றி கருத்துக்களைக் கேட்டறிந்தது.

தமிழ்ச் சான்றோர்களும் தமிழ் அமைப்புகள் பலவற்றின் நிர்வாகிகளும், ஆசிரியர்களும், மாணவர்களும், ***நர்சரி மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகளும், அரசியல் சார்பு உடையவர்களும், பொதுமக்கள் பலரும் நேற்று உயர் மட்டக்குழுவினை சந்தித்து, தமிழ் வழிக் கல்வி பற்றி கருத்துக்களைக் கூறினர்.*** நீதிபதி மோகன் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் நேற்று நான்கு மணி நேரம் பலதரப்பட்ட பொதுமக்களிடம் கருத்துக்களைக் கேட்டறிந்தனர்.

பொதுமக்களிடம் உயர்மட்டக் குழுவினர் தமிழ் வழிக் கல்வி பற்றி கருத்தறியும் பணியை நேற்று காலை துவக்கிய போது தமிழ் சான்றோர் பேரவையை சார்ந்தவர்கள் தமிழுக்கு ஆதரவாகவும், நர்சரி, மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகள் ஆங்கில வழிக்கல்வி ஆதரவாகவும் குரல் எழுப்பினர். இதனால், பள்ளிக் கல்வித்துறை வளாகத்தில் பரபரப்பான சூழ்நிலை உருவாகியது.''

இதில் ஒரு செய்தியைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தச் செய்தியில் ''நர்சரி மற்றும் மெட்ரிகுலேசன் ...... கூறினர்''

ஆனால் உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று கவனியுங்கள்.

''நர்சரி மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகளோ, தொடர்புடைய பிற நபர்களோ அழைக்கப்பட்டு, அவர்கள் கருத்துகள் குறித்து எதுவுமே கேட்கப்படவில்லை; அதனால் தங்கள் அடிப்படை உரிமை என்ன என்பதையோ, மோகன் குழு பரிந்துரைகள் செய்யும் முன் தங்கள் கருத்துரை எது என்பதையோ தெரிவிக்கும் வாய்ப்பு இவர்களுக்கு அளிக்கப்படவில்லை''.

மோகன் குழு தந்த பரிந்துரைகளுக்குள் போகும் முன் அவர்கள் தந்த அறிக்கையில் உள்ள முக்கியமான செய்திகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

''தமிழகத்தில் பல்வேறு காரணங்களால் சின்னஞ்சிறு வயது முதலே ஆங்கிலத்தைக் கற்பித்துத் தமிழை விட்டு விடும் நிலைமை பெருகிவருதலைக் கண்ட கல்வியாளர்கள் கடந்த சில ஆண்டுகளாக இத்தவறான போக்கை மாற்றியமைக்கக் குரல் எழுப்பி வந்தனர்'' என்கிறது அறிக்கை. அதன்பின் தமிழ்ச் சான்றோர் பேரவை வைத்த கோரிக்கைகள் சுட்டப்படுகின்றன.

3.5.99இல் குழு அமைத்து ஆணையிட்டது. இக்குழு எப்படிச் செயற்பட்டது என்பதைக் கவனியுங்கள்.

''இக்குழு 15.5.1999 தொடங்கி, பல்வேறு நிலைகளில் இப்பிரச்சினைகளை ஆராய்ந்தது. பொதுமக்கள் கருத்தை வாய்மொழி மூலமாக மூன்று நாட்கள் கேட்டறிந்தது; எழுத்து மூலமாகவும் கருத்துகள் பெற்றது, குழுவிடம் தொடர்பு கொண்டவர்கள் எண்ணிக்கை பின்வருமாறு: தனிநபர்கள் 423; ஆசிரியர் கழகங்கள் 5; வழக்கறிஞர்கள் 3; பள்ளி நிர்வாகங்கள் 40; பள்ளி நிர்வாகக் கழகங்கள் 22; ஆசிரியர் பெற்றோர் சங்கங்கள் 8; தமிழ்ச் சங்கங்கள் உட்பட மற்ற சங்கங்கள் 87; அரசியல் கட்சி சார்பான நிறுவனங்கள் 8; சிறுபான்மையினரும் அவர் தம் சங்கங்களும் 9. அயல் மாநிலங்களில் உள்ள நடைமுறைகளை அறிவதற்காக அதிகாரிகளை அனுப்பி உரிய ஆணை விவரங்களைப் பெற்றுவரச் செய்தது. கல்வித் தொடர்புடைய தமிழக அரசின் உயர் அதிகாரிகளையும், பள்ளிக் கல்வித் துறை இயக்குநர்களையும், மருத்துவம், பொறியியல் உட்படப் பல்வேறு உயர்கல்வித்துறை இயக்குநர்களையும், அழைத்து விவரம் கேட்டறிந்தது. இவை தொடர்பான சிக்கல்களையும் தீர்வுகளையும் தொடர்ந்து ஆராய்ந்து, இவ்வறிக்கையை அரசிடம் அளிக்கின்றது.''

இக்குழு எந்த அளவுக்கு எல்லாருடைய கருத்துகளையும் கேட்டிருக்கிறது என்பதை உணரமுடியும்.

1968இல் அண்ணா சட்டமன்றத்தில் பின்வரும் கருத்துகளை வைத்தார்.

''ஒரு நாட்டின் பயிற்று மொழி, ஆட்சிமொழி ஆவதற்குத் தாய்மொழி என்னும் தகுதிக்கு ஈடாக வேறு எந்தத் தகுதியும் ஒரு மொழி பெற்றிடத் தேவையில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை கல்விக் கூடங்கள் அனைத்திலும் பயிற்சி மொழியைப் பொறுத்தவரை முதல் மொழி தமிழே; இரண்டாம் மொழியே ஆங்கிலம்'' என்று தெளிவுபடக் கூறியுள்ளார்.

ஆங்கில மொழியுடன் எவ்விதப் பகையும் இருத்தல் கூடாது. அதன் இனிமை, மனத்தை ஈர்க்கும் திறன், தகுதியுடைமை போல்வன பல்வேறு வகைகளில் பயன்படும். ஆனால், அதன் சிறப்புக்களைக் கருதி, நம் சொந்த மொழிகளை எவ்வித எழுச்சியும் இன்றித் தேங்க விடுவது என்பது முறையாகுமா?

மேலும் தனக்குத் தெரிந்த மொழிவழி ஒரு துறை அறிவைப் பெறுவது மகிழ்ச்சி தரும்; சரிவரத் தெரியாத மொழியில் துறை அறிவைப் பெற முயல்வது தண்டனையாகவே அமையும். ஆகவேதான் உலகில் பல நாடுகளிலும் தாய்மொழி மூலமே கல்வி கற்பிக்கப்படுகிறது. மேலும், தாய்மொழி வழிக் கல்வியே முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைகிறது.

மேன்மையான கல்விக்கு ஆங்கிலம்

''ஆங்கிலத்தில் மிக உயர்ந்த கல்வித் திறன் பெறுதற்கு வாய்ப்புள்ளது'', என்று ஒரு கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், அவ்விதம் உயர்ந்த ஆங்கிலக் கல்வித்திறம் பெற்ற மேதகு வி.எஸ். சீனிவாச சாத்திரியார், சக்கரவர்த்தி சி. இராச கோபாலாச்சாரியார் போன்றோர் ஆங்கிலமொழியும் மேலைநாட்டார் பண்பாடும் மேன்மேலும் வளர்ந்து, கல்வி கற்காத நம் நாட்டு ஏழை எளிய மக்களிடமிருந்து மிகவும் விலகிச் சென்று விடுதல் கூடாது எனக் கூறியுள்ளனர். எனவே தான், தங்கள் வாழ்நாளில் மிகுந்த ஆர்வத்துடன் தமிழில் கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளனர்.

மேலும், ஆங்கிலவழிக் கல்விப் பள்ளிகளில், வழிவழியாகக் கல்வி கற்ற பெற்றோர்களின் குழந்தைகளே பெரும்பாலும் கல்வி கற்கின்றனர். அப்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர், அவர்தம் சமுதாயப் பின்னணியின் பயனாக நன்கு கல்வி கற்றுத் தேறுகின்றனர். இதற்கெதிராக தமிழ்வழிப் பள்ளிகளில் ஏழை மாணவரும் நடுத்தரக் குடிமக்களின் குழந்தைகளுமே கல்வி கற்கின்றனர். இவர்களது பின்னணியாலும் குடும்பச் சூழலாலும் இவர்களது

திறமைகளை வளர்க்கமுடிவதில்லை. இவர்கள் குறைந்த அளவு தேர்ச்சி பெறுவதற்கும் வாழ்க்கையில் வெற்றி பெறாததற்கும் குடும்பச் சூழலே காரணம்.

இளமையிலே ஆங்கில வழிக் கல்வி

ஆங்கிலவழிக்கல்வி இளமை முதலாக அமைய வேண்டும் என்றும் அதனால் குழந்தைப் பருவத்திலேயே ஆங்கில மொழிக் கல்வியைத் தொடங்கிவிட வேண்டும் என்றும் பலர் கருதுகின்றனர். ஆனால் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே சாட்லர் கமிஷனும் (Sadler Commission), கார்டாக் குழுவும் (Hartog Committee), அபோட் மற்றும் வுட் (Abbot and Wood) என்பார் அறிக்கையும் தாய்மொழி வழிக் கல்வியை மிக வற்புறுத்தி எழுதியுள்ளன. மிக விரிவாக விவாதிக்கப்பட்ட சார்ஜண்ட் திட்டம் (Sargent Scheme) கல்வியாளர் பலருடனும் விவாதித்து, மகாத்மா காந்தியின் வார்தாத் திட்டத்தையும் மேற்கோள்காட்டி அனைத்து உயர்நிலைப்பள்ளிகளிலும் தாய்மொழியே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்று முடிவு கூறியிருக்கிறது.

பயிற்றுமொழி; இலக்கணம்

பொதுவாக ஒரு மொழி உண்மையாகவும், முழுமையாகவும் பயிற்று மொழியாவதற்குக் கீழ்க்கண்ட தகுதிகள் தேவை:

தேவையான அளவு மாணவருக்கு அம்மொழி தெரிந்து இருக்க வேண்டும். அம்மொழியில் ஆசிரியருக்கு நல்ல தேர்ச்சி இருக்க வேண்டும். மாணவனின் குடும்பத்திற்கும் பள்ளிக்கும் நெருக்கமான உறவு அமைய அப்பயிற்று மொழி இளம் மாணவரின் பெற்றோருக்குத் தெரிந்து இருக்க வேண்டும்.

அம்மொழியில் தரமான பாட நூல்கள் கிடைக்க வேண்டும்.

அம்மொழியில் பாடநூல்கள் தவிரத் துணை நூல்களும், துணை ஆதார நூல்களும் கிடைக்க வேண்டும்.

இந்தத் தகுதிகளின் அடிப்படையில் பார்த்தால் பயிற்று மொழி தாய்மொழியாகத் தான் இருக்க வேண்டும் என்பது தெளிவு. இதை நாம் நடைமுறையில் காண்கிறோம்.

ஆங்கிலவழிக் கல்வி கற்பிக்கும் பள்ளிகள் யாவும் மேலான கல்வி நிறுவனங்கள் என்று சொல்வதற்கில்லை. அவற்றுள் ஒன்றுக்கொன்று

மிகுந்த வேறுபாடுகள் உண்டு. வீட்டில் பெற்றோர் உதவியுடன் ஓரளவு ஆங்கிலம் தெரிந்த குழந்தைகள் ஆங்கில வழிப் பள்ளிகளில் பயன் பெறும் வாய்ப்புண்டு. ஆனால் ஆங்கிலமே தெரியாத அல்லது சரிவர ஆங்கிலம் தெரியாத குழந்தைகளே பெரும்பாலும் கல்வி கற்கும் பள்ளிகள் பல உண்டு. இவற்றில் கல்வி கற்கும் குழந்தைகள் மிகுந்த முயற்சிக்குப்பின், பல ஒலிகளைத் தெரிந்து கொள்கின்றனர்; ஆனால் அவற்றின் உட்பொருள்களைத் தெரிந்து கொள்வதில்லை. ஆகவே அவர்கள் வெற்றி பெறுவதில்லை. இவ்வகைப் பள்ளிகளில் ஆங்கிலம் ஒரு பயிற்று மொழியாக அமைந்து மற்ற பாடங்களைக் கற்கப் பயன்படவில்லை; துறைப் பாடங்கள் கற்பது ஆங்கில மொழி கற்க ஒரு வாய்ப்பாகப் பயன்படுகிறது. மற்ற பாட வகுப்புகள் ஆங்கிலம் கற்பிக்கும் வகுப்புகளாக மாறிவிடுவதால் அறிவைப் பெறுவது தடைபெறுகிறது. ஆகவே, இவ்வகை ஆங்கில வழிப் பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர் பொதுவாக மேன்மையாகக் கல்வியைப் பெறாதது மட்டுமல்ல; அயல்நாட்டு மொழிவழிக் கல்வி அவர்களின் முழுத்திறமையை வெளிக்கொணரும் வாய்ப்பையும் தடை செய்து விடுகிறது.

அடுத்து, புதியனவற்றைக் கற்ற குழந்தை அவற்றைத் தனது பெற்றோரிடம் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றனர். பெற்றோரும் தமது குழந்தையின் ஆர்வத்தில் பங்கு கொண்டு குழந்தையின் சிந்தனையைத் தூண்ட விரும்புவார்கள். ஆனால் குழந்தையின் பயிற்று மொழி பெற்றோருக்குத் தெரியவில்லை எனில், வீட்டில் குழந்தை பெறக்கூடிய மகிழ்ச்சியும் ஆதரவும் பெறும் வாய்ப்பில்லை. ஆகவேதான் குழந்தைப் பருவத்தில் தாய் மொழியே சிறந்த பயிற்று மொழி என்று முடிந்த முடிவாக சொல்லப்படுகிறது.

தாய்மொழி வழிக் கல்வியின் பயன்

தாய்மொழி வழிக்கல்வி கற்றால் சிறு வயதிலேயே மற்ற பாடங்களைக் கற்கும் வாய்ப்பு மிகுதியாகிறது. வேற்று மொழி வழிக் கற்பதற்கு அம்மொழியை முதலில் கற்க வேண்டியிருப்பதால், இளம் வயதில் மற்ற பாடங்களைக் கற்று அறிவைப் பெறும் வாய்ப்பு குறைகிறது. இளம் வயதில் அவசியமின்றி மொழிச் சுமை ஏற்றப்படுவதால் அறிவைப் பெறுவது தள்ளிப் போடப்படுகிறது. தாய்மொழி வழிக் கல்வி பெறுவதால் அறிவை வளர்த்துக் கொள்ள இயலாது என்று யாரும் சொல்ல முடியாது. அறிவு எந்த மொழிக்கும் தனிப்பட்ட சொத்து அல்ல. அறிவை எந்த மொழி வழியும் பெற முடியும். தாய்மொழி வழிப் பெறுவது இயற்கை, எளிதும் கூட.

கற்பிப்பதில் இடர்பாடு

பள்ளிக் கல்வியைத் தமிழ் வழிக் கல்விக்கு மாற்றினால் ஆசிரியர் இடர்ப்படுவர்; பாடத்திட்டத்தை மாற்றுவதிலும், பாட வேளைகளைப் பகுப்பதிலும் சிக்கல் உண்டாகும். ஆசிரியர்கள் சிலர் வேலை இழக்க நேரும்; பள்ளிகளை மூடவும் நேரும் எனக் கூறுகின்றனர். நடைமுறைப்படி இக்கூற்றில் உ ண்மை இல்லை. பள்ளிக் கல்வியைத் தாய்மொழி வழியாகவே கற்பிப்பது என அனைத்துப் பள்ளிகளுக்கும் விதி வகுக்கும்போது, மேற்கூறிய நிலைமைகள் ஏற்பட வாய்ப்பு இல்லை. அயன்மொழிக்கு மாறுவது என்பதுதான் ஆசிரியர், மாணவர்களுக்குக் கடினமாகுமே தவிரத் தாய்மொழிக்கு மாறுவது என்பது எவ்வகையிலும் கடினமாகாது.

புதிய கண்டுபிடிப்புகள்

ஆங்கில மொழி வழியே கற்க வில்லை என்றால் புதிய புதிய உலகச் சிந்தனைகள் உடனுக்குடன் பெறுதல் இயலாது; உலகளாவிய நிலையில் வேலைவாய்ப்புப் பெறுதல் இயலாது என்றும் கூறப்படுகிறது. ஆனால் இன்றைய சூழலில் அறிவியல் என்பது ஆங்கில மொழிக்கு மட்டுமே உரியதென்று கூறுவது சரியன்று. அறிவியல் சிந்தனைகள் உலகப் பொதுவுடைமை ஆகும். அவற்றை உடனுக்குடன் மொழியாக்கம் செய்ய வழியுண்டு. இந்நூற்றாண்டில் அறிவியல் வளர்ச்சியால் உலகம் மிக மிகச் சுருங்கிய குடும்பமாகி வருகின்றது. இந்நிலையில் எவரொருவர் எம்மொழியில் தம் கண்டுபிடிப்பைக் கூறினாலும் அதனால் பயனடைய விரும்புவோர் அதனைத் தம் மொழியில் பெற்றுக் கொள்ள வாய்ப்பு உள்ளது.

அயல்மொழியில் தேர்ச்சி

தாய்மொழி வழிக் கல்வியைக் கொண்டு வருவதால் ஆங்கில மொழிக் கல்வித்தரம் குறையும் என்று கூறப்படுகிறது. உண்மையில் தாய்மொழி மூலம் பாடங்களைப் படிப்பது என்பது வேறு; ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாகக் கற்பது என்பது வேறு. ஆங்கில மொழிக் கல்வியை எல்லா வகையாலும் மேன்மேலும் தரப்படுத்த வேண்டும் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருத்தல் இயலாது'' என்கிறது அறிக்கை.

ஆங்கில மொழி வழிப் படிப்பது வேறு; ஆங்கில மொழியைப் படிப்பது வேறு என்று பல பெற்றோர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

மொழிவழிக் கல்வியும் பண்பாடும் எப்படிப் பின்னிப்பிணைந்திருக் கின்றன என்பதை அறிக்கை உணர்த்துகின்றது.

''மொழியும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை. ஒரு மக்களின் பண்பாடு அவர்களது மொழி வழியே வளர்கிறது. நமது பண்பாடு நம் முன்னோர் நமக்கு விட்டுச் சென்ற சொத்து. அதைப் பேணிக் காப்பது நமது கடமை. தமிழ் நாட்டுக் குழந்தைகள் தமிழ் இலக்கியங்களைக் கற்றால்தான் அவர்களால் தமிழ்ப் பண்பாட்டைப் புரிந்து கொள்ள இயலும். வளர்க்க இயலும். நமது பண்பாட்டைப் புரிந்து கொள்ளாது ஆங்கிலவழிப் படித்து பட்டம் பெற்று வெளிநாட்டில் பணியாற்றச் சென்றால் அங்கு அந்நாட்டு மக்கள் நல்ல பண்பாட்டுடன் வாழ்வதையும்தான் பண்பாடில்லாமல் குறையுடன் இருப்பதை உணர முடியும். தனது குறை அவனுக்குத் தெரிவதுடன் அந்நாட்டு மக்களும் இவனை மதிக்க மாட்டார்கள். ஆகவே தமிழை ஆழமாகக் கற்பதும் தமிழ் இலக்கியங்கள் கற்பதும் இன்றியமையாதது. அதாவது தமிழ் மொழியைப் பல ஆண்டுகள் கற்பது தேவையான ஒன்று.''

இது தொடர்பாகக் குழு தன் பரிந்துரைகளை அழுத்தம் திருத்தமாகச் செய்கின்றது.

''அரசு மிக விரைவாகவும் தெளிவாகவும் இது தொடர்பான சட்டமியற்ற வேண்டுமென்று இக்குழு பரிந்துரைக்கிறது.''

குழு மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான அடிப்படை குறித்தே பரிந்துரை செய்து தன் அறிக்கையில் தெளிவு படுத்தியுள்ளது.

''இன்றைய மெட்ரிகுலேசன் பள்ளிகளில் ஆங்கிலம்தான் பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்ற விதியுளது. தமிழ் அல்லது தாய்மொழியைப் பயிற்று மொழியாக ஏற்றுக்கொண்ட பின்னர் அவ்வாறிருத்தல் ஆகாது. ஆகவே அவ்வாறிருக்கும் விதி, ஆங்கிலம் அல்லது தமிழ்/தாய்மொழி பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்று திருத்தப்படவேண்டும்''.

இந்த அடிப்படையில் குழு பின்வரும் பரிந்துரைகளைச் செய்தது.

1. மழலையர் மற்றும் 5-ஆம் வகுப்பு (E.S.) வரை அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் அல்லது தாய்மொழி மட்டுமே பயிற்று மொழியாக அமைய வேண்டும். 3-ஆம் வகுப்பு தொடங்கி ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாக பயிற்றுவிக்கப்படவேண்டும்.

2. 6ஆம் வகுப்பில் சேர்ப்பதற்கு 5ஆம் வகுப்புத் தகுதி நிலையில் கல்வி மாவட்ட அளவில் மாவட்டக் கல்வி அதிகாரி தலைமையில் ஒரு குழு அமைத்து ஒரே நாளில் ஒவ்வொரு பள்ளியிலும் (ஒரு பொதுவான) தேர்வு நடத்தி, தேர்வு பெற்றவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

3. பயிற்று மொழிக் கொள்கையைப் பின்பற்றாத பள்ளிகள் ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் (3 ஆண்டுகள்) மாற்றியமைத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு அறிவிக்க வேண்டும். இதனை ஏற்காத பள்ளிகட்கு ஏற்பு வழங்கக் கூடாது.

4. மெட்ரிகுலேசன் பள்ளிகளில் ஆங்கிலம்தான் பயிற்றுமொழி என்றிருப்பதை, ஆங்கிலம் அல்லது தமிழ்/தாய்மொழி பயிற்று மொழி என்று திருத்தப்பட வேண்டும். இதனால் 6ஆம் வகுப்பு தொடங்கி தமிழ் வழி கற்பிக்கும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் அரசின் ஏற்புப் பெற வாய்ப்பு ஏற்படும்.

5. அரசுப் பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருக்கும் பிரிவுகளை, 6-ஆம் வகுப்பிலிருந்து ஒவ்வொரு வகுப்பாக (படிப்படியாக) நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. ஆங்கிலத்தை முறையாகக் கற்பிக்க 6-ஆம் வகுப்பு முதல் ஆங்கிலத்தில் பட்டம் பெற்று நன்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை அரசு நியமிக்க வேண்டும். மாணவர்கள் பேசவும், எழுதவும் திறம் பெறும் வகையில், ஆங்கில மொழியைக் கற்பிக்கும் முறையில் மாற்றம் செய்ய வேண்டும்.

7. ஆறாம் வகுப்பு முதல் முதற்பிரிவில் வட்டாரமொழி அல்லது தாய்மொழி படிக்க வேண்டும் என்னும் விதியை (அரசு ஆணை எண். 105, கல்வி, நாள் 24.1.68) தமிழ் அல்லது தாய்மொழி என்று திருத்தம் செய்ய வேண்டும்.

8. உயர் கல்வி : கலைச் சொல் பட்டியல்கள் தயாரித்தல்; பாடநூல் தயாரித்தல்; தொழிற்கல்வியை தமிழ்வழி கற்பித்தலைத் தொடங்குதல்.

1. சட்டத்தின் வாயிலாக தன்னாட்சி அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும். (A Statutory Autonomous Body). பதவி வழிப்பட்ட தலைவராக முதல்வர் C.M. இருக்க வேண்டும். செயல் தலைவராகக் கல்வித் துறையில் சிறந்த ஒருவர் இருப்பார். துறைதோறும் அத்துறை நிபுணர்களைத் துறைத் துணைத் தலைவர்களாகக் கொண்டு துறைசார் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

2. கைவினைஞர் நிலையில் (I.T.I.) தமிழ் பயிற்றுமொழி ஆக்குவதைத் தொடர்ந்து, தொழில்நுட்பப் பயிலகமும் (Polytechinic) பின்னர் பொறியியல் கல்லூரியும் (Engineering College) தமிழைப் பயிற்று மொழியாக்க வேண்டும். இம்மூன்று நிலைகளிலும் தேவையான ஆயத்தப் பணிகளை ஒரே சமயத்தில் தொடங்க வேண்டும்.

9. சித்த மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் போன்ற துறைகளில் தமிழ்வழியில் கற்பிப்பதற்கான வாய்ப்பினை அரசு உருவாக்க வேண்டும்.

10. வேலைவாய்ப்பில் முன்னுரிமை:- மற்ற அனைத்துக் கூறுகளிலும் சமத் தகுதி பெற்றவர்களுக்கிடையில் தமிழ் வழி பயின்றவர்களுக்கு முன் வாய்ப்பு நல்குவது தமிழ்வழி கற்பவர்களை ஊக்குவிப்பதாக அமையும். (அவர்கள் அரசுப் பணியாளர்களாக நியமிக்கப்படுவதால் தாய்மொழி வழியில் ஆட்சி செலுத்துவது நல்ல முறையில் அமைய உதவும்.)

இப்பரிந்துரைகள் அமைச்சரவைக் கூட்டத்தில், விவாதிக்கப்பட்டு, மேற்கொள்ளப்படும் முடிவுகள் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பின்னர் அறிவிக்கப்படும்.''

இக்குழு பலரது கருத்துகளையும் கேட்டு மட்டும் பரிந்துரை செய்யவில்லை.

ஒருசில மாநிலங்களுக்கும் சென்று, தக்கவர்களிடம் கலந்து பேசி உண்மைகளை அறிந்து, அவர்கள் பிறப்பித்துள்ள ஆணைகளையும் இங்கே இணைத்துக் காட்டியிருக்கிறார்கள்.

கர்நாடகத்தைப் பொறுத்த வரையில் ஒன்று முதல் 4 வரை தொடக்கக் கல்வி. இங்கு ஒன்று முதல் நான்கு வகுப்புகளில் ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாகக் கட்டாயமாகக் கற்பிக்கவோ அல்லது பயிற்றுமொழியாகப் பயன்படுத்தவோ கூடாது என்பதுதான் விதி. உச்ச நீதி மன்றத்தில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றாலும் கர்நாடகம் இதில் தெளிவாக உள்ளது.

மொழிப்பாடம் மற்றும் பயிற்றுமொழி தொடர்பாகச் சிறுபான்மையர் நடத்தும் நிறுவனங்களுக்கு விதி விலக்கு ஏதுமில்லை. ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு மட்டும் இப்போது அங்கீகாரம் பெற்றுள்ள ஆங்கில வழிப் பள்ளிகளில் 1 முதல் 4 வகுப்புகளில் ஆங்கில வழிக் கல்வி கற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேல்நிலை

இரண்டு மொழிகள் கற்க வேண்டும்; ஒன்று கன்னடம் (அ) தாய்மொழி, மற்றொன்று ஆங்கிலம்.

நான்கு பாடங்கள் கற்க வேண்டும். ஆங்கிலம் (அ) தாய்மொழியில் கற்கலாம்; வினாத் தாள்கள் ஆங்கிலம் மற்றும் கன்னடத்தில் மட்டுமே இருக்கும்; விடைகளை கன்னடம் (அ) ஆங்கிலத்தில் மட்டுமே எழுதவேண்டும்.

மேற்கு வங்க நிலைமை

''கடந்த ஆண்டுவரை ஆரம்பக் கல்வி அனைத்தும் அந்தந்த பகுதியினுடைய தாய்மொழியிலேயே இருந்ததாகவும், மேற்கு வங்காளத்தில் பெங்காலி மொழியே பெரும்பாலான மக்களின் தாய்மொழியாக இருப்பதால் பெங்காலி மொழியிலேயே பாட போதனை நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

மேலும், மேற்கு வங்காளத்தில் சற்றேறக்குறைய 55,000 தொடக்கப் பள்ளிகள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

3ஆம் வகுப்பு முதல் ஆங்கிலம் ஒரு பாடமாகப் பயிற்றுவிக்கப்படுகிறது. (1999-2000க்குப்பின் இந்த நிலை)

ஆந்திர மாநில நிலைமை

ஆங்கிலம் இரண்டாவது மொழிப்பாடமாக ஐந்தாம் வகுப்பு முதல் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

தெலுங்கு மொழி அல்லது சிறுபான்மை மொழி. - மொழிப் பாடம். பிறபாடங்கள், இந்தப் பாடங்கள் தெலுங்கு மொழியிலோ அல்லது சிறுபான்மை இனத்தவர் அவர்களது தாய்மொழியிலோ பயில வசதி உள்ளது. ஆங்கில வழி கற்பவர்கள், ஆங்கில மொழி வாயிலாக இந்தப் பாடங்களை பயிலுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் நர்சரி பள்ளிக்கு அங்கீகாரம் மற்றும் ஒப்புதல் போன்ற நடைமுறைகள் ஏதுமில்லை. இதற்கென தனியாக வரைமுறைபடுத்தும் சட்டதிட்டம் எதுவும் இல்லாத காரணத்தால், எத்தனை பள்ளிகள் உள்ளன என்ற விவரம் முழுமையாக இல்லை.

மெட்ரிக் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் என்ற நிலையில் எந்த நிலையிலும் பள்ளிகள் இல்லை என்ற கருத்தும் அறியப்பட்டது.

ஆந்திராவில் உள்ள பள்ளிகள் விவரம் :

தெலுங்கு மொழிப் பள்ளி	61166

ஆங்கில வழியில் நடப்பவை	-	3004
உருது		1265
தமிழ்	-	73

ஒரியா, கன்னடம், இந்தி, மராத்திய மொழி வழிப் பள்ளிகள் - 234.

தெலுங்கு, உருது, ஆங்கிலத்துடன் தமிழையும் இணைப்பயிற்சிமொழியாகக் கொண்டுள்ள கல்வி நிறுவனம் : ஒன்று (HAJC)

தெலுங்கு, தமிழ் மட்டுமே இணைப் பயிற்றுமொழியாகக் கொண்டுள்ள

தொடக்கப் பள்ளிகள்		16
நடுநிலைப் பள்ளிகள்	-	6
உயர் நிலைப்பள்ளிகள்	-	9
(HAJC)	-	1

ஆந்திராவில் மொழிப்பாடம் எப்படி அமைந்துள்ளது? 6ஆம் வகுப்பு முதல் மும்மொழிக் கொள்கைதான். ஆனால் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை ஒரே மொழிதான் : தெலுங்கு மொழி அல்லது தாய்மொழி 5ஆம் வகுப்பில் ஆங்கிலமும் பாடமாகிறது.

எனவே, நீதியரசர் மோகன் தலைமையிலான குழு ஆந்திரா, கர்நாடகம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களின் தொடக்கக் கல்வி நிலைகளையும், அங்கு பயிற்றுவிக்கப்படும் மொழிகளையும் உணர்ந்தே தக்க பரிந்துரைகளைச் செய்திருக்கின்றது என்பதனைக் கவனிக்க வேண்டும்.

* * *

இயல் இருபது

அமைச்சரவை முடிவும் அரசாணையும்

பொதுவாகவே எந்த அமைச்சரவைக் கூட்டத்தின் நடவடிக்கைகளையும் விரிவாக யாரும் சொல்வதில்லை. அதன் விளைவாக வெளிவரும் அரசாணையை மட்டும் வெளியிட்டால் போதும்.

ஆனால் ‘தமிழ் வழிக்கல்வி’ தொடர்பாக நீதியரசர் மோகன் குழு தந்த பரிந்துரைகள் பள்ளிக்கல்வித் துறையாலும் கல்வி அமைச்சராலும் எப்படி அணுகப்பட்டன? முதல்வராகிய கலைஞர் எப்படி அணுகினார். பிற அமைச்சர்கள் என்ன பேசினார்கள்? நான் என்ன பேசினேன்? என்பவை குறித்து பலரிடம் திரட்டிய செய்திகளின் அடிப்படையில் பல இதழ்கள் வெளியிட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றிரண்டு மிகையாக இருந்தாலும் பிற செய்திகள் சரியானவைதாம். எனினும், அவர்களுக்கும் கிடைக்காத உண்மைகள் சில புதைந்துள்ளன. இந்த நூலில், இந்த இடத்தில் சொல்லாவிட்டால் அந்த உண்மைகள் புதைந்தே போகும்.

எனவே இந்தக் கட்டுரை. (அக்டோபர் 1999) ‘மள்ளர் மலர்’ இதழில் வந்த செய்தி இது.

தமிழ் பயிற்று மொழியாவதற்கு
மூன்று திமுக அமைச்சர்கள் எதிர்ப்பு
தமிழ்க்குடிமகன் தனித்து ஆதரவு
கலைஞர் நடுநிலை? ? ?

28.9.1999 அன்று தமிழ்நாடு அமைச்சரவையில் ‘‘தமிழ்வழிக் கல்வியைக்’’ கட்டாயமாக்க வேண்டும் என்பது பற்றிய மோகன் குழுவின் அறிக்கை மீது விவாதம் நடைபெற்றதாம். அமைச்சர் தமிழ்க்குடிமகன் அதற்கு ஆதரவாக பேசியதாகவும் மூன்று அமைச்சர்கள் துரைமுருகன், வீரபாண்டி ஆறுமுகம், ஆலடி அருணா ஆகியோர் எதிர்த்து வாதிட்டார்களாம். அவர்கள் கூறிய ஒரு காரணம் ‘இப்ப தமிழ்நாட்டிலிருந்து நிறைய பேருக்கு வெளிநாடுகளில் நல்ல வேலை வாய்ப்பு இருக்கிறது. எனவே தமிழை பயிற்று மொழியாக்கக் கூடாது’ என்பதாகும். கலைஞர் நடுநிலை வகித்தாராம்?

இவர்கள் சொல்லும் காரணத்தைச் சற்று விரிவாக்கிப் பார்த்தால் அவர்களின் வாதத்தில் உள்ள மடமை புரியும்.’’

வேலை வாய்ப்புத் தொடர்பாக இவர்கள் சொன்ன கருத்தினை 'மள்ளர் மலர்' இதழ் எப்படி மறுக்கிறது? இதில் நம் கருத்து என்ன என்பதனை 37ஆம் இயலில் பார்ப்போம்.

அமைச்சர்கள் எதிர்த்துக் கருத்துச் சொன்னார்கள் என்று நான் எடுத்துக் கொள்ளவில்லை. அமைச்சரவையில் அவர்கள் தங்கள் கருத்துகளைச் சொன்னார்கள் என்றே கொள்ளலாம். துரைமுருகன், தன் மகனைப் பதினொன்றாம் வகுப்பில் சேர்க்கும்போதே 'தமிழை உதறி எறிந்துவிட்டு' பாகம் ஒன்றில் பிரெஞ்சு மொழி எடுத்துப் படிக்கவைத்தவர்: ஆலடி அருணா ஏற்கெனவே ஒரு மேல்நிலைப்பள்ளி நடத்திக் கொண்டிருப்பவர். அவர்கள் ஒன்றிரண்டு கருத்துகளைத் தெரிவித்தார்கள். ஆனால் வீரபாண்டி ஆறுமுகம் எந்த மாறுபட்ட கருத்தையும் தெரிவிக்கவில்லை.

அதேபோல் ஜூனியர் விகடன் (6.10.99) இதழில் வெளிவந்த செய்திகள் இவை:

''கட்டாய தமிழ் வழிக் கல்வி 'கேபினெட்' பட்டி மன்றம்

''தமிழ்நாட்டுப் பள்ளி கல்லூரிகளில் தமிழ் வழிக் கல்வி வேண்டும்; தமிழே தெரியாதவர்கள்கூட தமிழ்நாட்டில் படித்துப் பட்டம் வாங்கிவிட முடிகிறது. தமிழாய்ந்த ஒரு தலைமகன் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கும்போது இந்நிலைமையா?'' எனக் கேட்டு நூறு தமிழறிஞர்கள் கொஞ்ச நாட்களுக்கு முன்பு வள்ளுவர் கோட்டம் அருகே உண்ணாவிரதம் இருந்தது நினைவிருக்கிறதா? அப்போது அவர்களைப் பார்த்து சமாதானம் பேசப்போன தமிழ்த்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன், 'ஒரு குழு அமைத்துபேசி நல்ல முடிவு எடுப்போம்' என சொல்லியிருந்தார். நீதிபதி மோகன் தலைமையில் கலைஞர் ஒரு குழுவையும் நியமித்தார். அந்தக் குழுவினர், ''எல்.கே.ஜி. முதல் மெட்ரிகுலேசன் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வியைக் கட்டாயமாக்க வேண்டும்'' என்றும், ''பொறியியல், பாலிடெக்னிக், விவசாயம், ஐ.டி.ஐ. ஆகிய கல்லூரிகளிலும் தமிழ்வழிக் கல்வியைக் கொண்டுவரலாம்'' என்றும் முதல்வர் கலைஞரிடம் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். மேல்மட்ட அதிகாரிகள் சிலரிடம் இதுபற்றி கருத்து கேட்டு அறிக்கையை அனுப்பினார் முதல்வர்.

ஆனால், தமிழ்வழிக் கல்வியைக் கட்டாயப்படுத்துவதில் அரசியல் ரீதியாக சில பிரச்னைகள் எழலாம் எனக்கருதிய உயர் அதிகாரிகள், அதை வெளிப்படையாகச் சொல்ல முடியாமல் ஃபைலை காயப் போட்டுக் கொண்டிருந்தனர். காத்துப் பார்த்து வெறுத்து முதல்வரை இந்த விஷயத்தில் உசுப்பிவிட்டது அமைச்சர் தமிழ்க்குடிமகன்தான்!

அதன் விளைவு. . . 28-ம் தேதி கோட்டையில் கூடிய அமைச்சரவை கூட்டத்தில் காரசாரமான பட்டிமன்றமே நடந்து முடிந்திருக்கிறது.

மோகன் குழு பரிந்துரையின் சாராம்சங்களை மட்டும் முதல்வர் கேபினட்டில் வாசித்து முடிக்க. . . அதற்கு அமைச்சர்கள் மத்தியிலேயே இவ்வளவு எதிர்ப்பு இருக்கும் என கலைஞரே எதிர்பார்க்கவில்லை. முதல் எதிர் குரலே அமைச்சர் துரைமுருகனுடையதுதான்.

''இப்ப தமிழ்நாட்டில படிச்ச ஸ்டூடண்ஸுக்கு வெளிநாடுகளில் நல்ல ரெஸ்பான்ஸ் இருக்குது. வெளிநாட்டு கம்பெனிகளும் 'லைக்' பண்ணுது. இந்த நேரத்துல போயி எல்லாரும் தமிழ்ல மட்டும்தான் படிக்கணும்னு சொன்னா அதுக்கு பாடத்திட்டத்தில் அடிமட்டம் முதல் நிறைய மாற்றம் செய்தாகணும். இதை தமிழ்நாட்டு மக்களும் ஏத்துக்கமாட்டாங்க. தெரிஞ்சே நாம ஏதோ தப்பா பண்றதா ஆயிடும். .'' என்று இன்றைய காலநிலைக்கு ஏற்றபடி துரைமுருகனின் குரல் ஓங்கி ஒலிக்க. . வழக்கமாக அவருக்கு எதிர்க்குரல் போடும் வீரபாண்டியாரும் இதற்கு ஆதரவாகவே பேசினார். கலைஞர், ஆயிரம் அர்த்தங்களோடு தமிழ்க்குடிமகனைப் பார்க்க, ஆலடி அருணா முந்திக்கொண்டு, ''தடாலடியாக அப்படி ஒரு முடிவை திடீரென்று கொண்டு வருவது சரியல்ல'' என்று சொன்னார். மூத்த அமைச்சர்கள் மூன்று பேரும் இப்படி எதிர்க்குரல் கொடுக்கக் கொடுக்க. . . கொஞ்சம் ஆடிப்போய்தான் உட்கார்ந்திருந்தார் தமிழ்க்குடிமகன். ஆலடி அருணா பேசிமுடித்ததும் . . .

''இந்தியாவுல உள்ள எல்லா மாநிலத்து மாணவர்களுக்கும்தான் வெளிநாட்டுல வேலை கிடைக்குது. அவங்களெல்லாம் அந்தந்த மாநிலத்து தாய் மொழியில படிச்சு பாஸ் பண்ணித்தான் மேல போறாங்க. ஆங்கிலத்தை ஒரு மொழியாகப் படிச்சு வைக்கணும். அதிலும் வல்லவனாக இருக்கணும்கிறதுதான் முக்கியமே தவிர, எல்லாப் பாடத்தையும் ஆங்கிலத்தில் தான் படிக்கணும்கிறது அவசியம் கிடையாது. தமிழ்நாட்டுல தமிழ்லதான் படிக்கணும்கிறதை முறைப்படுத்துறதக்கு நம்மைவிட்டா அப்புறம் யார் இருக்காங்க? தமிழ் அறிஞர்களும் கூட நம்மைத் தவிர, வேற யாருகிட்ட கேட்பாங்க?'' என்று உணர்ச்சிவசப்பட்டுப பேசிய தமிழ்க்குடிமகன் இந்தியாவின் மாநிலங்களில் தாய்மொழியைக் கல்வி மொழியாக கொண்டிருப்பது எங்கெங்கே என்ற பட்டிலையும் மூச்சுவிடாமல் படித்திருக்கிறார். எந்தவித ரியாக்ஷனும் காட்டாமல் கலைஞர் இதையும் கவனித்துக் கொண்டிருந்தாராம்.

சுமார் ஒன்றரை மணி நேரத்துக்கு மேல் இந்த விவாதம் நடந்து முடிய, ''மோகன் குழு பரிந்துரையை சில திருத்தங்களோடு ஏற்றுக் கொள்ளலாம்''

என்று கலைஞர் சொல்ல, திருத்தம் என்ன? என்று பேச்சு மாறியிருக்கிறது. இப்போது இருக்கும் பாடங்களைக் கட்டாயத் தமிழுக்குக் கொண்டு வராமல், ஏதேனும் இரண்டு பாடங்களைப் புதிதாக அறிமுகப்படுத்தி அதை தமிழ் மூலம் கற்பித்தால் பிரச்னை இருக்காது' என்று ஒரு யோசனை வந்துவிழ 'அது முடியவே முடியாது' என்று துள்ளி குதித்து மறுத்து தனி ஆளாக வாதாடினார் தமிழ்க்குடிமகன்.

''இன்ஜினீயரிங், வேளாண்மை தவிர, மோகன் குழு கொடுத்த பரிந்துரைகளில் பிறவற்றை ஏற்றுக் கொள்ளலாம்'' என்று அமைச்சரவை கூட்டத்தின் இறுதியில் சொல்லப்பட. . ''மிகச் சீக்கிரம் முடிவெடுத்து அறிவித்துவிடலாம். தாமதம் வேண்டாம்'' என்று தமிழ்க்குடிகனைப் பார்த்துச் சொன்னாராம் கலைஞர்'' என்கிறது ஜூனியர் விகடன்.

'முகம்' இதழ் வெளியிட்ட அட்டைப் படத்தில் அமைச்சரவையில் தனித்தும், உயர்ந்தும் நின்றவன் எனும் முறையில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இதில் மிக முக்கியமான ஒன்றை நீங்கள் கவனிக்காமல் விட்டு விடக்கூடாது. 'தமிழ் வழிக் கல்வி'யைச் செயற்படுத்துவதில் முழுப் பொறுப்பேற்க வேண்டியவர் கல்வியமைச்சர் அன்பழகன்தான். ஆனால் அவர் பெயர் இந்த இதழ்களில் வரவில்லையே. ஏன்? முறைப்படி, துரை முருகனுக்கும் ஆலடி அருணாவுக்கும் கடுமையான முறையில் 'பதிலடி' கொடுத்திருக்க வேண்டியவர் அன்பழகன்தான். குறிப்பாகச் சொன்னால், 'தமிழ் வழிக் கல்வி'க்குக் கடுமையாக முயன்றவர் அன்பழகன்; அவருக்குச் சார்பாகக் குரல் கொடுத்தவர் தமிழ்க்குடிமகன் என்று வந்திருந்தால் தான் அது சரியாக இருக்கும். ஆனால் அன்பழகன் ஏதும் பேசியதாக இந்த இதழ்களில் வரவில்லையே ஏன்?

தமிழ் வரலாற்றை இந்தக் கால கட்டத்தில் வரைபவர்கட்கு நான் வைக்கும் கேள்விக் குறி இது.

இந்தச் செய்திகளின்படி பார்த்தால் அன்பழகன் எதுவுமே பேசவில்லை என்றே தோன்றும். வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி என்று அலட்சியமாக அவர் நடந்து கொண்டாரா?

தமிழ் ஆர்வலர்கள் இதை அறிந்து கொள்ள ஆசைப்படுவீர்கள்.

மற்றொன்று 'கலைஞர் நடுநிலையாக வகித்தார்' என்கின்றன இதழ்கள். இந்தச் செய்தி முற்றிலும் தவறானதாகும். துரை முருகனோ, ஆலடி

அருணாவோ ஒன்றிரண்டு கருத்துகளைத் தெரிவிக்கும்போது அதைக் கவனித்துக் கேட்கவேண்டியது முதல்வர் கடமை அல்லவா! அதுதானே முறை. எல்லாக் கருத்துகளும் எடுத்துவைக்கப் பட்ட பிறகுதானே அமைச்சரவை முடிவு செய்யும்? கலைஞர் நடுநிலை வகித்தார் என்று சொல்லமாட்டேன்.

தமிழ் வழிக் கல்விக்கு அவர் முழு ஆதரவாளராகவே இருந்தார். தமிழ்ச் சான்றோர் பேரவைக்குக் கொடுத்த உறுதிமொழியிலிருந்து பிறழவில்லை. எனவே, பலருடைய மயக்கத்தைப் போக்கும் வகையிலும், உண்மை என்ன என்று தெரிந்தாலும் 'தமிழ் மொழி வரலாறு' ஐயங்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்கவேண்டிய தேவை கருதியும் நான் இங்கே சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அமைச்சரவை கூடிய உடனே முதல்வர் கலைஞர் பள்ளிக் கல்விச் செயலாளர் எம்.ஏ. கௌரி சங்கரிடம் 'தமிழ் வழிக் கல்வி' பற்றி உங்கள் கருத்துகளைத் தெரிவியுங்கள் என்றார். (கௌரி சங்கர் தமிழ் மீது எந்தப் பற்றுமில்லாத, வைதீகத்தில் நம்பிக்கையுள்ள பிராமணர் என்பதை நான் சொல்லியாகவேண்டும்) அவரோ பல செய்திகளைச் சொல்லி 'தமிழ் வழிக் கல்வி'க்கான ஆணை பிறப்பிப்பது நல்லதல்ல என்று சொல்லத் தொடங்கினார். முதல்வர்க்குச் சினம் வந்துவிட்டது. 'கௌரிசங்கர்'! மோகன் குழு பரிந்துரை அடிப்படையில் தமிழ் வழிக் கல்வி அமைய வழி என்ன என்று கேட்டால், அது வராமலிருப்பதற்கு என்னவெல்லாம் உண்டோ அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

தமிழ் வழிக் கல்வி வர வழிகள் என்ன? அதைச் சொல்லுங்கள் என்றார் முதல்வர். செயலர் அதன்பிறகு வாய் திறக்கவில்லை.

முதல்வர், கல்வி அமைச்சர் பக்கம் திரும்பி 'பேராசிரியர்! சொல்லுங்கள்!' என்றார்.

அன்பர்கள் இந்த இடத்தைத்தான் மிகவும் கவனமாகப் படிக்கவேண்டும். 'தமிழ் வழிக் கல்வி'யின் தேவையைத் தமிழ்ப் பேராசிரியராகிய அன்பழகன் உணர்ந்திருப்பார். அவரது வேகமான செயற்பாடுகளின் மூலமாகவே 'தமிழ் வழிக் கல்வி' வந்து விடும் என்று தமிழ் அறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் நம்பியிருந்தால். . . இவற்றையெல்லாம் அடித்து நொறுக்கிவிடுவதுபோல் அமைந்தது அன்பழகன் பேச்சு; ஆம்! கௌரி சங்கர் என்ன சொன்னாரோ அதே அடிப்படையில், 'தமிழ் வழிக் கல்வி'யைக் கொண்டு வருவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்றார் அன்பழகன்!

அப்படி அவர் சொன்னவுடனேயே முதல்வர்ககு எரிச்சல் வந்துவிட்டது. பொழிந்து தள்ளினார்.

'என்ன பேராசிரியர், நீங்களே இப்படிப் பேசுறீங்க. நாமெல்லாம் தமிழுக்காக வாழுறவங்க! தமிழின் பெயரைச் சொல்லியே ஆட்சிக்கு வந்தவங்க! இப்போ வேறே தமிழறிஞர்களின் போராட்டமே பெரிசாகிப் போச்சு! குழுவும் அமைச்சு முடிவுகளும் வந்திருச்சு! நாம தமிழுக்குச் செய்யாம வேற யாரு செய்யப்போறாங்க?' என்று பேசினார் முதல்வர்.

அதே வேகத்தில் என்பக்கம் திரும்பி 'நீங்க சொல்லுங்க! எதுக்காகத் தமிழ் வழிக் கல்வி வரணும்! எப்படி அமைக்கணும்! என்று கேட்டார். நண்பர்கட்கெல்லாம் தெரியும், இது குறித்து நான் ஏற்கெனவே கட்டுரைகளிலும், நேர்காணல்களிலும் விரிவாகத் தெரிவித்திருக்கின்றேன் என்று. அந்த அடிப்படையில் மளமளவென்று என் கருத்துகளைத் தெரிவித்தேன்.

உடனே முதல்வர், சரி இதற்கானவற்றை அலசி ஆராய்ந்து முடிவு செய்யலாம் என்று தெரிவித்துவிட்டார்.

'தமிழ்க் கல்வி' தமிழ்நாட்டில்
கட்டாயம் என்றதொரு
சட்டம் செய்க' என்றார் பாவேந்தர்.

மோகன் குழு அறிக்கை 1 முதல் 5ஆம் வகுப்பு வரை தமிழ்ப் பயிற்றுமொழி எனக் கொண்டு வரச் சட்டம் செய்யவேண்டும் என்றுதான் பரிந்துரைத்தது.

ஆனால் அமைச்சரவையில் பேராசிரியர் போன்றவர்கள் ஆணை பிறப்பித்தாலே போதும் என்றனர். சட்டம் செய்ய வேண்டும் என்ற பரிந்துரை எடுபடவில்லை.

அரசாணை:

<u>சுருக்கம்</u>

கல்வி - மழலையர் பள்ளி உட்பட உயர்கல்வி வரை தமிழ் மொழியைப் பயிற்று மொழியாகச் செயல்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரைகள் மீது ஆணைகள் வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி(சி2) துறை

அரசாணை (நிலை) எண்.324 நாள்: 19.11.99

<u>படிக்கப்பட்டவை:-</u>

1. அரசாணை (நிலை) எண்.6, பள்ளிக் கல்வி, நாள் 13.1.99.
2. அரசாணை (நிலை) எண்.117, பள்ளிக் கல்வி, நாள் 3.5.99.

<u>ஆணை:</u>

மழலையர் பள்ளி உட்பட உயர்கல்வி வரை தமிழ்மொழியைப் பயிற்று மொழியாகச் செயல்படுத்தக் கோரி தமிழ் சான்றோர்கள் அரசின் முன் கோரிக்கை வைத்ததையடுத்து நீதிபதி திரு.எஸ்.மோகன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இக்குழு தமிழ் அறிஞர்கள், பொதுமக்கள் ஆகியவர்களுடன் கலந்து பேசி அரசிற்கு பரிந்துரையை அளித்தது. அப்பரிந்துரைகளை அரசு கவனமுடன் ஆராய்ந்தது. குழுவின் பரிந்துரைகள் மீது மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் ஆகியவற்றின் வாரியங்களின் கருத்துக்கள் பெறப்பட்டன. அனைத்தையும் ஆய்வு செய்த பின் கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடப்படுகின்றன:

1. அரசின் பயிற்று மொழிக் கொள்கை குறித்து வெளியிடப்பட்ட அரசாணைகள் செல்லும் என நீதிமன்றங்களால் முடிவு செய்யப்பட்டுள்ளதால் மொழிக் கொள்கைக்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டிய அவசியமில்லை என அரசு கருதுகிறது. தொடர்ந்து அரசு ஆணைகள் மூலமே மொழிக் கொள்கை முடிவுகள் வெளியிடப்படும்.

2. அனைத்துப் பள்ளிகளிலும் (மெட்ரிகுலேஷன் பள்ளிகள், மாநில அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள், மற்றும் அரசு நிதியுதவி பெறாத ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகள் அனைத்திலும்) தமிழ் அல்லது <u>தாய்மொழியே முதல் மொழியாகப்</u> பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

3. முதல் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை அனைத்து மெட்ரிகுலேஷன் மற்றும் மாநில அரசு (State Board) பாட முறை பின்பற்றும் பள்ளிகளில் <u>தாய்மொழி அல்லது தமிழ் மட்டுமே பயிற்று மொழியாக</u> இருக்க வேண்டும்.

4. மூன்றாண்டு காலத்திற்குள் அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 5 வகுப்புகளில் தாய் மொழி அல்லது தமிழைப் பயிற்று மொழியாக மாற்றியமைக்க வேண்டும். 2000-2001 ஆண்டு முதல், முதல் வகுப்பில் தாய்மொழி அல்லது தமிழ்மொழியே பயிற்று மொழியாக இருக்க

வேண்டும். படிப்படியாக மேல் வகுப்புகளுக்கும் பயிற்றுமொழி மாற்றம் செய்யப்பட வேண்டும்.

5. ஆறாம் வகுப்பில் மாணவர்கள் சேர்க்கை குறித்து தற்போதுள்ள நடைமுறையே தொடர்ந்து கடைபிடிக்கப்படும். ஏற்பளிக்கப்படாத/அங்கீகாரம் அளிக்கப்படாத பள்ளிகளில் படித்தவர்களுக்கும் தனியே பயின்றவர்களுக்கும் சம்பந்தப்பட்ட பள்ளிகள் அளவிலேயோ நுழைவுத் தேர்வு நடத்தித் திறமை தகுதி கண்டு மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

6. மெட்ரிகுலேஷன் வாரிய விதிகளில் ஆங்கிலத்துடன் தமிழ் மற்றும் தாய்மொழியும் பயிற்று மொழியாகச் சேர்க்கப்படும். இதற்கான மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் விதிகளுக்குத் திருத்தங்கள் தனியாக வெளியிடப்படும்.

7. அனைத்து அரசு மற்றும் நிதியுதவி பெறும் பள்ளிகளிலும் அரசு நிதி உதவி பெறாத ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகளிலும், மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் முதன்மை மொழி, தமிழ் அல்லது தாய்மொழி என்று பள்ளிகளின் மொழி பற்றிய விதி மாற்றி அமைக்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.ஏ. கௌரிசங்கர்,
அரசு செயலாளர்.

பெறுநர்

தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

இவ்வரசாணையில் முதல் பத்தியைப் பார்த்தால் தெரியும்.

''அரசின் பயிற்று மொழிக் கொள்கை குறித்து வெளியிடப்பட்ட அரசாணைகள் செல்லும் என நீதிமன்றங்களால் முடிவு செய்யப்பட்டுள்ளதால் மொழிக் கொள்கைக்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் அளிக்கப்படவேண்டிய அவசியமில்லை என அரசு கருதுகிறது. தொடர்ந்து அரசு ஆணைகள் மூலமே மொழிக் கொள்கை முடிவுகள் வெளியிடப்படும்.''

சட்டம் கொண்டுவர வேண்டும் எனும் அவசியம் இல்லை என்றே அன்பழகன் அடித்துச் சொல்லிவிட்டார். 'அப்படியே செய்துவிடலாம்' என்றது ஒரு கூட்டம். (மூன்று நான்கு பேர்)

முதல்வர் அப்படியே முடிவு செய்யலாம் என்று கூறிவிட்டார்.

கவனியுங்கள்: அமைச்சரவையில் தமிழ் வழிக் கல்விக்கு மாறாகக் கருத்துத் தெரிவித்தவர்கள் துரைமுருகன், ஆலடி அருணா போன்றவர்கள். ஆனால் தமிழ் வழிக் கல்விக்கு எதிர்ப்பே தெரிவித்தவர் அன்பழகன்தான். பின் இதற்குச் 'சட்டம் தேவையில்லை, ஆணையே போதும்' என்று விடாப்பிடியாக நின்றவர் அவர்தான்.

அதன்பிறகுதான் மோகன் குழு பரிந்துரைகள் அலசி ஆராயப்பட்டு ஆணையிடுவதற்கான குறிப்புரைகள் தொகுக்கப்பட்டன. அந்த அடிப்படையில் விளைந்ததுதான் இந்த அரசாணை.

அமைச்சரவைக் கூட்டம் நடந்தது 28.10.1999 இல். அரசாணை பிறப்பிக்கப்பட்டது 19.11.99 இல். 22 நாட்கள் கழித்து இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டும், கல்வித்துறையிலிருந்து வெளியுலகத்துக்கு இது சொல்லப்படவில்லை. இப்படி ஓர் ஆணை வந்திருப்பதே யாருக்கும் தெரியாமல் இருந்தது. ஒரு கிழமை பொறுத்துப் பார்த்த நான் ஒருநாள் அரசாணையைப் படிகள் எடுத்து செய்தியாளர்களை வரவழைத்துச் சிலவற்றைத் தெரிவித்தேன்.

வெளியிட்ட அரசாணையைத் தமிழக மக்களுக்குத் தெரிவிப்பதில் கூட ஆர்வம் காட்டாத கல்வி அமைச்சகம். எதிர்ப்புகள் வந்தபோது எப்படி எதிர்த்துப் போராடியிருக்கும்? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ் வழிக் கல்வி வரக்கூடாது என்று கருதிய கௌரி சங்கர் வழக்குகள் வந்த போது மகிழ்ச்சி அடைந்திருப்பாரா? எதிர்த்துப போராட எழுச்சியோடு புறப்பட்டிருப்பாரா? என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்.

'தமிழ் வழிக் கல்வி'யை வேண்டா வெறுப்பாகக் கையில் தூக்கிய அன்பழகன் கடைசிவரை இதற்காகப் போராடியிருப்பாரா? அல்லது தன்னால்

ஊட்டி வளர்க்கப்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகள் வெற்றி காணட்டும் என்று வேடிக்கை பார்த்திருப்பாரா?

'உயிர் போனால் தமிழுக்கு' என்று உண்ணா நோன்பிருந்த 103 பேருக்கும் முன்னால் இதனைப் படைக்கின்றேன்.

அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பிறகு மழலையர் (ம) தொடக்கப் பள்ளிகள் சங்கம், மெட்ரிக் பள்ளிகள் சங்கம் கூட்டாக விட்ட அறிக்கையைப் பாருங்கள்.

மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பள்ளி நிர்வாகிகளுக்கும் ஓர் இனிப்பான செய்தி !

மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளிலும், மற்றும் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளிலும் தமிழ் வழியில் தான் போதிக்க வேண்டுமென்றும் தமிழக அரசின் ஆணையும் நீதிபதி மோகன் அறிக்கையும் தெரிவிக்கின்றன. தமிழ் வழிக் கல்வியை அமுல்படுத்துவது குறித்து 29.9.99 அன்று நடந்த தமிழக அமைச்சரவை கூட்டத்தில் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளிலும், மெட்ரிக்குலேஷன் பள்ளிகளிலும், தற்போதுள்ள நிலைமையிலேயே ஆங்கில வழிக் கல்வியை அமுல்படுத்த வேண்டுமென்றும் அதில் அரசு தலையிட வேண்டாமென்றும் அமைச்சரவைக் கூட்டத்தில் மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்அவர்களும், மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்ட அமைச்சர் அவர்களும், மாண்புமிகு திரு. வீரபாண்டி ஆறுமுகம், விவசாயத்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு திரு. சற்குண பாண்டியன், சமூகநலத்துறை அமைச்சர் அவர்களும் நமக்காக வாதாடினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும், தற்போதுள்ள நிலைமையை நீடிக்கலாம் என்று தமிழ் வழிக் கல்வியை கட்டாயப்படுத்த வேண்டாமென்றும், முடிவு செய்துள்ளார்கள். மேலும் மாண்புமிகு முதல்வர், கல்வி அமைச்சர், அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர், கல்வி இயக்குநர், கல்வி இலாகா செயலாளர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.''

படித்துவிட்டீர்களா? யார் யாருக்கெல்லாம் அவர்கள் நன்றி தெரிவித்திருக்கிறார்கள் பார்த்தீர்களா? இந்தப் பட்டியலில் வாதத்தில் பங்கு பெற்ற ஒரே ஒருவர் பெயர்தான் விடப்பட்டுள்ளது. அது யார்? தமிழ்க்குடிமகன்தான். காரணம்... நான்தானே அவர்களுக்கு எதிரி?

இயல் இருபத்தொன்று

மெட்ரிகுலேசன் பள்ளிகளின் நடவடிக்கைகள்

மெட்ரிக் பள்ளிகள் 1950 ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டன.

1977இல் சென்னைப் பல்கலைக்கழக ஆளுகைக்கீழ் 29 மெட்ரிகுலேசன் பள்ளிகளே இருந்தன. மதுரை, காமராசர் பல்கலைக்கழக எல்லைக்குள் ஒரே ஒரு பள்ளிதான் இருந்தது. (எனவே 1977 இல் 30 பள்ளிகள் தாம்)

இவை அனைத்திலும் பயிற்றுமொழி ஆங்கிலம்தான்.

அரசாணை 2816 (பள்ளிக் கல்வித்துறை / 29.12.1976 இன்படி மெட்ரிகுலேசன் பள்ளிகட்கான தனி வாரியத்தை (Board) அமைத்து ஆணையிட்டது அரசு . (இது குடியரசுத் தலைவர் ஆட்சிக்காலம் என்பதனை நினைவிற்கொள்ளவும்)

பள்ளிக் கல்வி இயக்குநரைத் தலைவராகக் கொண்டும், கல்வித்துறை சார்ந்த மூவரை, பதவி நிலை உறுப்பினர்களாகவும் கொண்டு வாரியம் அமைக்கப்பட்டது. மேலும் பல்கலைக்கழகத்திலிருந்து இருவரும், பள்ளி நிர்வாகச் சார்பில், ஆசிரியர் சார்பில், ஆர்வமுள்ள பிரமுகர்கள் சார்பில் என மூவரும் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டனர். 25.7.1977 இல் 1720 இன் படி பிறப்பிக்கப்பட்ட இந்த ஆணை இன்றும் நடைமுறையில் உள்ளது. (இது புரட்சித்தலைவர் ஆட்சிக் காலமாகும்)

தமிழ் நாட்டுப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் என்றும் அரசினர் உயர் நிலைப்பள்ளிகள் என்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் என்றும் பெயர்தாங்கி நிற்கின்றன. அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளோ ஆயிர வைசியர் மேல்நிலைப்பள்ளி, தே பிரித்தோ மேல் நிலைப்பள்ளி, தூய வளனார் மேல் நிலைப்பள்ளி என்று பெயர் தாங்கியுள்ளன.

பெயரிலேயே தமிழையோ, தமிழ் மரபையோ தாங்காமல் புறந்தள்ளி விட்டு 'மெட்ரிகுலேசன்' எனும் ஆங்கிலப் பெயரிலேயே பிறந்து, ஆங்கிலப் பயிற்றுமொழிதான் அடிப்படை என்று கொண்டு இன்று அரசினரின் மொழிக் கொள்கைக்கே எதிராக இயங்கி வருபவை மெட்ரிகுலேசன் பள்ளிகள்தாம்.

மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடர்பாக, கல்வி முறைக்கோ, தமிழுக்கோ தீங்கு நேர்ந்திருக்குமானால் அதற்கு எந்த வகையிலும் காங்கிரசு ஆட்சி பொறுப்பாகாது. முழுக்க முழுக்க, 'திராவிட இயக்கம்'தான் இதற்குப் பொறுப்பேற்கவேண்டும். கூடுதலாகவும் முதன்மையாகவும் பொறுப்பேற்கக் கூடிய சிறப்பு (?) யாருக்கு வாய்க்கிறது என்பதனைப் பார்த்து விடலாம்.

மெட்ரிகுலேசன் பள்ளிகட்கு அனுமதி வழங்குவதற்கெனச் சில விதி முறைகள் உள்ளன. இவற்றுக்கு அனுமதி வழங்கும் முழு உரிமையும் 'பள்ளிக்கல்வி இயக்குநரகத்துக்குத்தான் உண்டு. முழுக்க முழுக்க மாநிலக் கல்வித் திட்டத்தின் கீழ்தான் இவை இயங்குகின்றன.

1998 இல் வெளியான ஓர் அறிக்கை - புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுமதி கொடுப்பது தொடர்பாக - முதலில் இயக்குநரகம் வழங்கியது 'Provisional Permission' மட்டுமே

உருபா 1 இலட்சம் வைப்பு நிதியாக வைப்பதுடன், போதுமான பொருத்தமான இடவசதி, விளையாட்டுத்திடல், இருக்கை வசதிகள் (Benches & Desks) , நூலக வசதி, ஆய்வுக் கூட வசதிகள் செய்யப்பட்டிருக்கவேண்டும். மிக முக்கியமானது தகுதி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும்.

இவைதாம் ஒரு பள்ளி தொடங்கத் தேவையானவை

மெட்ரிகுலேசன் பள்ளிகள் எண்ணிக்கையில் எப்படி வளர்ந்தன என்பது குறித்துப் பார்ப்போம்.

1995-96 இல்

உயர்நிலைப்பள்ளிகள்	887
மேல்நிலைப்பள்ளிகள்	540
மொத்தம்	1427

அதாவது 1975 முதல் 1995 வரை 20 ஆண்டுகளில் 30 பள்ளிகள் 1427 பள்ளிகளாக வளர்ந்துள்ளன. உண்மையில் இந்தப் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை தமிழ் வழியில், பாடங்கள் நடத்தப்படவேண்டுமெனக் கல்வி அமைச்சர் அன்பழகன் நினைத்திருந்தால் என்ன செய்திருக்கவேண்டும்? 1996 இல் பதவியேற்றதும், புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கோ, புதிய மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கோ அனுமதி வழங்கப்படமாட்டாது எனத் திட்டவட்டமாக அறிவித்திருக்கவேண்டும்.

அதன்பின், கல்வி வல்லுநர்களும், மேற்கண்ட பள்ளி நிர்வாகிகளும் கலந்துரையாடி ஒரு முடிவு எடுத்திருந்தால், 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை தமிழ் வழிக் கல்வியும் வந்திருக்கும். தமிழ்நாட்டில் இப்போது வளர்ந்துள்ள கொடுமைகளும் தலை தாழ்ந்து வீழ்ந்திருக்கும்.

ஆனால் கல்வி அமைச்சருக்கு அப்படியோர் எண்ணமே வரவில்லை. 20 ஆண்டுகளில் 1427 பள்ளிகள் மட்டும் தான் அனுமதி பெற்றிருக்கின்றன.

புரட்சித் தலைவர், கலைஞர், புரட்சித்தலைவி ஆட்சிகளின் கீழ் இவ்வளவு பள்ளிகள் தாம் வளர்ந்திருக்கின்றன. ஆனால் இவற்றின் வேகத்திற்கு நேர் மாறாக அன்பழகன் காலத்தில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் வேகம் பெற்றிருக்கின்றன.

1996-97 இல் அன்பழகன் பொறுப்பேற்ற ஒரே ஆண்டில் கூடுதலாக 273 பள்ளிகட்கு அனுமதி வழங்கியுள்ளார்.

உயர் நிலைப்பள்ளிகள்	-	1032
மேல்நிலைப்பள்ளிகள்	-	668
மொத்தம்		1700

1997 - 98இல் இரண்டாவது ஆண்டில் கூடுதலாக 337 பள்ளிகட்கு அனுமதி வழங்கியுள்ளார்.

உயர் நிலைப்பள்ளிகள்	-	1245
மேல்நிலைப் பள்ளிகள்	-	792
மொத்தம்		2037

1998-1999 இல் மூன்றாவது ஆண்டில் 150 பள்ளிகட்கு அனுமதி வழங்கியுள்ளார்.

உயர் நிலைப்பள்ளிகள்	-	1335
மேல்நிலைப்பள்ளிகள்	-	852
மொத்தம்		2187

1998இல் தான் தமிழ் வழிக் கல்வி பற்றிய கோரிக்கை வலுப்பெற்றது. இது குறித்து நாடெங்கும் குரல் எழுப்பப்பட்டது.

இவ்வளவு அமளி துமளி நடக்கிறது. மெட்ரிகுலேசன் பள்ளிகளை ஒழுங்கு செய்திட வேண்டுமென்ற குரல் கோட்டை வரை ஒலித்து, நாம் அரசாணை பிறப்பித்திட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த நிலையிலாவது கல்வி அமைச்சர் அன்பழகன் புதிய மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான அனுமதி வழங்குவதை நிறுத்தி வைத்திருக்க வேண்டும். இவ்வளவுக்கும் 13.1.1999 இல் ஓர் அரசாணை. நாம் பிறப்பிக்கப் போகும் அரசாணையோ 'மழலையர் பள்ளிகளில் தமிழ் வழி' என்பதற்காகத்தான்.

ஆனால் பேராசிரியர் இதற்கு நேர் மாறாக இயங்கினார் என்பதனைத் தமிழ் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

1999-2000 ஆண்டில் அவரது சாதனை அனைவரையும் வியக்க வைக்கும்.

1.4.99 முதல் 30.9.99 முடிய உள்ள ஆறுமாதங்களில் மட்டும் அவரால் அனுமதி வழங்கப்பட்ட மெட்ரிகுலேசன் உயர்நிலைப் பள்ளிகள்: 60, மேல் நிலைப்பள்ளிகள் : 306

ஆறுமாதங்களில் மட்டும் : 366 மெட்ரிகுலேசன் பள்ளிகள். இதற்குப் பிறகுதான் 19.11.99இல் நமது அரசாணை பிறக்கிறது. இதற்கு முன்னர் கல்வி அமைச்சர் காட்டிய வேகம் அடடா? என்ன வேகம் இந்தவேகம்! இதுவரை எந்தக் கல்வி அமைச்சரும் காட்டாத வேகம்.

6 மாதங்களில் காரி, ஞாயிறு விடுமுறை மற்றும் அரசு விடுமுறை நாட்களையும் கணக்கிட்டால் 55 நாட்கள் வரலாம். 6 மாதங்கள் 183 நாட்களில் 55 நாட்கள் கழித்தால் 128 வேலை நாள்கள்.

இந்த 128 வேலை நாட்களில் 366 பள்ளிகட்கு அனுமதி என்றால் ஒரு நாளைக்குச் சராசரியாக மூன்று பள்ளிகள். ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் அரங்க. தெய்வமணி இயங்கியிருக்கிறார். மொத்தத்தில் 'வாரி' வழங்கியிருக்கிறார்கள். யார்? கல்வி அமைச்சர் அன்பழகனா? மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகளா?

அந்த நேரத்தில் செய்தித் தாளில் வந்த செய்தி இது:

ஒரு பார்வை விடுங்கள்

மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான அனுமதி விவரம்!

ஆண்டு (1)	உயர்நிலைப்பள்ளி (2)	மேல்நிலைப்பள்ளி (3)	மொத்தம் (4)	
1972 முதல் 1993-94 வரை	759	373	1032	
1995-96	887	540	1427	
1996-97	1032	668	1700	(+273)
1997-98	1245	792	2037	(+337)
1998-99	1335	852	2187	(+150)
1999-2000	1641	912	2553	(+366)

குறிப்பு : முந்தைய ஆட்சிகளில் - 1427

(30.9.99 வரை) தி.மு.க. ஆட்சியில் - 1126

இவ்வளவு தாராளமாக மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டாலும் மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகளுக்குத் திருப்தியில்லை.

தமிழ் - ஆங்கிலப் பள்ளிகள் சங்கப் பொதுக்குழுவில் ஒரு தீர்மானம் நிறைவேற்றுகிறார்கள். (2.7.2000 தினகரன்)

''மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான அங்கீகாரம் வழங்குவதில் தேவையற்ற நிபந்தனைகளை தளர்த்தி தாராளமாக வழங்க வேண்டும்.''

இன்னும் வழங்குங்கள் - இன்னும் வழங்குங்கள் என்று அவர்கள் கோரிக்கை வைக்கிறார்கள்.

அவர்கள் எங்கள் ஆணைகளை எதிர்த்து நீதிமன்றம் சென்று, உயர்நீதிமன்றம் 'அரசு ஆணை செல்லாது' எனத் தீர்ப்பு வழங்கி, இன்று மேல் முறையீட்டு நிலையில் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தூங்கிக்கொண்டிருக்கிறது.

அதன்பிறகு, அ.தி.மு.க. ஆட்சி.

இப்போது நாம் இரண்டு நிலைகளைப் பார்க்க வேண்டும். ஒன்று மழலையர் தொடக்கப் பள்ளிகள் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை தமிழ் வழியில் பயில்வது குறித்த ஆணை. அதை நிறைவேற்ற

முடியவில்லை. எதிர்த்துப் போராடிய மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு வெற்றி. ஆனால் தாங்கள் சுயநிதியில் பள்ளி நடத்துவதாகவும், அரசு உதவி எதுவும் இல்லாதபோது எங்களைக் கட்டுப்படுத்தக் கூடாது என்றும் தெரிவித்து வரும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் அனைத்தும் தரமாக நடத்தப்படுகின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும்.

ஏதோ அரசினர் பள்ளிகளில் சரியான வகுப்பறை இல்லையென்பதாகவும், போதுமான ஆசிரியர்கள் இல்லை என்பதாகவும், கழிப்பறை வசதிகூட இல்லை யென்பதாகவும் பலமான குற்றச்சாட்டினைத் தொடர்ந்து கூறி வரும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் எப்படி நடைபெறுகின்றன? அங்கு தரம் அதிகமா? எல்லா வசதிகளும் உடைய பள்ளிகளைத்தான் அவர்கள் நடத்துகின்றார்களா? ஓர் அலசு அலசுவோமே!

அ.தி.மு.க. ஆட்சியில் மெட்ரிகுலேசன் பள்ளிகட்கெனத் தனி இயக்குநரகம் அமைக்கப்பட்டது. அதன் இயக்குநராக நாராயணசாமி பொறுப்பேற்றார். தமிழ்நாடு முழுவதும் உள்ள மெட்ரிகுலேசன் பள்ளிகளை மாவட்டம் தோறும் சென்று நேரில் ஆய்வு செய்து பல நடவடிக்கைகளை எடுத்தார்.

16.5.2002 நாளிட்ட 'தினமலரில்' தலைப்பைப் பாருங்கள்.

பணம் பிடுங்கும் மெட்ரிக் பள்ளிகளுக்கு பூட்டு!
முதலில் அரசு அங்கீகாரம் ரத்து
திருந்தாவிட்டால் அடுத்து வேட்டு

தமிழகத்தில் அரசு அனுமதி பெறாமல் துவக்கப்பட்டு, அப்பாவி மக்களிடம் பல மடங்கு பணம் பிடுங்கும் 'டுபாக்கூர்' மெட்ரிக்குலேஷன் பள்ளிகளை மூடிவிட அரசு முடிவு செய்துள்ளது. மெட்ரிக் பள்ளிகள் மேம்பாட்டு ஆய்வுக்குழு மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் சுமார் 500 பள்ளிகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் சம்பந்தப்பட்ட பள்ளி நிர்வாகிகள் கலக்கம் அடைந்துள்ளனர். அதே நேரம் பாதிக்கப்படும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு மாற்று வழிகளையும் அரசு அமல்படுத்தி உள்ளது.

தமிழகத்தில் அரசு பள்ளிகளின் கல்வித் தரம் மெச்சும்படியாக இல்லை என்பது வருத்தத்துக்குரியது. இதனால், மெட்ரிக் பள்ளிகள் புற்றீசல்களைப் போல பெருகிக் கொண்டிருக்கின்றன. இப்பள்ளிகளில் எல்.கே.ஜி., யில் மாணவர்களை சேர்ப்பதற்கே பல ஆயிரங்கள் நன்கொடை வழங்க வேண்டியுள்ளது.

இது தவிர அனுமதிக் கட்டணம், பள்ளி கட்டட நன்கொடை என்று துவங்கி ஏராளமான கட்டணங்கள் 'பிடுங்கப்படுகின்றன'.

இருந்தும் நடுத்தர மக்கள் கடன் வாங்கியாவது தங்கள் குழந்தைகளை மெட்ரிக் பள்ளிகளில் படிக்க வைக்கின்றனர். காரணம், வேகமாக வளர்ந்து வரும் உலகில் மற்றவர்களோடு போட்டி போட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. 'தங்கள் குழந்தைகளின் அறிவு பெருக மெட்ரிக் பள்ளிகள்தான் சரியான வழி' என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

இவ்வளவு பணம் வாங்கும் மெட்ரிக் பள்ளிகள் அரசின் அனுமதியோடு செயல்படுகின்றனவா என்றால் அதுதான் இல்லை. பல பள்ளிகள் அனுமதி வாங்காமல் தான் செயல்படுகின்றன. இவற்றில் பெரும்பாலான பள்ளிகளுக்கு முறையான கட்டடங்கள், நூலகம், சோதனைக் கூடம் போன்றவை இல்லை. அரசு நிபந்தனைகள் எதுவும் கடைப்பிடிக்கப்படுவது இல்லை.

இது மட்டுமின்றி மேலும் சில மோசடிகளும் நடக்கின்றன. ஒரு பள்ளிக்கு மட்டும் அங்கீகாரம் வாங்கிக் கொண்டு அதே நம்பரில் பல இடங்களில் பள்ளிகளை துவக்குகின்றனர். இந்த பள்ளிகளில் 9ம் வகுப்பில் அந்த வகுப்புக்குரிய பாடங்களை நடத்தாமல், 10ம் வகுப்புக்குரிய பாடங்களை நடத்துகின்றனர்.

தமிழகத்தில் உள்ள மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் சரியான முறையில் செயல்படாததால், இது பற்றி அறிக்கை அனுப்பும்படி அரசு, மெட்ரிக் பள்ளிகள் மேம்பாட்டு ஆய்வுக்குழுவை சிட்டிபாபு தலைமையில் அமைத்தது. இந்த குழுவினர் தமிழகம் முழுவதிலும் ஆய்வுகளை மேற்கொண்டனர். தமிழகம் முழுவதும் உள்ள 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மெட்ரிக் பள்ளிகளுக்கு 27 கேள்விகள் கொண்ட கடிதம் அந்தந்த மாவட்ட டி.இ.ஓ.க்கள் மூலம் அனுப்பப்பட்டன.

இதன் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது.

இது மட்டுமின்றி தமிழகத்தில் மூன்று இடங்களில் மட்டுமே இயங்கி வந்த மெட்ரிக் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகங்கள், பத்து இடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டன. அனைத்து மெட்ரிக் பள்ளிகள் பற்றிய விவரங்களும் தற்போது திரட்டப்பட்டு விட்டன.

அரசு அனுமதியில்லாமல் நடக்கும் பள்ளிகள், அடிப்படை வசதிகள் இல்லாத பள்ளிகள், எத்தனை என்பது பற்றி கணக்கெடுக்கப்பட்டு விட்டது.

இதன்படி, சுமார் 500 பள்ளிகள் முறைப்படியான அங்கீகாரம் இல்லாமல் செயல்படுகின்றன என்று தெரியவந்துள்ளது. இந்த டுபாக்கூர் பள்ளிகள் மீது முழுவீச்சில் நடவடிக்கை தயாராகிவிட்டது. இந்த பள்ளிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்து அரச உத்தரவு பிறப்பித்துள்ளது.

முதல் கட்ட நடவடிக்கையாக சேலம் மாவட்டத்தில் மட்டும் 75 பள்ளிகளுக்கு இந்த உத்தரவு வந்துள்ளது. இதன் பிறகும் இந்தப்பள்ளிகளை தொடர்ந்து நடத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் பள்ளிகள் பூட்டப்படும், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் மெட்ரிக் பள்ளி நிர்வாகிகள் கதி கலக்கம் அடைந்துள்ளனர். எப்போது தங்கள் பள்ளிக்கு பூட்டு வருமோ என்று அஞ்சுகின்றனர்.

அதே நேரத்தில் அங்கீகாரம் இல்லாத மெட்ரிக் பள்ளிகளில் பயின்று வந்த மாணவர்களின் எதிர்காலம் பற்றியும் அரசு கவலை கொண்டுள்ளது. அவர்களுக்கான மாற்று வழிகள் ஆலோசிக்கப்படுகின்றன. அருகில் உள்ள அரசு பள்ளிகள் அல்லது மெட்ரிக் பள்ளிகளில் அவர்களை சேர்த்து தொடர்ந்து கல்வி தரவும் அரசு திட்டமிட்டுள்ளது.

அரசின் இந்த அதிரடி நடவடிக்கையால் **போலி கல்வி நிறுவனங்கள்** முழுமையாக கட்டுப்படுத்தப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அங்கீகாரம் இல்லாத பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு மாற்று வழிகளையும் அரசே வழங்க முன்வருவது பெற்றோரிடையே மிகுந்த வரவேற்பைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.''

அரசுப் பள்ளிகளின் மீது புழுதி வாரித் தூற்றிய மெட்ரிகுலேசன் பள்ளியினர் தங்கள் பள்ளிகளை ஒழுங்காக நடத்துகிறார்களா? மாணவர்களிடம் - பெற்றோர்களிடம் பணம் பிடுங்குகிறார்களே தவிர, பள்ளிகளில் அதற்கான வசதிசெய்து கொடுத்துள்ளார்களா? அனுமதி பெறாத பள்ளிகள் 500. அவற்றின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது. அரசின் ஏற்பைப் பெறாமல் பள்ளி நடத்தி மாணவர்களையும் நம்பிச்சேர்க்கும் பெற்றோர்களையும் ஏமாற்றி வரும் இவர்கள் மீது நடவடிக்கை வந்தால் இந்த மாணவர்களின் கதி என்ன என்பதை மனச்சாட்சியுடன் சிந்தித்துப் பார்த்தார்களா?

இல்லை; இல்லை; இவர்கள் கல்வியாளர்கள் அல்லர். கல்வி வியாபாரம் செய்ய வந்தவர்கள்; பணம் பறிக்கும் பாதகம் செய்தவர்கள்.

அதனால்தான் அ.தி.மு.க. அரசு சரியான நடவடிக்கை எடுத்துப் போலி நிறுவனங்களுக்குப் பூட்டுப் போட்டுவிட்டது. இது குறித்து முன்னாள் கல்வி அமைச்சர் செம்மலையும் தெளிவு படுத்தியிருக்கிறார். (தினமணி, கோவை, 1.12.2003)

''சேவையில் சிறந்த சேவை கல்விச் சேவையாகும். பொருள் ஈட்டும் நோக்கத்துடன் பள்ளிகளை நடத்தக் கூடாது. புகழ் ஈட்டும் நோக்கத்துடன் செயல்பட வேண்டும்.

இந்தக் கல்வியாண்டில் மாநிலத்தில் 356 துவக்கப்பள்ளிகளும், 399 நடுநிலைப்பள்ளிகளும் துவக்கப் பட்டுள்ளன. மேலும் கட்டடம், கழிப்பறை, குடிநீர், நூலகம், ஆய்வக வசதிகளுக்காக நபார்டு வங்கி மூலம் ரூ.182 கோடியில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மெட்ரிக் பள்ளிகளின் கல்வித் தரத்தை ஆராய்வதற்காக கல்வியாளர் சிட்டிபாபு தலைமையில் ஆய்வுக்குழு அமைக்கப்பட்டது.

தமிழகத்தில் உள்ள 3,204 மெட்ரிக், பள்ளிகளில் இக்குழு ஆய்வு நடத்தி, அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

கடந்த 2 ஆண்டுகளில் அடிப்படை வசதிகள் இல்லாத 460 மெட்ரிக், பள்ளிகள் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

மேலும் பல பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்திக் கொள்ள கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

மெட்ரிக் பள்ளிகளின் அடிப்படை வசதி, கல்விக் கட்டணம், ஆசிரியர் சம்பளம் உள்ளிட்டவைகள் குறித்து சிட்டிபாபு குழுவினர் அளித்த அறிக்கை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. விரைவில் புதிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.''

460 பள்ளிகளின் ஏற்பு இலதாக்கப்பட்டது என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். அவர் கூறியபடி மொத்தமுள்ள மெட்ரிக் பள்ளிகள் 1.12.03 இல் 3204. அதில் 460 பள்ளிகள் போலிகள் - மூளிகள் - அதனாலேயே காலி செய்யவேண்டிய நிலை. எஞ்சியிருப்பவை 2744 தான். இவைதான் அதிக ஆர்ப்பாட்டம் செய்து வருபவை.

இந்தப் போலி நிறுவனங்கள் பற்றி மேலும் சில செய்திகள் (தினமலர் 17.6.2003)

போலி மெட்ரிக், பள்ளிகள் களையெடுப்பு!

முதல் கட்டமாக சென்னை பள்ளிகள் பட்டியல் அறிவிப்பு
நிரந்தர அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் மிகக்குறைவு
தற்காலிக அங்கீகாரம் பெற்ற பள்ளியென்றால் உஷார்

போலி மெட்ரிக் பள்ளிகளை 'களையெடுக்க' ஆரம்பித்துவிட்டது மெட்ரிக், பள்ளி இயக்குனரகம். இதன் முதற்கட்டமாக சென்னை மாவட்டத்தில் தற்காலிக அங்கீகாரம் மற்றும் நிரந்தர அங்கீகாரம் பெற்ற பள்ளிகளின் பட்டியலை மட்டும் அதிகாரபூர்வமாக நேற்று வெளியிட்டது. இதன் மூலம் அங்கீகாரம் இல்லாத பள்ளிகளை இனி பெற்றோர் எளிதில் அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் கடந்த ஏழு ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான மெட்ரிக், பள்ளிகள் தொடர்ச்சியாக புற்றீசல் போல் முளைத்துவிட்டன. இதன் காரணமாக கிராமம் முதல் நகரம் வரை இன்று மெட்ரிக், பள்ளிகள் பரவியுள்ளன. பள்ளிகள் அதிகரிப்பது நல்லதுதான். ஆனால், கல்விச் சேவையை முக்கியமாக கருதாமல் இதையும் ஏதோ ஒரு வியாபாரம் போல கருதியதால்தான் பிரச்னையே. இதுபோன்ற மனப்பான்மையுடன் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு ஒரே தெருவில் நான்கு பள்ளிகள், ஐந்து பள்ளிகள் 'பெட்டிக் கடைகள்' போன்று ஏராளமான பள்ளிகளை துவக்கிவிட்டனர். இதன் காரணமாக மெட்ரிக், பள்ளிகளின் எண்ணிக்கை இன்று நான்கு ஆயிரத்தையும் தாண்டி விட்டது.

இதில் நியாயமான கட்டணங்களை வசூலித்து தரமான கல்வி கொடுக்கும் பள்ளிகளும் அதிகம் உள்ளன. ஆனால், பெரும்பாலான பள்ளிகள் பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாக கொண்டு இயங்கி வருகின்றன. இப்பள்ளிகள் கட்டணம் என்ற பெயரில் இன்றளவும் பெற்றோர்களை பிழிந்தெடுத்து வருகின்றன. ஆனால், பள்ளியை முறையாக உரிய அங்கீகாரத்துடன் நடத்துகிறோமா, மாணர்களுக்கு உரிய வசதிகள் பள்ளியில் இருக்கிறதா என்றெல்லாம் பள்ளி நிர்வாகிகள் பார்ப்பதில்லை. இது போன்ற 'டுபாக்கூர்' பள்ளிகளால் கடைசி நேரத்தில் அப்பாவி மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

அங்கீகாரம் இல்லாத பள்ளியில் பணத்தை கட்டி படித்துவிட்டு கடைசி நேரத்தல் தேர்வெழுத அனுமதி கிடைக்காமலும், அல்லது தேர்வெழுதி

சான்றிதழ் கிடைக்காமலும் அல்லல்படும் மாணவர்கள் ஏராளம். கடந்த ஆண்டு சென்னை நகரில் எபிநேசர் மெட்ரிக், பள்ளி, இந்த ஆண்டு சின்னமலையில் உள்ள செயின்ட் ஆண்டனிஸ் மெட்ரிக், பள்ளி என்று ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு உதாரணம் உள்ளது.

பள்ளிகளில் சேரும் போது அவை மெட்ரிக், பள்ளி இயக்குனரகத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளதா என்று பார்த்து சேர வேண்டும் என்று கூறினாலும், பள்ளி நிர்வாகத்தினர் அது தொடர்பான ஆவணங்களை எந்த பெற்றோரிடமும் காட்டுவது கிடையாது. இதனால் அவர்கள் பேச்சில் நம்பிக்கை வைத்து சேர்த்துவிட்டு பிறகு வருந்துகின்றனர்.

இந்த நிலையை போக்க அங்கீகாரம் பெற்ற மெட்ரிக், பள்ளிகளின் பெயர் பட்டியலை பகிரங்கமாக வெளியிட ஆரம்பித்துள்ளது மெட்ரிக், பள்ளி இயக்குநரகம். மாநிலம் முழுவதும் அரசின் தற்காலிக அங்கீகாரம் மற்றும் நிரந்தர அங்கீகாரம் பெற்ற பள்ளிகளின் பெயர் பட்டியலை மாவட்ட வாரியாக வெளியிட தயாராகி வருகிறது. இதன் முதற்கட்டமாக சென்னை மாவட்டத்தில் தற்காலிக அங்கீகாரம் மற்றும் நிரந்தர அங்கீகாரம் பெற்றுள்ள பள்ளிகளின் பெயர் பட்டியலை மெட்ரிக், பள்ளி ஆய்வாளர் சென்னையில் நேற்று வெளியிட்டார்.

அதில் 158 மெட்ரிக், பள்ளிகளும், 206 மெட்ரிக், மேல்நிலைப் பள்ளிகளும் இடம் பெற்றுள்ளன. இதில் பெரும்பாலான பள்ளிகளுக்கு தற்காலிக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதுவும் இந்த ஆண்டுதான் வழங்கப்பட்டுள்ளது. அரசின் விதிமுறைகளை பூர்த்தி செய்துள்ள பள்ளிகளுக்கு மட்டுமே தற்காலிக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு கூரை கொட்டகையிலும், வீட்டு மொட்டை மாடியிலும் பள்ளிகளை நடத்தி வந்தவர்கள் இந்த ஆண்டும் தற்காலிக அங்கீகாரம் கேட்டு விண்ணப்பித்தனர்.

'டுபாக்கூர்' பள்ளிகளுக்கு 'டாட்டா'!: ஆனால், அந்த விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டுவிட்டன. இதன் மூலம் பல ஆண்டுகள் உரிய வசதிகள் இல்லாத இடங்களில் பள்ளியை நடத்தி வந்தவர்களும், போலி பள்ளிகளை நடத்தி வந்தவர்களும் மெட்ரிக், பள்ளி இயக்குனரகத்தின் அதிரடி நடவடிக்கையினால் ஓரம் கட்டப்பட்டுள்ளனர். இதன் மூலம் பெருகிப்போய் இருந்த பள்ளிகள் ஓரளவு முறைப்படுத்தப்பட்டுள்ளன என்று கூறலாம். இதேபோல் மாநிலம் முழுவதும் அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.''

அவர்களது கூற்றில் உள்ள சிலவற்றை மீண்டும் நினைவில் வையுங்கள்.

தமிழகத்தில் . . .

(இதில் கல்வி அமைச்சராக இருந்த அன்பழகனின் பொற்காலமும் (!) அடங்கும்)

கல்விச் சேவையை . . . வியாபாரம் போல. . .
ஒரே தெருவில். . . பெட்டிக்கடைகள் . . . .
ஆனால் பெரும்பாலான பள்ளிகள் . . . . பணம்
சென்னை நகரில் எபிநேசர் .

(கிறித்தவப் பள்ளிகள் என்றால் தொண்டு, தரமான கல்வி, ஒழுக்கம், கட்டுப்பாடு, திறமை வளர்ப்பு என்று பெயர் பெற்ற நிலை ஒரு காலத்தில். நானே 6ஆம் வகுப்பு முதல் பி.எசி. வகுப்பு முடியக் கிறித்தவ நிறுவனங்களில் படித்து வந்தவன். அவற்றின் தரம் உணர்ந்தவன். ஒரு கிறித்தவப் பள்ளியில் ஆசிரியனாக இருந்தவன். ஆனால் சிறுபான்மையர் என்ற பெயர்களைப் பயன்படுத்திக் கொண்டு எபினேசர் மெட்ரிக் பள்ளியும் செயின்ட் ஆண்டனி மெட்ரிக் பள்ளியும் செய்துள்ள திருவிளையாடல்களை நோக்குங்கள்)

சென்னையில் உள்ள 123 மெட்ரிகுலேசன் பள்ளிகள் பற்றிய பட்டியல் வெளியாகியுள்ளது.

இவற்றில் இரண்டே இரண்டு பள்ளிகளுக்கு மட்டுமே நிரந்தர அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 121 பள்ளிகளும் ‘தற்காலிகம்’ ஆனவை. ஏன் இந்த நிலை? 1975 இல் தொடங்கி 28 ஆண்டுகளாக இயங்கி வரும் பள்ளிகளில் அதிலும் சென்னை மாவட்டப் பள்ளிகளில் 2க்கு மட்டுமே நிரந்தரம் ஆகும் தகுதி இருந்திருக்கிறது. பிறவற்றின் நிலை என்ன? சிந்தியுங்கள்.

நிரந்தர ஏற்பு

1. வடபழனி, ஜானகி ராமச்சந்திரா மெட்ரிகுலேசன் உயர் நிலைப் பள்ளி

2. சேத்துப்பட்டு, அவர் லேடி மெட்ரிகுலேசன் பள்ளி

எஞ்சியவை. . . . ?

121 பள்ளிகளில் 41 உயர்நிலைப் பள்ளிகள் சிறுபான்மையர் பள்ளி எனும் பெயரில் கிறித்தவ, இசுலாமியர் பெயர்களைத் தாங்கியவை என்பதையும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

பள்ளிக் கல்வியின் முன்னாள் இயக்குநரும், முன்னாள் துணைவேந்தருமான சிட்டிபாபு தலைமையில் அமைந்த குழு அரசுக்கு அறிக்கை தந்துள்ளது. அதன் விவரங்களோடு அதில் அடங்கியுள்ள விவகாரங்களையும் கவனியுங்கள்.

1000 மெட்ரிக் பள்ளிகளின் கதி என்ன?
சிட்டிபாபு கமிஷன் பரிந்துரையில் 'பகீர்'

'ஒரே பள்ளியின் பெயரில் கிளை துவங்கக் கூடாது', 'வீடுகளில் பள்ளிகளை நடத்தக் கூடாது', என்று மெட்ரிக் பள்ளிகளை ஒழுங்குபடுத்த அமைக்கப்பட்டுள்ள சிட்டிபாபு கமிஷன் தனது இரண்டாவது கட்ட அறிக்கையில் தமிழக அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. மேலும் அங்கீகாரம் இல்லாமல் இயங்கி வரும் பள்ளிகளின் எண்ணிக்கை ஆயிரத்துக்கு மேல் இருக்கும் என்ற அதிர்ச்சியான தகவலையும் இந்தக் கமிஷன் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் மெட்ரிக் பள்ளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அரசு பள்ளிகளில் தரமான கல்வி கிடைக்காத நிலையில், மெட்ரிக் பள்ளிகளைத் தேடி பொது மக்கள் செல்லத் துவங்கினர். இன்றைக்கு புற்றீசல்கள் போல ஏராளமான மெட்ரிக் பள்ளிகள் வந்துவிட்டன. இவற்றில் பல முறைப்படியான அங்கீகாரம் பெறாத பள்ளிகளாக உள்ளன.

இந்தப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் இருப்பதில்லை. தேவையான கட்டடம், ஆய்வுக் கூடம், விளையாட்டு மைதானம், நூலகம் போன்ற வசதிகள் இருப்பதில்லை. குடியிருக்கும் வீட்டிலும், ஓலைக் கொட்டகையிலும், கல்யாண மண்டபங்களிலும்தான் பெரும்பாலான மெட்ரிக் பள்ளிகள் இயங்கிவருகின்றன. இருந்தும் இவை பற்றியெல்லாம் மாணவர்களின் பெற்றோர் கவலைப்படுவது இல்லை. இந்தப் பள்ளிகள் கேட்கும் கட்டணங்கள் அநியாயமானவை. ஆனாலும், கடன் வாங்கியாவது கட்டணத்தை செலுத்தி விடுகின்றனர்.

எல்.கே.ஜி.க்கு குறைந்தது ஐயாயிரம் முதல் இருபத்தைந்து ஆயிரம் வரை கட்டணம் வாங்கும் பள்ளிகள் ஏராளமாக உள்ளன. ஆசிரியர்களை வீடுவீடாக அனுப்பி கேன்வாஸ் செய்தும், சலுகைகள் வழங்கியும் தங்கள் பள்ளிக்கு மாணவர்களை ஈர்க்கும் பணியில் மெட்ரிக் பள்ளி ஆசிரியைகள் பணிக்கப்படுகின்றனர்.

அரசு அனுமதியில்லாத பள்ளி என்று தெரியவரும்போதுதான் பெற்றோர் இதை உணர்கின்றனர். அரசு அங்கீகாரம் இல்லாமல் இயங்கிக்

கொண்டுள்ள மெட்ரிக் பள்ளிகளை முறைப்படுத்த அரசு சமீப காலமாக களம் இறங்கியுள்ளது. சென்னை, மதுரை, கோவை போன்ற மூன்று இடங்களில் இயங்கி வந்த மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் அலுவலகம் தமிழகம் முழுவதும் விஸ்தரிக்கப்பட்டது. தற்போது காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருச்சி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, திண்டுக்கல், சேலம் உட்பட 7 இடங்களில் கூடுதலாக அமைக்கப்பட்டன.

இதையடுத்து அரசு, சிட்டிபாபு தலைமையிலான கமிஷனை அமைத்தது, தமிழகம் முழுவதும் அனுமதியில்லாத மெட்ரிக் பள்ளிகள் பற்றிய விவரங்களை இக்கமிஷன் ஆராயத் துவங்கியுள்ளது. இக்குழு அளித்த முதல்கட்ட அறிக்கையில் அரசு அனுமதியில்லாமல் தமிழகம் முழுவதும் 500 பள்ளிகள் இயங்கி வருகிறது என்று கூறியிருந்தது. இப்போது இக்கமிஷன் தன் இரண்டாம்கட்ட அறிக்கையை அளித்துள்ளது. இதில் தமிழகம் முழுவதும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மெட்ரிக் பள்ளிகள் முறைப்படியான அனுமதி இல்லாமல் இயங்கி வருகின்றன என்ற அதிர்ச்சியான தகவலை சமர்ப்பித்துள்ளது.

இது மட்டுமின்றி மெட்ரிக் பள்ளிகளை நடத்துவதற்கான முக்கிய அடிப்படைத் தேவைகள் குறித்து சில பரிந்துரைகளையும் இக் கமிஷன் அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

அவை வருமாறு :

மெட்ரிக் பள்ளிகள் சொசைட்டி, டிரஸ்ட் போன்ற அமைப்புகளாக பதிவு பெற்றிருக்க வேண்டும்.

மெட்ரிக் பள்ளிகள் பெயரில் வங்கியில் ரூ.2 இலட்சம் வைப்பு நிதியாக 7ஆண்டு டிபாசிட் செய்திருக்க வேண்டும்.

நகர்ப் பகுதியில் 55 சென்ட் இடமும், கிராமப் பகுதியில் 5 ஏக்கர் நிலமும் இருக்க வேண்டும்.

அருகில் உள்ள பள்ளிகளில் தடையில்லாச் சான்று பெற்றிருக்க வேண்டும்.

தாசில்தாரிடம் கட்டட உரிமைச் சான்று, அங்கீகாரம் பெற்ற இன்ஜினியர் கட்டட உறுதிச் சான்று, மாவட்ட சுகாதார உதவி இயக்குனரிடம் சுகாதாரம் பற்றிய சான்றும் பெற்றிருக்க வேண்டும்.

ஒரே பள்ளியின் பெயரில் கிளைப் பள்ளி துவங்கக் கூடாது. வீடுகளில் பள்ளிகளை நடத்தக்கூடாது.

மாணவர்களிடத்தில் பெறப்படும் அனைத்து கட்டணத்திற்கும் ரசீது கொடுக்கப்பட வேண்டும்.

இந்தபரிந்துரைகளை உடனடியாக அமல்படுத்த அரசு திட்டமிட்டு உள்ளது. சென்னை, வேலூர் கல்வி மண்டலங்களில் சிட்டிபாபு கமிஷன் தன் ஆய்வை முடித்துள்ளது. இதிலேயே பல அதிர்ச்சியான தகவல்கள் எட்டி உள்ளன.

அடுத்ததாக இக்கமிஷன் சேலம் கல்வி மாவட்டத்தில் ஜூன் 3,4 தேதிகளில் ஆய்வு மேற்கொள்ள உள்ளது. அரசு அங்கீகாரம் இல்லாமல் ஆயிரக்கணக்கான பள்ளிகள் நடந்து வருவது அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், சிட்டிபாபு கமிஷன் அடுத்ததாக சேலம் வரும் தகவலை அறிந்த பள்ளிகள் அலறிக் கொண்டுள்ளன.''

ஒரே ஒரு அங்கீகாரம் பெற்றுக் கொண்டு அதன் பெயரிலேயே கிளைகளை நிறுவும் கல்வி மேதாவிகளை, அரசுப் பள்ளிகளை இகழ்ந்தும் தங்கள் பள்ளிகளை வியந்தும் கூரைக் கொட்டகையில் பள்ளி நடத்தும் புள்ளிகளை அடையாளம் கண்டு கொள்ளச் சிட்டிபாபு அறிக்கை கட்டாயம் பயன்படும்.

மெட்ரிக் பள்ளிகளின் மற்றோர் அட்டூழியத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். இயக்குநர் நாராயணசாமி விடுத்த அறிக்கையில் இந்த அட்டூழியங்கள் பட்டியல் இடப்பட்டுள்ளன. (தினமலர் 22.5.2002)

மெட்ரிக், பள்ளிகளுக்கு மீண்டும் வருகிறது 'கிடுக்கிப் பிடி' அதிகப் பணம் வசூலித்து வாலாட்டினால் அங்கீகாரம் ரத்து ! மெட்ரிக், பள்ளி இயக்குனர் அதிரடி அறிக்கை

''மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் இருந்து மாணவர்கள் விலகும்போது அவர்களிடம் கட்டாயமாக மாத பருவக் கட்டணம் வசூலிக்கக் கூடாது. மேலும், சான்றிதழ் வழங்குவதற்காகவும் பணம் கேட்க கூடாது. இதை மீறி மெட்ரிக், பள்ளிகள் செயல்பட்டால் அவற்றின் அங்கீகாரம் நிரந்தரமாக ரத்து செய்யப்படும்'' என்று மெட்ரிக், பள்ளி இயக்குனர் நாராயணசாமி கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக தமிழகம் முழுவதும் உள்ள 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மெட்ரிக், பள்ளிகளுக்கு 'சர்க்குலரும்' அனுப்பியுள்ளார்.

மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பல்வேறு பெயரில் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த வரிசையில் தற்போது கோடை விடுமுறை

காலத்திற்கும் சேர்த்து கட்டணம் கட்டுமாறு வற்புறுத்தி வருகின்றனர். இந்த வகையில் பள்ளிகளுக்கு தகுந்தாற்போல் 200 ரூபாயில் ஆரம்பித்து ஆயிரக்கணக்கில் பணம் பறித்து வருகின்றனர். மேலும், ஒரு பள்ளியில் இருந்து மாணவர் விலகி வேறு பள்ளியில் சேர வேண்டுமானால் பழைய பள்ளியில் இருந்து சான்றிதழ் வாங்க வேண்டும். இப்படி சான்றிதழ் வாங்கச் சென்றாலும் 2 ஆயிரம் கொடு, மூவாயிரம் கொடு என்று நச்சரித்து வருகின்றனர். வசதி இருப்பவர்கள் வேறு வழியில்லாமல் பணத்தை கொடுத்து சான்றிதழை வாங்கி விடுகிறார்கள். ஆனால், வசதியற்ற பெற்றோர்கள் பெரிதும் துன்பப்படுகின்றனர்.

இந்நிலையில் தமிழகம் முழுவதும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு இயக்குனர் நாராயணசாமி அதிரடியாக ஒரு ‘சர்க்குலரை’ அனுப்பியுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது :

மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளை வேறு பள்ளியில் சேர்க்க பெற்றோர்கள் விரும்பினால் மாணவரின் சான்றிதழ் கேட்டு சம்பந்தப்பட்ட பள்ளி முதல்வருக்கு விண்ணப்பம் செய்யவேண்டும். இவ்வாறு விண்ணப்பம் செய்யும் பெற்றோர்களிடம் 2002-2003ம் கல்வி ஆண்டுக்கான ஒரு மாதத்திற்குரிய அல்லது ஒரு பருவத்துக்குரிய பள்ளிக் கட்டணம் கட்ட வேண்டும் என்று வற்புறுத்துவதாக மெட்ரிக், பள்ளி இயக்குனரகத்திற்கு தகவல் வந்துள்ளது. மேலும், இவ்வாறு கட்டணம் கட்டத் தவறும் மாணவர்களுக்கு மாற்றுச் சான்றிதழ் வழங்குவதற்கு பள்ளி நிர்வாகம் மறுப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

ஒரு சில மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் மாற்றுச் சான்றிதழ் பெறுவது தொடர்பாக சில தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி இப்பள்ளிகளில் மாற்றுச் சான்றிதழ்கள் வாங்க வேண்டுமெனில் பள்ளி நிர்வாகம் அறிவித்துள்ளபடி குறிப்பிட்ட தேதிக்குள் விண்ணப்பம் செய்து மாற்றுச் சான்றிதழை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அப்படி இல்லையெனில் அடுத்த ஆண்டின் ஒரு பருவத்திற்கான பள்ளிக் கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஒரு கல்வி ஆண்டானது ஜூன் முதல் அடுத்த ஆண்டின் மே முடிய கணக்கிடுதல் வேண்டும். அரசு பொதுத்தேர்வுக்கான பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 வகுப்புகள் நீங்கலான இதர வகுப்புகளுக்கான இறுதித் தேர்வு முடிவுகள் ஏப்ரல் மாதம்தான் பள்ளிகள் மூலமாக வெளியிடப்பட வேண்டும்.

இந்நிலையில், தம் பிள்ளைகள் பயிலும் வகுப்பின் இறுதித் தேர்வுகளுக்கான முடிவுகள் ஏப்ரல் மாதம் வெளியிடப்படுவதற்கு முன்பாகவே, தங்கள் குழந்தைகள் தேர்ச்சி பெற்றுள்ளாரா, இல்லையா என்பதை தெரிந்துகொள்ள வாய்ப்பின்றி பள்ளியில் இருந்து விலக விரும்பும் மாணவரின் பெற்றோர் மார்ச் மாதத்திலேயே மாற்றுச் சான்றிதழ் கோரி விண்ணப்பிக்க வேண்டும் என்று நிபந்தனை விதிப்பது சம்பந்தப்பட்ட பள்ளி நிர்வாகத்தின் தன்னிச்சையான செயலாகும்.

தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஒழுங்கு படுத்தும் விதிகளின் கீழ், பெற்றோர் அல்லது பாதுகாவலரின் எழுத்துப் பூர்வமான விண்ணப்பத்தின் அடிப்படையில் மாற்றுச் சான்றிதழ் வழங்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. மாணவர்களிடம் இருந்து அடுத்த கல்வி ஆண்டின் ஒரு மாதம் அல்லது ஒரு பருவத்துக்குரிய பள்ளிக் கட்டணத்தை வசூலிக்க மெட்ரிக், பள்ளி நிர்வாகத்திற்கு அனுமதியோ, அதிகாரமோ வழங்கப்படவில்லை.

எனவே, மாற்றுச் சான்றிதழ் பெற்று பள்ளியில் இருந்து வெளியேறும் மாணவர்களிடம் இருந்து அடுத்த கல்வி ஆண்டுக்கு கட்டணம் வசூலிக்கக் கூடாது. மேலும், சான்றிதழ் வழங்குவதற்காக பணம் கேட்கக் கூடாது. இதை மீறி மெட்ரிகுலேஷன் பள்ளிகள் செயல்பட்டால் அப்பள்ளிகளின் அங்கீகாரம் நிரந்தரமாகவோ அல்லது குறிப்பிட்ட காலத்திற்கோ திரும்ப பெற நடவடிக்கை எடுக்கப்படும்.''

இவ்வாறு மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குனர் நாராயணசாமி கூறியுள்ளார்.

பலித்தவரை 'பணம் பறிப்பது' எனும் உயர்ந்த பண்பாட்டை (?) உலகிற்கு இவர்கள்தான் கற்றுக் கொடுத்து வருகின்றனர். இவர்களின் பல்வேறு முகங்களையும் பார்த்தால்தான் இவர்கள் யார் என்பது தெரியும்.

சென்னையில் உள்ள மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகள் 205. இவற்றில் 85 முதல் 205 வரை உள்ள (121) பள்ளிகளில் 23 பள்ளிகள்தான் நிரந்தர அங்கீகாரம் பெற்றவை. இவற்றிலும் சில 1-10 வகுப்புவரை நிரந்தர அங்கீகாரமும் 11,12 வகுப்புகளுக்குத் தற்காலிக அங்கீகாரமும் பெற்றவை.

எஸ்.பி.ஓ.ஏ. மேல் நிலைப்பள்ளியே 6-10 மட்டுமே நிரந்தரம் 1-5, 11,12 தற்காலிகம்தான். ஆனால் இவர்களோ முன் மழலையர் வகுப்புக்கே (LKG) பெருந்தொகை நன்கொடை வாங்குவதாக அதில் தன் பையனைச் சேர்த்த தந்தை கூறியதை நினைவிற் கொள்ளுகிறேன்.

இதில் சில திருத்தங்களை வெளியிட்ட இயக்குநரகம் என்ன சொல்கிறது பாருங்கள்.

1. டி.சி. கௌரி மெட்ரிக் பள்ளி, நுங்கம்பாக்கம் - அங்கீகாரம் ரத்து

2. ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சாஸ்திரி நகர், அடையாறு

3. பெயின்ஸ் மெமோரியல் பேப்டிஸ்ட சர்ச் மெட்ரிக் மேல் நிலைப்பள்ளி பெரிய மேடு.

இந்த இரண்டு பள்ளிக்குமான அங்கீகாரம் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

இதேபோல ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அங்கீகாரம் பெற்ற மெட்ரிக், உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளின் பட்டியலை இயக்குநரகம் வெளியிட்டுள்ளது. மதுரைமாவட்டத்தில் 72 மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகள் மட்டுமே அரசின் ஏற்பினைப் பெற்றவை.

இயக்குநர் நாராயணசாமி ஒழுங்கீனமான சில மெட்ரிக் பள்ளிகளின் மீது நடவடிக்கை எடுத்து, பல் பள்ளிகளின் அங்கீகாரத்தை இரத்துச் செய்தார்.

இவர்களில் பலர் கடந்த தி.மு.க. ஆட்சியின்போது பணம் கொடுத்துத்தான் பல பள்ளிகளுக்கு அங்கீகாரம் பெற்றதாகத்தான் குற்றச்சாட்டு உள்ளது. இப்படி அனுபவம் பெற்ற சிலர்தான் இப்போது நாராயணசாமி மீது குற்றம் சாட்டுகிறார்கள் என்பதும் விவரம் அறிந்த பலரின் கருத்து.

இந்த நிலையில் நாராயணசாமி நடவடிக்கை எடுப்பதில் உறுதியாக இருந்தார்.

என் மீது குற்றம் சாட்டுபவர்கள் மீது கடும் நடவடிக்கை மெட்ரிக் கல்வி இயக்குநர் எச்சரிக்கை

‘‘தவறு செய்யும் மெட்ரிக் பள்ளிகள் மீது நடவடிக்கைகள் தொடரும். என்மீது குற்றம் சாட்டுபவர்களை கண்டுபிடித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மெட்ரிக் பள்ளிகள் என்றாலே சர்ச்சைக்குரியதாகி விட்டது. விண்ணப்பம் வாங்க பெரும் தொகை கொடுக்க வேண்டும். கால்கடுக்க

நின்று விண்ணப்பம் பெறவேண்டும், பெற்றோர் படித்தவர்களாக இருக்கவேண்டும். கட்டுக் கட்டாக கட்டணம் செலுத்த வேண்டும். எதிர்த்துப் பேசக் கூடாது என்பது போன்று ஏகப்பட்ட பிரச்சினைகள் உள்ளன.

மெட்ரிக் பள்ளிகளை கட்டுப்படுத்த என்ன செய்யலாம் என்று அரசு ஆலோசனை நடத்தியது. இதனால் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. வழக்கம் போல் பிரச்சினைகள் தொடர்ந்தன. கட்டணம் என்ற பெயரில் மாணவர்களை சுரண்டும் கல்விக் கூடங்கள் பெருகின. இதற்கு மேலும் பொறுமை காத்தால், கல்விக் கூடங்கள் கொள்ளைக் கூடாரங்களாக மாறிவிடும் என்று கல்வியாளர்கள் அச்சம் தெரிவித்தனர்.

இந்த நிலைமையை மாற்ற, மெட்ரிக் பள்ளிகளுக்கென்று தனியாக இயக்ககம் ஏற்படுத்தப் பட்டது. கல்வியாளரும் முன்னாள் துணைவேந்தருமான சிட்டிபாபு தலைமையில் ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது.

இதற்கிடையில் தவறு செய்யும் மெட்ரிக் பள்ளிகள் மீது மெட்ரிக் கல்வி இயக்குநர் கடும் நடவடிக்கைகள் எடுக்கத் தொடங்கினார். பல கட்டுப்பாடுகளை விதித்தார். மாணவர்கள் நலன் கருதி அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒழுங்காக செயல்படாத ஏராளமான பள்ளிகளுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் மெட்ரிக் கல்வி இயக்குனர் நாராயணசாமி மீது ஏகப்பட்ட புகார்கள் கிளம்பின. அவருக்கு எதிராக நேரடியாகவே குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. மெட்ரிக் பள்ளிகள் மீது அநியாயமாக பழி சொல்கிறார். நன்றாக நடக்கும் பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்கிறார். வேண்டியவர்களின் பள்ளிகளுக்குச் சாதகமாக செயல் படுகிறார். 750-க்கும் அதிகமான மெட்ரிக் பள்ளிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்து விட்டார். இதனால், ஆசிரியர்கள், மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆசிரியர்கள், நிர்வாகிகளை மரியாதை குறைவாக நடத்துகிறார். அவரை மாற்றாவிட்டால் மெட்ரிக் கல்வி குப்பை மேடாகிவிடும் என்று பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. இந்த பகிரங்க குற்றச்சாட்டுகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

மெட்ரிக் பள்ளிகளை அழிக்க இந்த இயக்ககம் ஏற்படுத்தப் படவில்லை. சீரமைக்கவும், ஒழுங்குபடுத்தவும்தான் இந்த இயக்ககம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தவறு செய்யும் பள்ளிகள் மீதுதான் நடவடிக்கை எடுக்கிறேன்.

அவர்கள் சொன்னது போல் 750 பள்ளிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்யவில்லை. 20 பள்ளிகளின் அங்கீகாரத்தை மட்டுமே ரத்து

செய்துள்ளோம். பொதுத் தேர்வுகள் நடந்தபோது, முறை கேடுகளில் ஈடுபட்ட பள்ளிகள் மற்றும் பெரிய தவறு செய்த பள்ளிகளின் அங்கீகாரம் மட்டுமே ரத்து செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, அந்த பள்ளிகளில் படித்த மாணவர்களை வேறு பள்ளிகளில் சேர்க்க ஏற்பாடு செய்துள்ளோம்.

பல பள்ளிகள் வீடுகளில் இயங்கி வருகின்றன. விளையாட்டு மைதானம் ஆய்வகங்கள் உட்பட எந்த வசதியுமே இல்லாத பள்ளிகள் இருக்கின்றன. கழிவறை வசதி இல்லாத பள்ளிகளும் இருக்கின்றன. அவை எல்லாம் எப்படி ஒழுங்காக செயல்படும்? அவற்றுக்கும் போதுமான வாய்ப்பு கொடுக்கிறோம். முதலில் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்புவோம். அவர்கள் கொடுக்கும் பதில் அடிப்படையில் அவற்றைச்சரி செய்து கொள்ள கால அவகாசம் கொடுப்போம். நிறைய பள்ளிகள் பதிலே அனுப்புவதில்லை. அவர்களை எல்லாம் என்ன செய்வது?

சரியான வசதிகள், கட்டடங்கள் இல்லாத 57 பள்ளிகளுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளோம். இதேபோல் விதிகளை பின்பற்றாத மற்றும் கட்டமைப்பு வசதிகள் இல்லாத பள்ளிகள் பலவற்றுக்கு நோட்டீஸ் அனுப்ப உள்ளோம். தவறு செய்யும் பள்ளிகள் மீதான கடும் நடவடிக்கை தொடரும்.

நிறைய பள்ளிகள் அங்கீகாரம் முடிந்த பிறகு புதுப்பித்துக் கொள்வதில்லை. அப்படி புதுப்பிக்காத பள்ளிகளை மாணவர்களின் நலன் கருதி பட்டியலிடுகிறோம். புதுப்பித்துக் கொள்ள அறிவுறுத்தி கடிதம் அனுப்புகிறோம். அப்படி, இப்போது மட்டும் 50க்கும் அதிகமான பள்ளிகளை நாங்களே பட்டியல் எடுத்து கடிதம் அனுப்பியுள்ளோம்.

இப்போது குற்றம் சாட்டியவர்கள், மெட்ரிக் பள்ளி நிர்வாகிகளோ, ஆசிரியர்களோ இல்லை. அவர்கள் நர்சரி பள்ளிகள் நடத்தி வருபவர்கள். வேறு யாரோ சிலரின் தூண்டுதலால், இப்படி குற்றம் சாட்டுகிறார்கள். அவர்கள் யாரென்று தெரிந்தால், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.'' (தினமலர், 22.5.2002)

மெட்ரிக் பள்ளிகளின் ஒழுங்கீனங்களையும், வரம்புமீறல்களையும் பொதுமக்கள் இப்போதாவது உணர்ந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். தங்கள் பள்ளிக்கு நல்ல பெயர் வரவேண்டும் என்பதற்காக, தேர்வுகளில் முறைகேடுகள் செய்துள்ள பள்ளிகள் பல உண்டு. இவற்றை இயக்குநரே அடையாளம் காட்டியுள்ளார் என்பதை உணரவேண்டும்.

ஜூனியர் விகடன் (17.12.03) தந்துள்ள செய்திகளின்படி நாமும் கொஞ்சம் அலசிப் பார்க்கலாம்.

மெட்ரிக் பள்ளிகளின் இயக்குநரகத்தில் உள்ளவர்கள் இந்தப் பள்ளிகளைப் பற்றிய குற்றச் சாட்டுகளை அள்ளித் தெளிக்கிறார்கள்.

''நாங்கள் ஒரே ராத்திரியில் முடிவெடுத்து இதைச் செய்யவில்லை. எல்லாப் பள்ளிகளுக்கும் எங்கள் அதிகாரிகள் நேரில் சென்று, ஆராய்ந்து பார்த்து அளித்த அறிக்கையின் அடிப்படையில்தான் முடிவு எடுத்திருக்கிறோம். அதுவும் 'அங்கீகாரத்தை ஏன் ரத்து செய்யக்கூடாது?' என்று விளக்கம் கேட்கும் கடிதம்தான் பல பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதற்குரிய பதிலைச் சொல்வதிலோ, குறைகளை நீக்கும் முயற்சிகளிலோ இந்தப் பள்ளிகள் இறங்காமல், அணிசேர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவது பிரச்னையைத் திசைதிருப்பும் செயல். விளையாட்டுத் திடல்களோ, அறிவியல் ஆய்வுக் கூடங்களோ இல்லாமல் ஒப்புக்குச் சப்பாணியாகப் பள்ளியை நடத்திக்கொண்டு, எங்கள்மீது பாய்வதில் அர்த்தம் இல்லை'' என்பதுதான் அவர்கள் கருத்து.

நமக்கு விளங்கும் உண்மை இதுதான்:

பல பள்ளிகளில் விளையாட்டுத் திடல்களே இல்லை; அனைத்து வசதிகளையும் கொண்ட அறிவியல் ஆய்வுக் கூடங்கள் பல பள்ளிகளில் இல்லை. இது முற்றிலும் உண்மை. இவர்கள் இந்த வசதிகள் எல்லாம் செய்யாமல் - சுட்டிக் காட்டியபின்னும் செய்ய முயலாமல் - எதற்காகப் பள்ளிகளை நடத்துகிறார்கள்? சிலர் பள்ளி வளாகத்துக்குள்ளேயே கடைகள் கட்டி வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். இதுவும் உண்மைதான். என் கருத்து இதுதான்; இவர்கள் கல்வி வளர்ப்பதற்காகவோ, நாட்டை அந்த வகையில் மேலோங்கச் செய்வதற்காகவோ மெட்ரிக் பள்ளிகளைத் தொடங்கவில்லை. இப்போதைக்கு நல்ல வியாபாரம் - வருமானம் வரக்கூடிய வியாபாரம் என்பது 'கல்வி வியாபாரம்' தான். இதை இவர்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். இவர்கள் கல்விச் சிந்தனையாளர்கள் என்று எவரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

வியாபாரம் பாதிக்கப்படுகிறதே என்பதால்தான் 'கொதி'க்கிறார்களே தவிர வேறொன்றுமில்லை.

மெட்ரி. பள்ளிகள் நடத்துபவர்கள் என்ன சொல்கிறார்கள் :

''தமிழ்நாட்டில் மூன்றாயிரத்து நானூறு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இருக்கின்றன. இந்தப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்ப தலா இவ்வளவு ரூபாய் எனக்கணக்கிட்டுக் கட்டணம் செலுத்தப்படுகிறது. இதன்மூலம் அரசுக்கு ஒவ்வொரு வருஷமும் கோடிக்கணக்கில் லாபம்னு ஒரு புள்ளிவிவரம் சொல்லுது. இப்படி லாபம் சம்பாதிச்சுத் தரும் எங்களுக்கு, அரசாங்கம் எந்த உதவியும் செய்யலை. ஆனால், உபத்திரவம் மட்டும் பண்றது என்ன நியாயம்?''

இவர்கள் மாணவர்களிடம் பணம் பிடுங்குகிறார்கள். அதில் ஒரு சிறு விழுக்காட்டினை அரசுக்கு அங்கீகாரக் கட்டணமாக அளிக்கிறார்கள். ஆனால் இதனை என்ன அழகாக நமக்கு விளக்குகிறார்கள் பார்த்தீர்களா! அரசுக்கு இவர்களால் கோடிக் கணக்கில் இலாபமாம். ஆனால் இலாபம் பெறும் அரசு தங்களுக்கு எந்த உதவியும் செய்வதில்லை என்று கொதிக்கிறார்களாம். எந்த உதவியும் பெறாமல் அரசுக்கு இலாபம் ஈட்டித் தருவதற்காகவா இவர்கள் பள்ளி நடத்துகிறார்கள்? நெஞ்சில் கை வைத்துச் சொல்லச்சொல்லுங்கள். அரசு கல்வித்துறைக்கு 4949 கோடி செலவிடுகின்றது. இந்த மெட்ரிக் . . . மேனாமினுக்கிகள் தரும் 250 கோடி ரூபாய்க்காகத்தான் அரசு எதிர்பார்த்துக் கொண்டுள்ளதா?

இவர்கள் அரசின் மீது கோபப்பட்டு நியாயம் கேட்கிறார்களே... அரசு 'தமிழ் வழிக்கல்வி'யை 1 முதல் 5 வரை வலியுறுத்தியபோது என்ன செய்தார்கள் இவர்கள்? அப்படியானால் தமிழ் விரும்பும் தமிழக அரசுக்கு இவர்கள்மீது கோபம் இருக்கிறது என்கிறார்களா?

முறையான சரக்குகளை வைத்து முறையாக வியாபாரம் செய்து அரசுக்கு உரிய வரியையும் கட்டி வருபவர்கள். உண்மையான வணிகர்கள். இவர்களுக்கெல்லாம் அரசு நிதியுதவி செய்கிறதா? கடை வைத்துக் கொடுக்கிறதா? வாடகையை அரசு ஏற்றுக் கொள்கிறதா? சரக்குகள் வாங்கி விற்க அரசு ஏதேனும் சலுகை காட்டுகிறதா? இல்லையே! அரசு செய்வதெல்லாம் 8% வரி என்றிருந்தால் சிலநேரம் 4% வரி என்று மாற்றும். அந்த வகையில் வியாபாரிகட்குச் சலுகைகள் அவ்வளவுதான். ஆனால் வணிக வரியை வணிகர்கள் தான் கட்டுகிறார்கள். அரசின் வருவாயில் இது குறிப்பிடத்தக்கதாகிறது.

ஆனால் கல்வி வியாபாரிகள் என்ன சொல்கிறார்கள். அவர்களது பள்ளிகளுக்கு விளையாட்டுத் திடலுக்கான இடங்களை அரசே கொடுக்க வேண்டுமாம்; அவர்கள் பணியமர்த்தி 300ம் 500ம் சம்பளம் கொடுத்து

வைத்திருக்கிறார்களே ஆசிரியர்கள்; அவர்களது சம்பளத்தை அரசே ஏற்கவேண்டுமாம்.

எப்படியிருக்கிறது கதை?

உண்மையான வியாபாரிகள் இப்படியெல்லாம் கேட்கமாட்டார்கள். ஆனால் கல்வி வியாபாரிகள் - போலி வியாபாரிகளின் - புலம்பலைக் கவனியுங்கள். வியாபார வருமானம் கருதிப் பள்ளிகளைத் தொடங்குவார்களாம்! எந்த வசதியையும் முழுமையாகச் செய்ய மாட்டார்களாம்! ஆசிரியர்களுக்கு அரை குறையாகச் சம்பளம் கொடுத்து அவர்களது உழைப்பைச் சுரண்டுவார்களாம்! சீருடை, புத்தகங்கள், கட்டணம், போக்குவரத்து வசதி எனும் பலவகைகளில் மாணவர்களிடமிருந்து பணம் பிடுங்குவார்களாம்! அரசு இதில் தலையிட்டு ஒழுங்கு செய்ய முயன்றால் உடனே புயலாகி விடுவார்களாம்!

உண்மையிலேயே இவற்றை ஒழுங்கு செய்திட நடவடிக்கை எடுக்கும் இயக்குநர் நாராயணசாமியையும் ஊக்கம் தந்து வரும் தமிழகக் கல்வி அமைச்சரையும், எல்லாவற்றையும் ஒழுங்கு செய்திட முனைந்து பாடுபடும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியையும் பாராட்டத்தான் வேண்டும்! நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன்.

1975 முதல் 1996 மே வரை 1427 மெட்ரிக் பள்ளிகள். ஆனால் 5 ஆண்டுகளில் - ஐந்தே ஆண்டுகளில் அன்றைய கல்வி அமைச்சர் அன்பழகன் காலத்தில் 1500 பள்ளிகள்! ஏன் இந்த வேகம்! என்ன காரணம்? பின்னணி என்ன? ஜூனியர் விகடனிலிருந்தே பதில் தருகிறேன்.

''புற்றீசல்களாக மெட்ரிக் பள்ளிகள் புறப்படும்போதே, அலசி ஆராய்ந்து அனுமதி கொடுத்திருக்கவேண்டும். அந்த நேரத்தில் கண்மூடித்தனமாகச் சில அதிகாரிகள் 'கல்லா'வை நிரப்பிக்கொண்டு அனுமதி கொடுத்துவிட்டு, இப்போது அதிரடியாக இறங்குவதால் பாதிப்பு மாணவர்களுக்குத்தானே?''

இந்தப் பெற்றோர்கள் யாரைப் பார்த்துக் கேட்கிறார்கள்! அன்பழகனையா அல்லது வேறு யாரையுமா?

ஏனென்றால் ஒழுங்கில்லாத பள்ளிகளின் அங்கீகாரத்தை இலதாக்கியது அ.தி.மு.க. அரசு.

புற்றீசல்கள் போல் வளரும் பள்ளிகட்கு அங்கீகாரம் வழங்கியது 'அன்பழகன்' பணி! ஆம்! தி.மு.கழக அரசின் அவை முன்னவர், கலைஞருக்கும் மூத்த மூதறிவாளர் அன்பழகன் பணி!

இந்த நேரத்தில் மெட்ரிக் .. பள்ளிகள் குறித்த இரண்டு செய்திகளை அலசி ஆராய வேண்டும்.

தமிழக அரசு கொண்டுள்ளது இருமொழிக் கொள்கை. அரசு சார்ந்த பள்ளிகளில் தமிழ் ஆங்கிலம் இரண்டு மட்டுமே பாடங்களாக இருக்கவேண்டும். ஆனால் மொழிச் சிறுபான்மையர் நடத்தும் 1008 பள்ளிகளில் தமிழ் ஒரு பாடமாகக் கூட இல்லை. (as a subject) நான் சொல்வது தமிழ் ஒரு பாடமாகக் கூட இல்லை. இதனை மாற்றியமைக்க எவ்வளவோ முயற்சி எடுத்தும் இயக்குநர் நாராயணசாமி தெளிவான அறிக்கை தந்தும் அன்பழகன் கடைசிவரை கண்டு கொள்ளவில்லையே!

அதேநேரத்தில் மழலையர் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கும்போதே 'தமிழ்' ஒரு பாடமாகச் சொல்லித்தரவேண்டும் என்பது ஒரு நிபந்தனை!

இந்த நிபந்தனை மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு உண்டா இல்லையா?

CBSE பள்ளிகள் முழுக்க முழுக்க மத்திய அரசு கல்வித் திட்டத்தின் கீழ் நடைபெறுபவை. தமிழ்நாட்டில் இப்பள்ளிகள் 194 மட்டுமே. இவற்றில் தமிழ் ஆங்கிலம் இந்தி ஆகியவை இருக்கும்.

ஆனால் மாநில அரசு (State Board) ஒப்புதலோடு நடைபெறும் பள்ளிகளாகிய மெட்ரிக் .. பள்ளிகளில் மும்மொழித் திட்டம் இருக்கிறதே எப்படி?

சிலர் சொல்கிறார்கள்; மதச் சிறுபான்மையர் நடத்தும் பள்ளிகளில் உள்ள உரிமையால் அவர்கள் இந்தியை வைத்துள்ளார்கள் என்று. இதுபற்றி நாம் மற்றோர் இடத்தில் அலசப் போகிறோம்.

என் கேள்வி இதுதான்: சிறுபான்மையர் நடத்தும் பள்ளிகளாகவும் இல்லாமல், மத்திய அரசு பாடத்திட்டத்தால் இயங்கும் CBSE பள்ளிகளாகவும் இல்லாமல் பொதுவானதாக நடத்தப்படும் - மாநில அரசு அனுமதியுடன் நடத்தப்படும் மெட்ரிக் பள்ளிகளில் இந்தி ஒரு பாடமாக இருக்கிறதே எப்படி?

இது குறித்து முதல் இயலிலேயே விளக்கியிருக்கிறேன்.

மதம் சார்ந்த சிறுபான்மையினர் நடத்தும் பள்ளி ஒன்று வண்டலூரில் உள்ள Crescent Residential H.S.S. '1987 - 88' பள்ளிக் கையேட்டில் உள்ள வாசகம் இது.

"English is the medium of instruction in the school with Tamil or Hindi or Arabic as the second language."

இது, மதம் சார்ந்த - இசுலாமிய சமூகத்தினர் நடத்தும் பள்ளி - ஆனால் பொதுவான பள்ளிகளில் இந்த நிலை உள்ளதே அது எப்படி?

இதோ செங்கற்பட்டில் உள்ள லிட்டில் ஜாக்கி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அதன் விளம்பரத்தைப் பாருங்கள்.

இதோ மற்றொரு பள்ளி

வேலம்மாள் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, திருப்புவனம்.

மொழிப்பாடங்களில் ஆங்கிலம், தமிழ், இந்தி ஆகிய மூன்றும் இடம் பெற்றுள்ளன.

இது எப்படி? அதுவும் சிறுபான்மையர் பள்ளியாக இல்லாத இப் பள்ளியில் மும்மொழித் திட்டம் இருக்கிறதே இது யார் தந்த அனுமதி?

வட்டார மொழி அல்லது தாய்மொழி என்பது விதி என்றால் தமக்குத் தாய்மொழியே அல்லாத இந்தி மொழியை திருப்புவனம் வட்டார மாணவர்கள் எப்படி எடுத்துக்கொள்ளமுடியும்? இயக்குநரகம் இதைக் கண்டுகொண்டதா இல்லையா? அண்ணாவின் இரு மொழிக் கொள்கைக்கு இவர்கள் கல்லறை கட்டுகிறார்களா இல்லையா?

அதுவும், இனமானத்தையே மொத்தக் குத்தகையாக எடுத்திருக்கும் அன்பழகன் காலத்திலிருந்து இருக்கிறதே எப்படி?

மற்றொரு செய்தி குறித்து நாம் பார்க்கவேண்டும். இது பலர்க்கு விளங்காத புதிராக இருக்கும். எனினும் விளங்கிக் கொள்வதற்காகத்தான் இந்த அலசல்.

கடந்த தி.மு.க. ஆட்சியின்போது 1 முதல் 5 வகுப்பு வரை மெட்ரிக் . பள்ளிகள் மற்றும் மழலையர் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அனைத்துப் பாடங்களையும் தமிழ் வழியில் பயில வேண்டும் என்பது அரசின் ஆணை **(19.11.99)** அதற்கு முன்னால் மெட்ரிக் பள்ளி மற்றும் மழலையர் பள்ளிகளின் சங்கங்களைச் சார்ந்தோர் எங்களைச் சந்தித்துப் பேசினர்.

அவர்கள் கோரிக்கை இதுதான் :

1 முதல் 12 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழியிலேயே அனைத்து வகுப்புகளையும் நடத்திக் கொள்கிறோம். ஆனால் 1 முதல் 5 வகுப்பு வரை தமிழ் வழியில் கூடுதலாக வகுப்புகளை தொடங்கி நடத்திக் கொள்கிறோம் என்றார்கள்.

ஆங்கில வழியைத் தமிழ் வழியில் மாற்றினால் மாணவர்கள் சேர்வது குறைந்து வருமானம் கெட்டுவிடும். எனவே அவற்றை விட்டுவிட மனமில்லை. எதிர்த்து நீதிமன்றம் சென்றார்கள்.

ஆனால் எங்களைத் திருப்திப் படுத்தக் 'கூடுதலாக' வகுப்புகளைத் தொடங்கித் தமிழ் வழியில் நடத்த முன்வருவார்களாம். அதாவது 1 முதல் 5 வகுப்பு வரை கூடுதல் வகுப்புகளைத் தொடங்கினால் ஒரு பள்ளிக்குள்ளேயே மற்றொரு 'தொடக்கப் பள்ளியும் வந்து விடும். அவர்களது வியாபாரமும் பாதிக்காது. தமிழ் வழியில் மாணவர்கள் சேர்ந்தால் மேலும் வருமானம். சேராவிட்டாலும் இழப்பு இல்லை. இது நல்ல வியாபார தந்திரம் என்பது இப்போது விளங்கியிருக்கும். தமிழக மாணவர்கள் 1 முதல் 5 வரை தமிழ் வழியில் பயில வேண்டும் என்பதை இவர்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்களாம்.

ஆனால் தனியாகத் தமிழ் வழி வகுப்புகளைத் தொடங்கி முடிந்தவரை வருமானம் பார்ப்பார்களாம்.

இதனை, தமிழக அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நிலையில் ஆட்சி மாறியது. சில மெட்ரிக் பள்ளி நிர்வாகங்கள் அனுமதி பெறாமலேயே தமிழ் வழி வகுப்புகளையும் நடத்தி வந்தன. அனுமதி பெறாத கடை 'வியாபாரம்'. இது குறித்து தினமலர் (19.9.2003) இதழில் வந்த செய்தியைப் பாருங்கள் :

''மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழ் வழி போதனை அறவே கூடாது. மீறி நடக்கும் மெட்ரிக் பள்ளிகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதுடன், விளக்கம் கேட்காமலேயே அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்று அரசு உத்தரவு போட்டுள்ளது. இந்த உத்தரவால் மெட்ரிக் பள்ளி நிர்வாகத்தினர் கலக்கத்தில் உள்ளனர்.

தமிழகம் முழுவதும் புற்றீசல் போல் பெருகி விட்ட மெட்ரிக் பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்க முன்னாள் துணைவேந்தர் சிட்டிபாபுவைத் தலைவராக கொண்ட கமிஷனை அரசு நியமித்தது. இக்கமிஷன் தமிழகம் முழுவதும் உள்ள மெட்ரிக் பள்ளிகளை நெறிமுறைப்படுத்த அமைக்கப்பட்டது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட மெட்ரிக் பள்ளிகள் அரசு அங்கீகாரம் இல்லாமலே நடத்தி வருவது சிட்டிபாபு கமிஷன் போடப்பட்ட பின்தான் வெளி உலகத்திற்கு தெரிய வந்தது.

மெட்ரிக் பள்ளிகள் நகரில் துவங்க 20 வகையான விதிமுறைகள் மெட்ரிக் பள்ளிகளுக்கு விதிக்கப்பட்டது. அரசின் இந்த முடிவால் மெட்ரிக் பள்ளிகள் உண்மையில் ஆட்டம் கண்டுவிட்டன.

இந்த பரபரப்பு அடங்கும் முன் கடந்த வாரம் மெட்ரிக் பள்ளி இயக்குனர் நாராயணசாமி வெளியிட்டுள்ள உத்தரவால், மெட்ரிக் பள்ளி நிர்வாகத்தினர் கலங்கி போய் உள்ளனர்.

புதிய உத்தரவில், 'மெட்ரிக் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிற்றுவிக்க கூடாது. மீறி நடக்கும் மெட்ரிக் பள்ளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். விளக்கம் கேட்காமலேயே பள்ளிகளின் அங்கீகாரம் உடனடியாக ரத்து செய்யப்படும்' என கூறப்பட்டுள்ளது.

பல மெட்ரிக் பள்ளிகளில் தமிழ் வழி போதனையை மறைமுகமாக நடத்தி வருகின்றனர். ஏற்கெனவே போடப்பட்ட விதிமுறைகளால் அல்லாடிக்

கொண்டுள்ள மெட்ரிக் பள்ளிகள் தொடர்ந்து நடத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. இந்நிலையில் புதிய உத்தரவால் மேலும் ஆட்டம் காணும் நிலை ஏற்பட்டுள்ளது.

கமிஷனை எதிர்த்து மெட்ரிக் பள்ளிகள் போர்க்கொடி தூக்க முடியாத நிலை தான் தற்போது நிலவுகிறது. கமிஷன் சிபாரிசு என்னவோ அதை அரசு நடவடிக்கையாக எடுக்கும் நிலையில் கமிஷனுக்கு எதிராக போராடினால் அதுவே மெட்ரிக் பள்ளிகளுக்கு பெரும் ஆபத்தாக முடியுமோ என அஞ்சுகின்றனர். மெட்ரிக் பள்ளி மீதான கமிஷன் அறிக்கை கொடுத்த பின் தங்கள் தரப்பு கோரிக்கையை நேரடியாக அரசிடம் முறையிட மெட்ரிக் பள்ளி நிர்வாகிகள் தயாராகி வருகின்றனர்.

மெட்ரிக் பள்ளிகளை ஒழுங்குபடுத்த அமைக்கப்பட்ட சிட்டிபாபு கமிஷன் கெடுபிடியால் பெற்றோர் மத்தியில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. மூன்று மாவட்டங்களை இணைத்து அமைக்கப்பட்டுள்ள மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் அலுவலகம் தேடி வந்து தங்கள் குழந்தைகள் படிக்கும் மெட்ரிக் பள்ளி அங்கீகாரம் பெற்ற பள்ளி தானா என்பதை பெற்றோர் உறுதிபடுத்தி செல்கின்றனர்.

''அங்கீகாரம் இல்லாத பள்ளியில் படித்தாலும் தற்போது உள்ள அரசின் உத்தரவுப்படி மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் ஒப்பம் பெறப்பட்டு தொடர்ந்து மேல் படிப்பை தொடரலாம் என்பதால் தமிழகத்தில் 10 மெட்ரிக் ஆய்வாளர்கள் மூலம் குறைந்தது ஒரு லட்சம் மாணவ, மாணவியர் அங்கீகாரம் பெற்ற பள்ளிக்கு மாறி உள்ளனர்.

அரசு சரியான நேரத்தில் நடவடிக்கை எடுத்ததால், ஒரு லட்சம் மாணவர், எதிர்காலம் பாதிப்பது தடுக்கப்பட்டுள்ளது.'' என மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.''

செய்தியைப் பார்த்தால் அரசு ஏதோ 'தமிழ் வழிக் கல்வி'யை ஒழிக்கப் பார்க்கிறது என்பது போல் தோன்றும். இந்தக் கூடுதல் வியாபாரம் பற்றிக் கடந்த தி.மு.க. - அரசும் புரிந்து கொண்டதால்தான் அனுமதி வழங்கவில்லை. இப்போது உள்ள அரசும் தெரிந்து கொண்டதால்தான் எச்சரிக்கை விடவேண்டியதாகி உள்ளது.

அவர்களே தந்த கணக்குப்படி 3244 மெட்ரிகுலேசன் பள்ளிகள் தற்போது உள்ளன.

1975 முதல் 12.5.96 வரை	1427 பள்ளிகள்
13.5.96 முதல் 13.5.2001 வரை	1098 பள்ளிகள்
13.5.2001 முதல் 31.12.2003 வரை	860 பள்ளிகள்

31.5.2004 இல் சில பள்ளிகள் இலதாக்கப்பட்ட பின் உள்ள மெட்ரிகுலேசன் பள்ளிகள் : 3244 மட்டுமே.

அவற்றின் போக்குகளைப் பல்வேறு கோணங்களில் பார்த்தால்தான் அவற்றின் முழு உருவமும் தெரியும்.

தம்மம்பட்டி பாரதி மெட்ரிக் . . . பள்ளித் தாளாளர். தமது பள்ளியில் மேல் நிலை வகுப்புகளில் தமிழில் பாடம் நடத்திட வேண்டுகோள் வைக்கிறார். எனினும் அவரால் 'எங்கள் பள்ளியில் மேல் நிலை வகுப்புகள் **தமிழிலும்** நடத்தப் பெற வேண்டும்' என்றுதான் கேட்க முடிந்ததே தவிர, 'தமிழ் வழியாக மட்டுமே' என்று கேட்க முடியவில்லையே! பக்கத்தில் ஒரே ஒரு அரசு மேல்நிலைப்பள்ளி இருப்பதால் இங்கு பல மாணவர்களைச் சேர்த்து விடலாம் என்பதற்காகத்தான் 'தமிழிலும். . . !' ஆனால் ஆங்கில வழி +1 +2 வகுப்புகள் அப்படியே தொடரும் என்பது சொல்லாமலே விளங்கும்.

16.11.98 இல் அரசு சில அறிவிப்புகளைச் செய்ததும், மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தமிழ் வழிப் பிரிவுகளையும் நடத்திட மெட்ரிகுலேசன் பள்ளிகள் சங்கம் முன் வந்தது. அவர்கள் நோக்கம் ஆங்கில வழிப் பயிற்சியைக் கொஞ்சமும் விட்டு விடாமல், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள மாணவர்களும் ஆங்கிலப் பயிற்சி மொழியில் பயில்வதை மாற்றிவிடாமல் ஒரு பள்ளிக் கூடத்துக்குள் 2 பள்ளிக் கூடங்களை நடத்த நினைக்கிறார்கள். வரும் வருமானம் கெட்டுவிடாமல் கூடுதலாகக் கொஞ்சம் காசை அள்ளிவிடலாம் என்பதற்காக இவர்கள் கோரிக்கை வைத்தனரே தவிர, தமிழ் மீது எந்தப் பற்றும் கொண்டு இவர்கள் இதைச் சொல்வதில்லை. (கும்பகோணம் பள்ளி வளாகத்துக்குள் மூன்று பள்ளிகள்? எதற்கு? தம்மை வளர்க்கவா? தமிழை வளர்க்கவா?)

அவர்கள் சொல்வதையே கேளுங்கள்.

''தமிழக அரசு நர்சரி மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகளின் தனித்தன்மையை குலைக்கின்ற வகையில் ஒன்று முதல் 8ம் வகுப்பு வரை தமிழ், வரலாறு, பூகோளம் மற்றும் கணிதம் ஆகிய 4 பாடங்களை தமிழில் தான் நடத்த வேண்டும். இல்லையென்றால் அந்த பள்ளிகளின் அரசு அங்கீகாரம்

ரத்து செய்யப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இதனால் மாணவ மாணவிகளின் எதிர்காலம் மிகவும் பாதிக்கப்படும்.''

''அது மட்டுமல்லாமல் சிறுபான்மையினராக தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் இந்தி சார்ந்த பெற்றோர்களை தமிழில் பயில கட்டாயப்படுத்த முடியாது.''

எப்படி நாடகமாடுகிறார்கள் என்று பாருங்கள். இந்த மாணவர்கள் நாங்கள் அனுமதி வழங்கிய 1008 பள்ளிகளில் சேர்ந்து, தங்கள் தாய்மொழி வாயிலாகவே கல்வி கற்கலாமே! பின் ஏன், ஆங்கில வழியில் படிக்க வேண்டும்?

''நர்சரி மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் தமிழ் மொழிக்கு விரோதிகள் அல்ல.''

அடிக்கடி இதை இவர்கள் சொல்லிக் கொள்வார்கள். தமிழ் வழிபாட்டுக்கு எதிராக வழக்குத் தொடுத்த ஸ்ரீகுமார், தமிழுக்கு எதிராக வாதிட்ட கே.எம்.விஜயன் ஆகியோர் 'நாங்களும் தமிழர்கள்தான் என்கிறார்களே அதுபோலத்தான். சட்டமன்றத்திலேயே கேட்டேன். 'ஸ்ரீகுமாரின் தாய்மொழி தமிழா? சமஸ்கிருதமா?' என்று (பார்க்க. 'தமிழில் வழிபாடு நூல்')

அவர்கள் தரும் புள்ளி விவரத்தைக் கவனியுங்கள். எல்லாம் 'அள்ளி (விடும்) விபரம்தான்' என்று தெரிந்துவிடும்.

''தமிழகத்தில் மெட்ரிக்குலேஷன், நர்சரி பள்ளிகளில் சுமார் 50 லட்சம் மாணவ, மாணவியர் படிக்கிறார்கள். 10 லட்சம் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளோம். இவை எதற்கும் அரசிடமிருந்து நாங்கள் நிதி பெறுவதில்லை'' என்கின்றனர்,

இவ்வளவையும் சொல்லிவிட்டு

''ஒன்றாம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை அரசு அங்கீகாரம் பெற்றுள்ள அனைத்து மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளிகளிலும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள நர்சரி பள்ளிகளிலும் ஆங்கில வழிக்கு இணையாக தமிழ் வழி பிரிவுகளும் நடத்த அரசு அனுமதிக்க வேண்டும்'' என்று கோரிக்கை வைக்கிறார்கள்.''

ஓர் ஆங்கில இதழ் (News side) சில செய்திகளை வெளியிட்டுள்ளது. ஒருவகையில் இரு பக்கமும் செய்திகளைக் கேட்டே போட்டுள்ளார்கள்.

"After all their very choice of private schooling is to make them study in English and not in Tamil." he says.

பெற்றோர்கள் எல்லாம் தமிழில் படிக்கவே கூடாது என்றும் ஆங்கில வழியில்தான் படித்தாகவேண்டும் என்றும் முடிவெடுத்து விட்டார்கள் என்பது போல மெட்ரி. . மேலாளர் ஒருவர் பேசுகிறார்.

அதேநேரத்தில் கணினியைத் தமிழில் சொல்லிக் கொடுக்கும் எஸ்.டி. இராசா என்பவர் என்ன சொல்கிறார் என்று பாருங்கள்.

"Learning at a primary level through their mother tongue will make study easy for children and will not consider it as a burden", says S.T. Raja of Nira Designs. He teaches computer courses in easy Tamil, making the students understand the subject easily. When computers can be taught in Tamil, why not Maths and Geography", he asks."

விளங்காத சில பேர்க்கு இது சரியான பதிலடியாகும்.

இப்படி இருபுறமும் எழுதிய இதழ் நடுநிலையோடு ஒரு கருத்தைச் சொல்கிறது.

"At present there is a situation where most of the students studying in English Convent Schools cannot even converse in Tamil fluently, leave alone their writing skills. Ofcourse, English, is an international language but you should not marginalise your mother tongue."

தற்போது ஆங்கில வழிப் பள்ளிகளில் படிக்கும் பெரும்பாலான மாணவர்களுக்குத் தமிழில் தடங்கலின்றி உரையாடக்கூட முடியவில்லை. (அவர்களது எழுத்துத் திறமை எப்படியிருக்கும் என்பதையும் பாருங்கள்)

ஆங்கிலம் உலக மொழி தான்; ஆனால் உங்கள் தாய்மொழியைச் சிறுமைப்படுத்தி விடக் கூடாது என்று தெளிவாக உணர்த்தியிருக்கிறது.

16.11.98 ஆம் நாளைய முதல்வர் அறிவிப்புக்கும், 13.1.99 ஆம் நாளைய அரசாணைக்கும் பின்னால் மழலையர், மற்றும் மெட்ரிக் . . பள்ளியினர் சங்கங்கள் எப்படித் தீர்மானம் போடுகிறார்கள் என்று பாருங்கள்.

'வகுப்பு 1 முதல் 5 வரை அனைத்துப் பாடங்களையும் தமிழில் நடத்துவோம்' எனும் இடத்துக்கே அவர்கள் வர விரும்பவில்லை என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

27.2.99 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. அரசாங்க அங்கீகாரம் பெற்ற மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் தமிழ் தவிர கணிதம், அறிவியல், சமூகவியல் இவைகளில் இரண்டை தமிழில் நடத்த வேண்டும் என்று அரசாணை 421ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை தமிழக அரசு தமிழிலும், ஆங்கிலத்திலும் நடத்தும்படி அரசாணைக்கு திருத்தம் கொடுக்கும்படி வேண்டுகிறோம்.

2. Approval வழங்கப்பட்ட ஒவ்வொரு மழலையர் பள்ளிகளுக்கும் அரசு மூன்று பட்டதாரி பணியிடங்களை (அறிவியல், ஆங்கிலம், தமிழ்) அரசு சம்பளத்துடன் ஒதுக்கீடு செய்யுமாறு வேண்டுகிறோம்.

3. Private Study G.O. - ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் மேலும் இக்கல்வியாண்டு முதல் நீடிக்கப்படக் கூடாது என்றும் Approval பெறாத பள்ளிகளில் பயின்று வரும் மாணவ, மாணவிகளை அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் சேர்க்கப்பட மாட்டாது என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பை உடனடியாக அரசாணையாக வெளியிடுமாறு அரசை கேட்டுக் கொள்கிறோம்.

4. பத்தாண்டுகளுக்கு மேல் இயங்கி வரும் மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு சுய நிர்ணய உரிமையை (Autonomous) மத்திய அரசு நடத்தும் பள்ளிகளுக்கு கொடுப்பது போலவும், கல்லூரிகளுக்கு கொடுத்துள்ளது போலவும் தமிழக அரசு உடனடியாக மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு கொடுக்க வேண்டுமென்று இப்பொதுக் குழுவிலும், இம்மாநாட்டிலும் தமிழக அரசை கேட்டுக் கொள்கிறோம்.''

அரசு ஒரு குழு அமைத்து ஆய்வு செய்த நேரம். அந்த நேரத்தில் மழலையர் மற்றும் மெட்ரிக் நிர்வாகத்தினர் எப்படி அறிக்கை விடுகிறார்கள் என்று பாருங்கள்.

''லட்சக்கணக்கான பெண் ஆசிரியர்கள் பணிபுரிந்துவருகின்றனர். இப்பள்ளிகளில் தமிழ் வழிக் கல்வி திணிக்கப்பட்டால் இப்பள்ளிகள் அனைத்தும் மூடப்படும் அபாயமும் உள்ளது. அப்படி மூடப்பட்டால் இப்பள்ளிகளில் பயிலும் மாணவ - மாணவியருக்கு கல்வி பயில கல்வி நிறுவனங்களை அரசு நிறுவுவது சாத்தியமாகுமா? இப்பள்ளிகளில் பணிபுரியும் பெண் ஆசிரியர்களுக்கு பணிக்கான உத்தரவாதத்தினை அரசு அளிக்க முன்வருமா?

'அரசு அறிவித்துள்ள இரண்டு தமிழ்வழி கூடுதல் பாடங்களில் ஏதேனும் ஒன்றை ஏற்றுக்கொள்கிறோம்' என்ற தீர்மானத்தை எமது

சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றி அதனை முறையாக தமிழக அரசிடம் தெரிவித்துள்ளோம்.

மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளில் கட்டாயமாக ஒரு பாடத்தை தமிழ் வழியில் கற்பிக்க தரப்பட்ட உத்தரவாதத்தை மறந்து, ஆங்கில வழி பள்ளிகளை அழிக்க வேண்டும் என்று நடைபெறாத எண்ணத்தோடு மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும், நடுவண் அரசுப் பள்ளிகளிலும் அனைத்து பாடங்களும் தமிழில் நடத்த வேண்டும் என்ற தவறான எண்ணத்தில் வலம் வரும் ஒருசில தமிழ் அறிஞர்கள் சீனா, ரஷ்யா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை எடுத்துக்காட்டாக கூறுவது வேடிக்கையயாக உள்ளது. அந்நாடுகளில் வாழும் மக்கள் அனைவரும் ஒரே மொழி - பேசி வாழ்கின்றனர். ஆனால் நமது இந்திய நாட்டில் உள்ள பல மொழிகளுக்கும் இணைப்பு மொழியாக ஆங்கிலம் இருக்கிறது.

ஒரு சில சுயநலவாதிகளின் கோரிக்கையினை நிறைவேற்றுவதன் மூலம் எதிர்கால தமிழகம் சூன்யமாகும் அபாயம் உள்ளது. அரசியல் லாபத்திற்காக தமிழகத்தின் எதிர்கால குடிமக்களின் வாழ்க்கையை இருட்டாக்குவது ஒரு தேசிய குற்றமாகும். **நாட்டுப்பற்றுமிக்க எவரும் இந்த தமிழ் வழிக் கல்வியினை எதிர்க்கத்தான் செய்வார்கள்.** எனவே எதிர்கால தமிழக இளைஞர் சமுதாயத்தின் நலனை மனத்தில் இருத்தி இப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வை காணும்படி ஆய்வுக் குழுவினை கேட்டுக் கொள்கிறோம்.''

சீனாவிலும் 122 கோடிச் சீனர்கள் என்றால் 8 கோடிப் பேர் பிறமொழியாளர்கள் தான். பாரிசில் ஆங்கிலத்தில் கேட்டால் ஒரு தேநீர், உரொட்டி கூட வாங்க முடியாது. அனுபவப்பட்டவன் நான். உருசியாவில் வேறு எத்தனை மொழிகளோ இருக்கின்றன. இந்த உண்மைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாத இவர்கள் தங்கள் சுய நலக்கோட்டை தகர்ந்து விடக் கூடாது என்பதற்காகவும், வருமான வாய்க்கால் தூர்ந்து விடக்கூடாது என்பதற்காகவும் எவ்வளவு துடிக்கிறார்கள் பாருங்கள். இலட்சக்கணக்கான பெண் ஆசிரியைகளாம். +2 வும் பட்டமும் படித்து, வேலையில்லாதிருக்கும் எல்லோரும் - 300க்கும் 400க்கும் ஒடாய் உழைக்கும் எல்லோரும் இவர்களுக்கு ஆசிரியர்கள்தாம்.

உண்மையிலேயே ஓர் ஆசிரியனுக்குரிய முறையான சம்பளத்தை எந்த நிறுவனமாவது வழங்குகிறதா? இல்லையே! எல்லாம் 'அத்தக் கூலி' தான்; அடாவடிதான்! இவர்கள் கல்வி பற்றி எவ்வளவு உருகுகிறார்கள்?

இடையில் மொட்டைக் கடிதங்கள் வேறு!

பட்டதாரிகள் ஆசிரியர்கள் சங்கம் எனும் பெயரில் இரண்டு அனாமதேயங்கள் 'ஆங்கிலத்தில்' ஒப்பமிட்டு ஒரு மனு.

அவர்கள் கருத்தே எவ்வளவு தவறு என்பதைப் பாருங்கள்.

''திரு அருணாச்சலம் மாண்புமிகு திரு தமிழ்க்குடிமகனுக்கு நெருங்கிய உறவினர்'' (இந்த ஒரு புளுகே அவர்களை அடையாளம் காட்டிவிடும்)

பின்னால் மிரட்டல் வேறு .

''1000 தமிழாசிரியர்களுக்காக 22 லட்சம் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள் மாணவ மாணவியர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் ஓட்டை தாங்கள் இழக்க வேண்டாம்.''

தமிழ்நாட்டின் எதிர்காலமே இந்தக் கல்வி வியாபாரிகளின் கையில்தான் உள்ளதா? முறையான வியாபாரிகளின் உண்மையான தலைவராக இருக்கிற த. வெள்ளையன் கூட இப்படி யெல்லாம் பேசியதில்லை.

இவர்கள் இப்படியெல்லாம் கூக்குரலிட்டாலும், உயர் நீதி மன்ற நீதியரசர் பி. சண்முகம் அருமையான தீர்ப்பை வழங்கிவிட்டார். அவர் தீர்ப்பு இதுதான்:

''நர்சரி மற்றும் தொடக்கப்பள்ளிக்கூடங்களில் 2 பாடங்களை கட்டாயம் தமிழில் கற்பிக்கவேண்டும் என்று 13.1.99 அன்று அரசு பிறப்பித்த உத்தரவு செல்லும். இதை பின்பற்றும் பள்ளிக்கூடங்களுக்கு மட்டுமே அங்கீகாரம் வழங்கப்படும் என்று அரசு கூறுவது செல்லும்.

அதேசமயம் தமிழ்மொழியை தாய் மொழியாக இல்லாத மாணவர்களுக்கு இந்த உத்தரவை அரசு திணிக்க முடியாது. தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு மட்டுமே இந்த உத்தரவு பொருந்தும்.''

இது அரசின் மொழி வழியிலான கொள்கையைச் செயற்படுத்திட அரசுக்கு உள்ள உரிமையைத் தெளிவுபடுத்துகிறது.

தீர்ப்பு வந்தது 8.6.99 இல். ஏற்புப்பெற்ற 2100 மழலையர் பள்ளிகளில் இரண்டு பாடங்களைத் தமிழில் படிக்க - அரசு அலுவலர்கள்

முறையாக நடவடிக்கை எடுத்திருந்தாலே போதும்! பல பள்ளிகள் மாறிவிடும். 2 மாதங்கள் சரிபார்த்த பின் இதனைச் செயற்படுத்தாத பள்ளிகளின் ஏற்பினை (அங்கீகாரம்) விலக்கிக் கொள்வதாக அறிவித்து அதில் 10 பள்ளிகளின் பெயர்களையும் காட்டியிருந்தால் போதும் ! எல்லாம் சரியாக இருக்கும் !

பள்ளிக் கல்வித்துறை என்ன செய்தது?

அடுத்து நாம் அரசாணை பிறப்பிப்பதே 19.11.99 இல் தான். அதற்குள் எவ்வளவோ மாற்றியிருக்கலாமே !

இதில், பள்ளிக்கல்வித்துறை முறையாகச் செயற்படுத்தாமல் மோசடி செய்துவிட்டது என்பதே என் கருத்து. மேலும், வழக்குத் தொடர்ந்தபின் நீதி மன்றத்திலும் இதனைச் செயற்படுத்த மாட்டோம் என்று அரசுத் தரப்பிலேயே சொல்லிவிட்டார்களே?

தீர்ப்பு வந்தவுடனேயே எங்களுக்கு வந்த செய்தி இது. திருச்சியிலிருந்து திரு. ஐ. அடைக்கலசாமி என்ன எழுதுகிறார் என்று பாருங்கள்.

''திருச்சி மாவட்டம் பொன்மலைப்பட்டியில் தற்சமயம் ''இன்பேண்ட் ஜீஸஸ் நர்சரி'' பள்ளியை ஜூன் 99 முதல் ''இன்பேண்ட் ஜீஸஸ் மெட்ரிகுலேசன் பள்ளியாக மாற்றி அங்கீகாரத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இதுபோலவே திருச்சி மாவட்டத்தில் அநேக பள்ளிகளை மெட்ரிகுலேசன் பள்ளிகளாக மாற்றி வருகிறார்கள். இதனால் அரசின் கொள்கை ஏற்கப்படாத நிலை ஏற்படுகிறது.

எனவே நர்சரி பள்ளிகளாக செயற்பட்டு வந்த பள்ளிகளை மெட்ரிகுலேசன் பள்ளிகளாக மாற்றுவதை தடைசெய்யவேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்'' என்று எழுதியுள்ளார்.

அரசு தமிழ் வழிக் கல்வியை அறிமுகம் செய்து, அதுவும் சட்டப்படி செல்லும் எனும் தீர்ப்பையும் வாங்கிய பிறகு சிலபேர், தங்கள் 'கொள்ளை இலாபத்தை' இழக்க விரும்பாமல் எப்படிக் குறுக்குச் சால் அடிக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்.

நீதியரசர் தன் தீர்ப்பில் கூறிய சில வரிகளை 'இந்தியன் எக்சுபிரசு (8.6.99) வெளியிட்டுள்ளது.

"The judge said that education is a process of bringing out the best from deep on one's own.

This shall be possible only by assimilation, digestion and synthesis of idea and through one's own mother-tongue.

Towards the development of a child, the medium of instruction would play a significant role for free expression and unhindered acquisition of knowledge,'' என்கிறார் நீதியரசர்.

தனி நீதிபதியின் தீர்ப்பை எதிர்த்துச் சிலர் மேல் முறையீடு செய்தனர். அதில் அவர்கள் கூறுவதைக் கவனியுங்கள்.

''பிஞ்சுக் குழந்தைகளிடம் அரசு பளுவை சுமத்துகிறது. தமிழை தாய்மொழியாக கொள்ளாத குழந்தைகள் இளம்பருவத்திலேயே மூன்று மொழிகளை படிக்க வேண்டியது வரும். மேலும் இந்தக் குழந்தைகளின் பெற்றோர் பெரும்பாலோர் மத்திய அரசு ஊழியர்களாக உள்ளனர். இவர்கள் வேறு ஊருக்கு மாற்றல் ஆகிசென்றால், அங்கே செல்லும் இந்த குழந்தைகள் அங்கு தமிழ் படிக்க முடியாது. தனி நீதிபதியின் உத்தரவு சட்டத்துக்கு முரணானது. பயிற்றுவிக்கும் மொழி எது என்று அரசு நிர்ப்பந்திக்க முடியாது. இதை நீதிபதி கவனிக்க தவறிவிட்டார். அரசின் உத்தரவு பள்ளி நிர்வாகத்துக்கு மட்டுமல்லாமல் குழந்தைகளுக்கும் சிரமத்தை உண்டாக்கும். ஒரு பள்ளியில் ஒரே வகுப்பில் இரண்டு விதமாக பயிற்றுமொழியை பின்பற்ற முடியாது. எனவே, தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்யவேண்டும்.''

இதில் இவர்கள் கூறுவது எவ்வளவு பொருந்தாக் கூற்று என்பதைப் பார்க்க முடியும்.

''தமிழை தாய்மொழியாக கொள்ளாத குழந்தைகள் இளம்பருவத்திலேயே மூன்று மொழிகளை படிக்க வேண்டியது வரும்.'' என்கிறார்கள்.

தமிழ்நாடு தவிர, மும்மொழிக் கொள்கை உள்ள மாநிலங்களில் 'பிஞ்சுக் குழந்தைகள் எத்தனை மொழிகளைப் படிக்கிறார்கள்? அந்தப் 'பளுவை' அவர்கள் சுமப்பது எப்படி?

அடுத்து, 'மேலும் இந்தக் குழந்தைகளின் பெற்றோர் பெரும்பாலோர் மத்திய அரசு ஊழியர்களாக உள்ளனர். இவர்கள் வேறு ஊருக்கு மாற்றல் ஆகிசென்றால், அங்கே செல்லும் இந்த குழந்தைகள் அங்கு தமிழ் படிக்க முடியாது' என்கிறார்கள்.

மத்திய அரசு ஊழியர்கள் குழந்தைகளுக்காகத்தான் சி பி எஸ் இ பள்ளிகள் 194 இயங்குகின்றன. 41 ஆங்கிலோ, இந்தியப் பள்ளிகள் இயங்குகின்றன. அவர்கள் அங்கு சேர்வதுதானே முறை. பின் ஏன், கல்வியை விற்றுப் பிழைக்க, 'பெட்டிக்கடை' வைத்து வியாபாரம் செய்யும் இந்தப் பள்ளிகளை மத்திய அரசு ஊழியர்கள் நாடுகிறார்கள்?

மேலும் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் என்றால் அவர்களுக்காகவே 1008 பள்ளிகள் இயங்குகின்றனவே! அதில் அவர்கள் சேர்ந்து விடலாமே!

1009 + 194 + 41 = 1243 பள்ளிகள் இவர்களுக்காகவே இயங்கும்போது ஏன் இந்தப் பித்தலாட்டம்?

''ஒருவகுப்பில் . . . . . முடியாது''

ஆங்கிலம் இவர்களுக்குத் தாய் மொழியில்லை. பின் ஏன் இரண்டு பயிற்றுமொழிகள்! ஆங்கிலத்தில்தான் ஐந்தாம் வகுப்பு வரை படித்தாகவேண்டும் என்று கூறுவது யார்? அடையாளம் தெரிந்து கொள்ளுங்கள்! போகட்டும்! ஒரே பள்ளி ஆங்கில வழி வகுப்பையும், தமிழ் வழி வகுப்பையும் நடத்திக் கொள்ள எங்களிடம் இசைவு கேட்டார்களே அதற்கு என்ன பெயர்? இப்போது மட்டும ஒரே வகுப்பில். . . . என்பது ஏன்? பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது. புரிந்து கொள்ளுங்கள்!

இந்த மேல் முறையீடு இருக்கும்போது இதற்கு ஒரு முடிவு காணும் வரை காத்திருக்காமல் தமிழ் அறிஞர்கள் 'வேகம்' காட்டியிருக்க வேண்டாம் என்பது என் கருத்து. ஒருவேளை நம் ஆணை செல்லாது என அறிவிப்பு வந்துவிட்டால் அதன் பிறகு, தமிழ் அறிஞர்கள் தங்கள் கிளர்ச்சியை முழு வீச்சில் செய்திருக்கலாம்!

அவர்களும் வேகப்பட்டார்கள்! உண்ணா நோன்பிருந்தார்கள். எனவே அரசாணை 324 (19.11.99) பிறப்பிக்கப்பட்டது.

மெட்ரிகுலேசன் பள்ளிகள் சங்கத்தினர் உடனே என்ன எழுதுகிறார்கள் என்று பாருங்கள்.

''தமிழக அரசு கல்வித் துறையால் அரசாணை எண் 324 தேதி 19.11.99 வெளியிடப்பட்டுள்ளது. அவ்வரசாணை மெட்ரிக்குலேசன் பள்ளிகளை பெரிதும் பாதிக்கும். அவ்வரசாணைக்கு விளக்கங்கள் இத்துடன் இணைத்துள்ளோம். அவ்வரசாணையால் நூறு ஆண்டுகளுக்கு மேல் இயங்கி

கொண்டிருக்கும் பள்ளிகளுக்கு பேராபத்து ஏற்படுகின்றது. தங்களுக்கும், தங்கள் அரசுக்கும் பாதுகாவலராக விளங்கும் 44 இலட்சம் பெற்றோர்கள் சார்பாகவும், ஒன்றரை லட்சம் ஆசிரிய பெருமக்கள் சார்பாகவும், 22 இலட்சம் மாணவ மாணவிகள் சார்பாகவும், பத்தாயிரம் பள்ளி நிர்வாகிகள் சார்பாகவும் தங்களை வேண்டிக் கொள்வது அரசாணை எண் 324 தேதி 19.11.99 மறு பரிசீலனை செய்து ரத்து செய்ய வேண்டுமாய் வேண்டுகின்றோம்'' என்கிறார்கள்.

மேலும் அவர்கள் விளக்கங்களைக் கவனியுங்கள்

''இப்பள்ளிகள் நூறு ஆண்டுகளுக்கு மேல் இயங்கி வருகின்றது. இப்பள்ளிகளில் தமிழ் ஒரு கட்டாயப் பாடமாக போதிக்கப்பட்டு வருகின்றது''

இது எவ்வளவு பெரிய பொய் என்பதைக் கவனியுங்கள். 1974 இல் மெட்ரிகுலேசன் பள்ளிகளே 30 தான். இவை எப்படி 1899 இல் முளைத்தன? யாரிடம் இவர்கள் காது குத்துகிறார்கள்?

காங்கிரசுக் காலத்தில் ஒன்றிரண்டு - போகட்டும் - 10 பள்ளிகள் வேண்டுமானால் இயங்கியிருக்கலாம். திராவிட இயக்க ஆட்சிகளில்தான் இத்தனை புற்றீசல்கள்! நூறு ஆண்டுகட்கு மேல் இயங்கி வரும் பள்ளிகளைப் பட்டியலிட்டுக் காட்டுவார்களா?

பிறகு மிரட்டலைப் பாருங்கள்!

''மக்கள் குரலே, மகேசன் குரல் என்பது போல் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் எந்தப் பள்ளியில், எந்த மொழியில் பயில வேண்டும் என்று அவர்கள் தான் முடிவு செய்ய வேண்டும். அரசாங்கமல்ல! பெற்றோர்கள் விருப்பத்திற்கு மாறாக ஆங்கிலத்தை அரசு அகற்ற முற்பட்டால் தேர்தலில், பெற்றோர்கள் ஆசிரியர்கள், நிர்வாகிகள், அரசுக்கு வாக்களிப்பார்களா? பாடம் புகட்ட மாட்டார்களா?''

ஆக, இவர்களைக் கேட்டுத்தான் கட்சிகள் வேட்பாளர்களை நிறுத்தவேண்டும் - இவர்களைக் கேட்டுத்தான் கட்சியினர் தங்கள் கொள்கையினை வகுத்துக் கொள்ள வேண்டும் - இவர்களைக் கேட்டுத்தான் அரசு, பள்ளிகளை நடத்த வேண்டும் - என்கிறார்களா இவர்கள்!

இவர்களுக்குக் கட்டுப்படாவிட்டால் எந்த அரசும் பதவியில் இருக்க முடியாது என்பதுபோல எவ்வளவு இறுமாப்புடன் பேசுகிறார்கள் என்பதைக் கவனியுங்கள்.

அடுத்து ''சிறுபான்மை சமுதாயத்தினர் நூறு ஆண்டிற்கு மேல் நடத்தும் பள்ளியின் அழிவிற்கு போர் தொடுக்கலாமா?''

தேவகோட்டை தேபிரித்தோ மேல் நிலைப்பள்ளியும், மதுரை தூய மரியன்னை மேல் நிலைப்பள்ளியும், திருப்பாதிரிப்புலியூர் தூய வளனார் மேல் நிலைப்பள்ளியும் எல்லாப் பாடங்களையும் நீண்டகாலமாகத் தமிழில்தானே நடத்தி வருகிறார்கள்?

சிறுபான்மைச் சமுகத்தினர் நடத்தும் பள்ளிகள்தானே! இவையெல்லாம் அழிந்து போய் விட்டனவா? அழிந்து போய்விடுமா? அப்படி அழிவதென்றால் ஆங்கில வழியில் நடந்த பள்ளிகளையெல்லாம் தமிழ் வழிக்கு 1937 இல் மாற்றினாரே இராசாசி - அப்போதே அல்லவா அழிந்துபோயிருக்க வேண்டும் -

எப்படிக் கதை விடுகிறார்கள் என்று பாருங்கள்!

''மெட்ரிகுலேசன் பள்ளியில் தமிழ் வழியில் நடத்துவதால், மத்திய அரசு நடத்தும் சிபிஎஸ்இ பள்ளிக்கும் ''கேந்திரா வித்யாலயா'' பள்ளிக்கும் மாணவ மாணவியர்கள் ஆங்கிலத்தில் பயில சென்று விடுவார்கள்'' என்கின்றனர்.

ஏன்கெனவே தெளிவுபடுத்திவிட்டோம். தமிழக அரசின் 'NOC' பெறாமல் எந்தப் பள்ளியும் சிபிஎஸ்இ பள்ளிகளாக மாற முடியாது என்று,

''நுழைவுத் தேர்வு, பி.இ. எம்.பி.பி.எஸ். போன்றவைகளுக்கு, மெட்ரிகுலேசன் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர் தான் 90% தேர்ச்சி அடைந்துள்ளார்கள்'' மகிழ்ச்சி.

இது எவ்வளவு பெரிய முட்டாள்தனமான விவாதம்!

பி.இ., எம்.பி.பி.எஸ். நுழைவுத் தேர்வு எழுதுகிறவர்கள் எல்லாம் ஐந்தாம் வகுப்பு முடித்தவுடனே நேரே நுழைவுத் தேர்வுக்கு வந்துவிடுகிறார்களா? ஏன் இந்தப் பித்தலாட்டம்? ஆறாம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை எந்தப் பயிற்றுமொழியிலும் பயிலலாம் என்பதை வைத்துத்தானே +2 முடித்த பிறகு நுழைவுத் தேர்வு எழுதுகிறார்கள். அப்படியானால் தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளைக் கூட ஆங்கிலத்தில் மாற்றினால்தான் நல்லது என்கிறார்களா? போலி வியாபாரிகளின் பொருந்தாக் கூற்றுகளை, 'முட்டாள்களின்' புலம்பல் என்று விட்டொழியுங்கள்.

அடுத்த குறிப்பு இது.

"Railway recruitment Board, Selection Group II & Group I, Staff Selection Commision, போன்ற தேர்வுகள் ஆங்கிலத்திலும், இந்தியிலும் தான் நடத்தப்படுகின்றன. தமிழில் படித்தால் இந்திய அரசு பணிக்குச் செல்ல முடியுமா? இது அரசுக்கு தெரியாதா?"

இது அரசுக்குத் தெரியாதா என்கிறார்கள் சங்கத்தினர். அரசுக்கென்ன? குடிமகனுக்கு - தமிழ்க்குடிமகனுக்கே தெரியும். கல்லூரியில் இருந்த போதே இந்தத் தேர்வுகளை நடத்தியவன் நான்.

நான் கேட்கிறேன். 5ஆம் வகுப்பு வரையிலும் ஆங்கிலத்தில் படிப்பவர்கள்தான் இந்தத் தேர்வுகளை எழுதுகிறார்களா? 5ஆம் வகுப்பு வரையிலும் தமிழில் படிக்கும் அரசு சார்ந்த பள்ளிகளில் படிக்கும் எவரும் மேற்கண்ட தேர்வுகளை எழுதுவதில்லையா? 10 ஆம் வயதிலேயே இவர்கள் எல்லாம் 'Staff Selection' க்கு வந்துவிடுகிறார்களா! மேலும் 7 ஆண்டுகள் படித்தபிறகுதானே இந்தத் தேர்வுக்கு வருகிறார்கள் அவர்கள் தமிழிலோ ஆங்கிலத்திலோ அவரவர் தாய்மொழியிலோ படிக்க வாய்ப்பு உள்ளதே!

எனவே இதுவும் ஒரு பித்தலாட்டமான விவாதம் என்பதை உணருங்கள். அடுத்தவை இரண்டு

"டாக்டர். நாவலர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தபோது, இதர மொழியினர் தான் ஆங்கிலத்தில் பயிலலாம். தமிழர்கள் ஆறாம் வகுப்பிலிருந்து படித்தால் மட்டுமே போதுமானது என்று ஒரு அரசாணையை வெளியிட்டார். அப்போதைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம், ஆங்கிலோ இந்திய சமுதாயத்தைச் சார்ந்த திரு. பிராங்க் அண்டோனி எம்.பி. அவர்கள், இதனுடைய பேராபத்தை விளக்கி கூறி, அந்த ஆணையை ரத்து செய்தார்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், முதல்வராக இருந்த போது, திரு. ஆர்.எம். வீரப்பன், கல்வி அமைச்சர் அவர்கள் ஆங்கிலத்திற்கும், சிறுபான்மையினருக்கும் எதிராக ஓர் அரசாணை வெளியிட்டார். இது குறித்து சிறுபான்மையினர் புரட்சித் தலைவியிடம் புகார் செய்தனர். அன்று மாலையே புரட்சித் தலைவி அவர்கள், திரு. ஆர். எம். வீரப்பன், கல்வி அமைச்சர் அவர்களை மாற்றி, திரு.செ. அரங்கநாயகம் அவர்களை நியமனம் செய்தார்".

நாவலர் வெளியிட்டது சரியான ஆணை. இப்போது பிறப்பிக்கப்பட்டது இதுபோன்று ஆணைதானே! அப்படியானால் நாவலர் பிறப்பித்த ஆணையைக் கலைஞர் ஏன் இலதாக்கினார்? புரட்சித்தலைவி என்ன செய்தார் என்றும் சொல்லியுள்ளார்கள். அந்த ஆணைகளைத் தேடிப் பிடித்துப் பார்த்தால்தான் உண்மை தெரியும்.

எனவே சங்கத்தினர் தவறான விவாதங்களை முன்வைத்துக் குழப்பி வருவது விளங்கியிருக்கும்.

மெட்ரிக் . . . பள்ளிகளின் சங்கத்தினர் அரசை எதிர்த்துப் போராடுவது என முடிவெடுத்தனர்.

1 முதல் 5 வரை தமிழ் வழியில் படியுங்கள் என்றால் இவர்கள் எல்லாம் (இவர்கள் எல்லாம் ஆங்கிலக் குஞ்சுகள் இங்கிலாந்தில் பிறந்தவர்கள்) ஆங்கிலோ இந்தியப் பள்ளிகட்குப் போய்விடுவார்களாம். இப்படியொரு மிரட்டல்!

மேலும் அவர்கள் மிரட்டும் தொனியைக் கவனியுங்கள்.

''குழந்தைகள் எந்த பள்ளியில் எந்த மொழியில் படிக்கவேண்டும் என்பதை பெற்றோர்கள் தான் முடிவு செய்ய வேண்டும்; அரசு அல்ல. நர்சரி பள்ளிகளில் ஆங்கிலத்தை அகற்ற அரசு முற்பட்டால் தேர்தலில் கருணாநிதி அரசுக்கு வாக்களிக்க மாட்டார்கள். பாடம் புகட்டுவார்கள் என்று தி.மு.க. அரசுக்கு எச்சரிக்கை விடப்பட்டு இருக்கிறது'' என்று செய்தித்தாள்கள் தெரிவிக்கின்றன.

மேலும் அவர்கள் கூறுகிறார்கள்.

''தமிழக அரசின் சார்பில் 40 ஆயிரம் பள்ளிகளுக்கு மேல் இயங்கிவரும் பட்சத்தில் ஆங்கில வழிப் பாடத்திட்டத்தை முழுமையாகக் கொண்ட மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தமிழ் வழியைப் புகுத்துவது சாத்தியமாகாது'' என்கின்றனர்.

'' The number of matriculation schools have also gone up form 20 to 25 in late seventies to over 2000'' என்கிறது இந்தியன் எக்ஸ்பிரஸ் (8.12.99)

1996 மே மாதம் வரை மெட்ரிகுலேசன் பள்ளிகளின் எண்ணிக்கை 1427 மட்டுமே. அன்பழகன் தான் 'எக்சுபிரசு' சொன்ன இலக்கை எய்தியவர்.

1008 சிறுபான்மையர் பள்ளிகளில் தமிழும் கூடுதலாகச் சொல்லித்தர ஏற்பாடு செய்யப்படும் என்பதுதான் அரசின் கொள்கை. ஆனால் எக்சுபிரசு எப்படித் திசை திருப்புகிறது பாருங்கள். இதுதான் எக்சுபிரசின் குணம். மேலும் சொல்கிறது பாருங்கள்.

''majority of them are not willing to admit their wards in schools where Tamil alone is a MOI''.

எனவே அரசு ஆணையைத் தடை செய்யக்கோரிச் சங்கங்கள் வழக்குத் தொடுத்துள்ளன.

''மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தமிழ் பயிற்று மொழி கட்டாயமாக்கப்பட்டால், இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் சிபிஎஸ்இ மற்றும் ஆங்கிலோ இந்திய பள்ளிகளில் சேர்ந்துவிடுவர். பின்னர் மெட்ரிகுலேசன் பள்ளிகளை மூட வேண்டியிருக்கும். ஏராளமான ஆசிரியர்களும், ஆசிரியர் அல்லாத ஊழியர்களும் வேலையை இழக்க வேண்டியிருக்கும்'' என்பதும் அவர்களது மனுவில் உள்ளது. இது தவறு என்பதை ஏற்கெனவே சுட்டிக் காட்டி விட்டோம்.

அரசின் ஆணையை எதிர்த்து மெட்ரி. மற்றும் மழலையர் பள்ளிகள் அடையாளமாக ஒரு நாள் மூடப்பட்டன. எனினும் செய்தித்தாள்களில் பின்வருமாறு செய்திகள் உள்ளன.

''தமிழ் மற்றும் ஆங்கில பள்ளிகள் சங்கம் இந்த பள்ளிகளை மூடும் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. சென்னை மற்றும் தமிழ்நாட்டின் இதர மாவட்டங்களிலும் உள்ள சில மெட்ரிகுலேசன் பள்ளிகள் இந்த போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை'' (தினத் தந்தி 9.12.99)

''ஆனால் இந்த போராட்டத்தில் சில மெட்ரிகுலேசன் பள்ளிகள் பங்கு கொள்ளாமல் புறக்கணிப்பு செய்தன. சென்னை அரும்பாக்கத்தில் உள்ள நேஷனல் ஸ்டார் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, எம்.ஜி.ஆர். நகரில் உள்ள சுந்தரம் பிரைமரி பள்ளி, தி. நகர் நவபாரத் மெட்ரிகுலேசன் பள்ளி போன்ற பல பள்ளிகள் நேற்று வழக்கம்போல் செயல்பட்டன'' (தினகரன் 9.12.99)

கோவையில் உள்ள மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் சங்கத்தினர் தங்கள் போராட்டத்தை வலுப்படுத்த, கீழ்த்தரமான செயலில் இறங்கினர். இது தொடர்பாக 'தினமலர்' (15.12.99) தரும் செய்தி இது.

''இதற்கிடையே, கோவையில் உள்ள நர்சரி மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகங்கள் பயிற்று மொழி உத்தரவிற்கு மாணவர்கள் மூலம் எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் தற்போது அதிரடி வேலையில் இறங்கியுள்ளது. நர்சரி மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தற்போது அரையாண்டு தேர்வு நடக்கும் இந்த நேரத்தில் பள்ளிகளின் அறிவிப்பு 'போர்டில்' பள்ளி நிர்வாகத்தின் சார்பில் ஒரு அறிவிப்பு எழுதப்பட்டுள்ளது.

அதன் விவரம் பின்வருமாறு : தமிழக முதல்வர் அவர்களுக்கு, வணக்கம். எங்களுடைய வருங்கால நன்மையை எண்ணி, எங்கள் பயிற்று மொழிக்கு தயவு செய்து தடை விதிக்காதீர்கள்.

பெற்றோர்கள் கையொப்பம்

இந்த வார்த்தைகளை தங்களது சொந்த கையெழுத்திலேயே போஸ்ட் கார்டுகளில் எழுதி, பெற்றோரிடம் கையெழுத்து வாங்கி வருமாறு பள்ளி நிர்வாகம் மாணவர்களை வற்புறுத்தியுள்ளது. மேலும், இதற்குத் தேவையான போஸ்ட கார்டுகளையும் பள்ளி நிர்வாகத்தினரே மாணவர்களுக்கு சப்ளை செய்துள்ளனர்.

இந்த கார்டுகளை பூர்த்தி செய்து பள்ளி நிர்வாகத்திடம் ஒப்படைக்காத மாணவர்கள் 'அரையாண்டு தேர்வை' எழுத முடியாது எனவும் வகுப்பு ஆசிரியர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனால், மாணவ, மாணவிகள் தற்போது அறிவிப்பு பலகையில் உள்ள இந்த வார்த்தைகளை எழுதிச் சென்று பெற்றோரிடம் கையெழுத்து வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்''.

ஆங்கிலப் பயிற்றுமொழியை நிலை நாட்டவும், தமிழ்ப் பயிற்றுமொழியை எதிர்க்கவும் பள்ளி நிர்வாகங்கள் என்ன செய்கின்றன என்று பார்த்தீர்களா? இவர்கள் போராடட்டும்; நீதிமன்றம் செல்லட்டும்; ஒருநாள் பள்ளிகளை மூடட்டும். ஆனால் இளம் மாணவர்களை மிரட்டிக் கையெழுத்து வாங்கி வரச் செய்கின்றனர். பெற்றோர்களை ஆட்டிப்படைத்துக் கையெழுத்து வாங்கமுயல்கின்றனர். இதைச் செய்யாவிட்டால் மாணவன் அரையாண்டுத் தேர்வை எழுத முடியாது என அச்சுறுத்தல் வேறு. இது அயோக்கியத் தனமல்லவா? தங்கள் வியாபாரம் கெட்டால் இவர்கள் ஏன் இத்தகைய கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடவேண்டும்.?

ஆசிரியர் பயிற்சியே பெறாத பலரை ஆசிரியர்களாக்கிய இந்த வியாபாரிகள், எந்த ஆசிரியர்களுக்கும் முறையான சம்பளம் வழங்காமல் 300ம்

400ம் கொடுக்கும் மோசடிப் பேர்வழிகள் - இவர்கள் பிழைப்புக் கெட்டுவிடுமே என்பதற்காக எத்தகைய தவறான செயல்களைச் செய்கின்றனர் என்று பாருங்கள். இந்த முறைகேட்டைச்செய்யச் சொன்னதே சங்கங்கள்தாம் என்பதையும் தெளிவு படுத்திவிட்டார்கள்.

தமிழ்நாடு தமிழ் மற்றும் ஆங்கிலப் பள்ளிகள் சங்கம் 'அரியணை' எனும் பெயரில் ஓர் இதழ் நடத்துகிறது. அதன் நிறுவனர் பி.டி. குமார் (அவர்கள் மொழியில் சரித்திர நாயகன்) எப்படி எழுதுகிறார் பாருங்கள்.

''வாங்கிய கடனை அடைக்க வட்டிக்கு வாங்கி வட்டிக்கே வட்டி கட்டியவன்'' (இதுதான் தொடக்கநிலை)

''அப்துல்கலாம் என்னும் விஞ்ஞானி உலகம் போற்றும் திறமை படைத்தவர் தமிழ் வழியிலேதான் கல்வி கற்றார் என சமாதானம் கூறுபவர்கள் கணிப்பொறியின் தேவை அவர் காலத்தில் அன்றாட வாழ்க்கையில் இடம் பெறவில்லை என்பதை மறைத்துவிட்டனர்''

(இன்று இந்தியாவிலேயே கணினியில் ஆங்கிலத்துக்கு அடுத்து இடம்பெறும் மொழி தமிழ்தான். இணைய மாநாட்டில் விசைப்பலகை தரப்படுத்தப்பட்டபின் தமிழில் - கணினியில் - எதை வேண்டுமானாலும் கொண்டுவரமுடியும் என்பது இவர்களுக்குத் தெரியுமா! இந்த நூலே என் வீட்டுக் கணினியில் இருந்துதான் புறப்பட்டுள்ளது)

''அவரவர் பெற்ற குழந்தைக்கு அவரவரே பெயர் வைப்பது போன்று அவரவர் விருப்பத்திற்கேற்ப கல்வியினை தேர்ந்தெடுப்பது''

''வசதி படைத்தவர்கள் பெங்களூர் போன்ற பெருநகரத்தில் குழந்தைகளின் சேர்க்கை தேதியினை தெரிவித்து வரும் வேளையில் ஏழை பெற்றோர் எங்கே செல்வார்கள்?'' (பணம் கறப்பதற்காகவே பள்ளிகள் நடத்தும் இவர்கள் ஏழைகளுக்காக எப்படி இரக்கப்படுகிறார்கள் - பாருங்கள்)

மெட்ரிக் . . பள்ளி நிர்வாகிகள் வருந்துகிறார்களாம் . . ''காரணம், கட்டிய கட்டிடங்கள் அனைத்தும் சொத்துக்களை அடமானமாக வைத்து வாங்கிய கடன் தொகையில் கட்டப்பட்டவை. . பல இலட்ச தொகையினை மாத வட்டிக்கு வாங்கி எதிர்காலம் சிறக்குமென்ற எதிர்பார்ப்புடன் இயங்கிவரும் இக்கல்வி நிறுவனங்களின் எதிர்கால நிலையென்ன? பட்டம் படித்த இரண்டு இலட்சத்திற்கும் மேலான முற்றிலும் பெண் ஆசிரியர்கள் வாழ்க்கைத் துணையாக வறுமையை போக்கி குறைந்த ஊதியத்தில்

கொள்கைப்பிடிப்புடன் பணியாற்றி வரும் வேளையில் பள்ளிகள் இழுத்து மூடப்பட்டால் அவர்களின் எதிர்காலம் இருளில் மூழ்கும் அபாயம்! ஆங்கில வழிக் கல்வியே சிறந்ததென முடிவெடுத்து கல்வி கற்றுவரும் நாற்பது இலட்சம் மாணவர்களின் நிலை என்ன?''

(ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் என்று சொல்ல முடியவில்லை. குறைந்த ஊதியத்தில் என்பதை ஒப்புக் கொண்டதற்கு மகிழ்ச்சி. இவர்கள் **கொள்கைப்பிடிப்புடன்** பணியாற்றுகிறார்களாம்!)

''உலக நாடுகளில் செவ்வாய் கிரகத்தில் குடியேற நாள் குறிக்கும் வேளையில் தமிழ்வழியிலே கல்வி கற்றல் போதுமென்றால் தமிழனின் பெருமையும் தமிழ் நாட்டின் சிறப்புக்களும் உலக அளவில் ஓங்கச் செய்வதெப்படி? கணிப்பொறி உலகிற்கு நம்மை முழுமையாக ஈடு கொடுத்து வாழ்ந்து வரும் தருணத்தில் எதிர்கால நிலை என்ன?''

(ஐந்தாம் வகுப்பு வரை தமிழில் படித்துவிட்டு, ஆறாம் வகுப்பு முதல் ஆங்கிலத்தில் படித்தால் எவனும் செவ்வாய்க்கிரகத்துக்கே போகமாட்டானாம். இப்போது செவ்வாய்க்கிரகத்துக்கு இந்த வியாபாரிகள் அனுப்பும் சரக்குகள்தாம் போய்க் கொண்டிருக்கின்றனவாம்)

''பள்ளி நடத்தி வரும் தாளாளர்கள் பேனாவை ஆயுதமென கொண்ட புரட்சியாளர்கள்; அறிவே இலட்சியமென கொண்ட முதலீட்டாளர்கள் தமிழ்ச் சமுதாயத்தை தலை நிமிரச் செய்த கல்வி தியாகங்கள் என்ற உண்மையினை'' உணர்வார்களா?

(இந்த உண்மை என் போன்றவர்களுக்குத் தெரியாமல் நான் வள்ளல் பச்சையப்பரையும், அண்ணாமலை அரசரையும், அழகப்பரையும் ஹாஜி கருத்த ராவுத்தரையும், தியாகராசரையும் போற்றிக் கொண்டிருக்கிறேன்)

இந்த மலரிலேயே ஒருவர் எழுதுகிறார்.

''இதேபோல் அரசியல் ஆதாயம் பெறுவதற்காக தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை என்ற பெயரில் மக்களின் ஜீவதார உரிமையை பறிக்கும் வகையில் தமிழ் மொழியைத்தான் கற்க வேண்டும் என கட்டாய மொழியை திணிக்க முயற்சிக்கிறார்கள். மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி ஆங்கில கல்வியிலே பாரிஸ்டர் பட்டம் பெறாவிட்டால் வட்டமேஜை மாநாட்டிலே வாதிட வாய்ப்பு கிடைத்திருக்குமா? நீதிபதி மோகன் அவர்கள் ஆங்கிலம் கற்காவிடில் நீதிபதியாகி இருக்க முடியுமா? நீதிமன்ற தீர்ப்புகளையும், சட்ட நுணுக்கங்களையும் தமிழில்தான் எழுதியுள்ளாரா?''

இந்த மூவரும் ஐந்தாம் வகுப்பெல்லாம் தாய்மொழி வழியில் படித்தவர்கள் என்பதும் இவர்கள் தாய்மொழி வழிக்கல்வியை வலியுறுத்துபவர்கள் என்பதையும் விவரம் கெட்ட இவர்களால் விளங்கிக்கொள்ள முடியுமா?

அவர் மேலும் கூறுகிறார் :

''குறிப்பாக ஆரம்ப கல்வி முதல் இறுதிவரை ஆங்கிலத்தில் பயின்றவர்களால்தான் ஆங்கில புலமை பெறமுடியும்.

உலக தொடர்பினை உடனடியாக பெறவும் அறிவியலின் ஆக்கபூர்வபணிகளை செய்யவும் கிராமக் குழந்தைகள் முதல் தலைநகர் குழந்தைகள் வரை, ஏழைமுதல் பணக்காரர்வரை, கடைநிலை ஊழியர் முதல் மேல்மட்ட அதிகாரிவரை, வாக்காளர் முதல் குடியரசு தலைவர்வரை சம உரிமை, சமபொருளாதாரம், சமமான அந்தஸ்து பெற ''ஆங்கிலக் கல்வி'' கற்றால்தான் முடியும்'' என்கிறார்கள் இவர்கள்.

மெட்ரிக் பள்ளிகளின் போராட்டத்திற்கு எதிர்போராட்டம் நடத்த டிட்டோ-ஜாக் அமைப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளது.

மெட்ரிக் பள்ளிகள் சங்கத்தினர் நீதிமன்றத்தில் கொடுத்த மனுவில் என்ன உள்ளது?

''மெட்ரிகுலேசன் பள்ளிகள் வியாபாரமாக்கப்பட்டு உள்ளது என்பது தவறானது எங்கள் பள்ளிகளில் எந்தவித தவறும் நடப்பது இல்லை''

(அண்மையில் 146 மெட்ரிகுலேசன் பள்ளிகளின் அங்கீகாரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. முறை கேடுகள் செய்ததால்தானே இந்த நடவடிக்கை. எனவே, நீதிமன்றத்திலேயே எப்படிக் கூசாமல் பொய் சொல்லுகிறார்கள் என்று பாருங்கள்.)

அதுமட்டுமல்ல. தமிழ் வழிக் கல்விக்காக அரசு உருவாக்கும் தமிழ் நூல்களுக்குத் தடை விதிக்கக் கோரியும் இவர்கள் மனு பேசுகிறது.

''தமிழ்வழிக் கல்விக்கான புத்தகங்களை தயாரிக்க கல்வி துறை கூடுதல் இயக்குநர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு தமிழக பாடநூல் நிறுவனத்துடன் 31-1-2000-க்குள் தமிழ்வழி கல்விக்கான புதிய பாடபுத்தகத்தை அச்சிட வேண்டும் என்று ஒப்பந்தம் செய்துள்ளது. ஆகவே புத்தகங்களை அச்சிட தடைவிதிக்கவேண்டும். அச்சிடுவதை நிறுத்தி வைக்க வேண்டும். அரசாணையை ரத்து செய்யவேண்டும்''.

தமிழ்நாட்டில் தமிழ் வழியில் படிக்க நூல்கள் அச்சிடும் பணியைத் தடை செய்திட வேண்டும் என்பவர்கள் எத்தகைய 'யோக்கியர்கள்' என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

22.2.2000த்தில் மழலையர் மற்றும் மெட்ரிக் சங்கத்தினர் உண்ணா நோன்பிருந்தனர். அப்போது, அவர்கள் விட்ட அறிக்கையில் உள்ள செய்திகள் உங்கள் பார்வைக்கு!

''டாக்டர் சி. சுப்பிரமணியம், முன்னாள் குடியரசுத் தலைவர், டாக்டர் இராதாகிருஷ்ணன், மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. முரசொலிமாறன், பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல்ராஜன், மற்றும் பல அறிஞர்கள் ஆங்கிலக் கல்வியின் உயர்வைப்பற்றிக் கூறியுள்ளனர்'' என்று கூறியுள்ளனர். சி. சுப்பிரமணியம் கல்லூரியிலேயே தமிழ் வழிக் கல்வியைக் கொண்டு வந்தவர். (தமிழ் ஆட்சிமொழிச் செயலாக்கம் - முதல் இயல் படியுங்கள்)

மற்றபடி ஆங்கில மோகிகளான முரசொலி மாறனையும் பி.டி.ஆர். பழனிவேல் ராசனையும் பற்றி அவர்கள் சொன்னது சரி. இந்தச் சங்கத்தினர் இந்த இருவரையுமே தங்கள் புரவலராகப் போட்டிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்.

அடுத்து அவர்கள் கேட்டது.

''பல தலைமுறைகளாக கிறிஸ்துவர்களும், முஸ்லீம்களும், நடத்தும் ஆங்கிலப் பள்ளிகளில் தமிழைத் திணிப்பது சிறுபான்மையினருக்கு அரசு செய்யும் துரோகமாகாதா?''

(அண்மையில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பைக் கவனியுங்கள்)

மெட்ரிக் . . பள்ளிகளின் நிர்வாகிகள் எவ்வளவு வசதிகளைப் பெருக்கிக் கொண்டனர் என்று பாருங்கள். அரசின் ஆணையை எதிர்த்து, தமிழ் (ம) ஆங்கிலப் பள்ளிகள் சங்கத்தினர் பேரணியும் நடத்தினர். அவர்கள் தந்த நேர்காணல் இது.

''It has spent about Rs10lakh for this purpose and also making efforts to make the conference a success, the association said.'' (இந்தியன் எக்ஸ்பிரஸ் 25.2.2000)

'குட் செப்பர்டு கான்வெண்ட்' மாணவர்களின் பெற்றோர்கள் எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினர். அவர்கள் முழக்கம் என்ன தெரியுமா? We love Tamil

'Do not spoil the future of our Children'

செய்திகளை வெளியிட்ட இந்து இதழ் (26.2.2000) இதையும் சொல்கிறது. 'Most parents who were leading the stir were Tamilians'

கரூர் சென்றபோது கலைஞரின் நண்பரும் நீண்ட நாள் தி.மு.க. காரருமாகிய பத்மநாபன் நடத்தும் மெட்ரிகுலேசன் பள்ளியின் அழைப்பிதழைக் கொடுத்தனர். விழா அழைப்பிதழ் ஆங்கிலத்தில் மட்டும். கலந்து கொண்டவர்கள் இரு தி.மு.க. அமைச்சர்கள் மற்றும் முக்கிய தி.மு.க. பிரமுகர்கள். தி.மு.க. காரர்களே இதை நடத்தும்போது இவர்கள் எந்தத் தமிழ்ப் பற்றோடு அரசின் ஆணையை ஏற்றிருப்பார்கள்? நாடு முழுவதும் இப்படித்தான் இருக்குமோ?

'பாக்யா' இதழில் ஒரு துணுக்கு படியுங்கள்.

இண்டர்வியூவில் அதிகாரி : என்னென்ன மொழிகள் தெரியும் ?

வந்தவர்: ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம்...

அதிகாரி: தமிழ் தெரியாதா ?

வந்தவர்: அது என் தாய்மொழி. என் அம்மாவுக்கு தெரியும்.

பி.சி.துரை, பெரியநாயக்கன்பாளையம்.



பாக்யா

இதிலேயே பல உண்மைகள் அடங்கியுள்ளன.

வேறோர் இடத்தில் இவர்களது அட்டூழியங்களை மேலும் பேசுவோம்.

1999 ஏப்ரல் திங்களில் தமிழக ஆசிரியர் கூட்டணியின் சார்பில் 'தமிழ் வழிக்கல்வி எழுச்சி மாநாடு' நடைபெற்றது. அதன்பொதுச் செயலாளர் 13 உறுதி மொழிகளைப் படிக்கும்போது, அனைவரும் எழுந்து நின்று கையொலி எழுப்பி முழுமையாக வரவேற்றனர். அவர்கள் மாநாட்டில் 16 தீர்மானங்களை நிறைவேற்றினர். அவற்றுள் ஒன்று.

''ஆங்கில வழிக் கல்விக்கான மெட்ரிகுலேசன் பள்ளிகள் திறக்க அனுமதி வழங்கப் படக்கூடாது'' என்பதாகும்.

உறுதிமொழிகள் படிக்கப்பட்டபோதும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதும் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, நிறைவுரை ஆற்றிய அன்றைய கல்வி அமைச்சர் க. அன்பழகன் பேசுகிறார் இப்படி:

''நான் சொல்ல நினைத்ததை நீங்கள் உறுதிமொழியாக எடுத்துக் கொண்டீர்கள் என்னுடைய நீண்டநாள் உணர்வுகளை நீங்கள் தீர்மானமாக வடித்துள்ளீர்கள். இதனைப் படிப்படியாக இந்த் அரசு கண்டிப்பாக நிறைவேற்றும்''.

இது பேராசிரியர் அன்பழகன் முழக்கம்.

தீர்மானத்தில் ஒன்றினை மேலே படித்தீர்கள். ஆனால் அன்பழகன் மேடையில் பேசியது உண்மையா? உளப்பூர்வமானதா?

1.4.99 முதல் 30.9.99 வரை வேகம் வேகமாக 366 மெட்ரிகுலேசன் பள்ளிகள் திறக்க அனுமதி வழங்கிய - 5 ஆண்டுகளில் 1098 பள்ளிகளுக்கு அனுமதிவழங்கிய பேராசிரியர் மேடையில் பேசுவது எவ்வளவு பெரிய மோசடி.

''உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்

உறவு கலவாமை வேண்டும்'' என்கிறார் வள்ளலார்.

''பேசுவது மானம்; இடை, பேணுவது காமம்'' என்றான் கம்பன்!

அன்பழகனது இந்தப் போலிப் போக்குக்கு வேறு எதை மேற்கோள் காட்ட முடியும்?

* * *

இயல் இருபத்திரண்டு

உயர்நீதிமன்றத் தீர்ப்பு

13.1.99 அன்று அரசு ஓர் ஆணை பிறப்பித்தது. (எண்: 6/13.1.99)

ஆணையின் சாரம்:

1999-2000 முதல் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் தற்போதுள்ள மூன்று பாடங்களில் எவையேனும் இரண்டு பாடங்களைத் {கணிதம், அறிவியல், சமூகவியல் - (வரலாறு & புவியியல்) } தமிழ் வழியில் பயிற்றுவிக்கவேண்டும். தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படவேண்டும் (இது மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகட்கு ஏற்பு வழங்கப்படும்போதே தரப்பட்டுள்ள ஒரு நிபந்தனையாகும்)

மேலும் இப்படிப் பயில்கின்ற அனைவர்க்கும் அரசுப் பாட நூல்கள் இலவசமாக வழங்கப்பெறும். இந்த அரசாணையை எதிர்த்து நெல்லை மாவட்டத்தில் இயங்கும் 9 பள்ளிகள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தன. (நீ.பே.5313/1999)

இதனை விசாரித்த நீதியரசர் பி. சண்முகம் 7.6.99 அன்று தன் தீர்ப்பினை வழங்கினார். அதன்படி, நீதிப்பேராணைகளைத் தள்ளுபடி செய்தார். மேலும், இந்த அரசாணை தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் எவையேனும் இரண்டு பாடங்களைத் தமிழில் படிக்க வகை செய்வதால், இது செல்லும்.

மேலும், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத மாணவர்கட்கு இது பொருந்தாது என்றும் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்தத் தீர்ப்பினை எதிர்த்தும் நீதிப் பேராணை வழக்குகள் உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்டன (1074, 1075, 1095/1999)

இதன்பின் தமிழ்ச் சான்றோர் 100பேர் உண்ணா நோன்பு, அரசின் உயர் மட்டக் குழு அறிவிப்பு, அவர்களது பரிந்துரை, அதன்பேரில் 19.11.99 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணை ஆகியவை பற்றி நாமறிவோம்.

இதனை எதிர்த்துப் பல பேர் வழக்காடினர். அவர்கள் மொழியிலேயே தருகிறேன்.

A. The impugned Government Order is arbitrary, irrational, vague, inconsistent, unworkable and without proper guidelines apart from being malafide and against law.

B. A Universal Declaration of Human Rights (Convention on the Rights of the Child) was adopted by the General Assembly of the United Nations on 20th November, 1989 and the Government of India also accepted to this Convention on 11th December, 1992. According to the said Declaration every one has the right to education; and Article 26(3) of the said declaration is to the effect that the parents have a prior right to choose the kind of education that will be given to their children. Article 51(c) is of the Constitution of India is to the effect that the State shall endeavour to foster respect for International Law and reaty obligations in the dealings of organized people with one another. The Apex Court in (1997 (7) Supreme 323) has ruled that once the Indian Government accepts the Tenternational Universal Declaration of Human Rightss, the same shall have the force of law. That being the present legal position, the State has no power to pass the impugned order.

C. The impugned Governement Order which prohibits English from being the medium of instructions and which compels to adopt mother tongue or Tamil alone as the medium of instructions from standard I to V with no choice to the parents to educate his children is per se arbitrary and violative of Articles 14 and 21 of the Constitution of India.

D. The impugned Government Order which appears to compel Tamil alone to be the medium of instruction is clearly violative of Articles 14 and 26 of the Constitution of India, besides Article 30 in the case of a minority institution.

E. Even assuming that the directions of such a nature contaianed in the impugned Government Order can be validly made by the State, it can only be made by passing a proper legislation. In fact, the Committee atleast in two places has categorically stated that legislative sanction is necessary.

இது மிகவும் கவனிக்கத்தக்கது.

It can only be made by passing a proper legislation.

'இந்த அரசாணை முறையான ஒரு சட்டத்தின்வாயிலாகவே வலுவுடையதாக்கப் பட்டிருக்கவேண்டும்.

மேலும், மோகன் குழுவே இரண்டு இடங்களில் சட்டமன்ற அனுமதி கட்டாயம் தேவை என்றே வலியுறுத்தியுள்ளது.

இவ்வளவு தெளிவாகச் சொல்லியும் அதன்பிறகும் க. அன்பழகன் இதனைச் சட்டமாக்க முன்வரவில்லையே ஏன்? இதனைச் சட்டமாக்கிவிடலாம் - அதற்கானவற்றைத் தயார் செய்யுங்கள் என்று கலைஞர் சொல்ல முன்வரவில்லையே ஏன்? ஆணையை நீதிமன்றம் செல்லாதாக்கிவிட்டது. அப்புறமாவது சட்டம் செய்திருக்கலாமே! ஏன் செய்யவில்லை?

G The Government Order is arbitrary and violative of Article 14 of the Constitution of India in that it handicaps students belonging to numerous linguistic minorities placing them on par with students having Tamil as their mother-tongue.

H. The Government Order is violative of Article 21 of the Constitution of India in that with respect to dignity and quality of life, the children of linguistic minorities in Tamil Nadu are for ever condemned without choice to the medium of instruction in Tamil. The fundamental rights of the children conferred under Articles 29 and 30 of the Constitution pf India have been violated, more so, because the State failed to take effective steps as contemplated under Article 350 A of the Constitution of India, according to which every State Government and Local Authority Should endeavour to provide adequate facilities for the instruction in mother-tongue at the primary stage of education to children belonging to linguistic minorities.

ஆறாம் வகுப்பிலிருந்து யார்வேண்டுமானாலும் ஆங்கில வழியில் அனைத்துப் பாடங்களையும் படிக்கலாம் என்பதுதான் அரசு தந்துள்ள வாய்ப்பு. ஆனால் அதையே 'unrealistic' என்கிறது தீர்ப்பு.

I. Hence, the plea of the State Government that they have not prevented the Children who want to prosecute their education from VI Standard onwards in the medium of their choice is unrealistic.

J. The Government Order is violative of Article 19(1) (a) read with Articles 19(1) (d), 19(1) (e) and Article 19(2) of the Constitution of

India. A combined reading of the said provisions and the various rulings of the Apex Court would show that a citizen shall have the freedom of speech and expression, which would include the right to educate and to be educated. Such a right has to be understood with reference to the management and the student.

கவனியுங்கள் :

ஒரு குடிமகனுக்குப் பேசுவதற்கும் புலப்படுத்துவதற்கும் முழு உரிமை உண்டு. இது கல்வி கற்பதற்கும் கற்றுக் கொள்வதற்கும் உள்ள உரிமையையும் உள்ளடக்கியதாகும் என்கிறது தீர்ப்பு.

சிறுபான்மையர் நடத்தும் கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரையில்

K. Administration would include the curriculum and syllabus of their choice, which would include a right to choose the medium of instruction.

அரசியல் சட்டத்தின் பிரிவு 30 (1) இன் படி

சிறுபான்மையர் 'have the right to teach the subjects in the medium of their own choice'

L. So, by an executive order the State cannot infringe the fundamental rights conferred under Article 30(1) of the Constitution of India.

M. The impugned order infringes the fundamental right, as the right to choose the medium of instruction is also a fundamental right.

தமிழில் அரசே தமது நீதிப்பேராணையில் (w.p. No:5313/1999) என்ன சொல்கிறது?

N. The Matriculation Schools is in the State form a separate category of their own with separate entity and cater to the special educational needs of the people.

நீதியரசர் மோகன், தமிழண்ணல், இரா. இளங்குமரன் ஆகியோரைக் குழு உறுப்பினர்களாக அமர்த்தியது 'மோசம்' என்கிறது தீர்ப்பு (bad)

R. The report of the committee is one sided.

T. The impugned Government Order is again illegal, inasmuch as it is not made applicable to the Central Board of Secondary Education and Anglo Indian Schools, where the medium of instruction is English but the mother-tongue of most of the students is not English.

U. Hence, at best the impugned Government Order can only be implemented / applied to Schools to be started afresh.

W. The impugned order which seeks to compel to have mother-tongue as the medium of instruction and which prohibits English from being adopted as the medium of instruction is violative of the fundamental right of expression, guaranteed under Article 19(1) (a) and not saved by Article 19(2) of the Constitution of India and therefore liable to be struck down.

X. Under the guise of developing Tamil culture, by the impugned Government Order what has been done is that the culture of other students whose mother-tongue is other than Tamil has been totally destroyed.

Y The Government Order has to be declared as arbitrary, as the Apex Court has ruled that the State must state its policy precisely. Or in other words, the State must spell out its policies in full and on a long term basis.

அரசின் குறிப்பு இதுதான்.

The counter affidavit makes a mention that from VI Standard onwards it is open to all the students to study in the medium of their choice.

வழக்கறிஞர் சாந்திபூசனின் கருத்து

Learned counsel however, added that some parents out of over - anxiety, not knowing the limitatioins of the children, compel them to study in English medium thereby curtailing the child's growth in every respect.

வாரிய உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவை அமைத்துப் பிறப்பிக்கப்பட்ட 1720 / 25.7.1977 எனும் ஆணை இன்றும் நடைமுறையில் உள்ளது.

Thus since 1950 English has been the medium of instruction in Matriculation schools. During 1976, as already mentioned there were

only 30 Schools which went upto 200 or so in 1987., 1000 in 1992 and 2000 as on date.

நீதிபதிகள் குழுவின் தீர்ப்பு 'தாய்மொழி' எது எனும் ஆராய்ச்சியில் அதிகம் இறங்கியிருக்கிறது.

தமிழண்ணலைக் குழு உறுப்பினராகச் சேர்த்ததை நீதிமன்றம் சரியாகக் கருதவில்லை.

'A person cannot be a judge of his own Cause. என்கிறது தீர்ப்பு.

மெட்ரிகுலேசன் பள்ளிகட்கான வாரியத்திலிருந்தும் சிறுபான்மையரிலிருந்தும் ஒரு சிலர் குழு உறுப்பினராக்கப்பட்டிருக்க வேண்டுமாம். அப்படிச் சேர்க்காததால் 'The decisiones of the Govt. in this regard and orders passed are arbitrary and irrational' என்கிறது தீர்ப்பு.

''மெட்ரிகுலேசன் பள்ளிகள் அமைக்கப்பட்டபோதே 'English shall be the medium of instruction' என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த அரசாணை 1720/25.7.77 அப்படியே இருக்கும்போது, அரசு எப்படிப் புதிய மொழிக்கொள்கையைக் கொண்டுவருகிறது?'' என்று கேட்கிறது தீர்ப்பு.

எதிர்த்தரப்பினர் கொடுத்ததாகச் சொல்லி 3 பள்ளிகளின் பட்டியலைத் தீர்ப்பில் காட்டியுள்ளார்கள்.

C.M.S. MATRICULATION HIGHER SECONDARY SCHOOL,
GANAPATHY, COIMBATORE.

S.No.	Mother tongue of the pupils	Boys	Girls	Total
1.	Tamil	379	306	685
2.	Hindi	7	7	14
3.	Telugu	31	21	52
4.	Malayalam	131	112	243
5.	Kannada	15	8	23
6.	Urdu	2	1	3
7.	Marathi		2	2
8.	English		1	1
	Total	565	458	1023

685 பேர்தான் தமிழ். 243 பேர் மலையாள மாணவர்கள். வேறு சிலர் வேறுமொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள்.

நீதிபதிகள் கேட்பது இதுதான்: ஒவ்வொரு மொழியினர்கட்கும் அவரவர் தாய்மொழிப் பயில வாய்ப்பில்லாதபோது, ஆங்கிலம் தானே போதுமான பயிற்றுமொழியாக இருக்கவேண்டும். அரசே ஒரே பள்ளியில் பல மொழிகளைப் பயிற்றுமொழியாக வைக்க முடியுமா என்று கேட்கிறார்கள்.

அவரவர் தாய்மொழியில் பயில அரசே 1008 பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதே! அவற்றில் பிறமொழியாளர் சேர்ந்து படிக்கலாமே!

கோவை, கணபதி பகுதியில் அத்தகைய பள்ளி எதுவும் இல்லாததால் 685 பேர்க்காகத் தமிழ் வழியிலும், மற்றவர்க்கு அவரவர் தாய்மொழியாகிய பயிற்றுமொழியிலும் நடத்தலாமே! வியாபாரத்துக்காகக் கடைதிறந்தவர்கள் இந்தக் கூடுதல் கடையும் நடத்தலாமே!

338 பேர்க்காக 685 தமிழ் மாணவர்களும் ஆங்கிலவழியில்தான் படிக்க வேண்டுமா? இதுதான் நியாயமா? Tamil or mother tongue என்று போட்டதே இந்த 1008 பள்ளிகளை மனத்தில் - கணக்கில் - கொண்டுதான். கணபதியில், காரமடையில் இரண்டு மூன்று சிறுபான்மையர் மொழியைப் பயிற்றுமொழிகளைக் கொண்ட பள்ளிகளை அல்லது வகுப்புப் பிரிவுகளை நடத்துவதில் என்ன இடர்? அரசு அதற்கு அனுமதி வழங்குகிறதே!

ஆனால் நம் அரசு வழக்கறிஞர்கள் இந்தக் கோணத்தில் வாதிட்டார்களா?

மேலும் இதுபற்றியெல்லாம் குழு சிந்தனை செலுத்தவில்லை என்கிறது தீர்ப்பு.

The committee and the State Government have not even applied their mind or taken pains to find out the problems that may arise.- இது தீர்ப்பு.

The committee did not consider the aspect as to whether compelling the students to study in Tamil / mother tongue would affect the career prospects of the children என்கிறது தீர்ப்பு.

5ஆம் வகுப்பு முடித்த நிலையில் - 10 அகவை ஆன நிலையில்தான் இவர்கள் - திரைகடல் ஓடப் போகிறார்களா?

எவ்வளவு தவறான கண்ணோட்டத்தோடு ‘உண்மை’ திசை திருப்பப்படுகிறது!

தமிழ் வழிப் படித்தால்தான் தமிழ் பண்பாட்டில் ஈடுபாடு வளரும்; அந்தப் பண்பாடு நெடிது வளர வாய்ப்பு ஏற்படும் என்ற கோணத்தில் குழு தந்த அறிக்கையின் மீது வந்த தீர்ப்பு இது.

The committee has erred in assuming something without any basis and which is not there and on that criteria made the recommendations. Even assuming what the committee says is true, the remedy is not to issue the impugned G.O.

ஓர் இடத்தில்

'G.O. has to be quashed as irrational' என்கிறது தீர்ப்பு.

அமைச்சரவையின் ஏற்பும் பரிந்துரையும் பெற்றபிறகு 4 மாதங்கள் கழித்துத்தான் அரசாணை பிறப்பித்தனர். அதுவரை கல்வித்துறை என்ன ஆராய்ந்ததோ தெரியவில்லை.

சி.பி.எஸ்.இ., ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்றுமொழியை அனுமதித்துவிட்டு, மெட்ரிகுலேசன் பள்ளிகளில் மட்டும் தமிழ் அல்லது தாய்மொழி வழிக்கல்வியைக் கட்டாயப்படுத்துவது அரசியல் சட்டத்தின் 14ஆவது பிரிவுக்கு முரணானது என்கிறது தீர்ப்பு. சி.பி.எஸ்.இ. பள்ளிகள் நடுவண் அரசின் கட்டுப்பாட்டில் வருபவை. நடுவண் அரசின் ஒப்புதல் இல்லாமல் - அதுவும் மும்மொழித்திட்டத்தின் அடிப்படையில் வரும் அந்தப் பள்ளிகளை எப்படித் தமிழக அரசு ஆணைக்குள் கொண்டு வரமுடியும்? எனவேதான் 194+41 பள்ளிகட்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

நமது அரசு வழக்கறிஞர் இதுபற்றியெல்லாம் பேசினாரா? அரசாணை பிறப்பிக்கும் முன் அரசு பள்ளிக் கல்வித்துறை 'பயிற்றுமொழி' பற்றிய தெளிவை உண்டாக்காதது ஏன்? 'use English as medium of' என்ற வகையில் மாற்றம் செய்திருந்தால்தானே அது அரசாணையை வலுப்படுத்தும்!

தீர்ப்பின் முக்கியமான பகுதி :

In that case, the Supreme Court after referring to Madras City Wine Merchants. Association case, cited supre, pointed out that as there ws change in the policy by legislation the principle of non-arbitrariness was not invocable.

It may be pointed out that in the cases with which we are concerned there was only a Government Order and the change in the policy is not by any legislation.

அரசாணை மட்டுமே இது : பயிற்றுமொழிக் கொள்கையில் செய்த மாற்றம் சட்ட வடிவில் வரவில்லை.

இவ்வளவு தெளிவான தீர்ப்பு இருந்தும் கல்வி அமைச்சர் அன்பழகன் இதனைச் சட்டமாகக் கொண்டுவர முயற்சி எடுத்தாரா? சட்டமன்றத்தில் மழுப்பியதைத் தான் நான் பார்த்தேன்.

அன்பழகனின் மிகப்பெரிய சறுக்கல் இந்த இடத்தில் உள்ளது. தமிழ் விரும்பிகள் எண்ணிப் பார்க்கவேண்டிய இடம் இது. மீண்டும் ஒரு வரி:

In this context, they also pointed out that the committee itself has in more than two places categorically advised the Government to enact a law.

சட்டம் இயற்றாதது பற்றி தீர்ப்பு மறுபடியும் குறிப்பிடுகிறது.

In this case there is only a government order which difects all schools to teach the subjects in the Tamil / mother - tongue. As there is no domestic law we have to read the accepted international conventions and norms into domestic law. That should mean that parents have the right to choose the kind of education that shall be given to their children. Then the impugned G.O. will be contra and has to be held as not valid in law and enforceable. Accordingly we do so.

மாணவர் தம் பயிற்றுமொழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப் பெற்றோர்க்கு உள்ள உரிமைதனை நிலைநாட்டிட தீர்ப்பு பல பக்கங்களை எடுத்துக் கொள்கிறது.

திரு. சாந்திபூசன் தாய்மொழியைத் தாய்மொழியாகவே விட்டு அடுத்த பகுதிகளை ஆழமாக வாதிட்டிருக்கலாமோ என்று தோன்றுகிறது. தாய்மொழி எது என்பதற்குப் புதுவிளக்கம் தந்து பேசியிருப்பது, அரசின் ஆணைக்கு வலுவூட்டுவதாக இல்லாமல், வேறுதிசையில் விலகிச் செல்ல வழி வகுப்பதாகவே உள்ளது.

If the child is equally familiar with two languages namely the tongue of the mother (say for instance Tamil) and English, the parents will have the absolute and exclusive right to choose the medium in which the child should study the subjects.

முதல் வகுப்பில் சேரும் குழந்தைக்குத் தாய்மொழிதான் பளிச்சென்று வருமா அதற்கு இணையாக ஆங்கிலமும் வருமா?

எல்கேஜி யில்தான் A, B, C, D சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனாலும் 3 வயதுக் குழந்தைக்குத் தமிழும் பளிச்சென்று வரும் ஆங்கிலமும் தமிழுக்கு இணையாக - பளிச்சென்று பேச, எழுத வரும் என்னும் கருத்து நியாயமானதுதானா? எண்ணிப் பாருங்கள்.

கல்லூரிகளில் ஆங்கிலப் பயிற்றுமொழியில் பயில்பவர்கள் சிலர் கூடச் சரளமாக ஆங்கிலத்தில் பேச முடியாமல் தடுமாறுவதைப் பார்க்கிறோம். அறிவாளிகள் நீதிபதிகளின் தீர்ப்பை எண்ணிப் பார்க்கட்டும்.

If the parents are in a transferable job (even any one of them is sufficient) or if the parents desire to move to some other State / abroad for whatever may be the reasons, or if the parents desire to send their children to some other State / abroad to be educatied, in the years to come, then notwithstanding the fact that the children may be less familar with English when compared to the tongue of the mother, the parents will have the absolute and exclusive right to choose the medium in which their children to take up their studies.

வெளி மாநிலங்கட்கு வேலை மாற்றம் பெறுபவர்களுக்காகத்தான் சி.பி.எஸ்.இ பள்ளிகள். மேலும் 5 ஆம் வகுப்போடு படிப்பை நிறுத்தி விட்டுப் போகின்ற பல இலட்சக்கணக்கானவர்கள் ஆங்கிலத்தில்தான் படித்தாக வேண்டும் என்று மாய்ந்தார்களா?

சென்னையைக் கூடப் பார்க்க வாய்ப்பில்லாத பலரை ஆங்கிலப் பள்ளிகளில் போட்டு அமுக்குகிறார்களே - இவர்கள் தான் வெளிமாநிலத்துக்குப் போகப் போகிறார்களா?

ஆறாம் வகுப்பு முதல் ஆங்கிலப் பயிற்றுமொழியில் படிக்க வாய்ப்பு - 3 முதல் ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் படிக்க வாய்ப்பு - இவ்வளவு தந்தும்.

மேலே உள்ள தீர்ப்பு பொருத்தமானதாக உள்ளதா என்று சிந்தியுங்கள்?

Again by a subsequent order, dated 20-4-1994 the State Government cancelled the order, dated 22-4-1994 and directed all the Schools irrespective of the fact when they wer started to switch over to mother tongue medium from English medium. The learned senior counsel appearing for the State did not advance any arguments on this aspect. Consequently, we have to take it that the senior counsel is not disputing this position.

இது கர்நாடக மாநில நிலைமை.

As far as the first point is concerned, it may be pointed out that even the State of Tamil Nadu has not raised any such objection.

Apart from this, the G.O. is vague;

The State while allowing the students, whose mother tongue is not English to study the subjects in Standards I to V in English medium in Anglo Indian and C.B.S.E., Schools, has called upon the students in the Matriculation Schools to study the subjects only in their mother tongue (ie) tongue of the mother.

The right to education is a fundamental right, which includes the right to choose the medium of instruction as well and it can be exercised by the parents on behalf of their children. The impugned G.O. infringes such fundamental right.

தீர்ப்பின் சில பகுதிகளைக் காட்டியிருக்கிறேன். அடுத்த கட்டுரை மேலும் சில விளக்கங்களைத் தருகிறது.

தீர்ப்புப் பற்றி 'நந்தன்' இதழ் தன் ஆசிரியவுரையில் எழுதுகிறது. எழுதுவது ஏப்ரல் 2002 ஆம் ஆண்டில்

''2000-ஆம் ஆண்டில் அப்போதைய தி.மு.க. அரசு தமிழகத்தில் ஐந்தாம் வகுப்புவரை தமிழ் பயிற்றுமொழியாக இருக்கவேண்டும் என்று ஒரு ஆணை பிறப்பித்தது. அதை எதிர்த்து ஆங்கிலவழிப் பள்ளி கல்வி வியாபாரிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க, அந்த வழக்கிலும் தமிழக அரசுத் தரப்பு வழக்கறிஞர் சரியாக வாதாடாததாலும், தமிழக அரசு ஏனோதானே என்று இருந்ததாலும், அந்த ஆணை செல்லாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.''

சாந்தி பூசனுக்கும் இவர்கள் சரியான ஆதாரங்களைத் தரவில்லை. நமது வழக்கறிஞர்களும் சரியாக வாதாடவில்லை என்று நான் மட்டுமா சொல்கிறேன்?

இயல் இருபத்து மூன்று

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிர்ப்பு

தமிழ்வழிக் கல்வி தொடர்பான அரசாணையை எதிர்த்து ஆங்கிலப் பள்ளிகளின் சங்கத்தினர் தொடர்ந்த வழக்கில் மனுதாரரர் சார்பில் வழக்கறிஞர் இராவ் வாதாடினார். அப்போது, பள்ளிக் கல்வித்துறைச் செயலாளராக இருந்த கவுரி சங்கர் 2.12.99 அன்று மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பிய கடிதங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. வழக்கறிஞர் வாதத்திலிருந்தே அதனைத் தெரிந்து கொள்ளுங்கள்.

''தமிழக அரசு கடந்த 2.11.99 அன்று கட்டாய தமிழ்வழிக் கல்வி தொடர்பாக ஒரு அரசாணை வெளியிட்டது. இந்த அரசாணையை எதிர்த்து வழக்கு தாக்கல் - செய்த பிறகு கல்வி துறை செயலாளர் மாவட்ட கல்வி அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பினார். அதில் மேல்நிலை பள்ளி வரை கட்டாய தமிழை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டு உள்ளார். அரசாணையில் 5-ம் வகுப்பு வரை கட்டாய தமிழை அமுல்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. ஆனால் கல்வி துறை செயலாளர் அனுப்பிய கடிதத்தில் மேல்நிலை பள்ளி வரை தமிழை அமுல்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டு இருக்கிறது. இதில் முரண்பாடு இருக்கிறது. இது தொடர்பான கோப்புகளையும் கோர்ட்டு பார்வையிட வேண்டும். இது தவிர மோகன் கமிஷன் விசாரணையின் கோப்புகளையும் வரவழைத்துப் பார்வையிட வேண்டும்'' (தினகரன் 10.3.2000).

சிறுபான்மை பள்ளிகளின் சார்பில் வழக்கறிஞர் அபிபுல்லா பாட்சாவின் விவாதம் இது.

''தமிழக அரசு உத்தரவு சிறுபான்மை பள்ளிகளின் அதிகாரங்களுக்கு எதிராக உள்ளது. சிறுபான்மை பள்ளிகள் எந்த மொழியில் கல்வி தங்கள் பள்ளிகளில் கற்பிக்க வேண்டும் என்று முடிவு செய்யஅரசுக்கு உரிமையில்லை. இதில் அரசு தலையிட்டது தவறு. ஆகவே தமிழக அரசு உத்தரவை ரத்து செய்யவேண்டும்''.

எனக்கு எழும் ஐயம் இதுதான்.

ஏற்கெனவே நீதிபதி மோகன் குழு அறிக்கை அமைச்சரவையில் வைக்கப்பட்டது. அதனைச் செயற்படுத்த இயலாத நிலை இருப்பதாக

அவையில் எடுத்துச் சொன்னவர் கௌரிசங்கர்தான். அதுகுறித்து மற்றோர் இடத்தில் அலசுவோம்.

அவரது கருத்தைக் கண்டித்த முதல்வர் கௌரிசங்கர் கருத்தை வழிமொழிந்த பேரா. கருத்துக்கும் எதிர் விடை தெரிவித்துவிட்டு, ஆணை பிறப்பிக்க வழி வகுத்தார். 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வி என்பதற்கே தயங்கிய பள்ளிக் கல்விச் செயலர் எம்.ஏ. கௌரிசங்கர், அது தொடர்பாக ஆங்கிலப் பள்ளிகள் எதிர்ப்புத் தெரிவித்தும் நீதி மன்றத்துக்குச் செல்லும் நிலை நேர்ந்துள்ள ஒரு எதிர்ச் சூழ்நிலை எழுந்துள்ளபோது, அதன் நிலை என்ன என்பதைப் பார்த்து ஒருவேளை அவர்கள் வழக்குத் தொடர்ந்தால் அதனை எப்படி எதிர் கொள்வது என்பதில்தானே பள்ளிக் கல்விச் செயலர் கவனம் செலுத்தியிருக்கவேண்டும்!

1 முதல் 5 ஆம் வகுப்பு வரை தமிழ் வழி என்பதுதான் அரசின் ஆணை. அதன்பின் 6 முதல் 12 வரை மெட்ரிக் பள்ளிகள் ஆங்கிலப் பயிற்றுமொழியில் செல்லலாம் என்றும் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

அப்படியிருந்தும் 2.12.99 அன்று மேல் நிலைப்பள்ளிவரை கட்டாயத் தமிழை அமுல்படுத்த வேண்டும் என்று மாவட்ட கல்வி அதிகாரிகளுக்கு ஏன் கடிதம் எழுதவேண்டும்? 19.11.99 அன்றுதான் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 26.11.99 அன்றுதான் அரசாணையே இதழ்களில் வந்தது. 6 நாட்களுக்குள் ஏன் இந்த அவசரக் கடிதம்?

1. இதனைப் பள்ளிக் கல்விச் செயலரான கௌரிசங்கர் யாரையும் கேட்காமல் தன்னிச்சையாகவே எழுதினாரா?

2. அல்லது கல்வி அமைச்சர் அன்பழகன் குறிப்பின்படி எழுதினாரா?

3. நாம் பிறப்பித்த ஆணையின் செயற்பாடு, எதிர்ப்பு, அதனை எதிர்கொள்வது என நம்முன்னே பலவேளைகள் இருக்கும்போது ஏன் இந்தக் கடிதம்?

4. மேல்நிலைப் பள்ளி வரை தமிழைக் கட்டாயப்படுத்த வேண்டும் என்று யாரும் கோரிக்கையும் வைக்கவில்லை. அதனைக் குறிப்பிட்டு எழுத இப்போது தேவையும் இல்லை.

5. என் துறையில், தமிழ் வழி தொடர்பாக இருந்தாலும் அறநிலையத்துறையில் தமிழில் வழிபாடு தொடர்பாக இருந்தாலும் எனக்குத் தெரியாமலே, என் ஒப்புதல் பெறாமலோ எந்த ஓர் அரசாணையும் பிறப்பிக்கப்பட்டதில்லை. பகுதி II திட்டத்தில் 62 பள்ளிகளுக்கு ஒப்புதல்

கிடைத்தது. அதற்கான அரசாணைகள் அன்றைய செயலாளர் வை. பழனிச்சாமி அவர்களால் ஒரே நாளில் பிறப்பிக்கப்பட்டன. ஆனால் கொள்கைமுடிவு தொடர்பாக அமைச்சரின் ஒப்புதல் இன்றி எந்த ஆணையும் பிறப்பிக்க முடியாது.

மீண்டும் கேட்கிறேன்.

கௌரி சங்கர் தானே கடிதம் எழுதினாரா? அன்பழகன் ஆணையின்படி கௌரிசங்கர் கடிதம் எழுதினாரா? ஒரு மோசமான சூழ்நிலையை உருவாக்கிய பெருமகன் யார்? அதைத்தானே வழக்கறிஞர் இராவ் நீதிமன்றத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார். மறைமுகமாக, நாம் பிறப்பித்த ஆணை (19.11.99) எப்படியாவது இலதாக (இரத்தாக) வேண்டும் என்ற தீய எண்ணத்தோடு பள்ளிக் கல்வித்துறை செயற்பட்டுள்ளதாகவே நான் கருதுகிறேன்.

தோழர்கள் சிந்திக்கவும்.

செயற்படுத்த வேண்டிய செயலரும், அமைச்சருமே மறைமுகமாக இந்தக் கீழறுப்பு வேலையைச் செய்தார்களா?

இது இப்படியிருக்க பிரேமா நந்தகுமார் போன்ற ஒரு சில எழுத்தாளர்கள் தமிழுக்கு எதிராகவே எழுத நேரும்போது, சிலர் அருமையான பதிலடி கொடுத்திருக்கிறார்கள். மயிலாடுதுறை தி. நெடுஞ்செழியன் கொடுத்த அடி இது. (தினமணி 10.3.2000)

''பாடநூல்கள் தமிழில் தயார்

கட்டுரையாளர் பிரேமா நந்தகுமார் சிறந்த மொழிபெயர்ப்பாளராக அறியப்பட்டவர். மொழியாளுநராக இருந்து வருபவர். உயர் கல்வி முழுவதும் தமிழில் அளிக்க முடியும் என்பது நடைமுறையில் சாத்தியமில்லை என அவர் கூறியிருப்பது ஆச்சர்யத்தையும் கூடவே ஆழ்ந்த வருத்தத்தையும் தந்தது.

தமிழ்நாட்டு எல்லையிலிருந்து 18 கடல் மைல் தொலைவில் உள்ள இலங்கையின் வடபுலமான யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் கடந்த 100 ஆண்டுகாலம் சட்டம், மருத்துவம், பொறியியல் மட்டுமல்ல கல்லூரிக் கல்விகளையும் தமிழில்தானே பெற்று வருகிறார்கள்! உயர்கல்வி நடைமுறைக்குச் சாத்தியமில்லை என்றால் தமிழில் சட்டம் பயின்ற ஜி.ஜி. பொன்னம்பலம், விக்டோரியா மகாராணியின் குடும்ப வழக்குரைஞராக உயர்ந்தது எப்படி? தமிழில் மருத்துவம் படித்த பொன். சத்தியநாதன் யாழ்ப்பாணம் மருத்துவத் துறைத் தலைவராக விளங்கி, தற்போது

ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகிறார். இவர் உலகின் விரல்விட்டு எண்ணத் தகுந்த மருத்துவர்களில் ஒருவர். தமிழில் பொறியியல் பயின்ற ஈழத் தமிழர்கள் பலர், அமெரிக்க வான்வெளி ஆய்வு மையத்தில் (நாசா) அறிவியலாளர்களாக இடம்பெற்றிருக்கிறார்கள்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் வ.ஐ.சுப்பிரமணியம் துணைவேந்தராய் இருந்தபோது ஈழத் தமிழரின் அரும் துணையோடு இரண்டாண்டுக்குத் தேவையான மருத்துவம், பொறியியல் பாடங்களைத் தமிழில் நடத்த மொழிபெயர்த்து வைத்துள்ளார். தமிழில் பொறியியல் படிப்பை நடத்த தமிழக அரசு இந்திய தொழில்நுட்பக் குழுவிடம் அனுமதி கேட்டபோது முதலில் 'தமிழில் முடியாது' என்று பதில் தந்தது. 'புத்தகங்கள் தயார்' என்ற போது 'தமிழில் கூடாது' என்றது குழு. மத்திய அரசு அனுமதி தந்தால் தமிழில் மருத்துவம், பொறியியல் நடத்த முடியும். தமிழில் ஈழத்தில் படிக்க முடிகின்றபோது இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் ஏன் முடியாது?''.

பள்ளிக்கல்வியில் மட்டுமல்ல உயர் கல்வியிலும் கேடுவிளைவிக்க கௌரி சங்கரும் பிரேமா நந்தகுமாரும் என்றைக்கும் தயாராக இருக்கிறார்கள் என்றே கொள்ள வேண்டும். தங்களுக்கு வேண்டும் போதெல்லாம் செயலாளர்களை இடமாற்றம் செய்யும் முதல்வர், கௌரிசங்கரை இடமாற்றம் செய்யாதது ஏன்?

தீர்ப்புக் குறித்து இரண்டு மூன்று பேருடைய கருத்துகளை 'இதயம் பேசுகிறது' (30.4.2000) இதழ் வெளியிட்டிருந்தது. தமிழ் - தமிழர் இயக்கப் பொதுச் செயலாளரும், தாய்த்தமிழ்ப் பள்ளிகளின் மூலவருமான தியாகு கூறுகிறார்.

''இது ஒரு மோசமான தீர்ப்பு.

'குழந்தை எந்த மொழியில் கல்வி கற்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை பெற்றோருக்குத்தான் உண்டு' என்று நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. உண்மையில் அப்படி உண்டா? டான்பாஸ்கோ போன்ற ஒரு பள்ளியில் போய், 'என் குழந்தைக்குத் தமிழில் பாடம் சொல்லிக் கொடுங்கள்' என்று பெற்றோர் சொன்னால் அந்தப் பள்ளி நிர்வாகம் அதை ஒப்புக்கொண்டு தமிழில் பாடங்களை நடத்திவிடுமா? ஒரு நாளும் அப்படி நடக்காது.

இங்கே பெற்றோர்கள் என்ற போர்வையில் கல்வி வியாபாரிகள் ஆங்கிலத்தைத் திணிக்கிறார்கள். அதை சென்னை உயர்நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பைப் படித்து, அறிவுலகம் கை கொட்டிச் சிரித்துக் கொண்டிருக்கிறது. சில நாட்கள் முன்பு இதே நீதிபதிகள் தமிழ் வழிக் கல்வி பற்றிய விவாத்திற்கே வாய்ப்பூட்டு போட்டதையும் நாம் அறிவோம். மெத்தப் படித்த இந்த நீதிபதிகள் தங்களை ஆங்கிலப் பிரியர்களாகவும், கல்வி வியாபாரிகளின் சார்பாளர்களாகவும் அப்பட்டமாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு அநேகமாய் மேல்முறையீடு செய்யக்கூடும். அத்தோடு, தன் கடமை முடிந்ததென்று தூங்கிப் போய்விடக் கூடாது. ஆங்கிலக் கல்வி வியாபாரிகளின், ஆங்கிலக் கல்விச் சார்பாளர்களின் சவாலைச் சந்திக்க வேண்டும்.

தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவாக மக்கள் இயக்கம் நடத்த அரசு முன்வரவேண்டும். தமிழ் வழிக் கல்வியில் நம்பிக்கை கொண்ட இயக்கங்கள், அரசியல் கட்சிகள், தமிழர் அமைப்புகள் அனைத்தும் தமது முயற்சிகளை முடுக்கிவிட வேண்டும். ஒரு நீண்ட போராட்டத்திற்குத் தயாராக வேண்டும்.

தமிழக அரசு இன்னொன்றும் செய்யலாம். உயர்நீதிமன்றத் தீர்ப்பைப் பற்றிக் கவலைப்படாமல், தமிழ்வழிக் கல்வி தொடர்பாக அறிஞர் குழு பரிந்துரைத்தவாறு இதற்காக ஒரு சட்டம் இயற்றலாம். உடனே இப்படி ஒரு சட்டத்தை இயற்றுவதற்கு தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும். அப்போது தமிழ் தழைத்தோங்கும். ஆங்கில வியாபாரிகள், அவர்களுக்கு ஆதரவான நீதிபதிகள், கல்விப் பரம்பரையின் மேட்டுக்குடிச் சார்பாளர்கள் அனைவரும் வாயடைத்துப் போவர்''.

அடுத்து கல்லூரிப் பேராசிரியரும் கவிஞருமான இன்குலாப் பேசுகிறார் :

''இந்தத் தீர்ப்பு வெகுஜனமக்களின் உரிமைகளுக்கு, நலன்களுக்கு எதிரான தீர்ப்பு. மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் என்பவையெல்லாம், அதிகார மையம் கொண்ட இந்த நீதிமன்றம் போன்ற நிறுவனங்களால் வெகுஜனமக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு சொல்லப்படுவதில்லை.

அனைவருக்குமான கல்வி உரிமைதான் அடிப்படையானது என்பதை நீதிமன்றம் கவனித்திருக்கவேண்டும். இந்தத் தீர்ப்பு அந்த அடிப்படை உரிமையைப் பார்க்கத் தவறிவிட்டது. தாய்மொழிக் கல்வி வேண்டும் என்பது மொழிப் பற்றினால் எழுகிற கோரிக்கை மட்டுமல்ல. எல்லோருக்கும் தரமான கல்வி வேண்டும் என்கிற மனித நேயத்தில் எழுகிற கோரிக்கை. பல

சமயங்களிலும் நீதிமன்றத் தீர்ப்புகளில் மனிதநேயம் வறண்டு போய்க் கிடக்கிறது என்பதற்கு இந்தத் தீர்ப்பு ஒரு எடுத்துக்காட்டு.

1950-களில் இதேபோன்று ஒரு தீர்ப்பை இட ஒதுக்கீட்டுக்கு எதிராகச் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியது. இட ஒதுக்கீடு அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என்று அப்போது நீதிமன்றம் கூறியது.

அந்தத் தீர்ப்பு வந்தபோது அது சட்டப்படி சரியாக அமைந்திருப்பதாகக் கூறப்பட்டது. அப்போது தந்தை பெரியார், இந்தச் சட்ட நுணுக்கங்களைப் பற்றிக் கவலைப்படாமல் சட்டத்தைக் கொளுத்தும் போராட்டத்தில் ஈடுபட்டார். தமிழ்நாடே கொந்தளித்தது. மத்திய அரசு தமிழ் மக்களின் போராட்டத்துக்குப் பணிந்தது.

மீண்டும் இப்போது அத்தகையதொரு போராட்டம் நடத்தினால்தான் நீதிமன்றம் நடத்திய அநீதியைச் சரி செய்ய முடியும்.

இன்று தீர்ப்பு வழங்கிய இந்த நீதிபதிகள் யார் என்று தெரியவில்லை. ஆனால் அரசு நீதிமன்றம் போன்ற அதிகார நிறுவனங்கள் எல்லாம் ஆதிக்க வர்க்க அதிகாரத்தின் சரணாலயங்களாகவே நீடிக்கின்றன என்பதை இத்தீர்ப்பு தெளிவுபடுத்துகின்றது.

அரசைப் பொறுத்தவரையில், இதைச் சட்டமன்றத்தில் விவாதித்து ஒரு தீர்மானமாக ஆக்கியிருக்கலாம். அதைச் செய்யவில்லை. இதன் மூலம் உண்மையிலேயே இந்த அரசுக்குத் தாய்மொழிக் கல்வியில் அக்கறை இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. அக்கேள்வியை இத்தீர்ப்பு மறைமுகமாக எழுப்பியுள்ளது.

நீதி மன்றமும் சட்டமன்றமும் உணரத் தவறிய ஓர் உண்மையை நாம் மக்கள் மன்றத்திடம் சொல்ல வேண்டும். அனைவருக்கும் பாகுபாடற்ற கல்வி வேண்டும் என்பதே அது.''

இவை இரண்டும் தீர்ப்புக்கு எதிரானவை. அரசு ஆணைக்குச் சார்பானவை. அரசு ஆணைக்கு எதிராகவும், தீர்ப்புக்குச் சாதகமாகவும் பேசுகிறார் வழக்கறிஞர் நளினி சிதம்பரம் (ஆம்! நமது இன்றைய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் துணைவியார் தான்)

''தமிழக அரசு போட்டிருக்கிற தமிழ்வழிக் கல்விக்கான ஆணை மாணவர்களின் நலன் குறித்த ஆணை அல்ல. இது தாய்மொழியை வளர்ப்பதற்காகப் போட்டப்பட்ட ஆணை.

தமிழ்நாட்டில் தமிழ் ஒரு பாடமொழியாக இருப்பதை யாருமே எதிர்க்க வில்லை என்பதை மறந்துவிடக்கூடாது. ஆனால், எல்லாப் பாடங்களையுமே தமிழ் வழியாகவே பயில வேண்டும் என்கிற ஆணையைத்தான் எதிர்க்க வேண்டிய கட்டாயம் வந்தது. இன்றைக்கு உலகம் இருக்கிற சூழலில், ஆங்கிலம் பயில்வது என்பது மாணவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு மிகவும் அவசியமாகிவிட்டது. ஆங்கிலமும் நமது இந்திய மொழிகளில் ஒன்றாக இருக்கும்போது, அதை அந்நிய மொழிபோல பாவித்தல் நல்லது அல்ல. இன்று, அமெரிக்காவில் கம்ப்யூட்டர், மருத்துவம், விஞ்ஞானம் போன்ற பல்வேறு துறைகளில் இந்தியர்கள் கொடிகட்டிப் பறக்கிறார்கள் என்றால், அதற்கு ஆங்கில வழிக் கல்வியே முக்கிய காரணமாகும். கிராமப்புறங்களில் ஆங்கில வழியில் படிப்பதற்கு மாணவர்கள் சிரமப்படுகிறார்கள் என்றால் அவர்கள் சுலபமாக ஆங்கிலம் பயில வழி செய்ய வேண்டுமே தவிர, ஆங்கிலத்தில் படிக்கக்கூடிய மாணவர்களைத் தடுப்பது தவறு. எந்த மொழியில் படித்தால் தமது குழந்தைகளுக்கு நல்லது என்று பெற்றோர்கள்தான் முடிவெடுக்க வேண்டுமே தவிர, அரசாங்கம் அல்ல.

தமிழ்ப் பண்பாடு வளர, தமிழை ஒரு கட்டாயப் பாடமாக்கினால் அதை யாரும் எதிர்க்கப் போவதில்லையே? தமிழ்ப்பற்று என்பது அவசியமான - அதே வேளையில் அதை ஒரு வெறியாக - நாம் மாற்றிவிடக்கூடாது. தமிழை நேசிக்கிற நாம், கட்டாயமான இந்தித் திணிப்பைக் கடுமையாக எதிர்க்கவில்லையா?

சமீபத்தில் மதுரையில் நடைபெற்ற உயர்நீதிமன்றக் கட்டட அடிக்கல் நாட்டு விழாவில் நமது தமிழக முதல்வரே ஆங்கிலத்தில்தான் பேசினார் என்பதற்காக, இதைக் குறை கூறமுடியுமா? என்ன? உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்றத்திலெல்லாம் முழுக்க முழுக்க ஆங்கிலத்தில்தானே பணிகள் நடைபெறுகின்றன? எனவே தங்கள் எதிர்கால நலன் கருதி மாணவர்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற விரும்புவதைத் தவிர்க்க இயலாது. அதுவே இந்தப் பிரச்சினையின் முடிவு.''

கருத்துகள் எப்படி அமைந்துள்ளன என்று படிப்பவர்கள் தெரிந்து கொள்வதற்காகத்தான் இவர்களை மேற்கோள் காட்டியுள்ளேன்.

நாமக்கல் போன்ற இடங்களில் உயர்நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்து 23 அமைப்புகள் ஒன்று கூடிப் பேரணியும் ஆர்ப்பாட்டமும் நடத்தியுள்ளன. (5.6.2000) இதுதொடர்பாக தமிழியக்கக் கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கை இது.

''உயர் நீதிமன்றம் 20.4.2000 அன்று வழங்கிய தீர்ப்பு, தவறான முன்னுதாரணம் மட்டுமன்று அந்நாள் தமிழக வரலாற்றில் ஓர் இருண்ட நாள் என்றும் சான்றோர்கள் கருதுகிறார்கள்.

இத்தீர்ப்பு இந்திய சுதந்திரத்தின் அடிப்படைகளையே கேள்விக்குறியாக்குகிறது; மக்களின் உரிமைகளைக் கேலி செய்கிறது; இயற்கை நியதிகளையும் அறிவியல் ஆய்வுகளையும் புறக்கணிக்கிறது; தாய்மொழிக் கல்விக்கு ஆதரவு தெரிவித்த டாக்டர். இராதாகிருட்டிணன், விநோபா, தாகூர், பாரதி போன்ற ஞானிகளையும் பழிக்கிறது.

மொழிவாரி மாநிலங்கள உருவாக்கப்பட்ட நோக்கமே தாய்மொழியை வளர்க்கத்தான். மாநில அரசு தெளிவான மொழிக்கொள்கையை வகுத்துச் செயல்படும்போது அதில் நீதிமன்றம் தலையிடக்கூடாது என்று 1994-இல் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தாய்மொழியில் கல்வி அளிப்பது உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டிருக்கும் இயல்பான ஒன்று.

இந்தியாவைச் சரியாகப் புரிந்துகொண்டவர் காந்தியடிகள். அவர் கருத்துக்கு நேர் எதிர்மாறானது இத்தீர்ப்பு. ஒரு குழந்தையின் மனவளர்ச்சிக்காகத் தாய்மொழியல்லாத ஒரு மொழியை அக்குழந்தைமீது திணிப்பதைத் தாய்மொழிக்கு எதிரான பாவமாகக் கருதுகிறேன். ஆங்கிலக்கல்வி தேவை என்பதற்காகத் தாய்மொழியைக் காவு கொடுக்க வேண்டாம். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பல ஆண்டுகள் செலவிட்டு ஓர் அன்னிய மொழியைப் படிப்பதால் பெற்ற நாட்டுக்கு ஏற்படும் பெரும் இழப்பை யாரால் ஈடுசெய்ய முடியும்? என்று கேட்டார் காந்தியடிகள்.

அன்னிய மொழியில் கற்பது இயற்கைக்குப் புறம்பானது. இளம் பிஞ்சு மனங்களுக்குக் கடும் சுமை ஏற்படுத்தக்கூடியது. இயந்திரத்தனமாது, கொடுமையானது, தாய்மொழி வளர்ச்சியைப் பாதிக்கக் கூடியது என்று கன்னட மொழியில் கல்வி குறித்த ஒரு வழக்கில் காந்தியடிகளை மேற்கோள் காட்டி உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியுள்ளது.

தாய்மொழிக்கல்விக்கு அரசு ஆணை பிறப்பிக்க அரசியல் சட்டம் பிரிவு 14 உட்பட ஒன்றும் தடையாக இருந்ததில்லை. 162, 350 பிரிவுகளில் ஆணையிட அரசுக்கு அதிகாரம் உள்ளது. அரசின் கொள்கை முடிவில் நீதிமன்றம் குறுக்கிட முடியாது. தாய்மொழியில் கற்றுக்கொடுக்க மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு. 1892 முதல் அரசு தமிழ்வழிக் கல்வியைச் செயல்படுத்தி வருகிறது என்று தீர்ப்புகள் உள்ளன. நாட்டு நலன், மக்கள்

நலன், உச்ச, உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் அத்தனையும் புறந்தள்ளிவிட்டு ஆங்கிலப் பள்ளிக் கொள்ளை வணிகர்கட்காக வரிந்துகட்டிக் கொண்டு வழங்கியிருக்கும் தீர்ப்பு, அநீதியானது! அக்கிரமமானது!

12-ஆம் வகுப்புவரை தமிழ்வழியில் கற்றவர்கள் மருத்துவராக, பொறியியல் வல்லுநராக, கணினி வல்லுநராக அமெரிக்காவிலும் பிற நாடுகளிலும் சிறப்பாகப் பணிசெய்ய வில்லையா? ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் கூட இவர்களைப்போல் ஆற்றலும், திறமையும் பெறவில்லையே! இவர்களுக்கு அடிப்படை தமிழ் வழிக் கல்வி அல்லவா?

மெட்ரிக் பள்ளி நிர்வாகிகள் நீதிபதி மோகன் குழுவிடம் கூறிய கருத்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அப்படியிருந்தும் அவர்கள் கருத்துகளை அரசு கேட்கவில்லை என்று கூறும் நீதிமன்றம், தமிழ் அமைப்புகளின் கருத்துகளைக் கேட்க மறுத்து மனுக்களைத் தள்ளுபடி செய்தது என்ன நியாயம்?

எந்த மொழியில் படிக்கலாம் என்று பெற்றோர்களே தீர்மானிக்கலாம் என்றால் எந்தப் பாடத்தைப் படிப்பது என்றும் அவர்களே தீர்மானிக்கலாமே! சிலப்பதிகாரத்திற்குப் பதில் திரைப்படப் பாடலை எடுத்துப் படிக்கலாமா? நோயாளிகளே மருந்தினைத் தீர்மானிக்கலாமே! நாட்டு நலன், தேசியநலனைவிடத் தனிமனித நலன் மேலானதா? நாட்டு நலனைக் கருத்தில் கொண்டு செயல்படுவதுதான் ஒரு ஜனநாயக அரசின் கடமை. அக்கடமையை நிறைவேற்றத்தான் அரசு ஆணை பிறப்பித்தது, அது தவறா?

எனவே, தீர்ப்பு நாட்டு நலனுக்கன்று, ஆங்கிலப்பள்ளி, கல்வி வாணிகர்களுக்காக!''

தமிழ்ச் சான்றோர் பேரவை 5.6.2000 அன்று நீதிமன்றம் முன்பே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது. அது தொடர்பாக நிறுவனர் நா. அருணாசலம் விடுத்த அறிக்கை விறுவிறுப்பாகவே உள்ளது.

''தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்'' என்றார் பாரதியார்.

''தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே'', என்று ஆணையிட்ட பாவேந்தர், ''தமிழகத்தின் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை'' என்று உள்ளம் நொந்தார். ''தமிழ்க்கல்வி

தமிழ்நாட்டில் கட்டாயம் என்பதொரு சட்டம் செய்யவேண்டும்'' என்றார். ''அலுவல் பார்க்க, ஆங்கில நூல் அறிவுக்குச் சான்றிருந்தால் அதுபோதும்'' என்று அறிவுரைத்தார்.

மொத்தமுள்ள அத்தனை தமிழரில் ஒரு சிலரே தமிழை வாழ்விக்க, வளர்த்தெடுக்க முனைந்து செயற்பட்டனர். தமிழால் வாழ்வு பெற்றவர்கள், வளம் பெற்றவர்கள், அரசுரிமை பெற்றவர்கள் எல்லாரும் தேனொக்கும் செந்தமிழைச் சிதைத்தழிக்கத் துணை போனார்கள்.

தமிழுக்காகப் -தமிழ்காக்கப் - பாடுபட்ட போராடிய தமிழமைப்புகளை ஒன்று கூட்டித் தமிழ் காக்கும் களமாகத் தமிழ்ச் சான்றோர் பேரவை கண்டோம். தமிழே ஆட்சிமொழி, தமிழே பயிற்றுமொழி தமிழே நீதிமன்ற மொழியாக ஆக்க வேண்டுமென மூலைமுடுக்கெல்லாம், தெருமுனைகளெங்கும் பரப்புரைத்தோம்.

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழே பயிற்று மொழியாக அனைத்து வகைப் பள்ளிகளிலும் செயற்படுத்த வேண்டும் எனத் தமிழ்நாட்டரசை வற்புறுத்தி **நூற்றிரண்டு தமிழறிஞர்கள் தமிழ் ஆர்வலர்கள் ''உயிரைத் தருகிறோம் உயிர்த் தமிழைப் பயிற்றுமொழியாக்கு''** எனப் பட்டினி கிடந்து உயிர்விடத் துணிந்து ஒன்று கூடிய பின்னரே அரசு ஒட்டை உடைசலாக ஓர் ஆணை வெளியிட்டது. நாம் கேட்டது சட்டம். அரசு போட்டதோ ஆணை. அந்த அவல ஆணையைக் கூட ஆங்கிலக் கல்வி வணிகர்கள் எதிர்த்து வழக்குத் தொடுத்தனர். தமிழ்ச் சான்றோர் பேரவையும் ஏனைய தமிழமைப்புகளும் தமிழார்வலர்களும் எதிர் வழக்குத் தொடுத்தோம்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் நம்முடைய வழக்கைக் கேட்டு அறியாமல் நம்மைப் புறந்தள்ளி ஆங்கிலக் கல்வி வணிகர்க்கு ஆதரவாக, தமிழர்களின் கழுத்தை நெரிப்பதற்கான - மானத்தைப் பண்பாட்டை அழித்தொழிப்பதான ஒரு கொடுமையான தீர்ப்பை அறிவித்தார்கள்.

நேர்மையற்ற தீர்ப்பை எதிர்ப்பது மானமுள்ள ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்'' என்று அழுத்தம் திருத்தமாக அழைப்பு விடுத்துள்ளார் அவர்.

இந்நிலையில் வழக்கறிஞர் வெ. கிருட்டிணமூர்த்தி (கோடம்பாக்கம்) உயர்நீதிமன்றத் தீர்ப்புக் குறித்து (24 பக்கங்களில்) அலசி ஆராய்ந்துள்ளார்.

அரசாணையை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில் கூறப்படும் காரணங்கள் 25 என நீதிமன்றம் கூறுகிறது.

இறுதியாக ஆறு பிரிவுகட்குள் தீர்ப்பின் வாசகங்கள் அமைந்துள்ளன.

1. அரசாங்கம் இந்த ஆணையைப் பிறப்பிக்கும் போது சம்பந்தமுள்ள காரணிகளைக் கணக்கில் கொள்ளாமலும், தொடர்பில்லாத விஷயங்களைக் கணக்கில் கொண்டும் ஆணை பிறப்பித்துள்ளது. அது மட்டுமின்றி இந்த அரசாணை தெளிவில்லாமலும் உள்ளது.

2. சர்ச்சைக்குரிய இந்த அரசாணை தன்னிச்சையானது. எனவே அரசியல் சாசனத்தின் 14வது ஷரத்தை மீறுவதாக உள்ளது. எவ்வாறெனின் அரசாங்கம் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் மற்றும் மத்திய போர்டு பள்ளிகளில் (C.B.S.E.) ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொள்ளாத 1 முதல் 5 வகுப்பு மாணவர்களை ஆங்கிலத்தில் பயில அனுமதிக்கும் அதேசமயம், மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பயிலும் மாணவர்களைத் தங்கள் தாய்மொழியில் அதாவது தாய்பேசும் மொழியிலேயே பயில வேண்டுமென்று கட்டாயப் படுத்துகிறது.

சி.பி.எஸ்.இ. (C.B.S.E.) பள்ளிகள் நடுவணரசின் இணைப்புப் பெற்று நடைபெறுபவை. அவற்றில் மும்மொழித் திட்டம் உண்டு. காரணம் அவை மத்திய கல்வித்துறையின் கொள்கைப்படி அமைபவை. அதேபோல் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் 41 மட்டுமே. பெயரே ஆங்கில இந்தியப் பள்ளிகள். மேலும் இதுபோன்ற பள்ளிகள் இப்போது தொடங்கப்படுவதே இல்லை. எனவேதான் 194 சிபிஎஸ்இ (C.B.S.E.) பள்ளிகட்கும் 41 ஆங்கிலோ இந்தியப் பள்ளிகட்கும் அரசு தன் ஆணையை விரிவுபடுத்தவில்லை. ஆனால் நீதிமன்றம் இந்தக் கோணத்தில் எடுத்துக் கொள்ளாமல், மெட்ரிக் பள்ளிகளில் மட்டும் நாங்கள் கட்டாயப் படுத்துவதாக தெரிவித்துள்ளன. ஏற்கெனவே மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் தொடர்ந்த வழக்கில் எங்களை மட்டும் கட்டாயப் படுத்திவிட்டு மெட்ரிக் பள்ளிகளை விட்டுவிட்டார்கள் என்று கூறப்பட்டிருந்தது. நீதிமன்றம் இதனை ஏற்கவில்லை. ஆனால் நீதிமன்றம் இதற்கு நேர்மாறாகத் தீர்ப்புச் சொல்லுகிறார்கள்.

3. அரசாணை பிறப்பிக்கப்படும்போது பள்ளி நிர்வாகத்தினருக்கு தங்கள் கருத்தைக் கூற எவ்வித வாய்ப்பும் அளிக்கவில்லை. நியாயமான எதிர்பார்ப்பு என்ற கொள்கை அடிப்படையில் இதனை அரசாங்கம் செய்திருக்க வேண்டும்.

இது முற்றிலும் தவறு ஆகும். மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி, தமிழ் மற்றும் ஆங்கிலப் பள்ளிகளின் சங்கத்தினர் ஆகிய பலரும் நீதிபதி மோகன் குழுவினைச் சந்தித்துத் தங்கள் கருத்துகளைத்

தெரிவித்துள்ளார்கள். ஆனால் நீதிமன்றம் அவர்கட்கு வாய்ப்பே அளிக்கவில்லை என்று கூறுவது வியப்பாகத்தான் உள்ளது.

4. சர்ச்சைக்குரிய இந்த அரசாணை அரசியல் சாசனத்தின் 162வது ஷரத்தின்படி பிறப்பிக்கப்பட்டுள்ளது. உலகு தழுவிய மனித உரிமைப் பிரகடனம் (மாணவர்களின் உரிமைகளுக்கான ஒப்பந்தம்) ஷரத்து 26(3)ன்படி தமது குழந்தைகளுக்கு எத்தகைய கல்வியை வழங்க வேண்டும் என்ற விஷயத்தில் பெற்றோருக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இந்த முடிபை மத்திய அரசாங்கம் 11-12-92 அன்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டதன் மூலம் அது சட்டபூர்வமானதாகி விடுகிறது. அரசியல் சாசனத்தின் 162வது பிரிவின்படி பிறப்பிக்கப்படும் எந்த ஆணையும், சட்டரீதியான சக்தியுடையதல்ல. அதற்கு மாறான எந்த உள்நாட்டுச் சட்டமும் இயற்றப்படாத நிலையில் மேலே குறிப்பிட்ட உரிமைப் பிரகடனத்தின் 26(3) ஷரத்தே சட்ட பூர்வமாக செல்லத்தக்கதாகும்.

இது தொடர்பாக வ.அய். சுப்பிரமணியம் தந்த எதிருரையில் தெளிவான விளக்கம் உள்ளது. யுனெஸ்கோதான் கல்வித் தொடர்பான முடிவுகளை எடுப்பது. அதன் கருத்துரைகளை வ.அய். சுப்பிரமணியம் எடுத்து வைத்துள்ளார். ஆனால் நீதிமன்றம் யுனெஸ்கோவின் கருத்து பற்றியே எதுவும் எடுத்துக் கொள்ளவுமில்லை. யுனெஸ்கோவின் கருத்து நமது வழக்கறிஞர்களால் எடுத்து வைக்கப்பட்டதா என்றும் தெரியவில்லை.

5. கல்விக்கான உரிமை அடிப்படை உரிமையாகும். இது பயிற்சி மொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை உள்ளடக்கியதாகும். தங்கள் குழந்தைகளின் சார்பாக அந்த உரிமையைப் பயன்படுத்தும் உரிமை பெற்றோர்களுக்கு உண்டு. தாவாவுக்குள்ளான அரசாணை அவர்களது அந்த அடிப்படை உரிமையை மறுதளிப்பதாக உள்ளது.

இதிலும் வ.அய். சுப்பிரமணியம் விளக்கம் சரியாக உள்ளது.

6. இந்திய அரசியல் சாசனம் ஷரத்து 30(1) ன்படி சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த உரிமையை தாவாவுக்குள்ளான இந்த அரசாணை மீறுகிறது. ஏனெனில் இந்த அரசாணை அவைகள் தங்களது பயிற்சி மொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை மறுதளிக்கிறது.

இதுகுறித்து வெ.கி., பெ.மணியரசன் இருவரது கருத்துகளும் எப்படியுள்ளன?

வெ.கி. கூறுகிறார்.

''அரசியல் சாசனத்தின் 30(1) ஷரத்து சிறுபான்மை மக்கள் கல்வி நிறுவனங்கள் நடத்தவும், வழி வகை செய்கிறது. அவைகள் தரமான முறையில் நடத்தப் படுமானால் அவைகளுக்கு அங்கீகாரமும் இணைப்பும் வழங்கப் பட வேண்டும் நிறுவனங்கள் நடத்தும் உரிமையில் பயிற்சி மொழி எதுவென முடிவு செய்யும் உரிமை அந்த நிறுவனங்களுக்கே உண்டு. சட்டப்படியான வரைமுறைக்கு உட்பட்டே ஒழுங்கு முறைகள் இந்நிறுவனங்கள் மீது புகுத்த இயலும். தமிழ் அல்லது தாய்மொழியிலேயே கல்வி புகட்டப்பட வேண்டும் என்று கூறுவது ஒழுங்கு படுத்துவதல்ல அவைகளின் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதாகும்'' என்று உயர்நீதி மன்றத் தீர்ப்பு கூறுகிறது.

வேலூர் மிஷன் ஆஸ்பத்திரி வழக்கில் இதே வாதம் வைக்கப்பட்டது. உயர்நீதி மன்ற டிவிஷன் பெஞ்சு சிறுபான்மையினர் நிறுவனங்கள், தம்மைத் தாமே ஒழுங்கு படுத்திக் கொள்ளும் உரிமை பெற்றவர்கள் என்றும் அவர்களைப் பொருத்தமட்டில், தொழிற் தகராறு சட்டம் செல்லாது என்றும் தீர்ப்பளித்தது. ஆனால் உச்ச நீதி மன்றம் இத்தீர்ப்பைத் தள்ளுபடிசெய்து விட்டது. தொழில் தகராறு சட்டம் மைனாரிட்டி உட்பட எல்லா நிறுவனங்களுக்கும் பொருந்தும் எனத் தீர்ப்பளித்தது. அதே போன்று அரசியல் சாசனம் 162ஆவது ஷரத்தின் கீழ் இயற்றப்படும் ஒழுங்கு முறைகள் அல்லது சட்டங்கள் மைனாரிட்டி நிறுவனங்களுக்கும் பொருந்தும் என்பதே நிபுணர்கள் கருத்தாகும்.

அரசாங்கத்தின் இந்தக் கொள்கை யாருக்காக உருவாக்கப்பட்டுள்ளது என்று காண நீதிமன்றம் தவறிவிட்டது. அரசாணை இவ்விஷயத்தில் செல்லாது என்று கூறும் நீதி மன்றம் இந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகளும், நர்சரி பள்ளிகளும் அரசாணைகளின் மூலமே உருவாக்கப்பட்டன. ஒழுங்கு படுத்தப்பட்டன என்பதைக் காணத் தவறிவிட்டன. உதாரணமாக மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான ஒழுங்கு முறை விதிகள் அரசாணை எண் GO MS No.1720 Education dt.25.7.77ன்படி உருவாக்கப் பட்டதாகும். எனவே அரசாணையால் உருவாக்கப்பட்ட ஒழுங்கு முறைகள் வேறொரு அரசாணையால் மாற்றப் படலாம் என்பது பெறத்தக்கது.

பெ.ம. கூறுகிறார்

''அரசமைப்புச் சட்ட விதி பதினான்கிற்குப் புறம்பாக உள்ளது அரசாணை என்று மூவர் குழு கூறுகிறது.' சட்டத்தின் முன்பாக யாருக்கும் சமத்துவத்தை மறுக்கக் கூடாது என்கிறது இவ்விதி.

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளும் சி.எ.எஸ்.இ. பள்ளிகளும் ஆங்கில வழியில் நடக்க விதி விலக்குக் கொடுக்கிறது அரசாணை. எனவே சட்டத்தின் முன் சமத்துவம் பேணப்படவில்லை என்கிறது தீர்ப்பு.

ஆங்கிலோ இந்திய மொழிச் சிறுபான்மையினர்க்கு அரசமைப்புச் சட்டப்படி சலுகை அளிக்க வேண்டியிருப்பதால் அவர்கள் தம் தாய்மொழியில் நடத்தும் பள்ளிகளுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டது. இது விதி 14க்கு முரணானதல்ல. விதி 30(1) க்கு உட்பட்டது இது. சிறுபான்மையினர்க்கு சலுகை அளிக்கவில்லை என்று வாதம் புரியும் இதே நீதிபதிகள் ஆங்கிலோ இந்தியச் சிறுபான்மையினர்க்கு அளித்த சலுகையை எதிர்க்கிறார்கள். முன்னால் போனால் கடிப்பது, பின்னால் வந்தால் உதைப்பது என்பதாக இவர்கள் வாதம் அமைந்துள்ளது.

சி.பி.எஸ்.இ. பள்ளிகள் நடுவண் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகள் என்ற காரணத்திற்காக விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

இது ஒரு பக்கம் இருக்க, மாநில அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகளுக் கிடையே பாரபட்சம் - சமத்துவமின்மை காட்டப்படவில்லை என்பது தான் இங்கு கவனிக்கத்தக்கது.

இயைபற்ற அரசமைப்பு விதிகளையெல்லாம் இழுத்துப் போட்டுக் கொண்டு, பொருந்தாத உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை வைக்கோல் போர் போல் குவித்து வைத்துக் கொண்டு 186 பக்கங்களுக்கு நீட்டி இப்பெரிய தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.''

தாய்மொழி எது என்பது பற்றியே பெரிய விவாதம் நடத்தப்பட்டுள்ளது. 'வீட்டில் இவர்கள் வேறு மொழிகளைப் பேசினாலும் நாம் ஏற்கனவே கூறியபடி தமிழக மக்கள், தமிழில் அவர்களது குழந்தைகளால் பயில இயலாதா? யாருக்குமே தாய்மொழியாக இல்லாத ஆங்கிலத்தில் இக்குழந்தைகள் பயில்வது, சாத்தியமென்றால் தமிழகத்தில் பேச்சுமொழியாக சமுதாய மொழியாக, ஆட்சி மொழியாக உள்ள தமிழில் பயில இக்குழந்தைகளால் இயலாதா? இயலும்' என்கிறார் வெ.கி. பிரச்சினையே இல்லாத ஒன்றில் பிரச்னை இருப்பதாகக் கூறுபவர்கள் நீதிபதிகள்தான். மேலும், 'அரசு தரப்பில் தரப்பட்ட உறுதிமொழிப் பத்திரத்தில் தாய்மொழி என்பது தாய்பேசும் மொழி என்றே கூறப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கத் தரப்பில் வாதாட வந்த திரு. சாந்தி பூஷண் அவர்கள் தாய்மொழி என்பது குழந்தைக்கு மிகப் பரிச்சயமான மொழி என்ற விளக்கத்தை அளித்து குழப்பத்தைத்

தொடங்கி வைத்தார். நீதிபதிகள் இக்கருத்தைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டனர். மிகப் பரிச்சயமான மொழி என்பதைத் தீர்மானிப்பது யார் என்ற கேள்வியை எழுப்பி பெற்றோர்களே அதைத் தீர்மானிக்கும் உரிமை பெற்றவர்கள் என்று கூறியிருக்கிறார்கள்' என்கிறார் வெ.கி.

ஒரு தமிழர் ஒரு சீனப் பெண்ணை மணந்துகொள்ளலாம். உருதுபேசும் இசுலாமியர் ஒருவர் தெலுங்குபேசும் ஒரு பெண்ணை மணந்து கொள்ளலாம். இவை நிகழ்வது இயற்கைதான். ஆனால் இப்படிப்பட்டவர் குடும்பத்தில் யார் முடிவெடுப்பது என்பது குறித்தா 'தாய்மொழி' குறித்து முடிவெடுப்பது? தமிழ் நாட்டில் - 'தமிழ்' அடிப்படையில் அமைந்த மொழிவாரி மாநிலத்தில் - இப்படியொரு தேவையில்லாத ஆராய்ச்சியைச் செய்து அதனடிப்படையிலும் தீர்ப்பை இழுத்திருப்பது வியப்பாக உள்ளது. எல்லா மாநிலங்களிலும் சிறுபான்மையினர் பலர் இருந்தே பேசும் பெரும்பான்மையர் மாநிலமாக அது பிரகடனப்படுத்தப்படுகிறது.

அந்த வகையில் வெ.கி. கருத்து சரியானதே

''சுதந்திரப் போராட்ட காலத்திலேயே மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப் படவேண்டும் என்ற கோரிக்கையும், அந்தந்த மாகாணத்தில் அம்மொழியே ஆட்சி மொழியாகவும் பயிற்சி மொழியாகவும் விளங்க வேண்டும் என்ற கோரிக்கையும் தீர்மான வடிவம் பெற்றதை உலகறியும், இக்கோரிக்கைகள் செயல் வடிவம் வெற வேண்டும் என்பதற்காக பலர் தங்கள் இன்னுயிரையும் ஈந்தார்கள். முடிவில் மொழிவழி மாகாணங்கள் பிரிக்கப்பட்டன. பெரும்பான்மை மக்களிடையே வழக்கில் உள்ள மொழியின் அடிப்படையிலேயே மொழிவழி / மாகாணங்கள் பிரிக்கப்பட்டன. இதனைச் சிறு குழந்தை கூட அறியும். பெரும்பான்மையினரின் மொழியே ஆட்சி மொழி, நீதிமன்ற மொழி, அவ்வாறிக்க பெரும்பான்மை மக்கள் பேசும் மொழியே பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் எனக் கோருவதில் என்ன தவறு? தமிழ்நாட்டில் தமிழே பயிற்சிமொழி என்பது மொழிவழி மாகாணப் பிரிவினைக்கு முரணானதல்லவே?''

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும்; உருது, தெலுங்கு, மலையாளம், கன்னடம் பேசுவோர் பலர் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளை நடத்தி வருகின்றனர். அவை தமிழ்நாட்டில் 1008 மட்டுமே. அதற்கான விவரம் இது.

''தமிழகத்தில் தாய்மொழி அல்லாத மொழி கற்பிக்கப்பட்டுவரும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகள் எண்ணிக்கை.

மொழி	தொடக்கப் பள்ளிகள்	நடுநிலைப் பள்ளிகள்	மொத்தம்
தெலுங்கு	437	52	489
மலையாளம்	125	32	157
உருது	259	31	290
கன்னடம்	56	5	61
இந்தி	8	--	8
அராபிக்	1	1	2
குஜராத்தி	1	--	1
மொத்தம்	887	121	1008

இவர்கள் தத்தம் தாய்மொழியையே பயிற்றுமொழியாகக் கொண்டு படிப்பவர்கள். இவர்களை மனத்திற் கொண்டுதான் 'தமிழ் அல்லது தாய்மொழி' என்று போடப்பட்டது. நீதிமன்றமும் இதைக் கணக்கில் கொள்ளவில்லை. அரசு வழக்கறிஞர் இதனை அவையில் எடுத்து வைக்கவில்லை. இது தெரியாததால்தான் வெ.கி.யும், தமிழ் அல்லது தாய்மொழி என்ற பதப்பிரயோகம் வந்தது எவ்வாறு என்று கேட்கிறார்.

அடுத்து, தங்கள் குழந்தைகளுக்கு எந்த வகையில் கல்வி வழங்கவேண்டும் என்பதனை முடிவு செய்யும் உரிமை பெற்றோர்க்கு உண்டு என்கிறது தீர்ப்பு. இது குறித்து வெ.கி. விரிவாகவே ஆராய்கிறார்.

''அரசியல் சாசனத்தின் ஷரத்து 51, ஷரத்து 350கி மற்றும் சர்வதேச மனித உரிமை மாநாட்டு முடிவுகளின் 26(3) பிரிவு ஆகியவற்றை உயர்நீதிமன்றம் விவாதித்து அவற்றின் அடிப்படையில் சர்ச்சைக்குரிய அரசாணை செல்லாது என அறிவித்துள்ளது.

அரசியல் சாசனத்தின் மேற்படி ஷரத்துகள் பின்வருமாறு கூறுகின்றன.

51(சி) வரன்முறைப் படுத்தப்பட்ட மக்களிடையே ஒருவரோடொருவர் உறவு கொள்ளும் போது அவர்கள் சர்வதேச சட்டம் மற்றும் ஒப்பந்தங்களில் ஒப்புக் கொள்ளப்பட்ட கடமைகளை மதித்து நடக்குமாறு அரசு பார்த்துக்கொள்ள முயல வேண்டும்.

350கி சிறுபான்மை மொழிபேசும் மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு தத்தம் தாய்மொழியில் ஆரம்ப நிலை கல்வி அளிப்பதற்கு ஒவ்வொரு மாநில அரசும், அம்மாநிலங்களில் உள்ள ஸ்தல ஸ்தாபனங்களும் முயல வேண்டும். இவ்வகையில், ஜனாதிபதி அவர்கள் எந்த ஒரு மாநில அரசையும் அத்தகைய வசதி செய்யுமாறு உத்தரவிடலாம்.

26(3) சர்வதேச மனித உரிமை ஒப்பந்தம்

தங்கள் குழந்தைகளுக்கு எத்தகைய கல்வி வழங்க வேண்டும் என்று தீர்மானிக்கும் உரிமை பெற்றோருக்கு உண்டு.

இம்மூன்று ஷரத்துக்களையும் நீதிமன்றம் நுணுகி நுணுகி ஆராய்ந்துள்ளது. சர்வதேச மனித உரிமை மாநாட்டு ஒப்பந்தத்தில் இந்திய அரசு 11.12.92 இல் கையெழுத்து இட்டு உள்ளது. அதனால் அதற்கெதிராக வேறெந்த சட்டமும் இயற்றப்படாததால் மனித உரிமை ஒப்பந்தத்தின் ஷரத்துக்களே இங்குச் சட்டரீதியான அங்கீகாரம் பெற்றுவிட்டதாகவும் நீதிமன்றம் கூறியுள்ளது. (What kind of education) என்பதைப் பற்றித் தான் கூறப்பட்டுள்ளதே தவிர, எந்த மொழி பயிற்சி மொழியாக இருக்கவேண்டும் என்பது பற்றி எந்தப் பேச்சும் இல்லை).

இன்னொன்றையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

அதாவது அந்த ஷரத்தில் கூறப்பட்டுள்ள விஷயத்துக்கு எதிராக எந்த ஒரு சட்டமும் இயற்றப் படாததால் மனித உரிமை மாநாட்டு முடிவே சட்டப் படி செல்லுபடி ஆகும் என்று நீதிமன்றம் கூறுகிறது. அரசாங்கம் இயற்றியுள்ள அரசாணை சட்டம் அல்ல என்றும் எனவே அது செல்லுபடி ஆகாது என்றும் கூறுகிறது.

ஆனால் நீதிமன்றமும் சரி அரசுத் தரப்பிலும் சரி ஒரு அடிப்படையான சட்டப்பிரச்சனையைக் கவனத்தில் கொள்ளாமல் விட்டுவிட்டனர்.

அதாவது, அரசியல் சாசனத்தின் 253வது ஷரத்தை யாரும் பரிசீலனை செய்யவில்லை.

அப்பிரிவு பின்வருமாறு கூறுகிறது.

ஷரத்து 253, சர்வதேச ஒப்பந்தங்களை அமுலாக்குவதற்கான சட்டம் இயற்றுதல் ‘‘இந்தப் பிரிவில் இதற்கு முன்னால் என்ன கூறப்பட்டிருந்தபோதிலும், சர்வதேச மாநாடுகளில் பிறநாட்டுடனோ, பிற நாடுகளிலோ செய்து கொள்ளப்படும் உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள்,

முடிவுகள் போன்றவற்றை அமுலாக்கும் வகையில் சட்டம் இயற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உண்டு''.

அரசியல் சாசனத்தின் இந்தப் பிரிவு மிகத் தெளிவானது. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது கூட, அரசியல் சாசனம் பாராளுமன்றத்திற்கு வழங்கியுள்ள அதிகாரத்தின்படி, 11.9.92ல் மத்திய அரசாங்கம் கையெழுத்திட்ட மனித உரிமைகள் (குழந்தைகள் உரிமை) பற்றிய சர்வதேச ஒப்பந்தத்தை அமுலாக்கும் வகையில் பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட வேண்டும். அப்படி ஒரு சட்டம் (Act) பாராளுமன்றத்தில் இயற்றப்படாத நிலையில் மேற்படி சர்வதேச ஒப்பந்தத்தின் ஷரத்துகள் இந்திய மக்களைச் சட்டப்படி கட்டுப்படுத்தக் கூடியதல்ல.

அரசியல் சாசனத்தின் இந்த ஷரத்தைச் சரிவரக் கணக்கில் கொள்ளாத நீதிமன்றம் வண்டிக்கு எதிராகக் குதிரையைப் பூட்டுகிறது. அது கூறுகிறது:-

''உள்நாட்டு சட்டத்திற்குப் புறம்பாக இல்லாத எந்த ஒரு சர்வதேச மாநாட்டு ஒப்பந்தமும் உள்நாட்டுச் சட்ட நூல்களில் சேர்க்கப் பட்டதாகவே கருதப்படும். அந்த வகையில் இவ்வழக்கைப் பொருத்த மட்டில் ஒரே ஒரு அரசாணை மட்டுமே உள்ளது. அது எல்லாப் பள்ளிகளிலும் தமிழ் / தாய்மொழியிலேயே பாடங்கள் பயிற்றுவிக்கப் படவேண்டும் என்று கூறுகிறது (இந்த அரசாணை சட்டமல்ல.) எனவே உள்நாட்டுச் சட்டம் ஏதும் இல்லாத நிலையில், சர்வதேசீய அளவில் நம்மால் ஒப்புக் கொள்ளப் பட்ட முடிவுகளையும் நடைமுறைகளையும் நம் நாட்டுச் சட்டங்களில் காண வேண்டியுள்ளது. இதன் பொருள், தங்களது குழந்தைகளுக்கு எத்தகைய கல்வியை அளிக்க வேண்டும் என்று தீர்மானிக்கும் உரிமை பெற்றோர்களுக்கு உரியது என்பதே ஆகும். அவ்வாறாயின், சர்ச்சைக்குரிய அரசாணையானது சட்டத்துக்கு முரணானது, சட்டப்படி செல்லுபடி ஆகாதது. அமுல்படுத்த இயலாது ஆகும். நாமும் அவ்வாறே கொள்கிறோம்.''

இதனைச் சற்று விளக்குவோம். சர்வதேச மாநாட்டின் முடிவுகளுக்கு எதிராக சட்டம் எதுவும் இல்லாததால், நாம் ஒப்புக் கொண்ட சர்வ தேச முடிவையே நமது சட்டமாகக் கொள்ள வேண்டும் என்கிறது உயர்நீதி மன்றம்.

ஆனால் அரசியல் சாசனத்தின் 253வது ஷரத்து சர்வதேச மாநாட்டின் முடிவுகளை இந்தியாவில் அமுலாக்க வேண்டும் என்றால் பாராளுமன்றத்தில் அதற்குரிய சட்டம் இயற்றப்படவேண்டும் என்று கூறுகிறது. அத்தகைய சட்டம் இயற்றப்படாத நிலையில் மாநாட்டின் முடிவுகள் இந்த தேசத்தில் செல்லுபடியாகாது என்பது தெளிவு.

எனவே உயர்நீதி மன்றத்தின் மேற்படி தீர்ப்பு அரசியல் சாசனத்தின் 253 ஷரத்துக்கு முரணானதாகும். எனவே அது தவறான தீர்ப்பாகும்.''

சட்ட வல்லுநரே தக்க விளக்கம் நல்கியிருப்பதால் அதற்குமேல் நமது விளக்கம் தேவையில்லை.

அடுத்து, குழுவில் பங்குபெற்ற உறுப்பினர்கள் மற்றும் தலைவர் குறித்தே நீதிமன்றம் அலசுகிறது. தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பெயர்களை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இது குறித்து வெ.கி. சரியாக வாதிடுகிறார்.

''அந்தக் கமிட்டியில் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் உச்சநீதி மன்ற நீதிபதி திரு.எஸ். மோகன் குறித்தும், டாகடர் தமிழண்ணல், இன்னும் பிற தமிழறிஞர்களைச் சேர்த்து குறித்து மிகத் தாராளமாகத் தமது கருத்துக்களை வழங்கியுள்ளனர். இதில் டாக்டர் தமிழண்ணல் அவர்கள் தமிழைப் பயிற்சி மொழியாக்கவில்லை என்றால் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்தாரென்றும் அதனால் அவரைச் சேர்த்தது தவறானது என்றும் கூறுகிறது. இதன் பொருள் கமிட்டியில் உள்ளவர்கள் தமிழ் ஆர்வலர்கள் தமிழின் பால் பக்கச் சாய்வு கொண்டவர்கள் என்று அது கருதுகிறது. ஆனால் அதே சமயம் டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் எப்பொழுதோ எட்டு ஆண்டுகளுக்கு முன் கூறிய கருத்தைத் தமது தீர்ப்புக்கு ஆதரவாகக் கொள்கிறது. டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் கூறியதாகக் கூறப்படும் கருத்து வருமாறு:-

''இத்தகைய சிக்கலான பிரச்சினையைக் கையாளும்பொழுது யதார்த்தமான அணுகுமுறையைக் கையாள வேண்டும்.

எல்.கே.ஜி. வகுப்பிலிருந்து சந்தேகமில்லாமல் தமிழ் ஒரு கட்டாய பாடமாக ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமே. பெற்றோர்கள் விரும்பினால் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக அனுமதிக்கலாம்.''

இக்கருத்தைச் சுட்டிக் காட்டிய உயர்நீதி மன்றம் ஆங்கிலப் பயிற்சி மொழிக்கு உள்ள தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது.

ஒரு வாதத்திற்காகக் கூறுவதானால், இக்கூற்றின்படி டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் ஆங்கிலப் பயிற்சி மொழியை ஆதரிப்பவர் என்றாகிறது. எனின் அவரைக் குழுவில் சேர்த்ததன் மூலம் ஆங்கிலம் வேண்டுவோரின் கோரிக்கையைப் பிரதிபலிக்கும் ஒருவர் குழுவில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்றுதானே பொருள்? அதனால் அந்தக் குழு பக்கச்

சாய்வு கொண்ட குழு என்பது தவறாகி விடுகிறதல்லவா? நீதிமன்றம் கூட முன்னுக்குப் பின் முரணான கருத்தைக் கூற முடியாதல்லவா? (It can't blow hot and cold)''

அடுத்து சிறுபான்மை நிறுவனங்கள் கல்வி நிலையங்களை நடத்துவது குறித்த பிரச்னை. தீர்ப்பையும் வெ.கி.யின் விளக்கத்தையும் பாருங்கள்.

''அரசியல் சாசனத்தின் 30(1) ஷரத்து சிறுபான்மை மக்கள் கல்வி நிறுவனங்கள் நடத்தவும், வழி வகை செய்கிறது. அவைகள் தரமான முறையில் நடத்தப் படுமானால் அவைகளுக்கு அங்கீகாரமும் இணைப்பும் வழங்கப் பட வேண்டும் நிறுவனங்கள் நடத்தும் உரிமையில் பயிற்சி மொழி எதுவென முடிவு செய்யும் உரிமை அந்த நிறுவனங்களுக்கே உண்டு. சட்டப்படியான வரைமுறைக்கு உட்பட்டே ஒழுங்கு முறைகள் இந்நிறுவனங்கள் மீது புகுத்த இயலும். தமிழ் அல்லது தாய்மொழியிலேயே கல்வி புகட்டப்பட வேண்டும் என்று கூறுவது ஒழுங்கு படுத்துவதல்ல அவைகளின் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதாகும்'' என்று உயர்நீதி மன்றத் தீர்ப்பு கூறுகிறது.

வேலூர் மிஷன் ஆஸ்பத்திரி வழக்கில் இதே வாதம் வைக்கப்பட்டது. உயர்நீதி மன்ற டிவிஷன் பெஞ்சு சிறுபான்மையினர் நிறுவனங்கள், தம்மைத் தாமே ஒழுங்கு படுத்திக் கொள்ளும் உரிமை பெற்றவர்கள் என்றும் அவர்களைப் பொருத்தமட்டில், தொழிற் தகராறு சட்டம் செல்லாது என்றும் தீர்ப்பளித்தது. ஆனால் உச்ச நீதி மன்றம் இத்தீர்ப்பைத் தள்ளுபடிசெய்து விட்டது. தொழிற் தகராறு சட்டம் மைனாரிட்டி உட்பட எல்லா நிறுவனங்களுக்கும் பொருந்தும் எனத் தீர்ப்பளித்தது. அதே போன்று அரசியல் சாசனம் 162ஆவது ஷரத்தின் கீழ் இயற்றப்படும் ஒழுங்கு முறைகள் அல்லது சட்டங்கள் மைனாரிட்டி நிறுவனங்களுக்கும் பொருந்தும் என்பதே நிபுணர்கள் கருத்தாகும்''.

மேல்மட்டக் குழுவின் நடவடிக்கைகள் இயற்கை நீதிக்குப் புறம்பானவை என்கிறது தீர்ப்பு. இதிலும் வெ.கி. தன் விவாதத்தை அழகாகவே வைக்கிறார்.

''அரசாங்கத்தின் இந்தக் கொள்கை யாருக்காக உருவாக்கப்பட்டுள்ளது என்று காண நீதிமன்றம் தவறிவிட்டது. அரசாணை இவ்விஷயத்தில் செல்லாது என்று கூறும் நீதி மன்றம் இந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகளும், நர்சரி பள்ளிகளும் அரசாணைகளின் மூலமே

உருவாக்கப்பட்டன. ஒழுங்கு படுத்தப்பட்டன என்பதைக் காணத் தவறிவிட்டன. உதாரணமாக மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான ஒழுங்கு முறை விதிகள் அரசாணை எண் GO MS No.1720 Education dt.25.7.77ன்படி உருவாக்கப் பட்டதாகும். எனவே அரசாணையால் உருவாக்கப்பட்ட ஒழுங்கு முறைகள் வேறொரு அரசாணையால் மாற்றப் படலாம் என்பது பெறத்தக்கது''.

இன்றும் பல பள்ளிகள் அரசின் ஏற்பினை (அங்கீகாரம்) எதிர்பார்த்தே காத்துக் கிடக்கின்றன. அண்மையில், அ.தி.மு.க. ஆட்சியில் சரியான முறையில் வசதி செய்து கொடுக்காமல் ஏனோதானோ என்று நடத்தி பண (வசூல்) வேட்டையை மட்டும் கவனித்த 460 மெட்ரிகுலேசன் பள்ளிகளின் ஏற்பசைவு (Recognition) இலதாக்கப்பட்டுள்ளது. எனவே அரசாணைகள் அவற்றுக்கு உயிர் தருகின்றன. அரசாணைகள் தாம் அவற்றின் குடலையும் உருவுகின்றன. நீதியரசர்கள் இவற்றைக் கவனிக்கவில்லை.

ஏன் இவ்வளவு வேகம் ! அவசரம் !
எப்படி இத்தனை பள்ளிகள் !

நான் சொன்னால் உடனே சிலர் சொல்லக் கூடும் ! 'அவர் இப்போது எதிர் முகாமில் இருப்பதால் இப்படிச் சொல்கிறார்' எனலாம். நான் சொன்னதை யாரேனும் மறுக்க முன்வந்தால் மகிழ்வேன். புள்ளி விவரங்கள் புகட்டும் உண்மைகளை ஒளிக்காமல் அவர்கள் சொன்னால் போதும். மகிழ்வேன்.

ஆனால், நடக்காதே !

இதோ? வழக்கறிஞர் வெ.கி எழுதுகிறார் பாருங்கள் !

''எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று முழங்கும் இந்த அரசின் ஆட்சியில் தான் காளான்கள் போல நர்சரி பள்ளிகளும், மெட்ரிகுலேஷன் பள்ளிகளும் உருவாக்கப் பட்டன என்ற உண்மையை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்தில் சென்னை மாகாணத்தைப் பொருத்த மட்டிலும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்ட மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இரண்டே இரண்டுதான். 1977ல் மெட்ரிகுலேசன் பள்ளிகளை ஒழுங்கு படுத்த அரசாணை பிறப்பிக்கப்பட்டு அப்பள்ளிகளை அரசாங்க இயக்கத்தின் கட்டுப்பாட்டில் கொண்டவரப் பட்டது. அந்த ஆண்டே மெட்ரிகுலேசன் பள்ளிகள் 29 ஆக உயர்ந்தது. இது 1987ல் 200 ஆக உயர்ந்தது. ஐந்தாண்டு காலத்தில் அது ஐந்து மடங்காகப் பெருகி 1992ல் அது ஆயிரத்தை எட்டியது. இன்றைய நிலையில் 2000ல் எட்டு ஆண்டுகளுக்குள் மெட்ரிகுலேசன் பள்ளிகளின் எண்ணிக்கை

இரண்டாயிரத்தைத் தாண்டி விட்டது. ஒரு சில ஆண்டுகளில் இத்தனை ஆங்கிலப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப் பட்டதற்கு யார் காரணம்? ஏன்? தமிழை வளர்ப்பதற்காகவே பிறப்பெடுத்தாகக் கூறிக்கொள்ளும் இந்த ஆட்சியாளர்கள் இத்தனை ஆங்கிலப்பள்ளிகளுக்கு ஏன் அங்கீகாரம் அளித்தார்கள்? ஆனால் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பள்ளிகள் எத்தனைக்கு இக்காலகட்டத்தில் அங்கீகாரம் வழங்கப் பட்டிருக்கிறது என்று பார்த்தால் நிலைமை பரிதாபமாகவே உள்ளது. மட்டுமின்றி, இக்கால கட்டத்தில்தான் ஆயிரக்கணக்கான நர்சரிப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. மெட்ரிகுலேசன் பள்ளிகளில் ஆங்கிலமே பயிற்சி மொழி என்று அரசாங்கம் உருவாக்கிய Codeல் ஒழுங்கு முறை விதிகளில் தெளிவாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. (தமிழ்ப் பயிற்சி மொழி பற்றிய G.O. வெளியாவதற்கு சில நாட்களுக்கு முன்னதாகப் பல பள்ளிகளுக்கு இயக்ககம் அவசர அவசரமாக அங்கீகாரம் அளித்தாகவும் தெரிகிறது)

இவ்வாறாக திராவிட இயக்கங்கள் - அவர்கள் மொழியில் கூறுவதானால் அரசு கட்டிலில் ஏறிய காலத்திலிருந்து தான் தனி ஆங்கிலப் பள்ளிகள் உருவாகின. ஆங்கிலமே அவற்றில் பயிற்சி மொழியாக அனுமதிக்கப்பட்டது. இவ்வாறு தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பள்ளிகளைத் திறக்கத் தனியார்களை அனுமதித்து விட்டு ஒரு G.O. மூலம் நிலையை மாற்றுகிறோம் என்று கூறுவது அடிக்கிறாற் போல் அடிக்கிறேன். நீ அழுகிறாற் போல் அழு என்ற பழமொழியையே நினைவுபடுத்துகிறது. இது முட்செடிகளை முள் மரங்களாக, முள் காடாக வளர்த்து விட்டு, அதனை வெறும் பேனாக் கத்தி கொண்டு அழிப்பேன் என்று கூறுவது போல் இருக்கிறது''.

நான் ஏற்கெனவே கூறியபடி 1977இல் 30 மெட்ரிகுலேசன் பள்ளிகள் என்றால் 1996 இல் (அ.தி.மு.க. ஆட்சிக் காலம் வரை) 1427 பள்ளிகள்தான். ஆனால் 'வள்ளல்' அன்பழகன் காலத்தில் 13.5.2001 வரை 3000 பள்ளிகளாயிற்றே? இதைத்தான் வெ.கி.யும் சொல்கிறார்.

''தமிழ்ப் பயிற்சி மொழி பற்றிய G.O. வெளியாவதற்கு சில நாட்களுக்கு முன்னதாகப் பல பள்ளிகளுக்கு இயக்ககம் அவசர அவசரமாக அங்கீகாரம் அளித்தாகவும் தெரிகிறது'' என்கிறார் உண்மைதானே!

முள்காட்டை வளர்த்து விட்டு பேனாக் கத்தியால் அழிக்க முற்படுகிறார் அன்பழகன் என்று குற்றம் சாட்டுகிறார்.

இந்த வழக்கறிஞர் வெ.கி. ஒருவேளை - தமிழ்க்குடிமகனுக்கு வேண்டியவராக இருப்பாரோ என்று கூடச் சிலர் எண்ணலாம்.

2000 ஆகஸ்டு முதல் நாள் வெளியான இந்த நூல் என் பார்வைக்கே வரவில்லை. 'தமிழில் வழிபாடு' நூல் வெளியீட்டுக்காக 20.12.2003 அன்று நான் கோவை சென்றபோது ஒரு நண்பர் இதனைக் கொண்டு வந்து கொடுத்தார். சென்னை வந்ததும் நூலில் உள்ள முகவரிக்கு ஒரு மடல் எழுதினேன்.

ஒரு கிழமை சென்றபின் ஒரு தொலைபேசி அழைப்பு. வழக்கறிஞர் வெ.கி.யின் மகள் பாரதி பேசினார். அவர் சொன்ன செய்தி என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஆம்! வழக்கறிஞர் வெ.கி. இரண்டு மாதங்களுக்கு முன் காலமாகிவிட்டார். அதற்கு மேல் பேசமுடியவில்லை.

ஒரு மிகப்பெரிய சிக்கலை எடுத்துக்கொண்டு அழகாக வாதிட்ட வழக்கறிஞர் வெ.கி.யின் பணிகளுக்குத் தலை வணங்குகிறேன். கடைசிவரை அவர் முகம் பார்க்காமலேயே, அவரது அகத்தைக் கண்டு, அவரது கருத்துகளை இந்த நூலில் பதிவு செய்து அவரை 'வாழ' வைத்திருக்கிறேன்.

'தமிழ்வழிக் கல்வி' க்காக இவ்வளவு வாதிட்ட ஒரு வழக்கறிஞரை இழந்துவிட்டோமே என்ற துயரம் இன்றும் என் மனதை வாட்டுகிறது.

தி.மு.க. ஆட்சியில் தலைகீழ் மாற்றம்

தி.மு.க. ஆட்சியில் 'தமிழ்' எவ்வளவு தலைகீழாகி விட்டது என்பதனை வழக்கறிஞர் வெ.கி. விளக்குகிறார்.

''அறுபதுகளில் தமிழகத்தில் பத்தாம் வகுப்பு வரை தமிழே பயிற்சி மொழியாக இருந்தது. இந்தியாவின் தலை சிறந்த விஞ்ஞானியான அபுல் கலாம் பயின்றது தமிழ் வழிக் கல்வியையே ஏன். . . **இத்தீர்ப்பை வழங்கிய மாண்புமிகு நீதிபதிகள் மூவருமே பள்ளி இறுதி வரை தமிழில் பயின்றவர்களே. . .!**

ஆனால் இன்றுள்ள நிலை என்ன? 1 முதல் 5 வரை எல்லாப் பள்ளிகளிலும் தமிழே பயிற்சி மொழியாக - அதாவது கணிதம், விஞ்ஞானம், வரலாறு ஆகிய பாடங்களின் பயிற்சி மொழியாகத் தமிழே பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்று கூறும் அரசாணை செல்லாது என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளிக்கிறது.

நிலைமையைக் கூர்ந்து கவனியுங்கள்! 1976 வரை எஸ்.எஸ்.எல்.சி. எனப்படும் பள்ளி, இறுதி வகுப்பு வரை தமிழே பயிற்சி மொழியாக இருந்தது. அதற்கு மேல் கல்லூரிகளில் ஆங்கில ஆதிக்கத்தை நீக்கித் தமிழைப் பயிற்சி மொழியாக்க வேண்டும் என்று அன்று முற்போக்காளர்கள் போராடினார்கள்.

திமுக ஆட்சி தோன்றியதிலிருந்து நிலைமை தலை கீழாக மாறியது. தமிழகத்தில் புற்றீசல் போலப் புல புலவென்று ஆங்கிலப் பள்ளிகள் நர்சரிப் பள்ளிகள் என்றும், மெட்ரிகுலேசன் பள்ளிகள் என்றும் தோன்றலாயின. ஆங்கிலம் இல்லையேல் கல்வி இல்லை ஆங்கிலம் இல்லையேல் வேலை வாய்ப்பு இல்லை என்ற மாயை உருவாக்கப் பட்டது. கல்வி வியாபாரமாயிற்று. நர்சரிப் பள்ளிகளிலிருந்து ஆங்கிலமே பயிற்சி மொழியாக்கப்பட்டு நம் தமிழ்க் குழந்தைகள் ''ஐ டோண்ட் நோ டமில்'' என்று பெருமையடித்துக் கொள்ளும் அவலம் நேரிட்டு விட்டது.

இப்போது தமிழகக் கல்லூரிகளில் தமிழே பயிற்சி மொழி ஆக வேண்டும் என்று போராடும் நிலை போய் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாவது வகுப்பு வரையேனும் தமிழில் பாடங்களைச் சொல்லிக் கொடுங்கள் எனக்கெஞ்ச வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம்''.

அதுமட்டுமல்ல கல்வி எப்படி இன்று வியாபாரமாகிவிட்டது என்பதையும் கூறியிருக்கிறார் வழக்கறிஞர் வெ.கி.

இதோ :-

''கல்வி இன்று முற்றிலும் வியாபாரமயமாகி விட்டது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அதிலும் தனியார் வசமுள்ள இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகள் கல்வி நிறுவனங்கள் என்பதைக் காட்டிலும் கொள்ளைக் கூடங்களாகவே விளங்குகின்றன என்பது உலகறிந்த உண்மை. இந்நிலைக்கு ஆளும் கட்சியினரே பொறுப்பேற்க வேண்டும். இந்தப் பள்ளிகளில் சென்னை நகரத்தில் கூட சில பள்ளிகளில் அடிப்படை வசதிகளே இல்லை. அரசு மானியம் ஏதும் அளிக்காததால் இவற்றில் அரசின் கட்டுப்பாடு என்பதே இல்லை. பல பள்ளிகளுக்கு முறையான கல்வித் தகுதி கொண்ட ஆசிரியர்கள் இல்லை. ஆங்கிலப் படிப்பு என்ற மோகத்தில், விளக்கில் வீழும் விட்டில் பூச்சிகளைப் போல பெற்றோர்கள் விழுந்து பணத்தை வாரி இறைக்கிறார்கள். இந்தப் பள்ளிகளில் படிப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகம் என்று நீதி மன்றம் கூறுவது அதிசயத்திலும் அதிசயமாகும்''.

இன்று நம் நிலை என்ன என்று கூறுகிறார் பாருங்கள்.

''உலகெங்கிலும் கல்லூரிப் படிப்பின் எல்லா நிலைகளிலும் தத்தம் தாய்மொழியிலேயே எல்லாவற்றையும் மாணவர்கள் பயின்று கொண்டிருக்கும்போது நாம் முதல் வகுப்பில் தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்க இயலாமல் நொண்டியடித்துக் கொண்டிருக்கிறோம்''.

அண்மையில் நான் சீனாவுக்குச் சென்று திரும்பி வந்தபிறகு எழுதிய 'சீனநாடும் சின்ன நாடும்' எனும் நூலில் எழுதியதை மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன்.

தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வழங்கும் உயர் பட்டம் வரையிலும் சீனாவில் அனைத்தும், சீன மொழியிலேயே சொல்லித் தரப்படுகின்றன. இன்குவா பல்கலைக்கழகத்தில் எம்.பி.பி.எஸ்., பி.இ., பி.எல்., பட்ட வகுப்புகள் உள்ளன. ஆனால் அனைத்தும் சீன மொழியில்தான். மாணவர்களது இறுதி இரண்டாண்டுகளில் மட்டும் ஆங்கிலத்தில் அவர்களது பாடச் செய்திகளை எடுத்துச் சொல்லும் பயிற்சி தரப்படுகிறது. ஆங்கிலம் ஒரு மொழியாக எல்லா இடத்திலும் சொல்லிக் கொடுப்பதால் மாணவர்களுக்கு எந்த இடரும் இல்லை.

இங்கே பாருங்கள்.

5 ஆம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் படித்தால்தான் அமெரிக்காவில் வேலையாம்; இங்கிலாந்தில் பதவியாம்; இப்படிச் சொல்பவர்களையும் பையனோடு சேர்த்து அந்த நாடுகளுக்கே அனுப்பிவிடலாம். வேதநாயகம் பிள்ளை எவ்வளவோ காலத்துக்கு முன்னால் சொன்னார். நாம் காது கொடுக்கவுமில்லை; கவனம் செலுத்தவும் இல்லை. இப்போதாவது செய்ய முடியுமாமென்று பார்ப்போம். (வேதநாயகர் கருத்து மற்றோர் இடத்தில்)

அரசு செய்த தவறு - சட்டம் ஏன் கொண்டு வரவில்லை?

நீதிபதி மோகன் குழுவினர் சட்டம் செய்யவேண்டும் என்று பரிந்துரைத்தும் அரசு சட்டம் இயற்ற வேண்டியதில்லை; அரசாணையே போதும் என்று முடிவெடுத்தது. அதாவது 'கல்வியமைச்சர் இதுவே போதும்' என்று அடித்துச் சொன்னார். உண்மையில் அரசாணை மட்டுமே பிறப்பித்து, மறைமுகமாக 'ஆங்கில மோகி'களாகி அரசை எதிர்ப்பவர்கட்கு உதவி செய்ய எண்ணினாரா? அல்லது உண்மையிலேயே அரசாணையாலேயே இதனை நிறைவேற்றிட முடியும் எனும் நம்பிக்கையில் இதைச் செய்தாரா? இதுகுறித்து மேலும் ஆராயும் முன் வழக்கறிஞர் வெ.கி.யின் திறனாய்வைக் கவனியுங்கள். ஓர் அழகான விளக்கத்தைத் தருகிறார் :

''இந்திய அரசியல் சாசனமே நமது அரசியல் அமைப்பின் தலையாய சட்டமாகும். அதனடிப்படையில் தான் பாராளுமன்ற சட்டமன்றங்கள் சட்டங்களை (Acts) இயற்றுகின்றன. (Rules) அரசாங்கத்தால் Regulations என்றழைக்கப்படும் விதிமுறைகள். இவை விதிகளுக்கு (Rules)

உட்பட்டு (Notification). எல்லாவற்றிற்கும் கீழே அரசாணை, இது G.O. என்றழைக்கப்படும். Rules, Regulations, Notifications, G.O. போன்றவை G.O. ஆகும்.

எந்தெந்த விஷயத்தில் சட்டம் தேவை, எந்தெந்த விஷயத்தில் அரசாணை போதும் என்பது அந்தந்த பிரச்னையின் தன்மையைப் பொறுத்தாகும்.

பயிற்சி மொழிப் பிரச்னையில் அரசாங்கம் ஒரு மேல்நிலைக் குழுவை நீதிபதி மோகன் தலைமையில் அமைத்ததன் காரணமே இப்பிரச்னையின் தீவிரத் தன்மைதான். உச்சநீதி மன்ற நீதிபதியைத் தலைவராகக் கொண்ட அக்கமிட்டி தனது பரிந்துரையில் இப்பிரச்னையில் சட்டமன்றத்தில் சட்டம் (Act) இயற்றப்பட வேண்டும் என்று இரண்டு இடங்களில் தெளிவாகக் கூறியிருந்தும் அரசாங்கம் சட்டம் இயற்றாதது ஏன்? வெறும் G.O. வினால் இப்பிரச்சனையை தீர்க்கலாம் என்று அரசாங்கம் கருதியதற்குக் காரணம் என்ன? அரசாணை போதும் என்று தீர்ப்பு வர வாய்ப்பு உண்டு என அரசாங்கம் கருதவில்லையா? நம்மைப் பொறுத்தமட்டில் அரசாங்கத்தின் இத்தகைய செயல் ஒரு வித ஐயத்தையே எழுப்புகிறது.''

'இந்த ஆயுதங்களில் எல்லாவற்றிலும் வலுக்குறைந்த ஆயுதம் G.O. ஆகும்'' எனும் தொடரைக் கவனியுங்கள். அரசு தன் வலுவைக் குறைத்துக் கொண்டு வழக்காடியவர்கட்கு 'வலு'வை வழங்கியிருக்கிறது. என் ஐயமும் இதுவே! வழக்கறிஞர் வெ.கி.யின் ஐயமும் இதுதான்!

இப்போது நாம் மற்றொன்றையும் கவனிக்கவேண்டும். உயர் நீதிமன்றம் அரசாணை செல்லாது என அறிவித்துவிட்டது. இப்போதாவது கல்வி அமைச்சர் தன் கருத்தை மாற்றிக்கொண்டு சட்டம் கொண்டுவர முயற்சி செய்தாரா? உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கு முன்னால் போதுமான கால இடைவெளி இருந்தது. தீர்ப்பு வெளிவந்த நாள்:20.4.2000 மேல் முறையீடு செய்யப்பட்ட நாள்: 10-7-2002 அப்போது ஏன் சட்டம் கொண்டு வரவில்லை? பலரும் அதைத்தான் சொல்லுகிறார்கள். அரசு சட்டம் நிறைவேற்றட்டும். அதன்பிறகு அச்சட்டம் செல்லுபடியானாலும் தள்ளுபடியானாலும் ''அரசு இறுதிவரை தன் முயற்சியைக் கைவிடவில்லை; ஆணை பிறப்பித்து. பின் சட்டமே இயற்றி ஆவன செய்தது. எனவே அரசின் மீது குற்றம் சொல்வதற்கு ஒன்றுமில்லை'' என்று தமிழ் உலகம் ஒப்புக் கொண்டிருக்கும்.

ஆனால் கல்வி அமைச்சர் சட்டம் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்திற்கே வரவில்லை. தன் தோழமையோடு மெட்ரிகுலேசன்

பள்ளிகளையும், அதன் வருவாயையும் பெருக்கிக் கொண்டே கூட்டத்தினர்க்குச் சாதகமாக இருக்க வேண்டுமே தவிர, தமிழுக்குச் சாதகமாக இருக்கவேண்டும் என்று யார் சொன்னது? யார் கேட்டது?

எனவே சட்டம் இயற்றும் வேலைக்கே இடம் வைக்கவில்லை. உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. வழக்கு உச்சநீதி மன்றத்தில் இருந்த வேளையில். இங்கு சட்டமன்றம் நடைபெற்றது. சட்டமன்றத்தில் சிலர் இதனை வலியுறுத்தினார்கள். ஆம்! தமிழ்வழிக் கல்விக்காகச் சட்டம் கொண்டுவர வலியுறுத்தினார்கள்.

ஏற்கெனவே முரசொலி மாறன் கடும் எதிர்ப்பு; ஒரு கட்டத்தில் கலைஞர் என் மீதே பாய்ந்தார். கருநாடகத்தில் என்ன நடக்கிறது என்பதை யெல்லாம் நான் கவனித்துச் சொல்லவில்லையாம்; முரசொலி செல்வம் அவர்க்குச் சொல்லிவிட்டாராம். அதனால் என்மீதே பாய்ந்தார். ஓடும் மகிழுந்தில் அருகில் இருந்த இரண்டு அமைச்சர்கட்கும் தெரியும். நான் பேச வாயெடுத்த போது அமைச்சர் ஒருவர் தொடையில் அழுத்தி என்னைத் தடுத்ததையும் நான் மறக்கவில்லை.

அன்பழகன் செய்த சதியால் தமிழ்க் கல்வி வாராமலேயே போய்விட்டது. கலைஞருக்கு ஏற்பட்ட குழப்பம், பலபேருடைய வாக்குகளிலும் சேதம் ஏற்பட்டு விடக்கூடாதே என்ற 'கவன'மான அச்சம் ஆகியவற்றால் அவருக்கு எளிதாக இருந்தது என் மீது பாய்வதுதான்;

பாய்ந்தார்; ஆனால் 2001 தேர்தலில் சாய்ந்தார். தமிழ் அன்பர்கள் உண்மைகளை உணர்ந்தால் போதும். இது தொடர்பாக வெ.கி. எழுதுவதையும் கவனியுங்கள்.

''நாம் ஏற்கனவே கூறியபடி உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதியைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவின் அறிக்கையால் சட்டம் இயற்றுவது அவசியம் என்று கூறியுள்ளதை அலட்சியம் செய்த அரசாங்கம் குறைபாடுடைய ஒரு அரசாணையைப் பிறப்பித்து அதில் அரசாணை போதும் சட்டம் வேண்டியதில்லை என்றும் கூறியது. அதன் பொறுப்பின்மையைத் தான் காட்டுகிறது. இது மக்களது ஐயத்தை உறுதி செய்வதாகவும் உள்ளது.

அது மட்டுமின்றி, சட்டம் இயற்றுவது குறித்து எவ்விதப் பரிசீலனையும் செய்யாமல் உச்சநீதி. மன்றத்திற்கு அவசர அவசரமாக மேல் முறையீடு செய்திருப்பதும் நமது ஐயத்தை மேலும் வலுவாக்குகிறது''.

வெ.கி.க்கு மட்டுமல்ல;

தமிழ்க்குடிமகன் உட்பட ஒவ்வொரு தமிழனுக்கும் இந்த ஐயம் இருக்கிறது.

இந்தத் தீர்ப்பு குறித்து பெ.ம. கூறுவதைக் கவனியுங்கள்.

''நீதி வழங்கினால் மட்டும் போதாது, நீதி வழங்கிய தோற்றம் முக்கியம் என்பார்கள். தமிழ் வழிக் கல்விக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் நீதியும் இல்லை, நீதி வழங்கியதற்கான தோற்றமும் இல்லை.

சிறந்த நீதிபதிகள் எழுதும் தீர்ப்புகள் ஆய்வுக் கட்டுரை போல் இருக்கும். சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஏ.எஸ். வெங்கடாசல மூர்த்தி, எஸ். ஜெகதீசன். என். தினகர் ஆகிய மூவரும் 20-04-2000 அன்று வழங்கிய தீர்ப்புரை வழக்குரைஞர் ஒருவரின் வறட்டுத்தனமான வாதுரை போல் உள்ளது''.

இதில், பெ.ம. முக்கியமாக வாதிடுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது 'நீதிபதிகள் ஒருபக்கச் சார்பு' தான் அவர் கூறுகிறார்.

''மெட்ரிகுலேசன் தரப்பில் வந்தவரையெல்லாம் (31 பேர்) வாதியாக ஏற்றுக்கொண்ட மூன்று நீதிபதிகள் அடங்கிய முழு அமர்வு மன்றம் தமிழ் வழிக் கல்விக்கு ஆதரவாகப் பிரதிவாதிகளாகச் சேர மனுச் செய்த, தமிழ அரசு அல்லாத அனைவரையும் பிரதிவாதிகளாக அனுமதிக்க மறுத்து விட்டது. பிரதிவாதியாக முதலில் ஏற்கப்பட்ட தமிழ்ச் சான்றோர் பேரவையும் பின்னர் நீக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளின் மூலம் முழு அமர்வு மன்றம் ஒருதலைபட்சமாக இருக்கிறது என்ற தனது அடையாளத்தை எடுத்த எடுப்பிலேயே வெளிப்படுத்திக் கொண்டது. இவ்வாறாக அது தமிழ் வழிக் கல்விக்கு எதிராக மெட்ரிகுலேசன் பள்ளி முதலாளிகளுக்கு ஆதரவாக செயல்படத் தொடங்கியது.''

எடுத்த எடுப்பிலேயே இப்படி நடந்துகொண்ட நீதிபதிகள் குழு பின்னர் எழுப்பப்பட்ட வாதங்களையும் இந்தக் கோணத்தில்தானே வடிவமைத்துக்கொள்ளும்!

அப்படியிருந்தும் வழக்கறிஞர் கே. சந்துரு அருமையான முறையில் வாதிடுகிறார்.

''வழக்குரைஞர் கே. சந்துரு தமக்கு பேசக் கிடைத்த ஒரே ஒரு வாய்ப்பில் இந்த அரசு ஆணை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள்

தொடர்புடையதே தவிர. இதில் மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகளுக்கும் ஒன்றும் பாதிப்பில்லை, அவர்களது கல்வி நிறுவனங்களை மூடும்படி இந்த ஆணை கூறவில்லை. எனவே மெட்ரிகுலேசன் நிர்வாகிகளை 'பாதிக்கப்பட்ட' நபர்களாகக் கருதி இதில் வாதிகளாகச் சேர்க்கக்கூடாது, அவர்களுக்கு Locus standi கிடையாது'' என்று பெ.மணியரசன் சொல்கிறார்.

''ஆனால் நீதிபதிகள் தமிழ்வழிக் கல்வி கோருவோரை வெளியே அனுப்பி விட்டு ஆங்கில வழிக் கல்வி கோருவோரை அரவணைத்துக் கொண்டனர்'' என்கிறார்.

மெட்ரிக் பள்ளித் தரப்பினரை ஏற்ற நீதிபதிகள் 'அவர்களும் பெற்றோர்களே' என்றனர். ஆனால் தமிழ்வழிக் கல்வி ஆதரவாளர்களை ஏற்கவில்லை. இவர்கள் பெற்றோர்களாக நீதிபதிகளுக்குத் தெரியவில்லையா? பெ.மணியரசன் சொல்கிறார்.

''தமிழ் வழிக் கல்வி ஆதரவானவர்களுக்குப் பிள்ளைகளே பிறக்கவில்லை என்றும் அவர்கள் பெற்றோரே அல்ல என்னும் மூன்று நீதிபதிகளும் முழு திருப்தியடைந்தார்கள் போலும்! வாழ்க அவர்களது ஆராய்ச்சி!''

அவர்களது ஒருபக்கச் சார்புக்கு மற்றோர் எடுத்துக்காட்டு.

''இவ்வழக்கு முடியும் வரை தமிழ் வழிக் கொள்கையினை ஆதரிக்கும் தமிழக முதல்வர் உள்ளிட்டு யாரும் தமிழ்வழியை ஆதரித்துக் கூட்டங்கள் நடத்த. அறிக்கைகள் விடத் தடை விதிக்க வேண்டும்'' என்பது மெட்ரிக்/ பள்ளிகளின் சார்பில் வைக்கப்பட்ட கருத்து.

நீதிபதிகளோ அதனை ஏற்று ''வழக்கு முடியும் வரை தமிழ் வழிக் கல்விக்கு ஆதரவாகவோ எதிராகவோ அறிக்கைகள் விடவோ. பேசவோ கூடாது என்று ஆணையிட்டனர்''.

பெ.மணியரசன் கூறுகிறார்.

''மெட்ரிகுலேசன் முதலாளிகள் விருப்பப்படி இம்மூன்று நீதிபதிகளும் நடந்துகொண்டனர் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும் திறந்த நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கில் எடுத்து வைக்கப்படும் வாதங்களை வெளியில் கூறக் கூடாது என்று சட்டம் எதுவும் இல்லை''என்கிறார்.

குழுவின் மீதே குற்றம் சாட்டி நீதிபதிக் குழு விரிவாகத் தீர்ப்பு எழுதுகிறது. அது பற்றித் திறனாய்கிறார் பெ.மணியரசன் - படியுங்கள்.

''தமிழ் வழிக் கல்வியை செயல்படுத்துவது குறித்துப் பரிந்துரைகள் வழங்க நீதிபதி மோகன் தலைமையில் தமிழக அரசு அமைத்த குழு தக்க குழு அல்ல என இந்நீதிபதிகள் தீர்ப்புரையில் கூறுகின்றனர். (தீர்ப்புரை பக்.41-46). உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி எஸ். மோகன், அவர் உச்ச நீதிமன்றத்தில் ஏதோ ஒரு வழக்கில் தாய்மொழிக் கல்விக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்தாராம்; அதனால் அவரைத் தமிழ் வழிக் கல்விக் குழுவில் தலைவராகப் போட்டிருக்கக் கூடாது என்று கூறுகிறார்கள். நீதிபதி மோகன் எந்தத் தீர்ப்பில் என்ன கூறினார் என்பதை விளக்காமல் மொட்டையாக ஏதோ ஒரு தீர்ப்பில் தாய்மொழிக்கு ஆதரவாகக் கருத்துக் கூறினார் என்று விமர்சிப்பது இம்மூவரின் ஒருதலைச் சார்பான உள்நோக்கத்தையே அம்பலப்படுத்துகிறது.

நீதிபதி மோகன் குழு அமைக்கப்பட்டது. தமிழ் வழிக் கல்வி தேவையா, தேவையில்லையா என்று ஆராய்வதற்கல்ல; தமிழ் வழிக் கல்வியை எவ்வாறு செயல்படுத்துவது என்பதை ஆராயவே!

குழுவின் இன்னொரு உறுப்பினரான தமிழண்ணல் மீது பாய்கிறார்கள் மூன்று நீதிபதிகளும். தமிழ் வழிக் கல்வி கோரிப் பட்டினிப்போராட்டம் நடத்தியவர் எவ்வாறு ஆய்வுக் குழுவில் இருக்கலாம் என்று கேட்கிறார்கள். அரசு ஆணை 324 நாள் 19-11-99 என்ன கூறுகிறது என்பதைப் படித்து உள்வாங்கிக் கொள்ளும் பொறுமை கூட இம்மூன்று நீதிபதிகளுக்கும் இல்லை. தமிழ் வழிக் கல்வியை அறிமுகப்படுத்துவது குறித்து ஆய்வு செய்வதற்காகத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டது. (A Committee headed by Justice S. Mohan was constituted to study the introduction of Tamil as a Medium of Instruction from the Primary level to Higher level) இதன் பொருள் தமிழை அறிமுகப்படுத்தலாமா வேண்டாமா என்று ஆராய்வது அல்ல, தமிழை எவ்வாறு அறிமுகப்படுத்தலாம் என்று ஆராய்வது என்பதாகும்.

ஆகவே, தமிழ் வழிக் கல்வியைக் கோருகின்ற தமிழ் அறிஞராகவும். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ்த் துறைத் தலைவராகவும் விளங்கக் கூடிய தமிழண்ணல் அவர்களை இக்குழுவில் சேர்த்தது தேவையும் பொருத்தமும் ஆகும். தமிழ் வழிக் கல்வியை அறிமுகப்படுத்துவது எவ்வாறு என்று கண்டறியும் குழுவில் ஆங்கிலப் பேராசிரியரை நியமித்திருந்தால் இம்மூவர் குழு (நீதிபதிகள்) எதிர்ப்புத் தெரிவித்திருக்கலாம். மாறாக, தமிழறிஞரை சேர்த்ததற்கு முகம் சுழிக்கிறார்கள்.

கோரிக்கை வைப்பவரே முடிவெடுக்கும் குழுவில் உறுப்பினராக இருக்கக்கூடாது என்று கூறும் நீதிபதிகள் இதற்கு உச்ச நீதிமன்றத்

தீர்ப்புகளை எல்லாம் மேற்கோள் காட்டுகிறார்கள். கோரிக்கை வைத்தவர் நடுவர் குழுவில் அல்ல. செயல்படுத்தும் குழுவில் இருப்பதில் என்ன தவறு? தொழிற் சங்கப் பிரதிநிதிகள் செயல்படுத்தும் குழுவில் இருப்பதில்லையா?

அடுத்து புலவர் இளங்குமரன் அவர்களை மோகன் குழுவில் சேர்த்தது குறித்து ஒரு எகத்தாளப் பார்வையுடன் நோக்குகிறது மூவர் குழு. தமிழ் அறிஞர்கள் சார்பாக இவர் சேர்க்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறதாம். அவ்வாறெனில் தெலுங்கு. கன்னடம். மலையாளம் ஆகிய மொழிகளின் அறிஞர்கள் சார்பாக ஏன் மோகன் குழுவில் பிரதிநிதிகள் சேர்க்கப்படவில்லை என்று மூவர் குழு கேள்வி கேட்கிறது (தீர்ப்புரை பக்.46) இம்மூவரும் இந்தி. குஜராத்தி போன்ற மொழிகளை ஏன் விட்டுவிட்டார்கள் என்று தெரியவில்லை. மற்ற மூன்றும் அண்டை மாநில மொழிகள் என்று இவர்கள் கூறிக் கொண்டாலும் மொழி வாரி மாநில அமைப்பை இந்நீதிபதிகள் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை என்பது இவர்களது முழுத் தீர்ப்பையும் படித்துப் பார்ப்பவர்களுக்கு விளங்கும்.

இந்த ஆங்கிலக் கிணற்றுத் தவளைகள், ஆந்திர, கேரள, கர்நாடகப் பகுதிகளடங்கிய பழைய சென்னை மாகாணம் என்றே இன்றும் தமிழ்நாட்டைக் கருதுகிறார்கள் போலும். இன்னொன்றும் விளங்குகிறது. இம்மூவரும் தமிழைத் தவிர வேறு எந்த மொழிக்கும் ஆதரவாக இருப்பார்கள் என்பதே அது. கர்நாடகத்திலோ. கேரளாவிலோ அம்மாநில மொழியைக் கல்வி மொழியாக்கும் பரிந்துரைக் குழுவில் தமிழறிஞர்களைச் சேர்ப்பார்களா? அம் மாநிலத்தில் அவ்வாறு ஒரு நீதிமன்றம் கூறினால் அம்மக்கள் சும்மா இருப்பார்களா?

இந்நீதிபதிகள் மோகன் குழுவில் தமிழறிஞர்களை நியமித்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் போது. குழந்தை உளவியல் வல்லுநர்களையும், மூளை நரம்பியல் வல்லுநர்களையும் ஏன் இக்குழுவில் சேர்க்கவில்லை என்று கேட்கிறார்கள் (தீர்ப்புரை பக். 47). ஆனால் அவர்களே தமிழறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதம் கூறியதாக ஒரு கருத்தை எடுத்துக்காட்டி அதைத் தங்களது தமிழ் வழிக் கல்விக்கு எதிரான தீர்ப்பிற்கு ஒரு ஆதாரமாகக் காட்டுகிறார்கள். ஒரு குழந்தை இரண்டரை வயதிலிருந்து நாலரை வயதுக்குள் தனது தாய்மொழியில் கற்க வேண்டும். அதன் பிறகு எந்த மொழியிலும் அது கற்கலாம் என்பதே நீதிபதிகள் எடுத்துக் காட்டும் கி.ஆ.பெ.யின் கூற்று. இங்கு மட்டும் தமிழறிஞர் ஒருவர் குழந்தை உளவியல் வல்லுநராக. மூளை நரம்பியல் நிபுணராக இருக்க முடியும் என்கிறது மூவர் குழு. அதாவது தமிழ்க் குழந்தை 5 வயதுக்கு மேல் தனக்கு அயல்மொழியாக உள்ள ஆங்கிலத்தை

கற்கலாம் என்ற தங்களது கருத்தை நிலைநாட்டத் தந்திரமாக கி.ஆ.பெ.யை பயன்படுத்திக் கொள்கிறார்கள் நீதிபதிகள்''.

'தொடக்ககல்வி என்பது பெற்றோர்களின் விருப்பம்' என்று நீதிபதி குழு தீர்ப்பளித்தளிக்கிறது. இதில் எந்த அளவுக்குத் திரிபு ஏற்பட்டுள்ளது என்பது குறித்துப் பெ.ம. எழுதுகிறார்.

"தமிழ்வழிக் கல்விக்கு எதிராக மூவர் குழு வைக்கும் வாதங்களில் மிக மையமானது, தொடக்கக் கல்வி என்பது பெற்றோர் விருப்பத்தைப் பொறுத்து என்பதாகும். ஐ.நா. மன்றத்தன் மனித உரிமைப் பிரகடனம் மாணவர்களின் பயிற்று மொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றோரைச் சேர்ந்தது என்று கூறுவதாகவும், தமிழக அரசின் ஆணை இந்தப் பெற்றோர் உரிமையை மறுத்து விட்டதாகவும் தமிழ் வழிக் கல்வியை எதேச்சாதிகாரமாகத் திணித்து விட்டதாகவும், மூவர் குழு பரந்துபடப் பேசுகிறது. தீர்ப்பின் முடிவுச் சுருக்கத்திலும் இதை எடுத்துக் காட்டுகிறது (தீர்ப்புரை பக்.87, 185)

'ஈரைப் பேனாக்கி. பேனைப் பெருமாளாக்கி' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதுபோல அரைகுறை உண்மைகளை ஆதாரமாகக் கொண்டு தர்க்கக் கோட்டை கட்டுவதில் வல்லவர்களான நீதிபதிகள் மூவரும் ஐ.நா. மன்ற சாசனத்தின் கருத்தைத் திரித்து ஆதாரம் காட்டுகிறார்கள்.

நீதிபதிகள் குறிப்பிடும் மனித உரிமை சாசன விதி 26(3) வாசகத்தை அசலாக அப்படியே தருகிறோம் : Parents have a prior right to choose the kind of education that shall be given to their children. இதன் பொருள், தங்கள் குழந்தைகளுக்கு எந்த வகைக் கல்வி வழங்கவேண்டும் என்று தெரிவு செய்யும் முதல் உரிமை பெற்றோருக்கு உண்டு என்பதாகும். இதில் பயிற்று மொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை என்பதாக எந்த வாசகமும் இல்லை. Kind என்ற சொல் வகை என்ற பொருளில்தான் இங்கு பயன்படுத்தப்படுகிறது. Kind என்ற சொல்லுக்கு மொழி என்ற பொருள் எந்த அகரமுதலியிலும் கிடையாது.

எந்த வகைக் கல்வியைத் தேர்ந்தெடுப்பது என்ற உரிமை பெற்றோருக்கு வழங்கப்படுகிறது. மருத்துவம். பொறியியல், கலையியல், வேளாண்மை, சட்டம் போன்ற பல வகைப் படிப்புகள் உள்ளன. இவற்றில் எதைத் தேர்ந்தெடுப்பது என்ற உரிமை குறித்துதான் ஐ.நா. உரிமை சாசனம் பேசுகிறது.

ஆங்கிலத்துக்கு வக்காலத்து வாங்கும் தங்களது வாதத்திற்கு வசதியாக வலிந்து திரித்துப் பொருள் கூறிப் பயிற்று மொழி பற்றி ஐ.நா.

சாசன விதி 26(3) பேசுவதாதக இந்நீதிபதிகள் கூறும்போது அவர்களின் தரம் பற்றி ஐயம் எழுகிறது. ஐ.நா. சாசன விதி 26ஐ பூதக்கண்ணாடி போட்டுப் பார்த்து இல்லாத எழுத்துக்களை கூட்டிப் பார்த்து, சொல்லாத பொருளைச் சொல்லும் இந்த நீதிபதிகள், இதே விதி 26இல் உட்பிரிவு (1) கூறுவதை ஏன் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. (1)ஐப் படித்து விட்டுத்தானே (3)ஐப் படித்திருக்க வேண்டும். அந்த (1) என்ன கூறுகிறது? Everyone has the right to education, Education shall be free, at least in the elementary and fundamental stages. Elemental stages. Elementary education shall be compulsory. குறைந்தபட்சம் அடிப்படை மற்றும் தொடக்கக் கல்வியைக் கட்டாயமாக, இலவசமாக வழங்க வேண்டும் என்று இந்த விதி கூறுகிறது.

தமிழ் வழிக் கல்வி ஆணைக்கு எதிராக வழக்குத் தொடுத்த அதி உத்தமர்களான, கல்வி சனநாகயத்தின் கர்த்தாக்களான மெட்ரிக்குலேஷன் பள்ளி முதலாளிகள் தொடக்கக் கல்வியை இலவசமாகத் தருகிறார்களா என்ற கேள்வியை இந்த நீதிபதிகள் கேட்டார்களா? ஐ.நா. சாசனம் பற்றி அதிக அக்கறையோடு, இல்லாத அர்த்தத்தை இட்டுக்கட்டிக் கொண்டு வேர்க்க விறுவிறுக்கப் பல்வேறு தீர்ப்புகளை எடுத்துக் காட்டும் இந்த நீதிபதிகள், தொடக்கக் கல்வியை இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்பதில் ஏன் அக்கறை காட்டவில்லை?

கல்விக் கட்டணம் என்ற பெயரில், நன்கொடை என்ற பெயரில் பெற்றோர்களைக் கொள்ளையடிக்கும் மெட்ரிகுலேசன் முதலாளிகள் அரசு நிர்ணயித்த சம்பளத்தில் கால் பங்கு கூட ஆசிரியர்களுக்குத் தருவதில்லை. ஒரு அறிவுரை என்ற அளவில் இலவசக் கல்வி பற்றி ஒரு வரியாவது ஐ.நா. சாசனம் விதி 26 பற்றி பேசும் போது நீதிபதிகள் கூறியிருக்கலாம். கூறாதது அவர்களின் பக்கச் சாய்வைக் காட்டுகிறது.

பெற்றோர் உரிமையா?

இனி, பயிற்று மொழியைப் பெற்றோர் தேர்ந்தெடுக்கும் உரிமை பற்றிப் பார்ப்போம். ஒரு நாட்டில் அல்லது ஒரு மாநிலத்தில் நடைமுறையில் உள்ள வெவ்வேறு பயிற்று மொழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உரிமையா அல்லது பெற்றோர் விரும்பும் ஏதோ ஒரு மொழியைப் பயிற்று மொழியாகத் தேர்ந்தெடுக்கும் உரிமையா என்ற கேள்வி இங்கு எழுகிறது. ஜிம்பாவே மொழியைப் பயிற்று மொழியாகப் பெற்றோர் தேர்ந்தெடுத்தால் அம்மொழியை வழங்க வேண்டுமா? வழங்க முடியுமா?

கல்வி வல்லுநர்களின் அறிவுரையின்படி அரசு வரையறுக்கும் பயிற்று மொழிகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உரிமைதான் பெற்றோருக்கு இருக்க முடியுமே தவிர பெற்றோர் விரும்புகின்ற மொழியையெல்லாம் அரசு வழங்க வேண்டும் என்ற உரிமை இருக்க முடியாது. தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள 'அ' மற்றும் 'ஆ' மொழிகளிடையே ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உரிமைதான் பெற்றோருக்கு உண்டு. பெற்றோர் உரிமை என்பது இந்த வரம்புக்கு உட்பட்டதுதான். இந்த வரம்பைத் தீர்மானிப்பது கல்வியாளர்களும் அரசும்தானே தவிர பெற்றோர் அல்லர்.

அரசின் உதவி பெறாமல் சொந்தப் பணத்தில் கல்வி பெறுகிறோம் என்று காரணம் காட்டி கல்வித் திட்டத்தை ஒருவர் சொந்தமாக முடிவு செய்துகொள்ள முடியாது. அவ்வாறு முடிவு செய்ய முடியுமெனில் அவர் அரசு முத்திரையுடன் சான்றிதழை நாட வேண்டியதில்லை. வேலைவாய்ப்பு, உயர் கல்வி போன்றவற்றிற்கும் அவர் அரசைச் சார்ந்திருக்க வேண்டியதில்லை.''

இதில், பெ.ம. மிக அருமையாக. நுட்பமாக வாதிட்டிருப்பதால் நான் அதற்குமேல் எதுவும் எழுத வேண்டியதில்லை என்றே கருதுகிறேன்.

மெட்ரிக் பள்ளி நிர்வாகிகளின் கருத்தைக் கேட்டார்களா?

நீதிபதி குழு இப்படித் தீர்ப்பளிக்கிறது.

இதற்குப் பெ.ம. விடை சொல்லுகிறார்.

''தமிழ் வழிக் கல்வி செயலாக்கம் குறித்து பரிந்துரை வழங்க நியமிக்கப்பட்ட மோகன் குழு மெட்ரிகுலேசன் நிர்வாகிகளிடம் கருத்துக் கேட்கவில்லை என்று நீதிபதிகள் குறை கூறுகிறார்கள். மோகன் குழு மூன்று நாட்கள் எல்லாத் தரப்பினரையும் கருத்துக் கூற அழைத்தது. இதற்கான விளம்பரம் செய்தித்தாள்களில் கொடுக்கப்பட்டது (1999 மே 19-21) உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த மெட்ரிகுலேசன் பள்ளிகள் சங்கப் பொதுச் செயலாளர் பி.டி. குமார் உள்ளிட்டு மெட்ரிகுலேசன் தரப்பிலிருந்து ஏராளமானோர் வந்து எழுத்துப் பூர்வமாகவும் வாய்மொழியாகவும் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்தனர். இதைக் கருத்தில் கொள்ளாமல் மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகளின் கருத்தை மோகன் குழு கேட்கவில்லை என்று நீதிபதிகள் கூறுவது கருப்பு கவுனுக்குள் எல்லாவற்றையும் மறைத்து இருட்டாக்கி விடலாம் என்ற நினைப்பிலா என்று தெரியவில்லை''

மெட்ரிக் பள்ளி நிர்வாகிகள் எதற்கு?

''மோகன் குழுவில் மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகள் தரப்பில் பிரதிநிதிகளைச் சேர்க்காதது குறை என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. தமிழ்

வழிக் கல்வியைச் செயல்படுத்தும் குழுவில் ஆங்கில வழிக் கல்விப் பிரதிநிதிகளைச் சேர்க்க வேண்டிய அவசியம் என்ன? தமிழ் வழிக் கல்வியைக் கொண்டு வரலாமா வேண்டாமா? என்று ஆராய்வதல்ல மோகன் குழுவின் வேலை.. தமிழ் வழிக் கல்விக்கான சட்டம் 1956ஆம் ஆண்டிலேயே இயற்றப்பட்டு அது நடைமுறையில் இருக்கிறது. இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராயும் குழுவில் ஆங்கில வழிக் கல்வி நிர்வாகிகள் இடம் பெறுவது பகுத்தறிவுக்குப் பொருத்தமானது இல்லை'' என்கிறார் பெ. மணியரசன்.

எனினும் யார்யாரெல்லாம் தங்களைச் சந்தித்து மனுக்கொடுத்தார்கள் என்பதனைக் குழு சொல்லியிருக்கிறது. அதனை மற்றோர் இடத்தில் குறிப்பிட்டிருக்கிறேன்.

தமிழ் அல்லது தாய்மொழி

'தாய்மொழி' என்றால் எது என்பது பற்றி நீதிமன்றம் இவ்வளவு பெரிய ஆராய்ச்சியை நடத்தியிருக்கவேண்டுமா? இவ்வளவுக்கும் தமிழக அரசு வழக்கறிஞர் சாந்திபூஷன் சரியான விளக்கம் தந்த பிறகும் நீதிபதி குழு ஏன் இப்படி வாதிக்கிறது? இதுபற்றி பெ.ம. எழுதுகிறார்.

''தமிழக அரசின் ஆணையில் தமிழ் அல்லது தாய்மொழி என்றிருப்பதால் எது தாய்மொழி என்ற ஆராய்ச்சியில் நீதிபதிகள் இறங்கி அதை எப்படிக் கண்டுபிடிப்பது என்ற சூழலில் சிக்கி, வம்பு வேண்டியதில்லை, ஆங்கிலமே இருந்து விட்டுப் போகட்டும் என்ற முடிவுக்கு வருகிறார்கள். தாய்மொழி என்பது தாயார் பேசக் கூடிய மொழியோ, தந்தையார் பேசக் கூடிய மொழியோ அல்ல என்றும் தாயும் தந்தையும் வெவ்வேறு மொழி பேசுபவராக இருந்தால் குழந்தை யார் மொழியைப் பேசும் என்றும் கேள்வி கேட்டு, குழந்தை எந்த மொழியில் அதிகம் பேசுகிறதோ அந்த மொழிக்கே அதன் தாய்மொழித் தகுதியைத் தரவேண்டும் என்றும் நீதிபதிகள் வாதிடுகிறார்கள்.

இயற்கைக்குப் புறம்பாக ஆங்கிலத்தில் பேச சில குடும்பங்களில் குழந்தைகளை வற்புறுத்துகிறார்கள். அதை வைத்துக்கொண்டு ஆங்கிலம்தான் குழந்தையின் முதல் மொழி என முடிவு செய்யக் கூடாது என்று அரசு தரப்பு வழக்குரைஞர் சாந்தி பூசன் கூறியதை நீதிபதிகள் ஏற்கவில்லை.

இந்த நீதிபதிகள் ஆங்கிலத்திற்கு வக்காலத்து வாங்குவததற்காக எந்த அளவுக்குப் பகுத்தறிவுக்குப் புறம்பாகச் செல்கிறார்கள் என்பதற்கு இதோ ஓர் எடுத்துக்காட்டு :

பள்ளியில் குழந்தையைச் சேர்க்கும்போது அந்த குழந்தையின் தாய்மொழியை அல்லது முதல் மொழியை குழந்தையின் வாயிலாக அறிந்து கொள்ள முடியாது. கூச்சத்தின் காரணமாக, வெட்கத்தின் காரணமாக குழந்தை பேசாது. குழந்தையின் பெற்றோர்தான் அதன் முதல் மொழியைச் சொல்லியாக வேண்டும். இதனால் குழந்தையின் தாய்மொழி அல்லது முதல் மொழி குறித்துத் தெரிவிக்க வேண்டியவர் பெற்றோரே தவிர குழந்தையல்ல (தீர்ப்புரை பக்.61)

அடுக்குமாடி வீடுகளில் குடியிருக்கும் குழந்தைகளுக்குப் பொது மொழி, முதல் மொழி ஆங்கிலமாகத்தான் இருக்கிறதாம். அதே போல் பல மாநிலங்களிலிருந்து வந்து இங்கு வேலை பார்ப்போர் குழந்தைகளுக்கு ஆங்கிலம்தான் முதல் மொழியாக இருக்கிறதாம். எனவே ஆங்கில வழிக் கல்விதான் சரியான திட்டம் என்று நீதிபதிகள் முடிவுக்கு வருகிறார்கள்.

ஆறு கோடி தமிழ் மக்களில் அடுக்குமாடி வீட்டு ஆங்கிலக்காரர்களும் அயல் மாநில ஆங்கிலக்காரர்களும் எத்தனை விழுக்காட்டினர் என்ற விளக்கத்தை நீதிபதிகள் கொடுக்கவில்லை. மாறாக. கோவையில் இவர்கள் வசதிக்கு மூன்று மெட்ரிகுலேசன் பள்ளிகளை எடுத்துக் கொண்டு அவற்றில் தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, மராத்தி போன்ற மொழி பேசுவோர் கணிசமாக இருக்கிறார்கள் என்று புள்ளி விவரம் கொடுத்து, இவர்களுக்கு ஆங்கில வழிக் கல்வி கொடுப்பதுதானே பொருத்தம், அவரவர் தாய்மொழியில் கொடுக்க முடியுமா என்று நீதிபதிகள் கேட்கிறார்கள். நூற்றுக்கு நூறு என்ற அளவிலும் நூற்றுக்கு தொண்ணூறு விழுக்காடு என்ற அளவிலும் தமிழைத் தாய் மொழியாக அல்லது முதல் மொழியாக கொண்டுள்ள குழந்தைகள் ஏராளமான மெட்ரிகுலேசன் பள்ளிகளில் ஆங்கில வழியில் படிக்க நேர்கிறது. அப்பள்ளிகளில் அனைவருக்கும் பொது மொழித் தமிழே. கிட்டத்தட்ட 95 விழுக்காடு மெட்ரிகுலேசன் பள்ளிகளில் இதுதான் நிலைமை. மிகச் சிறு எண்ணிக்கையில் தெலுங்கு, மலையாளம், மராத்தி, இந்தி பேசுகின்ற குழந்தைகள் படிக்கின்ற மெட்ரிகுலேசன் பள்ளிகளைப் பூதக் கண்ணாடி போட்டுத் தேடிக் கண்டுபிடித்து அதுதான் தமிழ்நாட்டின் சராசரி என்பது போல் காட்டும் இந்த நீதிபதிகள் 95 விழுக்காடு மெட்ரிகுலேசன் பள்ளிகளில் தமிழைத் தாய்மொழியாக அல்லது முதல் மொழியாகப் பேசுகின்ற குழந்தைகள் வாயில் ஆங்கிலத்தைத் திணிக்கும் அநீதி பற்றி ஏன் கவனத்தில் கொள்ளவில்லை? ஏனெனில் அவர்கள் ஒருதலைச் சார்பாகத் தீர்ப்பெழுத முடிவெடுத்துவிட்டார்கள்.

தமிழர்களின் தேசிய மொழி

இங்கு அடிப்படையான ஒரு செய்தியைக் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்தியா மொழிவரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு மொழி பேசும் ஒரு தேசிய இனத்திற்கு ஒரு தாயகம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு அமைந்த மொழிவாரித் தாயகத்திற்குச் சட்டப் பேரவையும். தனி அதிகாரப் பட்டியலும், தனி அலுவல் மொழியும் இருக்கின்றன. இந்த அடிப்படை உண்மையை எந்த இடத்திலும் மூன்று நீதிபதிகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவே இல்லை. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கூறுகளில் ஒன்று அதன் கூட்டாட்சித் தன்மை என்று உச்ச நீதிமன்றமும் கூறியிருக்கிறது; சட்டவியல் அறிஞர்களும் கூறுகிறார்கள்.

இந்த அம்சங்களை மூன்று நீதிபதிகளும் புறக்கணித்தது மட்டுமல்ல அரசுத் தரப்பு வழக்குரைஞர்களும் இவற்றை வாதத்தில் வைக்கவில்லை. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மொழிகள் பதினெட்டு இருக்கின்றன. இந்தப் பட்டியலில் ஆங்கிலம் கிடையாது.

எட்டாவது அட்டவணையில் இல்லாத ஆங்கிலத்திற்கு வக்காலத்து வாங்கும் நீதிபதிகள் அப்பட்டியலில் உள்ள தேசிய மொழியான தமிழை எட்டி உதைக்கின்றனர். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டின் அலுவல் மொழி தமிழ்தான். தமிழ்நாட்டின் அலுவல் மொழியைத் தமிழ்நாட்டு குடிமக்கள் படிக்க வேண்டியதில்லை என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான செயல்.

அரசமைப்புச் சட்ட விதி 345இன் கீழ் தமிழகச் சட்டப் பேரவை தமிழ்நாட்டின் அலுவல் மொழியாகத் தமிழை 1950ஆம் ஆண்டே சட்டமாக்கியுள்ளது. சட்டப்பூர்வமான தமிழக அலுவல் மொழியான தமிழைத் தமிழ்நாட்டுக் குழந்தைகள் அதாவது குடிமக்கள் படிக்கத் தேவையில்லை என்று ஒரு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தால் அந்நீதிமன்றம் அரசமைப்புச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டதா, ஆங்கில வழிக் கல்வி வணிகர்களுக்குக் கட்டுப்பட்டதா என்ற கேள்வி எழுகிறது.

தமிழர்களின் தாயகமான தமிழ்நாட்டில் தமிழ்மொழி கற்பதும், தமிழ் மொழியில் கற்பதும் கட்டாயமாக இருக்கவேண்டும். ஆங்கிலம் போன்ற பிற மொழிகளைக் கற்பது அவரவர் விருப்பத்தைச் சார்ந்ததாக இருக்கவேண்டும்.

இங்கிலாந்து ஆங்கிலேயர்களின் தாயகம் என்றாலும் அங்கு பல மொழி பேசும் பல இன மக்கள் கணிசமாக வாழ்கிறார்கள். ஆனால் அங்கு

ஆங்கில மொழிப் பாடமும், ஆங்கில வழிக் கல்வியும் கட்டாயம். பிற மொழிகள் கற்பது அவரவர் விருப்பம். பிரான்சு நாட்டில் தமிழர்கள் உள்ளிட்ட முன்னாள் காலனி மக்கள் பல்வேறு மொழி பேசுவோர் வாழ்கிறார்கள். ஆனாலும் அங்கு பிரெஞ்சு மட்டுமே கட்டாயக் கல்வி மொழியாக இருக்கிறது. ஜெர்மனியில் ஜெர்மன், ரஷ்யாவில் ரஷ்யன், சீனாவில் சீனம் என அவரவர் தாயகத்தில் அவரவர் தாய்மொழியே கட்டாயக் கல்வி மொழியாக உள்ளது. அங்கெல்லாம் பெற்றோர் விருப்பத்திற்கேற்ப கல்வி மொழி மாற்றப்படுவதில்லை.

தமிழ்நாட்டில் தமிழ் கட்டாயக் கல்வி மொழியாக இருக்க வேண்டியதில்லை என்று மூவர் குழு கூறியிருப்பது தமிழர் தாயகத்தை மறுதலிப்பது மட்டுமல்ல. தமிழரின் முகவரியாய் உள்ள தமிழை அழிக்கும் செயலாகும்.''

அரசின் தவறான போக்கு

இது தொடர்பாக பெ.ம. என்ன கூறுகிறார் என்பதைக் கவனியுங்கள். பேரா. அன்பழகனின் கல்வித்துறை எத்தகைய தகிடு தத்தங்களைச் செய்தது என்பதனை நான் 'அறிந்தவன்' எனும் முறையில் தெரிவித்துள்ளேன். பெ.ம. போன்றவர்களும் அறிந்தும். முழுமையாகத் தெரிந்தும் எடுத்துச் சொல்லக்கூடிய வகையில்தானே அரசின் செயற்பாடுகள் இருந்தன? அவரே சொல்கிறார், கேளுங்கள்.

''தமிழக அரசுத் தலைமை வழக்கறிஞர் செத்தவன் வாயில் வெற்றிலை வைத்தது போல் வாதாடியவர். அவர், தானாகத் துடிப்புடன் செயல்பட மாட்டார் அல்லவா? ஏனெனில் தமிழக அரசுக்கோ, தமிழ் வழிக் கல்வி ஆணையைக் காப்பாற்ற வேண்டும் என்ற அக்கறை கிடையாது.

தேர்தல் வரப்போகிறது. ஆங்கில விரும்பிகள், ஆங்கில வியாபாரிகள் அனைவரிடமும் வாக்குகள் இருக்கின்றன என்ற கவலை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு இருக்கிறது; தமிழ் வழிக் கல்வி முகாமில் உறுதியாக நிற்காமல் மதில்மேல் பூனையாக அவர் மாறிவிட்டார். அதனால்தான் இன்று வரை இத்தீர்ப்பு குறித்து அவர் கருத்து எதுவும் கூறவில்லை.

தமிழ் வழிக் கல்வி முகாமில் வாக்குகள் இல்லையா என்று கேட்கக் கூடும். இவர்கள் திட்டிக் கொண்டே தி.மு.க.வுக்கு வாக்குப் போடக் கூடியவர்கள் என்பது அவர் கணக்கு.

தமிழக அரசின் தடுமாற்றங்கள்

தமிழக அரசு நெஞ்சத் தூய்மையோடு தமிழ் வழிக் கல்வி ஆணையைப் போட்டதா என்று கேட்டால் ஆம் என்று சொல்வதற்கு ஆதாரம்

இல்லை. எல்லாமே மோகன் குழு பரிந்துரைப்படிதான் செய்ததாக ஆணையில் குறிப்பிடும் அரசு, மோகன் குழு சட்டம் இயற்றச் சொன்னதே, அதை ஏன் செயல்படுத்தவில்லை. வெறும் ஆணை போட்டது ஏன்?

தமிழ்ச் சான்றோர் பேரவை மற்றும் தமிழ் அமைப்புகளின் போராட்டங்களாலும் அவற்றிற்குக் கிடைத்த மக்கள் ஆதரவாலும் சஞ்சலப்பட்டு, தமிழுக்கும் வாக்குக் கிடைக்கும் போல் இருக்கிறது. நாம் செய்யவில்லை எனில் நமது தமிழ் முகம் சிதைந்து விடும் என்று கருதி தி.மு.க. அரசு இழுபறியாக தமிழ் வழிக் கல்விக்கு, அதுவும் ஐந்தாம் வகுப்பு வரைக்கும் ஓர் ஆணை பிறப்பித்தது.''

நன்கு கவனியுங்கள்

தமிழக அரசுக்கோ, தமிழ்வழிக் கல்வி ஆணையைக் காப்பாற்ற வேண்டும் என்ற அக்கறை கிடையாது.

''தமிழக அரசு நெஞ்சத் தூய்மையோடு தமிழ் வழிக் கல்வி ஆணையயைப் போட்டதா என்று கேட்டால் ஆம் என்று சொல்வதற்கு ஆதாரம் இல்லை.''

'நாம் செய்யவில்லை எனில் நமது தமிழ் முகம் சிதைந்துவிடும்' என்று கருதியது தி.மு.க. அரசு.

இவர் கூறுவதனை நான் வழிமொழிகிறேன். பேரா. அன்பழகன் ஏற்கெனவே மெட்ரிக் பள்ளி நிர்வாகிகளோடு ஒரு கூட்டணி ஏற்படுத்திக் கொண்டு புதிய பள்ளிகளை வாரி வழங்கிவிட்டார். அந்தக் கல்வி வியாபாரிகளே கல்வி அமைச்சரின் கருணையால் வாரிக் குவித்து விட்டார்கள். அப்புறம் என்ன! அவர்கள் காட்டில் மழைதானே!

மேலும் கூறுகிறார்:

''முதல் ஆணையை எதிர்த்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சண்முகம், ஆணை செல்லும் என்று தீர்ப்பளித்தார். இதை எதிர்த்து மெட்ரிக் முதலாளிகள் முழு பெஞ்சுக்கு மேல் முறையீடு செய்து அவ்வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

அம்முழு அமர்வு மன்றத்தில் வாதாடிய போது, தலைமை வழக்குரைஞர் ஆணையை செயல்படுத்தாமல் பார்த்துக் கொள்கிறோம் என்று உறுதி கூறினார். அதாவது உயர் நீதிமன்றம் தடை ஆணை வழங்காமல், தமிழக அரசு தனக்குத் தானே தடை போட்டுக் கொண்டது.

முதல் ஆணை இவ்வாறு செயலுக்கு வராமல் இருக்கும்போது, இரண்டாவது ஆணையை எந்த நோக்கத்தில் வெளியிட்டது தமிழக அரசு? தமிழ் வழிக் கல்வி கோருவோரைத் திருப்திப்படுத்தக் கண்துடைப்பு ஆணையாக இது வெளியிடப்பட்டது என்பதுதான் உண்மை!

உண்மையான அக்கறையுடன் செயல்பட்டிருந்தால், இரண்டாவது ஆணைக்குப் பதிலாக, தமிழ் வழிக் கல்விக்குச் செப்பமான புதிய சட்டம் இயற்றியிருக்க வேண்டும். முதல் ஆணை சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறது. தமிழக அரசே அதற்குத் தடை விதித்துக் கொண்டு விட்டது என்ற உண்மைகளை மூடி மறைத்து, முதல் ஆணையை உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு விட்டது. எனவே இரண்டாவது ஆணைக்கு ஒன்றும் இடையூறு வராது, இதற்குப் புதிய சட்டம் தேவை இல்லை என்று தமிழக அரசு தனது 19-11-1999 நாளிட்ட ஆணையில் கூறிக் கொள்கிறது. இது எவ்வளவு பெரிய ஏமாற்று வேலை?''

உண்மையைச் சொன்னால் நான் உணர்ந்ததைச் சொன்னால், கல்வி அமைச்சரது 'துறையின்' ஏமாற்று வேலையை பகிரங்கமாகவே எடுத்துக் கூறிவிட்டார் பெ.ம.

இதில் நான் எடுத்துச் சொல்லிக் கிழிப்பதற்கு ஒன்றுமில்லை.

தமிழக அரசின் மற்றொரு சறுக்கலையும் சரியாக எடுத்துக் காட்டுகிறார் பெ.ம.

ஏற்கெனவே மெட்ரிக் பள்ளிகள் தொடர்பான ஆணையில் ஆங்கிலம்தான் பயிற்றுமொழி என்றுள்ளது. தமிழ்வழிக் கல்விக்காக ஆணை பிறப்பிக்கும் முன் மெட்ரிக் பள்ளிகள் தொடர்பான பழைய ஆணையை நீக்கியிருக்க (இரத்துச் செய்திருக்க) வேண்டுமா இல்லையா..? அதைத்தான் பெ.ம. கேட்கிறார்.

''இன்னொரு முக்கியமான பிரச்சினை அதுவரை சென்னை மற்றும் மதுரைப் பல்கலைக் கழகங்களின் கீழ் இருந்த மெட்ரிகுலேசன் கல்வியை தமிழக அரசு 1977இல் ஓர் ஆணை மூலம் தன்கீழ் எடுத்துக்கொண்டது. G.O.MS. No.1720 (பள்ளிக்கல்வித்துறை சி2) நாள் 25-07-1977. இவ்வாணையின்படி தமிழக அரசு மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்குத் தனி வாரியம் அமைத்தது. அவ்வாணை இன்று வரை உயிருடன் உள்ளது.

தமிழ் வழிக் கல்விக்காக இரண்டாவது ஆணை போடும்போது 1977ஆம் ஆண்டின் மெட்ரிகுலேசன் ஆணையை ரத்து செய்திருக்க வேண்டும், அல்லது அதில் திருத்தங்கள் கொண்டு வந்து தமிழ் வழிக்

கல்விக்கு உகந்த முறையில் அதை மாற்றி அமைத்திருக்கவேண்டும். ஏனெனில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடக்கத்திலிருந்து ஆங்கில வழிக் கல்வி கொண்டவை.

இவ்வாறு ஆக்கப் பூர்வமான ஏற்பாடுகளும் அக்கறையுள்ள தற்காப்பு நடவடிக்கைகளும் செய்யாமல் ஒப்புக்குச் சாப்பாணியாக தமிழக அரசு இரண்டாவது ஆணையை வெளியிட்டது''

சமத்துவம் இல்லையா?

பெ.ம. எழுத்திலிருந்து :

''அரசமைப்புச் சட்ட விதி பதினான்கிற்குப் புறம்பாக உள்ளது அரசாணை என்று மூவர் குழு கூறுகிறது. சட்டத்தின் முன்பாக யாருக்கும் சமத்துவத்தை மறுக்கக் கூடாது என்கிறது இவ்விதி.

ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளும் ஆங்கில வழியில் நடக்க விதி விலக்குக் கொடுக்கிறது அரசாணை. எனவே சட்டத்தின் முன் சமத்துவம் பேணப்படவில்லை என்கிறது தீர்ப்பு.

ஆங்கிலோ இந்திய மொழிச் சிறுபான்மையினர்க்கு அரசமைப்புச் சட்டப்படி சலுகை அளிக்க வேண்டியிருப்பதால் அவர்கள் தம் தாய்மொழியில் நடத்தும் பள்ளிகளுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டது. இது விதி 14க்கு முரணானதல்ல. விதி 30(1)க்கு உட்பட்டது இது. சிறுபான்மையினர்க்கு சலுகை அளிக்கவில்லை என்று வாதம் புரியும் இதே நீதிபதிகள் ஆங்கிலோ இந்தியச் சிறுபான்மையினர்க்கு அளித்த சலுகையை எதிர்க்கிறார்கள். முன்னால் போனால் கடிப்பது, பின்னால் வந்தால் உதைப்பது என்பதாக இவர்கள் வாதம் அமைந்துள்ளது.

சி.பி.எஸ்.இ. பள்ளிகள் நடுவண் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகள் என்ற காரணத்திற்காக விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

இது ஒரு பக்கம் இருக்க, மாநில அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகளுக்கிடையே பாரபட்சம் - சமத்துவமின்மை காட்டப்படவில்லை என்பது தான் இங்கு கவனிக்கத்தக்கது.

இயைபற்ற அரசமைப்பு விதிகளையெல்லாம் இழுத்துப் போட்டுக் கொண்டு, பொருந்தாத உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை வைக்கோல் போர் போல் குவித்து வைத்துக்கொண்டு 186 பக்கங்களுக்கு நீட்டி இப்பெரிய தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள்.''

பெ.ம.வின் விவாதம் சரியானது.

சி.பி.எஸ்.இ. பள்ளிகளே மொத்தம் 194 தான். ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் 41 தான். மேலும் சிபிஎஸ்இ பள்ளிகள் நடுவண் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. நடுவண் அரசு ஊழியரின் பிள்ளை சென்னையில் உள்ள சிபிஎஸ்இ பள்ளியில் படித்தால் அவர்கள் தில்லிக்கு மாறிச் செல்கிறபோது அங்கு உள்ள சிபிஎஸ்இ பள்ளியில் இடரின்றிச் சேர்ந்து தொடர்ந்து பயிலலாம். எனவே நமது பயிற்றுமொழிக் கொள்கையை அப்பள்ளிகளில் இடம்பெறச் செய்யாமல் விதிவிலக்காகத் தரப்பட்டது.

வாழ்வுரிமை

இதுகுறித்தும் பெ.ம. என்ன எழுதுகிறார் என்று பாருங்கள்.
"அரசு ஆணை அரசமைப்புச் சட்டவிதி 21க்குப் புறம்பானது என்று நீதிபதிகள் கூறுகின்றார்கள். யாருடைய உயிரையும் தனி நபர் உரிமையையும் சட்டமுறைகளுக்குப் புறம்பாக பறிக்கக் கூடாது என்பது இவ்விதியாகும். அதாவது வாழ்வுரிமையை இவ்விதி வலியுறுத்துகிறது. வாழ்வு என்பது கண்ணியமான வாழ்க்கை; கண்ணியமான வாழ்க்கைக்கு கல்வி அவசியம்; எழுதப்படிக்கத் தெரிந்திருக்கவேண்டும்.

இதுவே இவ்விதி குறித்து உச்ச நீதிமன்றம் கொடுத்துள்ள விளக்கம். ஆங்கிலக் கல்வி கற்றால்தான் கண்ணியமான வாழ்வு அமையும் என்று மூவர் குழு ஆங்கிலத்தோடு இவ்விதியை முடிச்சுப் போடுகிறது. விதி 21 கண்ணியமான வாழ்வைக் குறிக்கிறது என்பது வரை சரி. அதற்கு மேல் விரிவுரை என்ற சங்கிலி போட்டு ஆங்கிலத்தின் காலடியில் பிணைப்பது அநீதியானது, உள்நோக்கம் கொண்டது.

தமிழ் வழியில் கற்றவர்கள் கண்ணியமான வாழ்க்கை நடத்தவில்லையா? ஏவுகணை விஞ்ஞானி அப்துல் கலாம் பதினோராம் வகுப்பு வரை தமிழ் வழியில்தான் படித்தேன் என்கிறார். கண்ணியமான வாழ்வுக்கு அவர் எடுத்துக்காட்டு இல்லையா? இன்று உயர் நீதிமன்றத்திலும் மாவட்ட நீதி மன்றங்களிலும் நீதிபதிகளாக உள்ள பலர் பதினோராம் வகுப்பு வரை தமிழ்வழியில் படித்தவர்கள்தாம். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளைத் தமிழ் வழியில் எழுதிப் பலர் உயர் பதவிகளில் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தமிழ் கண்ணியமான வாழ்வு கொடுக்கவில்லையா?

கணிப்பொறிக்கு எந்த மொழியும் சொந்த மொழி கிடையாது. எந்த மொழியிலும் அதை இயக்கலாம். தமிழ் மென்பொருள் உருவாக்குவோர் ஏராளமாக சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தமிழ் கண்ணியமான வாழ்க்கை தரவில்லையா? ஜப்பானியருக்கும், ஜெர்மனியருக்கும், ரஷ்யருக்கும்,

பிரெஞ்சுக்காரருக்கும், சீனருக்கும் அவரவர் தாய்மொழி கண்ணியமான வாழ்வு தரும்போது தமிழனுக்குத் தமிழ் கண்ணியமான வாழ்வு தராதா? அப்படியே தமிழனுக்குத் தமிழ் கண்ணியமான வாழ்வு தராத சூழ்நிலை நிலவினால் அந்த சூழ்நிலையை மாற்றியமைப்பதுதான் அறிவாளியின் செயலாக, தமிழனின் செயலாக இருக்க வேண்டும்.

மூன்று நீதிபதிகளும் அறிவுக்கும் தமிழ் இனத்திற்கும் பொருந்தாத வாதத்தை முன்வைத்திருக்கிறார்கள். மேய்ச்சல் பிராணியா நாம், புல்வெளி நீளும் வரை மேய்ந்து கொண்டே செல்வதற்கு!" என்று காட்டமாகவே கேட்கிறார் பெ.ம.

சிறுபான்மை மக்கள்

''சிறுபான்மை மக்கள் உரிமையை அரசு ஆணை பாதிப்பதாகத் தீர்ப்பில் கூறியுள்ளார்கள். நீதிபதிகள் சுட்டிக்காட்டியுள்ள அரசமைப்புச் சட்ட விதி 30(1) எல்லா மத மற்றும் மொழிச் சிறுபான்மையினரும் அவர்கள் விருப்பத்திற்கேற்ப கல்வி நிறுவனங்களை அமைத்துக் கொள்ளவும் அவற்றை நிர்வகிக்கவும் உரிமை உண்டு என்று கூறுகிறது. இது அரசின் பயிற்று மொழித் திட்டத்தையோ, மொழி வாரி மாநிலத்தின் அலுவல் மொழியையோ புறக்கணிக்கும் அதிகாரத்தை சிறுபான்மை நிறுவனங்களுக்கு வழங்கிடவில்லை. இச்சிறுபான்மை நிறுவனங்கள் அரசின் மொழிக் கொள்கையை செயல்படுத்திக் கொண்டே தங்கள் விருப்பத்திற்கு இன்னொரு மொழியைக் கற்றுக் கொடுப்பதற்குத் தடை ஏதும் இல்லை. தமிழை மொழிப் பாடமாகவும், பயிற்று மொழியாகவும் ஏற்றுக்கொண்டு உருது மொழியைக் கற்றுக் கொடுப்பதற்குத் தடை ஏதும் இல்லை.

அரசமைப்புச் சட்டத்தின் இந்த விதி மொழிச் சிறுபான்மையினர் தங்கள் தாய்மொழியைப் பாதுகாத்துக் கொள்ள உரிமை வழங்குகிறதே தவிர அயல்மொழியான ஆங்கிலத்தைப் பாதுகாக்கும் உரிமை வழங்கவில்லை. மூன்று நீதிபதிகளும் மெட்ரிகுலேசன் முதலாளிகளும் கண்ணீர் விட்டுக் கதறும் மொழிச் சிறுபான்மையினர் யாருக்கும் ஆங்கிலம் தாய்மொழி இல்லை. மூவர் குழு குருட்டுத்தனமாக விதி 30(1)க்குப் புறம்பான ஆணை என்று தமிழ் வழிக் கல்வி ஆணையைக் கூறுகிறது'' என்று சிறப்பானேதார் விளக்கத்தினைத் தருகிறார் பெ.ம.

தி.மு.க.வின் முக்கிய புள்ளிகள் - தமிழ் நலங்கிள்ளிகள்

பெ.ம. ஒரே போடாகப் போடுகிறார்.

''ஒரு போதும் இந்தி வேண்டாம். எப்போதும் ஆங்கிலம் வேண்டும் என்பதுதான் இக்கட்சிகளின் முழக்கம். இதில் தமிழ் எங்கே இருக்கிறது?

ஆங்கிலத்தை நீக்கி விட்டால் தமிழன் காட்டுமிராண்டி ஆகி விடுவான் என்று இன்றும் பேசிக் கொண்டு திரிகிறார் முரசொலி மாறன். கருணாநிதிக்கு வியூகம் வகுத்துத் தரும் சாணக்கியன் இவர்தான். தி.மு.க. பொதுக் குழுக் கூட்டத்திலேயே இந்த ஆணையை எதிர்த்து தமிழ் வாழ்க! தமிழ்க்குடிமகன் ஒழிக! என்று பேசியவர் மாறன். பேரவைத் தலைவர் பழனிவேல்ராசனுக்கும் இதே கருத்துதான். தமிழ்க்குடிமகன் தமிழ்த்திணிப்பில் தீவிரமாக இருக்கிறார் என்பது இவர்கள் கருத்து. "எனக்குத் தமிழ்க்குடிமகனும் வேண்டும், பழனிவேல்ராசனும் வேண்டும்" என்று பகிரங்கமாகக் கூறினார் கருணாநிதி.

மாறன், பழனிவேல்ராசன் போன்றவர்கள் பகிரங்கமாகத். தமிழுக்கு எதிராகப் பேசுகிறார்கள். கல்வி அமைச்சர் அன்பழகனோ இதே கொள்கையை மனதில் வைத்துக்கொண்டு தமிழைக் கருவறுக்கிறார்.

19-11-1999இல் தமிழ் வழிக் கல்வி ஆணை போட்ட பிறகு, ஆங்கில வழி மெட்ரிகுலேசன் பள்ளிகள் நூற்றுக் கணக்கில் புதிதாகத் திறக்க இதே அன்பழகன் அனுமதி வழங்கியுள்ளார். இவர் தமிழ் வழிக் கல்விக்காக என்ன பற்றோடு பாடுபடுவார்? இவருக்குப் பற்று பணத்தின் மீதும் ஆங்கிலத்தின் மீதும் இருக்கிறது.''

இவ்வளவு பச்சையாக என்னால் கூடத் தாக்க முடியாது. பெ.ம. குறிப்பிடத்தக்க புள்ளிகளின் முகத்திரையைக் கிழித்து எறிகிறார்.

அவரது வாசகத்தைக் கவனியுங்கள்.

''அ.தி.மு.க. கல்வி அமைச்சர்கள் அரங்கநாயகம், பொன்னுசாமி, தி.மு.க. கல்வி அமைச்சர் அன்பழகன் ஆகியோர் வாரி வாரிக் குவித்தனர். அனுமதிகளை வாரி வாரிக் கொடுத்தனர்''.

இதனை நானே ஆதாரத்தோடு மெய்ப்பித்துக் காட்டியுள்ளேன்.

நீதிபதி குழுவின் தீர்ப்புக் குறித்துப் பெ.ம. பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''இங்குதான் நீதிபதிகளின் தமிழ் எதிர்ப்பும் ஆங்கிலப் பற்றும் ஜிகினா கடிதாசி போல் மின்னிக் கண் கூசச் செய்கிறது''.

நீதிமன்றத் தீர்ப்பு ஏழைகளுக்கு எதிரானது என்றே பெ.ம. வாதாடுகிறார்.

''பொதுவாகவே, தமிழைப் புறக்கணித்துவிட்டு ஆங்கில வழிக் கல்வியை செயல்படுத்துவது, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் ஏழை மாணவர்களுக்கு எதிரானது. இம்மாணவர்கள் ஆங்கிலத்தில் தோல்வியுற்று, மேல் கல்வி தொடர முடியாமல் முன்னேற்றம் பாதிக்கப்படுகின்றனர். தமிழ் வழியில் படித்தவர்களுக்கு மருத்துவம், பொறியியல் போன்ற தொழிலியல் படிப்புகளில் உரிய இடம் கிடைப்பதில்லை.

தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் நடக்கும் போராட்டம் புதிய வர்ணாசிரம தர்மப் போராட்டம். ஒரு வகை வர்க்கப் போராட்டம்.

இவ்வழக்கில் வாதிடும் போது மெட்ரிக் பள்ளி சார்பில் வாதாடிய வழக்குரைஞர் யு.என்.ஆர். ராவ், இதுவரை ஆங்கில வழியில் படித்தவர்களைத் தமிழ் வழியில் படிக்கச் சொன்னால் பொன்னி அரிசியை ரேசன் அரிசியுடன் கலப்பது போல இருக்கும் என்றார். இது வர்ணாசிரப் போராட்டம் - வர்க்கப் போராட்டம் என்பதற்கு இதைவிடச் சான்று வேண்டுமா?'' எவ்வளவு மோசமான நிலைமை?

கடைசியாக இப்படி முடிக்கிறார்.

''நீதித் துறையின் தனித்துவத்தை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். அரசு போடும் ஆணை அல்லது சட்டம் செல்லும் செல்லாது என்று தீர்ப்பு வழங்கும் அதிகாரம் நீதிமன்றத்திடம் இருப்பதை நாம் ஆதரிக்கிறோம்.

ஆனால் தமிழ்த் தேசிய இனத்திற்கும் அதன் தாய் மொழிக்கும் எதிராகப் பச்சையான பக்கச் சார்போடு மூன்று நீதிபதிகள் அளித்துள்ள தீர்ப்பு ஓர் இனத்திற்கே பெருந்தீங்கு விளைவிப்பதாக உள்ளது. இதைப் பொறுத்துக் கொள்ள முடியாது.''

தமிழர்களாகிய நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதனை முடிவு செய்யவேண்டும்; முடிவு செய்துவிட்டால் களத்தில் இறங்கவேண்டும்.

நீதிபதிகள் குழுவின் தீர்ப்புக்குறித்து பெ. மணியரசனும் வழக்கறிஞர் வெ. கிருட்டிணமூர்த்தியும் எடுத்துவைத்த வாதங்களே உண்மை நிலைகளை உங்களுக்கு உணர்த்தியிருக்கும்? இதற்குமேல் நான் சொல்ல என்ன இருக்கிறது?

இயல் இருபத்துநான்கு

உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு

உயர் நீதி மன்றத்தில் ஆங்கிலப் பள்ளி நிர்வாகத்தினர் சார்பில் வழக்குத் தொடரப்பட்டது.

நீதியரசர்கள் ஏ.எஸ். வெங்கடாசல மூர்த்தி. எஸ். ஜெகதீசன், என். தினகர் ஆகியோர் அடங்கிய மூவர் குழு, இவ்வழக்கை விசாரித்தது.

தமிழக அரசின் சார்பில் மூத்த வழக்கறிஞர் சாந்திபூஷன் வாதாடினார்.

''அரசு வெளியிட்ட உத்தரவு முக்கியமான கொள்கை முடிவாகும். குழந்தைகள் தாய் மொழி மூலமாகத்தான் பாடங்களைத் தானாகப் புரிந்து கொள்ள முடியும். குழந்தைகளுக்கு எவ்விதம் கல்வி அமைய வேண்டும் என்பதை பெற்றோர் அறிந்திருந்தாலும், அவர்களை விட கல்வியாளர்களுக்குத்தான், குழந்தைகளின் கல்வி குறித்தும் அதிகம் தெரியும். தாய் மொழியில் படிப்பது தான் குழந்தைகளுக்கு நல்லது என்று கல்வியாளர்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர் என்றார் சாந்திபூஷன்''.

"The Government can impose reasonable restrictions on provision of primary education to children in a State, especially on medium of instruction, as this was an important matter of policy for the State"

"The language of instruction at a primary level was in important part of policy of the Government. Education had to be imparted in the mother tongue, in which the child was most familiar with" என்றும் வாதாடினார் அவர்.

இதன்பிறகு வழக்கு தமிழக அரசின் ஆணையை இலதாக்குவதில் (இரத்துச் செய்வதில்) முடிந்தது. 'தமிழக அரசின் ஆணை செல்லாது' என்பது தீர்ப்பு.

இதனை எதிர்த்து, தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது.

அவர்களது மனுவில் கூறப்பட்டிருந்தவை இவை:

''ஆங்கில வழி கல்வி பயிலும் மாணவர் சங்கம் - கர்நாடக அரசு ஆகியவைகளுக்கு இடையேயான வழக்கில் தொடக்கக்கல்வி வரை தாய்மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு கூறியுள்ளது. இந்த நிலையில் தமிழ் வழி கல்வி தொடர்பாக தமிழக அரசு பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய ஐகோர்ட்டுக்கு உரிமை உள்ளதா?

தொடக்கக் கல்வியை எந்த மொழியில் கற்பது என்பது அடிப்படை உரிமை சம்பந்தப் பட்ட விஷயமா?

நிபுணர்குழு அளித்த அறிக்கை அடிப்படையில் மாநில அரசு எடுத்துள்ள கொள்கை முடிவு பற்றி ஐகோர்ட்டு கேள்வி எழுப்ப முடியுமா?''

மேல் முறையீட்டு வழக்கு 31.9.2000த்தில் விசாரணைக்கு வந்தது.

2001 வரை இருந்த தி.மு.க. அரசு மேல் முறையீடு செய்தது - இப்போது இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்தப்போவது அ.தி.மு.க. அரசு. 22.7.2001இல் நிலைஎன்ன? தினமலர் எழுதுகிறது; பாருங்கள்!

இந்நிலையில் பிப்ரவரி 2002இல் மேல் முறையீட்டு மனு மீதான விசாரணை எட்டு வாரங்களுக்குத் தள்ளி வைக்கப்பட்டது. இந்த விசாரணையில் தமிழக அரசின் முடிவு என்ன என்பது உச்சநீதி மன்றத்தில் தெரிவிக்கப்படவில்லை.

அதுபற்றித் 'தினமலர்' கூறுவதைக் கவனியுங்கள்

''தமிழ் பயிற்றுமொழி தொடர்பாக நடத்தி தி.மு.க., அரசு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த அப்பீல் மனு, உச்சநீதி மன்றத்தில் நாளை விசாரணைக்கு வருகிறது. அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று அப்போது வலியுறுத்திய ஜெயலலிதா இப்போது தமிழக முதல்வராக இருப்பதால், இந்த அப்பீல் வழக்கில் தமிழக அரசு என்ன நிலையை எடுக்கப்போகிறது என்ற பரபரப்பான கேள்வி எழுந்துள்ளது.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் அனைத்துப் பள்ளிகளிலும் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை தமிழே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்று கடந்த 99ம் ஆண்டு நவம்பர் 19ம் தேதி அப்போதைய தி.மு.க., அரசு உத்தரவு பிறப்பித்து, இந்த உத்தரவுக்கு பல்வேறு தமிழ்ச் சங்கங்கள் ஆதரவு தெரிவித்தன.

தமிழக அரசின் இந்த உத்தரவை ரத்து செய்யக்கோரி முதன்முதலாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ்நாடு நர்சரி, தொடக்க, மெட்ரிகுலேஷன் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் நிர்வாக சங்கத்தின் பொதுச்செயலாளர் கிறிஸ்துதாஸ் வழக்கு தொடுத்தார். இவரைத் தொடர்ந்து மற்றவர்களும்

உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுத்தனர். இந்த வழக்கை, நீதிபதிகள் வெங்கடாச்சல மூர்த்தி, ஜெகதீசன், தினகர் ஆகியோர் அடங்கிய 'முழு பெஞ்ச்' விசாரித்தது. தமிழ் பயிற்று மொழி தொடர்பாக 99ம் ஆண்டு நவம்பர் 19ம் தேதியன்று தமிழக அரசு பிறப்பித்த உத்தரவை 'முழு பெஞ்ச்' ரத்து செய்தது. கடந்த ஆண்டு ஏப்ரல் 20ம் தேதி இந்த தீர்ப்பு அளிக்கப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்றம் அளித்த இந்த தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் கடந்த ஆண்டு ஜூலை 10ம் தேதி தமிழக அரசு அப்பீல் மனுவை தாக்கல் செய்தது. சில தமிழ் வளர்ச்சி இயக்கங்களும் உச்சநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்துள்ளன. அப்பீல் மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உச்சநீதிமன்றம், இதற்கு பதிலளிக்குமாறு நோட்டீஸ் அனுப்பியது. இதையடுத்து, வழக்கில் சேர்க்கப்பட்டவர்கள் தங்கள் தரப்பு பதில் மனுக்களை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். இந்த அப்பீல் மனுக்கள் மீதான விசாரணை அவ்வப்போது தள்ளிப் போய்கொண்டிருக்கிறது.

இந்நிலையில், உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் ராஜேந்திரபிரசாத், ராஜூ ஆகியோர் அடங்கிய 'டிவிஷன் பெஞ்ச்' முன்பு, இந்த அப்பீல் மனுக்கள் நாளை மீண்டும் விசாரணைக்கு வருகிறது. தமிழகத்தில் ஆட்சி மாறியுள்ள நிலையில், இந்த அப்பீல் வழக்கை தமிழக அரசு எப்படி அணுகப்போகிறது என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஏனென்றால், கடந்த தி.மு.க., அரசு பிறப்பித்த தமிழ் பயிற்று மொழி தொடர்பான உத்தரவை ரத்து செய்யக்கோரி ஆங்கில பள்ளிகள் சார்பில் வாதாடியவர் சீனியர் வக்கீல் என்.ஆர். சந்திரன், இவர் இப்போது தமிழக அரசின் அட்வகேட் - ஜெனரலாக உள்ளார்.

இதேபோல், ஆங்கிலப் பள்ளிகள் சார்பில் ஆஜரான சீனியர் வக்கீல் முத்துக்குமார சாமி, இப்போது தமிழக அரசின் கூடுதல் அட்வகேட்-ஜெனரலாக உள்ளார்.

இதைவிட பெரிய விஷயம், தமிழ் வழிக் கல்வி உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று கடந்த ஆண்டு பிப்ரவரி 21ம் தேதி பகிரங்கமாகவே ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டார். இந்த அறிக்கையில், "தமிழைக் கட்டாயப் பாடமாக்கும் அரசின் உத்தரவால், அனைத்துப் பள்ளிகளும் மத்திய அரசு கல்விக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று, இந்தி மொழியை தமிழகத்தில் நுழைவதற்கு வழி வகுக்கச் செய்யும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் இந்தி நுழைவதை தடுக்கும் வகையில் ஏற்கெனவே உள்ளவாறு பள்ளிகளில் ஆங்கிலமும், தமிழும் நீடிப்பதே அண்ணாவின் இருமொழிக் கொள்கையை பாதுகாப்பதாக அமையும். ஆங்கிலத்தை பின்னுக்கு தள்ளிவிட்டு தமிழில் மட்டுமே ஆரம்பக்கல்வி என்ற நடைமுறையை

கட்டாயப்படுத்த நினைப்பது நமது எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வோடு விளையாடும் விஷயமாகும். எனவே, அரசு பிறப்பித்த தமிழ் வழிக் கல்வி கட்டாய உத்தரவை ரத்து செய்ய வேண்டும்,'' என்று ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

கடந்த தி.மு.க., அரசு பிறப்பித்த தமிழ் வழிக் கல்வி உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்திய ஜெயலலிதா, இப்போது தமிழக முதல்வராக உள்ளார்.

இந்த நிலையில், நாளை உச்சநீதிமன்றத்தில் வர இருக்கும் தமிழக அரசின் அப்பீல் மனு மீது அரசு எத்தகைய விளக்கத்தை அளிக்கப் போகிறது என்கிற எதிர்பார்ப்பு அனைவரின் மத்தியிலும் எழுந்துள்ளது. ஒருவேளை மனு மீதான விசாரணை தள்ளிவைக்கப்பட்டாலும், இந்த வழக்கில் தமிழக அரசு சார்பில் வக்கீல் ஆஜராகும்போது, அரசின் நிலையை விளக்க வேண்டியது வரும்.

கடந்த தி.மு.க., அரசு தொடுத்த இந்த அப்பீல் வழக்கை தொடர்ந்து நடத்த இப்போதைய அரசு தீவிரம் காட்டுமா என்கிற கேள்விக்குறியும் எழுந்துள்ளது. இருந்தாலும் சில தமிழ் வளர்ச்சி இயக்கங்கள் உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளதால் அவர்கள் இந்த வழக்கில் தீவிரம் காட்டுவார்கள் என எதிர்பார்க்கலாம்''.

ஏப்ரல், 2002இல் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்போது தமிழக அரசு தன் கொள்கை முடிவைத் தெரிவித்திருக்கவேண்டும். ஆனால் அப்படி ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

விசாரணையின் போது நடந்தவற்றைத் 'தினமணி' (4.4.2002) இதழில் வந்தபடியே தருகின்றேன்.

''அப்போது தமிழக அரசு வழக்கறிஞர், 'இப் பிரச்சினையை நீதிமன்றத்தின் முடிவுக்கே விட்டுவிடுகிறோம்' என்று தெரிவித்தார்.

'அவ்வாறே சொல்ல முடியாது. மேல் முறையீட்டு மனுவை அரசு திரும்பப் பெற்றுக் கொள்கிறதா, இல்லையா?' என்று கேட்டனர் நீதிபதிகள்.

'திரும்பப் பெறவில்லை' என்று அரசு வழக்கறிஞர் கூறினார்.

'சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் தொடர்பாக 11 நீதிபதிகள் கொண்ட முழு பெஞ்ச் விசாரணை நடத்துகிறது. அந்த விசாரணை முடியும் வரை இந்த வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது' என்று நீதிபதிகள் அறிவித்தனர்''.

சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் தொடர்பான விசாரணை முடிவைப் பார்த்த பிறகுதான், உச்சநீதி மன்றத்தில் 'தமிழ் வழிக் கல்வி' குறித்த தீர்ப்பு என்பதனைப் பார்க்க முடியும். அதுவரை 'ஒத்தி'தான்.

இந்த நிலையில் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் திருவனந்தபுரத்தில் உள்ள 'அனைத்துலக திராவிட மொழியியற் பள்ளி'யின் (International School of Dravidian Linguistics) மதிப்புறு இயக்குநருமாகிய முனைவர் வ.அய். சுப்ரமணியன் அவர்கள் இந்த வழக்கில் தன்னையும் இணைத்துக்கொள்ளுமாறு ஏற்பாடு செய்தார். திரு. கே.பி.எஸ். இராசன் என்பவர் இவரது வழக்கறிஞர் ஆவார்.

வ.அய்.சுப்பிரமணியம் தன் வாதத்தை எப்படி எடுத்துவைக்கிறார் என்பதைப் பாருங்கள்.

The learned Judges in para-16 have observed that the Constitution of the Mohan Committee is arbitrary and irrational. The reasons are:

1. One Tamil Annal who threatened the Government with a fast until death was a member of the Committee. The ruling of the Supreme Court on the inclusion of Naquisbund in a Committee in which his own promotion was involved was cited. In the case cited. Naquisbund was a beneficiary because he was to be promoted. The cause for which Dr. Tamil Annal stood for is not for his personal benefit. Further there are four more members in the committee. He is not the one and his word will not be the final one. Further he is one of the best Scholars in Tamil with a firm grounding in old Tamil and Grammars who is referred to as one Tamil Annal which in the literary circle will be looked at with dismay, because it has an indication of disregard, which he does not deserve. I am sorry that the learned Judges have used such an adjective.

Regarding the inclusion of Justice S. Mohan as one who had recorded his views in a judgement in the High Court earlier, the Court has objected to. Judgements are changable like opinions. Further Mr. Mohan being a distinguished judge who has grounding in the language and its development will be an asset. rather than, a liability as indicated in the judgement.

The Hon. Judges have observed that Scholars of Telugu, Kannada and Malayalam should have been included to give worthy recommendations. The neighbouring States have adopted the medium of the State languages in the primary and High School classes without much

ado when the linguistic States were formed on the basis of language. Therefore it is unnecessary to ask the opinion of the Linguistic Minorities to be in a Committee which has to decide on the Tamil mother - tongue medium. Also if the linguistic minorities referred to by the judges are to be included, the Tribes who are about forty in number need to be included, who need much more protection than the Telugus, Kannadigas and Malayalees; the Urdu speaking Muslims will also canvas for membership. This will lead to a continued legal battle which will end up in delay and no recommendation by the Committee is possible in a reasonable time.

Further the learned Judges have observed that child Psychologists and Neurologists could have been nominated in the Committee. The most knowledgeable Scholars in the areas of medium of education are the Linguists whose inclusion unfortunately is not mentioned in the judgement. Also the Neurologists have very little direct knowledge of the working of the language. It is surprising that the recommendation of the judges is to drop the most knowledgeable Linguists bu the include the least connected Secialists. The whole thrust of the observations on this section by the Hon. Judges is unfortunate with a singular focus of finding fault with the organization of the Committee.

The short time taken by the Committee for a serious subject was questioned by the Court. It had 26 days. The Government took five months to issue the said order which was now challenged. When the Committee has stated that "the matter is comlicated" but has completed its work in about three weeks, the court doubts whether all relevant matters were evaluated by the Committee.

The report of the Committee if read carefully will show that it has been done with care and with the future well-being of the people of Tamil Nadu in its mind. The role of English in the curriculum is well stresses in that report. The said report is not about the pros and cons of the medium of instruction but to introduce Tamil in the lower and other classes for the Tamil speakers. It has annexed the Government Orders from the neighbouring States like Karnataka, Andhra and West Bengal. So also the Supreme Court judgement on the medium of education about which the present judgement has a reference. If the question of medium is to be discussis, then a large groups has to be consulted. Its recommendation is on the use of Tamil as a medium in the primary and higher classes. Further the said report has annexed the Government Orders from Karnataka. Andhra Pradesh and West Bengal on the medium and a not on the officials consulted there.

Instead of appreciating for doing a commendable job, within three and half weeks, with much less expenditure to the exchequer of Tamil Nadu, the Court has categorized it as a 'hurried report' which is unfortunate. A long drawn out Committee with terms extended for years need not produce always a comprehensive report.

The Dravidian parties which came into power in Tamil Nadu and even the Congress party which was in power before that, for more than a decade, gave importance to Tamil. Use of Tamil in all spheres was one of the principles on which the Dravidian parties were swept to power in Tamil Nadu. When there was an agitation against the non use of Tamil in Tamil Nadu in the lower classes and the mushroom growth of the English Medium Schools providing false hopes that the English medium is the ladder for betterment in life and securing jobe in the Government of Tamil Nadu and elsewhere, the Government of Tamil Nadu had the onerous duty to tackle the role of Tamil in the primary and other classes. Hence the report of the Committee produced with all supportive annexures need acceptance instead of being termed as 'hurried'.

The case of Matriculation Schools started in 1950 with English medium has been repeatedly mentioned by the learned Judges. The outlook of the Government in the Centre and States after the formation of the Linguistic States in 1957 is to emphasize ththe language of the States. This has not been taken into consideration by the Judges. Knowledge of English and other international languages are necessary for the development of higher research in the States and in the country. The medium of Education in the State language will help all citizens to acquire the three Rs., and to acquire knowledge, about the professions which they propose to pursue. Regarding the Vernacular as the medium, we are to cite below the UNESCO report which unfortunately was not taken into consideration by the learned judges. English medium will create an elitist class which will be few in number where as the Tamil mother tongue medium will prepare all citizens to have a decent standard of living by acquiring knowledge through the mother-tongue which is easy for him to acquire than through a foreign tongue.

In para 27, the judgement discusses the difficulty in opening classes for linguistic minorities as conceived of by the Constitution. The 'balance of convenience' accepted by the Supreme Court will provide an answer in starting schools for other mother tongue speakers like Telugu, Kannada, Malayalam, the forty and more Tribal languages if the speakers want them and if the number of students are sizeable. i.e., forty in the

whole school. Because of some practical difficulties as envisaged by the Court, English medium is not a remedy for the schools with Tamil or other mother-tongue as medium.

As in the case of minority students, those who desire to go to other States to avail of job opportunities have to take to the English medium studies according to the judgement. What is the percentage of students who migrate to other States is not stated by the judges. Though this aspect has not been studied, the number of language minorities from the South in other States in the North will show that not more that 3% will go to other States for seeking employment. The predominant majority will stay in Tamil Nadu. Should they not study in their mother tongue-medium for a decent living? The Census of 1991 gives the figures of the language minorities in other States. They are neqliqible. Therefore, to abandon the Tamil medium to serve a few schools not be a wise decision. Also by studying in the Tamil Medium Schools, English learning is not recommended in the report , to be abandoned. In fact the said Mohan Committee grieves oover the low standard of teaching English in Tamil Nadu and advises for appointing well trained teachers in English in the Schools.

In para 31 there is a lengthy discussion on the definition and identification of the mother tongue.

It is unfortunate, that none of the Counsels for the appellants were aware of a UNESCO document on the "vernacular as the medium of Education" which was published in 1957 after a Conference of Experts convened by the UNESCO in 1953. A Xeroxed copy of Chapter-II reproduced in book of Joshua Fishman is enclosed. (a copy of the whole Monograph was later received and the said Chapter is a true reproduction of the one found in the Monograph). In that Chapter the definition of the mother-tongue is clearly spelt as "the language which a person acquires in early years and which normally becomes his natural instrument of thought and communication". It is not the mother's or father's tongue as interpreted by the learned judges, Since U.N. documents are given much credence by the learned judges, the UNESCO document on the use of Vernacular will again be quoted by me when the relevant sections of the judgements are discussed. The learned judges observe at the end of section 31 that the Government of Tamil Nadu considered the entire issue on the basis that the tongue of the mother is the mother-tongue of the child. Unfortunately nowhere in the Government Orders cited as appendix or in the arguments of the Attorney General such a statement is found.

In para 32 the learned Council's arguments that in the Kindergarten classes, it is English which is spoken by the children and the teachers and in the multi-storied buildins having several apartments, it is English which is spoken are accepted, by the learned judges. The two observations are not based on statistics but are only impressions, Another very important point is that they are urban centred and bulk of the Schools is Tamil Nadu are in rural areas. The argument that mother-tongues are many and instead of opening of schools for the minority-mother-tongue speakers, the English medium is an acceptable remedy is also accepted by the learned judges. This is pedagogically a very unacceptable solution, because English is far removed in pronunciation, grammar and in concept formation from the Indian Languages. Also to make English the medium in the Schools is to keep the Indian population dependant on that foreign languages perpetually. Most important of all, the opportunities of developing the mother-tongue especiall Tamil to become an effective instrument of communication and thought will not be possible if not made a medium in schools. Slavery in language will continue if English is continued as a medium even after India being politically free. The main focus of the recommendation of the Mohan Committee and the G.O. of the Government of Tamil Nadu is entirely for the development of Tamil and the well being of the Tamils. The focus gets diffracted when Section –14 analyses the procedural short-comings like non-registration of the Association, the Government to proceed after examining the request of various groups and getting the opinion of several departments etc., in the Government of Tamil Nadu.

The G.O.'s of Karnataka, Andhra appended with the Mohan Committee report and the G.O. of the Government of Tamil Nadu are similar in their focus. Most of the minorities have no complaint about the medium in those States. So also in the State of West Bengal. The said Committee and the Government of Tamil Nadu have acted in consonance with the G.O. 's of other States in the Indian Union.

Section 35 deals with the job opportunities that will shrink if Tamil Medium is adopted, Countries like Russia, China and or even USA and Uk WHERE ONE OR THE OTHER WORLD LANGUAGES ARE THE MEDIUM HAVE UNEMPLOYMENT PROBLEMS. If the desire of every educated person is to get a white collar job, it will be impossible for any Government to provide enough of them. Areas of carpentry, masonry, business etc., and the field of agriculture and in other unorganized sectors, shortage of personnel is noticed. None in Holland or Norway who study

in their mother tongue even in the Universities is reluctant to undertake farming or construction work. Dignity of labour and betterment of the area of work undertaken by the educated persons are noticed in those countries. Further a reader of the report of the Mohan Committee will find that the study of English as a second language is emphasized by that Committee. Only the medium in Tamil or mother tongue in consonance with the recommendation of the opening of part-time schools for teaching English , Russian, Chinese, Japanese etc., in Tamil Nadu. All English medium students have not succeeded in getting jobs even in U.K, and USA let alone in other States in India.

In that Section, an instance of getting successfully the attendership by one who has studied in the English medium and the candidate with Tamil medium loosing it is mentioned.

Studying a language as a subject and as a medium is not differentiated by the learned judges. The study of English as a subject is not eliminated in the Mohan Committee Report. The advantages that accrue to a student by studying a in a medium are minimal. The students always are at a disadvantage, if they study the subject in the medium of another language, neglecting their mother-tongue.

The percentage of job seekers outside the State of Tamil Nadu will be 3%. This is a guess estimate on the basis of Census of 1991 which gives the figures of other language speakers in other States. The predominant majority lives in the villages of Tamil nadu whose lifestyle has to be improved only by education. This can be done with less effort if taught through the mother-tongue. The judgement emphasizes the minor factor of migration, in favour of the English medium.

Incidentally in a recent study of the population of the northern language speakers called Indo-Aryan speakers in the four Southern States, it is found that the Indo-Aryan speakers are more in number than the South Indian Language speakers in the Northern States. Not all North Indians have studies in the English medium schools to migrate to

Section 37 mentions about the culture and language. I could not find anywhere in the report, that culture is exhibited in one's conduct, dress, behaviour and his knowledge of literature which he has learnt in Tamil, as cited in the judgement. The correct translation of the passage in the report will be that 'by learning Tamil literature intensely one will imbibe the Tamil culture'.

The definition of culture from the Oxford Dictionary, Websters etc, is extracted in support to contradict the statement in the Report. Definition of culture in any document is not easy. Certainly a general dictionary like that of Oxford or Websters will not give any acceptable definition to the professionals.

Language based culture is expressed very effectively in the publication of the UNESCO on 'the use of Vernacular languages in Education' p.40 I quote;

"A necessary concomitant of this ideal is the use of the mother-tongue. Since language is an aspect of culture and "the shrine of people's soul". To underrate the observation of the Mohan Committee on culture by Quoting general Dictionaries is most unfortunate.

One more observation whether intellectual facilities are less with reference to the education one gets in his mother-tongue? A recent study of the migrants who speak Spanish in the New Mexico, USA will be relevant here. The I.Q. of the Spanish children who were taught only in English was less; when they were taught in Spanish and English it was more.

Section 52 notes that the change of medium is by a Government Order of Tamil Nadu and not by a legislation. A Government Order is as good as a legislative decision. The single bench of the High Court has accepted that order as sufficient for the purpose . Also in Karnataka and Andhra, such policy decisions are implement ed by the Government Orders which were appended to the Mohan Committee Report. Though a law of the legislature will enable to implement the decision more effectively the long delays involved and the necessary assent of the Centre needed in some cases, will lead any Government to implement by a Government Order than by an Act of the Assembly. Even an Act can be questioned in a Court of Law like a G.O. leading to further delay.

Section 56 discusses the international Law and the need to enact a Municipal Law to implement the change of medium.

The UNO covenant of Human Rights mentions only the right to education of the children. The same UNO in a resolution authorized the UNESCO, another body of its creation, to examine the question of medium in education in 1953. Experts in the field of education, linguistics and allied fields and those who did extensive field studies assembled and produced a document called Monographs on Fundamental Education, the use of Vernacular Languages in Education, 1953: In that Monograph,

it is unequivocally stated that "It is important that every effort shoul be made to provide education in the mother-tongue".

It has also defined the mother-tongue "as the language a person acquired in early years which normally becomes his natural instrument of thought and communication" p.46

Article 350 as quoted in the judgement read thus: "It shall be the endeavour of every State and of every local authority within the State to provide adequate facilities for instruction in the mother-tongue at the primary state of education to children belonging to the linguistic minority groups".

Section 75 quoting the rulings of the Supreme and other Courts, the learned Judges observed that "the right to education is a fundamental right which also includes the right to choose the medium of instruction and it can be exercised by the parent on behalf of their children".

The right of a parent over his children is only for their positive well being and not for their deviant development. The choice of a medium other than the mother tongue, has been emphasized by the said UNESCO document and the injury to the child leading to the dropping out from classes, the neurological effect on the children when the medium is an alien one, have been discussed in detail by the UNESCO document ited above. Unfortunately, the counsels and judges appear to be ignorant of this document. Also, when the country has 35% of the adults as uneducated, the parents cannot reasonably be expected to choose the medium on which the child has to study . The quote from Drawn given in the judgement that "the species which are responsive to change will survive" further reinforces that the findings of the UNESCO experts that the mother-tongue should be the medium in the primary classes is a change that the species will adopt to their advantage.

Section 77 deals with the medium of English and the difficulties faced by some students to study in the English medium. While the emphasis of the judgement is on urban students at the neglect of the rural ones who are considerable in number, even (there in the urban areas), according to the cuttings of the newspaper Dinamalar,enclosed, it is the Schedule Caste, Schedule Tribe and Backward Communities fail in English in numbers and seek the help of tutorial colle The English medium even in the schools and colleges will end up in creating an elite class mostly of the Forward Communities and a poor class consisting of Backward and Scheduled Communities mostly living in the rural areas. In numbers, the rural students are more than the urban students.

Another important point which the Court has failed to note which is very familiar to language experts is that all developed nations with a higher per capita income have their state language as the medium of instruction and not a foreign tongue: USA, Japan, UK, France, Germany to quote only the well-known countries do not have any oher languages except their national languages as medium of study from the lowest to the highest classes in the University.

Another sad fact is the disreagard of one of the recommendations of the Mohan Committee to strengthen the study of English in the schools and colleges while advocating the use of Tamil mother tongue as the medium of instruction.

The language policy of Karnataka was implemented by a G.O. not by an Act of the Legislature as suggested by the Judgement p.157

At the end of Section 91, the Supreme Court decision that: "It cannot be contended that a student studying in a school from Karnataka need not know the regional language. It should be the endeavour of every State to promote the regional language of that State" is a far-sighted decision. The bench of the High Court Madras felt that this observation was not on the medium of instruction. If promotion of the regional language by the State has been accepted as a duty of the State, whether it is to be taught as a subject or/and as a medium is for the pedagogical experts to decide. There is no restriction imposed by the Supreme Court on the State of Karnataka not to have kannada as a medium of instruction in schools when it observed that it should be the endeavour of every State to promote the regional language.

The right to education which is a fundamental right has been interpreted by the learned judges as one including the right to choose the medium of instruction. There may be court rulings in other States. Such rulings are made not by taking into consideration the learned reports of the UNESCO and the definition it gives to the mother tongue as the person's natural instrument of thought and communication. No one other than the person concerned has the right to say which is his mother tongue. The Mohan Committee Report is emphatic in teaching English as a subject. Because the development of the regional language is the responsibility of each State, it will not be possible for the regional languages to develop if not made as media where they can express all aspects of knowledge. Otherwise, the regional language will remain only as the language of short stories and novels with little room for augmenting the vocabulary and concepts of Science and Humanities.

The Xerox copies of the opinion of Rabindranath Tagore and the Father of the Nation, Mahatma Gandhi, are also enclosed to confirm the focus on the mother tongue as a medium stressed by the Mohan Committee...

அனைவருக்கும் தெரியவேண்டிய செய்திகள் என்பதால் தமிழில் தருகிறேன்.

மேதகு நீதிபதிகள் மோகன் குழு அமைப்பு என்பது தன்னிச்சையானதும், பகுத்தறிவுக்கு ஒவ்வாததும் ஆகும் என்று 16ஆவது பத்தியில் குறிப்பிட்டுள்ளார். அதற்கான காரணங்கள் இவைதாம்:

1. சாகும் வரை உண்ணாநோன்பிருந்து அரசையே மிரட்டிய தமிழண்ணல் இக்குழுவில் ஓர் உறுப்பினர், நாகுயிஸ்பந்து என்பவர் ஒரு குழுவில் இடம் பெற்றது குறித்து உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியுள்ளது. அக்குழுவினால் அவருக்குப் பதவி உயர்வு வழங்கப்படவேண்டியிருந்தது. அவர் பதவி உயர்வு பெற்றால் நாகுயிஸ்பந்து அதன் பயனை அடைபவராக இருப்பார். எனவே அதுகுறித்து உச்சநீதி மன்றம் சொன்னது சரிதான்.

ஆனால், தமிழண்ணலுக்கு இதில் சொந்தப் பயன் ஏதுமில்லை. அக்குழுவில் மேலும் 4 பேர் இருக்கிறார்கள். அவர் ஒருவர் மட்டுமே முடிவெடுப்பவர் இல்லை. அவருடைய சொல்லே இறுதியானதும் ஆகாது. இலக்கிய, இலக்கணத்தில் தேர்ச்சிபெற்ற தமிழறிஞர் அவர். இப்படிப்பட்ட நிலையில், மேதகு நீதிபதிகள் இதற்காக மேற்கண்ட அடைமொழிகளைப் பயன்படுத்தியதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்.

அடுத்து, நீதிபதி மோகன் அவர்களையே குழுத்தலைவராகப் போட்டது பற்றியது. இதற்கு முன் உயர்நீதிமன்றத்தில் ஒருமுறை தீர்ப்பு வழங்கும்போது அவர் கூறிய கருத்துகள் குறித்துக் கணக்கில் எடுத்துக் கொண்டு, இதனையும் மறுத்துள்ளார்கள் நீதிபதிகள். கருத்துகளைப் போலவே தீர்ப்புகளும் மாறக் கூடியவை. மேலும் நீதிபதி மோகன், தீர்ப்பில் கூறப்பட்டபடி இல்லாமல் மொழியிலும் அதன் வளர்ச்சியிலும் ஈடுபாடு படைத்த வல்லுநர் அவர் என்பதை மனத்திற் கொள்ளவேண்டும்.

வலிமையான பரிந்துரைகளைச் செய்வதற்கு தெலுங்கு, கன்னட, மலையாள அறிஞர்களையும் குழுவில் சேர்த்திருக்கலாம் என நீதிபதிகள் கூறியுள்ளனர். மொழி அடிப்படையில் மொழிவாரி மாநிலங்கள் பிரித்து அமைக்கப்பட்டபோது, அண்டை மாநிலங்கள் தங்கள் மாநில மொழியினை தொடக்கப்பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் அதகம் அலட்டிக் கொள்ளாமலேயே பயிற்றுமொழிகள் ஆக்கிவிட்டன. எனவே, தாய்மொழியாம் தமிழைப் பயிற்று மொழியாக்குவதற்கு மொழிச் சிறுபான்மையினரின் கருத்துகளைக் கேட்க வேண்டுமென்பது அவசியமற்றதாகும். நீதிபதிகளால்

குறிப்பிடப்பட்ட மொழிச் சிறுபான்மையினரைக் குழுவில் சேர்க்க வேண்டுமென்றால் தெலுங்கு, மலையாள, கன்னடியர்களைவிட அதிகம் பாதுகாப்புத் தேவைப்படுகின்ற 40க்கும் மேற்பட்ட பழங்குடியினரையும் குழுவில் சேர்க்கவேண்டும். உருது பேசும் இசுலாமியர்க்கும் குழுவில் இடம்பெறவே முயல்வர். இது எங்கே கொண்டுபோய்விடும்? சட்ட ரீதியாகச் சண்டை போட்டுக் கொள்ளத்தான் நேரம் சரியாக இருக்கும். இதனால் தேவையற்ற காலதாமதம் ஆவதுடன் ஒருகுறிப்பிட்ட காலத்திற்குள் குழு தன் பரிந்துரைகளைச் செய்ய முடியாமலும் போய்விடும்.

மேலும் நீதிபதிகள் கூறும்போது, குழந்தைகளின் உளவியல் அறிந்த மருத்துவர்களும், நரம்பியல் வல்லுநர்களும் குழுவில் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கலாம் என்கின்றனர். பயிற்றுமொழி தொடர்பாக அதிக அளவு ஆராய்ந்து அறிவு வலியோடு திகழ்பவர்கள் மொழியியலாளர்கள்தாம். ஆனால் தீயூழ் காரணமாக (துரதிருஷ்ட வசமாக) தீர்ப்பில் இது குறித்து எதுவும் சொல்லப் படவில்லை. மேலும் நரம்பியல் வல்லுநர்களுக்கு மொழியின் பலவகையான பயன்பாடு குறித்த நேரடியான அறிவு குறைவாகவே இருக்கும். எனவே மிகக் குறைந்த தொடர்புடைய சிறப்பு மாநில வல்லுநர்களைச் சேர்க்கவும், மிகுந்த அறிவு வல்லமையுள்ள மொழியியலாளர்களை விட்டு விட்டும் மேதகு நீதிபதிகள் கூறிய பரிந்துரைகள் மிகவும் வியப்பை அளிக்கின்றன. மொத்தத்தில் குழு அமைக்கப்பட்டதில் குறை காண்பது எனும் ஒரே நோக்கத்தோடு நீதிபதிகள் இத்தகைய கருத்துகளைக் கூறியிருப்பதாகவே கொள்ளலாம்.

இது, குழு தன் முடிவுகளை எட்டுவதற்கு எடுத்துக் கொண்ட குறுகிய காலத்தையே குறையாக எடுத்துக்கொண்டு நீதிபதிகள் தங்கள் வினாக்களைத் தொடுத்துள்ளனர். குழு 26 நாள்கள் எடுத்துக் கொண்டது. இப்போது வழக்கிற்கு வந்துள்ள ஆணையைப் பிறப்பிப்பதற்கு அரசு ஐந்து மாதகாலம் எடுத்துக் கொண்டுள்ளது. 'இந்தப் பிரச்னை மிகவும் சிக்கலானது என்று குழு கருத்துச் சொல்லியிருந்தாலும், 3 வாரங்கட்குள் தன் பணியை முடித்துள்ளது. இதற்குத் தகுதியான எல்லாச் செய்திகளும் அலசப்பட்டிருக்குமா என்று நீதிபதி குழு ஐயத்தைக் கிளப்பியுள்ளது.

குழு அறிக்கையைக் கவனமாகப் பரிசீலித்தால் தமிழக மக்களின் எதிர்கால நலன்களை மனத்தில் கொண்டு மிகுந்த கவனத்தோடு அறிக்கையைத் தந்துள்ளமையைக் காணலாம். இந்த அறிக்கையில் கல்வியில் ஆங்கிலத்தின் அவசியம் பயிற்றுமொழிக் கொள்கையின் நலந்தீங்குகளை ஆராய்ந்துள்ளது. தமிழ் பேசும் மக்களின் கீழ்நிலையிலும் மேல் நிலையிலும் தமிழை அறிமுகப்படுத்துவதில் அறிக்கை கவனம் செலுத்தியுள்ளது. அண்டை மாநிலங்களான மேற்கு வங்கம், ஆந்திரா, கர்நாடகம் ஆகியவற்றிலிருந்து தொடர்புடைய அரசாணையைப் பெற்று குழு இணைத்திருக்கிறது. சென்னை உயர்நீதிமன்றம் மேற்கோள்காட்டிய, பயிற்றுமொழி தொடர்பாக உச்சநீதிமன்றத்

தீர்ப்பினையும் காட்டியுள்ளது. பயிற்றுமொழி பற்றிய வினாவினை விரிவாக விவாதிக்க வேண்டுமென்றால் மிகப்பெரிய கூட்டத்தினரோடு கலந்து பேசவேண்டும். தொடக்கநிலை மற்றும் உயர்நிலைக்கல்வியில் தமிழைப் பயிற்றுமொழியாக்க வேண்டும் என்பதே அதன் பரிந்துரை. இக்குழு பிற மாநில அறிக்கைகளை, அங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடல் குறிப்புகளோடும் சேர்த்து வழங்கியிருக்கிறது. தமிழக அரசுக்கு அதிகச் செலவு வைக்காமல், மிகக் குறைந்த செலவிலேயே மூன்றரை வாரங்களுக்குள் இக்குழு பாராட்டத்தக்க பணியினை நிறைவேற்றியிருக்கிறது. ஆனால் இதனைப் பாராட்டுவதற்குப் பதிலாக உயர்நீதிமன்றம் இதனை ஓர் 'அவசர அறிக்கை' என்று வருணித்திருப்பது நமது தீயூழ் ஆகும். (துரதிருஷ்டமாகும்) ஆண்டுக்கணக்காக நீட்டிக்கப்பட்டு அதிக காலம் இயங்குவதாலேயே ஒரு முழுமையான அறிக்கையை அது தந்து விடும் என்று சொல்ல முடியாது.

1967க்கு முன் பல ஆண்டுகள் ஆட்சியிலிருந்த காங்கிரசுக் கட்சியும் சரி, அதன்பின் ஆட்சிக்கு வந்த திராவிடக் கட்சிகளும் சரி தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. தமிழ்நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிய திராவிடக் கட்சிகளின் 'எல்லாத் துறைகளிலும் தமிழின் பயன்பாடு' என்பது அவற்றின் குறிக்கோள்களில் ஒன்றாகவே இருந்தது. அதாவது 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்பது அவற்றின் கோட்பாடு. வாழ்க்கையின் மேம்பாட்டுக்கும், தமிழ்நாடு அரசிலும், வேறு இடங்களிலும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கும் ஆங்கிலப் பயிற்றுமொழி ஒன்றே தீர்ப்பு என்பது போலத் தவறான வாக்குறுதிகளை அள்ளி வழங்கி, வரைதுறையில்லாமல் ஆங்கிலப் பயிற்று மொழிப் பள்ளிகள் வளர்ந்து வந்ததையும், கீழ் வகுப்புகளில் கூடத் தமிழின் பயன்பாடு குறைந்து வந்ததையும் எதிர்த்துக் கிளர்ச்சிகள் நடைபெறத் தொடங்கின. எனவே, தொடக்க மற்றும் பிற வகுப்புகளில் தமிழின் பயன்பாடடை உறுதி செய்திடவும், இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணவும் வேண்டியது தமிழக அரசின் தலையாய கடமை ஆயிற்று.

எனவே, தக்க துணை ஆதாரங்களோடு படைக்கப்பட்ட குழுவின் அறிக்கை அவசரத்தில் அமைந்தது என்று வருணிப்பதைவிட ஏற்றுப் பாராட்டியிருக்க வேண்டும்.

1950இல் ஆங்கிலப் பயிற்றுமொழியில் தொடங்கப்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகள் பற்றியே மேதகு நீதிபதிகள் திருப்பித் திருப்பிச் சொல்லியிருக்கிறார்கள். 1957இல் மொழி வாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டதில் மாநில மற்றம் மத்திய அரசுகளின் நோக்கமே மாநில மொழிகளை வலியுறுத்தி வளர்த்தெடுப்பதுதான் மேதகு நீதிபதிகளால் இந்த அடிப்படை உண்மை எடுத்துக்கொள்ளப்படவே இல்லை. இந்த நாட்டிலும் இங்குள்ள மாநிலங்களிலும் உயர் ஆராய்ச்சி குறித்த வளர்ச்சிக்கு ஆங்கிலம் மற்றும் அனைத்துலக மொழிகளின் அறிவும் தேவைதான். அந்தந்த மாநில

மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயில்வது எல்லாக் குடிமக்களுக்கும் உறுதுணையாகவே இருக்கும். வட்டார மொழியைப் பயிற்று மொழியாகக் கொள்வது குறித்து யுனெஸ்கோ தந்துள்ள அறிக்கையினை இங்கு பார்வைக்கு வைக்கிறோம். தீயூழ் காரணமாக (துரதிருஷ்டவசமாக) மேதகு நீதிபதிகளால் இவ்வறிக்கை கருதப்படவே இல்லை என்பதுதான் நிலை.

ஆங்கிலப் பயிற்றுமொழி துவக்கமுள்ள வகுப்பினரை உருவாக்கும். ஆனால் அவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையினராகவே இருப்பர். ஆனால் - தமிழ்த் தாய்மொழிப் பயிற்றுமொழியோ சிறந்த அறிவாற்றலைப் பெற்று நாகரிகமான வாழ்வினை நடத்திச் செல்வதற்கான முறையில் குடிமக்கள் அனைவரையுமே அணியும் செய்துவிடும். அத்தகைய அறிவிற்றலை ஓர் அயல் மொழியைக் காட்டிலும் தாய்மொழி வாயிலாகப் பெறுவதே எளிதாக இருக்கும்.

பத்தி 27இல் அரசியல் சட்டத்தால் வழங்கப்பட்ட மொழிச் சிறுபான்மை யினருக்கான வகுப்புகளைத் தொடங்குவதில் உள்ள இடர்ப்பாடுகளை நீதிமன்றத் தீர்ப்பு விவாதிக்கிறது. ஒவ்வொரு பள்ளியிலும் 40 பேருக்கு மேல் இருந்தால் தெலுங்கு கன்னடம் மலையாளம் மற்றும் 40க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்களின் மொழிபேசுவோர் விரும்பினால் அவர்கள் பள்ளிகளைத் தொடங்கிக் கொள்ள உச்சநீதிமன்றம் ஒப்புக் கொண்டுள்ளது. நீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப் பட்டுள்ள நடைமுறைச் சிரமங்களால் தாய்மொழியையோ தமிழையோ பாடமொழியாகக் கொண்டுள்ள பள்ளிகட்கு ஆங்கிலப் பயிற்று மொழி என்பது தீர்வாகாது.

நீதிமன்றத் தீர்ப்பின்படி பார்த்தால் மொழிச் சிறுபான்மை மாணவர்களைப் பொறுத்தவரையில், வேலை வாய்ப்புக் கருதி வேறு மாநிலங்கட்குப் போக விரும்புவர்கள், ஆங்கிலப் பயிற்றுமொழிப் பள்ளிகளுக்குத்தான் போகவேண்டும். பிற மாநிலங்கட்கு இடம்பெயர்ந்து செல்லும் மாணவர்கள் எத்தனை விழுக்காட்டினர் என்பது குறித்து நீதிமன்றம் எதுவும் குறிப்பிடவில்லை. இதுகுறித்து ஆழ்ந்து விவாதிக்கப்படவில்லை என்றாலும், தெற்கிலும், வடக்கில் உள்ள பிற மாநிலங்களிலும் உள்ள மொழிச்சிறுபான்மையினரி 3% மட்டுமே வேலைதேடி வெளிமாநிலங்களுக்குச் செல்பவராவர். மிகப் பெரும்பான்மையினர் தமிழ் நாட்டுக்குள்ளேயே தங்கி விடுபவர்கள்தான். ஒரு நாகரிகமான நல்வாழ்வுக்கு - நலவாழ்வுக்கு அவர்கள் தங்கள் தாய்மொழி வாயிலாகக் கல்வி கற்க வேண்டாமா? 1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பிற மாநிலங்களில் உள்ள மொழிச சிறுபான்மையினர் பற்றிய புள்ளி விவரங்களைத் தருகிறது. அவை புறக்கணிக்கப்படும் அளவு - சிறுபான்மையாகும். எனவே ஒருசிலருக்காக, தமிழ்ப் பயிற்றுமொழியைப் புறக்கணிப்பது என்பது அறிவார்ந்த முடிவாகாது. மேலும், பள்ளிகளில் தமிழ் வழியில் பயில்வதால், அறிக்கையில் ஆங்கிலக்

கல்வி பற்றிய பரிந்துரை இல்லை என்பதும் தவறானதாகும். உண்மையில் மோகன் குழு, தமிழ்நாட்டில் ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பதில் உள்ள தரம் தாழ்ந்த நிலை குறித்து வருந்தியிருக்கிறது. மேலும் பள்ளிகளில் சிறப்பான பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியர்களைப் பணியமர்த்தவும் வலியுறுத்துகிறது.

பத்தி 31இல் 'தாய்மொழி' என்றால் என்ன வரையறை என்பது குறித்தும் தாய்மொழியை அடையாளம் காண்பது பற்றியும் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

1953இல் யுனெஸ்கோவால் நடத்தப்பட்ட வல்லுநர்கள் மாநாட்டுக்குப் பிறகு 1957இல் 'கல்விக்கான பயிற்றுமொழியாக வட்டார மொழி' என்பதற்கான ஆவணத்தினை யுனெஸ்கோ வெளியிட்டுள்ளது. இதுகுறித்து, வாதிகளுக்கான வழக்கறிஞர்கள் அறிந்திருக்கவில்லை என்பது வருந்தத்தக்கது. ஜோசுவா பிஷ்மேமினன் நூலில் இரண்டாம் இயலில் தரப்பட்ட செய்திகள் இங்கு இணைக்கப் பட்டுள்ளன. (ஒட்டுமொத்த மூலத்தின் படி முழுவதும் பின்னர் கிடைக்கப் பெற்றது. மேலே சொன்ன இயல் அதன் உண்மைப் படிதான்) அந்த இயலில் 'தாய்மொழி' என்றால் என்பது குறித்துத் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிது.

''ஒரு மனிதன் தன் தொடக்கக் காலத்தில் எந்த மொழியில் பழக்கம் வைத்திருக்கிறானோ, எது சிந்தனைக்கும் அதனை வெளிப்படுத்துவதற்கும் இயற்கையான கருவியாக அமைகின்றதோ அதுதான் அவனது தாய்மொழியாகும்'' மேதகு நீதிபதிகளால் சொல்லப்பட்டபடி அது தாயார் மொழியோ தந்தையின் மொழியோ அன்று. ஐ.நா. ஆவணங்கள் மேதகு நீதிபதிகள் மிகுந்த மரியாதையுடன் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அதனால், தீர்ப்பின் இதுபோன்ற பகுதிகள் மீண்டும் விவாதிக்கப்படும்பொழுது, வட்டார-தாய்மொழியின் பயன்பாடு குறித்து யுனெஸ்கோ தந்த ஆவணங்களை நான் மேற்கோள் காட்டுவேன். தாய் எந்தமொழி பேசுகிறாரோ அதுதான் குழந்தையின் தாய்மொழி என்ற அடிப்படையிலேயே தமிழ்நாடு அரசு இப்பிரச்னையை அலசியிருக்கிறது என்றே மேதகு நீதிபதிகள் கருதுகின்றனர். ஆனால் மேலே குறிப்பிடப்பட்ட அரசு ஆணைகளிலோ அல்லது அட்வகேட் ஜெனரலின் விவாதத்திலோ மேற்கண்ட கருத்து-வாக்குமூலம் எங்கும் காணப்படவில்லை.

பத்தி 32இல் முன் மழலையர் வகுப்புகள், அநேக அடுக்குகளைக் கொண்ட பல்லடுக்கு மாளிகைகளில் நடைபெறுவதாகவும், அந்த வகுப்புகளில் மாணவர்களும் ஆசிரியர்களும் ஆங்கிலத்தில் தான் பேசிக் கொள்கின்றனர் என்றும் வழக்கறிஞர் வாதிட்டுள்ளார். மேதகு நீதிபதிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த இரண்டு ஏற்புப் பதிவுகளுமே ஓர் மனப்பதிவு அடிப்படையில் அமைந்தவையே தவிர, உண்மையான புள்ளி விவரங்களின் அடிப்படையில் அமைந்தவை அல்ல. (அண்மையில் கும்பகோணம் சரசுவதி மழலையர் (ம) தொடக்கப்பள்ளியில் நேர்ந்த அவலம் குறித்தும், அந்தப்

பள்ளியின் மிக மோசமான நிலை குறித்தும், அது ஒரு பள்ளியே அல்ல; ஒருவரது வீடு என்பது குறித்தும் கவனத்தில் கொள்ளவும்) அவர்கள் கூறும் பள்ளிகள் நகரங்களைச் சார்ந்திருப்பவை. (கும்பகோணம் நகரத்தில் இத்தகைய கோணல் மாணல்கள்). ஆனால் தமிழ்நாட்டில் மிக அதிகமான பள்ளிகள் கிராமப் புறத்தைச் சார்ந்தே அமைந்துள்ளன என்பது முக்கியமான குறிப்பாகும். தாய்மொழிகள் பலவாக இருப்பதாகவும், பல்வேறு மொழிச் சிறுபான்மையருக்காகப் பல்வேறு பள்ளிகளைத் தொடங்குவதைவிட, ஒப்புக் கொள்ளப்படும் தீர்வு என்பது ஆங்கிலவழிப் பள்ளிதான் எனும் விவாதத்தை மேதகு நீதிபதிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இது. அடிப்படையில் ஒப்புக் கொள்ள முடியாத தீர்வாகும். காரணம் இந்திய மொழிகளின் வாக்கியக் கட்டமைப்புகள், இலக்கணங்கள், ஒலிப்பு முறைகளிலிருந்து ஆங்கிலம் வெகுதூரம் விலகி நிற்கிறது. மேலும், பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாக்குவது இந்திய மக்கள் தொகையை அயல் மொழிகளுக்கு அடிமைகளாக ஆக்கும் முயற்சியே தவிர வேறில்லை. இதில் மிகமுக்கியமான குறிப்பு என்பது, பள்ளிகளில் தாய்மொழியை, குறிப்பைத் தமிழைப் பயிற்றுமொழியாக்கத் தவறிவிட்டால் தாய்மொழியைக் குறிப்பாகத் தமிழைச் சிந்திப்பதற்கும், கருத்துப் பரிமாற்றத்துக்கும் வாய்ப்பான கருவியாகப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் இல்லாமலேயே போய்விடும். இந்தியா அரசியல் விடுதலை பெற்ற பிறகும் ஆங்கிலம் பயிற்றுமொழியாகத் தொடரும் என்றால் மொழியடிமைத்தனம் மட்டும் இங்கு தொடர்ந்து கொண்டேயிருக்கும். மோகன் குழுவும் செய்துள்ள பரிந்துரையின் முக்கிய நோக்கமும், (மற்றும் அரசு ஆணையும்) தமிழர்களின் நல்வாழ்வு கருதியும், தமிழ் வளர்ச்சி கருதியுமே அமைந்துள்ளன.

ஆனால் இந்த முக்கிய நோக்கம் கவனத்திலிருந்து திசைதிருப்பப்பட்டுள்ளது. அரசு பல்வேறு துறையினரின் கருத்துகளையும் பெற்று, பல்வேறு குழுவினரின் வேண்டுகோள்களையும் பரிசீலனை செய்துதான் முடிவெடுக்க வேண்டும். ஆனால் நடைமுறைக் குறைபாடுகள் மட்டுமே பெரிதுபடுத்தப் பட்டிருக்கின்றன.

மோகன் குழுவினால் இணைக்கப்பட்டுள்ள கர்நாடக, ஆந்திர அரசாணைகளும் தமிழக அரசின் ஆணையும் தங்கள் நோக்கத்தை ஒரே மாதிரியாகவே புலப்படுத்தியுள்ளன. அந்த மாநிலங்களில் பெரும்பாலும் சிறுபான்மை மொழியினரிடமிருந்து எந்தப் புகாரும் எழவில்லை.

மேற்கு வங்கத்திலும் இதே நிலைதான். இந்திய அரசுக்குள் அமைந்த பிறமாநில அரசாணைகளையும் கூர்ந்து பார்த்துத்தான் மோகன் குழுவும் தமிழக அரசும் செயற்பட்டுள்ளன.

பிரிவு 35 தமிழ்ப் பயிற்றுமொழியைக் கடைப்பிடித்தால், வேலைவாய்ப்புச் சுருங்கவிடும் என்பது குறித்துப் பேசுகிறது. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உலக மொழிகளைப் பயிற்றுமொழிகளாகக் கொண்ட உருசியாவிலும், சீனாவிலும் ஏன் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் கூட வேலையில்லாத் திண்டாட்டம் உள்ளது. கல்வியறிவு பெற்ற ஒவ்வொரு மனிதனின் விருப்பமும் 'வெள்ளைச் சட்டை வேலை'தான் என்றால், எந்த அரசுக்கும் போதுமான வேலைவாய்ப்பினை உருவாக்குவது இயலாத காரியமே ஆகும். தச்சுவேலை, கொத்தனார்வேலை, வியாபாரம் மற்றும் வேளாண்மைத் துறை, பிற அமைப்புச் சாராத் துறைகளிலும் உலகமெங்கும் ஆள்பற்றாக்குறை உள்ளதாகவே கருதப்படுகிறது. ஆலந்திலோ நார்வேயிலோ அங்குள்ள பல்கலைக் கழகங்களிலோ அவரவர் தாய்மொழியில் பயிலும் எவரும், வயல் வேலைகளைச் செய்வதிலோ அல்லது கட்டுமானப் பணிகளைச் செய்வதிலோ எவ்விதத் தயக்கமும் காட்டுவதில்லை. அந்த நாடுகளில் கல்வியறிவு மிகுந்தவர் களிடமிருந்து அவர்கள் பார்க்கும் வேலைகளில் உள்ள சிறப்புத் திறமையும், வேலையின் நாகரிகத் தன்மையும் மட்டுமே எதிர் பார்க்கப்படுகின்றன.

மோகன் குழு அறிக்கையை வாசிக்கும் ஒவ்வொருவர்க்கும், அக்குழு, ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகப் படிப்பதைப் பெரிதும் வலியுறுத்தியிருப்பது தெளிவாக விளங்கும். யுனெஸ்கோவின் கருத்துப்படியே தமிழ் அல்லது தாய்மொழி வாயிலாகக் கல்வி பயில்வதுமட்டுமே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேதகு நீதிபதிகள் தமிழ்நாட்டில் ஜப்பான், சீனம், உருசியன் மற்றும் ஆங்கில மொழிகளைப் பகுதிநேரமாகச் சொல்லித் தரும் பள்ளிகளைத் திறப்பது குறித்து வலியுறுத்தியிருக்கலாம் ஆங்கில வழியில் படித்த எல்லோரும் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் கூட வேலை வாய்ப்பைப் பெற்றுவிடவில்லை. இந்தியாவின் பிறமாநிலங்களிலும் இதுதான் நிலைமை.

இந்தப்பிரிவில் ஆங்கிலப் பயிற்றுமொழி வாயிலாகப் படித்த ஒருவன், தமிழ்வழியில் படித்த மாணவனை விட எளிதாக ஓர் ஏவலர் (Attendar) வேலையைப் பெற்றுவிடுவான் என்று காட்டப்பட்டுள்ளது.

மேதகு நீதிபதிகளால் ஒரு மொழியை ஒரு பாடமாகப் படிப்பதற்கும் (Subject) அந்த மொழிவாயிலாகப் பிற பாடங்களைப் படிப்பதற்கும் (as a medium) உள்ள வேறுபாடு காட்டப்படவில்லை. மோகன் குழு அறிக்கையில் ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் படிப்பது குறித்து அழுத்தமாகவே சொல்லப்பட்டுள்ளது. தங்கள் தாய்மொழியைப் புறக்கணித்து, ஒருபாடத்தை மற்றொரு மொழி வாயிலாகப் படிப்பதில் மாணவர்களிடையே நிச்சயம் ஒரு பின்னடைவு இருக்கும்.

தமிழகத்திற்கு வெளியே வேலை தேடிச் செல்பவர்களின் எண்ணிக்கை 3% அளவுதான் இருக்கும். 1991 மக்கள் தொகைக்

கணக்கெடுப்பின்படி இது ஒரு குத்துமதிப்பான எண்ணிக்கைதான். இக்கணக்கு பிற மாநிலங்களில் பேசப்படும் அவரவர் தாய்மொழியில்லாத பிறமொழிகள் குறித்தும் விவரங்களைத தருகிறது. தமிழ்நாட்டின் பல்வேறு கிராமங்களில்தான் மிகப்பெரும்பான்மையான மக்கள் வாழ்கிறார்கள். அவர்களது வாழ்க்கைப் போக்கினைக் கல்வியால் மட்டுமே மேலோங்கச் செய்ய முடியும். தாய்மொழி வாயிலாகக் கற்பிக்கப்படும்போது, இக்கல்வி அவர்கட்குக் குறைந்த முயற்சியிலேயே கிடைத்து விடுகிறது. ஆனால் நீதிமன்றத் தீர்ப்போ, ஆங்கிலப் பயிற்று மொழிக்குச் சார்பாக, இடம்பெயர்ந்த சிறுபான்மைக் கூறுபாட்டைப் பெரிதும் வலியுறுத்துகிறது.

தென்னகத்தின் நான்கு மாநிலங்களிலும் இந்தோ-ஆரியமொழி எனும் வடமாநில மொழிகளைப் பேசுவோர் எண்ணிக்கை குறித்துக் கணக்கெடுக்கப்பட்டபோது வடபுல மாநிலங்களில் தென்னக மொழியைப் பேசுவோரை விடப் பலமடங்கு அதிகமாகவே இந்தோ-ஆரியமொழியைப் பேசுவோரே இருப்பதைக் கண்டறிய முடிந்தது.

தென்மாநிலங்கட்கு இடம்பெயர்ந்து செல்லும் அளவுக்கு வட இந்தியர் பலரும் ஆங்கிலப் பயிற்றுமொழிப் பள்ளிகளில் பயின்றதில்லை.

தீர்ப்பில் மேற்கோள் காட்டப்பட்ட 'திரை கடலோடியும் திரவியம் தேடு' எனும் பழமொழி அண்மைக்கால மக்களுக்காகக் கூறப்பட்டதில்லை. நிச்சயமாக, இது ஆங்கிலேயர் காலத்திற்கு முந்தியவர்களுக்காகக் கூறப்பட்டது. செல்வம் சேர்ப்பது என்பது ஆங்கிலமொழி அறிவோ அல்லது வேறு உலக மொழி வேறு அறிவோ பெற்றதனால் ஏற்படுவது அன்று. தெற்காசிய நாடுகளில் பரந்து வாழ்ந்த நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் செல்வச் செழிப்பு இதற்குச் சரியான எடுத்துக் காட்டாகும்.

பிரிவு 37 மொழிபற்றியும் பண்பாடு பற்றியும் குறிப்பிடுகிறது. தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளபடி, பண்பாடு என்பது ஒருவர் தமிழ்வழியாகப் படிப்பதன் மூலம் பெறும் இலக்கிய அறிவிலோ, நடவடிக்கையிலா, உடையிலோ, நடத்தையிலோ வெளிப்படுத்தப்படுவது என்று அறிக்கையின் எந்த இடத்திலும் குறிப்பிடப்பட்டதாக நான் கருதவில்லை. அறிக்கையில் உள்ள அந்தப் பகுதியின் உண்மையான மொழி பெயர்ப்பு இதுதான். ''தமிழ் இலக்கியத்தை ஆழ்ந்து படிப்பதன் வாயிலாக ஒருவர் தமிழ்ப் பண்பாட்டைத் தனக்குள் நிலை நிறுத்திக் கொள்ள முடியும்''.

அறிக்கையில் உள்ள 'பண்பாடு' குறித்த கருத்துக்கு எதிராக ஆக்சுபோர்டு மற்றும் வெப்ஸ்டர்ஸ் அகராதிகளில் கருத்துகள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

எந்த ஆவணத்திலும் பண்பாட்டுக்குரிய வரையறையை எளிதாக எடுத்துக் காட்டிவிட முடியாது. நிச்சயமாக, ஆக்சுபோர்டு அல்லது வெப்ஸ்டர்ஸ் போன்ற பொது அகராதிகள், அனைவரையும் ஒப்புக் கொள்ளும் படியான வரையறைகளை வழங்கிட முடியாது.

மொழி சார்ந்த பண்பாடு குறித்து, கல்வியில் வட்டார மொழியின் பயன்பாடு குறித்த யுனெஸ்கோ வெளியீட்டில் அழுத்தமாகவே சொல்லப்பட்டுள்ளது. 40 ஆம் பக்கத்திலிருந்து அதனைக் காட்ட விரும்புகிறேன்.

காரணம், மொழி என்பது பண்பாட்டின் ஒரு கூறுபாடு; மக்களது ஆன்மாவின் வெளிப்பாடு. எனவே, பொது அகராதிகளை மேற்கோள் காட்டி, மோகன் குழுவின் கருத்தினைத் தரக்குறைவாக மதிப்பிடுவது வருந்தத்தக்கது.

மற்றொரு கருத்தும் பார்க்கப்படவேண்டும். ஒருவர்தான் தாய்மொழி வாயிலாகப் பெறும் கல்வியில் அறிவார்ந்த வசதிகள் மிகவும் குறைவு என்று கருதமுடியுமா? அமெரிக்காவின் புதிய மெக்சிகோ பகுதியில் ஸ்பானிஷ் மொழி பேசும் இடம் பெயர்ந்தோரைப் பற்றிய ஆய்வு இங்கு நமக்குப் பொருத்தமாக இருக்கும். ஆங்கிலத்தில் மட்டுமே பயிற்றுவிக்கப்பட்ட ஸ்பானிஷ் குழந்தைகளின் I.Q. மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால் ஸ்பானிஷ் மொழியிலும் ஆங்கிலத்திலும் கல்வி பயின்ற குழந்தைகளின் I.Q. அதிகமாக இருந்தது.

பிரிவு 52 பயிற்றுமொழியை மாற்றுவது குறித்து அரசாணைதான் பிறப்பிக்கப்பட்டுள்ளதே தவிர அது சட்டமாக்கப்படவில்லை என்று குறிப்பிடுகின்றது. சட்டமாக்கப் படுவதைப் போல, அரசாணை பிறப்பிப்பதும் சரியான வழிமுறையே ஆகும்.

உயர்நீதிமன்றத்தின் ஒருவர் அடங்கிய பெஞ்சு, இந்த நோக்கத்திற்கு அரசாணையை போதும் என்று ஒப்புக் கொண்டுள்ளது. கர்நாடகத்திலும் ஆந்திராவிலும் இத்தகைய கொள்கை முடிவுகள் அரசாணைகளாலேயே செயற்படுத்தப்பட்டுள்ளன. அந்த ஆணைகள் மோகன் குழு அறிக்கையுடன் இணைத்து அளிக்கப்பட்டுள்ளன. சட்டமன்றத்தின் வாயிலாக நிறைவேற்றப்படும் சட்டம் இந்த முடிவினை வலிவோடு நிறைவேற்றிட உதவும் என்றாலும், இதில் அதிகப்படியான காலச் சுமைக்கும் ஏற்படும் ஒரு சிலவற்றில் மத்திய அரசின் ஒப்புதலும் தேவைப்படும். அதனால்தான் சட்டமன்றச் சட்டத்தை விட, அரசு ஆணையாலேயே செயற்படுத்த முனைகின்றது.

பிரிவு 56 அனைத்துலகச் சட்டத்தையும், பயிற்றுமொழி மாற்றத்திற்கு நகராட்சிச் சட்டம் இயற்றப்படவேண்டிய தேவையையும் அலசுகிறது.

*(இது மிக முக்கியமான பகுதி)

'ஐநா'வின் மனித உரிமைகள் சங்கம் குழந்தைகள் கல்வி கற்பதற்கான உரிமைகளை மட்டுமே எடுத்துச் சொல்கிறது. அதே ஐ.நா.

அதனுடைய படைப்புகளில் மற்றோர் சங்கமான யுனெஸ்கோவுக்கு கல்வியில் பயிற்றுமொழியின் நிலைமை குறித்து ஆராய்வதற்காக 1953இல் ஒரு தீர்மானத்தின் வாயிலாக அதிகாரம் அளித்துள்ளது. கல்வித் துறையின் வல்லுநர்களும்; மொழியியலாளர்களும், சம்பந்தப்பட்ட பிற துறையினரும், இத்துறையில் பெரிய அளவில் களப்பணி செய்த பலரும் கூடி ஆராய்ந்து அடிப்படைக் கல்வியின் அடித்தளமாகிய 1953, கல்வியின் வட்டார மொழிகளின் பயன்பாடு, எனும் ஓர் ஆவனத்தை உருவாக்கினர். அந்த வரைவில் ஒரேயடியாக ஒரு கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. அது இதுதான். ''தாய்மொழியில் கல்வியை வழங்கிட எல்லாவகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என்பது மிக முக்கியமானதாகும்''.

(யுனெஸ்கோவின் இந்த முடிவினை அனைவரும் மனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்)

அந்தத் தெளிவான அறிவிப்போடு யுனெஸ்கோ 'தாய்மொழி' என்பதற்கு அருமையான விளக்கமும் தந்துள்ளது.

அரசியல் சட்டத்தின் 350அ பிரிவு பின்வருமாறு கூறுகிறது.

''மொழிச் சிறுபான்மைத் தொகுதியினரைச் சார்ந்த சிறுவர்களுக்குக் கல்வியின் தொடக்கநிலையில் தாய்மொழியில் கற்பிப்பதற்காகப் போதிய நலப்பாடுகளுக்கு, வகைசெய்வது மாநிலம் ஒவ்வொன்றின் மற்றும் மாநிலத்தில் உள்ள உள்ளூர் அதிகார அமைப்பு ஒவ்வொன்றின் பெருமுயற்சியாக இருக்கவேண்டும்; மற்றும் குடியரசுத் தலைவர், அத்தகைய நலப்பாடுகளை உறுதியாகக் கிடைக்கச் செய்யத் தேவையானவை அல்லது முறையானவை எனத் தாம் கருதும் ஏவுரைகளை மாநிலம் எதற்கும் பிறப்பிக்கலம்''

பிரிவு 75இல் உச்ச நீதிமன்றம் மற்றும் பிற நீதிமன்றங்களின் தீர்ப்புகளை மேதகு நீதிபதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

''கல்வி பெறுவதற்கான உரிமை என்பது அடிப்படை உரிமையாக, இது பயிற்றுமொழியைத் தேர்ந்தெடுப்பதற்கான உரிமையை உள்ளடக்கியதாகும். இந்த உரிமை தங்கள் குழந்தைகளின் சார்பில் அவர்தம் பெற்றோர்களால் செயற்படுத்தப் படுவதற்கு உரியதாகும்''.

குழந்தைகள் மீது பெற்றோர்க்குரிய உரிமை என்பது இயன்றவரை அவர்கள் நல்வாழ்வு பெறுவதற்கான வகையில்தான் அமையும். ஆனால் அவர்களது விலகிச் செல்லும் வளர்ச்சி குறித்தது ஆகாது. தாய்மொழிக்கு மாறாக வேறு மொழியைப் பயிற்று மொழியாகத் தேர்ந்தெடுத்தால், அதனால் குழந்தைகளுக்கு ஏற்படும் காயங்களால் படிப்பைப் பாதியிலேயே விட்டு விடும் தீங்கு பற்றியும் அயல்மொழி வாயிலாகப் பயில்வதால் குழந்தைகளுக்கு

ஏற்படும் நரம்பியல் ரீதியான விளைவுகள் குறித்தும் யுனெஸ்கோ ஆவணம் விரிவாக விவாதித்துப பதிவு செய்திருக்கிறது. ''துரதிருஷ்டவசமாக'' வாதிட்ட வழக்கறிஞர்களும் மேதகு நீதிபதிகளும் இந்த ஆவணம் பற்றி அறியாமல் இருக்கிறார்கள். மேலும் வயது வந்தோரில் 35%னர் இந்த நாட்டில் இன்றும் கல்வி அறிவு பெறாதவர்களாகவே இருக்கும் நிலையில் தங்கள் குழந்தைகள் தேர்ந்தெடுக்கும் கல்வி மொழி எது என்பது குறித்துக் காரண காரியங்கோடு சிந்தித்துத் தேர்ந்தெடுப்பவர்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

டார்வின் கோட்பாட்டிலிருந்து தீர்ப்பு ஒரு மேற்கோள் காட்டியுள்ளது. ''மாறுதலுக்கு இடமளிக்கும் நுண் கூறுகள்தாம் காலப்போக்கில் நிலைத்து நிற்கும்'' என்பது அது. இது கூட ஒரு வகையில் யுனெஸ்கோ வல்லுநர்கள் கண்டுபிடிப்புகளை மேலும் வலுவுள்ளதாக்கிறது. அவர்கள் கண்டுபிடிப்பு இதுதான். தொடக்கநிலை வகுப்புகளில் தாய்மொழிக்கல்வி என்பதும் கூட நுண்கூறுகள் தங்கள் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு மாறுதல்தான்.

பிரிவு 77 ஆங்கிலப் பயிற்றுமொழி குறித்தும், அப்பயிற்று மொழியில் படிப்பதில் சில மாணவர்கள் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் குறித்தும் பேசுகிறது. ஆனால் தீர்ப்பு வலியுறுத்திப் பேசுவது நகர்ப்புற மாணவர்கள் குறித்து. அதிக எண்ணிக்கையில் உள்ள கிராமப்புற மாணவர்களைப் புறக்கணித்தே இத்தீர்ப்பு அமைகின்றது. 'தினமலரில்' வந்துள்ள செய்தியின்படி, நகர்ப்புறத்திலும், கிராமப் புறத்திலும் தாழ்த்தப்பட்ட வகுப்பு, பழங்குடியினர் மற்றும் பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் தாம் ஆங்கிலத்தில் பெருமளவு தோல்வியடைந்து தனிப்பயிற்சிக் கல்லூரிகளின் உதவியை நாடுபவர்களாக இருக்கிறார்கள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலப் பயிற்றுமொழி எதில் போய் முடிகிறது என்றால் பெரும்பாலான முற்பட்ட வகுப்பினரை மேம்பட்ட வகுப்பினராக மாற்றவும், பெரும்பாலும் கிராமப் புறத்தில் வாழ்கின்ற பிற்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அடங்கிய ஓர் ஏழை வகுப்பினரை உருவாக்கவுமே ஆகும். உண்மையில் நகர்ப்புற மாணவர்களை விடக் கிராமப்புற மாணவர்களே அதிக எண்ணிக்கையில் உள்ளனர்..

மொழி வல்லுநர்கட்கு மிகவும் பழக்கமான முக்கியமான கூறுபாடு ஒன்றினை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது. தனிநபர் வருமானத்தில் உயர்ந்துள்ள வளர்ச்சிபெற்ற நாடுகள் எல்லாமே தங்கள் மாநிலமொழியைத் தான் பயிற்றுமொழியாகக் கொண்டுள்ளனவே தவிர, எந்த ஒரு அயல்மொழியையும் அல்ல. அமெரிக்கா, சப்பான், சீனா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, (இசுரேல் நாடுகூட ஹீப்ரு மொழியில்தான் முழுமையான கல்வியையும் வழங்குகிறது) போன்ற நமக்கு நன்கு அறிமுகமான பெரிய நாடுகள் எல்லாமே தொடக்க வகுப்புகளிலிருந்து பல்கலைக் கழகத்தின் உயர்

வகுப்புகள் வரை தங்கள் தேசிய மொழிகளைத் தவிர வேறெந்த மொழிகளையும் பாடமொழியாக வைத்திருக்கவில்லை.

பயிற்றுமொழியாகத் தாய்மொழியாம் தமிழை வலியுறுத்தும் அதே நேரத்தில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலம் பயில்வதை மேலும் வலுப்படுத்தவேண்டும் என்று மோகன் குழு செய்த பரிந்துரை நீதிமன்றத்தால் கருதப்படவே இல்லை என்பதுதான் வருந்தத்தக்க உண்மையாகும்.

தீர்ப்பின் 157ஆம் பக்கத்தில் குறிப்பிட்டபடி, கருநாடக மாநிலத்தின் மொழிக் கொள்கை என்பது ஓர் அரசாணையால் தான் செயற்படுத்தப் பட்டுள்ளதே தவிர, சட்டத்தால் அல்ல.

பிரிவு 91இன் கடைசியில் குறிப்பிட்டபடி உச்சநீதி மன்றத்தின் முடிவு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது : ''கர்நாடக மாநிலத்தின் ஒரு பள்ளியில் பயிலும் ஒரு மாணவன் வட்டார மொழியை அறிந்திருக்கத் தேவையில்லை என்பது

இது ஒரு தொலைநோக்கோடு கூடிய முடிவாகும். ஆனால் சென்னை உயர்நீதி மன்றத்தின் பெஞ்ச், இந்தக் கருத்து பயிற்றுமொழியைக் குறித்தல்ல என்று கருதிவிட்டது. ஒரு வட்டார மொழியை ஒரு மாநிலம் மேம்படுத்துவது, அந்த மாநிலத்தின் கடமை என்பதை ஒப்புக் கொண்டபிறகு, அம்மொழி ஒரு பாடமாக மட்டுமே சொல்லித் தரப்படவேண்டுமா அல்லது பல பாடங்களையும் சொல்லித் தரும் பயிற்றுமொழியாகக் கொள்ளப்படவேண்டுமா என்பதனை வல்லுநர்கள்தாம் முடிவு செய்யவேண்டும்.

வட்டார மொழியை மேம்படுத்துவது என்பது ஒவ்வொரு மாநிலத்தின் விருப்பார்ந்த கடமையாகும் என்று கூறும் போதே, பள்ளிகளில் கன்னடத்தைப் பயிற்றுமொழியாக வைத்துக் கொள்ளக் கூடாது என்று கர்நாடக மாநிலத்தின்மீது உச்ச நீதி மன்றம் எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை.

கல்வி பெறுவதற்கான உரிமை என்பது ஒவ்வொருவர்க்கும் அடிப்படை உரிமை என்பதனை மேதகு நீதிபதிகள் பயிற்று மொழியைத் தேர்ந்தெடுப்பதும் அதில் அடங்கும் என்னும் போக்கில் பொருள் கொண்டுள்ளார்கள். பிற மாநிலங்களில் இதுபற்றிய நீதிமன்றத் தீர்ப்புகள் இருக்கக்கூடும். ஆனால் அந்தத் தீர்ப்புகள் எல்லாம் தாய் மொழியானது ஒவ்வொரு தனிமனிதனின் சிந்தனைக்கும், அதனைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லும் திறமைக்கும் கிடைத்த இயற்கையான சாதனம் என்று யுனெஸ்கோவின் அறிக்கைகள் எவற்றையும் கருதாமல் அளிக்கப்பட்ட தீர்ப்புகளாகும். தன் தாய்மொழி எது என்று சொல்லும் முழு உரிமை, தொடர்புடைய அந்தத் தனிமனிதனுக்கு மட்டுமே உண்டே தவிர, வேறெவர்க்கும் அந்த உரிமை இல்லை. மோகன் குழு அறிக்கை ஆங்கிலத்தை

ஒரு பாடமாக வல்லமையோடு சொல்லிக்கொடுக்க வற்புறுத்துகிறது. வட்டார மொழியின் வளர்ச்சி என்பது ஒரு மாநில அரசின் முழுப் பொறுப்பு என்பதால், அனைத்து அறிவுக் கூறுகளையும் விரிவாக எடுத்துச் சொல்லும் வகையில் அம்மொழி பயிற்றுமொழியாக்கப்படாவிட்டால், வட்டார மொழிகள் பெரும் வளர்ச்சியடைய வாய்ப்பே இல்லை. மற்றபடி, அந்த வட்டார மொழிப் புதினங்கள் மற்றும் சிறுகதைகளுக்கு இடந்தரும் மொழியாகத்தான் இருக்கும்; அறிவியல் மற்றும் கலைச் சார்பான கோட்பாடுகளுக்கும், சொல்லாட்சிகளுக்கும் மிகச்சிறிய இடமே கிடைக்கும்.

(தமிழ் இலக்கிய மொழியாக நிற்குமே தவிர, வாழ்வியல் மொழியாக ஆகாமல் போய்விடும்)

இந்திய நாட்டின் தந்தை மகாத்மா காந்தி, கவியரசர் தாகூர் ஆகியோரது கருத்துக்கள் அடங்கிய படிகள் இணைக்கப்பட்டுள்ளன. மோகன் குழுவினரால் தாய்மொழியைப் பயிற்றுமொழியாக்கிட வலியுறுத்தப்பட்ட உயரிய குறிக்கோளுக்கு வலுச்சேர்க்கவும், உரிய ஆதாரமாகவும் அவை இங்கு இணைக்கப்பட்டுள்ளன.

அறிஞர் வ.அய்.சு. அவர்களின் விவாதங்களைப் பார்த்தோம். இனி அடுத்தது. . .

உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வதற்கு முன்னால் சட்டத்துறையின் கருத்துக் கேட்கப்பட்டது. சட்டத்துறை கீழ்க்கண்ட கருத்துகளைத் தெரிவித்துள்ளது.

1. The Government received a number of representations from various people including Tamil Scholars and after examining them the Government constituted a Committee headed by Mr. Justice S. Mohan to study the issue and submit a report. The Committee had extensive discussion not only with Tamil Scholars but with persons well connected with Education and submitted its recommendation. The Government examined the report of the Committee and thereafter issued the G.O. Therefore, it is not correct to say that relevant factors were not taken into consideration and irrelevant factors were taken into the consideration. In fact the Government taking into consideration only of the relevant factors. G.O. is very specific, clear and unambiguous. Therefore, it is not vague.

2. Only a distinct class of small section has been distinguished on reasonable basis and they have been excluded being a separate class of its own, Anglo Indian School and C.B.S.E. Schools. In this regard, it may be noted that C.B.S.E. students mostly cover the group of wards of the

officers of the Central Services who are liable for transfer throughout India and to facilitate them to have study in other State also. Since this being based on a reasonable classification, it is not violative of Article 14. All the equals have been treated alike.

இதில் தெளிவாகக் கூறியிருப்பதைக் கவனியுங்கள்.

(C.B.S.E. students mostly cover the group of wards of the officers of the Central Services who are liable for transfer throughout India and to facilitate them to have study in other State also. Since this being based on a reasonable classification, it is not violative of Article 14)

ஆனால் உயர்நீதிமன்றம் மொட்டையடியாக 'சமத்துவம்' வழங்கவில்லை என்கின்றது. நடுவணரசின் பாடத்திட்டத்தில் இயங்குபவை சி.பி.எஸ்.இ. பள்ளிகள் என்பதை உயர்நீதிமன்றம் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

3. Justice Mohan Committee heard the views of the Matriculation Board, the management and the public in an open sitting. Due publicity was given for such a hearing and a quite a number of persons appeared before it and submitted their views. The Government also after receipt of the report heard the views of the Matriculation Board and only then issued the G.O. Therefore, it is not correct to say that petitioner/ management were not given an opportunity of hearing. Therefore, it is not correct to say that the G.O. is hit by the Principles of legitimate expectation.

வாய்ப்புப் பெற்ற மெட்ரிக் பள்ளி நிர்வாகிகளுக்காக உயர்நீதிமன்றம் இவ்வளவு வாதிட வேண்டுமா? அதிலும் அவர்களும் தங்கள் கருத்தைப் பதிவுசெய்தது உண்மையாக இருக்கும்போது உயர்நீதிமன்றம் ஏன் அந்த உண்மையை மறந்தது?

4. Court has upheld the validity of the executive order and the policy of the Government on the medium of instruction. When a State has a right to legislate on the subject it has got an equal right to issue an executive order for the same. As a local law is available under the subject, the Universal Declaration of the Human Rights (convention of the rights of the students) do not have any force here. In the circumstances, the executive order passed has the force of law. The term "kind of education " used in the said Declaration will not and cannot mean "medium of instruction". Kind of education will mean only secular education, religious education, specialized education in specific fields etc. It is stated that

Article 26(3) of the Universal Declaration of Human Rights (Convention on the rights of the Students) has got the force of law and should be observed. Article 253 of the Constitution deals with legislation for giving effect to international agreement. According to the said Article, Parliament has power to make any law for whole or part of India for implementing or convention with any other country or countries or decision made at any International Conference, association or other body.

The significant factor that has to be emphasized is that Article 253 of the Constitution makes it clear that Parliament has got the power to enact laws for the purpose and that law will be binding. In the instant case, in the absence of Parliament enacting any law the view that Article 26(3) of Human Rights Declaration has the force of Law is not maintainable.

சட்டத்துறையும் யுனெஸ்கோவின் கல்வி சார்ந்த அறிவிப்புகளை அறிந்து வைத்திருக்கவில்லை என்றே கருத வேண்டியுள்ளது. இதில் வ.அய்.சு.தான் சரியான விவரங்களை எடுத்துவைத்துள்ளார். உச்சநீதிமன்றத்தில் வாதாடுகின்ற வழக்கறிஞர் இதனைக் கவனத்திற் கொண்டு வாதிட்டால் சரியாக இருக்கும்.

5. Minority have a right only to develop their language and culture and not any language. The minority cannot claim a right for development of English when it is not their language. Therefore, the G.O. is not infringing on the rights of the minority.

சட்டத்துறையின் கருத்துகளை எங்கட்கு எடுத்து வைத்த பள்ளிக் கல்வித்துறை மேல் முறையீடு செய்வது குறித்துத் தன் கருத்தையும் தெரிவிக்கிறது.

''தமிழ்ச் சான்றோர் பேரவை அளித்த கோரிக்கைகளை நியாயமானதா, ஏற்கத் தக்கவையா என்பதை ஆராயாமல் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் குழு அமைக்கப்பட்டுள்ளதென்றும் நீதி மன்றம் கருத்து தெரிவித்துள்ளது. மேலும் போராட்டத்தில் ஈடுபட்ட நபர்களை உறுப்பினராக நியமித்தது நியாயமான நடைமுறைக்கு ஏற்றதல்ல என்றும் கருத்து தெரிவித்துள்ளது. தமிழ் மொழியைச் சார்ந்த வல்லுநர்களைக் குழுவில் நியமித்திருக்கும்பொழுது அரசு ஆணையால் பாதிக்கப்பட்டிருக்கும் மற்ற சிறுபான்மையினத்தோருக்கும், மெட்ரிகுலேசன் வாரியத்திற்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்படாதது குறையாகக் கருதப்பட்டுள்ளது.''

''உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றொரு கருத்து, மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கும் பெற்றோர்களுக்கும் அவர்களது

கருத்துக்களைக் கேட்க வாய்ப்பு அளிப்பது குறித்ததாகும். இவ்வாறு அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கும் நடவடிக்கையினால் காலம் அதிகமாகும் என்றக் கருத்தை ஏற்றபோதிலும், அவர்களது கருத்துக்களைக் கேட்டிருக்க வேண்டுமென உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. நீதி அரசர் மோகன் தலைமையில் அமைக்கப்பட்ட குழு ஒரு பொது அறிவிப்பு கொடுத்தது. அதன் அடிப்படையில் பெற்றோர்களும், மெட்ரிகுலேசன் பள்ளிச் சங்கங்களும், அதன் உறுப்பினர்களும் தங்களது கருத்துக்களைக் குழுவிற்குத் தெரிவித்துள்ளனர். ஆகவே அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது வலியுறுத்தக்கூடிய கருத்தாகும். இதற்கென மீண்டும் ஒரு முறை வாய்ப்பு அளிப்பது அவசியமில்லையென கருதப்படுகிறது.''

''சட்டத்துறை உச்ச நீதிமன்றத்தில் உன்னி கிருஷ்ணன் வழக்கில் அளித்துள்ள தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு, கல்வி என்னும் அடிப்படை உரிமையில் பயிற்று மொழியும் அடங்கும் எனக் கருத இயலாது என்று கூறியுள்ளது. இது வலுவான வாதமாகத் தோன்றவில்லை''.

பள்ளிக்கல்வித்துறை என்ன சொல்கிறது என்பதைக் கவனியுங்கள். 'இது வலுவான வாதமாகத் தெரியவில்லை' என்கிறது. ஆனால் வ.அய்.சு.வும், பெ.ம.வும்; வெ.கி.யும் அருமையாக வாதாடியுள்ளார்கள்; தங்கள் கருத்துகளை அருமையாக எடுத்து வைத்துள்ளார்கள்.

''கல்வி ஒரு குடிமகனுடைய உரிமை என்பது ஒவ்வொரு குடிமகனும் தமக்குக் கல்வி கற்க வசதி வேண்டும் என்னும் உரிமையை அளிப்பதாகும். ஆனால் அப்படிப்பட்ட உரிமை அரசின் வசதிக்கும் வளர்ச்சிக்கும் உட்பட்டவையாகும். ஆகவே, அரசியலமைப்பு 21ம் கூற்றில் கல்வி உரிமை என கூறப்படுமேயானால் அதன் அடிப்படையில் ஒவ்வொரு குடிமகனும் தமக்கு உகந்த கல்வி வசதி வேண்டும் என அரசை நிர்பந்தித்து வழக்காடும் நிலை ஏற்படும் எனும் ஐயப்பாட்டிற்கு ஆதாரம் இல்லை''.

சட்டத்துறை இப்படி எழுதியிருந்தும், பள்ளிக் கல்வித் துறை எப்படி வழுவுகிறது என்பதைப் பாருங்கள்.

''இந்தத் தீர்ப்பில் கல்வி அடிப்படை உரிமையாகக் கருதும் அதே சமயத்தில் அரசின் நிதி நிலையையும் கருதப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. **இதில் பயிற்று மொழி பற்றி குறிப்பிட்டு ஏதும் கூறப்படவில்லை.** கல்வி உரிமை என்று கூறி அதிகமாகப் பள்ளிகள் கேட்கப்பட்டால் அதை மறுப்பதற்கு இத்தீர்ப்பின் அடிப்படையில் அரசின் நிதிநிலைமையை சுட்டிக்காட்ட வழியுள்ளது. பிற காரணங்களைக் கூற வழியில்லை எனக் கருதப்படுகிறது. மெட்ரிகுலேசன் பள்ளிகள் அரசு நிதியின்றிச் செயல்படுகின்றன. அதில் பயிலும் மாணவர்கள் தங்கள் சொந்த

நிதியில் பயிலுகின்றனர். இவர்களுக்கு நேரிடையாகவோ, மறைமுகமாகவோ எந்த ஒரு நிதிப் பொறுப்பையும் அரசு ஏற்கவில்லை. எனவே, இத்தீர்ப்பைச் சுட்டிக் காட்டினால், அது நமக்குப் பாதகமாக அமையவும் வாய்ப்புள்ளது. சிறுபான்மை மொழி பயில்வோருக்கு இயன்றவரை பள்ளிகள் ஏற்படுத்திக் கொடுப்பது அரசின் கொள்கை. அரசின் கொள்கையினால் சிறுபான்மை மொழிகளை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குத் தேவையான புதிய பள்ளிகள் தொடங்க வேண்டிய பொறுப்பும் எழக்கூடியக் காரணத்தால் கூடுதல் நிதி பொறுப்பு உள்ளது என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்'' என்கிறது பள்ளிக் கல்வித்துறை.

அடுத்த கருத்தைக் கவனியுங்கள்.

''தாய்மொழியை பயிற்று மொழியாக கொள்வது குறித்து பெற்றோருக்கு உரிமையில்லை என முன்னர் கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனால், உயர்நீதிமன்றம் பல தீர்ப்புகளைச் சுட்டிகாட்டி பயிற்று மொழியைத் தேர்ந்தெடுப்பது பெற்றோருக்கான உரிமை என நிலைநிறுத்தியுள்ளது. உயர்நீதிமன்றத் தீர்ப்பிற்கு மாறான சட்ட ரீதியான வாதங்கள் சரியான முறையில் எடுத்து வைக்கப்படவேண்டும். இல்லையெனில் உச்ச நீதி மன்றத்தில் நம் வாதம் எடுபடாத நிலை ஏற்படலாம்'' என்கிறது பள்ளிக் கல்வித்துறை.

அடுத்ததைக் கவனியுங்கள்.

''கல்வி அடிப்படை உரிமை என விதிக்கப்பட்ட தீர்ப்புகள் உள்ள போதிலும், பயிற்று மொழியும் அடிப்படை உரிமை என்று எந்த ஒரு தீர்ப்பிலும் இதுவரை தீர்ப்பளிக்கப்படவில்லை. ஆனால் பயிற்று மொழி என்பது கல்வி என்னும் உரிமையில் உள்ளடங்கியது என்ற விளக்கத்தை புதிதாக உயர்நீதி மன்றம் தற்போது அளித்துள்ளது. அடிப்படை உரிமைகள் குறித்து நீதிமன்றங்கள் தொடர்ச்சியாக அளித்துள்ள தீர்ப்புகளின் வழியாக உரிமைகளின் எல்லைகள் விரிவடையச் செய்யப்பட்டுள்ளன என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. உரிமைகள் குறித்த கருத்துக்கள் மாறுதல் அடையமுடியாத இறுதியான விளக்கங்களாகக் கருதப்படமுடியாது என்றும், சமுதாயத்தில் ஏற்படும் முன்னேற்றங்களுக்கு ஏற்ப உரிமைகள் குறித்த விளக்கங்களும் மாற்றியமைக்கப்படவேண்டும் என்றும் கூறியுள்ளது. இதன் தொடர்ச்சியாகவே கல்வி குறித்த உரிமை, பயிற்று மொழியை உள்ளடக்கியதாக விளக்கமளித்துள்ளது''.

''பயிற்றுமொழியும் அடிப்படை உரிமை என்று எந்த ஒரு தீர்ப்பிலும் இதுவரை தீர்ப்பளிக்கப்படவில்லை''. இவ்வளவு தெளிவாகச் சொல்லியும், உயர் நீதிமன்றம் குழப்பியதை மேலும் குழப்புகிறது பள்ளிக் கல்வித்துறை.

ஆனாலும் கடைசியில் ஒரு தெளிவைச் சொல்கிறது.

''உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்ப்பின் அம்சங்கள் ஒரு சில நிவர்த்தி செய்யக்கூடியவை, ஒரு சில விளக்கமளிக்கக் கூடியவை, சட்டம் தொடர்பான கருத்துக்கள் தகுந்த ஆதாரங்களுடன் வாதிக்கப்பட வேண்டியவை.''

இவை அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, மேல் முறையீடு செய்ய முடிவு செய்யப்பட்டது.

இப்போதும் கூட உயர்நீதி மன்றமே குறிப்பிட்டதை மேற்கோள் காட்டி ஒரு சட்டம் இயற்றிடும் வகையில் பள்ளிக் கல்வித்துறை எந்த ஒரு குறிப்பையும் சொல்லவில்லை. அதுபற்றி விவாதத்திற்கே பள்ளிக் கல்வித்துறை இடமளிக்காமல் 'நாகரிகமாக' நழுவிக் கொண்டுள்ளதைக் கவனியுங்கள்.

இங்கே திரு. தமிழண்ணல் தெரிவிக்கும் ஒரு கருத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

''இந்தியாவிலேயே தமிழகத்தைப் போல, ஆங்கில வழிப் பள்ளிகள் கர்நாடகத்தில் மட்டுமே அரசை எதிர்த்து வழக்குப் போட்டன. கருநாடக அரசு வளைந்து கொடுக்கவில்லை. அது உச்ச நீதிமன்றம் வரை சென்றது. திறமையாக வழக்காடி வென்றது. 1994இல், உச்சநீதிமன்ற வழக்கு எண்-550இன்படி, கருநாடக அரசு வெற்றி பெற்றது. அத்தீர்ப்பில், அரசு தெளிவான ஆணைகள் பிறப்பிக்கும்போது, ஓர் அரசின் மொழிக் கொள்கையில் நீதிமன்றம் குறுக்கிடலாகாது என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது. (Q.O. Bringing about academic discipline as a regulatory measure - it is a policy matter not open to court's interference) இத்தீர்ப்பு முழுவதையும் தமிழக அரசும் எதிர்க்கட்சிகளும் படிக்க வேண்டும்.

இத்தீர்ப்பின்படி, இன்று கருநாடகத்தில் கன்னடமொழி பெற்றுள்ள அனைத்து நிலைகளையும், அப்படியே தமிழுக்குக் கேட்கலாம்தானே? ஒரு மாநிலத்திற்குக் கொடுத்த நல்ல தீர்ப்பை, இன்னொரு மாநிலத்திற்கு உச்ச நீதிமன்றம் மறுக்குமா?

உச்ச நீதிமன்றத்தில் வாதாடா விட்டாலும், கன்னட மொழிக்கு வழங்கிய தீர்ப்பை, நீதிபதிகள் முன்னே வைத்து, இதனைப் போலவே எங்களுக்கும் தீர்ப்பு வழங்குங்கள் என்று கேட்கலாமே?'' என்கிறார். வாதாடும் வழக்கறிஞர் வரை இது கொண்டு செல்லப்பட வேண்டும்.

அதேநேரத்தில் மெட்ரிக் . நிர்வாகிகள் சங்கச் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் அவர்கள் கூறியிருப்பது.

''ஆங்கில வழியில் பாடம் நடத்தும் மெட்ரிக்குலேசன் பள்ளிகள் சென்னை பல்கலைக்கழக கட்டுப்பாட்டில் இயங்கிவந்தன. 1976-ல் தமிழக அரசு பிறப்பித்த உத்தரவு மூலம் சென்னை பல்கலைக்கழக கட்டுப்பாட்டில் இருந்த மெட்ரிகுலேசன் பள்ளிகள் தமிழக அரசு கட்டுபாட்டிற்கு மாற்றப்பட்டன.

ஆனால், அந்த உத்தரவில் அரசு உறுதி ஒன்றை அளித்திருந்தது. மெட்ரிகுலேசன் பள்ளிகளின் தனி அந்தஸ்து தொடர்ந்து இருக்கும் என்றும், அப்பள்ளிகளில் தொடர்ந்து ஆங்கிலம் பயிற்று மொழியாக செயல்படும் என்றும் அரசு உறுதி அளித்தது.

ஆனால், அரசு தான் அளித்த உறுதி மொழியை மீறி 5-ம் வகுப்பு வரை தமிழ் வழியில்தான் பாடம் கற்றுத்தரவேண்டும் என்பது சட்ட விரோதமாகும்.

தற்போது உள்ள கல்வி ஆண்டிலும் ஆங்கில மொழியில் மாணவர்கள் சேர்க்கப்பட்டு படித்து வருகிறார்கள். சில மாதங்களில் அவர்களுக்கு தேர்வு நடத்தப்பட்டு வகுப்பு உயர்வு அளிக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, எக்காரணத்தை முன்னிட்டும் ஐகோர்ட்டு வழங்கிய தீர்ப்புக்கு இடைக்கால தடை வழங்கக்கூடாது.

தமிழ் வழியில் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினால் ஆங்கில பள்ளியில் படிக்கும் மாணவர்கள் லட்சக் கணக்கில் பாதிக்கப்படுவார்கள். மேலும், மாணவர்கள் பெற்றோர்கள் மத்தியில் குழப்பம் ஏற்படும். அடிப்படை உரிமைக்கு எதிராக அரசு பிறப்பித்த உத்தரவை எக்காரணத்தை முன்னிட்டும் அமுல்படுத்தக் கூடாது. ஆகவே, அரசு அப்பீல் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.''

பல அன்பர்களும் கூறிய கருத்து இதுதான். தமிழ்வழி ஆணை பிறப்பிப்பதற்கு முன் ஏற்கெனவே மெட்ரிக் . . பள்ளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த 'ஆங்கிலம் வழியான கல்வி' பெறும் உரிமையை வலியுறுத்தும் ஆணையை இரத்துச் செய்திருக்கவேண்டும்.

போடப்பட்ட அரசாணை தோற்கவேண்டும் என்று மனதார விரும்பும் அன்பழகனும், கௌரிசங்கரும் எப்படி அதை இரத்துச் செய்வார்கள்? அவர்கள் நினைத்தது நடக்கவேண்டும் என்பதுதானே திட்டம். அவர்கள் நினைத்தபடியே தீர்ப்பும் வந்துவிட்டது.

மெட்ரிக் பள்ளி நிர்வாகிகளுக்கு அன்பழகனும் கௌரிசங்கரும் எல்லா வகையிலும் ஒத்துழைப்பாக இருக்கும்போது, சான்றோராவது. . . உண்ணா நோன்பாவது. . . தமிழ்க்குடிமகனாவது. . .

உயர்நீதி மன்றத்தின் வழக்கறிஞராக சேவியர் அருள்ராசு பாதிரியார் உள்ளார். அவர், அரசு மேல்முறையீட்டில் ஈடுபடும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய சில குறிப்புகளை அக்கறையோடு தெரிவித்துள்ளார். அவை வருமாறு :

SOME OF THE QUESTIONS TO BE ANSWERED IN TAMIL GO. CASE:-

1) How the State has been formed on linguistic basis and the duties of the State to promote Regional Language?

2) How the Constitutional duty of the State empowers them to decide the Medium of Education?

3) How the Parents and Students do not have an absolute choice but only a relative choice?

4) How the Parents' right to educate their children cannot affect the welfare of the vast majority in a democracy?

5) The position of linguistic and religious minorities to be considered and treated seperately. Not to confuse them both.

6) How the rights of the religious minority cannot extend to the choice of Medium in Non-religious matters.

7) How the linguistic minority are not actually studying in their mother-tongue but only in English. If so, what is wrong in learning in Tamil.

8) How the 3 years transition period is logically correct?

9) What are the effective administrative steps in the offing to protect the rights of the linguistic minorities in the future?. The scope of resolving minor and specific problems in due course.

10) The ways of controlling C.B.S.E. and Anglo-Indian schools with reference to students not under their purview.

11) The resolve of the State to make it an 'ACT' if needed.

12). Facts and Figures to be more effectively presented before the FULL BENCH

13). How it is natural for a child to study in its Mother –Tongue as established by different scholars and committees.

14). How the fundamental Rights of the Child can be exercised by the state equally as by the parents.

15). How English is not a world Language and how the employment is linked to more with skill and Technology than with any particular Language.

அறிஞர்கள் பல தரப்பிலிருந்து ஆர்வத்தோடு தான் எழுச்சி பெற்றுப் போராடுகிறார்கள். ஆனால் இவர்களுக்கெல்லாம் மேலாக ஒரு பேரறிஞர் அன்பழகன் இருக்கிறாரே! தமிழை வீழ்த்துவதற்கு எப்படியெல்லாம் வழி வகுக்கலாம் என்பதை 'நன்கு' சிந்தித்துச் செயற்படும் அறிஞர் பெருமான் கௌரிசங்கரைப் பள்ளிக் கல்விச் செயலாளராக வைத்துக் கொண்டிருந்தால் தமிழ்வழிக் கல்வி உருப்படுமா? முதலமைச்சர் கலைஞர் இவற்றையெல்லாம் ஏன் சிந்திக்கவில்லை.

5.2.2002இல் தமிழக அரசின் நிலை என்ன? 'தினமலர்' சொல்கிறது

''தமிழக அரசு சார்பில் ஆஜரான வக்கீல், இந்த வழக்கு விசாரணையை நான்கு வாரங்களுக்கு தள்ளிவைக்க வேண்டும் என்று கோரினார்.

ஆங்கிலப் பள்ளிகள் சங்கங்களின் சார்பில் ஆஜரான வக்கீல்கள், தமிழக அரசு எட்டு வாரங்களை எடுத்துக் கொண்டு முடிவை தெரிவிக்கலாம் என்றனர். இதையடுத்து, இந்த அப்பீல் மனுக்கள் மீதான விசாரணையை எட்டு வாரங்களுக்கு 'டிவிஷன் பெஞ்ச்' தள்ளிவைத்தது.

தமிழக அரசு தனது முடிவை நேற்று உச்சநீதிமன்றத்தில் தெரிவிக்கும் என்கிற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், அரசு தனது முடிவை நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை. அடுத்த முறை உச்சநீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வரும்போது, இந்த விவகாரத்தில் அரசு தனது நிலைப்பாட்டை தெளிவாக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.''

நாமும் நல்ல தீர்ப்பை எதிர்பார்ப்போம்.

இவரைப் பற்றி . . .

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

மேனாள் சட்டப் பேரவைத் தலைவர்
மேனாள் தமிழ் ஆட்சிமொழி - தமிழ்ப் பண்பாட்டுத்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

27.6.1939ஆம் நாள் சாத்தனூரில் பிறந்தார். (இன்றைய சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம்).

கல்வி

தேவகோட்டை தேபிரிந்தோ உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்குப் பின் திருச்சி, தூயவளனார் கல்லூரியில், அறி.இ.(பி.எசி.,) கணக்குப்பட்டமும், சென்னை பச்சையப்பன் கல்லூரியில்,தமிழ் முதுகலைப் பட்டமும் பெற்றவர்.

பணி

1963-1964ஆம் ஆண்டில் திருப்பாதிரிப் புலியூர் வளனார் உயர்நிலைப்பள்ளிக் கணக்கு ஆசிரியராகவும், 'தென்மொழி' துணையாசிரியராகவும் பணியாற்றியவர். அடுத்த இரண்டு ஆண்டுகள் பறம்புக்குடி ஆ.வை. உயர்நிலைப்பள்ளியில் கணக்கு ஆசிரியராகவும், பின் மூன்று ஆண்டுகள் நேரடி அரசியல் வாழ்க்கையிலும் இருந்தவர். 1969 முதல் மதுரை, யாதவர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். 1979 முதல் 1988 திசம்பர் வரை கல்லூரி முதல்வராகப் பணியாற்றியவர்.

பிற பணிகள்

இளமையில் இருந்தே முற்போக்கு உணர்வும், துடிப்பும் செயலாற்றும் திறமையும் மிக்கவர். 1963இல் எம்.ஏ. பட்டம் பெற்றும் தமிழ்த் தொண்டும் பொதுத் தொண்டும் ஆற்றும் வகையில் நிலையான வேலையை நாடாமல் இயங்கி வந்தவர். சிறந்த தமிழ்த் தொண்டராக இருந்த இவர் சிறந்த அமைப்பாற்றலும் (ORGANISING CAPACITY) -உடையவர். 1969இல் மதுரையில் கல்லூரியில் வேலை பார்த்துக் கொண்டே பறம்புக்குடியில் உலகத் தமிழ்க் கழக மாநாட்டை நடத்திப் பெரும் பாராட்டுக்குரியவரானார்.

ஐயாயிரம் உருபாய் செலவில் 63 பேச்சாளர்களை வரவழைத்து மிகப் பெரும் தமிழ் விழாவை நடத்திக் காட்டிய ஆற்றல் உடையவர்.

தனித்தமிழ் இயக்கத்தைச் சார்ந்த இவர் இன்றளவும் தன்னுடைய இலக்கியப் படைப்புகளிலும், மேடைப் பேச்சிலும், தனித்தமிழ் நடையைக் கையாளுவது இவரின் தனிச்சிறப்பு. இச்சிறப்பால், இவர் பாவாணரின் பாராட்டுதலைப் பெற்றார். 1957 முதல் இத்தனித் தமிழ் இயக்கத்திலிருந்து தமிழுக்கு அரும்பணியாற்றி வருகிறார்.

அறிஞர் தேவநேயப் பாவாணரின் அன்பராக, அவரது உலகத் தமிழ்க் கழக முகவை மாவட்ட அமைப்பாளராக இருந்து பணியாற்றியவர். பின்னர் தமிழகத் 'தமிழ் இயக்கத்தின்' தலைவராக இருந்து சிறப்பித்தவர்.

தந்தை பெரியாரின் பற்றாளர். அவர் கொள்கைகளின் வழி நின்று தமிழுக்கும்,தமிழ்ச் சமுதாயத்திற்கும் பணியாற்றி வருபவர். மாநிலப் பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத் தலைவராக இருந்தவர். உறுதியான கொள்கைப் பிடிப்பு, தரமான இலக்கியப் புலமை ஆகியவற்றால் அனைவரது அன்புக்கும் ஆளானவர்.

நாடகத்துறையில் பெரிதும் ஈடுபாடு உடையவர். 'முதல் பரிசு,' 'வாழவிடு', 'போராட்டம்' எனும் சமூக நாடகங்களை எழுதி இயக்கி நடித்தவர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பச்சையப்பனாக நடித்து திரு. சிதம்பரம் செயராமன் இவருக்குப் பின்னணி பாடும் வாய்ப்பைப் பெற்றவர். 'மனமாற்றம்', 'மணிமுடி' என்ற வரலாற்று நாடகங்களையும் எழுதி இயக்கி நடித்தவர்.

1977, 1981, 1985 மற்றும் 1987 இல் ஆறாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ள, 1994இல் ஐக்கிய முசுலீம் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள 1997, 2000, 2002 ஆண்டுகளில் தமிழ் இணைய மாநாட்டில் கலந்துகொள்ள, பாவாணர் நூல்கள் வெளியீட்டு விழாவிற்காக எனப் பலமுறை மலேசியா, சிங்கப்பூர் நாடுகட்கும், 1985, 1988, 1990 ஆகிய மும்முறை அந்தமான் நிகோபார் தீவுகளுக்கும் 1982இல் 'பாயும் புலி' பண்டாரக வன்னியன் சிலை திறப்பு விழாவுக்காக இலங்கைக்கும் இலக்கியச் சுற்றுப்பயணம் சென்றார்.

1989 செப்டம்பரில் காமன்வெல்த் பாராளுமன்றச் சங்க மாநாட்டுக்காகப் பேரவைத் தலைவர் எனும் முறையிலும், தமிழ்நாடு கிளையின் தலைவர் எனும் முறையிலும் மேற்கிந்தியத் தீவுகள் (பார்படோஸ்), இலண்டன், பாரிசு, நியூயார்க், வாசிங்டன், சிக்காகோ, துபாய் ஆகிய நாடுகட்கும் நகரங்கட்கும் சென்று வந்தார்.

1993இல் செர்மன் நாட்டின் பெர்லின்,இத்தாலி நாட்டின் உரோமபுரி, பாரிசு ஆகிய நகரங்களில் உரையாற்றி மீண்டார். 2002இல் சீனமொழி ஆய்வுக்காகச் சீனநாட்டுக்குச் சென்று வந்தார்.

இனிய குரலில் மெல்லிசை பாடவும் வல்லவர். எல்லாவற்றுக்கும் மேலாக மிகச் சிறந்த பேச்சாளர். இன்று தமிழகத்தில் பேச்சுலகில் அனைவருக்கும் அறிமுகமானவர். பட்டிமன்றங்களிலும், வழக்காடு மன்றங்களிலும் அரசியல் மேடைகளிலும் ஏராளமாகப் பங்கு கொண்டு, ஆணித்தரமாகத் தருக்கமிடக்கூடிய இவர் காட்சிக்கு எளியவர். பழகுவதற்கு இனியவர், இவரது காலத்தில் இவரது கல்லூரியில் காந்தியம், மார்க்சியம், பகுத்தறிவுச் சிந்தனைகள் ஆகியவற்றில் மாலைநேர வகுப்புகள் நடைபெறுவது இவரது கொள்கை உணர்வுகளைக் காட்டுவது. மதுரைக்காமராசர் பல்கலைக்கழகத்தின் ஆட்சிப் பேரவை (SENATE), கல்விப் பேரவை (ACADEMIC COUNCIL) - ஆகியவற்றில் சிறப்பான பங்காற்றும் உறுப்பினராக இருந்தவர்.

சமுதாயப் பணிகள்

'பரிசுச்சீட்டு', 'திரைப்படக் கீழ்மை', 'வரதட்சணை' முதலியவற்றால் விளையும் சமுதாயத் தீங்குகளைக் களையும் நோக்கில் சமுதாயச் சீர்திருத்தப் பேரவையின் பொதுச் செயலாளராகவும் இருந்தவர். மதுரை நுகர்வோர் உரிமைப் பாதுகாப்புக் குழுவின் தலைவராக இருந்து பணியாற்றியவர்.

இதழ்ப்பணி

துணை ஆசிரியர் 'தென்மொழி' 1963 - 1966

ஆசிரியர் 'அறிவு' 1970 - 1971, 'கைகாட்டி' 1971-1974

அரசியல் பணி

1989 - தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை மாவட்டம் இளையான்குடித் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1989 பிப்ரவரி திங்கள் 8ஆம் நாள் முதல் 1991 ஆம் ஆண்டு வரை தமிழகச் சட்டமன்றப் பேரவையின் தலைவராகச் செயலாற்றி வந்தவர்.

1996 முதல் 2001 வரை இளையான்குடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக மீண்டும் வென்று தமிழ் வளர்ச்சித் துறை, அற நிலையத்துறை அமைச்சராகப் பணியாற்றியவர்.

குடும்பம்

இவரது துணைவியார் வெற்றிச் செல்வி. சமுதாயப் பணிகளில் ஈடுபாடுள்ள குடும்பத் தலைவி.

மூத்த மகன் மெய்ம்மொழி வரலாற்றில் எம்.ஏ., எம்.பில். பட்டங்கள் பெற்றவர். இவர் தமிழில் இ.ஆ.ப. (I.A.S.) தேர்வெழுதி இந்தியப் படைக்கலத்துறை (I.O.F.S.) க்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆவடி திண் ஊர்தித் தொழிற்சாலையில் இணைப் பொதுமேலாளராகப் பணிபுரிகிறார். மகள் கோப்பெருந்தேவி தமிழிலக்கியத்தில் எம்.ஏ., எம்.பில். பயின்றவர். திருமணமானவர். இளையமகன் பாரி வரலாற்று முதுகலை பயின்று 'இணையம்' தொடர்பான தொழில் செய்து வருகிறார்.

இவர் தமிழக அரசின் சிறந்த விருதான 'திருவள்ளுவர்' விருதினைப் பெற்றுள்ளார்.

மறைவு

இவர் 21.9.2004 அன்று இயற்கை எய்தினார்.

1

தமிழ்வழிக்கல்வி

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்